விளதீமிர் மிஹனோ்வ்ஸ்கி

இரட்டையர்கள்

விளதிமிர் மிஹனோவ்ஸ்கி

இரட்டையர்கள்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. முகம்மது செரீபு, எம். ஏ.
ஓவியர்: இ. மேல்னிகவ்

Владимир Михановский
ДВОЙНИКИ
На тамильском языке

Vladimir Mikhanovsky
THE DOUBLES
In Tamil

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப்பற்றியும் இதன் தயாரிப்பைப்பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்: Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR.

© தமிழ் மொழிபெயர்ப்பு, ராதுகா பதிப்பகம், 1987
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது
29.6.88.

ISBN 5-05-001439-5

பொருளடக்கம்

இரட்டையர்கள்	5
தகவல் நாடு	257
நோக்கமும் வழிகளும்	287
ஊதாப்பூ	573

இரட்டையர்கள்

நியூமோர்களின் இல்லத்தில் செலவிட்ட தனது இளமைக் காலத்தை லிண்டா லான் ஒரு நீண்ட கொடிய கனவு போல நினைவு கூர்ந்தாள். ஒருவாறு முடிந்த அத்தகைய கனவு, அதனது துயர நிகழ்ச்சிகள் மகிழ்வு தரக் கூடிய வற்றோடு இரண்டறக் கலந்திருந்தாலும், நிலைத்திருக்கக் கூடிய ஒரு சுமையை நெஞ்சில் பதித்தது. கனவுகளைப் பற்றிய மிகவும் கவர்ச்சியான விஷயம் ஒருவேளை இப்படி துன்ப்மும் மகிழ்வும் மாறி வருவதுதானோ?

எதார்த்தமாக, நியூமோரின் தாயார் அவளை மிகவும் நாகரிகமாக நடத்தினார். தந்தை கூட, கோள்களுக்கிடையேயான தனது பயணங்களிலிருந்து அரிதாக வந்த போதெல் லாம் அவளுக்கும் தனது சொந்த மகனுக்கும் எந்தவித வேறுபாட்டையும் செய்ததில்லை.

எனினும், அவளது குழந்தைப் பருவ ஆண்டு கள் அவள் உள்ளத்தில் நிலைத்த தழும்பை விட்டுச் சென்றது, அது ஒருபோதும் முறை

யாக குணமாகவேயில்லை. இந்தத் தழும்பு நியூம் என்று சுருக்கமாக அழைக்கப்படும் நியூ மோர் ஜூனியரின் செயல்தான்.

ஒரு விமான விபத்தில் அவளது பெற்றோர் இருவரும் கொல்லப்பட்டதை அடுத்து, அவள் நியூமோர்களின் ஒப்பற்ற இல்லத்திற்கு வந்ததும், உடனடியாக இந்தப் பையன் அவளது கெட்ட கூர்மதியாளனானான். அவளது மெல்லிய சடையைப் பிடித்து இழுக்கவோ, உடல் வருத்த ஏதும் அவளுக்கு ஒருபோதும் செய்யாத போதும், அவனது செயல் குறித்து அவள் அடிக்கடி தனிமையில் அழுதுமிருக்கிறாள். ஆனால், வீட்டில் எத்தகையதொரு போக்கிரித்தனம் நடந்தாலும் அதை அவனே முன்னின்று செய்ய வைத்தான். சாக்ஸன் சீனா குவளையை உடைப்பது, மலர்க் கொத்திலிருந்து ஒரு ரோஜாவைப் பறிப்பது, அறையிலிருக்கும் விருந்தினரின் தொப்பியில் நீரை ஊற்றுவது ஆகியன — எப்பொழுதுமே தவிர்க்க முடியாதபடி லின்டாவின் தவறுகளாகும்.

எடுத்துக் காட்டாக, உடைந்துபோன அந்த சாக்ஸன் சீனா குவளையை எடுத்துக் கொள்வோம். லின்டாவின் நினைவிலிருந்து துயரமிக்க அந்நிகழ்ச்சி எத்தனையோ ஆண்டுகளாகியும் மங்கிப்போகவில்லை.

...அவர்கள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பிறகு உள்ளே சென்றார்கள். நியூம், மாலுமிகளால் ஆடப்படக் கூடிய நடனத்தை அவளுக்குக் காட்டத்

தொடங்கினான். அவனும் மிக நன்றாக ஆடிக் காட்டினான்.

''இப்பொழுது நீ இதை முயற்சி செய்,'' லின்டாவைக் கையில் பிடித்து அறையின் மையப்பகுதிக்கு அழைத்துச் சென்றபடி அவன் கூறினான்.

ஆரம்பத்தில் கால்வைப்பது சற்று கடினமாக இருந்தது.

''நொண்டு, இன்னும் நொண்டு!'' நியூம் உரக்கக் கூவினான். எந்த ஒரு காரியத்தை அவன் செய்தாலும் அதுவாகவே ஆகிவிடுவது போல, ஒரு நடன ஆசிரியரின் பாத்திரத்தில் அவ்வாறு கூறினான். ''உன் கைகளை இப் பொழுது தட்டு, இடது பக்கம் குதி!''

அவள் குதித்தபோது, அவன் அவளைத் தள்ளினான். தரை பனிக்கட்டி போல வழுக் கலாக இருந்ததால் அவளோ குவளை வைக்க பட்டிருந்த நாற்காலியைத் தட்டி விட்டபடி கீழே விழுந்தாள்...

இந்த இரைச்சல் நியூமின் தாயாரை உள் ளே வரவைத்தது. அவர் சில நொடிகள் அமை தியாக இந்தக் காட்சியைப் பார்த்தபடி நின்றார்.

லின்டாவும் நியூமும், குற்ற உணர்வோடு கீழே பார்த்தபடி அருகருகே நின்றார்கள்.

''மீண்டும் சண்டையா?'' தாயார் இறுதி யாகக் கேட்டார்.

ஐயான் தன் தலையை ஆட்டினான்.

பிறகு அவர் லின்டாவை நோக்கினார்: ''நீ தான் இதைச் செய்தாயா?''

''ஆம்,'' லின்டா முணுமுணுத்தாள்.

நியூமின் தாயார் சீனாக் குவளையின் துண்டு களை வருத்தத்துடன் பார்த்தார்.

''இந்தக் குவளை நானூறு ஆண்டுகளுக்கு முந்தியது...'' அவர் பெரு மூச்சு விட்டபடி கூறினார். ''இது எப்படி நடந்தது?''

''நான் ஆடிக் கொண்டிருந்தேன்... அல்ல, ஒரு வேளை நடன இசைக்கு ஆடுவதற்காக நான் கற்றுக் கொண்டிருந்தேன்... மேலும் தரை ஒரே வழுக்கலாக இருந்தது...'' லின்டா விளக்கிச் சொல்ல முற்பட்டாள். மேலும் இழுத்து நடந்தாள், தனது வார்த்தைகளின் பயனில்லாமையை உணர்ந்தபடி.

அப்பெண்மணி தனது தலையை அசைத் தார்.

''லின்டா உண்மையைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறாள், தரை ஸ்கேட்டிங் நிலம் போல வழுக்குகிறது,'' என நியூம் திடீரென்று அவளுக்கு ஆதரவாகப் பேசினான். தனது வார்த்தைகளைச் செயல்படுத்திக் காட்ட, ஓடத் தொடங்கி நீளமான அந்த அறையில் கீழே விழுந்தான்.

''ஒரு கஷ்டமான குழந்தை,'' அப்பெண் கூறினார். அவர் யாரைக் குறிப்பிட்டுச் சொன்னார் என்பது அவ்வளவு தெளிவாக இல்லை.

அவனுக்கு உண்மையிலேயே எந்தத் தொ டர்பும் இல்லை என்பது போல நியூம் சன் னலுக்கு வெளியே பார்த்தபடி நின்று கொண் டிருந்தான்.

இறுதியாக, கண்டனம் தெரிவிப்பது போல பொருத்தமான சில வார்த்தைகளைப் பேசி விட்டு, நியூமின் தாயார், அந்த ஒட்டுச் சில்லு களைப் பொறுக்கும்படி ரோபுக்கு ஆணையிட வெளியே சென்றார்.

தனக்குப் பின்னால் உள்ள கதவு மூடப் பட்டவுடன், லின்டா ஆறுதலுக்காக ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள். நியூமோர் இப்பொழுது சன்னல் பக்கமிருந்து பார்வை யைத் திருப்பி அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது குறும்புக் கண் களையும், போக்கிரித் தனத்தை உதிர்க்க எந் நேரமும் தயாராக இருப்பன போல இருந்த அவனது உதடுகளையும் அவள் உற்றுப் பார்த் தாள்... ஒழுங்கு படுத்தப்படாத தனது தலை மயிரை அவன் கலைத்து விட்டுக் கொண்டான். பிறகு பேசினான்:

''எனக்காக நீ ஏன் பலியை ஏற்றாய்? உனது பாதுகாப்பை நான் விரும்பவில்லை.''

''உனக்கு என்ன வேண்டும், நியூம்?'' லின் டா அமைதியாகக் கேட்டாள்.

''நீ எப்பொழுதுமே உண்மை பேச வேண் டும் என விரும்புகிறேன், ஜிஞ்சர். பொய் பேசும் ஒரு பெண்ணோடு நான் நண்பனாக இருக்க முடியாது.''

லின்டா அவனை நோக்கி ஓர் எட்டு வைத்தாள். வழிகின்ற தனது கண்ணீரை மறைத்தபடி திரும்பிக் கொண்டாள். இந்த உலகத்தில் எல்லாவற்றையும் விட அவனது நட்பையே லின்டா பெரிதும் விருப்பினாள்...

ஆனால் அவன் மகிழாத அளவுக்கு அவள் என்ன தான் செய்தாள்? அவனை அவள் பாதுகாத் தாள்.

நியூம் அவளருகே நடந்து சென்று அவள் கண்களைப் பார்த்தான்.

''கோழைத்தனமான செயல்,'' அவன் இழுத்த படி பேசினான்.

அவளோ அடிவயிற்றிலிருந்து கத்துவது போல ''ஓ... இல்லை,'' என்னாள்.

''பிறகு நீ ஏன் தாயாரிடம் உண்மையைச் சொல்லவில்லை?''

''நான் என்ன சொல்லியிருக்க வேண்டும்?''

''அதாவது நான் உன்னைத் தள்ளியதை.''

''நீ அவ்வாறு நினைப்பதாக நான் சிந்திக்க வில்லை...''

''ஓ! ஆக, நான் அவ்வாறு கருதவில்லை என்று நீ நினைத்திருக்கிறாய்!..'' நியூம் அவளைக் கேலி செய்தான். ''ஆனால் நான் நினைத்தேன்! நான் அப்படித்தான் நினைத் தேன்! நான் நினைத்தேன்! நான் நினைத் தேன்!'' ஒற்றைக் காலில் நொண்டியடித்தபடி, அவனது பாதிக்கப்பட்ட உணர்வுகளை எல் லாம் மறந்தபடி சென்றான்.

''அது உண்மையல்ல!''

''ஆமாம். அப்படித்தான்.''

''பிறகு ஏன் நீ அதைச் செய்தாய்?''

''செய்ய வேண்டும் போல உணர்ந்தேன். ஆகவே தான்! அது குறித்து நீ என்ன செய்யப் போகிறாய்? போ, தாயாரிடம்

புகார் செய்! அல்லது நீ தண்டிக்கப்பட விரும்புகிறாயா?''

அவள் தனது தோள்களை குலுக்கிக் கொண்டாள்.

''தண்டனைக்கு நான் பயப்படவில்லை.''

''எந்தவகையிலும் நீ ஒரு கோழை! தாயாரிடம் உண்மையைக் கூறுவதற்கு நீ பயப்பட்டாய்!''

இவ்வேளையில் கதவு திறக்கப்பட்டு, கம்பீரமான ஒரு ரோபாட் உள்ளே நுழைந்தான். அவனது உயரம், உருவ அமைப்பு இவைகளுக்காக 'மானுமெண்ட்' எனப் பெயரிடப்பட்டிருந்தான்.

வசதிபடைத்த மிகச் சில குடும்பங்களில் மட்டுமே ரோபாட்டை வேலைக்கு அமர்த்திக் கொள்ள முடியும் என்பதை லின்டா அறிவாள், ஒரு கம்பியூட்டர் நிலையத்தில் அவளது தந்தை அதிக அளவு சம்பளமுள்ள வேலையில் இருந்தாலும், அவளது வீட்டில் எந்தவித ரோபாட்டும் இல்லை.

அவளது புதிய இல்லத்தில் லின்டா விரைவிலேயே இத்தகைய மனிதன்-போன்ற எந்திரங்களைப் பயன்படுத்தத் தொடங்கினாள். அவை தோற்றத்தில் அலங்கோலமாக இருந்தாலும், அன்பான செயலாற்றல் கொண்டவை, மிகத் திறமையான வேலையாட்கள். 'மானுமெண்ட்' எனப் புனைபெயர் கொண்ட ரோப் விஷயத்திலும் அது உண்மையாக இருந்தது. அது எப்படியோ நியூமோர் ஜூனியர் குறித்து மனப்

பூர்வமான வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டது.

ரோப், குழந்தைகளைப் பார்த்து தலையசைத்து, பிறகு முழங்காலிட்டுக் குனிந்து உடைந்த சில்லுகளைப் பெருக்கத் தொடங்கினான்.

''பெரு வெள்ளத்தை உனக்கு நினைவிருக்கிறதா, ரோப்?'' நியூம் கேட்டான்.

''பெரு வெள்ளமா?'' ரோபாட் கேட்டான். அவனது கொடுக்குப் போன்ற கைகள் இன்னமும் அந்தரத்தில் நின்று கொண்டிருந்தன. அப் பையன் மிக நன்றாக அறிந்திருப்பது போல, வீட்டுக் காரியங்களுக்கு சம்பந்தமில்லாது போகும் இத்தகைய வினாக்கள் எப்பொழுதுமே இம்மாதிரியாக ரோபாட்டைப் பாதித்தது.

''ஆமாம், நோவா இருந்தபோது வெள்ளம்,'' என்று அப்பாவித்தனமான தோற்றத்தோடு திரும்பக் கூறினான் நியூம்.

ரோபாட் தனது நினைவுப் பொறியைத் தேடினான்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவன் இறுதியாக ஏற்றுக் கொண்டான், ''எனக்கு நினைவில்லை.''

''அது விநோதமானது. நீ அவசியம் நினைவு வைத்திருக்க வேண்டும்.''

''நான் ஏன்?'' 'மானுமெண்ட்' ஆர்வத்தோடு உசாவினான்.

''ஏனெனில் நீ தான் முதுபேராளன்!'' சிரித்தபடி கூறிய நியூம் முழங்காலிட்டு நின்ற

ரோபாட்டின் பரந்த தோளைத் தட்டிக்கொடுத்தான்.

''அவனை விட்டு விடு, நியூம்,'' லின்டா கூறினாள்.

தன்னைக் கேலி செய்வது அவனது பழக்கம் என்பதைப் புரிந்து கொண்டு, கைமேல் உள்ள பணியினைச் செய்வதற்காக ரோபாட் சென்றான்.

உண்மையில், அது மிகப் பழைய மாதிரி. ஆனால் மூத்த நியூமோர், பணக்கார வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் மாதந்தோறும் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் ரோபாட்டுகளுக்காக பழையதை மாற்றுவதை உறுதியாக எதிர்த்தார்.

மிகப் பழமையானது என்பதாலும் விருந்தினர்கள் முன்னால் நம்பிச் செய்ய முடியாதபடி அவமானப்படுவதாலும், அவர்களது எந்திரமயமான வேலையாட்களை மாற்றியிருக்க வேண்டும் என நியூமின் தாயார் நீண்ட காலமாகவே புகார் செய்து வந்தார்.

''அன்பே, தயவுசெய்து புரிந்துகொள். நீண்ட நேரத்தை வீட்டிற்கு வெளியே தான் செலவிடுகிறேன். மேலும் விண்வெளி பயணத்திற்குப் பிறகு நான் திரும்பும் ஒவ்வொரு முறையும்— கடுமையான நேரங்களில் எல்லாம் முடிந்த மட்டும்— வீட்டில் எதுவும் மாறாதிருப்பதை ஏக்கத்தோடு காண்கிறேன். பயணத்தின்போது உன்னையும், நியூமையும், லின்டாவையும் நான் நினைக்கிறேன். மேலும் போன முறை பூமியில் நான் உங்களைப் பார்த்தது போல

வே பார்க்க வேண்டுமென்று கற்பனை செய்கிறேன். நமது வீட்டில் மாற்றங்கள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. தோட்டத்தில் உள்ள கடைசிப் பூமுதல் சுவரில் உள்ள ஆணி வரை எல்லாம் அப்படியே நிலைத்திருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.''

''ஆனால் இது ரோபுக்கு என்ன செய்யும்?''

''ரோப் நமது குடும்பத்தின் ஓர் அங்கம், ஏறத்தாழ நம் குடும்பத்தில் ஒருவன். நான் சிறுவனாக இருந்த போது அவன்தான் எனது வளர்ப்புத்தாய். எப்படி அவனை ஓட்டை உடைசல் குவியலோடு நான் தள்ள முடியும்?''

''மிகவும் நல்லது,'' என்று அவர் மனைவி ஒருவித பெரு மூச்சுடன் கூறவும், விஷயம் அதோடு முடிந்தது.

சிதறல்களை பொறுக்கி எடுப்பது முடிந்து 'மானுமெண்ட்' அறையை விட்டு வெளியேறும் வரை லின்டாவும் நியூம் அமைதியாக இருந்தார்கள். ரோபாட் தாமதமாக வேலை செய்தான். அவ்வப்பொழுது ஆர்வக்குறைவோடு சில அருவருப்பான தோற்றங்களிலும் நின்றான். ஆனாலும் அவன் தனது வேலையை முழுமனத்தோடு செய்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எஞ்சிய உடைத்த குவளைத் துண்டுகளை எடுத்த பிறகு, ரோப் எழுந்து அறையை ஒரு பார்வை பார்த்துவிட்டு அறையின் மூலையை நோக்கி நகன்றான். நியூம் அதன் வழியை மறைத்து நின்றான். ஆனால் ரோபாட்

அவனைச் சுற்றிக் கொண்டு சென்று, மூலை யில் கிடந்த கடைசித் துண்டை எடுத்தான். நியூம் தான் அதை அங்கு எத்திவிட்டான். பிறகு கதவை நோக்கி வாத்துப் போல நடந்து சென்றான்.

ரோபாட்டுக்குப் பின்புறம் கதவு சாத்தப் பட்டதும் நியூம் உளப்பூர்வமாகச் சொன்னான்: ''வாழ்த்துக்கள், ஜிஞ்சர். நீ சோதனையில் வென்று விட்டாய்.''

''அது என்ன சோதனை?'' நியூம் மீண்டும் ஏதாவது தந்திரம் செய்வானோ என எதிர் பார்த்தபடி, லின்டா கவலையோடு கேட்டாள்.

''விசுவாசத்திற்கு ஒரு சோதனை!''

''நீயும் உனது சோதனைகளும்,'' லின்டா கேலி செய்தாள். ஆனால் அவள் தனக்குள் அதைக் கேட்க மகிழ்ந்தாள்.

நியூம் அவள் கையைப் பற்றினான். லின்டா திடீரென்று முகஞ் சிவந்து போனாள்.

''சிவத்த தலை முடியைக் கொண்டவர்கள் நாணும் போது அழகாக இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா,'' என்று அவன் உணர்ச்சி யற்றுக் குறிப்பிட்டான்.

லின்டா தனது கையை விடுவித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே ஓடி னாள்...

...இது நியூமோர் சீனியரின் கடந்த வருகை யின் போது நடந்தது.

வீடு மகிழ்ச்சியில் திளைத்தது, இன்னும் அதனது பழைய சுவர்கள் கூட மேலும் பள பளப்பாக இருந்தன.

ஒவ்வொருவருக்கும் பரிசுகள் கிடைத்தன. எல்லாவகையான காலநிலையிலும் வெப்ப நிலையை ஒரே மாதிரியாக வைத்திருக்கின்ற ஒரு குறிப்பிடத்தக்க மேற்சட்டை தாயாருக்குக் கிடைத்தது.

தொலை தூரத்து கோளிலிருந்து வந்த இனிப்புகள் நிறைந்த பெட்டி ஒன்றை லின்டா பெற்றாள். சற்றே கசப்பான, வாதுமைக் கொட்டையை நினைவூட்டுகின்ற அதன் சுவையை இன்றும் அவள் நினைவு வைத்திருக்கிறாள்.

ஆனால் நியூமிற்குத்தான் மிக அற்புதமான பரிசு கிடைத்தது. அது வெறும் பொம்மையோ மற்றும் சிறு பொறியோ அல்ல. தந்தை விளக்கியபடி அது அற்புதமான 'எல்லாம் காணுகிற கண்' ஆகும். அதனால் மனிதக் கண்ணிற்குப் புலப்படாத அடிப்பரப்புகளைக் கூடக் காண முடியும்...

அது சாதாரண கால்பந்தைப் போன்ற அளவும் அமைப்பும் கொண்டது. அதன் மேற்பரப்பு கம்பளி போன்றது, அது தாளத்தோடு ஓசை எழுப்பும்.

''அது சுவாசிப்பது போலத் தெரிகிறது...'' என லின்டா முணுமுணுத்தாள். அவள் பார்வை பந்தை நெருக்கமாகப் பார்த்தது.

அப் பரிசை கையில் உணர்ச்சியற்றபடி பிடித்த வண்ணம், ''அது உயிரோடு இருக்கிறதா, அப்பா?'' வியாபார நோக்கோடு நியூம் கேட்டான்.

ஒரு நீண்ட விரிவான விவாதம் தொடர்ந்

தது. இதிலிருந்து லிண்டா சரியாகப் புரிந்து கொண்டது ஏதுமில்லை. 'பன் முகப்பட்ட வடிவம்' என்ற வார்த்தைகளையும், அது போலவே அவளுக்குத் தெரியாத வேறு சில வார்த்தைகளையும் அவள் நினைவு வைத்திருந்தாள். மறுபுறத்தில், தேவையான எல்லா விவரங்களையும் தந்தையிடமிருந்து வரவழைத்துக் கொண்டதால் நியூம் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு, 'உயிருள்ள கண்ணை' தனது அறைக்கு எடுத்துச் சென்றான்.

சற்று நேரத்திற்குப் பிறகு...

சற்று நேரத்திற்குப் பிறகு லிண்டா பெற்ற அநுபவம் அவளை இப்பொழுது கூட, பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு நினைத்துப் பார்க்க வெறுப்பை ஊட்டியது, அந்த இருபத்தி ஐந்து வயதுப் பெண்ணுக்கு.

அன்று இரவு விரிவான வரவேற்புக் கூடத்தில் அவர்கள் சிற்றுண்டி சாப்பிட்டார்கள். மெதுவாக நகரும் ரோபாட் தந்தைக்கு விருப்பமான உணவை, வறுத்த சுறாமீனின் ஈரலை, பரிமாறினான். தனது தாயாரது வேண்டத்தகாத பார்வைகளைத் தவிர்ப்பதற்காக, நியூம் பெரிய துண்டுகளை விழுங்கிக் கொண்டிருந்தான்: தனது இருப்பிடத்திற்கு விரைந்து போவதற்காக.

விருந்து முடிந்த உடனேயே, நியூம் லிண்டாவின் கையைப் பற்றி அவள் காதில் முணுமுணுத்தான்:

''என்னுடன் வா. அருமையான ஒன்றை உனக்குக் காட்டுகிறேன்.''

தனக்குப் பின்பிறமுள்ள கதவை கவனமாக சாத்திய பொழுது, லின்டா காப்டனின் ஆரம்ப வாக்கியத்தைக் கேட்டாள்:

''எனது சைபர்நடிக் வல்லுநர், போன பயணத்தின் போது இசை அமைக்கக் கற்றுக் கொண்டதை உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா...''

இன்னமும் அவள் கையைப் பற்றியபடி தனது அறைக்கு நியூம் அவளை அழைத்துச் சென்றான்.

தனது கண்ணில் பட்ட அக்காட்சியைக் கண்டு மகிழ்ச்சியுற்றவளாக, அவள் கதவோரத்திலேயே நின்றாள். நியூம் மின்விசையைப் போடவில்லை. அறை குறை இருட்டாக இருந்தது. சன்னலுக்கு அருகே மூலையில் நியூம் தனது எழுது மேசையை போட்டிருந்தான். பௌதிக, கணித பாடப்புத்தகங்கள் மற்றும் முழுதும் கிறுக்கப்பட்ட தாள்கள் (அவன் குறிப்பேடுகளை வெறுத்தான்) மேசைமீது குவியலாகக் கிடந்தன — அங்கே, மூலையில் நீல ஒளி வண்ணத்தை மினுமினுத்துக் கொண்டிருந்தது.

அவள் அருகே சென்றாள்.

அப் பந்து பிரகசமான ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் அது கண்களுக்கு ஊறு ஏதும் செய்யவில்லை. ஒவ்வொரு சிறு உரோமமும் ஒரு சிறிய வானவில், போதுமான வண்ணங்களில் ஆடிக் கொண்டும், அசைந்து

கொண்டுமிருந்தது.

"நான் அதைத் தொடலாமா?"

"தொடலாம்."

"ஓ, ஒரு பூனையைத் தொடுவது போல இருக்கிறது!"

"உண்மையில் ஒரு பூனைதான்!" நியூம் இறுமாப்போடு கத்தினான். "பயோ கூறுகளைக் கொண்டு செய்யப்பட்ட இது ஒரு சிக்கலான கருவிதான். நான் அதைத் தனியாக எடுத்து பிறகு அதைப் போலவே சரியாக ஒன்று செய் வேன்."

"எதற்காக நீ செய்ய விரும்புகிறாய்?"

"அதுவே பெருந் தொகை பிடிக்கும். இந்தப் பந்து பூமியிலுள்ள பல்வேறு கருவி களின் தன்மைகளை உள்ளடக்கியது — உயிருள்ள கண், எக்ஸ்ரே கருவி மற்றும் அது போல பிற."

"நியூம், அதனால் உண்மையிலேயே எதையும் ஊடுருவிக் காண முடியுமா?"

"ஜிஞ்சர், நீ அதை நம்பவில்லையா? நான் உனக்கு அதைக் காட்டுகிறேன்," என்று கூறி விசித்திரமாகப் புன்னகை செய்தான் நியூம்.

ஒளிவிடும் கோளத்தின் ஏதோ ஒரு பகுதி யை அழுத்தினான் — பந்து பேசுவதற்கு தொடங் கியது!

இதனை எதிர்பாராதபடி அப்பெண் நடுக் குற்றாள், அவளது தோள் அசைவுற்றது.

அந்தப் பந்து லிண்டாவைப் பற்றி பேசிக் கொண்டிருந்தது.

அழுத்தமற்ற குரலை, ரோபாட்டினுடைய தைப் போன்று அது பெற்றிருந்தது.

தன்னைப் பற்றி 'எல்லாம் காணுகிற கண்' என்று நியூமோர் அழைப்பது போல அது கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் லின்டா இன்று வரை நினைவு வைத்திருக்கிறாள். மேலும் அது கூறியதெல்லாம் மிகவும் அபத்தமாகவும், கீழ்த்தரமாகவும் அவளுக்குத் தோன்றியது. அப்போது இறுதியாக அவள் வெறுப்போடு "நிறுத்து!" எனக் கத்தினாள்.

பந்து அமைதியாகிப் போனது.

லின்டாவின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது. அவள் நியூமை முறைத்தாள். அவனோ அவளைச் சிரிக்க வைக்க முயன்றான். தனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நடைக்கூடத்தை நோக்கி நடந்தாள். ஒரு நொடியில் நியூம் அவளோடு சந்து செய்து கொண்டான்.

வரவேற்பு அறையில் அவர்கள் நுழைந்த போது, நியூமோர் சீனியர் கூறிய கதையை அங்கு கூடியிருந்தவர்கள் மிகுந்த கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

...அடுத்த நாள் காலையில் பந்து தனது வாழ்வை முடித்துக்கொண்டது. அது எவ்வாறு வேலை செய்கிறது என்பதை அறியும் பொருட்டு, பந்தைத் தனியாகப் பிரித்து நியூம் கெடுத்துவிட்டான். அது குழந்தை பொம்மையைப் பிரித்து விளையாடுவது போல இருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு துரதிர்ஷ்டம் நிகழ்ந்தது. விண்வெளியாளர் நியூமோர் மறைந்து போனதை அவர்கள் அறிந்தார்கள். இப்போது ஒவ்வொன்றையும் நியூமே பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. விஞ்ஞானத்தில் அவன் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்ததனால், மற்ற எதிலும் அவன் ஆர்வம் காட்டவில்லை.

லின்டா தன்னை நேசிக்கிறாள் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை. அவனது கருத்துவேறுபாடு அவளுக்கு மிகுந்த துன்பம் தரும் ஒன்றாக இருந்தது.

அவனுக்கான நியாயங்களை லின்டா தேடவும் கண்டுபிடிக்கவும் செய்தாள். அவன் தன் மனத்தில் மிக முக்கியமானவைகளைக் கொண்டிருந்தான். எதார்த்தமாகவே அவன் ஒரு புத்திகூர்மையான இளைஞன். மேல் நிலைக் கணிதங்களை அவன் தானாகவே கற்றுத் தேர்ந்தான். பல்வேறு திருகுகளுக் கிடையே உள்ள வேறுபாட்டுச் சமன்பாடு களை அவன் பிரித்துக் காட்டினான். மனித இயல்பின் குறைபாடுகளைப் பற்றி அன்றொரு நாள் அவன் அவளிடம் கூறவில்லையா? அதில் விலங்கு பற்றி மிக அதிகமிருந்தது. அவன், நியூமோர், அதிகமாகவோ குறைவாகவே, மனித இயல்பைச் சீர்படுத்துவது பற்றித் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். ஒருவகையில் ஒரு சாதாரணப் பெண்ணுக்காக அவனுக்கு நேரங்கூட இல்லை.

''ஒவ்வொரு மனிதனிடமும் நல்லதும் கெட்டதுமான கூறுகள் இருக்கத்தான் செய்

கின்றன. நீ இதை ஒத்துக்கொள்ளவில்லையா?'' என்று நியூம் ஆவேசமாகப் பேசினான். ''கெடுமதியாளர்கள் என்று தனித்து யாரு மில்லை, ஒவ்வொருவரிடமும் ஏதாவது நல்ல பண்புகள் இருக்கவே செய்கின்றன. கட்டாயம் வீழ்ச்சியடையும் எல்லாவகை கறுப்பு போக்கிரி களை நீ நாவல்களில் மட்டுமே காண முடியும். ஒரு மனிதனிடமுள்ள தீயவற்றிலிருந்து நல்லதைப் பிரிப்பது இயலுமா என்று நான் வியந்து கொண்டிருக்கிறேன். ஒரு கெட்ட பல்லைப் பிடுங்குவது போல, கெட்ட கூறுகளை நீக்கி னால் எது எஞ்சும் என்பது உண்மையிலேயே அருமையானது...''

''நீ அதை எவ்வாறு செய்ய முடியும்?'' லிண்டா கேட்டாள்.

நியூமோர் குலுங்கினான்:

''நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன், ஆனால் அது இன்னமும் தெளிவாகவில்லை.''

''என்ன திட்டம்?'' என அவளிடம் அவனைப் பேசவைப்பதற்காகக் கேட்டாள்.

மூளையின் இரு பெரும் பிரிவுகள், இன மரபு அணுக்கோல்கள், துகள்கள், எதிர்துகள் கள் ஆகியவைகளைப் பற்றி லிண்டாவின் தலை சுற்றும் வரை ஆர்வத்தோடு பேசிக் கொண் டிருக்கத் தொடங்கினான்.

கடைசியில் தனது விளக்கங்களை அவள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நியூமோர் அறிந்தவுடன் நிறுத்தினான். பிறகு சிரித்தபடி கூறினான்:

''ஜிஞ்சர், உனது தலை கட்டாயம் வில் சன் சேம்பர் போல அந்நேரத்தில் இருந்திருக்க வேண்டும்.''

''அது என்ன?'' லின்டா கலக்கத்தோடு கேட்டாள்.

''நுண்ணிய பொருள்களை படிக்க பௌதிக விஞ்ஞானிகள் பயன்படுத்தும் ஓர் அறை.''

''மேலும், அதனோடு எனக்கு என்ன தொடர்பு?''

''நல்லது, உனக்கு தெளிவாக விளங்கும் படி நான் அப்படிச் சொல்லப் போகிறேன்... வில்சன் சேம்பரின் விசையை அவர்கள் தட்டு கின்ற போது அதில் ஒருவித மூடுபனி நிரம் பும்,'' என கேலியாக நியூமோர் கூறினான்.

ஆனால் லின்டா குறைபட்டுக் கொள்ளவில் லை. இல்லவே இல்லை. நியூம் அவளைப் புண் படுத்த விரும்பவில்லை என்பது முற்றிலும் தெளி வாகத் தெரிந்தது.

தனக்குத் தானே நம்பாது இருந்தாலும், லின்டா நியூமோரைக் காதலிக்கிறாள். மேலும் நியூமோரின் நிலை என்ன? அவன் அவளை நேசித்தானா? தோற்றத்தில் காணப்படுவது போல அவன் அவளோடு முழுமையாக மாறு பட்டிருக்கவில்லை என்று அவளது உணர்வு அவ ளுக்குக் கூறியது. ஆனால் அவன் தனது உணர்வு களை ஒருபோதும் காட்டவில்லை. அவன் பௌ திகம், உயிரியல், கணிதம் இவற்றோடு மட்டு மே நெருக்கமாக இருந்தான். இதற்கிடையில், விஞ்ஞான எல்லையில் தோன்றியிருக்கும் ஒரு

புதிய ஒளிப்பிழம்பில் ஆர்வங்கொண்டுள்ள பெண்கள் கூட்டத்தை அவன் அறிவான்.

ஒரு பெண்ணினுடைய எதிர்காலத்தைப் பொருத்த மட்டில் அழகு மட்டும் போதாது என்பதையும் லின்டா உணர்ந்தாள். பணமும் பெற்றிருக்க வேண்டும் என்பதை முதல் முறையாக வருத்தத்தோடு உணர்ந்தாள். ஆகவே நியூமோர் இல்லத்தைவிட்டு வெளியேற முடிவு செய்தாள். பிறகு தனது சொந்த வழியைத் தேடிக் கொண்டாள்.

உடனேயே ஒரு தரமான வேலை அவளுக்குக் கிடைத்த வகையில் அதிர்ஷ்டக்காரிதான். ஒரு பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோரில்—ஏ. எஃப். ஏ.—'ஆல் பாஃர் ஆல்' (எல்லாருக்கும் எல்லாம்) பெண் விற்பனையாளரானாள்.

பல ஆண்டுகள் கடந்தன.

நியூமோர் ஒரு பிரபல விஞ்ஞானியானான். மனித இயல்பை முன்னேற்றக் கூடிய அதே பிரச்சினையில் அவன் இன்னமும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தான். அவர்களது அரிய சந்திப்புக்களில் ஒன்றில் அவன் லின்டாவிடம், சோதனைகளில் மிகுந்த பணம் செலவழிவதாகவும், மேலும் தனது பணம் முழுவதையும் அதில் மூழ்கடித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினான்.

ஒருமுறை எதிர்பாரா விதமாக அவர்கள் ஒரு சிற்றுண்டிச்சாலையில் சந்தித்தார்கள். இறைச்சி இடையீட்டு ரொட்டிக்காக லிண்டா உள்ளே நுழைந்தாள். போதுமான அளவு

உள்ள அவளது சேமிப்பு எந்த உதவியாவது செய்ய முடியுமா என்று பயத்துடனே கேட்டாள். அவள் எண்ணிக்கையைச் சொன்னவுடனேயே நியூமோர் சிரித்தான்.

"நீ வேலையை முடித்து விட்டாயா?" நியூமோர் கேட்டான்.

"ஆமாம்."

"பிறகு நாம் பணத்தோடு போராடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக ஒரு திரைப் படம் பார்க்கப் போகலாம்," என்றான் அவன்.

லின்டா தயக்கத்தோடு ஒத்துக் கொண்டாள்.

அண்மையிலுள்ள ஸ்டீரியோ சினிமாவுக்குப் போகும் வழியில் நியூமோரின் முரண்பாட்டை எண்ணி அவள் வியந்தாள். பெரும்பாலான நேரங்களில் அவன் மும்மரமாக இருப்பான், ஒரு நிமிடம் கூட அவனால் ஒதுக்க முடியாது; மேலும் இங்கோ, கோணங்கித்தனமான சிரிப்பு நடிகரையோ மோசமான காதல்கதையையோ பார்க்க ஒன்றரை மணி நேரத்தைச் செலவிட அவன் தயாராக இருந்தான்.

வட்டவடிவமான அந்த அரங்கத்தில் அவர்கள் தங்களது இருக்கைகளைக் கண்டு பிடித்த போது, நியூமோர் லின்டாவின் கையைப் பற்றினான்.

அக்கறையில்லாது லின்டா திரையைப் பார்த்த போது தன்னையே அவளால் நம்ப முடியவில்லை. ஓராண்டுக்கு முன்னால்,

நியூமோர்க்கு அருகில் ஓர் இருண்ட அறையில் அமர்வதையும் அவன் இவளது கையைப் பிடித்திருப்பதையும் மகிழ்ச்சியின் எல்லையாக நினைத்திருக்க முடியும். ஆனால் இப்பொழுது அவள் எதையும் உணரவில்லை. விஷயங்கள் எப்படி மாறுகின்றன!

அவர்களது சாலைகள் பிரிந்து போய்விட்டன. நியூமோர் தனது சொந்த வாழ்க்கையை அமைத்துக் கொண்டான்.

அவளுக்கும் அர்பன் கிடைத்தான்.

அவர்கள் ஸ்டூரியோவை விட்டு வெளியே வந்த போது, இருட்டத் தொடங்கியது.

''நான் உன்னை பல காலமாகப் பார்க்கவில்லை, ஜிஞ்சர்,'' என்றான் நியூமோர்.

''நான்கு மாதங்கள் ஒன்றும் பெரிய காலமல்ல,'' லின்டா அவனைத் திருத்தினாள். அந்த நான்கு மாதங்களில் நியூமோர் மாறியிருப்பதாக அவள் குறிப்பிட்டாள். அவன் களைத்தும் வெளிறியும் போய் இருந்தான்.

''அவன் சாவுக்காக தானே வேலை செய்து கொண்டிருக்கிறான்,'' அவள் நினைத்தாள்.

''படம் எந்த அளவுக்கு உனக்குப் பிடித்திருந்தது?'' அவள் கேட்டாள்.

''அவ்வளவு மோசமில்லை,'' ஏதோ கவனக் குறைவாக பதிலளித்தான்.

''நீ ஒரு முறை கூட சிரிக்கவில்லை...''

''ஒருவகையில் நான் துணையற்றுப் போனதாக உணர்கிறேன். லின்டா... தாயார் இறந்து விட்டார்.''

''ஓ... எப்போது அது நடந்தது?''

''கடைசியாக நாம் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட உடனே. தந்தைக்காக அவர் பெரிதும் துயருற்றார். அத் துயரம் அவரை கல்லறைக்குக் கொண்டு சென்றது. அவரது இதயவலியையும், நினைவுகளையும் நான் போக்கி இருப்பேனேயாகில் அவர் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்திருப்பார்...''

''ஒரு மனிதனை நினைவுகளிலிருந்து விடுவிடுத்தல் என்பது இயலுமா?'' என வினவினாள் லிண்டா.

''அப்படித்தான் நான் நினைக்கிறேன். அத்தகைய ஒரு சோதனை விரைவிலேயே அரங்கேறவிருக்கிறது.''

குறிக்கோளின்றி அவர்கள் நடந்தார்கள், குழந்தைப் பருவத்தைப் பற்றி, நியூமோரின் தந்தை குறித்துப் பேசியபடி.

''நியூம், நீ எனது சேமிப்பை மறுக்கக் கூடாது,'' லிண்டா கூறினாள். ''அவற்றினால் எனக்கு எந்தப் பயனும் இல்லை. நான் இளமையோடும், நலத்தோடும் இருக்கிறேன். மேலும் எனக்கு நல்ல சம்பளம்...''

''நன்றி, ஜிஞ்சர், ஆனால் உண்மையிலேயே அவை எனக்குத் தேவைப்படவில்லை. பரம்பரைச் சொத்து ஒன்றை நான் பெற்று வருகிறேன் — இரண்டரை மில்லியன்.''

''இரண்டரை மில்லியனா?'' லிண்டா திரும்பக் கேட்டாள். இத்தொகை அவளுக்கு நம்ப முடியாததாக இருந்தது. இவ்வளவு

பெரிய தொகையைச் சேர்க்க அவள் எத்தனை பிறவிகள் எடுக்க வேண்டும்? பத்து ஒரு நூறு? கணக்கு அவளுக்கு வெகு தொலைவு.

நியூமோர் கேட்டதன் பேரில் அவர்கள் ஒரு சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றார்கள்.

''உன்னுடைய பரம்பரைச் சொத்தை நீ என்ன செய்யப் போகிறாய்?'' அவர்கள் ஐஸ் கிரீம் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது லின்டா கேட்டாள்.

''ஓ, நான் அதற்கொரு உபயோகத்தைக் கண்டுபிடிப்பேன்... ஏன், உன்னிடம் ஆலோசனை ஏதும் உள்ளதா?''

லின்டா தலையசைத்தாள்.

''நாம் இதைக் கேட்போம்,'' நியூமோர் ஆர்வத்தோடு கூறினான். ''நான் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறேன்.''

''முதற் காரியமாக, உன் வேலையை நீ விட்டு விட முடியும். அது உன்னை மிகவும் களைப்பாக்கி விடுகிறது.''

''ஒரு விருவிருப்பான யோசனை...'' இந்த யோசனையை மிகவும் கருத்தூன்றியதாகக் காட்ட நியூமோர் முகஞ் சுழித்தபடி கூறினான். ''அப்படியானால் எதை வைத்துக் கொண்டு நான் வாழ்க்கை நடத்துவது?''

''உனது முதலிலிருந்து வரும் சதவிகிதத்திலிருந்து.''

''உண்மைதான்! இந்த வாய்ப்பு என் மனத்திலிருந்து முற்றிலுமாக நழுவி விட்டது.''

''உனக்கு ஏராளமான ஓய்வு நேரம்

கிடைக்கும். ஓய்வு நேரம் பெறுவது எவ்வளவு இன்பமானது!''

''அதைக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்?''

''உண்மையிலேயே அற்புதமானதைப் பற்றி நீ சிந்திக்கலாமல்லவா.''

''எதைப் போல?''

''நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்.''

நியூமோர் அவளை நெருக்கமாகப் பார்த்துச் சிரித்தான்.

''நாம் அதனால் எதுவும் செய்ய விட முடியாது,'' அவன் சொன்னான். ''இரண்டு மிக வேறுபட்ட நபர்களைப் பார்க்க முடியாது. கோமாளித்தனமான ஜோடியை நாம் உருவாக்குவோம் என்பதை நீ ஒப்புக் கொண்டு தான் ஆக வேண்டும்.''

''வழக்கம் போல நீ கூறுவது சரிதான். அதைப் பார்க்கக் கேலியாக இருக்கும். ஆனால் நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று எண்ணுவதாக ஒரு, போதும் சொல்லவில்லை.''

''பிறகு யார்?''

''ஓ, இந்த உலகத்தில் தேவையான பெண்கள் இல்லாமலா இருக்கிறார்கள்?''

நியூமோர் சில சிறிய நாணயங்களை மேசைமீது போட்டான்.

''எனக்கு நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது,'' அவன் கூறினான்.

''உனக்கா? என்னிடம் ஏன் நீ முன்னமே யே கூறவில்லை?''

''உனக்குத் தெரியும் என்று நினைத்தேன்.''

''எனக்கு எப்படித் தெரியும்?''

''ஆமாம். உன்னுடைய அர்பனைப் போன்ற கவிஞர்கள் சொல்வது போல, எனக்கு நானே எப்பொழுதும் சத்தியம் செய்து கொள்வேன்.''

''அர்பன் ஒரு கவிஞனல்ல, அவன் ஒரு வரகவி.''

''வித்தியாசம் தெரியவில்லை,'' என்று கூறிய நியூமோர் தோளைக் குலுக்கினான். ''அவனது வேலையை ஒழுங்காகச் செய்கின்ற வரை. வெஸ்டர்னில் அவனுக்கு எது எப்படியிருந்தால் என்ன? அங்கு தானே அவன் வேலை செய்கிறான், இல்லையா?..''

''விஷயங்கள் தவறான பாதையில் போகிறது,'' வெட்கத்தோடு லிண்டா கூறினாள். ''நான் கலங்கிய நிலையில் இருக்கிறேன். அது இவ்வாறே நீண்ட காலத்திற்குப் போகுமானால் அவர்கள் அவனை நன்றாகவே சுடுவார்கள். வெஸ்டர்னில் என்ன நிலை என்பது உனக்குத் தெரியும். எந்த முட்டாள் தனத்திற்காகவும் அவர்கள் நிற்க மாட்டார்கள்.''

''விஷயங்கள் அம்மாதிரியும் நடக்குமா?''

''ஆம், அவ்வாறுதான் என்று நான் அஞ்சுகிறேன்.''

''ஆனால்... என்ன தவறு?''

''அவன் உடல் நிலை நன்றாக இல்லை.

அவனது நரம்புகள் நொறுங்கி விட்டன. அவன் எல்லாருடனும் சச்சரவு செய்கிறான்.''

''நரம்புகள் என்பது நமது நூற்றாண்டினுடைய வியாதி. நரம்புகள் நொறுங்கிப் போவதிலிருந்து காப்பாற்றும் மனிதனுக்கு சுத்தமான தங்கத்தால் நினைவுச்சின்னம் ஒன்றை மனித இனம் எழுப்பும்.''

''ஆக, அர்பன், நமது காலத்து வியாதியை அதனது மிக மோசமான நிலையில் கொண்டிருக்கிறான் என்பது தெரிகிறது.''

''ஆனால், அறிகுறிகள் யாவை?'' நியூமோர் கேட்டான். மற்றவர்களுடைய விவகாரங்களில் அக்கறை காட்டுவது என்பது இவனுக்குத் துளியும் பிடிக்காது.

''அவன் மனக்கிலியாலோ, கனவாலோ, வேறு தோற்றத்தாலோ வதைப்படுகிறான். அது என்னவென்று எனக்குத் தெரியாது,'' லிண்டா சொன்னாள்.

''தூக்கமில்லாத ஓர் இரவுக்குப் பிறகு ஒருவன் நல்ல வேலையாளாக இருக்க முடியாது. பொருட்கள் அவன் கையை விட்டுப் போய் விடுகின்றன. மேலும் தூக்கமின்மையானது தொடர்ச்சியாக இருந்தால்...''

நியூமோர் தன் விரல்களால் மேசையில் தாளமிட்டான்.

''ஹும், மிக்க சுவையாக இருக்கிறது. இந்த எல்லா விஷயங்களையும் அவனே உனக்குச் சொன்னானா?''

பதில் சொல்வதற்கு மாறாக தனது

கைப்பையிலிருந்து முனை மடங்கிய குறிப்பேடு ஒன்றை எடுத்து லின்டா நீட்டினாள். ஒரு பக்கத்தைப் புரட்டிப் பார்த்தபடி நியூமோரிடம் தந்தாள்.

''என்ன இது?'' சரிவாகக் கீழ்நோக்கி கிறுக்கல் எழுத்தைக் கொண்ட அந்தப் பக்கத்தை வியப்போடு பார்த்தபடி கேட்டான். மிகுந்த சிரமப்பட்டு அதை எழுதியவன் ஒவ்வொரு வாக்கிய ஆரம்பத்திலும் முதல் எழுத்தை பெரிய எழுத்தாக நிறுத்தி எழுத முயற்சித் திருப்பதை கண்காணித்தபடி கேட்டான்.

ஒரு மனிதன் சிரமப்பட்டு, தனது தலையை பக்கவாட்டில் சாய்த்துக் கொண்டு, எழுதுவது போல உள்ள படம் ஒன்றை நியூமோர் வைத்திருந்தான்.

''அதைப் படியும்,'' லின்டா கூறினாள்.

''உரக்கவா?''

''ஆமாம். ஆனால் மிகவும் சத்தமாக வேண்டாம்,'' லின்டா அருந்தகத்தை ஒரு பார்வை பார்த்தபடி கெஞ்சினாள்.

சில வாடிக்கையாளர்கள் தங்களது பணிகளிலேயே அக்கறை காட்டியவர்களாக, இந்த ஜோடியைப் பார்க்காமலேயே இருந்தார்கள்.

குறிப்பேட்டை தனது கண்களுக்கு அருகில் வைத்தபடி குலுக்கிய வண்ணம் நியூமோர் — அவன் கிட்டப் பார்வையாளன், ஆனால் கண்ணாடி அணிவதிலிருந்து தவிர்த்துக் கொண்டிருந்தவன் — படிக்கத் தொடங்கினான்:

ரோஜா படுக்கையல்ல அவன் வாழ்வு,
வடதிசைக் காற்றே வாழ்வாயிற்று,
கடும் பாதையிலே அவன் நடந்தான்;
மணிகள் முழக்கமே அவன் கேட்டான்.
அவன் கனவுகளே அச்சுறுத்தின,
அவனோ அம்முறை விழித்தான்,
கனவுதான் என்றறிந்தபோது
கடவுளுக்கு நன்றி சொன்னான்.

''கவிதை எழுதத் தொடங்கி விட்டாயா?'' வியப்போடு நியூமோர் கேட்டான். ''அதுபற்றி எனக்குத் தெரியாது. அது முடியும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை.''

''இவை எல்லாம் அர்பனின் கவிதைவரிகள்.''

''திடீர்க் கவியா?''

''அது சரிதான்.''

''அவன் யாரைப் பற்றி எழுதுகிறான்? அவனைப் பற்றியா?''

''ஆம். இங்கு பார், நியூம். நீ அவனுக்கு உதவி செய்ய வேண்டுகிறேன்,'' குறிப்பேட்டை தனது பைக்குள் திரும்பவும் போட்டு விட்டு லிண்டா கேட்டாள்.

நியூமோர் சிந்தனை வயப்பட்டவனாகக் காணப்பட்டான்.

''விஞ்ஞானிகளுக்கிடையே நீ தொடர்புகள் வைத்திருக்கிறாய். மருத்துவத் தொழிலிலும் நீ நண்பர்கள் கொண்டிருக்கத்தான் வேண்டும். நான் அறிந்த ஒரே டாக்டர் தோல்வியுற்றவன், தனது சான்றிதழைப் பெறத் தவறியவன்... அவன் என்ன செய்ய முடியும்?'' லிண்டா வினவினாள்.

''நீ என்னிடம் சொல்லிக் கொண்டிருப்

பதை வைத்துத் தீர்மானிக்கின்ற போது அவனது மனப்பாங்கு கெட்டு விட்டது. மேலும் அவனது கனவுகள் அவ்வளவு மோசமானதாகவும், துயர மிக்கதாகவும் இருந்தன. 'அவன் கனவுகளே அச்சுறுத்தின, அவனோ அம்முறை விழித்தான், கனவுதான் என்றறிந்த போது, கடவுளுக்கு நன்றி சொன்னான்.' '' நியூமோர் நினைத்துப் பார்த்துக் கூறி, தனது தலையை அசைத்துக் கொண்டான்.

''பிறகு, நியூம்...'' அப்பெண் ஆர்வத்தோடு கேட்டாள்.

''இப்பொழுது என்ன?''

''அர்பன் எனக்காகக் கவிதை எழுதினான். யாரிடமும் காட்டுவதில்லை என்று உறுதி கூறியிருக்கிறேன்.''

லின்டா வெட்கினாள்.

''கவலைப் படாதே, ஜிஞ்சர். உனது ரகசியத்தை நான் காப்பாற்றுவேன்.''

''நீ அர்பனுக்கு உதவ முடியுமா?''

''நான் முயற்சிக்கிறேன். ஆனால் வெற்றிக்கு என்னால் உறுதிதர முடியாது. என்னால் முடிந்தவற்றை எந்தவகையிலும் நான் செய்வேன்.''

லின்டா எழுந்தாள்.

''நன்றி. இப்போது உன்னுடைய மண ஒப்பந்தத்திற்காக வாழ்த்துச் சொல்ல விரும்புகிறேன். அவள் யாரென்று உன்னால் எனக்குச் சொல்ல முடியுமா?''

''அவள் பெயர் அறிவியல்.''

லின்டாவின் முகம் ஆழச் சிவந்தது.

‘‘உன்னுடைய கேலிகளை ஒரு தடவையா வது எனக்காக ஒதுக்கி வைக்க முடியுமா?’’

‘‘இது கேலியல்ல, லின்டா. நான் அறிவி யலுக்கு உறுதி தந்திருக்கிறேன். எனக்கு வேறு வாழ்க்கைத் துணை வேண்டாம் என்று. ஆனால் நான் உன்னோடு நட்புடன் இருக்கவே விரும்புகிறேன்.’’

அந்த அருந்தகத்தை விட்டு அமைதியாக அவர்கள் வெளியேறினார்கள்.

நடந்து போய்க் கொண்டிருக்கும் போதே, நியூமோர் குறிப்பிட்டான்:

‘‘என் அன்பே, அர்பனைப் பற்றி ஒரு வகையில் நீ வேகமாகவே இருக்கிறாய் என்று எனக்குத் தெரிகிறது.’’

‘‘அப்படித்தான் தோன்றுகிறது,’’ அடித் தொண்டையில் லின்டா விடையளித்தாள்.

‘‘உங்களுக்கு இது கஷ்ட நேரம்...’’

சிறிய இடை வெளிக்குப் பிறகு, ‘‘தனது கூட்டிலிருந்து விழுந்த சிறு பறவைபோல, அர்பன் தற்காத்துக் கொள்ள முடியாதவன். மற்றும் சில வேளைகளில் அவன் எந்தக் கா ரணமுமின்றி பிடியிலிருந்து ஓடுவான்... ஒரு வகையில், பிற்பாடு அதற்காக அவன் வெட்கப் படுவான்.’’

‘‘ஒரு புதுமையான குணாம்சம்.’’

‘‘எல்லாரையும் கூர்மதியாளர்களென்று நாம் கூற முடியாது.’’

‘‘ஒருவன் கூர்மதியாளனா, இல்லையா என்பதில் என்ன இருக்கிறது?’’ சிந்தனை யோடு நியூமோர் கூறினான். ‘‘நாமெல்

லாம் ஒரே பொருளால் ஆனவர்கள் தான், இல்லையா? 'எல்லாம் காணுகிற கண்' இந்த இடக்குறி குறித்து உன்னிடம் என்ன சொன்னதோ, நீ நினைவில் வைத்திருக்கிறா யா?''

லின்டா உணர்ச்சிவயப்பட்டாள்.

''நீ வெறுக்கத் தக்கவன்,'' கோபத்துடன் முணுமுணுத்தாள்.

கணக்கற்ற வீட்டுச் சுவர்கள் அவர்களைக் கடந்தன.

''எண்ணற்ற முறைகள் நான் கூறியிருக் கிறேன், அதை நான் திரும்பவும் கூறுகிறேன், ஜிஞ்சர்: 'எல்லாம் காணுகிற கண்' உன்னைச் சங்கடத்தில் வைக்கும்படி எதுவும் சொல்லவில் லை...''

''நீ வெறுக்கத் தக்கவன்.''

''ஒருவேளை அவ்வாறிருக்கலாம்,'' சாந் தப்படுத்தும் வகையில் நியூமோர் கூறினான். ''ஆனால் நமது உலகம் அப்படிப்பட்டது — வெறுப்பும் தீமையும் கொண்டது. உண்மையும் அப்படியே. அது எனது குற்றமா?''

''நான் உலகைப் பற்றி மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறேன்.''

''அதாவது சிவப்பு வர்ணமிட்ட கண்ணாடி களின் வழியாக நீ பார்க்கிறாய். தீக்கோழி போல நீ உனது தலையை மண்ணில் புதைத் துக் கொள்கிறாய். அர்பனைப் பற்றி மேலும் விவரங்களையும், அடையாளங்களையும் கூறு,'' திடீரென்று கூறி முடித்தான் நியூமோர்.

லின்டா கூறுவதை கவனமாக, அவ்வப்

பொழுது திருப்தியுடன் தலையசைத்தபடி, தனது சில ரகசிய எண்ணங்களை, அவள் கூறுவது உறுதிப்படுத்துவதாக உள்ளது என்பது போல அவன் கேட்டான்.

லின்டா தனது கதையைக் கூறி முடித்ததும், ''நம்மால் செய்ய முடிந்தது இது தான். அர்பனுக்கு என்னை அறிமுகம் செய்துவை. அவனுக்கு என்ன செய்ய முடியும் என்பதை நான் பார்த்துக் கொள்கிறேன்,'' என்றான்.

அவர்கள் நகரும் பாதை ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறி, மெல்ல நகர்கின்ற ஒன்றை அடைகின்ற வரை மாறிச் சென்று, லின்டா வசிக்கின்ற தெருவுக்கு அருகே கீழே இறங்கினார்கள்.

அது ஒரு குறுகிய தெரு. தாடையில் பற்கள் நிற்பன போல ஒன்றோடு ஒன்று நெருக்கமாக நின்ற பழைய வீடுகளால் உருவாகியிருந்தது.

''ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானியாகிய நீ நகரும் பாதையில் ஒரு சாதாரண பொறியியலாளன் போல பயணம் செய்கிறாய்,'' லின்டா வன்மத்துடன் குறிப்பிட்டாள். ''இப்பொழுது உன்னிடம் ஏராளமான பணம் இருக்கிறது. உனக்காக ஏன் நீ ஒரு கார் வாங்கிக் கொள்ளக் கூடாது?''

''வேறு காரியங்களுக்காக எனக்குப் பணம் தேவைப்படுகிறது, ஜிஞ்சர்,'' அவன் கூறினான். ''எனக்கு ஒரு திட்டம் உண்டு என்று நான் உன்னிடம் இன்றைக்கு ஏற்கெனவே கூறியிருக்

கிறேன். மிக அதிகமான தொகை பிடிக்குமோ என்று அஞ்சுகிறேன்.''

லிண்டா தனது பாதையில் நின்றாள்: ''மற்றிமொரு சோதனையில் நீ நிச்சயமாக உனது பணம் முழுவதையும் மூழ்கடிக்கப் போவதில்லை?''

''மூழ்குவது சரிதான், ஜிஞ்சர்,'' என்று உறுதியளித்தபடி நியூமோர் லிண்டாவின் தோளில் தனது கையை வைத்தான். ''நான் அஞ்சு வதெல்லாம், அப்பணம் போதுமானதாக இருக்காது என்பது தான்.''

''நீ ரொம்ப ஆசைபிடித்தவன்!''

''இதைக் கொஞ்சம் கேள்!'' நிதானமாக நியூமோர் கூறினார். ''நான் வெறுக்கத்தக்க வன், இப்பொழுது நான் பேராசைக்காரனும் கூட. ஒரு மனிதனுக்கு இவையொன்றும் அதிகக் கேடுகள் இல்லை?..''

''உன்னைக் குற்றம் சாட்டுவதாக நான் கருதவில்லை.''

''அதெல்லாம் சரிதான்.''

சில நொடிகள் அவர்கள் அமைதியாக நடந்தார்கள்.

''நியூம், உன்னை என்னால் முற்றிலுமாக புரிந்து கொள்ள முடியாது என்பது உனக்குத் தெரியும்,'' அமைதியை முறித்தபடி அப்பெண் இறுதியாகப் பேசினாள். ''எதார்த்தமாக, அதற்காக நான் முயற்சிக்கவும் இல்லை. எனக்கு நீ ஒரு தீர்க்க முடியாத பிரச்சினை தான். அல்லது எண்ணற்ற தீர்வுகளைக் கொண்ட ஒன்று.''

பாதி உண்மையாகவும், பாதி பாதிக்கப் பட்டும் நியூமோர், ''ஏன் எப்போதுமே என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை,'' என்றான்.

''இருப்பினும், நீ ஒரு கார் வாங்கியாக வேண்டும் என்று நான் நினைக்கிறேன்,'' என்று விஷயத்தை மாற்றி லின்டா பேசினாள்.

''நான் ஒரு கார் பெற்றுக் கொள்ளத் தான் போகிறேன். எனது மதிப்புமிக்க பணிகளுக்காக நிறுவனம் எனக்கு ஒன்று தரவிருக்கிறது.''

அவர்கள் லின்டாவின் வீட்டை நெருங்கினார்கள்.

''குட்பை, ஜிஞ்சர்.''

''குட்லக், நியூம்.''

சில படிகளை ஏறிய பிறகு லின்டா நின்று திரும்பிப் பார்த்தாள்:

''உன்னுடைய புதுக் காரில் என்னை ஒரு முறை கூட்டிச் செல்வாயா?''

''நிச்சயமாக,'' என்றான் நியூமோர். தனது கையை அலைத்து, போவதற்குத் திரும்பினான்.

படிகளில் ஏறிய பொழுது லின்டா அர்பன் பற்றி நினைத்தாள். நியூமோர் இவளுக்கு ஜிஞ்சர் என்று பட்டப் பெயர் சூட்டியது போல, அர்பன் இவளுக்கு வைத்த செல்லப் பெயர் ஜிப்சி. இதே மாடிப் படியில் போன முறை இவர்கள் 'குட்பை' சொன்ன பொழுது அர்பன் கூறினான்: ''லின்டா, நான் உனது அடிமை. உன் அன்பு

இதயத்தின் அடிமை.''

இல்லை, அவள் அர்பனை மணந்திருந்தால் ஒரு சொந்தக் கார் வைத்திருக்கும் வளம் அவர்களுக்கு இருக்காது. நிறைந்த பணமும் இருக்க முடியாது. ஆனால் அதுவா விஷயம்? சுரங்கப் பாதையில் நடப்பதையோ, நகரும் பாதைகளில் செல்வதையோ விடுமுறை நாட்களில் டாக்ஸியைப் பிடிப்பதையோ அவள் பொருட்படுத்தவில்லை. பணம் ஒரு பொருட்டே அல்ல.

கட்சித் தொண்டர் அளவிலான என்ஜினியரான அந்நாகரிக மனிதனிடம் ஏன் நியூ மோர் திடீரென்று அத்தகைய ஆர்வத்தைக் காட்டினார்? நீண்ட கால மதிப்பீடு இல்லாமலோ, நோக்கமில்லாமலோ நியூம் எதையும் செய்ததில்லை. அவள் அவனிடத்தில் அர்பனின் கவிதையைக் காட்டியிருக்கக் கூடாது. ஓர் ஏழையை கேவலப்படுத்த அது அடித்தளமிட்டு விட்டது.

''பரவாயில்லை. நான் அவர்களை அறிமுகம் செய்து வைப்பேன். அதன் பிறகு ஆர்பி தன்னைப் பார்த்துக் கொள்வான்,'' பையிலிருந்து சாவியை வெளியே எடுத்தபடி அவள் தீர்மானம் செய்தாள். ''அவன் எப்போதுமே நியூமின் உதவியை மறுத்தே இருக்கிறான்.''

துருப்பிடித்த பூட்டின் உள்ளே பலமாக சாவி திரும்பியது. கதவைத் திறந்து உள்ளே நடப்பதற்கு முன்பாக அப்பெண் கீழே தன் கண்ணை ஓடவிட்டாள். திடீரென்று அவள்

களைப்படைந்து மயக்கமுற்றாள். அவளுக்காக என்ன இருந்தது? அவள் எதிர்காலம் மூடுபனி யில் மறைந்திருந்தது. நியூமோரை நம்புவதாக இருந்தால் வில்சன் சேம்பரை நிரப்பும் அதே மூடுபனி.

சுவர் ஈரஞ்செறிந்த கோடுகளால், மிகவும் அருவருப்புத் தரும் கருப்பு திட்டுகளால் காணப் பட்டது. அவள் கதவுக்கு அடுத்த சுவரில் நண்டு போல ஓர் அடையாளமிருந்தது. அதற்கு மே லாக ஒளிமறைப்பு இல்லாது பிரகாசமிக்க மின் விளக்கு ஒன்று இருந்தது.

லின்டா அறைக்குள் நுழைந்தாள். வீடி யோ தொலைபேசியின் குருட்டுக் கண்ணுக்கு முன் நின்றாள். அர்பனை அழைக்கவும், பேச வும் ஏங்கினாள். தொடர்புச் சாவியைக் கூடத் தொட்டு விட்டாள். ஆனால் அவன் வேலை செய்து கொண்டு இருந்தால் என்ன செய்வது? இடையூறு செய்தால் அவன் கோபமடைய லாம்.

சமீப காலத்தில் மாலை வேளைகளில் அர்பன் மிகப் பெருமளவில் வேலை செய்வ துண்டு. அவன் வேறுவிதமான விளக்கத்தைத் தந்தாலும், அவனால் பகல் நேரத்தில் அவன் வேலைகளோடு ஒத்துப் போக முடிவ தில்லை. அவனது சக பணியாட்கள் அவனுக்கு எதிராகத் திட்டமிட்டனர் என்பதையும், அவனது கருவிகளைக் கெடுக்குமளவுக்குச் சென்றதையும் — அவனை முட்டாளாக நினைக்கு மாறு செய்தது என்பதை அவன் உறுதியாக நம்பினான்.

''நான் அவனைக் காலையில் அழைப் பேன்,'' என்று லின்டா முடிவு செய்தாள்.

லின்டாவைச் சந்திப்பதற்காக அர்பன் பதினைந்து நிமிடங்கள் முன்னதாக வந்தான்.

அவன் சலிப்புற்றான். அவனது சங்கடத்தை லின்டாவின் நண்பனான நியூமோரின் திகைப் பூட்டும் செய்தி மேலும் மனக்குழப்பத்தில் ஆழ்த்தியது. பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரே கூடைப் பந்தாட்டக் குழுவில் அவர்கள் ஒன்றாக ஆடியிருக்கிறார்கள்.

லின்டா அவர்களை இரண்டு வாரங் களுக்கு முன்பு திரும்பவும் ஒன்று சேர்த்தாள். அவர்கள் இருவரும் மிக நன்றாக நெருங்கி விட்டார்கள். அவனது கோளாறான பெரு மைக்கு முன்பாக, புகழ்பெற்ற விஞ்ஞானி யோடு நட்புக் கொண்டிருப்பது அர்பனுக்கு வீண் பெருமையுடையதல்ல. சில நாட்களிலே யே அவன் அர்பனின் குழம்பிய மனநிலையைப் புரிந்து கொண்டான். அது பற்றிய விவரங்கள் எதையும் அவன் தெரிவிக்காது அவனுக்குத் தன்னால் உதவக் கூடிய வழியைக் காட்ட முடி யும் எனக் கூறினான். மாறாக அந்த வழி குறிப்பிட்ட ஆபத்துகளைக் கொண்டது. அவை யெல்லாம் என்ன என்பது அர்பனுக்கு இப்பொ ழுது தெரியும். எதையும் தீர்மானிக்க முடியாது குழம்பிப் போனான்.

மிகவும் மோசமானது என்னவென்றால், இந்த விஷயத்தை அவன் யாருடனும் எந்த விதச் சந்தேகமும் இல்லாது, இந்த உலகத்

திலேயே அவன் மதிக்கக் கூடிய லின்டாவுடன் கூட விவாதிக்க முடியாது. ஆனால் நியூமோர் பரிபூரண ரகசியத்தை வேண்டினான். அதா வது இவன் ஏற்றுக்கொள்கிறானா இல்லையா என்று.

நல்லது, இந்த எண்ணம் நன்கு வேலை செய்கின்றவரை, அவனால் இந்த ரகசியத்தை அடுத்த மனிதனைப் போலக் காப்பாற்ற முடியும். ஏன் முடியாது? இந்த உலகத்தில் சிலருக்கு எல்லாவகையான அதிர்ஷ்டங்களும் இருக்கின்றன. அந்த அதிர்ஷ்டம் ஒரு முறை இவனுக்குக் கிட்டாமலா போகும்?..

லின்டாவுக்காக காத்துக் கொண்டிருந்த போது அர்பன் பூங்காவின் பாதைகளில் உலாவி வந்தான். மேபிள் மற்றும் அகேச மரங்களின் இலைகள், குளிரில் உலர்ந்து பழுப் பேறிப் போயிருந்தன.

அர்பன் தனது கைக்கடிகாரத்தைப் பார்த் தான். லின்டா அப்பொழுதுதான் புறப்பட் டாள். இங்கு வந்து சேர அவளுக்கு மேலும் இருபது நிமிடங்கள் பிடிக்கலாம் — வழியில் இரண்டு மாற்றங்களைச் செய்துகொண்டு, அதாவது ஏரோபஸிலிருந்து சுரங்க ரயிலுக்கும் பிறகு நகரும் பாதையிலும் மாறி வர வேண் டும்.

எப்படி நேரத்தைக் கொல்வது என்று அவன் வியந்தான். 'செஸ் வளையம்' பார்க்கப் போகலாமா?

அவனை எங்கு பார்ப்பதென்று லின்டா வுக்குத் தெரியும்.

அர்பனுக்கு சதுரங்கம் என்றால் மிகுந்த ஆசை. ஆனால் பூங்காவில் விளையாடத் துணியவில்லை, ஏனெனில் பார்வையாளர்கள் முன்னிலையில் விளையாட, ஒரு வேளை நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு அகோரமான நிலைக்கு ஆளாகி விடுவோமோ என்று அஞ்சினான். இப்பொழுதெல்லாம் இப்படி எதையும் அவன் செய்வதில்லை.

சில வேளைகளில், மிகவும் சாமர்த்தியமாக இணைக்கப்பட்ட தியாகம் நிறைந்த கம்ப வேடிக்கை விளையாட்டினைப் பார்ப்பதன் மூலம் அவன் திருப்தியடைந்தான். இப்போது தேவைப்பட்டதெல்லாம் ஒருபுற ஆட்டக்கார னுடைய அரசு தாக்கப்படும் தறுவாயிலுள்ள நெருக்கடி நிலையிலிருந்து குதிரைக்காய்க்கு விட்டுக் கொடுப்பதன் மூலம் அரசை வேட் டைக் கவர்ச்சியிலிருந்து வெளியேற்றி, எதிரி யின் அரசியை ஏமாற்றுவதுதான். அவன் அங்கே தான்... அவன் அங்கே தான்... அவனது மூளை தெளிவில்லாது போனது. நெஞ்சத் தில் சினத்தைக் கிளறிவிடும் உணர்ச்சி தோன்றி யது.

அறுபத்து நான்கு சதுரங்களில் செய்யப் படும் சண்டைகளை மணிக் கணக்காகப் பார்ப் பதில் அர்பன் நேரத்தைச் செலவிடுவதுண்டு. ஆனால், பொதுவாக அவனுக்கு நேரம் கிடைப் பதில்லை.

அன்றைய தினம் வெஸ்டர்னில் வழக்கம் போல விஷயங்கள் மிக மோசமாக இருந்தன. எதார்த்தத்தில் வழமையை விட மோசமான

தாக இருந்தன. இன்று காலையில் சோதனைக்கூட இளம் உதவியாளன் கிரினோ தேவையில்லாது காற்றில்லாக் குழாய் ஒன்றை உடைத்ததனால், அவன்மீது மிகுந்த வெறுப்புக் கொண்டான். ஒன்றரைக் காசு மதிப்பில்லாத காற்றில்லாக் குழாய். ஆனால் அந்த அற்ப விஷயத்திற்கு அர்பன் கடுங்கோபம் கொண்டான்.

வெண்மை நிறமான கிரினோ அவன் செய்தவையைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லாமல் அவன்முன் நின்றான். இது பெரும்பாலும் அர்பனை எரிச்சலடையச் செய்தது. அவனை வேலையிலிருந்து நீக்கி விடுவதாக அச்சுறுத்த விரும்பியபோது கிரினோ மிகவும் மெல்லப் பேசினான்:

''இரவு முழுக்க நான் தூங்கவில்லை... என் தாயார் செத்துக் கொண்டிருக்கிறாள்...''

அர்பனைத் திணறடித்த அச்சுறுத்தும் சொற்றொடர் எந்த இரக்க உணர்வையும் ஏற்படுத்தவில்லை. மனித கௌரவத்திற்குக் கீழானது என்பதாலும், வேலை செய்யத் தடையாக இருக்கும் என்பதாலும் மனித உறவுகளில் இரக்கம் இருப்பதை அவன் மறுத்தான். இல்லை, அது இரக்கம் இல்லை.

'செத்துக் கொண்டு' என்ற சொல்லைக் கேட்டவுடனேயே, அர்பன் மற்றொரு சாவை நினைவு கூர்ந்தான். அது மிகு வெப்பமான காற்றைக் கொணர்ந்து, அவன் உயிரோடு இருக்கின்ற வரை ஜூலை மாதத்தில் அந்த பிற்பகலை அவன் மறக்க முடியாது என்பதை

நினைவு படுத்தியது...

பிறகு வெள்ளிக் கோளப்பயணம் பற்றிய கட்டுக் கதையில் துறை போன, வெஸ்டர்னில் காவல்காரனான கிழவன் டான் பிளேஷூடம் அவன் சண்டைக்குப் போனான். வெஸ்டர்னை வளைத்துக் கட்டப்பட்ட செங்கல் சுவரில் ஒரு நாய்ப்பட்டியை அமைத்திருந்தான். அதில் அநாதையான நாய் ஒன்றை கிழவன் வைத்திருந்தான். அது அர்பனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை, அல்லவா? இருப்பினும் ஓர் ஆபாசக் காட்சியை ஏற்படுத்தினான். நாய்ப் பட்டியைச் சீர்குலைத்த போது, வெறியில் அவன் கையில் காயம் ஏற்பட்டது. பிறகு ஊளையிட்ட நாயை எட்டி உதைந்தான். கிழவன் டானை வாய் திறந்தபடி சினத்தோடு கிடக்கச் செய்தான்.

அவனையும், டான் பிளேஷையும் மற்றும் நாயைச் சுற்றிலும் வியப்படைந்த பார்வையாளர் கூட்டம் ஒன்று வட்டமிட்டு நின்று நடப்பவைகளை கேலி விமர்சனங்களைச் செய்தபடி நின்றது.

அந்த விமர்சனங்கள் நெருப்புக்கு எண்ணெய் இடுவது போலிருந்தது. ஒரு மோசமான காட்சியை ஏற்படுத்தியமைக்காக அர்பன் பிறகு வருந்தினான். அங்கிருந்து வெளியேற விரும்பினான். ஆனால் சுற்றிலும் கேலி செய்கின்ற, வசைபாடுகின்ற அல்லது சலிப்புற்ற முகங்களாகவே இருந்தன. காப்பாற்றும் வகையில் ஒருவன் கூட இல்லை. திரும்பவும், அவன் மனத்தில் எப்பொழுதும் அழன்

றெரிகின்ற பழம் நினைவு ஒன்று கொழுந்து விட்டு வெடித்தது. உண்மையாகவே, இது எல்லாமே முன்னமேயே நடந்திருக்கின்றது!.. பயிற்சி விமானதளத்தில் இதே போல ஒன்று நடந்தது... பாதுகாவல் புறமனை ஒன்றுக்கு பதிலாக தொலைவில் நெளி நெளியாக வளைக்கப்பட்ட இரும்புத் தகட்டால் ஆன விமானக் கோட்டம் இருந்தது. மேலும் கீழே கருங்காரைப் பூச்சு இல்லை. ஆனால் திண்காரைப் பாளங்களால் ஒட்டவைக்கப்பட் டிருந்தன. முன்னிலும் இப்பொழுது வெப்ப மாக இருந்தது: ஜூலை மாதத்தின் பிற்பகல் நேரம். காற்றே முழுமையாக இல்லை. சீற்றங்கொண்ட சூரியக் கதிர்கள் செங்குத் தாக விழுந்து கொண்டிருந்தன. மேலும் அவன் வளையத்தின் மையப்பகுதியில் நின்றான். கேலிப் பேச்சுகள் அவனைப் பற்றி சற்று முன்னர் போல, பேசப்பட்டன.

நடுங்கும் கைமுட்டியை தன்மீது அடித்துக் கொண்டிருந்த கிழவன் டானை அர்பன் அப்பக்கமாக தள்ளினான். எல்லாப் பக்கங் களிலிருந்தும் போலியான கூற்றுகள் அவனைப் பற்றிப் பேசப்பட்டன:

''ஆர்பிக்கு நல்லது!''

''ஆர்பி சிறப்பாகச் செய்கிறான்!''

''அவன் வெஸ்டர்ன் முழுக்கக் கத்துவதைக் கேளுங்கள்!''

''அவனை விட்டு விடுங்கள். அவன் பிடி யிலிருந்து பறந்து விட்டான், அவ்வளவுதான்,'' யாரோ காரணத்தோடு கூறினான். அது கிரி

னோ என்று அவன் நினைத்தான். ஆனால் அவனது குரல் நடுக்கத்தால் மிகவும் அழுது கொண்டிருந்தது.

''அவன் எப்பொழுதுமே பிடியிலிருந்து பறந்து கொண்டிருக்கட்டும். எவ்வளவு காலம் நாம் அதற்காகச் சகித்துக் கொண்டிருக்கப் போகிறோம்?'' குமாரி ஷீலா வினவினாள்.

கூட்டம் வளர்ந்து கொண்டேயிருந்தது.

''அர்பன்தான் துடுப்புப் போடத் தொடங்கினான். நான் இங்குதான் இருக்கிறேன். எல்லாவற்றையும் பார்த்தேன்,'' புதிதாக வந்தவர்களுக்கு யாரோ விளக்கிக் கொண்டிருந்தான். ''என்ன ஒரு காட்சி! அந்த நாய் அவனுக்கு என்ன செய்தது?..''

''தாடையில் அவனுக்கு ஒன்று கொடு, முதியவனே,'' யாரோ டான் பிளேஷுக்கு ஆலோசனை சொன்னான்.

''பிளேஷுக்கு நூறாண்டுகளுக்கு மேல் வயதாகிறது. அவனால் தன்னைச் சமாளிக்க முடியாது,'' யாரோ கூறினான்.

''அர்பனுக்கு அவன் வயதில் கால் பங்குதான் இருக்கும்!''

''ஆமாம். ஒரு கிழவனை தாக்குவது என்பது எவ்வளவு மோசம்! ஒவ்வொரு நாளும் சச்சரவு செய்வதைக் காட்டிலும் அவனால் வேறொன்றையும் நல்லதாகச் செய்ய முடியாது.''

''அவனுக்கு ஒரு குத்து விடு, பிளேஷ்,'' ஒரே கூட்டுக்குரலாக வலியுறுத்தியது. அவர்கள் குருதி காண பேரவாக் கொண்டார்கள்.

ஒரு குத்தைத் தவிர்க்கப் போவது போல அர்பனும் தனது ஒரு கையை உயர்த்தினான். குருதி வழிந்து கொண்டிருந்தது.

"பாருங்கள். அவன் ஏற்கெனவே ஒன்று பெற்றிருக்கிறான்!"

"ஓ, அறிவிலிகளின் இளிப்பை என்னமாய் வெறுத்தான்! அவர்கள் எல்லாரும் அந்த காடாபுல்டில் வைக்கப்பட வேண்டியவர்கள். விமானக் கோட்டத்தின் கூரையின் மீது எறிந்து கூழாகச் செய்யப்பட வேண்டியவர் கள்," என்று எரிச்சலோடு திக்குமுக்காடியபடி அர்பன் எண்ணினான்.

சாப்பாட்டு இடைவெளி முடிந்ததை அறி விக்கும் மணியொலி குழப்ப நிலையை முடி வுக்குக் கொண்டுவந்தது. "ஒரு நல்ல விஷயம், அவ்விடத்திற்கு நிர்வாகத்தைச் சேர்ந்த எவரும் வரவில்லை." இந்த நினைவு அர்பனின் சீற்ற மிகு எண்ணத்தில் பளிச்சிட்டது.

அறிவார்வமிக்க கூட்டம், நினைத்ததற்கு மாறாக அமைதியாக முடிந்தது கண்டு ஏமாற் றமுற்று கலைந்தது.

...அர்பன் ஒரு விளையாட்டை கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனது எண்ணங் கள் தொலைவில் நின்றன.

நியூமோரேரோடு கடைசியாகப் பேசியது இன்னமும் அவன் மனத்திலிருந்தது. அவனது கண்டு பிடிப்பான, நுண்ணிய செங்கற்களால் உலகம் கட்டப்பட்டுள்ளது, அணுக்கூறுகள் மற் றும் எதிர் துகள்களின் அடிப்படைக் கொள்கை யால் அர்பனைக் குணப்படுத்த முடியும் என்று

நியூமோர் அவனுக்கு விளக்கினான். முடிவாக நியூமோரின் கண்டுபிடிப்பு மனித இனத்தின் எல்லாவகை நோய்களையும் போக்கக் கூடிய தாக இருந்தது...

அர்பன் சேகரித்தபடி, கொள்கையளவில் ஒவ்வொரு அணுக்கூறும் பிரம்மாண்டமான சக்தி கொண்டதாக செய்ய முடியும். மேலும், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சமன்பாட்டின்படி, ஒளி வேகத்தின் மிசைப்பெருக்க எண்ணால் வகுக்கப்படும் சக்தி பொருள் திணிவுக்குச் சமமானது. சக்தி அதிகமானால், பொருண் மை அதிகமாகும் என்பது எல்லாருக்கும் தெளி வாகத் தெரியும்.

''ஆனால், சக்தி ஏற்றம் அதிகமானால், அணுக்கூறும் மிகப்பெரும் பொருள் திணிவால் ஏற்றப்படலாம் என்பது பொருளாகும்,'' என அர்பன் விளக்கமளித்தான். ''பூமியைப் போல அந்த அளவுக்கு பொருளின் அளவும் பெரியது. சொல்லப்போனால் பத்து மடங்கு, ஒரு நூறு மடங்கு, ஓர் ஆயிரம் கோளங்களைப் போன்றது!''

''அத்தகைய ஓர் அணுக்கூறு, மிக அதிக வேகத்தில் பறக்கும் போது, ஏதோ ஒரு கா ரணத்திற்காக அது தனது தலைகுப் புறப் பாய்கின்ற பயணத்தை நிறுத்துமானால், அதன் சக்தியானது திணிவாக மாறும் — மேலும் ஒரு புதிய உலகு பிறக்கும். ஒரு கோளாக, ஒரு வேளை ஒரு கதிரவன் மண்டலமாக, அல்லது ஒரு நட்சத்திரமாக, அல்லது வானிலுள்ள ஒரு பால் மண்டலமாகும். மேலும் மிக நுண்

ணிய அணுக்கூறு காரணமாக, எலெக்ட்ரானிக் மைக்கிராஸ்கோப்பினால் கூட அதைக் காண முடியாது!''

இந்த முடிவுகளை நியூமோர் கேலி செய்திருக்கக் கூடும். 'ஏனெனில் பௌதிகம் அர்பனின் வலுவான குதிரையல்ல. ஆனால் நுண்ணிய அணுக்கூறுகளிலிருந்து உண்டாகும் புதிய உலகங்களிலிருந்து பிறக்கும் ஆரவார மான காட்சிகள் எளிதில் சினங் கொள்ளும் கற்பனையுடைய அர்பனை ஈர்த்துப் பிடித்தது. ஆக அவன் கருதியதுபோல, இயலுலகு தடு மாற்றத்தால் அழிந்து நமது உலகம் அண்ட வெளியில் ஏதோ ஒரு மூலையில் பிறந்தி ருக்கக் கூடும்?

ஆகவே, முறையாகப் பேசப் போனால், சாவு என்பது இல்லை. பல டன்கள் நிறையுடன் விரைந்து வளர்ந்த விமானக் கோட்டத்திற்கு வலிவு மிகும் பொருட்டு நெளிநெளியாக வளைக்கப்பட்ட இரும்புத் தகடு என்ன ஆனது? அர்பனின் கையினை மறைக்கும் சட்டைப் பகுதியில் விழுந்த வலுத்த துளி என்ன ஆனது?

அர்பன் மன எழுச்சி பெறுவதற்கு முன்ன தாக வழக்கம் போல எதிர்காலம் பற்றிய அக்கறையற்ற உணர்வு எழுந்தது. மக்கள் போல தங்களுக்குள் நிலைபேறுடைய போர் நடக்கும் விளையாடப்படும் பிளாஸ்டிக் காய்களையும் சதுரங்கப் பலகையையும் ஊன்றிப் பார்த்தான். மேலும் நியூமோருடன் அவன் மேற்கொண்ட பேச்சால் தூண்டப்பட்ட

அவனது தலையில் வரிகள் வடிவம் பெற்றன:

சுற்றி வருகையிலே வழமைபோல் சுழலும்
இவ்வுலகம்
ஒரு நாள்
மற்றொரு உலகுடன் மோதிற்று
ஆதவன் போலப் பெருத்துப் பின்
அணைந்து போயிற்று.
அழிவு ஏற்பட்ட அவ்விடத்தில்
பூதம் போல நின்ற நிலம்
நொடியில் பொடியாய்ப் போயிற்று,
விண்ணிடைப் பாய்ந்து துகளாயிற்று.
ஆனால் அது மாய்ந்து அழியவில்லை!
பல நூற்றாண்டுகள் கடந்தன,
புதியதோர் நெபுலா வானில் பூத்தது—
உறக்கம் என்பது பின்னர் விழித்தெழவே
இறப்பு என்பது ஓர் நாள் பிறந்து வாழவே!

கடைசி வரியை தனக்குத்தானே சொல்லிக் கொண்டு, அர்பன் படுக்கையிலிருந்து எழுவது போல நீண்ட பெரு மூச்சை விட்டான். தனது கையை தனது தலைமயிருக்குள் விட்டான்.

அங்கு லின்டா இருந்தாள்!

தொலைவிலிருந்து அந்தப் பெண் கையை அசைத்தாள். பார்வையாளர் கூட்டத்திலிருந்து தனது பாதையை ஏற்படுத்திக் கொண்டு அவளை நோக்கி அர்பன் நடந்தான்.

''ஏன் உனது கையில் கட்டுப் போடப் பட்டிருக்கிறது? காயப்படுத்திக் கொண்டாயா?'' அவர்களது சிறப்பு ஓய்விடமாகக் கருதும் கொடிவீட்டை நோக்கி, பக்கத்துச் சந்தில் அவர்கள் திரும்பியபோது லின்டா கேட்டாள்.

''நான் அதை வெட்டினேன்,'' ஆர்வமில்

லாது அர்பன் சொன்னான்.

"மோசமான வெட்டா?" லின்டா ஆர்வத் தோடு கேட்டாள்.

"இல்லை, ஒன்றுமில்லை."

"வெஸ்டர்னிலா?"

"ஆமாம்."

யாரும் அமராமல் இருந்த கொடிவீட்டில் அவர்கள் ஞாயிறொளி படும் பக்கத்தில், விரைவில் செல்லவிருக்கும் கோடையின் கடைசி சூரியக் கதிர்களைப் பிடிப்பதற்காக, அமர்ந் தார்கள்.

விறைப்பாக இருந்த அவனது முகத்தை லின்டா ஆர்வத்தோடு உற்றுப் பார்த்தாள்.

"உனக்குத் தொல்லை இருந்ததா?"

"தொல்லை என்பது எனது இரண்டாவது பெயர்," என்று முகஞ்சுளித்துச் சிரித்துப் பதிலளித்தான்.

"இங்கே பார், அந்தக் குறிப்பேட்டை நீ தொலைக்கவில்லை, இல்லையா?" அர்பன் தொடர்ந்தான்.

"இல்லை. ஏன்?"

"எனக்குத் தெரியாது. இப்பொழுதுதான் எனக்கு ஏற்பட்டது... அதில் என்ன இருக்கிறது என்பதை அறிமுகமில்லாதவர்கள் படிக்க நான் விரும்பவில்லை."

அதுபற்றி லின்டா எதுவும் சொல்லவில்லை. சற்று நேரம் அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. தனித்த ஓர் மேபிள் மரத்தைச் சுற்றி இளம் சிறார்கள் ஆடிய நடனத்தைச் சற்று நேரம் வெறுமனே பார்த்தார்கள்.

''நான் காணாமற்போய் விட்டால்... நீ என்ன கூறுவாய், லிண்டா?'' அர்பன் கேட்டான்.

''காணாமற்போனால் என்றால் என்ன வென்று நீ நினைக்கிறாய்?'' லிண்டா வியப்போடு கேட்டாள்.

''ஆமாம்.''

''நீ போகப் போகிறாயா?''

அர்பன் தனது தலையை அசைத்தான்.

''இல்லை, ஜிப்சி... நான் எங்கும் போய்க் கொண்டிருக்கவில்லை. அப்படிச் செய்ய நான் விரும்புகிறேன். ஆனால் நானாக எங்ஙனம் போக முடியும்? இல்லை. நான் சொல்வது... மொத்தத்தில் நான் காணாமற் போனால். சொல்லப் போனால் இல்லாமலே போய்விடுவது.''

''புதிர்போட்டுப் பேச வேண்டாம், ஆர்பி,'' லிண்டா கெஞ்சினாள், இப்பொழுது மோசமாக பயந்து இருந்தாள்.

''நல்லது, நான் தெளிவுடன் பேசுவதாக நினைக்கிறேன்.''

''எவ்வளவு துணிச்சல் உனக்கு?'' அர்பனின் கையைப் பற்றியபடி லிண்டா கதறினாள். ''ஒரு கெட்ட வசியத்திற்கு நீ ஆளாகிக் கொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் இது இன்னும் கொடிய பாவம்...''

''எந்தப் பாவமும் செய்ய நான் எண்ணவில்லை.''

''ஆனால் நீ தற்கொலை என்று நினைக்கிறாய்! எதற்காகவே நாம் உயிர் பெற்றிருக்

கிறோம் என்பது உனக்குத் தெரியாதா...''

''ஆனால் என்னையே கொல்லும் நோக்கம் எனக்கில்லை,'' அர்பன் அவளை இடைமறித்துச் சொன்னான்.

''பிறகு, முட்டாள்தனமான இந்த காணாமற் போதல் என்பது பற்றி நீ என்ன நினைக் கிறாய்?'' லிண்டா வேண்டினாள்.

அர்பன் தயங்கினான்.

''சொல்லுங்கள் வெளிப்படையாக.''

''நல்லது. நுண்ணிய அணுக்களின் பொதுத் தோற்றம் ஓர் ஒழுங்கில் அமைக்கப் பட்டிருக் கிறது...''

''உனக்கு ஏதேனும் ஆபாயகரமான பணி தரப்பட்டிருக்கிறதா?''

''அதுபோல ஒன்று.''

''நீ அதை மறுக்க முடியாதா?''

''ஆம். என்னால் முடியும்.''

''பிறகு மறுத்து விடு, ஆர்பி!'' வைத்தகண் வைத்தபடி லிண்டா அவனைப் பார்த்துச் சொன்னாள்.

''அந்த விஷயம் எனக்கு மிக முக்கிய மானது,'' இறுதியாக அவன் வெளியிட் டான்.

''இன்னும் தெளிவாகச் சொல்ல முடியாதா, ஆர்பி?''

''என்னை நம்பு, ஜிப்சி. அதை உனக்குச் சொல்வதற்கு எனக்குச் சுதந்திரம் இல்லை. ஆனால் சோதனை வெற்றியடையுமானால், எல்லாமே அருமையாக இருக்கும்.''

''உங்களது இப்போதைய நிலையில் எங்

ஙனம் உன்னால் ஆபத்தான பணியை மேற்கொள்ள முடியும்?''

''எனது நிலையில் அது மிகவும் முக்கியமானது.''

''அதன் முடிவில் நீ, நீ சொன்னது போல, காணாமற் போவாய்... அப்படித்தானே?'

''அது தோல்வியில் முடியும் பொழுது.''

''அது வெற்றி பெற்றால் என்ன நிகழும்?''

''அம்மாதிரி நடந்தால் நான் முற்றிலும் மாறுபட்ட மனிதனாக மாறிவிடுவேன்.''

''அது ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையா? நான் சரியாக யூகித்தேனா? ஏன் நீ எல்லாவற்றிலும் புதிரான காணாமற் போகும் விஷயத்தைச் சேர்க்கிறாய்?''

''ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை?'' அர்பன் திரும்பவும் மெதுவாக, ஏதோ சுயமாக சிந்தித்தவனாகக் கூறினான். ''ஒரு வேளை அப்படித்தான். ஒருவரது உள்முக பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை.''

''நீ புதிர் போட்டுப் பேசுகிறாய், நியூமோர் போல.''

''இதில் நியூமோருக்கு என்ன இருக்கிறது?'' அர்பன் திடீரென்று உரக்கக் கத்தினான். லின்டா தொடர்ந்தாள்.

''கத்த வேண்டாம், அன்பனே,'' நடுங்கிய குரலுடன் அவள் பேசினாள். ''உன்னைத் தாக்க வேண்டுமென்று நான் கருதவில்லை.''

எவ்வளவு விரைவாகக் கோபப்பட்டானோ அவ்வளவு விரைவாக அமைதியானான். எந்த

விதச் சலனமும் இன்றி அக்கறையற்றவனா னான். ''கண்டிக்கப்பட்டவன் போல,'' லிண்டா நினைத்தாள்.

அவனது குழம்பிய சிந்தனையிலிருந்து அவ னை திசை திருப்புவதற்காக, ''நாம் விளை யாடுவோம்,'' என்று லிண்டா ஆலோசனை கூறினாள்.

''நாம்!'' என்று அர்பன் அனிச்சையாகப் பதில ளித்தான். ''நான் இன்று நல்ல வடிவத் தில் இருக்கிறேன். கொள்கை பற்றி எண்ணிப் பார்.''

லிண்டா நினைத்துக் கொண்டிருந்த முக் கியக் குறிக்கோளை அர்பன் திருத்தினான். அதில் விளையாட்டுக் கருத்து இருந்தது.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு லிண்டா சொன்னாள்: ''இது இலையுதிர் காலம். நான் இலையுதிர் காலமாக இருப்பதாக எண்ணிக் கொள்கிறேன். நிலங்கள், காடுகள் மற்றும் சாலைகளின் வழியாக ஒரு நகரிலிருந்து மற் றொன்றுக்கு, கவிழும் வானத்தைப் பார்த்த படி, உதிர்ந்து விழுந்த மஞ்சள் இலைகளைத் தள்ளிவிட்டு, மக்களது கதவுகளைத் தட்டி குளிர்காலம் மற்றும் பனி இவைகளுக்குத் தயாராக இருக்கும்படி மக்களைக் கேட்டுக் கொண்டு நான் உலைந்து நடக்கிறேன். பனிகாலம் கடுமையாக இருக்கும்... உங்களில் எல்லாருமே அதில் பிழைத்திருக்க முடியாது. வெறுங்காலுடனே நான் நடந்து கொண் டிருக்கிறேன். எனது கால்கள் கன்றிப் போய் விட்டன. எனது எலும்பெல்லாம் கூட சில்

லிட்டுப் போய்விட்டது.'' லின்டா குளிரில் நடுங்கினாள். ''நான் நடக்கிறேன். எனது பயண முடிவு பார்க்கக் கூடியதாக இல் லை...''

''நல்லது!'' அவளை நிறுத்தினான் அர்பன். அவன் தனது நெற்றியைத் தேய்த்து விட்டு, கருத்தை ஒரு முகப்படுத்தினான்.

அரை மணி நேரத்திற்கு முன்பு அநுபவித்த பழக்கப்பட்ட இனிய தடுமாற்றம் அவனைத் திரும்பப் பிடித்துக்கொண்டது, அவன் மெது வாகத் தொடங்கினான்:

பருவத்தின் தாக்குதலால் தென்திசை குடியேற
 பறவைக் கூட்டம்
கருமேகம் கிழித்தேகும் காட்சியினை துயரமுடன்,
 கண்ணால் கண்டு,
மூடுபனிப் போர்வைக்குள் ஒளிந்து நடுங்கிக்கொண்டு,
வீடடைத்துக் கிடக்கின்ற கதவமெலாம்
 வெறுமனே தட்டிப்பார்த்து
வெறுப்புடனே ஓர் பார்வை விரிகானம்
 நெடுகிலுமே வீசிக்கொண்டு,
நீறுமறை நெருப்பினையும் நெருங்கவே மிகவஞ்சி,
 பசிய புல்லில்
தூங்குகிற பனியெனக் கண்ணீர் வடித்தே
 துயரமுடன் சதுப்புக் காட்டில்
ஏங்கியே அடிவைக்கும் இலையுதிர் பருவமெனும்
 பேரிளம் பெண்.
போகும்வழி ஒன்றிருக்க அதைவிடுத்து அந்திதன்னில்
பாழ்பட்ட பாலையினுள் நடந்து சென்று,
விண்மீன்கள் சொரிகின்ற ஈரந்தன்னை கையிலேந்தி
அண்ணாந்து வான்முகட்டை நோக்கி நிற்பாள்.

''அருமையாகச் செய்தாய், அர்பன்!'' லின் டா வியந்து கூறி அவனை முத்தமிட்டாள்.

''வேறு ஒரு நோக்கம் குறித்து சிந்திக்கலாம்.''

''இது போதும்.''

''தயவு செய்து, ஜிப்சி,'' அர்பன் வலியுறுத்தினான். ''ஆர்க்கிமிடீஸைப் போல இந்த உலகத்தை முற்றிலுமாக மாற்ற முடியும் என்ற வலுவான நம்பிக்கை எனக்குண்டு. எனக்கு நிற்பதற்கு மட்டும் ஆதாரத்தானத்தைக் கொடு. காத்திருக்கிறேன்!''

''நீ உன்னையே கொல்கிறாய்!''

''லின்டா, தயவு செய்து!''

''ஓகே...'' லின்டா சரணடைந்தாள். ''நான்கு வரிகளுக்கு மேல் கட்ட வேண்டாம். இது பேரமா?''

''நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

''போன முறை நீ என்னோடு வீட்டிற்கு வந்தாய் என்று உனக்கு நினைவிருக்கிறதா? வாயில் அருகே நாம் நின்றோம். நிலவு கூரைக்கு மேலே நின்றது. பிறகு சிறிய மேகம் பறந்து அதன் மையத்தை மறைத்தது. அப்போது நீ கூறினாய்...''

''நிலவு வட்டமான ரொட்டி போல இருக்கிறது.''

''பிறகு ஒரு பூனை இறவாரத்திலிருந்து வெளியே நடந்தது,'' அவள் தொடர்ந்தாள். ''அத்தகைய ஒரு சிறந்த மென்மயிர்க் கொத்துடைய பூனை. அது மெதுவாக நடந்து கூரையை மோப்பம் பிடித்தது. பிறகு அது நின்று நம்மைக் கவனித்தது. நீ என்ன சொன்னாய் என்று நீ நினை?''

''அது ஒரு பூனையல்ல, ஆனால், தனது வாழ்க்கையில் முதன்முறையாக ஒரு பூமி வாசியை பார்த்துக் கொண்டிருந்த தொலைதூர கோளத்து வாசி.''

''முழுக் காட்சிக்குமாக நான் உனக்கு நான்கு வரிகளைத் தருகிறேன்.''

''தாளத்தோடா?''

''விரும்பினால் சரி.''

அர்பன் தனது விரல்களை ஒன்றோடு ஒன்று இணைத்து வைத்துக் கொண்டான். திருமறை பரப்புபவரைப் போலவே பாடினான்:

வெண்ணிறப்பூப் பந்தாய் விளங்குகின்ற தண்மதியம்
விண்ணிலே கண்மூடி மென்துயிலில் ஆழ்ந்திருக்கும்.
ஊரிலே கூரையொன்றில் உட்கார்ந்து ஓர் பூனை
பாரிலே மாந்தர் தமை ஐயத்துடன் பார்த்திருக்கும்.

''அற்புதம், ஆர்பி!'' லின்டா வியந்து தனது கைகளைத் தட்டினாள். ''இன்று நீ உன்னை யே மிஞ்சி மிகுதியாகி விட்டாய்.''

''மிகவும் உண்மை,'' தனது மன எழுச்சி மிகுந்த உணர்ச்சியின்மைக்கு ஆட்பட்டதாக உணர்வதாக அர்பன் நினைத்தான். ''மேலும் கொடுங்கனவை எதிர்நோக்கும் இரவு முன் நின்றது. ஒருவேளை இதுவே எனது கடைசி செய்யுள் முயற்சியாக இருக்குமோ? நியூமோ ரின் திட்டம் செயல்படுகின்ற போது, கடவுள் களின் இந்த நன்கொடை மறைந்துபோனால் என்ன ஆவது?''

நன்கு இருட்டுகின்றவரை அவர்கள் கொடி

வீட்டில் தங்கினார்கள். அப் பெண்ணுக்கு விடை கூற அர்பன் விரும்பவில்லை. இதுதான் அவர்களது கடைசிச் சந்திப்பாக இருக்குமோ என்ற உணர்வு அவனுக்கிருந்தது.

தோட்டப்பாதை நெடுகிலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. சிலர் போய் வந்து கொண் டிருந்தனர்.

''வா, நாம் போவோம்,'' என்றாள் லின்டா.

''இன்னும் சற்று பொறு,'' அர்பன் அவள் கையைப் பற்றியபடி கூறினான்.

''நீ கொள்ளைக்காரர்களுக்கு பயப்படவில் லையா?''

''சில நாட்களில் நான் இந்த நகரில் மிகச் சக்தி வாய்ந்த மனிதனாக இருக்க முடியும்,'' பாதி வேடிக்கையாகவும், பாதி அக்கறையுடனும் அர்பன் கூறினான். ''அப் போது நான் அந்தக் கொள்ளையர்களை பூனைக் குட்டிகளைப் போலத் தூக்கி எறி வது சாத்தியமாகும். அதை நீ விரும்புகிறா யா, ஜிப்சி?''

''மிகவும் தெளிவில்லாமல் இருக்கிறது, மிக வும் ஆன்மீகச் சார்பானதாகவும் இருக்கிறது. முதலில் நீ காணாமற்போகப் போகிறாய். பிறகு நீ சக்தி வாய்ந்தவனாகப் போகிறாய். இவை எல்லாவற்றையும் நான் எப்படிப் புரிந்துகொள்வேன்?''

''உனக்குச் சொல்வதற்கு எனக்கு உரிமை யில்லை, ஜிப்சி,'' என்று விடையளித்த அர்பன் திரும்பவும் மகிழ்ச்சியற்றவனானான்.

லின்டா ஆர்வத்தில் மூழ்கினாள். ஆனால்

அர்பனை வினவுவது அவ்வளவு நல்லதல்ல என்று உணர்ந்தாள். அவனால் முடிந்திருந்தால் அவன் கூறியிருப்பான்.

சந்தின் தொலைவில் ஒரு சிறிய உருவம் தோன்றியது. அது ஒரு பையன். அவன் காணாமற் போய் விட்டவன் என்று யாரும் நினைக்கக் கூடும். ஆனால் அவன் நம்பிக்கை யோடு அடி எடுத்து வைத்தான். ஒருவகை யில், வீட்டிலிருந்து காலாற வந்து திரும்பப் போகும்போது அவனது கவனக் குறைவான பெற்றோர்கள் அவன் விருப்பப்படி வரட்டும் என்று விட்டிருப்பார்கள்.

கொடிவீட்டை அடுத்த விளக்கை அடைந்த போது அப்பையன் நின்று, ஒரு பலூனை ஊதிப் பெருக்கினான். மெல்லிய மேலுறை விரைவில் காற்றால் நிரம்பி ஓர் ஆரஞ்சு வண்ண கோமாளி, பெரிய காதுகளுடன் அதி லிருந்து வெளிப்பட்டது.

அவனது வேலை முடிந்தது, அப் பையன் பலூனை காற்றில் சில முறை சுற்றி விட்டான். பலூன் மெதுவாகக் கீழே பறந்தது ஆர்வமற்றிருப்பது போல.

பையனின் விளையாட்டு சிறிது காலமே நீடித்தது. அடுத்து சில அடிகள் அவன் எடுத்து வைக்கும் முன்பே அவனது பலூன் முட்புதரில் விழுந்து, முள்ளால் கிழிந்தது.

ஒரு வெடிப் பொலி — வேறு பலூன் இல்லை. பல் இளித்த கோமாளி சுருங்கிப் போய், மறைந்தும் விட்டது.

''இதுதான் கோமாளியின் முடிவு,'' லின்டா

முணுமுணுத்தாள்.

''இதுதான் உலகத்தின் முடிவு,'' அர்பன் பதிலளித்தான்.

மனக்குறையுடைய அப்பையன் பலூனில் எஞ்சிய தொய்வு நாடாவை இழுத்து, பலூனை நிரப்ப முயன்றான். அதிலிருந்து எதுவும் வராத நிலையில், அதைப் பக்கத்தில் சுற்றி எறிந்துவிட்டு, மூலையில் சுற்றிப் போய் மறைந்து விட்டான்.

அர்பன் லின்டாவிடம் அவனது குறிப்பேட்டைக் கேட்டான். பக்கங்களை விரைவாகப் புரட்டி, எதுவும் எழுதாத ஒரு பக்கத்தைத் தேடி அதில் ஏதோ எழுதலானான். சிறிது நேரத்தில் என்ன எழுதினானோ அதைக் குறுக்காக அடித்து விட்டு புதிதாக எழுதத் தொடங்கினான். விளக்கு ஒளி மங்கலாக இருந்ததால், குறிப்பேட்டின் மீது அவன் குனிய வேண்டி இருந்தது.

அவன் நீண்ட நேரம் எழுதினான்.

லின்டாவுக்கு எலும்பெல்லாம் குளிர்ந்தது. ஆனால் அர்பனைத் தொல்லை செய்ய துணியவில்லை. அவ்வப்பொழுது அவனது முகச் சுளிப்பையும் உதடுகள் துடித்ததையும் மேலெழுந்தவாரியாகப் பார்த்து அமைதியாக இருந்து விட்டாள்.

அர்பன் கடைசி முற்றுப் புள்ளி வைத்த போது அந்தப் பாதையில் ஆள் நடமாட்டமே இல்லாது போயிற்று. குறிப்பேட்டை மூடிவிட்டு லின்டாவிடம் கொடுத்து அவன் கூறினான்:

''இப்பொழுது நான் ஒரு பலூனைப் போல

இருக்கிறேன் — எந்தவிதக் காற்றும் இல்லாது.''

அப்பெண் குறிப்பேட்டைத் திறக்க முயன்றாள், ஆனால் அர்பன் அவளைத் தடுத்தான்.

''இப்பொழுது இல்லை, லிண்டா, நீ வீட்டில் இதைப் படிக்கலாம்.''

இருவரும் எழுந்து பூங்காவின் வாயிலை நோக்கி நடந்தார்கள்.

அவள் தான் கேள்வியுற்ற எல்லாவற்றையும் குறித்தும், அவளை முற்றாக அழுத்திய அர்பனின் எதிர்காலம் பற்றிய அக்கறையற்ற நிலைக்காகவும், ஆழ்ந்த கவலை கொண்டாள். அதை ஆற்றுப்படுத்தக் கூடிய எந்த உணர்வையும் அவள் பெறவில்லை.

பூங்காவின் வாயிலில், தெருவிளக்குகளின் வெளிச்சத்தில் முடிவில்லாத நகரும் பாதை விரைந்து நகர்ந்து கொண்டிருந்தது.

''நாம் சுரங்கப் பாதையில் போகலாம்,'' என்று லிண்டா ஆலோசனை கூறினாள்.

''நிலத்திற்குள் உட்குடைந்து செல்வதை நான் வெறுக்கிறேன்,'' அர்பன் முணுமுணுத்தான். ''ஏன், உனக்குக் குளிர்கிறதா?''

''உண்மையாக இல்லை,'' லிண்டா பதில் சொன்னாள், தனது பற்களை நெறுநெறு வென்று கடிப்பதிலிருந்து சிரமப்பட்டாள்.

நகரும் பாதையில் இளைஞர்கள் கால் வைத்த போது காற்று அவர்களை இருமடங்கு வேகத்தோடு கிழித்துத் தள்ளியது. அர்பன் தனது மேலாடையைக் லிண்டாவின் தோள்களின் மீது வைத்தான்.

அவர்கள் விரைந்து கடந்த தெருக்கள் ஆள்

அரவமற்றுக் கிடந்தன. அந்த தொழிலாளர் பகுதிகளில் மக்கள் சீக்கிரமே படுக்கைக்குச் சென்று விட்டனர்.

''நகரம் இறந்து விட்டது,'' நீண்ட இடை வெளியை கலைத்தான் அர்பன்.

''ஆனால் சன்னல்களில் விளக்குகள் எரிகின் றன,'' லின்டா எதிருரைத்தாள்.

''இது பொருட்டல்ல. மக்கள் எல்லாரும் இறந்து விட்டார்கள், ஆனால் விளக்குகள் இன் னமும் எரிந்து கொண்டிருக்கின்றன,'' அர்பன் உறுதியாகத் தனது தலையை ஆட்டிப் பேசி னான்.

''இன்று நீ மிகவும் சோர்வாக இருக் கிறாய், அர்பன்... பொருட்கள் எவ்விதம் பணி யாற்றின என்பது குறித்து நீ என்னிடம் எது வுமே கூறவில்லை.''

''கூறுவதற்கு எதுவுமில்லை.''

''நீ உனது கையை எப்படிக் காயப்படுத்திக் கொண்டாய்?''

''இதை வேறு ஒரு சமயம் உனக்கு நான் சொல்வேன்.''

லின்டா அர்பனின் மேலங்கிக்குக் கீழே வெதுவெதுப்பைப் பெற்றாள். மேலும் அவளது மனநிலை சற்று முன்னேறியிருந்தது.

''எப்பொழுது நாம் மீண்டும் சந்திப்போம், ஆர்பி?'' அவள் கேட்டாள். ''நாளை திங்கட் கிழமை. நான் சீக்கிரமே வேலையை விட்டு வந்து விடுவேன்.''

''என் விஷயங்கள் எப்படி மாறும் என்பது குறித்து என்னிடம் எந்தத் திட்டமும் இல்லை,

ஜிப்சி. நான் உனக்குச் சொன்ன புதிய பணியைப் பொருத்தே அவை எல்லாம் இருக்கின்றன.''

அவர்கள் விடை பெற்றுக் கொள்ளும் போது லின்டா கேட்டாள்: ''இப்பொழுது உனக்கு எந்தவித ஓய்வு நேரமும் இல்லை என்று நீ கருதுகிறாயா?''

''எனக்குத் தெரியாது. வீடியோபோனில் இது குறித்து நாம் விவாதிக்கலாம்,'' அர்பன் விடையளித்தான். அவனது குரல் தளர்ந்தும் மென்மையாகவும் இருந்தது.

வீடு திரும்பியதும், லின்டா தனது அசைவு நாற்காலியில் அமர்ந்தாள். நிற்கும் விளக்கினை ஏற்றி, குறிப்பேட்டை வைத்தாள்.

அர்பன் எழுதியவற்றைப் புரிந்து கொள்ள சிரமப்பட்ட அவளது மனநிலை கிளர்ச்சியுற்றது. இதுவே அவனது கடைசிக் குறிப்பாக விடைபெற்றுக் கொள்ளும் இயல்புடையதாக இருக்கக் கூடும் என்று அவளுக்கு ஓர் உணர்வு இருந்து கொண்டே இருந்தது. துயரத்துடன், குறுக்காக அடிக்கப்பட்ட வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களை ஊன்றிப் பார்த்தாள். கடைசியாக ஒரு கவிதை தோன்றியது:

விண்மீன் கூட்டம் நாற்புறமும் சிதறிக்கிடந்தன,
நிலக்கரி போல வெண்சுடராய் விண்மீன் சுடர்வீசின,
உலகு இளமையாய் எங்கும் விரிந்து பரவியது.
தனது தூதுவரை தெற்கு, கிழக்கு, மேற்கென
நாற்புறமும் அனுப்பியது,
அழைத்து அடையாளம் காட்டி தூண்டியது
முடிவற்ற எல்லையிலா ஒளிவெள்ளப் பாதையில்.

பகுத்தறிவுள்ள ஓர் குறு விண்மீன்
கையற்று சோகமாய் நின்றது, தன் சொந்த
ஆலோசனையில் இருந்தும் கூட.
ஏனெனில் உலகு விரைவில் சுருங்கும் என அறிவாள்,
துளை விழுந்த பலூனிலிருந்து காற்று
வெளியேறுவதுபோல!

லின்டா சிந்தனை வயப்பட்டாள். குறிப்பேடு நழுவி தரையில் விழுந்தது. அதை அங்கேயே விட்டு விட்டாள்.

ஆர்வ வெறி கொண்ட அந்த மனிதன் என்ன திட்டமிட்டிருக்கிறான்? நியூமோர் என்று அவள் குறிப்பிட்ட போது ஏன் அவன் சீறியெழ வேண்டும்? அவன் பொறாமைப்பட்டானா? இல்லை. அவனால் முடியாது. அவர்கள் குழந்தைப் பருவ நண்பர்கள் என்பது அவனுக்குத் தெரியும். அவர்களுக்குள் மிகுந்த வேறுபாட்டை ஒருபோதும் கண்டதுமில்லை, ஏற்பட்டதுமில்லை.

லின்டா பசியாக இருந்தாள். ஆனால் சமையற்கட்டுக்குள் சென்று தனக்கு உணவை தயாரிக்கக் கூடிய அளவுக்கு தெம்பு இல்லாததை உணர்ந்தாள்.

''கோப்பை ஒன்று அலமாரியிலிருந்து தரையில் விழுந்த போது, 'நான் மிகவும் உடைந்து போனதாக உணர்கிறேன்,' என்றது.'' அது நியூமோரினுடைய கேலிக் கூத்து — ஒரு சாக்ஸன் பீங்கான் கோப்பையை உடைத்த சமயத்தில் செய்யப்பட்டது.

அவளும் முற்றிலும் உடைந்து போய்க் காணப்பட்டாள்.

''நான் சற்று ஓய்வெடுப்பேன், பிறகு இரவு உணவு கொள்வேன்,'' தூக்கக் கலக்கத்தோடு அவள் நினைத்தாள்.

அசையும் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவள் தூங்கிப் போனாள். பலூனிலிருந்து ஒரு கோமாளி சிரிப்பது போல அவள் கனவு கண்டாள். பலூனிலிருந்து காற்று வெளியேறி யது. இப்பொழுது கோமாளி இல்லாது போய் விட்டான்.

...பிறகு அர்பன் கொடிவீட்டிலிருந்து வெளி யேறி பலூனில் எஞ்சியவற்றைப் பொறுக்கி னான்.

கனவு மிகத் தெளிவாக இருந்தது. பலூ னின் ஓட்டையை அர்பன் கவனமாக முடிச்சுப் போட்டு விட்டு பிறகு அதை ஊத ஆரம்பித் ததை பார்த்துக் கொண்டிருப்பது போல அவளுக்குத் தென்பட்டது.

''கவனமாக,'' லிண்டா சொன்னாள். ''அது வெடிக்கப் போகிறது.''

''நீ கவலைப்பட வேண்டாம்,'' அர்பன் பதி லளித்தான். ''இந்த பலூன் நமது உலகம். உலகம் மறையாது, எனெனில் சாவே இனி இருக்காது.''

''தலைதடுமாற்றம் ஏற்பட்டால்?''

''இந்த பலூன் திரும்பவும் உண்டானது போல அதுவும் திரும்ப உண்டாகும்,'' அர்பன் பதிலளித்தான்.

கோமாளி வரையப்பட்ட பலூன் அளவில் பெரியதாக வளர்ந்தது. லிண்டா கவனித்தாள், அது வளரும் போது அதைத் தொடுகின்ற

எல்லாப் பொருட்களையும் அது விழுங்குவது கண்டு அச்சமுற்றாள். அவர்கள் அமர்ந்திருக்கின்ற இருக்கையின் அடிப்பகுதியை அது விழுங்கிவிட்டது. கொட்டகையின் திறந்த சுவர் பகுதியை, அர்பனின் உதடுகளை, அவனது முகத்தை... அரற்றுவதற்காக அர்பனை எச்சரிப்பதற்காக அவள் வாயைத் திறந்தாள். ஆனால் எந்த ஒலியும் வரவில்லை. அர்பனைக் காப்பாற்றுவதற்கு விரைய அவள் விரும்பினாள், ஆனால் உடலை அவளால் அசைக்க முடியவில்லை. அது கனமாக உருவெடுத்து, அகன்று இருக்கையின் மீது இருந்தது.

இதற்குள்ளாக பலூன் அர்பனை முழுக்க விழுங்கி விட்டு, அவளை நெருங்கியது. அஞ்சத்தக்க பெரிய கோமாளி அவள் கண்களுக்கு அருகில் பல் இளித்தது. ஆனால் அந்த இளிப்பு அஞ்சத்தக்கதாக இல்லை. மரணம் இருக்கப் போவதில்லையாதலால் ஒருவரும் எதற்கும் அஞ்சத் தேவையில்லை என்று கூறுவது போல அது காணப்பட்டது... மிகப் பெரும் முயற்சியுடன் அவள் ஒரு விரலை தனது முழு பலத்துடன் பலூனினுள் நுழைத்தாள். பயங்கரமான பேரதிர்ச்சியுடன் பலூன் வெடித்தது. ஆனால் அதற்குள்ளாக அர்பன் இல்லை. அவன் காணாமற் போயிருந்தான், மெலிந்த காற்றோடு கலந்து விட்டான்.

லின்டா கண்களைத் திறந்தாள். புலர் காலைப் பொழுது தோன்றிக் கொண்டிருந்தது. நிற்கும் விளக்கு அவளது காலடியில் விழுந்து

கிடந்தது. அதன் இரு பல்புகளும் சில்லாக உடைந்து கிடந்தன.

...தொலைவிலிருந்து உள்ளே அலைகள் உருண்டு வந்தன. அவை சற்று முன்னர் கடலுக்குள் மூழ்கிய சூரியனால் தெளிவாகச் செதுக்கு வேலை செய்தது போன்ற தொடுவானத்திற்கு அப்பாலிருந்து தோன்றுவது போலக் காணப்பட்டன.

அதிரும் அலைகளால் ஒரு சிறிய பவழப் பாறைத் திட்டு அதிர்ந்தது. அந்தத் தீவில் நின்ற ஒரே பனை மரத்திற்கு எதிராக முதுகைக் காட்டியபடி அர்பன் நின்றான். காற்று அவனது பழுப்பு நிற மேலங்கியை கிழித்துக் கொண்டிருந்தது. பசுமையான இலைகள் அவனது தலைக்கு மேலாகப் பறந்தன. பிறகு அது அட்லாண்டிக்கின் விரிந்த பகுதிக்கு விரைந்தது.

சந்தம் மாறாது அலைகள் உருள்வதனால் ஆறுதலான தாளலயம் தோன்றியது. அவன் அங்கேயே நின்றுகொண்டு, இயற்கையின் விளையாட்டை உற்று கவனித்தபடி மகிழ்ந்தான். கோளக் கணிப்புப் படிவம் பற்றிய திரைப் படச் சுருள்களைப் பார்த்து மகிழ்ந்தான். அவை கடந்த காலத்தை, அது மிக நுண்ணிய பொருளாக இருந்தாலும், கொண்டுவர உதவி புரிந்தன. தற்போதைய நிலையை மறப்பதை விட வேறு என்ன நல்லதிருக்கிறது, அதை அப்படியே ஒரு மணி அளவிற்கு நிறுத்தி

விட்டு, மனத்தை வெறுமனே இருக்க விட்டான்.

பேரின்ப மாதம் கழிந்தது. நியூமோரால் சலுகை மாதம் அவனுக்கு வழங்கப்பட்டது. நியூமோர் தவறேதும் செய்துவிட்டானா? அவன் கூடுதல் காலம் பெற்றிருக்கலாமா? இல்லை, நியூமோர் ஒருபோதும் தவறுகள் செய்ய மாட்டான். அந்தக் கொடிவீட்டில் அவன் லின்டாவுடன் ஆற்றிய நினைவிலிருக்கும் அவனது உரைக்குப் பிறகு சரியாக ஒரு மாதமே கடந்திருக்கிறது? அப்பொழுது அவன் எதைப் பற்றியும் அஞ்சவில்லை.

எதார்த்தமாக இப்பொழுது எந்தவகையிலும் அஞ்சுவதற்கு எதுவுமில்லை. அவனுக்கு தேவையானதெல்லாம் கவனமாக இருப்பதுதான். நியூமோர் அதை எப்படிச் சொன்னான்? ''ஆல்வா முட்டாள். அவனை ஏமாற்றுவது இவ்வுலகில் மிகவும் எளிமையானது. ஒவ்வொரு நிமிடத்திலும் நீ செய்ய வேண்டியதெல்லாம் இதுதான் — அவனைக் கட்டாயம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.''

நினைவிருக்கட்டும்! இடர்நிலையில் ஒருவன் வாழ்க்கை இருக்கும் போது மறந்து விடுவது இயல்பு என்பது போலாகிவிடும்.

நியூமோரின் வழமையற்ற தருமொழியை தயக்கமோ, சந்தேகமோ இல்லாமல் அர்பன் ஏற்றுக்கொண்டதில்லை. வாழ்க்கை முற்றிலும் தாங்க முடியாததாக மாறும் போது மட்டும், அவன் 'ஆமாம்' என்பான். அவனது துறையின் சோதனைகள் நீண்ட காலமாகவே செயலிழந்து

போய் இருக்கின்றன. அவன் எப்பொழுதுமே விளிம்பில் நின்றான். சரியாக எதுவுமே வர வில்லை. முடிவற்ற தீங்குகள் பெரியதும் சிறியது மாக ஏற்பட்டன. மிகு விலையுள்ள இன்டிகி ரேட்டரை உடைத்தான். அவனது தலைவரு டன் சண்டையிட்டான். பழைய வில்நெர்டன் இவனுக்கு முற்றிலும் எதிராக இருந்தான். அவனது எல்லாத் தொல்லைகளும் அவனது மோசமான மனநிலையாலும் பொறுப்பற்ற தன்மையாலும் ஏற்பட்டன என்பதை அர்பனின் நண்பர்கள் அவனுக்கு சொல்லி வந்திருக்கின்ற னர். மோசமான மனநிலை என்பது தேய்ந்து போன நரம்புகள் என்பதன் மறுபெயர் என்று ஒரு மருத்துவக் கையேட்டில் அர்பன் படித் திருக்கிறான். ஆனால், இதைப் பற்றி அவன் நியூமோரிடம் சொன்னபோது பின்னவன் வழ மைபோல அதை ஒரு வேடிக்கைப் பேச்சாக மாற்றினான்.

''ஆக, டாக்டர்களை விட மருத்துவக் கையேடுகளை நீ விரும்புகிறாய், அப்படித் தானே?'' அவன் கேட்டான்.

''இதில் என்ன தவறு இருக்கிறது?''

''உனது வைத்தியத்திற்கு கையேட்டில் கண்டபடி நீ மருந்தை எழுதிக் கொள்வாய்?''

அர்பன் தலையசைத்தான்.

''அவ்வாறானால், தவறாக அச்சிடப்பட்ட மைக்காக நீ சாக வேண்டி நேரலாம்,'' சிரித்துக்கொண்டே நியூமோர் கூறினான்.

''ஒருவன் சாவது என்ன ஒரு விஷயமா?'' தோளைக் குலுக்கியபடி அர்பன் சொன்னான்.

ஆனால் அவனது மாறுபாடு பெரிதும் வித்தியாசமாகத் தெரிந்தது.

அவனது நண்பர்கள் அல்லது கையேடு சரியானதோ என்னவோ விஷயங்கள் மோசத்திலிருந்து மிக மோசமாக மாறிக்கொண்டிருந்தன.

...வெப்பமண்டலத்தில் இரவு வேகமாக மறைகிறது. ஒரு நிமிடத்திற்கு முன்னால் சிறிய அச்செழுத்தைக் கூட அவனால் படிக்க முடிந்தது. ஆனால் இப்பொழுது நிழல்கள் பாறைக்கு அப்பாலிருந்து காயலைக் கடந்து இரண்டறக் கலந்துவிட்டது. எல்லாமே இருளாகிவிட்டது. தெளிவின்றி காண்கின்ற மாதிரியாக தல மரக்குடைவுப் படகு அப்பகுதியில் காணப்பட்டது. இருளில் ஒளி வீசுகின்ற புள்ளிகள் பத்தாயிரக் கணக்கில் அலைகளில் நடனமிட்டன.

சில நொடிகளுக்குப் பிறகு ஒளி விளக்குகள் தானாக இயங்கும் கருவியால் இயக்கி வைக்கப்பட்டு பேய்த் தோற்றமுடைய ஒளி வெளிவரத் தொடங்கின. இருளில் தெரியாதிருந்த சுவர்கள் வெளித் தோன்றலாயின. தன்னை சுவர்கள் நெருங்கி வந்துவிட்டதை அர்பன் உணர்ந்தான்.

ஒற்றைத் தடி மரத்தின் துண்டு கைவைத்த இருக்கையின் பின்பகுதியாக இருந்தது.

கனவிலிருந்து விழித்தெழுந்தவன் போல அர்பன் காணப்பட்டான். பத்தரை மணி இருக்கும் என்பதை அறிந்திருந்தாலும் கூட அவன் தனது கை கடிகாரத்தைப் பார்த்தான்.

அவனது புதிய வாழ்வில் இந்த முதல் நாளில் வீட்டில் தங்குவதற்கு அவன் அநுமதி கேட்டது மிகவும் நல்லதாய்ப் போயிற்று. அது மிகவும் பாதுகாப்பானது. ஆனால் ஒரு வன் எப்பொழுதுமே வீட்டிலிருக்க முடியாது. எப்படியோ, முதல் நாள் முடிவை நோக்கி நெருங்கிக்கொண்டிருந்தது.

அறையின் மிகவும் சாதாரண இருக்கை அமைப்புகள் ஒருவனுக்கு நான்காம்தர விண் வெளிகப்பல் அறையை நினைவுபடுத்தும். எது வும் மிகையானதல்ல — ஓர் அடைப்பிட இருக்கை, ஒரு டெஸ்க், ஒரு வரை பலகை, ஒரு கை வைத்த நாற்காலி. அர்பனுக்கு எந்தக் குறை யுமில்லை — இதைவிட அவனுக்கு என்ன வேண் டும். வெஸ்டர்ன் நிலத்தின் அருமையான காட்சி யை அவனது சன்னல் காட்டியது. அர்பன் தனது குழந்தைப் பருவத்தில் பார்த்த ஒரு படத்தை அது நினைவு கூர்ந்தது. மனிதனது கால் இன் னமும் நிலவில் மிதிபடாத, மற்ற கோள் களைப் பற்றி எதுவும் கூறமுடியாத ஒரு காலக் கட்டத்தில், ஓர் அறிவியல் கதைத் தொகுப் புக்கான விளக்கமே அது. நிலவில் ஏற்பட விருக்கும் வருங்கால நகரத்தை ஓவியர் சித்திரித்திருந்தார். அதற்காக அவன் நிலவுக்குச் செல்ல வேண்டிய தேவை இருப்பதாகத் தோன்றவில்லை — அவனது கற்பனைக்குப் பூமி பெருமளவில், இடமளிப்பதாகவும், இருளாகவும் காணப்பட்டது... காஸ்மிக் தொடர்புகளுக்கான திறந்த மாதிரியான கோபுரங்கள் பல

வண்ணக் கூம்புகளால் சிதறிப்பரந்து காணப் பட்டன. நகரும் பாதைகள் எல்லா திசைகளி லும் சென்றன. அவைகளின் ஓரங்கள் பாதுகாப் பாக ஒளிரச் செய்யப்பட்டிருந்தன. பாதை களின் குறுகிய ஓரங்களுக்கு மேலே பூஜ்ய வடி வங்கள் தொங்கிக் கொண்டிருந்ததை ஒப்பிட்டுப் பார்க்கையில் உலகத் தொடக்கக் காலத்து கோர உருவங்கள் அநேக அப்பாவி பொம்மை களைப் போலக் காணப்பட்டன. கம்பெனியால் வளரச் செய்வதற்கான புரோட்டீன் முறை களின் மாதிரி சோதனைக் களமாக அது இருந் தது. தொலைநோக்கி வழியாக வேடிக்கைக் குரூபிகள் தள்ளாடுவதையும், விழுவதையும், குட்டிக் கரணம் இடுவதையும் பார்க்கும் பொழுது அது அதிகாரபூர்வமாக வெறுக்கப்படு கிறது என்பதை அவன் அறிந்திருந்தாலும், அர்பன் அதை விரும்பிய காலம் ஒன்றிருந்தது.

நியூமோர் ஒருமுறை அவனது இடத்தில் விடப்பட்டான்.

''இயற்கை நிலக் காட்சியைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' நியூமோர் சன்னலை நெருங்கியபோது அர்பன் கேட்டான். ''விரும்பு கிறாயா? நகரமயமாக்குதல் தனது உச்சக் கட்டத்தில் இருக்கிறது.''

''ஒரு பைத்தியக்கார சிற்பியின் சின்னப் பிதற்றல்,'' நியூமோர் குலுங்கியபடி கூறினான்.

காவலாளிகள் கைப்பற்றிய தொலை நோக்குக் கருவி இல்லாமலேயே, அந்நேரம் அர்பன் தனது சன்னல் வழியாகப் பார்த்துக்

கொண்டிருக்க விரும்பினான். மேலும் ஒரு நிமிடம் எந்த முடிவுமில்லாமல் அர்பன் நின்றான். இருப்பினும் அவன் பார்த்த ஸபேரோஃபிலிமின் பாதிப்பில் இருந்தான். சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு விடுமுறையில் அட்லாண்டிக் தீவுக்குச் சென்ற போது அவனே அதைச் செய்தான். அது ஓர் அற்புதமான நேரம்!

பிறகு அவன் வீடியோபோனின் மூடிய கண்ணைப் பார்த்தான். அன்று அவன் லின்டாவைப் பார்க்கவே இல்லை என்பதை நினைவுகூர்ந்தான். அவளை அவன் அழைக்கலாமா? அல்லது அதற்குக் காலங்கடந்து விட்டதா? சற்று தயக்கத்துடன் அர்பன் அவளது எண்ணைச் சுற்றினான்.

இந்த அழைப்புக்காக லின்டா கட்டாயம் காத்துக்கொண்டு இருந்திருக்க வேண்டும்.

''அழைத்தது அன்பிற்குரியது,'' மங்கிய செம்மஞ்சள் நிறமான கலைந்த தனது தலைமயிரை சரிசெய்து கொண்டே சொன்னாள்.

''இன்று நான் மிகுந்த பணியில் ஈடுபட்டிருக்கிறேன்...'' அர்பன் தொடங்கினான்.

''எதைப் பற்றி?'' கேலியாக தனது கண்களை அசைத்தபடி லின்டா கேட்டாள்.

''அது எப்படி என்பது உனக்குத் தெரியும்... விரைந்து செய்ய வேண்டிய சில கணக்கீடுகள் இருந்தன...''

அவன் பேச்சை நிறுத்தினான்.

''அப்படியா. மற்றுமொரு ரகசியம்.''

''லின்டா...''

''ஓ! நான் பொருட்படுத்தவில்லை. வெஸ்டர்ன் ரகசியங்களால் எனக்குப் பயனில்லை. ஆகவே, நீ மன்னிப்பதற்கு முடிவு செய்து விட்டாய்?''

''யாரை?''

''என்னைத்தான் என்று நினைக்கிறேன்.''

''ஆனால் இன்று முழுக்க நான் மிகுந்த பணியில் ஈடுபட்டிருக்கிறேன் என்று உனக்குக் கூறியிருக்கிறேன்...''

''ஆமாம், புரிந்து கொண்டேன். நாள் முழுக்க நீ பணியில் ஈடுபட்டுள்ளாய். வெஸ்டர்ன் நிலப்பகுதியையும் விட்டு விடவில்லை. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''அன்பிற்கினியவனே, அவர்கள் உன்னை கடுமையாக அதிகவேலை வாங்குகிறார்கள்,'' லின்டா மேலும் கூறினாள். ''எனக்கு அண்மையில் ஓர் அடி தொலைவில் நீ கடந்த போது என்னை அடையாளங் கண்டு கொள்ளவில்லை என்பதை எங்ஙனம் உனக்குச் சொல்ல?''

''ஏன், வெஸ்டர்ன் நிலப்பகுதிக்கு வெளியே எனது காலை ஒருபோதும் நான் வைத்ததில்லை!''

''ஆமாம். நீ சென்றாய். மேலும் என்னைக் கடந்து நடந்து சென்றாய் ஒரு வார்த்தை கூட பேசாது.''

''எல்லாவற்றையும் நீ கற்பனை செய்திருக்க வேண்டும், ஜிப்சி. நான் வீட்டை விட்டு ஒருபோதும் வெளியேறவில்லை.''

''வேறு யாரையேனும் நீயென்று கருதி நான் குழம்பி விட்டேனோ? பொதுவாக உனது மனநிலை மாறுபாடுகளால் நான் களைத்து விட்டேன். ஒரு நாள் மிகவும் கனி வோடு இருக்கிறாய். பிறகு பிணங்கிக்கொண்டு அழைப்பது கூட இல்லை. இவை எல்லாவற்றுக் கும் காரணம் நேற்று முன்தினம் நியூமோருடன் படங்கள் பார்க்க நான் போனதாகத்தானி ருக்கும் என்பதானது தரங்கெட்டதைத் தவிர வேறு எதுவுமில்லை.''

''இன்னும் என்ன?'' அர்பன் வசைப்பாங் கோடு கேட்டான்.

''நீ என்னைச் சரியாகப் புரிந்து கொண் டாய்,'' லின்டா திரும்பக் கூறினாள். ''உனது நடத்தையைவிட மிகக் கேவலமானது வேறெது வும் இருக்க முடியாது. முதலாவதாக, அவன் என்னை அழைத்தான் என்று நீ தெரிந்து கொண்டாய்... இரண்டாவதாக...''

''கிறிஸ்துவே, லின்டா, நான் ஒருபோதும் அப்படிச் சிந்திக்கவில்லை!'' அர்பன் இடைமறித் தான்.

''போன மாதத்தில் முழுக்கவே நீ என்னைப் பற்றி சிந்திக்கவே இல்லை. நான் குருடு என்றா நீ நினைக்கிறாய்? கொடிவீட்டில் என்னிடம் பேசிய புதிர்களை நான் நினைவில் வைத்திருக்கவில்லை என்று நினைக்கிறாயா? அது எல்லாம் சிறிய குழந்தைகளுக்கான தே வதைக் கதைகள்.''

''லின்டா, நான் உன்னிடம் குறிப்பிட்ட சோதனை இன்னமும் முற்றுப் பெறவில்லை.''

இருவருமே சற்று நேரம் மௌனமானார்கள். முற்றிலும் எதிர்பாராத ஆபத்துக்களைக் கொண்ட ஒரு புதிய கோளத்தில் காலடி வைக்கத் தயங்கும் ஒரு விண்வெளிவீரன் திகைப்பது போல முடிவுக்கு வர இயலா நிலையில் அர்பன் இருந்தான்.

ஆனால் அவன் அதிலிருந்து வெளியேறியாக வேண்டும்.

''நாம் நாளைச் சந்திப்போம்,'' இறுதியாக அவன் யோசனை கூறினான்.

''நான் ஐந்து மணிக்கு முடித்து விடுகிறேன்.''

''அருமை. ஆறு மணிக்கு உனக்காக நான் காத்துக் கொண்டிருப்பேன். அதே இடத்திலா?''

''தாமதமாக வர வேண்டாம்!'' அவன் மீது அவள் தன் விரலால் தட்டினாள். ''அத்துடன், திறந்த வெளி அரங்கில் எலெட்ரானிக் கூட்டமைவு என்ற ஒரு நிகழ்ச்சி இருக்கிறது.''

திரை இருளானது.

அர்பன் அறையின் மேலுங் கீழும் நடக்கத் தொடங்கினான். அவனது கைகள் முதுகுப்புறம் கட்டிக் கொண்டிருந்தன. அவனுக்காக நியூமோர் வரைந்த சொர்க்கம் இதுவல்ல. நிச்சயமாக அவன் தனது எஞ்சிய வாழ்நாட்களை, அவனது இரட்டையன் ஆல்வாவினால் வழிமறிக்கப்படும் அச்சத்தில், நான்கு சுவர்களுக்குள் செலவிட மாட்டான்.

கடந்த ஒரு மாதத்தில் அர்பன் நிறைய மாறியிருந்தான். தன்னிடம் ஏற்பட்ட மாற்

றத்தை அவனாகவே அறிந்திருந்தான். இதில் நியூமோரின் வார்த்தை உண்மையானது. வாழ்க்கை அவனுக்கு மிகவும் சுலபமானதாக வே இருந்தது. கடந்த ஆண்டுகளில் எல்லாம் தாங்க முடியாத சுமையை அவன் தோள் களில் ஏற்றியிருந்தது போலவும், இப்பொழுது ஒவ்வொரு நாளும் அது குறைந்து கொண்டு வருவது போலவும் காணப்பட்டது. அவனது நினைவுகள் தெளிவற்றும் மிகவும் தொலைவில் இருப்பதாகவும் இருந்தன. அதில் மிகவும் பயங்கரமானது, நெருப்பைப் போல அவனை எரித்த நினைவுகள் உருகிக் கரைந்தன. எஞ் சியதெல்லாம் வலியின் நினைவுதான். 'நினை வின் நினைவு' என்பதுபோல, ஆனால் அர்பன் அது எல்லாம் என்னவென்று நினைத்துப் பார்ப்பதே இல்லை. ஏனெனில் காலைத் துண் டித்த பின்னும், முன்னைய வேதனை இருப் பதாக உணரக் கூடியவனைப் போல இருந் தான்...

அவன் இழந்த மற்றொரு கொடை, திடீ ரென்று கவிபுனையும் ஆற்றலை இழந்ததா கும். இந்த மாதம் முழுக்க அவன் ஒரு வரி கூட கவிதை இயற்றவில்லை.

வெஸ்டர்னிலிருந்து பச்சைத் திட்டு என வழங்கப்பட்ட பகுதிக்கு சுரங்கப் பாதை வழியாக தனது வழியை அமைத்துக் கொள் வதற்கு அர்பனுக்கு எந்தவிதச் சிரமமும் இல்லை.

நகரத்தின் சுவாசத்தால் நஞ்சாக்கப்பட்ட, வளர்ச்சி தடைப்பட்ட இந்த பூங்கா மீது அவனுக்கு ஓர் இரக்க உணர்வு இருந்தது. இங்கு முற்றிலும் மகிழ்ச்சியாக அநேக நேரங்களை, எதிர்ப்பட்ட பங்காளியுடன் சதுரங்கம் ஆடுவது, அடிக்கடி விளையாட்டைப் பார்ப்பது இப்படிப் போக்கியிருக்கிறான். போட்டி நடைபெறும் நீண்ட இருக்கையைச் சுற்றி வழமையாக ரசிகர் கூட்டம் கூடும். ஓட்டப் பந்தயங்களில் நடப்பது போல அவர்கள் இரண்டு குழுவாகப் பிரிந்து பந்தயம் கட்டிக் கொள்வார்கள். இங்கு, செஸ் வளையம் என்று அவர்களால் அழைக்கப்படும் இடத்தில் ஆர்வமிக்கவர்கள் கூடினார்கள். அவர்களின் பெரும் பான்மையோர் விண் இயக்குநர்கள். வானில் பறப்பதைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது. இவர்கள் தவிர தரக் குறைவானவர்களும், எந்தத் தொழிலுமில்லாத, சோம்பேறி இளைஞர்கள் சதுரங்கம் மீது உள்ள விருப்புக் காரணமாகக் கூடுவார்கள். எந்திரமயமாக்கல் காரணமாக அநேகர் வெளியே தூக்கி எறியப்பட்டார்கள். அது அவர்களுக்கு ஒரு சலுகை அளித்தது—வரையற்ற ஓய்வு நேரம்... ஒரு முறை இங்கு வருவதற்கு அவனை அர்பன் ஆக வைத்த போது நியூமோர் இத்தகைய தனிச்சிறப்போடு குறிப்பிட்டான்: ''ஒரு பெரிய நகரத்தின் கசடும் அழிபாடும்.''

வாயிற்புறத்தில் லின்டா அவனைச் சந்தித்தாள்.

எவரும் ஒரு பெண்ணோடு செஸ் வளையத்திற்கு வரவில்லை. எனவே அர்பன் பார்வையாளர் கூட்டத்தை பொறாமையோடு ஒரு பார்வை பார்த்தான்.

இதற்கிடையில் லிண்டா இடைவிடாது பேசிக் கொண்டிருந்தாள்.

''வழக்கம் போல நீ தாமதமாக வந்திருக்கிறாய். ஆகவே ஒரு பாடல் எழுத எனக்கு நேரம் கிடைத்தது—இரண்டே வரிகள், உன்னிடம் அதை நான் படித்துக் காட்டவா?''

''மேலே போ,'' உணர்வில்லாதபடி அர்பன் சொன்னான். அவனது கண்கள் உலாவந்த பார்வையாளர்கள் மீது விழுந்தது.

வார்ப்பிரும்புக் கிராதி வரிசையாய் அடைத்து நிற்கும்,
வழியின்றிப் பசும்புற்கள் வாட்டத்துடன் ஏங்கி நிற்கும்...

உணர்ச்சி வசப்பட்டு லிண்டா படித்தாள்—''ஆனால் தொடர்ந்து சிந்திக்க என்னால் முடியவில்லை.''

அர்பன் நிறுத்தி, ஒரு நொடி சிந்தித்தான். பிறகு மெதுவாகப் பேசினான்:

வார்ப்பிரும்புக் கிராதி வரிசையாய் அடைத்து நிற்கும்.
வழியின்றிப் பசும்புற்கள் வாட்டத்துடன் ஏங்கி நிற்கும்.
சுதந்திரமாய் மூச்சுவிடத் துடித்துநிற்கும் இளம் புற்கள்
நிரந்தரமாய்ச் சிறைப்படுத்த நினைத்திருக்கும் கிராதி அணி.

''அற்புதம்!'' லிண்டா உரக்கக் கத்தி கைகளைத் தட்டினாள். அப்பக்கமாய்ச் சென்ற

பார்வையாளன் அவளை ஆர்வத்தோடு பார்த்தான்.

''ஒரு நிமிடம் பொறு,'' என்று அர்பன் அவளை நிறுத்தினான். சுற்றிலும் பார்த்து விட்டு கவிதையை முடித்தான்:

நகர் எழுப்பும் தூசி மற்றும் நாற்றம் தரும் கரியபுகை
கருஞ்சட்டை மாட்டி அவை கவலை தனைக் காட்டி நிற்கும்.
மரிக்கும் நாள் வந்ததென மயங்கி நிற்கும் புல்,
கழுத்தை நெரித்து உயிர் குடிக்க வென்றே.

''ஆனால் நீ எதைச் சொன்னாலும், அது நீதான்,'' முன்தினம் அவர்களது உரையாடலை லின்டா சுட்டிக்காட்டினாள். ''இந்த இதே பழுப்பு நிற மேற்சட்டை அணிந்திருந்தாய் — இதுபோல முன்னர் ஒருபோதும் பார்த்ததில்லை. ஆனால் மிகவும் வெளிறிக் காணப்பட்டாய். நீ உடல் நலமில்லாமலா இருக்கிறாய்?''

''லின்டா, என்னை நம்பு. நேற்று எனது வீட்டை விட்டு நான் ஒருபோதும் வெளியேறவே இல்லை. நீ என்னை எங்கு பார்த்தாய்?'' அச்ச உணர்வால் பாதிக்கப்பட்டவன் போல வாதப்போக்கு இன்றி அர்பன் கேட்டான்.

''அங்கு, நீங்கள் உங்களையே மறந்து விட்டீர்கள், அன்பரே,'' லின்டா சிரிப்புடன் சொன்னாள்.

இதற்கிடையில் அவர்கள் திறந்த வெளி அரங்கை நெருங்கி விட்டார்கள். அங்கு

எலெட்ரானிக் கூட்டமைவு ஒப்பித்தல் நிகழ்ச்சி விரைவில் தொடங்க இருந்தது. இசைப் பாடலாசிரியன் ஓர் எலெட்ரானிக் இயக்குநன். சென்டாரியுஸ் என்னும் விண்மீன் கூட்டத்தினுள் எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் அனுப்பப் பட்ட தானியங்கி விண்கூண்டை அவன் சமீபத்தில் திரும்ப அழைத்தவன். இதுபோன்ற இசை நிகழ்ச்சிகள் மிகவும் மரபார்ந்ததாகி விட்டது. நியூமோரும் அர்பனும் வேறு எதையும் விட இந்த இசையை மிகவும் விரும்பினர்கள். ஆனால் பொதுவாக இது இன்னமும் அங்கீகாரத்தைப் பெறவில்லை.

''நான் காலை உணவுக்காக தானியங்கி அருந்தகத்திற்குள் நுழைந்தேன். உனக்குத் தெரியும், அது 10வது தெரு முனையில் உள்ள தென்று. அங்குதான் சுற்று வண்ண ஓவியக் காட்சி உள்ளது.''

அர்பன் தலையாட்டினான்.

''நிச்சயமாக, உனக்குத் தெரியும்,'' லின்டா எரிச்சலுடன் குறிப்பிட்டாள். ''நீ என்னை நோக்கி நேராக வந்து கொண்டிருந்தாய். மேலும் என்னைத் திமிராகப் பார்க்கவும் செய்தாய். நான் உன்னைப் பெயர் சொல்லி அழைக்க இருந்தேன். ஆனால் நீயோ காலை நெருக்கடியில் காணாமற் போய்விட்டாய்.''

''சரி, அவன் என்ன அணிந்து கொண்டிருந்தான்? நீ பார்த்த நபர் என்று கூற வருகிறேன்.''

''நீ என்ன அணிந்திருந்தாய்?'' லின்டா குறிப்புடன் திரும்பக் கேட்டாள். ''ஆனால் —

நீ எப்பொழுதும் என்ன அணிவாய் என்பதை நான் உனக்குக் கூறி விட்டேன்.''

''தயவு செய்து, விவரங்களை நினைவு கூர்ந்து பார். அது மிக முக்கியமானது.''

லின்டா நீள நினைத்தாள்.

''உனது கண்ணுக்கு எதுவுமே படவில்லையா?'' அர்பன் வலியுறுத்திக் கேட்டான்.

''அதுவா, காலணிகள் ஒருவேளை...''

''காலணிகள் என்ன ஆயிற்று?''

''அவை வெற்றிடத் திண்டுடன் இருந்தன. விண்வெளிப் பயணத்தின் போது ஈர்ப்பு சக்திக்கு அப்பால் எடையற்ற நிலையில் மிதக்கக் கூடாது என்பதற்காக அணியக் கூடியவை போல இருந்தன.''

''நீ உறுதியாகக் கூறுகிறாயா?''

''ஒருவகையில் நான் உறுதியாகக் கூறுகிறேன்,'' என்று வருத்தத்துடன் லின்டா கூறினாள். ''நான் உன்னிடம் கேட்க விரும்புகிறேன், ஏன் இந்த முகமூடித்தனம்: அந்தத் தானியங்கி அருந்தகம் தரையில் தான் இருக்கிறது, விண்ணில் அல்ல. ஆனால் நீ அப்படிப் பார்த்திருக்கிறாய்...'' லின்டா வார்த்தை கிடைக்காது தவித்தாள். ''அப்படி வெளிறிப் போய், நான் உன் வருகைக்காகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அது என்ன அர்த்தம் என்று உன்னால் சொல்ல முடியுமா?''

''ஒன்றுமில்லை,'' அர்பன் முணுமுணுத்தான்.

''சரி, நான் வேண்டிக் கொள்ளவில்லை.'' லின்டா வேதனையோடு காணப்பட்டாள்.

அவர்கள் நுழைவுச்சீட்டு அலுவலகம் வந்

தார்கள். தானியங்கி சீட்டு விற்பனையாளன் 'விற்றுவிட்டன' என்ற அறிவிப்பைத் தொங்க விட்டுக் கொண்டிருந்தான். அது வியப்பாக இருந்தது. அது வரை எலெட்ரானிக் இயக்குநர்களால் தொகுக்கப்பட்ட இசை எந்தவிதக் குறிப்பிட்ட புகழையும் பெறவில்லை.

ஏமாற்றத்துடன், "எவ்வளவு வருந்தத்தக்கது!" என்றாள் லிண்டா. திடீரென்று அவள் வெறுமனே இசையைக் கேட்க விரும்பினாள். ("எதிர்கால இசை," நியூமோர் சொன்னான்.)

"ஒரு நிமிடம் பொறு..." அர்பனுக்கு பித்துக் கொள்ளித்தனமான யோசனை ஏற்பட்டது. விளம்பரத் தட்டியைப் பார்த்த ஒரு ஜோடியிடம் அவன் வந்தான். "மன்னிக்கவும்," அவன் சொன்னான். "இசை நிகழ்ச்சி கேட்கவா நீங்கள் வந்திருக்கிறீர்கள்?"

"ஆமாம். ஏன்?" இளைஞன் கேட்டான்.

"ஒருவேளை உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு திரும்பப் போவது போல எனக்குப் பட்டது. உங்களது சீட்டுகளை நாங்கள் மாற்றிக் கொண்டால் என்ன என்று நினைத்தேன்..."

"என்ன முட்டாள்தனம்," அப்பெண் சீறி விழுந்தாள்.

அந்நேரம் இளைஞனுடைய கண்களும், அர்பனுடைய கண்களும் சந்தித்துக் கொண்டன.

அர்பன் பிரகாசமாகச் சிரித்தான். இளைஞன் வியப்படைந்தான், நிச்சயமாக இந்த

மெலிந்த உணர்ச்சி வயப்படும் முகத்தை அவன் பார்த்திருக்க வேண்டும். புதியவனின் கண்கள் அன்பால் ஒளி விட்டது. அவனை அவன் சந்தித்திருக்கிறானா? ஆனால் எங்கே? அற்புதமான அம் முகத்தை ஒரு முறை அவன் பார்த்ததை நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனால் அவனால் நினைவு கூர முடியவில் லை.

அவனது துணைவி இப்பொழுது அர்பனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். சினக்குறிப்பு அவள் முகத்திலிருந்து மறைந்து விட்டது. அவளது சமீபத்திய எரிச்சலுக்கான எந்த அடையாள மும் இல்லை.

''நாங்கள் போவதற்காக இருந்தோம்,'' அவள் கூறினாள். ''ஆனால் நீங்கள் எலெட் ரானிக் இசையை பெரிதும் விரும்புகிறீர்கள்... உங்கள் பெண்ணும் கூட...'' அவள் லிண்டா மீது நட்புப் பார்வையை வீசினாள். அவளோ மனங்குழம்பிய நிலையில் இந்த விநோதக் காட்சியை உற்றுக் கவனித்துக் கொண்டிருந் தாள்.

''நாம் இன்னொரு நேரம் கேட்கலாம் என்று நான் நினைக்கிறேன்,'' இளைஞன் முணுமுணுத்தான். ''இதோ நுழைவுச்சீட்டுகள். ஓ! இது எல்லாவகையிலும் சரியானது.''

அர்பன் அவனிடம் தந்த பணத்தை தனது சட்டைப் பைக்குள் திணித்துவிட்டு, இருவரும் நடந்து போனார்கள்.

அர்பனும் லிண்டாவும் சரியான நேரத்தில் வந்தார்கள்.

''அவர்கள் ஏன் தங்களது சீட்டுகளைக் கொடுத்தார்கள்?'' லிண்டா கேட்டாள்.

''அருமையான தட்பவெப்ப நிலை — இதற்கு பதிலாக நடக்கலாம் என்று அவர்கள் முடிவு செய்திருப்பார்கள்,'' அர்பன் உணர்ச்சியற்றபடி கூறினான்.

''நடந்து போகவா! நமக்கு முன்னால் பைத்தியம் போல அவர்கள் ஓடியதை நான் பார்த்தேன். அவர்கள் தாமதமாகப் போக விரும்பவில்லை. அவர்கள் மூச்சு வாங்கிக் கொள்வதற்காகவே விளம்பரத் தட்டிக்கு முன்னால் நின்றார்கள்...''

பின்புறத்திலிருந்து எதிர்ப்பு முணுமுணுப்புகள் கேட்டன. லிண்டா அமைதியானாள்.

மேடை வழக்கத்திற்கு மாறாகத் தோன்றியது. அங்கு பாடுபவர்களோ, இசைக் கருவிகளோ எதுவுமே இல்லை. மேடையின் மத்தியில் ஒரு மேசை டேப்-ரிக்கார்டருடன் நின்றது. அதனுடன் கூட ஒலிபெருக்கி அமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

முதல் சுரம் பெருமூச்சொலி போல இருந்தது. வெளிப்படையாகக் கேட்கக் கூடிய ஒரு புகார் போல. யாருடையது? நெருப்பின் சக்தியால் குளிர்ந்த உலோகத்தை விண்வெளியில் செலுத்துவதா? அல்பா சென்டாரிக்குச் சென்ற ராக்கெட்டில் ஆட்கள் யாருமே இல்லை — அர்பன் இதை உறுதியாக அறிவான். இருப்பினும் இயற்கை மீறிய உணர்வு அவனுக்கிருந்தது. உயிருள்ள பிராணிதான் அத்தகைய பெருமூச்சு விட முடியும். கூர்மையான மற்றும் முறையற்ற

சுர ஒழுகிசை முதலில் அர்பனிடத்தில் எதிர்ப் பை எற்படுத்தியது. ஆனால் ஒவ்வொரு நிமிட மும் புதுமையான உணர்வுகளும் ஏக்கங்களும் கொண்ட ஓர் உலகில் ஆழமாக, ஆழமாக மூழ் கினான்.

தானியங்கு விண்கூண்டிற்கு பொறுப்பான எலெட்ரானிக் இயக்குநனால் விரிவான விண் வெளிப் பரப்பைக் காண முடிந்தது... கடைசி யாக அவன் உணர்வு பெற்று விண்வெளியைப் புரிந்து கொண்டதாக அர்பன் திடீரென்று கற் பனை செய்தான். குழந்தைப் பருவத்தில் ஒரு விண்வெளி விமானியாக வேண்டுமென்று அவன் கனவு கண்டான். அவனது கனவு உண்மை யாகாதது போலத் தோன்றியது. ஏனெனில் அவனது நரம்பு எதிர்வினை உணர்வு கூடுத லாகப் பெற்றிருப்பதாகக் குழு முடிவு செய் தது. அர்பன் தனது ஏமாற்றத்தை மறக்க ஒரு டெக்னிக்கல் கல்லூரியில் சேர்ந்தான். ஒரு சக்தி வாய்ந்த சர்வதேச நிறுவனத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒரு சாதாரண என்ஜினியர் — என்பது அவனது வாழ்வில் சாத னை அளவாக நின்றது. அடிக்கடி ஏற்படுவது போல அவனது கனவு மெய்யாகவில்லை என் றாலும் பின்னைய வாழ்க்கையில் அது எல்லா வற்றையும் விஞ்சி விட்டது. விலை குறைந்த ஜனரஞ்சகமான இதழ்களில் வெளியிடப்பட்ட விண்வெளி பயணங்கள் பற்றிய எல்லா அறிக் கைகளையும் அவன் படித்தான் (தானியங்கி கருவிகளால் தயாரிக்கப்பட்டவைகளைப் பெரி தும் விரும்பினான்). இத்தகைய சதுர சிறு

வெளியீடுகளை நீல வண்ண உறைகளில் பல்லாயிரக் கணக்கில் அவன் சேர்த்தான்.

மேலும் இப்பொழுது, விநோதமான இசையை அவன் கேட்ட போது, நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த அதிசயம் நடக்கப் போகிறதென்று அர்பன் உணர்ந்தான்... இங்கு அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான், அல்லது ஒரு வகையில் விண்கப்பல் ஆய்வுத் திரைக்கு முன்னால் எடையற்ற தன்மையில் தொங்க வைத்திருந்தான்.

களத்தில் இருந்த ஒரே மனிதனாகிய அவனுக்கு ராக்கெட் செயலற்று இருப்பது போலக் காணப்பட்டது. விண்வெளியாளர்கள் மிகப் பெரிய நெருக்கடி உணர்வுக்கு ஆளாவதையும், அந்த சிரமத்தை வலிமையுள்ளவர்களே தாங்கிக் கொள்கிறார்கள் என்பதையும் விளக்கங்களிலிருந்து அவன் அறிந்து கொண்டான். ஆண்டுகள் கடந்தன, மேலும் அவன் ஒரே இடத்திலேயே தொங்கிக் கொண்டிருப்பது போலக் காணப்பட்டது. கண்ணிமைக்காத அதே போன்ற நட்சத்திரங்கள் அவனைச் சுற்றி இருந்தன.

...ஆனால் அர்பன் தன்னைத்தானே நன்கு கட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது. விண்வெளியில் ஊடுருவிச் செல்லும் ராக்கெட் ஆரம்பத்தில் பெற்ற முடுக்க வேகத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறது என்று எந்திரப் பிரிவில் உனக்குச் சொல்கின்ற போது என்ன இயக்கமின்மை இருக்க முடியும்.

வெற்றிடத் திட்டுகள் கொண்ட காலணியை

அர்பன் அணிந்து கொண்டு, கப்பல் மூலம் சுற்றிவர முடிவு செய்தான்.

அந்த இசை அவனை சுடர் ஒளி வீசுகின்ற, சுரங்கப் பாதைகள் போன்ற தாழ்வாரங்களின், பக்க அறைகள் எல்லாம் நியூட்ரைட் கவசம் பூண் டது போல ஒப்பனை செய்யப்பட்டிருந்த பாதை வழியாக அழைத்துச் சென்றது. புரோட்டீன் ரோபாட்டுகள் இரவு பகலாகப் பணியில் கருவிகளுக்கு அருகில் இருந்தன. இவை எல் லாம் அவனது குழுவினர், அவனது கூட்டாளி கள்... அர்பன் வந்தபோது முன்னைய நாளைப் பற்றி ஒவ்வொரு அறிக்கையையும் அறிவித்தது. (பூமியின் கால அளவே கப்பலில் பயன்படுத்தப் பட்டது. இது விண்வெளிப் பயணத்தின் பழைய முறைதான்.) அர்பன் செவிமடுத்து, அறிவுரை கள் கொடுத்து, பயோடயரியில் குறித்தும் கொள்வான்.

சூரியன்... ஓராண்டுக்கு முன்னதாகவே அது பதினாங்காவது பரிமாணத்தின் சிறிய நட்சத்திரமாக, திரையின் ஓரத்தில் வெளிப் படையாக நுணுகிக் காணக் கூடியதாக மாறிவிட்டது. ஆனால் இசை திடீரென்று ரட்சத்திரத்தை கொழுந்து விட்டு எரியச் செய்கிறது. மேலும் பக்கத்திலுள்ளவைகளை யும் அது விஞ்சி நிற்கிறது. ஏன் அப்படி? பூமி யில் உள்ளவர்கள் எப்போதும் பாடும் தங் களது ஒளிப்பிழம்பு குறித்த எல்லாப் பாடல் களையும் அந்தப் பண் உள்வாங்கி இருக்கிற தா?

பாதி சுருதியில் நின்றது போல இசை திடீரென்று நின்றது. தனது சுற்றுப்புறத்தைப் புரிந்துகொள்ள அர்பனுக்கு சிறிது நேரம் பிடித்தது. அவனுக்கு அருகிலிருந்த லிண்டா மாறுபட்டும், எரிச்சலுற்றவளாகவும் காணப் பட்டாள்.

''நான் ஒருவகையில் வேறு எங்காவது சென்றிருக்க வேண்டும் — அவர்கள் தங்களது சீட்டுக்களைத் தந்தது பரிதாபமானது,'' கொட் டாவியை அடக்கியவளாக அவள் கூறினாள். ''வெளிப்படையாக இந்த எதிர்கால இசையை நான் அதிகம் எதிர்பார்த்தேன். நீ ஏன் என் னையே முனைப்பாகப் பார்த்துக் கொண்டிருக் கிறாய்? பொருளற்ற கூக்குரல்களின் கூட்டுக் குவியல், வேறொன்றும் இல்லை.''

கூட்டத்தோடு வெளிச் செல்லும் பாதையை நோக்கி அவர்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள். யாரையும் பார்க்க அர்பன் திரும்பவேயில்லை. ஆனால் எதிர்பாராது யார் மீதாவது அவன் பார்வை விழுந்தால், உடனே இவனுக்கு வழி விட்டார்கள். அதிர்ஷ்டவசமாக, லிண்டா அவளே விமர்சனத்தின் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டாள்.

''இப்போது வா, எதையுமே நீ புரிந்து கொள்ளவில்லை என்பதை ஒப்புக் கொள்,'' அவள் முணுமுணுத்தாள்.

அர்பன் லேசாகச் சிரித்தான்.

''எவன் இதில் பங்கு பெறுகிறானோ அவ னால் மட்டுமே உண்மையில் இசையைப் புரிந்து கொள்ள முடியும் என்று நியூமோர் கூறினான்,''

என்றாள் லிண்டா.

''எப்படி அது?''

''அதன் பொருளாவது, ஒருவன் இசையை மறுப்பானேயானால் அவன் தனது சொந்த படிமத்தைத் தான் காண்பான். அவனது சிந்தனைகள் சிரமங்கள் மூலமாகத் தோன்றும். மேலும் விண்வெளி உன்னுடைய பொழுது போக்கு. எலெட்ரானிக் இயக்குநனால் இசை யமைக்கப்பட்ட பாட்டு உனது மனத்துக் குகந்ததாக இருந்திருக்கும் என்பதில் வியப் பில்லை.''

''நியூமோரின் எண்ணங்களில் முற்றிலும் பயனுள்ளவற்றை நீ பொறுக்கி எடுத்திருப்பதை நான் காண முடிகிறது,'' அர்பன் குறிப்பிட் டான்.

அடிக்கடி சுற்றுப்புறம் பார்ப்பதை அவன் முற்றிலும் நிறுத்தி விட்டான். அர்பன் மிகவும் அஞ்சிய ஒன்று நடக்கவில்லை. அவனது அச்சங் கள் படிப்படியாக மறைந்து, அவனது சொந்த நம்பிக்கை மேலெழுந்தது. ஒரு ராகத்தை விசி லடிக்கவும் தொடங்கினான். அவன் யாருக்கும் எதுவும் கடன்பட்டிருக்கவில்லை.

அவர்கள் பச்சைத் திடலை கடந்தார்கள். நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக குறுகலாகவும், குப்பைக் கூளத்துடனும் இருந்த திருக்கு மறுக் கான தெருக்களில் நுழைந்தார்கள். நெருக்கிக் கொண்டிருந்த இலையுதிர் காலத்தை வெளித் தள்ளிவிட்டு கோடைக் காலம் வந்தது போலக் காணப்பட்டது.

''நான் சுரங்கப் பாதை வழியாகச் செல்

வதை விரும்பவில்லை. அங்கு இப்பொழுது அதிகப் புழுக்கமாக இருக்கிறது,'' ஒரு கடை சன்னலின் கண்ணாடியின் மீது தனது விரலை போகிற போக்கில் வைத்தபடி லின்டா கூறினாள். பெரிய போலி உருவத்திற்கு விண் வெளி ஆடையணிந்த விளம்பரம் ஒன்று பின்புறம் வைக்கப்பட்டிருந்தது. ''அருமையான மாலைநேரம். நாம் வீட்டிற்கு நடந்துபோக லாம்.''

''நான் அவ்வாறு உணரவில்லை,'' அர்பன் பதிலளித்தான். வெளிப்புறத்தில் செல்வதைத் தவிர்க்கும்படி நியூமோர் எச்சரித்ததை நினை வில் கொண்டிருந்தான்.

''பிறகு ஒரு டாக்ஸி எடுப்போம்,'' லின்டா கூறினாள். இத்தகைய மாலை வேளையில் பிரியத்திற்காகவோ, பணத்திற்காகவோ டாக்ஸி கள் முற்றாகக் கிடைக்காது என்பதை அறிந்தே இருந்தாள்.

''நாம் முயற்சிக்கலாம்,'' அர்பன் மகிழ்ச்சி யோடு கூறினான்.

அவர்கள் ஒரு டாக்ஸி நிறுத்துமிடம் சென் றார்கள். ஒரு நீண்ட வரிசை ஏற்பட்டிருந் தது. ஓசையின்றி மின்னுகிற கண்ணாடியை மூடிக்கொண்டு நீர்த்துளிகள் ஒவ்வொரு நொடி யும் சறுக்கிவிழுந்து உருண்டோடப் பிரித்தது. ஆனால் டாக்ஸிகளை விட அங்கு அதிகமான ஆட்கள் நின்றார்கள்.

அர்பன் வரிசையை மேலோட்டமாகப் பார்த்தான். பிறகு அதன் ஆரம்பத்திற்கு நடந்தான். அவனுக்குப் பின்னால் அருவருப்

பான எதிர்ப்புகளை எதிர்பார்த்தபடி லின்டா சென்றாள். ஆனால் அம்மாதிரி எதுவும் நடை பெறவில்லை. அர்பனுக்கு மக்கள் வழி விட்டார்கள். ஒரு கார் அவர்களுக்கு முன்பாக மெதுவாக வந்து நின்றது.

''அடுத்து யார்?'' தானியங்கி டிரைவர் கேட்டான்.

அர்பனும் லின்டாவும் ஏறிக்கொண்டார்கள். மீட்டர் பெட்டியில் அர்பன் முன்தொகையைப் போட்டான். எந்திரம் விரைவு பெறத் தொடங்கியது. பயணிகளை அவர்களது கை வைத்த இருக்கைகளுக்குள்ளாக வைத்து அழுத்தியது.

''நீ ஒரு மன ஆற்றலை அறிதுயில் நிலைக்கு ஆட்படுத்துபவன் என்பது எனக்குத் தெரியாது,'' என்றாள் அப்பெண்.

''அது ஓர் இலகுவான கலையாகத்தான் தோன்றுகிறது,'' அர்பன் மெதுவாகச் சொன்னான்.

''நம்மிடமிருந்து எந்தப் பணமும் பெற்றுக் கொள்ளாதபடி டிரைவரைத் தன்னால் அறிதுயில் நிலைக்கு ஆட்படுத்த முடியுமா?''

''எனது சக்தி அந்த அளவுக்குப் பெரியதல்ல,'' அர்பன் சிரித்தான். ''எலெட்ரானிக் அமைப்பு என்பது மக்களிடமிருந்து மாறுபட்டது.''

''ஓ, அது தவறுகளும் செய்யக் கூடியதா!''

''ஆனால் அது அறிதுயில் நிலைக்கு ஆட்பட்டதல்ல.''

அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் எந்திரம் நின்றது. மீட்டர் பெட்டியின் திறந்த

வாயினுள் அர்பன் பணத்தைப் போட்டான். அதன் பிறகே கதவு திறந்தது.

''மேன்மை தங்கிய உங்களைச் சுற்றிப் புதிர்கள் நிறைந்திருக்கின்றன,'' லின்டா கூறினாள். அறிதுயில் மனநிலையில் அவள் எல்லையற்ற நம்பிக்கை வைத்திருந்தாள், ஆகவே அர்பனின் தந்திரங்களால் மட்டும் குறிப்பாக வியப்படையவில்லை. ''நேற்று என்னைச் சந்திப்பதை நீ மறுத்தாய்... மேலும் நான் அதை ஒரு கேலியாக எடுத்துக் கொண்டேன்... அதில் எந்தக் கருத்தையும் நான் காணவில்லை.''

கதவருகே லின்டா திரும்பி சிரித்தாள், அர்பனைப் பார்த்து ஒரு கையை அசைத்தாள்.

தனது மெலிந்த காசுப்பையின் உள்ளடக்கத்தை அர்பன் சோதித்துக் கொண்டான். அருகிருந்த சுரங்க நிலையத்தை நோக்கிச் சென்றான். நேற்று லின்டாவைச் சந்தித்ததை இப்பொழுது அவனால் சிந்திக்க முடிந்தது. அது உண்மையிலேயே ஆல்வா தானா?

தூசி படிந்த ஒரே ஒரு மின்விளக்கு படிக்கட்டிற்கு வெளிச்சம் தந்தது. மேலே எறியதும், பின்னால் திரும்பிப் பார்க்க திடீரென்று உந்தப் பட்டாள். அறிமுகமான ஓர் உருவம் படிக்கட்டில் அவளைப் பின்தொடர்ந்தது. அது அரை இருட்டில் தெளிவற்றுத் தெரிந்தது. சற்று முன்னர் அவள் விடை

பெற்றுக் கொண்ட அர்பன் தான். மூலையில் அவன் திரும்புவதை அவள் பார்த்தாள். அதை அவள் நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த அர்பன் மிகவும் விநோதமாகக் காணப்பட்டான். தானியங்கி அருந்தகத்தில் அவர்கள் நேற்று சந்தித்துக் கொண்ட போது இருந்தது போலவே காணப்பட்டான். லின்டா அவனை அழைக்க விரும்பினாள். ஆனால் அவளது குரல் அவளுக்குக் கீழ்ப்படியவில்லை. அவன் முகம் உணர்ச்சியற்று இருந்தது. படிப்படியாக அர்பன் அவளை நெருங்கிக் கொண்டிருந்தான். அவன் கன்னங்கள் பெரிதும் வெளுத்திருந்தன. அகன்ற, விரிந்த கண்கள் எதையும் விளக்கவில்லை. சற்றும் அசைவில்லாமல் லின்டா நின்றாள். அந்த உருவம் ஏறத்தாழ அவளுக்கருகே வந்து விட்டது.

''அர்பன்... என்ன விஷயம்?'' பத்துப் பன்னிரண்டு அடிகள் அவர்களைப் பிரித்த போது கடைசியாக அவள் முணுமுணுத்தாள்.

அர்பன் எந்தப் பிரதிபலிப்பும் காட்டவில்லை. தொடர்ந்து அவனது வழியில் சென்றான். முடுக்கிவிட்ட எந்திரம் போல அவன் கால்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அவனது வழியினின்றும் லின்டா நின்று விட்டாள். அர்பன் அவளைக் கடந்தான். பிறகு திடீரென்று திரும்பி மறைந்து விட்டான். சுவர் வழியாக அவன் நடந்து சென்றதாக லின்டா நினைத்தாள். அல்லது அவன் வாசலில் நுழைந்திருப்பானா? ஆனால் படிக்கட்டில்

எந்தக் கதவுகளும் இல்லை. அழுக்கடைந்த சுவர்தான் பனியால் சிதைவுற்று நின்றது. ஒரு நண்டு போலக் காணப்பட்ட பழுப்பு நிறமான இடத்தை லின்டா தொட்டாள். அலறுகிற உணர்வினைப் பெற்றாள்.

அந்த மின்விளக்கு குறைந்த அளவு தனது வெளிச்சத்தை தொடர்ந்து கொடுத்தது. பொருட்களின் மிகச் சாதாரணமான இது, யாவரும் அறியும் எதார்த்தத்திற்கு எடுத்துக்காட்டான இது, ஒரு நிமிடத்திற்கு முன்னால் அசைக்க முடியாததாகக் காணப்பட்டது.

தனது இருபத்தி ஐந்து ஆண்டு காலத்தில் இது போன்ற எதையும் லின்டா சந்தித்ததில்லை. அவள் முற்றிலும் அதிர்ச்சியடைந்து விட்டாள். படிக்கட்டில் மேலும் ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு நின்று, இந்தப் புதிருக்கு விடை காணலானாள்.

''இத்தகைய முட்டாள்தனமான தந்திரங்களை நிறுத்தும்படி நாளை அர்பனிடம் நான் சொல்லுவேன்,'' அவள் இறுதியாக முடிவு செய்தாள்.

தனது பையில் சாவியைத் தேடத் தொடங்கினாள்.

தொடக்கத்தில் நியூமோரின் திட்டத்தை அர்பன் வெறுத்து ஒதுக்கினான்.

''நீ என்னைக் கேலி செய்து கொண்டிருக்கிறாய்,'' என்றான் அவன்.

ஆர்வமிக்க, உண்மையிலேயே திறமை

வாய்ந்த தனது புதிய நண்பன் விஞ்ஞான உலகத்தில் தனக்கென்று ஒரு பெயரை ஏற்கெனவே பெற்றிருந்தான் என்பதை அர்பன் அறிவான். ஆனால் சற்று முன்னர் அவன் கொடுக்க முன்வந்தது...

''மனத்தைத் தயார் செய்து கொள்,'' என்றான் நியூமோர். ''எந்தவிதமான உட்சிக்கலுமில்லாத, உயர்ந்த தனித்தன்மையை, உயர்ந்த மகிழ்ச்சியை நீ உணர்வாய்.''

''ஆமாம், ஆனால் எந்த விலையில்!''

''அத்தகைய உயர்ந்த மகிழ்ச்சிக்கு எந்த விலையும் அதிகமில்லை.''

''நான் ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். நீ அழைப்பதுபோல ஆல்வாவை இணங்கச் செய்ய எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வாய்?''

''ஒரு மாதம் போதுமென்று நான் எதிர் பார்க்கிறேன். இன்றைக்குத் தொடங்குகிறேன்.''

''இப்போதேயா?''

''அதைத் தள்ளிப் போடுவதில் என்ன பொருள் இருக்கிறது?''

''அது நீ கூறுவதுபோல ஒவ்வொன்றும் இருப்பதாக வைத்துக் கொள்வோம்,'' தயக்கத்தோடு அர்பன் பேசினான். ''மக்களின் மேல் வலிமை பெற்றிருப்பது ஒருவகையில் நல்லது தான். மேலும் மோசமான நினைவுகளிலிருந்து விடுபடுவது கூட நல்லது தான். ஆனால் ஆல்வா என்னை எட்டிப்பிடித்தால் என்னாவது?''

''ஆல்வா முட்டாள் — அதை நினைவில்

கொள். அவனது தருக்கமுறை செயல்வரைத் திட்டம் மிகவும் எளிமையானவை. எதார்த்த மாக, அதில் எந்த முறையும் இல்லை. அவன் பிரதிதொனிக்கு டியூன் செய்கிறான். அவனைத் தவிர்ப்பது கஷ்டம் என்பதை அறிய முடியாது. ஒரே மாதிரியான மனநிலையில் இருக்க முயற்சி செய். பிறகு ஆல்வா உன்னைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த சிரமப்படுவான். வேடிக்கையான நபர், உனக்கு அருமையான வாழ்வு உண்டு!''

''நான் அவனைச் சந்தித்தால்?''

''ஆக, ஒருவன் என்ன பெறுகிறானோ அதற்காக அவன் செலவு செய்தாக வேண்டும். நீ அவனைச் சந்தித்தால், அது உனக்கு மிக வும் மோசமானதாகும்.''

இதை அர்பன் தீர எண்ணிப்பார்த்தான். அவனது கற்பனை அவனுக்கு செந்நிறப்படங் களை வரைந்தது. இப்பொழுது இருப்பதை விட ஒப்பிடுகின்ற போது அற்புதமான வாழ்க்கை தர நியூமோர் வாக்களித்திருக் கிறான். அவனது தேய்ந்து போன நரம்புகள் எஃகுக் குழாய்களைப் போல வலிமை பெற் றன. நியூமோர் அந்த வாக்குறுதி தந்தான். அவனது வார்த்தையில் அர்பன் முழுநம்பிக்கை வைத்திருந்தான்.

இரவில் உண்மையிலேயே அவன் வியர்த்துக் கொட்ட எழுந்து போகாமல் இருப்பானா, ஒன்றுமில்லாததற்கெல்லாம் அவன் குமுறுவதை நிறுத்துவானா, தனது சகாக்களிடம் சண்டை யிடுவதை அவன் நிறுத்துவானா? மக்கள்

நெருக்கமுள்ள சுரங்கப்பாதை ரயிலில் கவனக் குறைவாக ஒருவன் தனது காலை மிதித்து விட்டால் கொலை செய்பவனைப் போல அவன் உணராமல் இருப்பது முடியுமா? இந்த மகிழ்ச்சி சாத்தியமா? உண்மையில், எந்த விலையும் அதற்கு அதிகமில்லை. மறப்பதற்கு, மறப்ப தற்கு, மறப்பதற்கு! அழகன் சார்லியை ஒரு போதும் நினையாமல் இருக்க!

''ஆனால் இது எல்லாம் பௌதிக நோக்கில் எங்ஙனம் வேலை செய்கின்றது?'' அர்பன் கேட் டான். ''நான் ஓர் என்ஜினியர் என்பது நினைவிருக்கட்டும். இறைமை உணர்வை நான் புரிந்து கொள்ளவில்லை.''

''எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாத முழுதும் பூரணமான கொள்கையை நான் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அதுவா முக்கியம்? அதன் சாரம் என்னவென்றால், ஒவ்வொரு நரம்புக் கோளாறுடையவர்களை யும் போல, உனது நரம்பு அணுக்கள், நரம்பு கள் நிலையான நீர்ச் சுழி போன்ற பயோ மின்னோட்டத்தைப் பெற்றுள்ளன. இந்த சக்தி கள் மிக நுண்ணியதாக இருப்பதால் இதுவரை அவர்கள் இதைக் கண்டுபிடிக்க இயலவில்லை. ஆனால் அதைச் செய்வதில் நான் வெற்றி யடைந்திருக்கிறேன். சக்தியைச் செயலற்றதாக் கும் இந்த மின்னோட்டங்கள் கட்டாயம் நீக் கப்பட வேண்டும்.''

''மேலும் இது சாத்தியமா?''

''நான் உன்னிடம் சொன்னபடி, எனது ஆல்வா எதிர்ப்பொருளைக் கொண்டு உருவாக்

கப்பட்டான். புருக்ஹெவன் அக்சலரேட்டரில் பெற்ற எதிர் அணுத் துகளிலிருந்து நான் இவனை அமைத்தேன். ஆல்வாவின் அடர்த்தி பொருட்படுத்தக் கூடியதல்ல. முரட்டுத்தன மாகச் சொல்லப் போனால், வெற்றிடத்தை அவன் பெற்றிருக்கிறான்.''

''ஓர் அடர்த்தியற்ற மூடுபனி போன்ற ஒன்று?''

நியூமோர் தலையசைத்தான்.

''நீ ஆல்வாவை என்னிடம் காட்டுவாயா?''

''உனது குறைபாடுகளை அவனிடம் தருவ தற்கு நீ ஒத்துக்கொண்டால் மட்டுமே.''

''நாங்கள் எல்லா மாலைவேளைகளிலும் பேசிக் கொண்டிருந்தோம். இன்னும் எனக் காகக் காத்துக் கொண்டிருந்ததெல்லாம் ஆல்வா பெற்றிருந்த அதே மூடுபனிக்குள்ளாகச் சூழ்ந்து கொண்டது தான். ஏன், சான்றாக, நிர்மூலமாக்கும் சக்தியை அருகே செல்லும் எவன் மீதாவது திணிக்க அவனால் முடியா தா?''

''ஏனென்றால் அவன் பாதுகாப்பு மண்டலத் தில் வளைக்கப்பட்டிருக்கிறான்,'' நியூமோர் விளக்கினான், புகையை சுருளாக விட்டுக் கொண்டே.

''பிறகு ஏன் நான் அவனைத் தவிர்க்க வேண்டும்?''

''நீ வித்தியாசமான விஷயம். ஆல்வா உனது ஈரிணை அல்லது ஒருவகையில் எதிரி ணை. முடிவாக... இரும்பை காந்தம் கவர்வதை நீ பார்த்திருக்கிறாயா? அதே முறையில் ஆல்

வா உன்னை நோக்கிக் கவர்ந்திழுக்கப்படு வான்.''

''பாதுகாப்பு மண்டலம் என்னவாயிற்று?''

''அவன் உன்னை நெருங்கி வருகின்ற நேரத்தில் இந்த மண்டலம் மறைந்து கரைந்து போகும். அது பற்றி எதுவும் செய்ய முடியாது.''

நியூமோர் தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''அர்பன், ஆனால் நீ அஞ்ச வேண்டி யதில்லை!'' அவன் கதறினான். ''ஒருவகையில் ஆல்வா மனித இனமே இல்லை, உன்னைப் பின்தொடர்கின்ற ஓர் எதிரி அல்ல. உன்மீது கணக்கிடமுடியா அளவுக்கு கவர்ச்சி அநுபவங் கொண்ட வெறும் மேகமே அது. மறு புறத் தில், ஆல்வா உனது நரம்பு திடீர்த் தசை இழுப்பை ஈர்த்துக் கொள்ளும். அவன் உன்னு டைய சான்கோ பான்ஸாவாக, உனது உண் மையான வாள் ஏந்துபவனாக இருப்பான். அவனது உரமற்ற தோள்களில், உனது ஆர்வத் தை அழுத்திக் கொண்டிருக்கும் பாரச் சுமை யை ஏற்றலாம். ஆல்வா ஓர் உறிஞ்சியாக ஈர்த்துக் கொள்ளும்...''

''ஆனால் உன்னால் அவனைப் பூட்டி வைக்க முடியாதா?'' அர்பன் குறுக்கிட்டான். இப்படிச் சொல்வதில் அவன் மகிழ்ச்சியடைந் தான். ''பிறகு நான் பயப்படத் தேவையிருக் காது.''

''அது உன்னையே பூட்டிக்கொள்வது போ லாகும். நீ சுதந்திரமாக நடமாடக் கூடிய நிலப்பரப்பு சரியாக ஆல்வாவிற்கும் சுதந்திர

மாக நடமாட உரிமைபெற்ற நிலப் பரப்பே யாகும். ஆல்வா ஒரு கொட்டடிக்குள் அடை பட்டால், அந்த கொட்டடி அளவிற்கான சதுரத்தில் மட்டுமே நடமாட முடியும். நகரின் பிறபகுதிகள் உனக்குத் தடைப்படுத்தப்பட்ட நிலப் பகுதியாகும். ஆல்வாவிற்கு நகரம் தடையற்று இருக்குமேயானால், அது உனக்கும் தடையற்றதாக இருக்கும். எந்தவகையிலோ, ஆல்வாவை எப்படிப் பூட்டி வைக்கத் திட்ட மிட்டிருக்கிறாய்?''

''அவர்கள் குற்றவாளிகளை எப்படி அடைக் கிறார்களோ அதே போல.''

''நான் உன்னை ஏமாற்றியாக வேண்டும். தனது புறக்கணிக்கத்தக்க அடர்த்தியால், ஆல்வா சுவர்களின் வழியாகக் கூடக் கடந்து செல்ல முடியும். இல்லை, இல்லை, எல்லா வகையான சுவரின் மூலமாக அல்ல,'' மேலும் கூற அவசரப்பட்டான், அர்பன் தொடங்குவ தைப் பார்த்ததும். ''நான் உனக்கு சில அயானாக்கப்பட்ட பிளாஸ்டிக் தகடுகள் தரு கிறேன். அவற்றைக் கொண்டு நீ உனது அறை சுவர்களை மூடிவைக்க முடியும். தெருவைப் பொருத்த மட்டில்...''

''நான் மற்றொரு திட்டம் வைத்திருக் கிறேன்,'' என்றான் அர்பன் எக்களிப்போடு. ''இந்த பிளாஸ்டிக்கால் ஓர் அங்கியை நானே ஏன் தயாரிக்கக் கூடாது?''

நியூமோர் தலையை அசைத்தான்.

''பிளாஸ்டிக் ஊடுருவக்கூடியதென்பது நான் அறிவேன்,'' அர்பன் வலியுறுத்தினான். ''ஆனால்

அதுவா விஷயம்? அதைக் கொண்டு எனது ஸூட்டிற்கு அதை உள்துணியாக நான் பயன் படுத்திக் கொள்வேன்.''

''எதுவும் முடியாது, அர்பன்,'' வருந்தங் கலந்த தொனியுடன் நியூமோர் கூறினான். ''இந்த பிளாஸ்டிக் வளைக்க முடியாது. சிறிது அளவு அதை வளைத்தாலும் அது தனது பாதுகாப்புக் கூறுகளை இழந்து விடும்.''

''சிறிய பிளாஸ்டிக் துண்டுகளை ஒன்று சேர்த்து என்னால் உள்துணியாகப் பயன் படுத்த முடியும்.''

''இந்த பிளாஸ்டிக் கூறு போட முடியாதது.''

''ஏன்?''

''ஏனென்றால், ஒவ்வொரு துண்டும் குறிப் பாக ஒரு மூலக்கூறு.''

''அதனால் என்ன? மூலக்கூறு பிளக்கக் கூடியதே...''

''நீ ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறாய், முட் டாள்,'' நியூமோர் கொதித்தான். ''எவ்வளவு முறை நான் திரும்பக் கூறுவது? எல்லாவற்றுக் கும் மனிதன் செலவு செய்ய வேண்டும். இவ் வுலகில் எதுவும் இலவசமாகக் கிடைப்பதில்லை. இந்த முக்கியமான இயற்கைக் கொள்கையைத் தான் நியூட்டன் கண்டுபிடிக்க மறந்து விட் டார். அவரது தவறினை நான் சரி செய்ய வேண்டியதிருக்கிறது.'' நியூமோர் திரும்பி அறை யை நோக்கி நடந்தான். இது என்னவாகும் என்று அவனாகச் சிந்திக்கலானான்: ''செலவில் லாமல் நீ ஒன்றுமில்லாதற்கெல்லாம் மகிழ்ச்சி

யாக இருக்க விரும்புகிறாய். தோழனே, இது நடக்க முடியாது!''

தன்னைப்பற்றி கேள்விப் படாத, தனது மூளையின் ஆல்ஃபா சந்தம் பொருத்தமானது தானா என்ற சோதனையைச் செய்வதற்கு நியூமோர் ஒரு நிமிடங் கூட தயங்கவில்லை. அவன் துணிவுள்ளவன். மேலும் தனது துணிவை மற்றவர்களிடமும் தன்னிடமும் (இது மிக முக்கியமானது) நிரூபித்தவன். அது ஒரு சோதனையாக இருக்குமிடத்து, வெறியன் போல நியூமோர் இருப்பான்: எதுவும் அவனை நிறுத்த முடியாது. இருப்பினும், பிரகாசமான அவனுடைய வாழ்க்கையிலே வெளிப்படையாகவே தனது முயற்சியையே பணயம் வைத்திருக்கிறான். இலாபம் என்பது அவனுக்கு முக்கியமானதல்ல. மிக முக்கியமானது என்னவெனில் எல்லாவகையான மனித நோவுகளையும், துயரங்களையும் ஈர்த்துக் கொள்ளும் மாதிரியை வளர்ச்சியடைச் செய்வதாகும்.

கஷ்டங்கள் வெல்ல முடியாதவையாக இருந்தன. முதல் விஷயம் முதலாவதாக வர வேண்டும் — கொள்கை வழியில் அதை எப்படிச் சமாளிப்பது. அதன் பிறகு தனது அஞ்சத்தக்க இரட்டையிலிருந்து அதிர்ஷ்ட சாலியை பாது காக்கும் முறையைப் பற்றி அவன் சிந்திக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மகிழ்ச்சியின் விலையைக் குறைப்பதாகும்.

சோர்வுற்ற அர்பனை நியூமோர் மதித்தான். இராணுவத்திற்கு வழி காட்டுகின்ற போது

ஒரு சாரணன் இறந்தான். அபாயம் இருக்காவிடில் எந்த வெற்றியுமில்லை. ஒருவகையில் யாராவது முதலாவதாகச் செல்ல வேண்டியிருக்கும்.

நியூமோர் அர்பனிடம் வந்து தனது கையை அவனது தோளில் போட்டான்.

''நீ விசித்திரமான வாய்ப்பு அளிக்கப்பட்டாய்,'' அவன் சொன்னான். ''அதைத் தவறவிட்டால் நீ ஒரு முட்டாள் ஆவாய்.''

''வேறு யாரையோ எதற்காக நீ பார்க்கவில்லை?'' அர்பன் உறுதியில்லாது கூறினான்.

''எனது நோக்கத்திற்கு எவனும் பொருந்த மாட்டான்.'' நியூமோர் பலமாக தனது தலையை ஆட்டியபடி சொன்னான். பயோ பிரதிதொனி என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா?''

அர்பன் தலையசைத்தான்.

''அப்படியே, நீ ஆல்வாவுடன் பிரதிதொனி நிலையில் இருக்கிறாய். லட்சோபலட்சங்களில் இது ஓர் அரிய நிகழ்வுப் பொருத்தமானது... எதார்த்தம் என்னவென்றால் உனது நரம்புகள் மிகவும் தளர்ச்சியானது என்பது மற்றுமொரு கூடுதல் அம்சமாகும். உனது பயோ மின்னோட்டங்களை பதிவு செய்வது மிகவும் சுலபமானது. ஆனால் நீ மறுத்தால், நரகம் உன்னிடந்தான்!'' நியூமோர் திடீரென்று கதறினான். ''இந்நேரத்தில் நான் எல்லாவற்றையும் இழந்து விட்டேன் என்பது இரங்கத்தக்கது...''

''ஒகே... நான் ஏற்றுக் கொள்கிறேன்,''

புகலற்ற குரலில் அர்பன் கூறினான்.

''உனக்கு நல்லது. பிறகு உடன் வாரும்.''

ஆய்வுக் கூடத்தைக் கடந்து சென்று உலோ கத்தாலான கவசத் தகட்டின் முன் நின்றார் கள். அது கிட்டத்தட்ட சுவற்றில் பொருந்தி யிருந்தது. அது பாதுகாப்பான வாசல் போல் காணப்பட்டது.

''இதனால் ஆல்வாவுக்கு ஒன்றுமில்லை,'' என்று நியூமோர் தகட்டை அறைந்தான். ''வெண்ணெயைக் கத்தி கீறுவதுபோல அவன் தகட்டின் குறுக்காக நடந்தான். ஆனால் அவனை நிறுத்தி வைப்பதற்கு வேறு எந்த இடமும் இல்லை. ஆகவே நான் கதிரியக்கச் சாதனங்களுக்கான அறையைக் காலி செய் தேன். எந்தவகையிலும், ஒரு சிலராவது அவ னைப் பார்ப்பது நல்லது.''

''மேலும் அவன் ஓடிப் போனால் என்னா வது?'' அர்பன் கதவைத் தொட்டான்.

''அவன் போக மாட்டான். அவனை நிறுத்தி வைப்பதற்கான ஒரு முறையை — அயானாக்கப்பட்ட பிளாஸ்டிக் — நான் கண் டுபிடித்தேன் என்று நான் உன்னிடம் கூறியிருக்கிறேன். அவனைப் பொருத்த மட்டில் இந்தத் தகடு தடையாகும். பாதுகாப்பிற்காக இந்த அறையின் உட்புறம் முழுவதையும் நான் பிளாஸ்டிக்கால் மூடியிருக்கிறேன். நீ பார்க் கலாம். உள்ளே வாரும். பயப்பட வேண்டாம். வெடிப்பது குறித்து நீ பயப்படுகிறாயா? நீங்கள் அந்நியர்களாக இருக்கின்ற வரை, ஆல்வா

உனக்கு மாறுபட்டவனாகத்தான் இருப்பான்.''

சன்னல்களே இல்லாத மிகச்சிறிய கனசதுர வடிவத்திற்குள் நியூமோர் பின்னே அர்பனும் சென்றான். ஒளி ஊடுருவக் கூடிய பிளாஸ்டிக் காலான சுவர்கள் ஒளியைத் தடுக்கவில்லை. அறையில் எந்த ஒரு பொருளுக்கும் நிழல் படிய வில்லை என்பதை அர்பன் கவனித்தான். தனது கண்களால் அறையை மேலோட்டமாகப் பார்த்தான். நீர்க் காளான்களால் மூடப்பட்ட பழைய படகைப் போல விநோதமான கருவி கல அமைவு கம்பிகளால் அடர்ந்து நிறைந்திருந் தது. ஒரு பழைய அஸ்ஸிலோகிராப் முக்காலி யின் மீது இருந்தது. சுவற்றில் ஒரு பள்ளம் இருந்தது. குழாயிலிருந்து தண்ணீர் கொட்டி யது. கொக்கியில் ஒரு துண்டு கிடந்தது... அர் பனால் ஆல்வாவை எங்கும் காண முடியவில் லை.

''அங்கே அவன் இருக்கிறான், பார்!'' நியூமோர் ஒரு மூலையை நோக்கி தலையசைத் தான்.

அர்பன் சிரமப்பட்டு உற்றுப் பார்த்த போது, ஒரு புதுமையான பாதி ஒளி ஊடுருவும் பொருள், செங்குத்தான மேகம் மனித அளவில் நிற்பது தெரிந்தது.

''வழமையான சைபர்மாதிரி, எதிர் பொரு ளை அடிப்படையாகக் கொண்டது,'' நியூ மோர் கூறினான். தனது முழங்கையால் அர் பனை ஓர் இடி இடித்தான். ''பயப்பட வேண் டாம். அவன் பாதுகாப்பான மண்டலத்திற்குள்

சுற்றிவளைக்கப் பட்டிருக்கிறான். உனது எதிர் கால இரட்டையை நீ சந்தித்தாக வேண்டும், அவ்வளவுதான்?''

மேகம் மனித உருவம் போன்ற வெறுமை யான தோற்றத்தை ஏற்படுத்தியது. அவனது பக்கங்களிலிருந்து கைகள் தொங்குவது போல அவனால் கற்பனை செய்து பார்க்கவே முடிந்தது. தலை தாழ்வாகத் தொங்கிக்கொண்டு இருந் தது. உருவத்தின் ஊடாக சுவற்றைப் பார்க்க முடிந்தது.

''ஒரு மனித உருவம் போன்ற ஒரு போலித் தோற்றம் அவ்வளவுதான்,'' நியூமோர் விளக்கினான். ''நடைமுறை மரபுக்கு ஒரு பங்களிப்பு. எந்த வடிவத்திலும் ஆல்வாவை என்னால் உருவாக்க முடியும். ஆனால் இது போல ஒன்றால் அவனால் மக்கள் கூட்டத்தி னுள் சுலபமாகக் கலந்து விட முடியும். இல்லை யெனில் நீ நடமாடும் உனது சுதந்திரத்தை இழந்து விடுவாய்.''

ஒவ்வொரு முறையும் நியூமோர் ஆல்வா என்ற வார்த்தையைக் கூறியதும் அம்மேகம் நடுக்க முறுவதாக அர்பன் கற்பனை செய் தான். அவன் அதை கற்பனை செய்துகொண் டிருக்கிறானா? அர்பன் பெரிதும் கவலையுற் றான்.

''நான் அவனை இந்த மாதிரியாக கற் பனை செய்து பார்த்ததில்லை,'' என்றான் அவன் அமைதியாக.

''ஓ... இரட்டை உருமூலத்தைப் போலவே இருக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாயா?

பயோ ரேடியோத் தொடர்புக்குள் நீ வரும் போது உன்னைப் போலவே இருப்பான். இன்னும் ஒரு மாத காலத்தில், அவன் உலகத்திற்குள் பிரவேசிக்கும் போது, சொல்லப் போனால், ஒரு நெற்றின் இரு விதைகள் போல இருப்பீர்கள்.''

''ஆனால் அவன் ஒளி ஊடுருவக் கூடியவன்!''

''அற்ப விஷயம். கண்ணுக்குப் புலப்படாத பிளாஸ்டிக் சுருளால் அவனை மூடுவேன். நன்றாக வெட்டப்பட்ட சீருடையை அவனுக்கு வழங்குவேன் — ஆனால் அது வெளிச்ச விளைவை மட்டுமே ஏற்படுத்தும். அல்லது நன்றாகச் செய்யப் போனால் நான் அவனுக்கு நீ அணியக் கூடிய உடையைக் கொடுப்பேன் — இந்த ஜாக்கெட்டில் தொடங்கி பொடியாகக் கூடிய பாண்ட் வரை. நீங்கள் எல்லாவகையிலும் இரட்டை உருவாக இருப்பீர்கள்.''

''ஆல்வா எவ்வளவு விரைவாக நகர இயலும்?''

''எந்த வீச்சிலும் முடியும். ஒருவகையில் ஐன்ஸ்டீனின் ஒளி நிலை எண்ணை விஞ்சாத அளவுக்கு. ஒரு கார் அல்லது விமானம் இவற்றை முந்திச் செல்வது ஒன்றும் அவனுக்கு சிரமமல்ல.''

''அவன் தெருவில் ஒரு காரை முந்திச் செல்வானானால், அவன் பொதுவாக எல்லார் கவனத்தையும் கவர்வான்,'' அர்பன் கவலையோடு கூறினான்.

''எவ்வளவு புத்திசாலி நீ!'' ஏற்றுக்கொள்ளும் வகையில் நியூமோர் அர்பனின் தோளைத்

தட்டிக் கொடுத்தான். ''நான் அதுபற்றி ஏற்கெனவே சிந்தித்தேன். உனது சகோதரனது வேகத்தை நாம் குறைத்தாக வேண்டும். ஏனெனில் அவன் தெருவில் மாறுபாடாகி விடக் கூடாது. ஒரு மணி நேரத்திற்கு மூன்று மைல்கள் போதுமா, நீ என்ன நினைக்கிறாய்?''

''மிக அதிகம்,'' அர்பன் சுருக்கமாக விடையளித்தான். 'சகோதரன்' என்ற வார்த்தையையே அவன் விரும்பவில்லை. சாவுக்கு வழி வகுக்கிற ஒரு சகோதரனை அடையக் கூடிய பொருளாகக் கொள்வது பெருமையுறத்தக்கதல்ல. ஆனால் என்ன செய்யப் போகிறான்? பதக்கத்தின் மறுபக்கம் ஆல்வா. மேலும் நியூமோரின் திட்டம் பெரிதும் ஆர்வமூட்டக் கூடியதாக இருக்கிறது.

''எந்தவகையிலும் அவனுக்கு மிகக் குறைவான வேக எல்லையை நான் வைக்க மாட்டேன். ஏனெனில் அதே அளவு எல்லை தானாகவே உனக்கும் பொருந்தும். மற்றொரு விஷயம். மனிதனைப் போல தனது கால்களை வைப்பதை நான் கவனத்தில் எடுத்துக்கொள்வேன்.''

''அவன் திடீரென்று உயரப் பறப்பானேயானால், தனது கால்களை நடைபாதைக்கு மேலேயோ, கூரைகளுக்கு மேலேயோ வைத்தால் என்ன ஆவது?''

''நீ மிகவும் புத்திசாலி, உண்மையாகவும், மெய்யாகவும்,'' நியூமோர் பாராட்டிக் கூறினான். ''இதைத் தவிர்ப்பதற்காக காந்த

அட்டைகளை ஆல்வாவின் உள்ளங்கால்களில் நான் இணைக்கப் போகிறேன். அத்தகைய புதிய ஜோடி அட்டைகள் நான் வைத்திருக்கிறேன். காப்டன் லேர்ஸின் அன்பளிப்பு. அன்புக்குரிய உனது வெஸ்டர்னின் சோதனை மாதிரி தற்செயலானது. நல்லதும் கூட, ஒரு மெட்ரிக் டன் எடை பெறும். அவை ஓர் அவுன்ஸில் கால் பங்குக்கும் குறைவாகவே நிறை நிற்பவைகள்.''

''ஒவ்வொன்றுமா?''

''இரண்டுமே. ஒரு முதல் தர பொறியமைப்பு!''

சற்று நேரம் அமைதி நிலவியது.

''இப்பொழுது அவனை நன்கு உற்றுப் பார்,'' நியூமோர் அமைதியைக் கலைத்தான். ''நீ ஆல்வாவை மீண்டும் பார்க்க முடியாது. மேலும் நீ பார்த்தால், உன்னைத் தான் நீ குறைப்பட்டுக் கொள்ள வேண்டும்.''

எந்தவகையிலோ அர்பன் குறிப்பிடத்தக்க அந்த மேகத்தைப் பார்க்கத் தொடங்கினான். இப்பொழுது அவன் நியூமோரைப் பார்த்தான். ஆனால் அப்பௌதிகவியலாளர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

அவர்கள் அங்கு இருந்த நேரமெல்லாம் மனித வடிவ மேகம் தனது உருவரையை மாற்றிக் கொள்ளவில்லை.

''நான் ஆல்வாவைத் திரும்பப் பார்க்க முடியாதென்று நீ ஏன் கூறுகிறாய்?'' அவர்கள் திரும்பவும் ஆய்வுக் கூடத்திற்கு வந்தபோது அர்பன் கேட்டான். ''நீ கூறியது போல, ஒரு

மாதம் முழுக்க நான் அவனுக்குக் கற்பித்துக் கொண்டிருப்பேன். என்ன நடைமுறை என் பதை நீ குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றா லும்.''

''அல்லது ஒருவேளை நீ எனது விளக்கங் களைப் புரிந்து கொள்ளவில்லை.''

''ஒருவகையில் நான் புரிந்து கொள்ளவில்லை தான்,'' அர்பன் ஒத்துக்கொண்டான். ''ஆனால் ஓர் ஆசிரியனும் ஒரு மாணவனும் ஒருவனை ஒருவன் பார்த்துக்கொள்ளாது எப்படி இருக்க முடியும்?''

''இருபது மைல்கள் சுற்றளவுக்குள் நீ இருப் பது ஆல்வாவிற்குப் போதுமானது. அதாவது, நீ நகரை விட்டு வெளியேறக் கூடாது. நான் ஆல்வாவின் கொள்கலத்தை உன்னுடைய பிரதி தொனிக்கு முடுக்கினால், என்ஜினியர் அர்பன் அவனைப் பொருத்த வரை, ஒரு சக்திவாய்ந்த வானொலி நிலையமாக மாறிவிடுவான், அல்லது, தெளிவாகச் சொல்லப் போனால், செல்-நிலையங்களின் குடியிருப்பு, ஒவ்வொன் றும் தனது அலை வரிசைக்கேற்ப ஒலிபரப் பும்.''

அவர்கள் கடந்து கொண்டிருந்த பயோஸ் டேட் கண்ணாடி மேற்பரப்பை அர்பன் உற்றுப் பார்த்தான். அதில் கன்ன எலும்பு டனும் பிளவுபட்ட முகவாய்க் கட்டையு டனும் ஒரு முகத்தைப் பார்த்தான். நடுக்கத் தால் கண்கள் இமைத்துக் கொண்டிருந்தன. ''ஒருவகையில் அது வானொலி நிலையங் களின் ஒரு குடியிருப்பு,'' தனது பார்வை

யைத் திருப்பியபடி அர்பன் நினைத்தான்.

''செல்களில் உள்ள தகவல் முறையை கிரகித்துக் கொள்வதில் உனது சகோதரனுக்கு எந்தச் சிரமமும் இருக்காது,'' மற்றொரு சிக ரெட்டைப் பற்றவைத்தபடி நியூமோர் கூறி னான்.

''இடைப்பட்ட நேரத்தில் நான் என்ன செய்து கொண்டிருக்க வேண்டும்?''

''நீ உனது சொந்த விஷயங்களை அமைதி யாகச் செய்து கொண்டிருக்கலாம். அமைதி யாக எனச் சொன்னது சொல்லணியாக அல்ல — முன்னைவிட அதிகமான அமைதியை நீ உணர்வாய். ஆல்வா முடுக்கப்பட்டவுடன், உனது தோள்களினின்றும் பெரிய சுமையை கீழே இறக்கியது போல நீ உணர்வாய். படிப் படியாக ஆல்வா உன்னை உன்னுடைய நரம்புத் தொல்லைகளினின்றும் விடுவிப்பான். கண்ணாடியில் நீ உன்னை நல்ல முறையில் பார்த்தாயா? நீ இறந்தவனைப் போலக் காணப்படுகிறாய்.''

''பிறகு ஏன் நீ எனது சம்மதத்தைப் பெற விருக்கிறாய்? எதுவுமே இல்லாமல் நீ செய்ய லாமே.''

''இங்கு தான் நீ தவறு செய்கிறாய். உள்ளுக்குள் நீ எந்தவித எதிர்ப்பும் செய்யக் கூடாது என்பதே எனக்கு மிக முக்கியமானது. தகவலைக் கிரகித்துக் கொள்ளும் முறையில் அது தீங்கை விளைவிக்கலாம்.''

அவர்கள் வாயிலுக்கு வந்தார்கள்.

''இப்பொழுது நான் செய்யப் போவ

தெல்லாம், உனது தனித்தன்மையை முன்னர் இருந்தது போல சிதைக்கப் போகிறேன்,'' நியூமோர் பிரிந்து செல்கையில் பேசினான். ''சிறந்த பங்கு உன்னுடையது. மிக மோசமானது ஆல்வாவை நோக்கியுள்ளது. உனது முன்கோபம், உனது நரம்புத் தளர்ச்சி தொடர்பான வெளிப்பாடுகள், உனது கணக்கற்ற கோப உணர்வுகள் ஆகியவற்றை அவன்தான் மேற்கொள்வான். எந்தவகையிலோ, நீ உன்னை மிக நன்றாகப் புரிந்து கொள்வாய். உனக்காக நான் வெளியே அதைச் சொல்லப் போவதில்லை. நீ விடுபட்டுக் கொள்ள விரும்பும் அனைத்தும் இனி ஆல்வாவினுடையதாகும். மேலும் நீ உனது வாழ்க்கையை முழுமையாக அநுபவிக்க முடியும். தலையணையை உனது தலை தொட்டவுடனேயே நீ தூங்கிப் போய் விடுவாய். உனது தூக்கம் ஆழமானதாகவும், தொல்லையில்லாததாகவும் இருக்கும். உனது தோற்றம், உனது உள்ளார்ந்த மன ஆற்றலை வெளிப்படுத்தும் சாதனமாக, அறிதுயில் நிலையை ஏற்படுத்தும் சக்தியைப் பெறுவதாக அமையும். உனக்குக் கீழ்ப்படிய மக்கள் மகிழ்வார்கள், உனது கட்டளையைச் செய்வார்கள். ஆனால் இந்த மகிழ்ச்சிக்கு விலை கொடுத்தாக வேண்டும். நீ வாழ்க்கையை மகிழ்வாக அநுபவிப்பாய். அதே வேளை ஆல்வா, உன்னுடைய பிரதி, செவிடாக, குருடாக எல்லா உணர்வுகளையும் இழந்தவனாக, தனது எதிர்முகடான உன்னைத் தேடிக் கொண்டு நகரைச் சுற்றிவரு

வான். அதிர்ஷ்டவசமாக, ஆல்வா முழுவடிவம் பெறுகின்ற போது, வெளித்தோற்றத்தில் உனது பிரதியாக இருப்பான், அவனது பாதுகாப்பு மண்டலம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும் — இது எனது சக்திகளுக்கு உட்பட்டது. ஆகவே உன்னிடமிருந்து வெளியேறும் வானொலி சமிஞைகள், அந்த காந்த கவசத்தை வெளிப்படையாகவே நுழைந்து செல்லும். உன்னால் அமைதியாக வாழ முடியும், எதற்கும் அஞ்ச வேண்டாம். ஆனால் நீ உனது வாழ்க்கையின் தாளலயத்தை முறித்துக் கொள்ளும் அதே வேளையில், உணர்ச்சி வயப்பட்டவனாகவோ, ஏதோ ஒன்றுக்கு விருப்பத்தை வளர்த்துக் கொண்டவனாகவோ இருந்தால், உனது செல்களிலிருந்து வெளியேறும் சமிஞைகளின் அடர்த்தி மேலும் பெருகும். அவற்றை வெகு சுலபமாக ஆல்வாவால் பிடிக்க முடியும். பிறகு அவன் உன்னை விரைவாகக் கண்டுபிடிக்க முடியும் — நீயாகவே அதைக் காண வேண்டும்.''

''மிகவும் சுணங்கி விட்டது, நான் போக வேண்டும்,'' அர்பன் கூறினான்.

''இன்னுமொரு விஷயம்,'' கையைக் குலுக்கிக் கொண்ட பிறகு அவனது கையைப் பிடித்து நிறுத்திச் சொன்னான் நியூமோர். ''ஆல்வா வெளியே சென்று நகரத்தைச் சுற்றிவரத் தொடங்குகின்ற போது, அவன் உனக்கு அறிமுகமானவர்களைச் சந்திப்பது சாத்தியமாகும். அவர்களும் கூட அவனது கவர்ச்சிப் பொருளாவார்கள். ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவரும்

உனது பயோ அலைகளை, சந்திரன் சூரியக் கதிர்களைப் பிரதிபலிப்பது போல, பெறவும் பிரதிபலிக்கவும் செய்வார்கள்.''

''ஆக, அவர்களுமா...''

''இல்லை, இல்லை,'' நியூமோர் குறுக்கிட்டான். ''ஆல்வாவை அவர்கள் சந்திப்பதால் அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை — அவன் உன் ஒருவனிடம் மட்டுமே இசைந்து வருவான். இதை நினைவில் கொள்.''

இரவு வெகு நேரமாகி விட்டது. நகரும் பாதை மழையினால் அடித்துச் செல்லப்பட்டு ஒரு கருப்புக் கண்ணாடியைப் போல மினு மினுத்தது. அபூர்வமாக அப்பக்கம் சென்றவர்கள் கூட, உலர்ந்த கம்பிகளைப் பிடித்தபடி விரைந்து சென்றார்கள். போதாத வெளிச்சத்தால் அவர்கள் எல்லாரும் மழைக்கால மேற்சட்டைகளில் ஒன்று போலவே காணப்பட்டார்கள். நகரும் பாதையில் அர்பன் கால் வைக்கவில்லை. ஆனால் சுரங்கப் பாதையில் நடந்து போக முடிவு செய்தான். கையில் உள்ள பாத்திரத்திலிருந்து பொருள் சிந்திவிடுமோ என்று பயப்படுவதுபோல அவன் கவனமாக நடை போட்டான். தான் புறப்பட்டவுடன் நியூமோர் குறியீடு விளக்கக் கருவியை இயக்கி இருப்பான் என்பதையும், இந்த குறிப்பிட்ட நேரத்தில் அவனது மரபு சார்ந்த தகவல் ஆல்வாவின் நினைவிற்குள் சென்று கொண்டிருக்கும் என்பதையும் அவன் அறிவான். அவன் தனது தோள்களை உலுக்கிக்

கொண்டான். கடந்த சில நாட்களாக அவன் இருந்து வந்ததை விட இன்னும் மிக நன்றாக இருப்பதாக அவன் ஏற்கெனவே உணரத் தொடங்கி விட்டான்.

"நான் ஏற்கெனவே இரண்டு துருவங்களாகப் பிரிக்கப்பட்டு விட்டதாகவும், ஒன்றில் கூட்டல் குறியும் மற்றொன்றில் கழித்தல் குறியும் இடப் பட்டிருப்பதாகத் தெரிகிறது," அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். அவனை விட்டு ஒருபோதும் நீங்காத பயங்கரமான நினைவு கூட மங்கியது போலக் காணப்பட்டது...

வெஸ்டர்ன் ஊழியர்கள் புதிய அர்பனை வியக்கத்தக்க முறையில் பார்த்தார்கள். அவன் வெளித்தோற்றத்தில் மாறிவிட்டான் என்பதல்ல—அவனது தாவு அடி உறுதியாகியுள்ளது என்பதும் அவன் கூனியிருக்கவில்லை என்பதுமாகும். அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, அவன் தனது கண்களை வேறுபக்கமாகத் திருப்பிக்கொண்டான். இப்பண்பு அவனிடம் முன்பு இருந்ததில்லை. அவன் பார்வை மிகவும் அழுத்தமாகவும், குமாரி ஷீலா கூறியது போல, 'ஊடுருவுவதாக'வும் மாறி இருந்தது. இருப்பினும் வலதும் இடதுமாக அவள் சொன்ன கதை, மிகவும் நம்பும் படியாக இல்லை.

"நேற்று அவன் தலைவரின் வரவேற்பு அறைக்கு வந்தான்," அவள் சொன்னாள். "ஒரு மணி ஆகிக் கொண்டிருந்தது. மதிய

உணவுக்கு முன்னதாக நான்காவது பகுதியின் அறிக்கையை டைப் செய்யும்படி தலைவர் என்னிடம் கூறினார். அந்நேரம் அர்பன் உள்ளே வந்து 'வணக்கம்' தெரிவித்தான். டைப் ரைட்டரின் அச்சுப் பொறியிலிருந்து எனது கைகளை எடுக்காமலேயே நானும் அவனுக்கு நல்வாழ்த்துச் சொன்னேன். ஏனெனில் அப்போது தான் தான் வீணாக அரட்டை அடிக்கும் நிலையில் இல்லாது, மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறேன் என்பதை அவன் புரிந்து கொள்வான் என்பதற்காக.

" 'நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?' அர்பன் கேட்கிறான்.

" 'என்னால் முடியாது,' பதிலளிக்கிறேன் நான்.

" 'இங்கு பாருங்கள். குறைந்த வெப்பநிலை ஆய்வுக்கூடத்திற்கு நீங்கள் போக வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,' நான் எதுவும் கூறாவிட்டாலும் அவன் தொடர்ந்தான். 'அலேனிடமிருந்து புதிய சஞ்சிகையை எடுப்பதற்காக. கண்டத்திலிருந்து அவனுக்கு ஒரு பார்சல் இன்று வந்திருக்கிறது.

" 'நீங்களாகவே போய் ஏன் அதை எடுத்துக் கொள்ளக் கூடாது?'

" 'என்னால் முடியாது,' அவன் கூறுகிறான். 'ஒரு மாதத்திற்கு முன்னர் அவனோடு சச்சர விட்டுக் கொண்டேன். அது குறித்து நான் வெட்கப்படுகிறேன்.'

"அந்நேரத்தில் நான் எனது தலையை உயர்த்தினேன். அவன் என்னை ஒரு பார்வை

பார்த்தான்... அது புண்ணாக்குவது போல இருந்தது. எனது விருப்பத்திற்கு மாறாக இருக்கையிலிருந்து நானாக எழுந்து நின்றேன்.

"'அலேன் என்னிடம் சஞ்சிகையைத் தரா விட்டால் என்ன செய்வது?' நான் அவனை முட்டாள்தனமாகக் கேட்டேன்.

"'ஓ, அவன் தருவான்,' சிரித்துக்கொண்டே அர்பன் சொன்னான்.

"யாரோ என்னைப் பிடித்து இருப்பது போல நான் பூஜ்ய-கடைக்குச் சென்றேன். எனக்குப் பின்னால் இருந்து கத்தினான்: 'அந்த சஞ்சிகை **நியூக்ளியசும் ஸ்பேசும்** எனப்படும், மறந்து விட வேண்டாம். பத்து நிமிடங்களில் உங்களைத் திரும்ப எதிர்பார்க்கிறேன்.'

"மேலும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது எல்லாம் அர்பன் சொன்னது போலவே சரியாக நடந்தது," ஷீலா தனது கதையை முடித்தாள். அவளது அழகிய கண்கள் குறிப்படும்படி சுற்றிச் சுழன்றன.

ஆனால் கேட்டவர்களில் அநேகர் நம்பிக்கையற்றுப் போனார்கள். எல்லா பௌதிக விஞ்ஞானிகளும், அவர்கள் மட்டுமல்லாது, பூஜ்ய-கடை என்று உள்ளூரில் அழைக்கப்படும் குறைந்த வெப்பநிலை ஆய்வுக்கூடத்தில் பணியாற்ற அண்மையில் வந்துள்ள இளம், நிகழ்ச்சி இயக்குநர் சார்லி மேக்கிராவுன் குமாரி ஷீலாவின் பாவனையில் விழுந்து விட்டது போலக் காணப்படுவதை அறிவார்கள். ஆக, அவளை

அங்கிருந்து விரைந்து போக வைக்க, அவளது தலைவரின் பணி மறந்துவிட்டது, விளங்காத காந்த சக்தி எதுவும் தேவையில்லை. அர்ப னுக்கு இது குறித்து எந்தச் சம்பந்தமும் இல் லை.

அர்பன் நன்கு வேலை செய்து கொண்டிருந் தான். அவனாகவே, யாருடைய உதவியுமின்றி கணக்குகள் போட்டான். இக்கணக்குகள் அயா னிக் யுனிவர்சல் கம்பியூட்டர் சேற்றில் மூழ்கிப் போயிற்று. பிறகு அவன் தனது பகுதியில் அனா லகஸ் கருவி ஒன்றை அமைத்தான். தற்காப்புத் துறை அதைப் பெறுவதற்காக ஓராண்டுக்கு மேலாகக் காத்துக் கொண்டிருந்தது. தலைவர் தானே அர்பனின் துறையைப் பாராட்டினார். முதியவர் வில்நெர்டன் பெரிதும் கவர்ச்சியுற்று அர்பனுக்கு மூன்றுமாதச் சம்பளத்தை போன ஸாக வழங்கினார்.

அச்ச உணர்வுகளுக்கு ஆளாகக்கூடியவன் அர்பன் என்பதும், அவன் ஒரு துறவியைப் போல வாழ்ந்தான் (ஆயினும் முன்னைய தனது சகாக்களுடன் கூடிக் குடித்து மகிழ்ந்தவர்களில் ஒருவனல்ல அவன்) என்பதும், தனது அறையின் சுவர்களை மலிவான பிளாஸ்டிக்கால் மூடியிருந் தான் என்பதும் எந்த ஒரு நபருக்கும் தெரி யாது...

எலெட்ரானிக் இசை நிகழ்ச்சிக்குப் பிறகு, லிண்டாவை விட்டுப் பிரிந்த பிறகு, ஒருவித பயத்துடன் அர்பன் வீடு வந்து சேர்ந்தான்.

லின்டா பிழை செய்திருக்க முடியாது. அவள் ஆல்வாவைப் பார்த்தாள் என்பதாகும். ஆக, நியூமோர் பணியை நிறைவேற்றி விட்டான், ஆல்வா போய் விட்டான். அவன் என்ன செய்யப் போகிறான்? தனது பிறிதொரு துருவத்தைச் சந்திப்பதை அவன் எங்ஙனம் தவிர்க்கப் போகிறான்? அவன் அறைக்குள்ளாக வே தங்கிவிடப் போகிறானா? தனது ஆய்வுக் கூடத்தின் சுவர்களுக்கு பிளாஸ்டிக் உரை போட்டா? அதன் நோக்கத்தை அவன் எங்ங னம் விளக்குவான்? அவனது புதிய துறைத் தலைவர் பதவிக்கேற்ப பெரியதும் சிறந் ததுமான வீட்டிற்குச் செல்ல அவன் மறுத்தது, போதுமான பேச்சு ஏற்கெனவே ஏற்பட்டிருந் தது. ஆனால் அர்பன் தனது பழைய அறையில் இருப்பதே பாதுகாப்பானது என்று உணர்ந் தான்.

வீட்டிற்குத் திரும்பிய அர்பன் வீடியோ போனை நிறுத்தினான். அதன் வழி பேசுவ தைத் தவிர்த்தால், அவன் சற்று அமைதியை உணர்வான். அந்த அமைதிதான் நியூமோர் ஆலோசனை சொன்னதாகும்...

இப்பொழுது அவன் நன்றாகத் தூங்கினான். வீட்டிற்குள்ளேயே முடிந்த அளவு இருக்க முயன் றான். லின்டா தன்னிடம் சொன்னதைத் தவிர வேறு எது குறித்தும் ஆல்வா அவனைத் தொந் தரவு செய்யவில்லை.

இன்னும், நரம்புகள் உலோகக் கம்பிகளைப் போல பலமுள்ளதாக இருந்தும், அர்பன் கற் பனை செய்தது போல, அது இன்ப நிறைவு

டையதாக இருக்கவில்லை. ஒரு நாள், சிந்தனையில் மூழ்கியபடி அவன், அனிச்சையாக வீடியோபோனை முடுக்கினான். திரை உடனே வெளிச்சமாகியது. யாரோ இவனோடு தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருந்தான். சில நொடிகளுக்குப் பிறகு லிண்டாவின் முகம் திரையில் தோன்றியது.

"ஆர்பி, ஒவ்வொரு நாளும் நான் உன்னை அழைத்தபடியே இருக்கிறேன். பதில் தான் ஏதுமில்லை. ஏதேனும் ஏற்பட்டு விட்டதா?"

"நான் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறேன்." அர்பன் ஆர்வமற்று பதிலளித்தான். இந்த நாட்களில் அவன் தனது உள் அமைதியைப் பாதுகாப்பதில் முக்கியமான ஈடுபட்டிருக்கிறான்.

"நாம் ஏற்றுக் கொண்டபோது, நீ ஏன் வரவில்லை?"

"என்னால் முடியவில்லை."

"உனக்கு நலமில்லையா?"

அர்பன் தனது தலையை ஆட்டினான்.

"நாம் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டு எத்தனை நீண்ட காலமாகி விட்டது..."

அவனது வாழ்க்கையிலிருந்து தனது அமைதியைக் கெடுக்கும் எல்லாவற்றையும் விலக்கிக் கொள்ளும் விருப்பத்திற்கும், வழக்கம் போல வாழவேண்டும் என்ற விருப்பத்திற்கும் இடையே நடந்த உள் போராட்டத்தால் அர்பனின் இதயம் கிழிந்தது.

வெறுமனே ஏழு நாட்களாக மட்டுமல்லாது,

பேரூழி காலத்திற்கு ஆல்வா நகரைச் சுற்றிக் கொண்டு இருப்பது போல அவனுக்குத் தோன் றியது. ஒரு நீண்ட காலத்திற்கு உயிரோடு இருக்க அர்பன் முயன்றாலும் கூட, அத் தகைய வாழ்க்கையின் பயன்தான் யாது?

''என்னை மன்னித்துவிடு, லின்டா. அது எனது தவறல்ல...''

''ஓ, அது பற்றி பரவாயில்லை. சொல், ஆர்பி, அந்த இசை நிகழ்ச்சி நடந்த மாலை நாம் பிரிந்த பிறகு, நீ எங்கு சென்றாய்?''

''வீட்டிற்கு, வேறு எங்கே?''

''நம்பிக்கையாக இருக்கிறாயா? அது மிகவும் முக்கியமானது.''

''நான் சுரங்கப் பாதையில் சென்றேன், ஒரு பெட்டியில் ஏறி வீட்டிற்குப் போனேன்.''

''நீ நலமில்லாது இருக்கிறாய், ஆர்பி.''

''ஏன்? எது உன்னை அப்படி நினைக்க வைக்கிறது?''

''நீ மிகவும் நலமின்றி இருக்கிறாய். மே லும் அதைப் பற்றி நீயே அறிந்து கொள்ள வில்லை.''

''எதனால் எனக்கு நலமில்லை, டாக்டர் லின்டி?''

''நீ... நீ நித்திராசாரனாக இருக்கிறாய்,'' லின்டா உளறிக் கொட்டினாள்.

''மற்றொன்றையும் நினைத்துப் பார். முன் னிலும் விட நான் நன்றாகத் தூங்குகிறேன். எனது சொந்தப் படுக்கையில் நான் மிகவும் வசதியாக இருக்கிறேன்.''

''இது வெறும் கேலிப் பேச்சல்ல, ஆர்பி.''

திரைக்கு மிக அண்மையில் லின்டா தனது முகத்தை இழுத்தாள். சாயம் பூசிய கண்ணி மையில் மயிர் வரிசை துடித்தது தெரிந்தது.

''அன்று மாலை... நீ சுரங்கப் பாதையில் சென்றதாக மட்டுமே நினைக்கிறாய்... எதார்த் தத்தில் நீ என்னை மேலே படிக்கட்டு வரை பின்தொடர்ந்தாய்...''

''நானா வந்தேன்?''

''உனக்கு ஒன்றுமே தெரியாது. நீ... தூங்கு வது போல காணப்பட்டாய்...''

இப்பொழுது அர்பன் புரிந்துகொண்டான்.

''நான் என்ன செய்தேன்?'' அவன் விரைந்து கேட்டான்.

''நான் மாடிப்படியில் நின்ற போது நீ நெருங்கி வந்தாய்.''

''நான் உன்னைத் தொட்டேனா?''

''நீ எதையும் பார்க்கவில்லை, உனது கண் கள் விரியத்திறந்திருந்தும் கூட. கிட்டத்தட்ட நீ என்னுடனே நடந்து வந்தாய்.''

''அப்படியா?''

''நான் பக்கவாட்டில் நகன்றேன், நீ விரைந்து போய்விட்டாய்...''

''நான் உனது அறைக்குப் போனேனா?''

''இல்லை,'' லின்டா முணுமுணுத்தாள்.

''பிறகு... நான் எங்கு போனேன்?''

''எனக்குத் தெரியாது.''

''நீ என்னைப் பார்த்தாயா?''

''ஏறத்தாழ ஒரு நொடிக்கு நான் மயக்க

முற்றேன்... ஒரு சில நொடிகள்... எனக்கு நினைவு வந்தபோது நீ மறைந்து விட்டாய். ஏதோ ஒரு சுவற்றுக்குள் நடந்து போவது போல. கிட்டத்தட்ட நீ படிக்கட்டின் கீழே போய், நடந்து போயிருக்க வேண்டும்.''

''ஒரு விநோதமான கனவு,'' அர்பன் வலியச் சிரித்துச் சொன்னான்.

''அது ஒரு கனவல்ல! முதலில் நீ ஒரு தந்திரம் செய்ய விரும்புகிறாய் என்றே நான் நினைத்தேன். ஆனால் பிறகு தான் எனக்கு எல்லாமே தெளிவாகியது — நீ நலமின்றி இருக்கிறாய். இரவு முழுக்க என்னால் தூங்க முடியவில்லை... நான் உன்னை அழைத்தேன், ஆனால் உனது வீடியோபோன் வேலை செய்யவில்லை... மறுநாள் நீ வரவில்லை. முன் கூட்டியே அனுமதி வாங்கியிருந்தால் ஒழிய வெஸ்டர்னுக்குள் யாரும் போக முடியாது என்பதை நீ அறிவாய். சொர்க் கத்திற்குள் நுழைவது அதைவிடச் சுலபமானது. நீண்ட நாட்களாக நான் உன்னைப் பார்க்க வில்லை. நான் எனது திரையையே ஏறத்தாழ எரித்துவிட்டேன். உன்னிடம் வர வேண்டும் என்பதற்காக நான் அவ்வளவு கஷ்டப்பட்டு முயன்றேன்... பிறகு மற்றுமொரு விஷயம் இருக்கிறது. விண்வெளி பயணத்தில் நீ போய்க் கொண்டிருப்பது போல, இசை நிகழ்ச்சிக்குச் சென்றபோது எதற்காக கண்டங்களுக்கிடையே செல்ல பயன்படும் காலணியை அணிந்து சென்றாய்? இந்த வேடிக்கையை நான் பூங்காவில் கவனிக்காமல் இருந்து விட்டேன்.

படிக்கட்டில் நீ என்னை நெருங்கிய போதுதான் பார்த்தேன். எடையற்ற காலணிகள் எதற்காக, வேண்டிக் கேட்கிறேன்? விசித்திரமாக இல்லை? வா, நாம் போகலாம்,'' அவள் முடித்தாள்.

''எங்கு?''

''எனக்கு ஒரு டாக்டரைத் தெரியும்—துறைமுகத்திற்கு அருகில் அவன் வசிக்கிறான்...''

''இல்லை, லின்டா.''

''மறுக்காதே! நீ கட்டாயம் வர வேண்டும்!''

''எனக்கு டாக்டர் தேவையில்லை.''

''இது திரும்பவும் நேர்ந்தால் என்ன ஆவது?''

''டாக்டரால் உதவ முடியாது.''

''குழந்தைபோல நடந்து கொள்ளாதே, அர்பன்!''

நரம்புகளுக்கு பதிலாக இரும்புக் கம்பிகள் கொண்ட ஒரு மனிதனிடம் அவள் இதைச் சொல்லிக் கொண்டிருந்தாள்! அர்பன் சிரித்தான்.

''திரும்பவும் நாம் சந்தித்து விவாதிப்போம்,'' என்றாள் லின்டா.

''ஒருவேளை அடுத்த வாரம்,'' அர்பன் தயங்கியபடி சொன்னான்.

''இல்லை. இப்பொழுதே, உடனேயே நாம் பேசியாக வேண்டும்.''

''நல்லது. நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.''

''இது அது போன்றதல்ல, அப்படியா?''

''மிகவும் சரி,'' அர்பன் தானே எதிர்பார்க்காதபடி திடீரென்று கூறினான்.

நடைக்கூடம் நெடுகிலும் அவன் ஓடினான், பாதுகாப்பாளர் அறையைக் கடந்து, தெருவிற்குள் ஓடினான். கார்கள் மிகக் குறைவாகவே ஓடின இந்த இரவு நேரத்தில்.

''கடைசியாக!'' லின்டா நடுங்குகிற குரலில் சொன்னாள்.

ஒரு வெப்ப அலை தனது இதயத்தைத் தாக்குவதாக அர்பன் உணர்ந்தான்.

''இந்த வழி போவதற்கான ஒரு கார் நான் வைத்திருந்தேன்,'' அவன் சொன்னான்.

''அது ஒரு பயங்கரமான வாரம்.''

''நாம் போய் கீழே உட்காரலாம்.''

''நீ ஏன் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? நம்மைத் தவிர இங்கு வேறுயாருமில்லை.''

அவர்கள் தங்களது கொடிவீடு நோக்கி மெதுவாக நடந்தார்கள்.

''இங்கு ரொம்ப நேரமாக இருக்கிறாயா?''

''இருபது நிமிடங்களாகத்தான். எனது எலும்பெல்லாம் சில்லிட்டுப் போய் விட்டது.''

அர்பன் தனது கையை அவளது தோள்களின் மீது படர விட்டான்.

''அந்த மாடிப்படியில் நான் உன்னைப் பார்த்தபோது, ஆர்பி, எனது ஐம்புலன்களாலும் நான் அஞ்சிவிட்டேன்...''

தனது முடிவை லின்டாவிடம் எப்படிக் கூறுவதென்று அர்பன் வியந்து கொண்டிருந்தான். எவ்வளவு விரைவாக அவளிடமிருந்து

அவன் விட்டுப்பிரிகிறானோ அவ்வளவு நல்லது. அதுதான் அவன் இங்கு வந்ததற்குக் காரணம்.

''லின்டா...''

''ஆம்... அன்பரே?''

''நாம் ஒருவருக்கொருவர் பார்ப்பதை நிறுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.''

சுவற்றுக்குள் ஓடுவதுபோல அவள் தனது தடத்தில் நின்றாள். அவனது அணைப்பினின்றும் விடுபட்டாள்.

''அப்படியா... ஆக நீ...''

''உன்னால் எதுவும் பார்க்க முடியாது, லின்டா,'' தன் குரலில் ஒருவிதக் கலக்கத்தோடும், திரும்பவும் சுற்றிப் பார்த்துக்கொண்டு அர்பன் சொன்னான்.

மரங்களடர்ந்த பூங்காவின் இந்த மூலையில், பகலில் ஒருசிலராவது சுற்றித் திரிவது போய், இப்பொழுது முற்றிலும் பாலைவனமாகக் காட்சியளித்தது. தனக்கு முன்னால் ஏதோ வெள்ளை நிறத்தில் மினுமினுப்பதை அர்பன் பார்த்தான். அவன் ஓடியாக வேண்டும்! ஆனால் விஷயம் என்ன ஆவது—நொடிப் பொழுதில் ஆல்வா அவனைப் பிடித்து விடுவான். அர்பனின் தசைகள் பயத்தால் முறுக்கேறின. ஓ! அது பிர்ச் மரம் வெள்ளையாக மினுமினுத்தது. அர்பன் ஆறுதல் பெருமூச்சு விட்டான்.

அவன் லின்டாவின் கையைப் பற்றினான். அப்பெண் அவனை அக்கறையற்றபடி பின்தொடர்ந்தாள்.

விண்ணிலே குறுகிய பிறை தெரிந்தது. கொடிவீட்டுச் சுவற்று நிழல் படிந்த இடத்தில் அர்பன் நின்றான். பனித்துளி இல்லாத இடமாகப் பார்த்து அவர்கள் அமர்ந்தார்கள்.

''புதிர்போட்டு பேசுவதை நிறுத்து,'' லின்டா கவலையுடன் கூறினாள். ''உண்மையைக் கேட்பதற்கு எனக்குப் போதிய துணிவு இருக்கிறது. அது என்ன? மற்றொரு பெண்ணா?''

''நீ ஒருத்தி மட்டுமே எனது ஒரே பெண்,'' தனது தலையை அசைத்தபடி அர்பன் கூறினான்.

''அது உண்மையா?'' லின்டா உணர்ச்சி வயப்பட்டுக் கேட்டாள்.

ஆனால் அர்பன் பொய் பேசும் மனிதனைப் போலக் காணப்படவில்லை.

''அது உண்மை,'' அவள் மகிழ்வுடன் திரும்பச் சொன்னாள். ''பிறகு ஏன் நாம் பிரிய வேண்டும்? ஏனென்றால் நீ நலமின்றி இருக்கிறாய், அப்படித்தானே?''

அர்பன் பதில் பேசவில்லை. அவனது அமைதியை சம்மதத்திற்கு அறிகுறியாக எடுத்துக் கொண்டு லின்டா மேலும் தொடர்ந்தாள்:

''மட்டிப் பையனே! மிக நீண்ட காலத்திற்கு முன்னமேயே, ஒரு மாதத்திற்கு முன்பாகவே நான் கவனித்தேன். ஆனால், அது என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. முதலில் அது எல்லாம் உன்னுடைய விநோதமான வழிகளால் ஏற்பட்டதென்று நான் யூகித்தேன். பிறகு நீ என்னைக்

கேலி செய்கிறாய் என்று நான் நினைத்தேன். அந்த இசை நிகழ்ச்சி நடந்த அந்த இரவில் தான், நீ மிக மோசமாக நிலையில் இருப் பது பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாது இருந்தேன்.'' அப்பெண் தனது உள்ளங்கையை நிலவு ஒளியில் நீட்டினாள். அவள் அதைப் பிடிக்க முயற்சிப்பது போலத் தோன்றி யது. ''பரவாயில்லை. நாம் பிறிதொன்று பற்றி சிந்திப்போம். ஆர்பி, நீ அவ்வளவு மோசமாகத் தோற்றமளிக்கவில்லை. உனது கன் னங்களில் நீ வர்ணம் கொண்டிருக்கிறாய். ஆர்பி, நிறுத்து அதை!'' அவள் திடீரென்று கத்தி னாள்.

''நீ என்ன சொல்கிறாய்?''

''சுற்றிலும் பார்ப்பதை நிறுத்து!''

அர்பன் ஏதோ சொல்வதற்கு இருந்தான், ஆனால் லின்டா அவனை முந்திக் கொண்டு பேசினாள்:

''முயற்சி செய். சுற்றிலும் பார்ப்பதில்லை என்று தீர்மானம் செய். நீ உனது நரம்புகளை கட்டுப்பாட்டிற்குக் கீழ் வைக்க முயல வேண் டும்,'' அவள் முக்கியமானதாகச் சொன்னாள். ''நீ நலமடைவாய். எனக்கு அது பற்றி சந் தேகம் இல்லை. இன்றைய நாட்களில் எல்லா வகையான நரம்பு வியாதிகளையும் அவர்கள் குணப்படுத்துகிறார்கள். உயிரியல் பயிற்சியில் ஆர்வமிக்க ஒரு பௌதிகவியலாரிடம் நான் கேட்டேன்...''

''நியூமோரையா நீ சொல்கிறாய்?''

''ஆம்,'' சற்று நேர மௌனத்திற்குப் பிறகு

லின்டா ஒத்துக் கொண்டாள். ''அவன் என்னிடம் வியக்கத்தக்க விஷயம் ஒன்றைச் சொன்னான். என்னால் கூட அவை எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் கண்டு பிடித்துள்ள ஒரு பொறி கடற்பாசியைப் போல எல்லா நரம்பு வியாதிகளையும் உறிஞ்சி விடும்.''

''அப்படியா?'' அர்பன் வியப்போடு கேட்டான். ''வேறு என்ன அவன் உன்னிடம் கூறினான்?''

''அவனிடம் இது பற்றிச் சொல்லக் கூடாது,'' லின்டா கூறினாள். ''இது குறித்து ஒரு வார்த்தை கூட மூச்சுவிடக் கூடாதென்று அவன் என்னிடம் கேட்டுக் கொண்டான்... அவன் ஒரு படி கூடுதலாக மது அருந்தக் கூடியவன் என்றும் சொல்லவந்ததைவிட அதிகமாகவே கூறினான் என்றும் நான் நினைக்கிறேன். ஆனால் அவன் உன்னைப் பற்றி நல்லெண்ணம் வைத்திருக்கிறான்... அவனிடம் சொல்ல மாட்டேன் என்று உறுதி கூறு.''

''நான் சொல்ல மாட்டேன்,'' அர்பன் அவளிடம் வாக்களித்தான்.

''நியூமோரின் புனைவாற்றல் ஹொஃப்மானினுடையதை விடச் சிறப்பானது. அவன் சொன்னான், எடுத்துக்காட்டாக, இந்தக் கடற்பாசி ஒரு மனிதனுடைய வியாதிகளை கிரகித்துக் கொள்வதனால் அது மேன்மேலும் அவனைப் போலவே ஆகிவிடும் என்று. மேலும் இறுதியில் அவர்கள் ஒரு நெற்றின் இரு விதைகள்

போல, ஒன்று போல ஆகிவிடுவார்கள். என்ன முட்டாள்தனம்!''

''ஆமாம்,'' அர்பன் இழுத்தவாறு பேசினான். ''மேலும் அந்த கடற்பாசிக்கு என்னவாகிறது?''

''அது தனது சொந்த வாழ்க்கை வாழத் தொடங்குகிறது. அதற்கு விருந்தளித்தவரின் பிரதிபலிப்பாக மாறுகிறது. தனது மறுபாதியைத் தேடி அதனோடு இரண்டறக் கலப்பதற்கு அவாவுகிறது. ஆனால் மனிதன் அத்தகைய சந்திப்பைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.''

''ஏன்?''

''அது அவனுக்கு நல்லதல்ல. இப்பொழுது எனக்கு முற்றாகத் தெரியாது. ஏனெனில் அப்பொழுது நியூம் மிகுந்த சிரமத்தோடுதான் பேசினான். அப்படிக் குடித்து அவனை அதற்கு முன் நான் பார்த்ததில்லை. நடக்கும் என்று அவன் சொன்னதென்ன?..''

''நிர்மூலமாக்குதலா?'' அர்பன் சொல்லிக் காட்டினான்.

''அது சரிதான்!'' லின்டா வியந்தாள்.

''ஆச்சரியமாக இருக்கிறது. அது போன்ற ஒரு சோதனையை அவன் ஏற்கெனவே அரங்கேற்றியுள்ளானா?''

''இல்லை.''

''ஏன்?''

''தான் எந்த ஒரு சாரணர்களையும் காண முடியவில்லை என்று அவன் சொன்னான். நரம்

புத்தளர்ச்சிமிக்க நமது வயதில் யாரையாவது தான் கண்டுபிடிக்கப் போவதாக மேலும் அவன் சொன்னான். நான் முயற்சி செய்ய விருப்பமா என்று அவன் என்னிடம் கேட்டான்,'' லின்டா சிரித்தபடி சொன்னாள். ''நான் சோதனைக்குப் பொருத்தமானவளா என்று அவனுக்கு நிச்சய மில்லை.''

''நீயா?''

''ஒருவகையில் நான் மறுத்துவிட்டேன். அவனது முட்டாள்தனமான ஏதோ யோசனைக்கு நான் என் உயிரைப் பணயம் வைக்கவா? ஒன்றும் முடியாது!''

''முட்டாள்தனமான யோசனை...'' அர்பன் மெதுவாகத் திரும்பச் சொன்னான். ''மேலும் ஒருவனுக்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்றால் என்ன ஆவது? நினைவுச் சுமைகளிலிருந்து விடுபட எதையும் செய்யத் தயாராக அவன் இருந்தால்...''

''அவனது உயிரைப் பணயம் வைத்தா?''

''ஆம்... அவனது உயிரைப் பணயம் வைத்துத்தான்!''

''இதை ஏன் நீ மிகவும் பெரிதாக எடுத்துக் கொள்கிறாய்?'' லின்டா வியப்போடு கேட்டாள். ''நியூமோர் ஒரு தவறு செய்தால் என்னவாவது? அவன் முதலாவதாக ஒரு நாயை வைத்து முயற்சிக்கப் போகிறான் என்று நான் நினைக்கிறேன்.''

சற்று நேரம் அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

''நியூமோரின் கற்பனையை நீ சீரிய ஒன்றாக எடுத்துக் கொண்டாயோ என்று எனக்குத் தோன்றுகிறது,'' லிண்டா இறுதியாக அமைதியைக் கலைத்தாள்.

''ஏன் முடியாது?''

''நினைவுகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும், ஒருவன் ஓடிவிட முடியாது,'' லிண்டா கூறினாள். ''மேலும் நமது தொல்லைகள் தாம் நமது நலமின்மையாகும். ஒருவன் தன்னிடமிருந்து தானே ஓடிவிட முடியுமா?''

கொடிவீட்டிலிருந்து அவர்கள் வெளியே நடந்து வந்தபோது, இளம்பிறை அடிவானத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

''ஒரு டாக்டரை கலந்து பேசுவதாக நீ உறுதியளிக்க வேண்டும்,'' லிண்டா கோரினாள்.

வார்த்தை ஏதுமில்லாமல் அர்பன் தலையாட்டினான்.

அவன் பெரிதும் மன உலைவு கொண்டிருந்தான். அவனது தோளை தனக்குத் தானே நேராக நிமிர்த்திக் கொள்வதற்குக்கூட அவன் பெருமளவு மனத்திட்பம் கொள்ள வேண்டியிருந்தது. அவன் இங்கு வந்திருக்கவே கூடாது. அவனது வலுவான நரம்புகளையும் மீறி, அவன் தனது உட் சமநிலையை இழந்தான். அவனது முன்னைய தொந்தரவுகளுக்கும், துயரங்களுக்கும் மையமான ஆல்வா ஏற்கெனவே இங்குதான் எங்காவது இப்போது ஒளிந்து மறைந்திருப்பான். சரி, அப்படியே காப்பாற்ற முடியாத நிலை அது.

லின்டாவை விட்டுப் பிரிவது அவ்வளவு துயரமானது என்பதை அர்பன் நினைக்கவில்லை. அவளோடு அவன் மிகவும் நெருக்கமானவனாக இருந்தான். இருப்பினும், நியூமோரின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியக் கூடிய வகையில் அவன் இந்த கடைசி பற்றையும் துண்டாட வேண்டி இருந்தான். ஆனால் நியூமோர் எல்லாவற்றையும் உளறி வைத்தான் என்று கற்பனை செய்தான்! அதை அவனால் செய்ய முடியும் என்று அவன் நம்பவே இல்லை. மறுபுறம், அது என்ன விஷயம்?

அவனது கண்டுபிடிப்பை லின்டாவிடம் சொல்லியதில் குறிப்பிடும் படியாக எதுவும் நினைவில்லை. இப்போதோ, பிறகோ சரீரமில்லாத ஆல்வா, எல்லாருக்கும் தெரிந்த ரகசியமாகலாம். நியூமோர் தனது கண்டுபிடிப்பைக் காப்புரிமை ஆக்கி ஒரு பணக்காராகி விடுவான். பணக்கார வாடிக்கையாளர்கள் அவனை மொய்க்க ஆரம்பிப்பார்கள். அதே வேளை சாதாரண மனிதனால் ஒருபோதும் அதைப் பெற முடியாது போகும். ஆர்வமூட்டக் கூடிய வகையில் நியூமோர் தனது கண்டுபிடிப்பை விளம்பரம் செய்வான். வியாபாரத்திற்கு அவனுக்கு நல்ல வாய்ப்பு இருக்கும். பொதுவாக அவன் ஒன்றும் மோசமானவனன்று — ஒருவகையில் அவன் அர்பனிடமிருந்து எந்தப் பணமும் பெற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் அவனோடு செயல் நோக்கம் கொண்ட கண்ணோடு அர்பனைப் பார்க்க முடியாதது ஏன்? ஒருவேளை அர்பன் கினியா

பன்றியின் பாத்திரத்தை ஏற்று விட்டானா? ஆனால், இல்லை. அவன் அவனது நண்பன், இல்லையா அவன்?

அந்தப் பூங்காவை விட்டு வெளியேறிய உடனேயே ஓர் இலவச டாக்ஸியைப் பிடிக்கும் அதிர்ஷ்டம் அந்த ஜோடிக்கு இருந்தது.

நகரம் தொல்லையில் இருப்பது போல காணப்பட்டது. இன்னமும் சில சன்னல்களில் வெளிச்சம் தெரிந்தது. இவைகளுக்குப் பின்னால் மக்கள் தங்களுடைய இன்னல்களினால் தூக்கத்தை இழந்திருந்தார்கள்.

அர்பன் மெதுவான இருக்கையில் ஒருவித மேம்பாட்டு உணர்வுடன் சாய்ந்தான். இல்லை, அவன் மற்றவர்களைப் போல இல்லை. மிகவும் நல்லது, அவன் ஆல்வாவிற்குப் பயந்தான், ஆனால் உலகத்தில் அவனுக்கு வேறு எந்த இன்னல்களும் இல்லை. அதைத்தானே ஒவ்வொரு மனிதனும் கனவு காண்கிறான்?

''கடவுளே! எவ்வளவு சுணங்கிவிட்டது!'' அவளது வீட்டிற்குத் தானியங்கி வண்டியோட்டி கொண்டு சென்ற போது லின்டா முணுமுணுத்தாள்.

அவள் காரை விட்டு குதித்து வெளியேறினாள். 'குட்பை' என்று விரைந்து சொல்லி விட்டு தனது வாசலுக்குள் குதித்துச் சென்றாள். அதே வேளையில், வளைவின் மூலையிலிருந்து ஓர் உருவம் தோன்றியதை அர்பன் கவனித்தான். அம்மனிதன் சுறுசுறுப்பாக நடந்து வந்தான். அவனது தலை தாழ்ந்திருந்தது. அவனது நடைகள் ஓசையற்று இருந்

தன. தெரு விளக்கு வெளிச்ச வட்டத்திற்குள் அவன் நுழைந்தபோது, அர்பன் தன்னைத்தானே அறிந்து கொண்டான் — ஆல்வாவை அறிந்து கொண்டான்.

''லின்டா ஏற்கெனவே வீட்டில் இருக்கிறாள் என்பது ஒரு நல்ல விஷயம்,'' என்று அவன் நினைத்தான். ஆனால் அடுத்த நொடியே மரக் கதவுகளும், கற்சுவர்களும் ஆல்வாவிற்குத் தடையில்லை என்பதை அவன் நினைவு கூர்ந் தான்.

முழுக்க மரத்துப் போனது, அவன் மோச மான ஒன்றைச் சந்திக்கத் தயாராக இருந்தான். ஆனால் ஆல்வா காரைப் பொருட்படுத்தவில் லை. அவன் லின்டாவின் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

''நில்!'' அர்பன் மனத்துக்குள்ளாக உத்தர விட்டான். ஆல்வாவின் நடை வேகம் குறைந்தது. கதவுக்கருகில் அவன் நின்றான். பிறகு அவன் மெதுவாக காரை நோக்கித் திரும்பினான். அர்பனும் ஆல்வாவும் வெறு மனே பத்தடிகள் தூரத்தில் பிரிக்கப்பட்டார் கள்.

''நாம் போகலாம்!'' தன் மறதி நிலையிலி ருந்து வெளியேறிபடி அர்பன் டிரைவரிடம் கூறினான்.

ஆனால் கார் நிலையாக நின்றது.

இதற்கிடையில், ஆல்வா கூடுதல் வேகத்து டன் நெருங்கிக் கொண்டிருந்தான்.

''வா... உன்னைத்தான்!'' எனக் கூறிய அர்பன் ஓட்டும் கருவியை தனது மூடிய

விரல்களால் அடித்தான்.

தானியங்கி டிரைவர், அடையாள விளக்கு கள் கொண்ட தட்டைப் பெட்டி எதுவும் இயங்கவில்லை.

மற்றும் இரண்டு அல்லது மூன்று துள்ளல் கள்...

அவன் வெளியே தாவுவானா? அர்பன் தானே கார் கதவில் முட்டினான். அவனது தோளில் ஏற்பட்ட வலி அவனுக்கு சுய நினைவைக் கொண்டு வந்தது. ஆனால் உண்மையிலேயே! அவன் மீட்டர் பெட்டிக்குள் கொஞ்சம் பணம் போட்டாக வேண்டும். அவன் தனது சட்டைப் பையிலிருந்து கை யளவு காசுகளை சுரண்டி எடுத்து நாணயம் விழும் துளைக்குள்ளாக சில காசுகளைத் திணித்தான். இது ஓர் அசைவைக் கொடுத் தது, விளக்கு மின்னியது. டிரைவர் உத்தரவு களுக்குக் காத்திருக்கிறான் என்பது இதன் பொருள்.

''முன்னேறு, முடிந்தளவு வேகமாகப் போ!'' அர்பன் மூச்சு விட்டான். கார் முன்னோக்கிப் பாய்ந்தது. அவன் தனது இருக்கையில் அழுத்த மாகச் சாய்ந்தான்.

முக்கியப் போக்கு வரத்துக்களில் தந்திர மாக நுழைந்து வெளியேறி சாலை வழியே கார் விரைந்தது.

காரைப் பின்தொடர்ந்து வர ஆல்வா முயன்றதை அர்பன் பார்த்தான். ஆனால் காற்றில் மிதப்பதில் மட்டுமே அவன் வெற்றி யடைந்தான். கைப்பாவை போல அவனது

கால்கள் நடுங்கின, ஏறத்தாழ பாதையைத் தொடாமலேயே நின்றன.

''வேக அளவு,'' அர்பன் திரும்ப நினைத் தான். ''ஒரு மணி நேரத்தில் மூன்று மைல்கள் மட்டுமே அவனால் நகர முடியும்.'' நடுங்கும் உருவம் வளைவிலேயே பின்னுக்குப் போய் விட்டது.

''அவன் ஏன் லின்டாவைப் பின்தொடர் கிறான்? ஒருவகையில், அவளுக்கு அவன் எந்தத் தீங்கும் செய்ய மாட்டான், ஆனால் எனக்குப் பின்னால்தான் அவன் இருக்கிறான். பழிவாங்கு வேன்! பிறகு ஏன் லின்டா?''

வெறிகொண்ட கார் ஓட்டம் அவன் வே தனையைத் தணித்தது. ''அவனுக்கு அந்த வேக அளவை நியூமோர் கொடுத்தது எவ்வளவு அதிர்ஷ்டம்! மேலும் காருக்குள் நான் இருப் பது எவ்வளவு அதிர்ஷ்டம்,'' என்று அவன் நினைத்தான்.

அர்பன் கால் நடையாக எப்பொழுதுமே செல்வதில்லை, இந்தப் பழமையான பயிற்சியை அவன் பெரிதும் விரும்பி வந்த போதிலும். ஒரு நூறு மீட்டர் தூரம் குறித்ததாக இருந் தாலும் அவன் காரில்தான் சென்றான். அவனுக் கென தட்டை மூக்குடைய **பெஸான்** கார் வைத் திருந்தான்.

வெஸ்டர்னில் இவனது விரைவான உயர் வைக் காண அவனது சகாக்கள் வியப்புற்றார் கள். மேலும் அவர்கள் அவனது துரித்த நோக்கைத் தவிர்க்க முயன்றார்கள். தலைமை

எஞ்சினியர் சொல்லும் எந்த வேண்டுகோளுக்கும் செவி சாய்க்க வேண்டியதை அந்த துரித்த நோக்கு கட்டாயப்படுத்தியது என்று வதந்திகள் உலவின. இந்த விநோதமான அம்சத்தை விளக்க வேண்டியதில்லை, எனில் அவர்கள் செய்ய முடிந்ததெல்லாம் திடமான ஊகங்களாகும் அல்லது ஆராயாது தோளை அசைத்துக் கொண்டதாகும். ஆனால் ஐயுறவுவாதிகள்கூட புதிய துறைத் தலைவரிடம் தாங்கள் கொண்ட நடவடிக்கையில் களைத்துப் போய் விட்டார்கள்.

அர்பன் இன்னமும் பணக்காரனாகவில்லை. ஆனால் இப்பொழுது அவனுக்காக ஒரு கார் வாங்குமளவிற்குப் போதிய பணம் வைத்திருந்தான். மேலும் அவன் அதை தனது திட்ட அமைப்பில் செய்ய வேண்டி இருந்தான். அதனது விநோதமான அம்சம் அதனது முடங்கிய தன்மையாகும். காரில் எந்த வளைவுகளும் இல்லை. தட்டையான பரப்பாக ஒவ்வொரு மூலையும் நேருக்கு நேராக இருந்தன. நாகரிகமான கோள வடிவ அமைப்பு எதுவுமில்லை, காரின் உடல் ஜியோமிதி வடிவ கணிதத்திற்குரியபடி தட்டையாக இருந்தது.

மிக அபூர்வமான ஓர் ஆர்டரால் கார் நிறுவன ஊழியர்கள் அவாவால் தூண்டப்பட்டார்கள். ஆனால் தங்கள் ஆர்வத்தை அடக்கிக் கொண்டார்கள். வாடிக்கையாளரின் விருப்பம் சட்டம் போன்றது. குறிப்பாகத் தனது விளையாட்டு மனப்போக்குக்காக ஒரு வாடிக்கை

யாளர் நிறைந்த பணத்தைச் செலவிடத்தயா ராக இருக்குப் பொழுது. (அது விளையாட்டு மனப்போக்கில்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?)

ஆர்டர் விரைவிலேயே நிரப்பப்பட்டது. கன சதுர வடிவான காரின் அறையின் தளங்கள் எந்தவிதமான வளைவுகளும் கொண்டதில்லை என சரி பார்த்த பிறகு அர்பன் முற்றிலும் மகிழ்ச்சியடைந்தான்.

''எந்த மாதிரியான துணி மெத்தையை தாங்கள் விரும்புகிறீர்கள்?'' வடிவ அமைப்பு தொழில் வல்லுநன் விசாரித்தான்.

''எந்த வித்தியாசமும் இல்லை.''

''வர்ணம் செர்ரி சிவப்பு இப்பொழுது போதுமானது.''

''அருமை.''

''காரின் அறையின் உட்புற தளத்தைப் பொருத்தமட்டில்...'' வல்லுநன் தொடர்ந்தான்.

''அதை என்னிடம் விட்டு விடுங்கள்,'' அர்பன் குறுக்கிட்டான்.

அது விநோதமானதாகக் காணப்பட்டாலும், அர்பனுடைய சகாக்கள் அவனது குழப்பமான நிலை குறித்து விவாதிப்பதில் எந்த வெறுப்பையும் காட்டவில்லை.

ஒரு மாதத்திற்கு முன்னர் கூட தொடர்பு கொள்ள விரும்பாதவர்களில் பெரும்பாலோர், ''அவன் ஒன்றும் மோசமான ஆள் இல்லை,'' என்றார்கள்.

முன்பெல்லாம் அதிகமான அளவு எரிச்ச

லூட்டக் கூடியவனாகவும் கோபத்தின் உச்சிக்குச் செல்பவனாகவும் இருந்த அவன் இப்பொழுது குறிப்பிடத்தக்கவாறு நல்ல இயல்புடன் காணப்பட்டான். இது ஒவ்வொருவராலும் கவனிக்கப்பட்டது. முன்பெல்லாம் அவனை வெறுத் தொதுக்கியது போல அல்லாமல் மக்கள் அவனிடத்தில் எல்லாவகையான கோரிக்கைகள் குறித்தும் வரத் தொடங்கினார்கள். அவை பெரும்பாலும் துறைக்கும் வெஸ்டர்னுக்கும் முற்றிலும் பொருத்தமற்றதாகவும் இருந்தன.

வெளித் தோற்றத்தில் அவன் அதே அர்பனாகத்தான் இருந்தான். மிகவும் ஆரோக்கியத்துடனும், நல்ல தோற்றத்துடனும் மட்டுமே காணப்பட்டான். ஆனால் உட்புறத்தில் அவன் முற்றிலும் புதியவனாக, அன்பான, நல்லிதயம் கொண்டவனாகக் காணப்பட்டான்.

இப்பொழுது மக்கள் புதிய வெளிச்சத்தில் அர்பனைப் பார்ப்பது போல, அவனும் தனது சகாக்களை புதிய முறையில் பார்த்தான்.

குமாரி ஷீலாவிடம் அவன் கொண்ட வெறுப்பு (அந்த உணர்வு இருபாலரிடமும் இருந்தது) மோசமான உணர்வு கொண்ட பிணக்காக நீடித்திருக்கவில்லை. ஆனால் தனது இதழ் ஓரங்களில் சோகத்தை நிறைத்து வைத்திருந்த அப்பெண்ணின் தோற்றம், அவளது ஒப்பனை அழகை விட அதிகமான ஒன்றை அர்பனுக்குச் சுட்டிக்காட்டியது.

ஒவ்வொரு மனிதனும் தனது துயரங்களோடும், மகிழ்ச்சியோடும் அர்பனுக்கு வேண்டிய

வனாகி விட்டான், ஒவ்வொருவருக்கும் உதவி செய்ய விருப்பங் கொண்டிருந்தான், தன்னால் முடிந்த அளவுக்கு அவர்களுக்கு உதவியும் செய் தான்.

குறிப்பாக, தலைவர் எல்லாவகையான கொஞ்சற் பேச்சுகளையும் வெறுப்பவர் என்பது பலரறிந்தது. அவர் கூற்றுப்படி, எல்லாரையும் போல, அர்பனது பணிக்காக அவனிடம் நன்கு நடந்துகொண்டார். அர்பன் தனது தலைவர் குறித்து மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தான். தன் முயற்சியால் உயர்ந்தவர், இரக்கமற்ற, இரும்பு இதயம் கொண்ட அதிர்ஷ்டக்காரர் என்பதாக.

அதிர்ஷ்டத்தின் அன்பைப் பெற்ற, மிகுந்த அதிர்ஷ்டமுடைய அவன் யார்? இன்றியமை யாதபடி, கணக்கற்ற பொறுப்புகளைத் தன் தோள் மீது சுமந்து கொண்டு அழுந்தும் பரி தாபத்திற்குரிய கிழவர். தவறான நடவடிக்கை எடுப்பதில் உள்ள பய உணர்வில் தொடர்ச்சி யாகச் செல்வதிலா அந்த மகிழ்ச்சி? தலைவரு டைய மீற முடியாத குரலுக்குப் பின்னால் உள்ள அச்சம் அர்பனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. கம்பெனியின் ஆதாயப்பங்குகள் மூழ் குமேயானால், பிறகு வெஸ்டர்னின் எதார்த்த மான தலைவர்களும், அவர்கள் பெயரைக்கூட இந்த மாள்வுக்குரியவர்கள் அறிய மாட்டார் கள், மேலும் போட்டியாளர்களும், காயம் பட்டவர்களை ஓநாய்க் கூட்டம் கிழித்தெறிவது போல, பழைய வில்நெர்டனை உண்டு தீர்ப் பார்கள்.

மற்ற பிற பாதுகாவலர்கள் அனைவரும் போட்டோ எலிமெண்ட் கொண்ட ரோபாட்டு களால் மாற்றப்பட்ட பிறகும், சிறந்த விண் வெளியாளரான முதிய டான் பிளேஷ், கம் பெனிக்கு சில விஷேட சேவைகளில் பாதுகா வலராக நிறுத்தப்பட்டது போல, வல்லமை மிக்க வில்நெர்டனும் அர்பனுக்கு தெளிவாக வும், புரிந்து கொள்ளக் கூடியவராகவும் ஆனார்.

ஒரு நாள் அர்பன் ஆய்வுக்கூட உதவியா ளன் கிரினோவைச் சந்தித்தான்.

''நான் உன்னைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்,'' அர்பன் சொன்னான். ''புதிய கருவிகல அமைப்பில் நீ இரவுப் பணி செய்ய வேண்டும் என நான் விரும்பு கிறேன்...''

அந்த இளைஞன் திடுக்குற்றான்.

''அதில் அஞ்சுவதற்கு எதுவுமில்லை,'' அவ னது உணர்வைத் தவறாகப் புரிந்துகொண்டு, அர்பன் அவனிடம் உறுதியளித்தான். ''உனது வயதில் நான் இத்தகைய கருவிகல அமைப்புப் பற்றி அதிகம் அறிந்ததில்லை... ஆனால் இந்த குறிப்பிட்ட பணிக்கு சிறப்பான தகுதி கள் எதுவும் தேவையில்லை. அதை நான் உனக்கு விளக்குவேன்... ஏன்... அதில் என்ன தவறு?''

''இன்று இரவு என்னால் தங்க முடியாது,'' கிரினோ கலவரமுற்றவனாகக் கூறினான். மேலும் உடனடியாக வெஸ்டர்ன் விதிகளில் ஒரு பகுதியை, ரகசிய நிறுவன வேலைக்காக

அவன் வேலையில் சேர்வதற்கான படிவத்தைப் படித்து கையெழுத்திட்டதை, நினைவு கூர்ந் தான்: ''மேலதிகாரியின் கட்டளைகளை நிறை வேற்றத் தவறுவதன் விளைவு...''

''என்ன விஷயம்?''

''அது குடும்ப விஷயம்... நான் உங் களுக்குச் சொன்னேன்...''

அர்பன் முகஞ்சுளித்தான். நினைவு ரேகை அவன் முகத்தில் ஓடியது. அவன் நினைவு கூர முயன்றான், ஆனால் முடியவில்லை.

''மிகவும் நல்லது, கிரினோ,'' அவன் இறுதி யாகச் சொன்னான். ''நீ வீட்டிற்குப் போக லாம்.''

''நான் திரும்ப எப்பொழுது வர வேண் டும்?''

''உன்னால் முடியும் பொழுது.''

''என்னை வேலையிலிருந்து நீக்க நினைக் கிறீர்களா?''

அர்பன் தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''உன்னை வேலையிலிருந்து வெளியேற்றும் எண்ணம் எனக்கில்லை.''

''ஆனால், இரவு வேலைக்கு யார் தங்கு வது?''

''நானே,'' என்றான் அர்பன்.

அவன் ஏன் கூடாது, ஒருவகையில், முன்னர் போல இங்கு இரவைக் கழிக்கலாம். இளை ஞனுக்கு இது கஷ்டமான நேரமாகத் தோன்றி யது... முதிய அர்பனுக்கு எந்த விஷயமும் மட்டுமீறியதாகத் தெரிந்தது, புதியவன் அதை

இயல்பாகக் கண்டான்.

இப்பொழுது அர்பனின் கணித கணக்கீடுகள் தவறின்றி இருந்தன. அவனது குளிர்ந்த கூர்மதியுடைய மூளை நாடறிந்ததாயிற்று. தலைவர் அவன் மீது அளவற்ற நம்பிக்கை வைக்க இது ஒன்றே போதுமான காரணமாகும். அளவற்ற சலுகைகள் காட்டுவதை ஒருசிலர் சுட்டிக்காட்டவே செய்தார்கள். ஆனால் இந்த உலகத்தில் எதிரிகளே இல்லாமல் யாராவது இருக்கிறானா என்ன?

எல்லாவகையிலும் அர்பனின் அபூர்வமான சக்திகளில் முற்றாக நம்பிக்கை வைத்த ஒருசிலர் இருக்கவே செய்தார்கள். அர்பனை சந்திக்கும் பொழுதெல்லாம் கையால் தனது கண்களை மறைத்துக் கொள்ளும் அளவுக்கு குமாரி ஷீலா போய்விட்டாள். இருப்பினும் அதை அவள் புன்னகையுடன் செய்தாள்.

மனிதசக்திக்கு அப்பாற்பட்ட திறமைகளை அர்பன் உணர்ந்தான். அதில் மிக்க மகிழ்வும் கொண்டான். அவன் மேற்கொண்ட எல்லாமே நல்லபடியாக முடிந்தன. ஓர் அருமையான சோதனையைச் செய்கின்ற போது, தனக்குக் கீழ் உள்ளவர்களிடம் விவரங்களை விட்டு விட்டு, அவனால் உடனடியாக அதன் உள்ளிடத்தை அறிய முடிந்தது.

பொதுவாக அவன் உடற்பயிற்சி விளையாட்டுகளை வெறுத் தொதுக்கினாலும், முன்னமேயே தண்ணீர் பயிற்சி அவனுக்கு அந்நியமென்றாலும், மிகுந்த சிரமமில்லாமல் அவன் வெஸ்டர்னில் நீச்சலில் வீரரானான். எந்தவித

முன்பயிற்சியுமின்றி அவன் பட்டத்தைப் பெற்றான். அவன் விளையாட்டுத் திடலில் வெறுமனே அலைந்து கொண்டிருந்தான். அப்பொழுது நடைபெற்ற நீச்சல் போட்டியில் கலந்து கொள்ள முடிவு செய்தான்.

அவனது தலைவர் எந்தவித விநோதமான விருப்பங்களுக்கும் — அவனது துறையின் சுவர்களை அவன் வர்ணமற்ற பிளாஸ்டிக்குடன் மாற்றியது உள்பட — மன்னித்துவிடுவார்.

அர்பன் தனது அறையில் வீடியோபோனின் பொத்தானை நிறுத்தினான். இனிமேல் லின்டா அவனுக்குக் கிடைக்கவே மாட்டாள். எதுவும் அவனது அமைதியைக் கெடுக்கவில்லை.

எந்தவித போலித்தனமான வியப்புமின்றி நியூமோர், ''ஏன், ஹலோ!'' இரைந்தான். இந்த வியப்புக்குப் போதிய காரணமுண்டு. ஏனெனில் இத்தகைய சந்திப்பைத் தடுப்பதற்கு தனது சக்திக்குட்பட்ட அனைத்தையும் அவன் செய்து கொண்டிருந்தான்.

''ஹலோ,'' அர்பன் முகஞ்சுளித்துச் சிரித்தபடி சொன்னான்.

தனது காரில் நான்கு மணி நேரத்திற்கும் மேலாக நியூமோருக்காக அர்பன் காத்துக் கொண்டிருந்தான். வெப்பப்படுத்தும் முறையில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும், அவன் குளிர்ந்து போய் விட்டான். ஆனால் வெளியே வரத் துணியவில்லை. அண்மைக் காலங்களில் ஆல்வா பேய்த்தன்மையாய் மாறி வருவதை அவன் அறிவான். அவனால் முடிந்த

தெல்லாம் அவனுக்காக ஒரு பிளாஸ்டிக் சீருடை தயாரித்துக் கொள்வதுதான்!..

மேல் மட்டத்தில் உள்ளவர்கள் அவனது எதோ ஒரு கண்டுபிடிப்பில் ஆர்வங்கொண்டு தங்கும், மூளை மையம் என்று அழைக்கப்படும் இந்த வீட்டில்தான் பௌதிகவியலாளன் நியூ மோரைக் காண முடியும் என்று முந்திய நாள் தலைவர் குறிப்பிட்டார்.

முன்னதாக நியூமோரைக் காணும் அர்ப னின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. இப்பௌதிகவியலான் ஏதோ ஒரு உயரமான சுவற்றால் சூழப்பட்டிருப்பது போல இருந்தது. யாருக்கும் அவனது புதிய முகவரி தெரியாது, அவனை எங்கு பார்க்க முடியும் என்று எவருக் கும் தெரியாது.

எல்லாம் தானாக உறுதிப்படுத்திக் கொண்ட அர்பனிடம் கூறியபடி, நியூமோரை வழிமறிக்க தனது காரில் காத்திருந்து எலும்பெல்லாம் சில்லிட்டுப் போனான் என்றால் அவனது சகாக் கள் என்ன கூறுவார்கள்? அவ்வப்பொழுது அர் பன் சுற்றிலும் பார்த்துக் கொண்டான். இது வரை ஆல்வா தனது தோற்றத்தைக் காட்ட வில்லை.

நியூமோரின் கோளவடிவ மொலேக், ஓசை யின்றி மூளை மைய நுழைவாசலுக்கு மிதந்ததை அர்பன் ஏறத்தாழ தவறவிட்டு விட்டான். கார் ஒருவித 'ஸ்ஸ்' என்ற ஓசையுடன் நின்ற பொ ழுது தான் அர்பன் கவனிக்கத் தொடங்கினான். காரை விட்டுக் குதித்து மூன்று தாவு தாவி கட்டிடத்தை அடைந்தான். மையத்தின் கவச

மிட்ட கதவை நியூமோர் திறந்த அதே நேரம் தூணுக்குப் பின்புறமிருந்து வெளியே தோன்றினான்.

அர்பன் முகத்தின் வெளிப்பாடு அவன் ஒரு சீரிய பேச்சுக்காக இருப்பதை நியூமோருக்குச் சொன்னது. ஆனால் எப்படியோ அதைத் தவிர்க்கவே முயன்றான்.

''உள்ளே எனக்கு அவசர வேலை இருக்கிறது. ஒருவகையில் நல்ல வசதியான நேரத்தில் சந்தித்துக் கொள்ளலாம்?''

''அந்நேரம் எப்பொழுது வருமென்று எனக்குத் தெரியாது. இனிமேலும் என்னால் காத்திருக்க முடியாது. மேலும் உன்னைப் பிடிப்பது என்பது இயலாத காரியம்.''

''மிகவும் நல்லது,'' நியூமோர் ஏற்றுக் கொண்டான். ''ஒருவகையில் நான் உனக்கு சில நிமிடங்களை ஒதுக்கத் தயாராக இருக்கிறேன்.'' அவன் தனது கைக்கடிகாரத்தை கவலையுடன் மேலோட்டமாகப் பார்த்தான். ''ஆனால் இங்கில்லை என்று நான் நினைக்கிறேன்...''

எந்த ஒரு காரணத்தைச் சொல்லியாவது நழுவிவிட நியூமோர் முயற்சிப்பானேயானால் அவன் உடலைப் பிடித்து நிறுத்தி விடுவதென அர்பன் அருகில் நின்றான்.

''சற்று தூரம் தள்ளி ஓர் அருமையான அருந்தகம் உள்ளது,'' அர்பனின் கையைப் பற்றியபடி பௌதிகவியலான் கூறினான்.

எவ்வளவு விரைவாக முடியுமோ அந்தளவுக்கு ஒரு பாதுகாப்பான இடத்திற்குச்

செல்வதற்காக அர்பன் மிகவும் விரைந்து நடந்தான்.

இருக்கைகளில் அவர்கள் அமர்ந்தபோது, ''என்னை எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று நியூமோர் கேட்டான்.

''நான் போய்க் கொண்டிருந்தேன். காரிலிருந்து நீ கீழே இறங்குவதை நான் பார்த்தேன்,'' என்று அர்பன் வலிந்து திட்டமின்மை போலப் பேசினான்.

குளிரில் வேதனையுடன் காணப்பட்ட அவன் முகத்தை நியூமோர் பார்த்தான். ஆனால் எந்த விமர்சனமும் செய்யாது நிறுத்திக்கொண்டான்.

''ஆல்வா உனக்கு மோசமான தொல்லை கொடுக்கிறானா?''

''அதைப்பற்றித்தான் நான் உன்னிடம் பேச விரும்பினேன்,'' என்றான் அர்பன்.

''நமது ஒப்பந்தத்தை நினைவில் வைத்திரு? சோதனை ஓராண்டுக்கு நீடிக்கும், நீ விரும்பினால் மேலும் நீடிக்கலாம், ஆனால் குறையக் கூடாது. இரண்டு மாதங்களே ஆகி இருக்கின்றன.''

''இன்று அறுபத்து நான்காம் நாள்.''

''வித்தியாசம் ஒன்றுமில்லை. இந்த காரியத்தில் நான் எனது பணம் முழுவதையும் முதலீடு செய்திருக்கிறேன் என்பதை நீ கட்டாயம் புரிந்த கொள்ள வேண்டும். சோதனையை நான் தடைப்படுத்துவேனாகில், அது நட்டத்தில் தான் முடியும். ஏன், வாழ்க்கை அவ்வளவு மோசமானதா? ஒன்றுமில்லாததற்கு நீ

'சூப்பர்மேன்' ஆகி விட்டாய்.''

''ஆல்வா மிகவும் விநோதமாக நடந்து கொள்கிறான். ஒரு விஷயம், ஆரம்பத்தில் அவன் என்னை — அதாவது அவனது உயிரியலின் மறுபாதியை — விட லிண்டாவிடம் தான் அதிக அக்கறை காட்டினான். உன்னால் விளக்க முடியுமா?''

''உண்மையிலேயே?'' தனது கண்ணாடியைக் கழற்றியபடி நியூமோர் ஆர்வத்தோடு கேட்டான்.

அர்பன் அவனிடம் விவரித்தான். நியூமோர் அநேக வினாக்களைக் கேட்டான், பிறகு சிந்தனையில் ஆழ்ந்தான்.

''நான் எதிர்பார்த்ததற்கும் மாறாக ஆல்வா மாறுபட வளர்ந்திருக்கிறானா?'' தனக்குத் தானே பேசுவதுபோல சொன்னான். ''ஓ... நான் புரிந்து கொண்டேன்!'' தனது விரல்களை மடக்கி மேசையின் மீது ஓங்கிக் குத்தினான். ''அதன் காரணம் என்னவென்றால் அவள் எல்லா நேரமும் உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாள். நீ உன்னைப் பற்றி நினைப்பதை விட அதிகமாக.''

மிகுந்த எச்சரிக்கையோடு அர்பன் அவனை உற்றுப் பார்த்தான்.

''லிண்டா உன்னிடம் ஏதாவது சொன்னாளா?'' நியூமோர் திடீரென்று கேட்டான்.

''எதைப் பற்றி?''

''என்னைப் பற்றி, ஆல்வாவைப் பற்றி?''

''நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதில்லை.''

''முன்னால்?''

''ஏன், லின்டாவுக்குத் தெரியுமா?''

''நான் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!'' நியூமோர் குரைத்தான்.

''நாங்கள் ஒருபோதும் அதை விவாதித்ததில்லை,'' தயக்கத்தோடு அர்பன் கூறினான்.

''மிகவும் நல்லது,'' நியூமோர் கூறினான். அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாகக் காணப்பட்டான். ''நீ என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாய்?''

''எல்லாவற்றையும் உள்ளபடி வைக்க நான் உன்னைக் கேட்க விரும்புகிறேன்.''

நியூமோர் கல் போல அமைதியாய் நின்றான்.

வலிந்து சிரித்தபடி, ''எனது முன்னைய குறைபாடுகளைத் திரும்பக் கொணர நான் ஒத்துக்கொள்கிறேன்,'' என்றான் அர்பன்.

''மேலும் அதை எப்படிச் செய்ய முடியும், நான் அதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்,'' அன்பார்வமற்ற குரலில் நியூமோர் கேட்டான்.

''அவனைக் கொல்.''

''நீ ஒரு குழந்தையைப் போலப் பேசுகிறாய்,'' குலுங்கியபடி நியூமோர் சொன்னான். ''ஒப்பந்தத்தில் நாம் கையெழுத்திட்ட போது நான் உனக்கு விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அதாவது நீங்கள் இரட்டையர் ஆனது தெளிவானபிறகு, ஆல்வாவைக் கொல்ல நினைப்பது உன்னைப் பாதிக் கொல்வதாகும், உனது ஒவ்

வொரு செல்லின் பாதியையும் எரிப்பது போலாகும்.''

அர்பன் தலைகுனிந்து காணப்பட்டான்.

''சற்று கவனமாக இரு. எல்லாமே நல்ல படியாக நடக்கும்,'' நியூமோர் தொடர்ந்து சொன்னான்.

''பகலும் இரவும் ஆல்வா என்னைப் பின் தொடர்ந்து வருகிறான். இது என் வாழ்வை நரகமாக்கி விட்டது.''

''ஏற்றுக் கொள்ளும்படி எவரும் உன்னைக் கட்டாயப்படுத்தவில்லை.''

''இப்படி இருக்கும் என்று நான் கற்பனை செய்யவில்லை. மேலும், பிறகு நீ சொன்னாய்...''

நியூமோர் தனது கைகடிகாரத்தை மேலோட்டமாகப் பார்த்தான்.

''அவனிடமிருந்த தகவலை எல்லாம் பெற்று திரும்ப என்னிடம் தரக்கூடாதா, நியூம்?'' அர்பன் கெஞ்சினான். ''உனக்கு ஏற்படும் எந்த இழப்பிற்கும் நான் பணம் தருகிறேன். நீ எந்தத் தொகை குறிப்பிட்டாலும். நான் எனது வாழ்நாள் முழுக்க பணியாற்றுவேன்...''

''ஆல்வா பிறகு அழிந்து விடுவான்,'' தனது தலையை ஆட்டியபடி நியூமோர் கூறினான்.

''நீ பிறிதொன்றை தயாரி.''

''என்னால் மற்றொரு ஆல்வாவை உருவாக்க முடியாது.''

''ஆக, நீ செய்ய மாட்டாயா?''

''என்னால் முடியாது!'' நியூமோர் . எழ முயன்றான்.

''ஆக, அப்படியா விஷயம்!'' சீற்றத்தால் அர்பனின் முகம் பழுப்பேறிப் போனது. ''பிறகு நீ எப்படியிருப்பாய் என்பதை நான் காட்டத்தான் போகிறேன். வேசி மகனே! ஒரு நாயை விட உனது கினியா பன்றியைச் சமாளிப்பது உனக்குப் பெரும்பாடாக இருக்கும்.''

''உரக்கக் கதற வேண்டாம்!'' என்று நியூமோர் கூறி 'உஸ்' என்றான்.

மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நான் கத்துவேன்! ஏன் கூடாது? எஞ்சிய நேரத்தில் நான் அமைதியாக இருப்பேன். எனது நரம்புகள் இரும்பு கம்பிகளைப் போல இருக்கின்றன!''

''முட்டாள்தனமாகப் பேசாதே. உன்னால் ஆல்வாவை மட்டுமே கவர முடியும்.''

''நியூம்... தயவு செய்து, நமது நட்பின் பேரால் கேட்கிறேன்... உனது மாளிகையை ஏன் எனது எலும்புகளில் கட்டுகிறாய்?''

''நீ பேராசைக்காரன்! உனது உணர்வுகளை நீ திரும்பப் பெற்றதும் நாம் பேசிக் கொள்ளலாம்,'' சொன்னான் நியூமோர். போவதற்கு எழுந்தான்.

சிறுத்தைப் புலியைப் போல மேசையைத் தாவிக் குதித்து அர்பன் அவனது கழுத்தைப் பிடித்து நிறுத்தினான். கண்ணாடி நொறுங்கியது, பெண்கள் அலற ஆரம்பித்தார்கள். ஒரு வெயிட்டர் அருந்தகத்தின் குறுக்காக ஓடினான்.

அவனது உதடுகளில் புன்னகை பளிச்சிட்டது. பெரு முயற்சியுடன் நியூமோர் அர்பன் பிடியிலிருந்து விடுத்துக் கொண்டான். அவனுக்கு ஜூடோ மிக நன்றாகத் தெரிந்திருந்தாலும், அர்பனுக்கு இணையாக அவனால் நீண்ட சச்சரவு செய்ய முடியாது. ஒரு நிமிடத்திற்குப் பிறகு அவன் தரையில் படுத்துக் கொண்டிருந்தான். அர்பன் அவனைத் தரையில் வீழ்த்தி தனது முழங்காலால் அழுத்திக் கொண்டிருந்தான்.

''நீ அதைச் செய்து விடுவாயா?'' அவன் கேட்டான், அவர்களைச் சுற்றி நின்ற கூட்டத்தைப் பற்றி சிறிது கூட கவலைப்படாமல்.

''என்னைப் போக விடு!'' நியூமோர் பெருமூச்சு விட்டான்.

''ஒரு பூனைக் குட்டியைப் போல உனது கழுத்தை நெரிப்பேன். அதற்குத் தேவையான சக்தி என்னிடமிருக்கிறது. அதற்கு உனக்கு நன்றி.''

''போலீசைக் கூப்பிடுங்கள்!'' என்று யாரோ இசிப்புக் குரலில் பேசினாள். ''அவன் அவனைக் கொன்று விடுவான். அவனைக் காப்பாற்றுங்கள்!''

ஆனால் முகங்கவிழ்ந்து படுத்திருக்கிற நியூமோருக்காக இடையிட்டு உதவ யாரும் முன்வரவில்லை. அர்பனின் உடற்பயிற்சியாளனுக்கான உடல்வாகு அச்சத்தையே வெளிப்படுத்தியது. அல்லது கூட்டத்திற்கு அத்தகைய ஒரு பார்வையை அவன் தந்தானா? முன்

வரிசையில் நின்ற மக்கள் பின்னுக்குத் தள்ளிப் போய் விட்டார்கள், பின்வரிசையில் நின்றவர் களைப் புண்படுத்திவிட்டு.

திடீரென்று, ஒரு வார்த்தை சொன்ன மாத்திரத்தில் கூட்டம் குறையத் தொடங்கி யது. ஒவ்வொருவரும் தங்களது இடத்திற்குச் சென்றார்கள். ஒருவர் மற்றவர் கண்ணில் படுவதைத் தவிர்த்துக் கொண்டார்கள்.

''பார்? நான் உனக்கு எவ்வளவு கடமைப் பட்டிருக்கிறேன். ஆகா?'' அர்பன் திரும்பவும் தனது எதிரியின் தொண்டையைப் பிடித்தான். ''நீ முடிவை ஏற்படுத்திக் கொள்ள போதிய நேரம் உனக்கு இருந்தது.''

''ஓ.கே.,'' எதிர்பாராதவிதமாக நியூமோர் சொன்னான். ''நீ நாசமாகப் போக, உன் னை முன்னைய நிலைக்கு நான் கொண்டு வருகிறேன். ஆல்வாவும் அழிக்கப்பட வேண் டும்.''

''உனது வார்த்தையை நீ காப்பாற்றுவாய் என்பதை நான் எங்ஙனம் அறிந்து கொள் வது?'' அர்பன் கேட்டான். அந்நேரத்தில் அங்கு நுழைந்து அவர்களுக்கு அருகில் வந்து இந்தக் கண்காட்சியை உற்று நோக்கிய மனிதன் மீது அவன் கண்களை நிமிர்த்தினான். அம்மனிதன் மூச்சுத் திணறி, ஒரு நாற்காலி மீது சாய்ந் தான்.

''என் வார்த்தை உனக்குக் கௌரவிக்கப் படும்.''

''அது மட்டும் போதாது.''

''நான் எழுந்து, நாகரிகமான மக்களைப் போல நாம் பேசுவோம்,'' நியூமோர் கெஞ்சினான். ''எந்தவகையிலும் நான் உனது கைகளில் தான்!''

அஞ்சிநின்ற வெய்ட்டரிடம் அர்பன் பணத்தைக் கொடுத்தான். பிறகு அவர்கள் வெளியே நடந்தார்கள்.

''இங்கு!'' அறையின் ஒரு மூலையை அர்பன் சுட்டிக்காட்டினான்.

தனது சகாவிற்கு அப்பால் பார்த்தபடி, ''நாம் நாளை தொடரலாம்,'' என்றான் நியூமோர்.

''அது விஷயத்திற்கு மிக முக்கியமானது.''

''உனது கார் பிளாஸ்டிக்கால் பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கிறதா?''

''ஆமாம். என்னால் பிளாஸ்டிக் துணிகள் கூட தயாரிக்க முடியுமானால் நான் உன்னைக் கவலைப்படுத்த வேண்டியதில்லை.''

''ஆக, இது தான் கவலை என்று கூறப் படுகிறது,'' தனது கழுத்தில் இருந்த கன்றிப் போன பெரிய காயத்தை விரலால் தடவியபடி ஏதோ சிந்தனையில் நியூமோர் கூறினான்.

''அது முக்கியமான விஷயமல்ல. இந்த உச்ச நடவடிக்கைகளுக்கு நீயாகவே என்னை ஓடத்துரத்தினாய்.''

''நாளை இன்ஸ்டியூட்டிற்கு வருவது நல்லது.''

''ஒருவரால் உள்ளே நுழைய முடிவது போல!''

''நான் அநுமதிச் சீட்டுத் தருவேன்.''

நியூமோர் காகிதக் கட்டை வெளியே எடுத்து, அதில் சில வார்த்தைகளை எழுதினான். பிறகு தாளைக் கிழித்து அர்பனிடம் கொடுத்தான். அவனும் அதன் வாசகங்களை கவனமாகப் படித்தான். திருப்தியுடன் தலையாட்டினான். அந்தக் காகிதத்தின் ஒரு மூளையில், கடிதம் கொண்டு வருபவனுக்கு கிட்டத்தட்ட எல்லாக் கதவுகளையும் திறந்து விட வேண்டும் எனப் பொறித்து இருப்பதை அறிந்தான்.

அந்தத் துண்டுத் தாளை மடித்துவைத்த அர்பனை கவனித்தபடி நியூமோர், ''இன்று எதையும் குடிக்க வேண்டாம். நாளைக் காலையும் வேண்டாம்,'' என்றான்.

''ஏன், தண்ணீரைக் கூட வா?''

''விஸ்கி பற்றி நான் குறிப்பிட்டேன்.''

''இரண்டு மாதங்களாய் நான் விஸ்கியை ருசி பார்க்கவே இல்லை. எதார்த்தமாக நான் அதன் வாசனையைக்கூட மறந்து விட்டேன்.''

''குடிப்பதில் நீ பெரிதும் விருப்பமுடையவன் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன்!''

''தேவை மறைந்து விட்டது. பொதுவாக, எனக்கு எந்த விருப்பமும் கிடையாது. மனம் போன போக்கில் நான் காரியமாற்றுகிறேன். இல்லையெனில் இங்கு இந்த மரத்தைப் போல தாவர வாழ்க்கை வாழ்ந்தேன்,''

என்று சொல்லி மரப்பட்டையின் தடித்த பகுதியைத் தட்டினான்.

''ஆனால் நீ எருதைப் போல வலுவுள்ள வனாக மாறியிருக்கிறாய்.''

''என்ன பயன்? நான் எல்லாரையும் போலவே வாழ விரும்புகிறேன். எல்லாரையும் போல இன்ப துன்பங்களை நுகர விரும்பு கிறேன். ஒரு கண்ணாடிக் குடுவைக்குள் இருக் கும் மீனைப் போல இருக்கிறேன். முனைப்பாக முன்வந்து பிறர் காரியங்களில் தலையிடுகிற ஒரு விநோத மீன். சில வேளைகளில் எனது குருதி மீனுடையதைப் போல குளிர்ச்சியாக இருப்பதாக உணர்கிறேன். ஓ! இந்தப் பேயு ருவிலிருந்து விடுதலை பெற்றால் நான் பெரிதும் மகிழ்ச்சியடைவேன்! உனக்குத் தெரியும்,'' அர் பன் நம்பிக்கையுடன் சிரித்தபடி கூறினான், ''ஆக இந்த இரண்டு மாதங்களில் அநேக விஷ யங்கள் நடந்தேறி விட்டன. லின்டாவை நான் பார்த்து பல காலமாகி விட்டது...''

''நீ இப்பொழுது அவளைக் காணலாம்,'' புதிரான பார்வையுடன் நியூமோர் கூறினான்.

''கடந்ததை மறப்போம், நியூம்,'' என்றான் அர்பன். ''ஒரு சோதனையில் நீ ஈடுபட்டிருக் கிறாய் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. நானும் ஒன்றைச் செய்கின்ற போது உலகைப் பற்றிய எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்... என்னையோ மற்றவர் களையோ என்னால் ஒதுக்க முடியாது. எல்லா நட்டத்தையும் பொருத்த மட்டில்... என்னிடம்

உள்ளது உன்னுடையது தான்.''

முன்னால் நிமிர்ந்து பார்த்தபடி நியூமோர், ''நான் ஈடுபட்டிருக்கவில்லை. உனது தவறு காரணமாக எனது சோதனை சேதமாகி விட்டது.''

''சோதனையா?'' அர்பன் திரும்பக் கேட்டான். ''இப்பொழுது அந்த சோதனை பற்றி ஒன்று அல்லது இரண்டு விஷயங்கள் தான் தெரியும்.''

''உன்னிடமிருந்து நான் எதையும் மறைக்கவில்லை. எனது கார்டுகளை நான் மேசையின் மீது போட்டு விட்டேன். நீ மறுத்திருக்கலாம்.''

''நீ உனது அட்டை முழுவதையும் மேசையின் மீது போடவில்லை, நியூமோர்,'' தனது தலையை அசைத்தபடி அர்பன் கூறினான். ''என்னிடம் கூறியதைவிட நீ லின்டாவிடம் அதிகமாக கூறியிருக்கிறாய்.''

நியூமோரின் முகம் நடுக்குற்றது. அவன் அதிகம் பேசினான் என்பதை அர்பன் உணர்ந்து கொண்டான்.

''இப்பொழுது நான் போகலாமா?'' பனை ஓலையைத் தள்ளியபடி நியூமோர் கேட்டான்.

தனது வழியிலிருந்து நகர்ந்தபடி அர்பன் கூறினான்: ''நாளை வரை. ஒரு நிமிடம் பொறு! நீ கப்பல் அறையிலுள்ள ஒதுக்கிடத்தைப் பெற போய்க் கொண்டிருக்கவில்லை, இல்லையா? கடலின் மறுபுறத்திற்கா, சொல்?''

‘‘பயப்பட வேண்டாம், நான் செய்ய மாட்டேன்,’’ என்றான் நியூமோர். அர்பன் அவனை நம்பினான்.

அருந்தகத்தை விட்டு அர்பன் மகிழ்ச்சி யோடு வெளியே வந்தான். திரும்பிப் பார்க்காமல் அவனது காருக்குச் சென்றான். அவனது தலைவிதியை நிர்ணயிக்கப் போவது போல வேண்டுமென்றே மெதுவாக நடந்து செல்வதைப் போல அவன் உணரவும் செய் தான்.

கார் உடனேயே கிளம்பியது.

தானியங்கி ஓட்டுநரை அர்பன் நிறுத்தினான். ஸ்டேரிங்கிற்குப் பின்னால் உட்கார்ந்து கொண் டான். முழுமையான சக்தியை பெற்றிருப்பதாக அவன் உணர்ந்தான். அவனையும் மற்ற எல்லா மக்களையும் பிரித்திருக்கின்ற திரை நாளை உருகத் தொடங்கி விடும்.

அர்பன் தனது சிந்தனைகளிலேயே முற்றி லும் மூழ்கிப் போய்விட்டான். பார்க்காம லேயே அவன் ஓட்டினான். இருப்பினும் இது எந்த உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் ஓட்டுநர் என்ற வகையிலான இவனது பணி, செயல்முறையில் சொல்வதானால், ஸ்டெ யரிங்கைத் திருப்புதற்கு மேலாகத் தேவைப்பட வில்லை. மனிதன் தானாகக் கார் ஓட்டிய காலம் மறைந்து விட்டது. இப்பொழுது இடஞ் சுட்டுகின்ற கருவி, முன்னால் உள்ள தடைகளையும் தடைகளுக்கான வாய்ப்பினையும் கூட —பக்கத்துத் தெருவிலிருந்து ஒரு கார் வெளியேவருவது, அல்லது ஒரு பூனை தெரு

வைக் கடந்து செல்வது போன்றவைகளை யும் — காட்டியது.

உண்மை, தானியங்கி ஓட்டுநரை அர்பன் நிறுத்தி விட்டான். ஆனால் அது கார் இறுதியாகப் போய்ச் சேர வேண்டிய இடம் குறித்து தகவல் பெறவில்லை என்பதும், அர் பன் போக வேண்டிய தெருக்களைத் தெரிவு செய்து கொள்வான் என்பதும் பொருள் படும். வண்டியின் வேகமும், தடயமும் எலெட்ரானிக் கருவிகளால் முடிவு செய்யப்பட்டன. இது தெருக்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. அர்பன் விரும்பினால் கூட அவனால் ஒரு சொறி நாயின் மீது காரை விட முடியாது. எந்தத் தடையாக, திடப்பொருளாக, நகரு வதாக இருந்தாலும் எலெட்ரானிக் கருவி காரை நிறுத்தி விடும்.

கார் உரிமையாளன் எவ்வளவு அவசரத் தில் இருந்தாலும் பரவாயில்லை. இன்ஃபிரா கண்ணின் வேலையே விபத்துகளைத் தவிர்ப் பது தான்.

ஒன்றுக்குப் பின் ஒன்றாகத் தெருக்களை அர்பன் கடந்து சென்ற போது, தெருக் களில் காணப்பட்ட முன்னைய காலத்திய கல்வைத்த வீடுகள், அந்தரத்தில் எடையற்றுக் காணப்பட்ட புதிய குவிமாடக் கட்டிடங்கள் — அர்பன் எதையும் கவனிக்கவில்லை. பெரு முயற்சியினால் பெற்ற அவனது வெற்றியாலும் நியூமோருடன் அவனது உரையாடலாலும் முழு அளவில் மகிழ்வின் எக்களிப்புக்குச்

சென்றான். அவனது ஆல்வாவை அழிப் பதனால், அவன் மீது அளவற்ற பணத்தையும், மூளை சக்தியையும் செலவிட்ட துயரத்தை நியூமோர் உணர்ந்தான் என்பதை அவன் அறிந் தான். இந்தத் தகவலை அர்பன் திரும்பப் பெற்றபோது, ஆல்வா மறைந்து போவான் என்பது தவிர்க்க முடியாதது. உண்மையில் அது மிகவும் வெட்கக் கேடானது. ஆனால் நியூமோருக்காக ஏன் தனது வாழ்வை அர்பன் பணயம் வைக்க வேண்டும்? நியூமோர் அவனை ஏமாற்றி ஒத்துக்கொள்ள வைத்து விட்டான். அது அவனுக்கு நாகரிகமானதன்று. அதற்கு இப்பொழுது அவன் விலைகொடுத்தாக வேண்டும்.

பெரிய ஏ.எஃப்.ஏ. டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு முன்னால் அர்பன் நிறுத்தினான். வேலை நேரம் முடியும் தறுவாயில் இருந்தது. பக்கவாட்டில் கூட்டம் அதிகமிருந்தது. காரை விட்டுப் போவதற்கு அர்பன் துணியவில்லை. கூட்டத்தில் கவனிக்க முடியாமலே ஆல்வா நெருங்க முடியும். திறந்த இடத்தில் இருப்பது மிகவும் பாதுகாப்பானது.

அவனது பயங்கள் அர்பன் மீது திரும்பலா யின. பக்கத்தில் சென்ற ஒவ்வொருவரையும் ஆல்வா என்று அஞ்சினான். விடுதலை பெறப் போகும் வேளையில், இப்பொழுது இறப்பது மிகவும் முட்டாள்தனமானது. சில அடிகள் எடுத்து வைக்க வேண்டிய தேவை மட்டு மே அவனுக்கிருந்தன, ஆனால் ஒவ்வொன்றும்

அழிவார்ந்ததாயிற்று. அண்மையில் சென்றவர் களை உற்றுப்பார்த்தான். அவர்களில் நடுத்தர வயதில் ஒருவன் சில பொட்டலங்களை விட ஒரு தடித்த கைப்பெட்டியைத் தூக்கிய வாறு தென்பட்டான். அவனது கண்கள் கவலைகளினால் அலுத்துப் போய்க் காணப் பட்டது. அவன் தனது சொந்த வாழ்க்கை யைப் பற்றி ஏறத்தாழ சிந்திப்பவனாகத் தோன்றவில்லை. நல்ல உடல்நலத்தோடு கூடிய ஓர் இளைஞன் விலையுயர்ந்த காரில் உட் கார்ந்து கொண்டிருப்பதைக் காண்பதற்கும், அவனோடு இடமாற்றிக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைவதிலும் எவ்வளவு வியப்படைந் திருப்பான்...

பத்து அடிகள் — ஒரு பாதாளத்தை கடந்து போடப்பட்ட பாதை போல. திடீரென்று அர்பன் ஓர் அறிமுகமான முகத்தைப் பார்த்தான். மொத்தத்தில், கடந்த இரண்டு மாதங்களாக அவனது நினைவு பிசகாததாகி விட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூட துல்லிதமாக அவனால் நினைவு கூர முடியும். அவனது மனத்தில் தெளிவில்லாது படிந்த ஓர் உருவம் திடீரென்று, திறமை மிக்க நாணயச் சேகரிப் பாளர் ஓர் அமிலத்தைத் தடவி பழைய நாணயத்தைத் தெளிவுபடுத்துவது போல, பளிச் சிட்டது. இது இருப்பினும், மகிழ்ச்சி யான நினைவுக்கே பொருந்தும். மகிழ்ச்சி யற்ற ஒன்று கலைந்து போனதாகத் தென்பட்டது.

தனது கண்களை கார் மீது முக்கியத்து

வமில்லாது பார்த்தபடி அப்பெண் விரைந்து நடந்தாள். அர்பன் சன்னலைத் தட்டினான். அவள் பின்பக்கமாகத் திரும்பினாள். அந்த மனிதன் அவளை அழைத்தானா? அவள் புரிந்து கொள்ளவில்லை... அவள் தனது தோள்களை குலுக்கிக்கொண்டாள், பிறகு திரும்பிவிட்டாள். ஆனால் கடைசி நிமிடத்தில் திருப்பு வளையத்திற்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த அந்த மனிதனின் இரங்கத்தக்க பார்வை அவளது கவனத்தைக் கவர்ந்தது. அவள் காரை நோக்கி வந்தாள். அவளது சட்டைக் கையில் ஏ.எஃப்.ஏ. அடையாளமிருந் தது. சென்ற ஆண்டு இப்பெண்ணை லின்டா அர்பனிடம் சுட்டிக்காட்டினாள். இப்பொழுது அவன் அவளை அடையாளம் கண்டு கொண் டான். அவள் லின்டாவுடன் பணி புரிந் தாள்.

அவனது வெறி பிடித்த அடையாளங்களை அவள் மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''வாசனைப் பொருள் பிரிவில் நீ பணியாற்று கிறாயா?'' தடித்த கண்ணாடி வழியாக அர் பன் உரக்கப் பேசினான்.

அப்பெண் தலையசைத்தாள்.

''லின்டா லானை உனக்குத் தெரியுமா?''

காரின் கதவைத் திறந்து விடக் கோருவது போல அவள் தனது காதுகளைச் சுட்டிக்காட்டி னாள்.

அவளது அடையாளங்களைக் கவனிக்காத வன் போல திரும்பவும் ''லின்டா!'' என்று உரக்கக் கத்தினான்.

இம்முறை அப்பெண் பெயரைத் தெரிந்து கொண்டு தலையாட்டினாள். அவளுக்காக இங்கு இவன் காத்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவளிடம் இவள் கூறுவாளா?

''எங்களது தலைவர் மிகவும் கண்டிப்பானவர்,'' அவள் உதட்டை அசைத்து சமாளிப்பதைப் பார்த்தான். ''அவர் அவளை வெளியே விடமாட்டார்.''

''நான் இங்கிருப்பதாக மட்டும் அவளிடம் கூறு போதும்,'' அவன் கேட்டுக் கொண்டான்.

''என்ன பெயரை அவளிடம் நான் சொல்வது?'' அப்பெண் கேட்டாள். அவளது கண்கள் வியப்பில் ஆழ்ந்திருந்தன.

''அவளிடம் — ஓர் அடிமை என்று கூறு.''

''என்ன?'' தான் சரியாகக் கேட்டுக் கொள்ளவில்லை என்று அவள் நினைத்தாள்.

அர்பன் திரும்பக் கூறினான். அப்பெண் டிபார்ட்மெண்டல் ஸ்டோரை நோக்கி நடந்தாள். ஸ்டோருக்குள் அவளை அழைத்துச் செல்லும் படிக்கட்டில் காலை வைப்பதற்கு முன்னதாக, அவள் திரும்பி அந்த மனிதனை கூர்ந்து கவனித்தாள்.

அர்பனின் இதயம் பலமாக அடித்துக் கொண்டிருந்தது — கடந்த சில வாரங்களாக அவன் மறந்து போன ஒருவித உணர்வு. சீக்கிரமாகவே லிண்டா ஸ்டோரை விட்டு வெளியே வந்தாள். அவளது சீருடைத் தொப்பி ஒருச்சாய்த்து இருந்தது. செம் பொன்னிறமான அவளது தலைமுடி நன்கு

வெளித் தெரிந்தது. அவள் செய்வதறியாது சுற்றும் முற்றும் பார்த்தாள். பிறகு அவள் அர்பனைப் பார்த்தாள். உடனே குறுக்காகக் கடந்து சென்றாள். ஒரு விலையுயர்ந்த காரில் அவன் உட்கார்ந்து கொண்டிருப் பதைப் பார்க்க அவள் பெரிதும் வியப்புற் றாள். அர்பன் கதவைத் திறந்து லிண்டாவை உள்ளே இழுத்தான். பிறகு உடனடியாகத் திரும்பவும் கதவைச் சாத்தி விட்டான்.

அவர்கள் நேற்றுத்தான் பிரிந்தவர்கள் போல தொடர்பற்று சில சொற்றொடர் களைப் பறிமாறிக் கொண்டார்கள். ஆனால் எதார்த்தத்தில்...

''நீ ஒரு பேதையாகத்தான் இருக்க வேண்டும் என என் சிநேகிதி சொன்னாள்,'' லிண்டா சிரித்தபடி சொன்னாள்.

''அவள் சரியாகக் கூட இருக்கலாம்,'' என்று பதிலளித்தான் அர்பன் கருத்தாழத் தோடு.

''நான் வருந்துகிறேன்,'' என்றாள் உள்ளம் நைவுறுகிறபடி. ''நான் மறந்து விட்டேன். நீ எப்படி இருக்கிறாய்?''

''நல்லபடியாக. மிகவும் நல்லபடியாக.''

லிண்டா மகிழ்ச்சியோடு சிரித்தாள்.

''ஆக, நீ ஒரு டாக்டரைப் பார்த்து விட் டாய்?'' அவன் சம்மதத்திற்குக் கூட எதிர் பார்த்துக் கொண்டிராமல் அவள் தொடர்ந்து பேசினாள். ''என்ன பண்டுவம் அவர் உனக்குத் தந்து கொண்டிருக்கிறார்?''

''இதுவும் அதுவும்.''

''அவரது உத்தரவுகளை நீ கடைப்பிடிக்கிறாயா?''

''ஓ... ஆமாம். நாளை, தொடக்கமாக முக்கியமான பயிற்சி தொடங்குகிறது.''

மேலும் வினாக்கள் கேட்காததற்காக அர்பன் லிண்டாவுக்கு நன்றியுடையவனாக இருந்தான். தனது நீண்ட வராமைக்காக சில மன்னிப்புகளை அவன் தயாராக வைத்திருந்தான். ஆனால் அவை தேவையற்றுப் போய் விட்டன.

''என்னிடம் கூறுவதற்கு நிறைய இருக்கின்றனவா?'' கவலையுடன் லிண்டா கேட்டாள்.

''ஏன்? தலைவர் கண்டிப்பானவரா?''

''உனக்கு எப்படித் தெரியும்? எப்பொழுதாவது புகார் செய்ததாக நான் நினைக்கவில்லை...''

''உன்னிடம் சொல்வதற்கு எனக்கு நிறைய விஷயங்கள் உள்ளன. நீ இல்லாமல் அவர்கள் உண்மையாகவே சமாளிக்க முடியாதா?''

''அவர்களால் முடியும் என்றே நான் நினைக்கிறேன்,'' லிண்டா ஐயத்துடன் கூறினாள்.

அர்பன் ஸ்டார்ட்டரை அழுத்தினான்.

''நீ எங்கு போக விரும்புகிறாய்?''

''நகரத்திற்கு வெளியே நாம் போகலாம்,'' லிண்டா ஆலோசனை கூறினாள். ''சுத்தமான காற்றைப் பெறலாம்!''

''அது மிகத் தொலைவு,'' அர்பன் தனது தலையை அசைத்தபடி கூறினான்.

''அப்படியே, உனக்கு எங்கே போக விருப்பமோ, அங்கு ஓட்டு.''

லிண்டாவைப் புறக்கணித்த தவறை அர்பன் உணர்ந்தான். நியான் விளக்கு விளம்பர வெளிச்சத்தில் அவளது முகத்தை உற்றுப்பார்த்தான். அவள் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தபடி அமர்ந்திருந்தாள். அவளது கை சுற்றும் வளையத்தின் மீது இருந்தது. அர்பன் அவளது கரிய மணிக்கட்டின் மீது தனது கன்னத்தை வைத்து அழுத்த ஏங்கினான்.

''ஜிப்சி,'' என்றான் அவன் மெதுவாக.

''ஆம், அன்பரே,'' பதிலாக பணிவோடு பேசினாள்.

''இந்த மாலைப் பொழுது நம்முடையது. நமது நிறைவுக்கு ஓட்டுவோம். பிறகு எங்காவது இரவுச் சாப்பாட்டை வைத்துக் கொள்வோம். இத்தாலியன் உணவகத்தைப் பற்றி நீ என்ன கூறுவாய்? அவர்கள் அங்கு அற்புதமான திரி இடியப்பம் வைத்திருக்கிறார்கள்,'' அவன் தனது பக்கவாட்டு பாக்கெட்டைத் தட்டிக் கொடுத்தபடி கூறினான்.

''நீ நிறையப் பணம் வைத்திருப்பவன் போல காணப்படுகிறாய், ஆர்பி. அதை எங்கு நீ பெற்றாய்? இது யாருடைய கார்?''

''இது என்னுடையது. இல்லை, ஒருவகையில் நம்முடையது.''

''ஆனால் முன்னதாகவே...''

''கவலை வேண்டாம்,'' அர்பன் அவளை இடைமறித்தான். ''நேர்மையான உழைப்பின்

மூலமாகப் பெற்றேன். போன மாதம் நான் ஒரு பெரும் குவியல் சம்பாதித்தேன்.'' நடமாட்டமுள்ள மையப் பகுதிக்கு காரை ஓட்டிச் சென்றான். பல வர்ணமுள்ள கவிகை மாடங்களைப் பார்த்தபடி சென்றான். ''ஒருவகையில் எனது உடல்நலக்குறைவோடு தொடர்பு கொண்டது.''

''இன்சூரன்ஸா?'' லின்டா கேட்டாள்.

''இல்லை. இந்த நலக்குறைவு நன்கு வேலை செய்ய வேண்டும் என்பதற்காக எனது மூளைக்கு ஏற்பட்டது. நீ வெஸ்டர்னை திருப்தி செய்தால், அவர்கள் நிறையப் பணம் தருகிறார்கள். ஒருவகையில் நான் எந்த வித பண்டுவமும் பார்த்துக் கொள்ளவில்லை, நீ என்ன நினைக்கிறாய்?''

''முட்டாள்தனமாகப் பேசாதே,'' என்றாள் லின்டா கூர்மையாக.

''இது ஒரு வேடிக்கை, ஜிப்ஸி.''

''இந்த மாதிரி வேடிக்கை மிகவும் கொடுமையானது.''

சிந்தனை இல்லாமல் அர்பன் ஓட்டினான். என்ன செய்வதென்று காருக்கே தெரியும். அது பரப்பைச் சாப்பிடுவது போல காணப்பட்டது.

''உனக்குப் பண்டுவ முறை நாளை தொடங்குகிறது என்பது நல்லது. பணத்தைப் பொருட்படுத்த வேண்டாம். இந்தக் கார் போன்ற பொம்மைகளுக்கு,'' இருக்கைக்குப் பக்கத்தில் இருந்த செர்ரி நிறத்திலான மூடியைத் தட்டிக் கொடுத்து, ''நான் ஆர்வமில்லாது இருக்கிறேன். இனிமேலும் தயவு

செய்து காணாமற்போய் விடாதே... ஏனென்றால் திரும்பவும் நீண்ட காலத்திற்கு நாம் பார்க்காமல் இருந்து விட்டால், நீ திரும்பவும்...''

''நாம் பிரிந்து போவதற்கான தேவையே இல்லை,'' அர்பன் மெதுவாகக் கூறினான். ''நீ அவ்வாறு சொன்னால், மேலும் ஒன்றுக்கும் பயன்படாதவன் தனது எல்லாவற்றையும் உனது காலடியில் வைக்கத் தயாராக இருக்கிறான்...''

அர்பன் தனக்கே உரிய பாணியில் தடுமாறி எப்படி முடிப்பது என்பதறியாது திகைத்தான். அவனுக்கு உதவி செய்யும் வகையில் லின்டா வலியச் சிரித்துக் கொண்டு, அது எல்லாவற்றையும் ஒரு கேலியாக மாற்றிவிட்டாள்.

அந்த மாலைப் பொழுதில் அவர்கள் தங்களது எதிர்காலம் பற்றி நெடிது விவாதித்தார்கள்.

''நாம் எங்காவது போகலாமா,'' என்றான் அர்பன். ''எங்காவது தொலை விடத்திற்கு.''

தனது கண்களைத் திறக்காமலேயே லின்டா, ''கடற்கரைக்கு,'' என்று முணுமுணுத்தாள்.

''ஆமாம். கடற்கரைக்கு,'' அர்பன் ஒத்துக் கூறினான். ''ஏதாவது பெட்ரோல் நிரப்பு நிலையத்தில் ஒரு மெக்கானிக்காகவோ, பழுது திருத்துபவனாகவோ நானே எனக்கு ஒரு வேலை தேடிக்கொள்ள வேண்டும்.''

லின்டா தனது கண்களைத் திறந்தாள்.

''இங்கு பார். இந்த பண்டுவம் என்னை

எப்படிப் பாதிக்கும் என்று எனக்குத் தெரியாது,'' அவளது கேள்விப் பார்வைக்கு பதில் கூறுவது போல அர்பன் விளக்கினான்.

புரிந்து கொண்டவளாய் லிண்டா தலையசைத்தாள்.

காரின் சன்னல்களுக்கு அப்பால் நகரம் எதார்த்தமற்றதாகவும், பெரும்பாலும் பேய்த் தோற்றம் கொண்டதாகவும் தென்பட்டது. தனது கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தால், அந்தத் தோற்றம் மறைந்து ஏதோ ஒரு கனவு போலத் தெரியும்.

''ஒரு வார காலத்திற்குள்ளாக நம்மால் போக முடியும்,'' நெடுஞ்சாலையினின்றும் காரை ஒரு நீண்ட குறுகிய தெருவிற்குள்ளாகத் திருப்பும்படி அர்பன் கூறினான்.

''நான் நாளையே போக முடியும். இவற்றால் எல்லாம் நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன்...''

லிண்டா பேச்சை நிறுத்திக் கொண்டாள். அவளது வாயின் இரு ஓரங்களிலும் இரண்டு மடிப்புகள் காணப்பட்டன. அப்பெண் போதுமான துணிவு பெற்றிருந்ததாலும், ஒரு முறையேனும் புகார் செய்யவில்லை, எனினும் அவளது வாழ்க்கை அவ்வளவு இலகுவானதல்ல என்று அர்பன் நினைத்தான்.

''நாளை என்னால் சமாளிக்க முடியாது. செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய உள்ளன,'' என்றான் அர்பன்.

''உனது பண்டுவத்தோடு சம்பந்தப்பட்டதா?''

அர்பன் தலையசைத்தான்.

ஏதோ ஒப்பந்தம் செய்து கொண்டதைப் போல அவர்கள் ஒருபோதும் நியூமோரின் பெயரை குறிப்பிட்டுக் கொள்ளவில்லை. இது அர்பனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. தனது உணர்ச்சிகளை வார்த்தைகளில் சொல்ல முடியாத நிலைமை லிண்டாவினுடையது. கற்பனை செய்யலாம் — ஒரு மனிதனுடைய மூளையின் ஆற்றலை கூரறிவற்றதாக்கும் பண்டுவம், மற்றவர்களைப் போல சாதாரண மனிதனாக்குவதாகும். மேதாவித்தனம் என்பது மூளையின் மன மாறாட்டம் என்பதைத் தவிர வேறில்லை என்றாகுமா? மற்ற மக்களிடமிருந்து மேதையை வேறுபடுத்திக் காட்டுவது எது? இந்த எண்ணங்கள்தான் என்று சொல்ல முடியாது, ஆனால் இவற்றின் நிழல்கள் லிண்டாவின் மனத்திலே ஊடாடின.

''இன்னும் சில நாட்களுக்கு நான் மிகவும் மும்முரமாக இருப்பேன்,'' என்ற அர்பன் தனது நெஞ்சுக்கு மேலுள்ள பாக்கெட்டில் ஒரு தாளைத் தொட்டுக் கொண்டிருந்தான்.

''ஓ.கே., நாம் பிறகு புறப்படலாம். வசந்த காலம் நோக்கி.''

காரின் முகப்புக்குப் பக்கமாக குழந்தைகளின் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு சென்றதால் கார் விரைந்து நின்றது. கார் தெருவிற்குள் திரும்புகின்ற போது, அதனது எல்லா இயக்கங்களும் கம்பியூட்டரால் முன்கூட்டியே ஒழுங்கு படுத்தப்பட்டிருந்ததால், காரின் வேகத்தால்

அவர்களது உயிர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் தவிர்க்க முடிந்தது.

''என்னிடம் கூறு, நீ எப்பொழுதாவது என்னைப் பற்றி நினைத்திருக்கிறாயா?'' அர்பன் திடீரென்று கேட்டான்.

''சில வேளைகளில்,'' லின்டா சிரித்தபடி பதில் சொன்னாள்.

''அடிக்கடியா?''

''நான் உன்னை அடிக்கடி நினைக்கும் தகுதியுள்ளவன் என்று நினையாதே...''

''தயவுசெய்து... என்னைப் பற்றி நினைக்கவே வேண்டாம் என முயல்...'' அர்பன் சீரிய முறையில் கூறினான்.

''தன்னடக்கம் என்பது ஒருவகையில் மிகச் சிறந்த குணம்.''

''நான் கேலி பேசவில்லை. என்னைப் பற்றி நினைக்க வேண்டாம். நமது சந்திப்புகளைப் பற்றியும் நினைக்க வேண்டாம்... குறைந்தது சில நாட்களுக்காவது.''

''ஏன்?'' வழக்கத்திற்கு மாறான கோரிக்கையைக் கேட்டு லின்டா இரைந்தாள். ''உன்னைப் பற்றி நான் நினைப்பதை நீ ஏன் தடுக்கிறாய்? நீ அதை விரும்பவில்லையா?''

''என்னால் விளக்க முடியாது. பிறகு... நாம் எப்போது ஒன்றாக இருப்போம். நீ ஏன் சிரிக்கிறாய்? நான் ஒரு வடிகட்டிய முட்டாளாக உனக்குத் தென்படுகிறேனா?''

''நீ ஒருவகையில் அப்படித்தான். தயவு செய்து உணர்ச்சிவயப்பட்டுப் போகாதே!'' அர்பனை ஒட்டிக்கொண்டு அவள் கூறினாள்.

''உண்மையில் ஒரு குரங்கு பற்றிய நீதிக்கதையை நான் நினைத்துப் பார்த்தேன். ஒரு மந்திரவாதி ஒரு நபரிடம் கூறினார்: 'உனது இளமையையும் நல்ல தோற்றத்தையும் நான் உனக்குத் திரும்பித் தரவேண்டும் என்று நீ விரும்புகிறாயா?' —'நான் விரும்புகிறேன்,' பதிலளித்தான் அந்த முதிய கூனிய மனிதன். 'இதற்கு நீ ஒரு நிபந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்,' என்றார் அம்மேதை. 'முன்கூட்டியே நான் ஒத்துக் கொள்கிறேன்.' —'ஓ! அது ஓர் இலகுவான நிபந்தனைதான். வெறுமனே ஒரு ஐந்து நிமிடங்களுக்கு நீ குரங்கு பற்றி நினைப்பதைத் தவிர்க்க வேண்டும். அவ்வளவுதான். அந்த ஐந்து நிமிடங்கள் உன்னை மாற்றுவதற்குத் தேவைப்படுகின்றன.' ''

''பிறகு என்ன நடந்தது?''

''அம்மேதை அவரது வாக்குறுதியை நிறைவேற்றியே தரவில்லை. அவரது நிபந்தனை நிறைவேற்றப்பட முடியாத ஒன்று.''

''பிறகு அம்மனிதன் கிழவனாகவும் கூனியும் இருந்தான்?''

''அது சரி.''

''இல்லை,'' அர்பன் கீச்சுக் குரலில் சொன்னான். ''நாம் நமது நினைவுகளை கட்டுப்படுத்த முடியாது. ஒரு மனிதனது நினைவுகளைப் பங்கு போட்டுக்கொள்வதை விட அவனைக் கொல்வது மிகவும் சுலபமானது.'' ஏதோ சந்திப்புத் திட்டத்தை நினைவு கூர்ந்தவன் போல அவன் தனது கைக்கடிகாரத்தை மேலோட்டமாகப் பார்த்தான்.

''நேரம் எப்படி ஓடுகிறது,'' என்றாள் லின் டா.

''எங்காவது சாப்பிடப் போகலாம்.''

''எனக்குப் பசியில்லை.''

''நானும் அப்படித்தான்,'' அர்பன் உறுதி செய்தான். ''நல்லது. பிறகு, நான் உன்னை எங்கு கூட்டிச் செல்ல? உனது விற்பனை நிலையத்திற்கு?''

''வீட்டிற்குக் கூட்டிச் செல். மிகவும் சுணங்கிவிட்டது.''

அர்பன் முகப்புப்பட்டையில் இருந்த சில பொத்தான்களை அழுத்தினான். தானியங்கி ஓட்டுநரை முடுக்கி விட்டுவிட்டு, மெத்தையில் நன்கு சாய்ந்து கொண்டான்.

நகரத்தின் மையப் பகுதியைக் கடந்த போது, தெருக்களில் போதுமான வெளிச்சம் இல்லாமலிருந்தது.

சாலையின் இருமருங்கிலும் உள்ள நிறைந்த வீடுகளைக் காண முடியவில்லை. வெளிச்சம் தரும் கும்பங்கள் மட்டும் விதிவிலக்கானவை. கதிரியக்கத்தின் வீச்சு கூடிக்கொண்டே வந்ததால் மக்கள் கட்டியிருந்த சன்னலற்ற வீடுகள் தற்போது ஆட்களின்றி காணப்பட்டன. இக்கட்டிடங்களின் சதுரப் பெட்டிகள் மிகவும் அருவருக்கத்தக்கதாகி விட்டன. ஆனால் எப் படியோ நகர அலுவலர்கள் அவற்றைக் கீழே சாய்க்காமல் விட்டு வைத்திருக்கிறார்கள். நகரத்தின் இந்த மாவட்டத்தில் விளம்பரங்கள் மிகக் குறைவு.

கார் நின்ற போது லின்டா கூறினாள்:

''போன தடவை நீ வீட்டிற்கு என்னை டாக்ஸியில் அழைத்து வந்தாய், நினைவிருக்கிற தா? இப்பொழுது நீ சொந்தக் கார் வைத் திருக்கிறாய்.''

பக்கத்து சன்னல் வழியாக இருளை அர் பன் உற்றுப்பார்த்தான்.

''நிச்சயமாக அது கட்டுறுதி வாய்ந்த குதிரைதான்,'' ஏற்றுக்கொள்வது போல லின் டா கூறினாள். ''எனக்கு என்ன பிடிக்கும் என் பது உனக்குத் தெரியுமா, ஆர்பி? நாம் கடற் கரைக்குப் போகும் பொழுது இது தனது கடுவெறுப்பைக் காட்டிவிடும். நான் உண்மை யாகவே தலைசுற்றும் வேகத்தை முயற்சிக்க விரும்புகிறேன், ஓ.கே.?''

அர்பன் தலையசைத்தான். அவனது பார் வை தெருப்பக்கம் சென்றது. அது முற்றி லும் வெறிச்சோடிக் காணப்பட்டது. ''இந்த விளக்கு மியூசியத்தைச் சேர்ந்தது,'' காற்றி னால் அடித்துச் செல்லப்பட்ட ஒரு பழைய விளக்கைப் பார்த்தபடி அவன் நினைத்தான். விளக்கின் வளையம் தொங்கிக் கொண்டிருந்தது. எப்பொழுதோ விழுந்த இலைகள் அதில் கிடந்தன, இப்பொழுது இருட்டில் அவை மீண்டும் மறைந்து விட்டன. முற்றிலும் குளிராக இருந்தது. எந்த நாளிலும் பனியை எதிர்பார்த்தபடி அவர்கள் இருந்தார்கள்.

''இது தனிச்சிறப்புடைய ஒரு கார். இது போன்ற ஒன்றை நான் பார்த்ததே இல்லை,'' என்றாள் லின்டா.

''நீ அதை விரும்புகிறாயா?'' சன்னல்

பக்கத்திலிருந்து திரும்பியபடி அர்பன் கேட்டான்.

''ஆமாம், மிகவும். ஆனால் ஒரே ஒரு விஷயம் — உள்புறம் ஏன் பிளாஸ்டிக்கால் பூசப்பட்டிருக்கிறது?'' சீராக இல்லாத அந்தப் பரப்பை லிண்டா தொட்டுப் பார்த்தாள். ''பார், இங்குமங்குமாக குமிழ் எழும்பி இருக்கிறது. இது கையால் செய்தது என்றே நினைக்கக் கூடும். மேலும் அதைத் தகுதியான நபர் செய்திருக்க முடியாது.''

''ஆமாம், இது ஒரு கடுமையான வேலை,'' அர்பன் ஒத்துக்கொண்டான்.

''அதை நாம் இழுப்போமா,'' பாட்டிலில் ஒட்டியிருக்கும் காகிதத்தைக் கிழிப்பது போன்ற சைகையுடன் லிண்டா ஆலோசனை கூறினாள்.

''பொறு. இந்த மாதிரி வேறு கார்களை நீ பார்க்கவில்லை. ஒருவகையில் இது தான் சமீப நாகரிகத்தின் பாற்பட்டது.''

''அதே நேரம் இது அலங்கோலமாகவும் இருக்கிறது.''

காரின் முன்புற விளக்குகள் வெளிச்சமான ஒளிக்கற்றையை முன்னால் வீசியன. அர்பன் வெளிச்சத்தை மாற்றினான். ஒளிக்கற்றை குறுகலாக வீச ஆரம்பித்தது.

''போகலாமென்று நான் நினைக்கிறேன்,'' சற்றுநேர இடைவெளிக்குப் பிறகு லிண்டா கூறி, அர்பனை எதிர்நோக்கிப் பார்த்தாள்.

அர்பன் கதவைத் திறந்து முதலாவதாக வெளியே வந்தான்.

“நீ வெளியே வாசல் வரை நான் உடன் வருகிறேன்,” என்றான்.

“நன்றி,” லின்டா மகிழ்ச்சியோடு தெரிவித்தாள். “இறுதியில் மறைமுகமாகச் செய்ய வேண்டாம் என்று நீ முடிவு செய்துவிட்டாய்.”

“ஓ, அதுவா...” அர்பன் முணுமுணுத்தான். அவனது புருவம் கருத்தது.

லின்டாவின் உயர்ந்த குதிகால் செருப்பு உரக்கச் சப்தமிட்டன. அர்பன் அவளுக்கு அருகில் நடந்தான். அமைதியாகச் செல்ல முயன்றான், விரைந்து செல்ல விரும்பவில்லை. காரின் பாதுகாப்பிலிருந்து வெளியேற எந்த உணர்வு அவனைத் துண்டியது என்று அவனுக்குத் தெரியாது. லின்டாவோடு ஓரிரு நிமிடங்கள் இருக்க வேண்டும் என்ற விருப்பமா? திரும்பவும் ஒரு சாதாரண மனிதனைப் போன்று இருக்க ஆசைப்பட்டானா, ஒருவன் தனது விருப்பங்களை மறைக்கவோ காட்டவோ வேண்டியதில்லை என்பது போல. “கதவுவரை, பிறகு திரும்பவும்,” அர்பன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

இரண்டு பெரிய நிழல்கள் சாலையைக் குறுக்காகக் கடந்து வீட்டின் சுவர் மீது ஏறின. ஒன்று ஒல்லியான உருவம், மற்றது வீறுமிக்கது, அகன்ற தோளையுடையது.

“பார், நமது நிழல்கள் நம்மைப் பிரிக்க விரும்பவில்லை,” லின்டா மெதுவாக நடந்தபடி, மெல்லக் கூறினாள். அவள் கண்கள் ஒளி சிந்தின. “நாம் இங்கிருந்து போய்விடுவோம்,

பிறகு அவை இங்கேயே சேர்ந்து ஒன்றாக இருக்கட்டும்.''

அவளது கதவுப் படியருகில் அவர்கள் வந்த வுடன் அர்பன் ''குட்நைட்'' என்றான்.

''நான் உன்னை எப்பொழுது திரும்பப் பார்ப்பது?''

''விரைவாகவே இருக்கும் என்று நான் நம்புகிறேன்.''

''நான் காத்துக் கொண்டிருப்பேன்.''

''நான் உன்னை தொலைபேசியில் அழைப் பேன்.''

லின்டா கையை அலைத்து விட்டு பாதை வழியாக நுழைந்தாள்.

திரும்பவும் மூன்று எட்டு அர்பன் வைப் பதற்குள்ளாகவே ஒரு நிழல் சுவரிலிருந்து பிரிந்து விட்டது. ஏதுமில்லாதது போல அது தோன்றியது. மேலும் அது கவனமாகவும் ஓசை யின்றியும் நகர்ந்தது. ஆல்வாவால் மட்டுமே, கீழே விழுந்த இலைகள் ஓசை எழும்பாத வாறு, இப்படி நகர முடியும். ஆல்வா, இவ னது இரண்டாவது பகுதி, இவனது துயரங் களின், அக்கறைகளின், கவனிப்புகளின் சங்க மம், எதிர் துகள்களின் ஓர் அரிய மேகம், அர்பனின் பகுதியாகிய அது அவனை அழிக்கும் எதிரி கூட.

அந்த உருவம் மெதுவாக, ஆனால் வசப்படாதபடி முன்னேறி வந்தது, தலைவிதி போல வந்தது. இருப்பினும் அர்பன் விதியில் நம்பிக்கை உடையவனல்ல. இப்பொழுது அவன் கடைசியாக ஆல்வாவைச் சந்தித்ததுமே,

முன்பின் கேட்டறியாத இந்தச் சோதனைக்கு இவனைச் சம்மதிக்க வைத்த பொழுது நியூ மோர் இவனிடம் வாக்குறுதி தந்த, வீணாக எதற்காக இவ்வளவு காலமும் துரத்திச் செல்லப்பட்டானோ, அந்த அமைதியை அவனிடத்திலேயே கண்டு கொண்டான். அவனது மூளை தெளிவாகவும் திறமையாகவும் வேலை செய்தது. ஆல்வாவினுடைய உச்ச அளவு வேகம் மணிக்கு மூன்று மைல்களாகும். இது நல்லது. ஆனால் அந்த வேக அளவை எந்தவகையிலும் அர்பனால் தாண்ட முடியாது. அது மோசமானது இருப்பினும் இதில் மிகவும் மோசமானது மிக முக்கிய இடத்தில், அதாவது அர்பனுக்கும் காருக்கும் இடையில் ஆல்வா தானாகவே நின்றதாகும்.

ஆல்வாவிற்கு ஏய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது வரவேற்கக் கூடிய செய்தியல்ல.

''அவன் ஏதோ தொலைதூரக் கட்டுப்பாட்டில் இருப்பது போல,'' என்பது அர்பனின் மனத்தில் பளிச்சிட்டது.

கார் பிளாஸ்டிக்கால் பாதுகாக்கப்பட்டிருப்பதே இவனுக்குக் கடைக்காப்பு. ஆனால் எப்படி அவனால் அதைச் சென்றடைய முடியும்?

அவர்களது வேக அளவுகள் ஒருமித்து இருந்தாலும் ஆல்வாவால் அவனைப் பிடித்து விட முடியும். சோதனைக்கு முன்பாக அர்பனிடம் நியூமோர் பாதுகாப்புக்கு உத்திரவாதம் தந்தான். ஆனால் அவனை ஏமாற்றிவிட்

டான். ஆமாம், அவனை அவன் வஞ்சனை யாக ஏமாற்றிவிட்டான்.

சாவதற்கு முன்பாக, மூழ்கிக் கொண்டிருக் கும் மனிதன் தனது வாழ்க்கை முழுவதையும் சில நொடிகளில் நினைவு கூர்வான் என கூறு வார்கள். அர்பனின் உள்மனத்தில், இருப்பினும், அவனது வாழ்க்கை பற்றி எந்தவிதமான படக் காட்சிகளும் பிரதிபலிக்கவில்லை. அவனது நினைவு ஒரு தேடும் விளக்கைப் போல, அவ னும் ஆல்வாவும் 'முடுக்கி விடப்படுவதற்குச்' சற்று முன்னர் நியூமோரிடம் பேசிய உரையா டல் பளிச்சிட்டது.

நியூமோர் கூறினான்: ''எல்லாவிதமான சோதனைகளிலும் நோக்கங்களிலும் ஆல்வா வால் உனக்கு எந்த ஆபத்தும் இல்லை. அவ னது அதிக அளவு வேகமே...''

''ஆனால் எனது வேகம் அதே தானே!''

''சரியாக!'' தனது அரிய பல் வரிசையைக் காட்டியபடி நியூமோர் சிரித்தான். ''நீயாவது ஓர் என்ஜினியர். நீயாகவே முடிவு செய்: ஒருவன் மற்றவனைத் துரத்துகிறான். இருவருக் குமே ஒரே வேகம். துரத்திச் செல்பவன் தனது எதிரியை எப்பொழுதாவது பிடிக்க முடியுமா?''

நியூமோரின் விவாதம் நிறைவைத் தரு வதாகவே இருந்தது. ஆனாலும் அப்பொழுது தான் அர்பன் அதில் ஏதோ கோளாறு என்று எண்ணினான்.

''நீ கூறுவது திறந்த வெளியில் நடந்தால்

சரியாக இருக்கும். ஆனால் ஒரு நகரத்தில்?''

''அதில் ஒன்றும் வித்தியாசம் இருக்காது,'' நியூமோர் சொன்னான். ''நீ அவனிடமிருந்து தெரு நெடுகிலும் ஓடுவாய், அவ்வளவுதான். மேலும் ஓட வேண்டிய அவசியமில்லை, வெறு மனே நடந்து போனால் போதும், ஆல்வா உன்னைத் தொடர்ந்து வருவான். உங்களுக்கிடையே உள்ள தொலைவு வித்தியாசம் மாறாதிருக்கும்.''

''மேலும் எந்த திசையில் நான் செல்ல வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ளலாமா?''

''நீ எப்படி விரும்புகிறாயோ, அப்படி. உனக்கு லட்சக் கணக்கான வாய்ப்புகள் உள்ளன. நகரும் பாதையில் நீ செல்லலாம். நீ சுரங்க நிலையத்திற்குச் சென்று, ஒரு ரயிலைப் பிடித்துப் போகலாம். இறுதியாக, நீ பிளாஸ்டிக்கால் பாதுகாக்கப்பட்ட உனது வீட்டை அடையலாம்.'' நியூமோர் பிளாஸ்டிக்கின் பணியை எடுத்துச் சொன்னான். ''அதிலிருந்து ஒரு பாதுகாப்புக் கவசத்தை உனக்காக தயாரித்துக் கொள்ள முடியாது என்பது பரிதாபத்திற்கு உரியது. பிறகு விவாதிப்பதற்கு எதுவுமே இல்லை.''

ஆல்வாவிடமிருந்து பிரிந்து நடக்க ஆரம்பித்ததுமே அர்பனின் மனத்தில் இந்த உரையாடல் பளிச்சிட்டது. பின்னால் வருபவன் இன்னமும் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தான். அதே வேளை, நேரத்தையும், தொலைவையும் பெறுவதற்காக அர்பன் படுவேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தான். ஆனால் இன்

னமும் அதிக வேகத்தில் நடக்க அவன் முயன்ற போது, எலாஸ்டிக் அலைபோல ஒன்று அவனது நெஞ்சைத் தாக்கி அவனை நிற்கவைத்தது. அவனைத் தடை செய்கின்ற மண்டலம் மிக்க ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது.

...கணித விஞ்ஞானத்தில், என்ஜினியர் அர்பன் தெரிந்த நிலையில் உள்ளவனாக இல்லை. அவன் அதை "வறட்டு கொள்கைவாதிகளுக்கு" விட்டுவிட்டான். அவன் தன்னை ஒரு பரிசோதனையாளன் என்பதில் பெருமைப்பட்டான்.

ஆல்வா விஷயத்தில் அது அழிவுக்குரியதாக நிரூபிக்கப்பட்டு விட்டது. துரத்தும் கொள்கையில் அர்பன் அதிக நாட்டமுடையவனாக இல்லை. இக்கொள்கையோ பேரில்லாத ஒரு கணக்கியல் மேதையால் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே வளர்ச்சி கண்டு, இப்பொழுது விண்வெளிப் பயணங்களில் பயன்படுத்தப் படுகிறது. இந்தக் கொள்கை கூறுவதாவது, இரு முனைகள் ஒரே வேகத்தில் செல்லுமானால் முதலாவதை இரண்டாவது பின்பற்றிச் சென்று உறுதியாக எட்டிப் பிடித்து விடும் என்பதாகும். தேவைப்படும் ஒரே நிபந்தனையாவது ஒரு வரையறுத்த பரப்புக்குள் அவை இயங்க வேண்டும். இது ஒருவகையில் தன் விளக்க நிபந்தனைதான். மற்ற வகையில் தொடரப்படும் பொருள், தொடரும் பொருளிலிருந்து, ஒரே நேர் கோட்டில் செல்லுமானால் பிடிபடாமல் முடிவின்மையில் செல்லக் கூடும். ஒரு வரையறுத்த சுற்று வட்டகைக்குள் இந்தத் தொடருதல் தொடருமானால்

அதன் நிலையே வேறு. எல்லை வரையறையை விட்டு வெளியேற பலியாள் அனுமதிக்கப் பட மாட்டான். இப்போதோ, பிறகோ ஒரு வளையத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வளைவிலும், துரத்துபவன் அதற்கேற்ப தனது பாதையையும் மாற்றிக் கொண்டு, வேட்டைப் பொருளுக்கு மிகமிக அருகில் வந்துவிடுவான். மூலைகளை வெட்டிக் கொள்வதன் மூலம் இது நடைபெறும். துரத் தப்படுபவன் தனது பாதையை இடது, வல தாக மாற்றத் தொடங்குவானானால் இது தவிர்க்க முடியாததாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேற்ற வாய்பாடு விவாதத் திற்கப்பாற்பட்டது. அர்பனுக்கு மிக மோசமான துயரநிலை...

அந்த மறக்க முடியாத மாலை வேலை, எலெட்ரானிக் இசை நிகழ்ச்சிக்குப் பிறகு துரத்தும் கொள்கை பற்றி அறிந்து கொள்ளவும், நியூமோர் தன்னை ஏமாற்றி விட்டதாகவும் அவன் உணர்ந்தான். நியூமோரின் குடிவெறி உணர்ச்சி வெளிப்பாடு பற்றிய லிண்டாவின் கதை காய்ச்சிய இரும்பாய் துன்பத்தைத் தந்தது. அவன் ஒரு கினியா பன்றியாக இருந்திருந்தால் தான், எல்லாமே முடிந்திருக்கும். மேலும், நியூமோர் திரும்பவும் உறுதி மொழி தந்ததற்கு மாறாக, தேடுதல் பற்றிய வினாவிற்குப் பெரும்பாலும் கவலையே அடைந்தான். மா தகவல் மையத்தில் அவன் ஒரு விசாரணை மேற்கொண்டான். சில நிமிடங் களுக்குப் பிறகு, சம்பந்தப்பட்ட வாய்பாடுகள்

அர்பனது திரையில் பளிச்சிட்டன...

''விரைந்து, விரைந்து,'' மையத்தை அவன் துரிதப்படுத்தினான். அவனது மனம் மிக விரைந்து செயல்பட்டது. தேற்ற வாய்பாட்டின் முக்கிய நோக்கம் அவனுக்கு மிக நன்றாக வே, கணக்கீடுகள் பாதி முடிவதற்குள்ளாகவே, விளங்கின. முன்னர் ஒரு மாதம் கஷ்டப்பட்டு கற்க வேண்டியதை அவனால் இப்பொழுது ஒரு நிமிடத்தில் கற்க முடிந்தது.

தனது புதிய அறிவுத் திறமைக்காக என்ன விலை கொடுக்க வேண்டியதிருக்கும் என் பதையும் அவன் விரைவாகவே புரிந்துகொண் டான்.

''அவன் என்னை எட்டிப் பிடித்து விடுவான்... அவன் பிடித்து!'' வேறெதுவும் அவனுக்கு ஆர் வமூட்டவில்லை. ஏமாற்றத்தில் அர்பன் தனது கையால் கட்டுப்பாட்டு மையத்தை ஓங்கிக் குத்தினான். கணக்குத் தகவலைத் தந்துகொண் டிருந்த எந்திரக் குரல் பாதி வார்த்தையிலே நின்றுவிட்டது. அடையாளங்கள் திரையில் உருகி ஓடின. வீடியோபோன் பார்க்க முடியாத கண் ணாக மாறியது.

''அவனது வாக்குறுதிக்குப் போதுமானது...'' என்று அந்த மாலையில் கவலையுடன் அர்பன் நினைத்தான்.

...அவனால் இன்னமும் நியூமோரின் ஆர்வ மூட்டும் குரலைக் கேட்க முடிந்தது:

''உனக்குத் தேவையானதெல்லாம் கவனமாக இருப்பது தான். இது ஆல்வாவின் முகத்துக்கு நேராக ஓடிச் செல்லக் கூடாது என்பதாகும்.

அப்படியே நீ போனால் அதுவே உனக்கு அழிவாகி விடும். இல்லையெனில் மொத்தத்தில் ஒரு பயனும் இல்லை.'' அவன் மேலும் தொடர்ந்தான்: ''நீயாகவே எண்ணிப்பார்ப்பது அதிர்ஷ்டவசமானது — நீ உனது எல்லாவித துயரங்களினின்றும் விடுபடுவதற்கு எதுவும் தர வேண்டியதில்லை. எவ்வளவு கேட்பது தேவை யாக எனக்குப் படுகிறதோ அந்தத் தொகை யை பின்னர் இந்த இன்பத்திற்காக மக்கள் என்னிடம் தந்து கொண்டிருப்பார்கள்.''

''ஆக, இதை மிகப் பெருமளவில் தயாரிக்க நீ திட்டமிட்டிருக்கிறாய்? மனித இனத்தின் ரட்சகராகப் போகிறாய்?''

''பிறகு ஏன் கூடாது?''

''இது எவ்வளவு விரைவாக நடக்கும்?''

''வெகு விரைவில் என்று நான் நம்புகிறேன். செய்ய வேண்டியிருப்பதெல்லாம் செலவைக் குறைப்பதுதான். ஆல்வாவை ஒரு நிலைப் படுத்த வேண்டும். இந்த முதல் திரிபு எனக்கு மிகப் பெரும் செலவாகிறது. ஒரே வார்த்தை யில், நீ தனிமைப்பட்டுப் போகப் போவதில் லை.''

''ஏற்கெனவே நீ தொடங்கி விட்டாய் என்று நான் நினைக்கிறேன்,'' எனக் கேட் டான் அர்பன். இதற்குள்ளாக அவன் தனது நண்பனுடைய குணநலத்தை ஓரளவு புரிந்து கொண்டிருந்தான்.

''துரதிரஷ்டவசமாக இன்னமும் இல்லை,'' தனது தலையை துயரத்துடன் அசைத்தபடி நியூமோர் கூறினான்.

''பணம் இல்லையா?''

''ஓ... பணம் தான் என்னை வருத்தும் கடைசிப் பொருள்.''

''ஆனால் உனது பூர்வீகச் சொத்து முழுவதையும் செலவு செய்துவிட்டாயா?''

''அற்ப விஷயம். போதுமான பணப் பைகளுடன், தேய்ந்து இற்றுப் போன நரம்புகளுடன் உள்ளவர்கள் எனக்குக் கடன் கொடுப்பதில் மிக்க மகிழ்ச்சியடைவார்கள். கனிப்பொருள் நீரூற்றைப் போல, நீர்ப் பண்டுவம் மற்றும் இத்தகைய அரைகுறை வைத்தியம் செய்யாமல், நான் முற்றிலுமாக குணப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இதுவரை நரம்புக் கோளாறுகளிலிருந்து விடுபடுவது எப்படி என்று மக்கள் அறிந்து கொள்ள வில்லை...''

''அவர்கள் அறியவில்லையா?'' அர்பன் சந்தேகத்தோடு கேட்டான்.

''அவர்கள் அறியவில்லை, மேலும் அறிந்து கொள்ளவும் முடியாது. நான் கூறுவதைக் கேள். அதிகபட்சமாக அவர்கள் வியாதியை அங்கத்திற்குள்ளாக எங்காவது ஆழப்பதிந்து போகும். இது விஷயங்களை இன்னும் மோசமாக்குகிறது. நான் முற்றாக வியாதியை குணப் படுத்துவேன். நான் அவனிடமிருந்து அதை எடுத்து விட்டேன். அதன் இயல்பு பற்றி எனக்கு எந்த எண்ணமும் இல்லை. வெளிப்படையாகச் சொல்வதானால், இது சிறிது கூட எனக்குச் சம்பந்தப்பட்டதில்லை. ஒரு கரும்பலகையில் கண்ணாம்பு எழுத்தை அவர்கள் அழிப்பதைப்போல

நான் வெறுமனே வியாதியை மறைத்து விடுகிறேன்.''

''கரும்பலகையில் எழுதப்பட்ட மூல எழுத்தைத் திரும்பப் பெற வேண்டும் என யாராவது விரும்பினால் என்ன ஆவது?''

''ஏன் யாரும் விரும்புகிறான் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை.''

''எந்தவகையிலாவது அவன் விரும்பினால் என்ன ஆவது?'' அர்பன் திரும்பக் கேட்டான்.

''இந்த பிரச்சினை பற்றி நான் இன்னமும் சிந்திக்கவில்லை.''

''ஆனால் அது ஒன்றும் கஷ்டமானதல்ல, நீ என்ன நினைக்கிறாய்?''

''அப்படித்தான் நம்புகிறேன்.''

நியூமோரின் தற்புகழ்ச்சிப் போக்கினை அறிந்த அர்பன், கணக்கற்ற கடன் என்ற அவனது வார்த்தைகளை அவ்வளவு நம்பிக்கையோடு எடுத்துக் கொள்ளவில்லை. இந்த விவகாரத்தில் புகழ்பெற்ற பயோபௌதிக வியலாளர் புகழ்ச்சியாக எதையும் கூறிவில்லை என்பதை அவன் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் இருந்தது. அர்பன் உரக்கப் பேசினான்:

''பணத்தைச் சுலபமாகப் பெற முடியுமென்றால், பிறகு ஏன் நீ ஆல்வா இரண்டு, மூன்று என்று கணக்கில்லாமல் வேலையைத் தொடங்கக் கூடாது?''

''எனக்குத் தகவல் தேவைப்படுகிறது.''

''எந்த மாதிரியான தகவல்?''

''அர்பன் என்ற பெயர் கொண்ட என்ஜினியருடன் ஆல்வா ஒன்றுக்குமிடையே நடந்த

ஒத்திசைந்த செயல் பற்றிய தகவல். அது இல்லாமல் மேற்கொண்டு என்னால் தொடர முடியாது.''

''ஏன் முன்கூட்டியே இதை நீ சொல்லவில்லை?''

''ஏன் நான் கூற வேண்டும்?'' ஒரு குலுக்கலுடன் நியூமோர் கூறினான். ''அது உனக்குச் சம்பந்தமுடையதல்ல.''

''நான் அதை விரும்புகிறேன்! எனது இரத்த அழுத்தம், வெப்பநிலை போன்றவைகளைப் பற்றி கூறுவதை நான் வெறுக்கிறேன். நான் அப்படிச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவாயா?''

''உண்மையாக இல்லை. நான் இங்கு பயோரிசப்டர் வைத்திருக்கிறேன்,'' ஒரு பெரிய அமைப்பைத் தொட்டுக் காட்டியபடி நியூமோர் விளக்கினான். ''உன்னைப் பற்றி நான் அறிய விரும்பும் எல்லாவற்றையும் இது எனக்குச் சொல்லி விடும். உண்மையில், உன்னைப் பற்றி நீயே என்னிடம் சொல்லாததை விட அதிகமாக...''

காணமுடியாத நூலால் அவனோடு ஆல்வா கட்டப்பட்டிருப்பது போல காணப்பட்டது. அர்பன் பக்கவாட்டிற்கு வந்துமே, ஆல்வா தனது கண் மாறாட்ட நடவடிக்கையை திரும்பச் செய்தான். எல்லா நேரமும் பின்னால் திரும்பிப் பார்ப்பதிலேயே அர்பன் விரைவாகச் சென்று கொண்டிருந்தான். துன்பம் தரத்தக்க வகையில் பிரபலமான வட்டமான தோள்களைக்

கொண்ட உருவம் அவனது அடிகளைப் பின்பற்றியது. கண்ணாடியில் அந்த முகத்தை கணக்கற்ற முறை பார்த்திருக்கிறான்... ''நான் என்னிடமிருந்து ஓடிக் கொண்டிருக்கிறேன். ஆனால் இது சாத்தியமா? ஒருவன் தன்னிடமிருந்தே ஓடுவது முடியுமா?'' ஒரு திடீர் சிந்தனை அவனிடத்திலே தோன்றியது.

அவனுக்குப் பின்னால் வெகு தொலைவில் கார் நின்று கொண்டிருந்தது. அதன் கருத்த நாற்கோண வடிவம் எண்ணெய்ப் பசைபோல அலையும் விளக்கொளியில் மினுமினுத்தது. அதே வேளை குறுகிய முகப்பு ஒளி சகதிபடிந்த பாதையில் மந்தமாகப் படிந்து கொண்டிருந்தது. சுற்றிலும் யாருமில்லை...

அவனது ஒவ்வொரு அடியும் அவனை பிளாஸ்டிக் ஒட்டப்பட்ட காரின் பாதுகாப்பிலிருந்து பின்னுக்குத் தள்ளியது. ஆனால் திரும்புவது என்பது ஆல்வாவோடு மோதுவது என்பதாகும். நகரும் பாதைகள் நின்று போய் இருந்தன. அது மிகவும் காலந்தாழ்ந்து விட்டது. அவனது ஒரே நம்பிக்கை சுரங்கப் பாதைதான்.

லின்டா வசித்த அந்தத் தெரு எவ்வளவு நீளமானது என்பதை அர்பன் ஒருபோதும் முன்னர் நினைத்ததில்லை. அல்லது அது அவ்வாறு தோன்றுவதற்குக் காரணம் அண்மையில் அவன் இந்த அளவுக்கு நடக்காததுமாகும்.

அர்பன் நடுங்கினான். ஓடிவிட முயன்றான்.

ஆனால் திடீரென்று ஒரு துள்ளும் அலை அவனது முகத்தில் அடித்தது. ஒரு நிமிடம் அவனை நிறுத்துமளவிற்கு அதன் வேகம் இருந்தது. இந்நிறுத்தம் மூன்று அல்லது நான்கு அரிய மீட்டர்களைக் கேட்டு விட்டது. ஆல்வா இப்பொழுது மிகவும் நெருங்கி விட்டான். ஒரு தெரு விளக்கின் வெளிச்ச வட்டத்திற்குள் அவன் நுழைந்த போது அவனது ஒவ்வொரு விவரமும் தெளி வாகக் காண முடிந்தது. ''அவன் சாவைப் போல வெளிறிப்போயிருக்கிறான்,'' என்று அர் பன் நினைத்தான். ''லின்டா கலக்கமுற்றதில் வியப்பில்லை. இங்கு தான் நியூமோர் தவறு தலாக எதையாவது கணக்கிட்டு இருக்க வேண் டும்...''

குறைந்தது அந்தத் தெருவாவது அம்பைப் போல நேராகச் சென்றது நல்லதாய்ப் போ யிற்று. எந்தத் திருப்பமும் ஆல்வாவின் கைக்குச் சேர்த்து விடும்: அவனால் மூலைகளை சுலபமாக வெட்டி வர முடியும். ஒரு கற் சுவர், அளவிட முடியாத இந்த மேகத்திற்கு ஒரு தடையே அல்ல. அது இவனைப் போல, மனிதத் தோற்றத்தில் காணப்பட் டது.

அவர்கள் மேன்மேலும் நடக்கவியலும். ஆனால் அர்பன் தனது சக்தியை இழந்தது போல உணர்ந்தான். நகரத்தின் பாறைக் காட்டில் அவன் கண்ணிவைக்கப்பட்டுள்ளான். அந்தக் கண்ணியின் சாவி நியூமோரால் ஒளித்து வைக்கப்பட்டுள்ளது.

அவனது இதயம் மெதுவாகவும், வலியுடனும் அடித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு துடிப்பும் அவனது விலாவெலும்புக் கூட்டைத் தாக்கியது. அது அறிந்த உணர்வுதான். ஆனால் அதை மறந்து விட அவனுக்கு நேரமிருந்தது. இதைப் புரிந்து கொள்வதற்கு அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தது. அவன் பயந்து விட்டான்! அவன் துடிதுடித்துப் போனான். கடந்த இரண்டு மாதங்களில் நடக்காதது நடந்து விட்டது. இங்கும் கூட நியூமோர் அவனை ஏமாற்றிவிட்டான்!..

அமைதிப்படுத்திக் கொள்ள தன்னால் முயன்றதை அர்பன் செய்தான். அவனது போராட்டம் அவனைத் துரத்துபவனுக்குத்தான் உதவி செய்தது. உண்மையில், ஆல்வா கிளர்ச்சி யுற்றான். வெற்றிட திண்டுகளைக் கொண்ட காலணி அணிந்த அவன் விரைந்து நடந்தான். அவனது எதிர்பாரா நோக்கு அர்பன் மீது விழுந்தது. தனது இரண்டாவது உருவத்தை பிடித்து விடுவது போல அவன் கையை நீட்டிய படி இருந்தான்.

சதாகாலமும் இந்தத் துரத்தல் நடை பெற்றுக்கொண்டிருக்கும் என்று அர்பன் நினைத்தான். முடிவில்லாமல் அவன் ஓடிக் கொண்டிருந்தான். நடமாட்டமே இல்லாத இந்தத் தெருவில் தப்பித்துப் போவதற்கு வழியும், தங்க இடமுமில்லாமல் இருந்தது.

விளக்கொளியில் சுரங்கப் பாதை நிலையம் எனக் காட்டும் வெள்ளை குவிமாடம் முன்னதாகத் தெரிந்தது. அதற்கு மேலாக

மாறுபட்ட நட்சத்திரங்கள் மின்னிக் கொண் டிருந்தன. கடைசியில்! ஒரு நிமிடத்தில் அவன் நிலையத்திற்குள் நுழைந்து விடுவான். குறுக்கைக் கடலில் ஒரு நாணயத்தைப் போட்டான். நகரும் படிக்கட்டில் கால் வைத்தான். அது அவனை கீழே ரயிலுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

வெகு சுலபமாக ஆல்வா ஏமாறப் போ கிறான் என நினைத்து அர்பன் கவலைப்பட் டான். ஒரு குருடனை தெருவின் குறுக்காக அழைத்துச் சென்று அவனை நட்ட நடுவில் விட்டுவிட்டு வருதல் போல இதனை உணர்ந் தான். அது புதுமையாக இல்லை? தன்னில் ஒரு பகுதியாகிய தனது இளைய சகோதரன் ஆல்வாவிற்காக அவன் கவலைப்பட்டான். ஆல் வா உண்மையாக அவனது பாதிதானா? மிகப் பெரும் ஆபத்திலிருந்து தப்பித்து வந்த வெற்றி உணர்வு அர்பனிடம் ஏற்பட்டது.

நிலையத்திற்கு அருகில் ஒருவன் கூட காணப்படவில்லை என்பது அவனுக்கு விநோத மாகக் காணப்பட்டது. கதவு வழியாக தப்பிச் செல்லும் வெதுவெதுப்பான காற்றைப் பெறுவதற்காக வழக்கமாக ஒரு சிலர் பாதை யில் நிற்பது உறுதி.

நான்கு கருங்கல் படிக்கட்டுகள்... அர்பன் கதவைத் தள்ளினான். அது அடைபட் டிருந்தது. தனது தோளால் அதை முட்டி னான், அதில் எந்தப் பயனும் இல்லை என்பதை அறிந்தும். பிறகு தனது கையால் தட்டினான். ஏற்பட்ட வலி அவனுக்கு

உணர்வை ஏற்படுத்தியது. நிலையம் பழுதுற்ற நிலையில் இருக்கிறதா? எந்த வகையிலும் அது முக்கியமானதல்ல. மிகவும் தாமதமாக ஒரு தாள் உயரே தொங்குவதை அவன் கவனித்தான். ''நிலையக் காற்றின் கதிரியக்கம் சோதித்துப் பார்க்கப்பட்டு வருகிறது. அண் மையிலுள்ள சுரங்கப் பாதையின் நிலையம்...'' அர்பன் திரும்பினான். அண்மைய சுரங்க நிலையம் அவனுக்கு ஆர்வத்தை மூட்டவில்லை. அதை அடைய வேண்டுமானால் அவன் திரும்பியாக வேண்டும். இது உயிர்வாழ்வதற் கான வாய்ப்பைப் பெரும்பாலும் இல்லாததாக் கிவிடும். நேராகப் போவதன் மூலமாகத்தான் தனக்கும் ஆல்வாவிற்கும் இடையிலுள்ள தூரத்தை அவனால் காப்பாற்ற முடியும்.

மணிக்கு மூன்று மைல்கள் என்ற உயர் வேகத்தில் ஆல்வா நெருங்கிக் கொண்டிருந் தான். தனது கன்னத்தில் எதோ வர்ணம் ஏற்பட்டதைக் கூட அர்பன் கவனித்தான். இல்லை, இரவு நேர வெளிச்சத்தின் வேலை யாகத்தான் இது இருக்க வேண்டும்.

ஒரு நொடிச் சிதறலில் முக்கியமற்ற நூற்றுக்கணக்கான விவரங்களை பார்க்க முடி யும். இது அணையப் போகும் தீக்குச்சி ஒளி விட்டுப் பிரகாசிப்பது போன்றதுதானா?

ஒரு தூணின் மீது அர்பன் சோர்வாகச் சாய்ந்தான். எத்தகைய அற்பத்தனமான முடிவு. ஆனால் எல்லா முயற்சியுமே அற்பத் தனமானது தானா? ஆக, இப்பொழுது அதற்கு அவன் விலை கொடுத்தாக வேண்டும்.

நியூமோர் என்ன கூறினான்: ''ஒவ்வொன்றுக்கும் தனது வாழ்க்கையில் விலை கொடுத்தாக வேண்டும். பணத்தால் இல்லையென்றால், பிறகு உனது சொந்த ரத்தத்தால். இது என்னால் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய சட்டம்.''

ஆல்வா முதல் எட்டை எடுத்து வைத்தான். எந்தப் பார்வையாளனாக இருந்தாலும் இப்படித்தான் கூறுவான்—எட்டு வைத்தான். ஒரு தடையைச் சந்திக்கின்ற பொழுது ஆல்வா வெறுமனே, கொதி கலத்திலிருந்து எழும் ஆவியைப் போல, தனது போலிக் கால்களால் மேலே எழும்புவான் என்பது பற்றி அர்பன் நன்றாக அறிந்தான். வெற்றிடத் திட்டுகள் அவனது கால்களை தரையில் பதியவைத்து, அவன் மிக உயரமாக எழும்பி விடாதபடி பார்த்துக் கொண்டன.

எவ்வளவு தெளிவாக அவனது மூளை வேலை செய்து கொண்டிருந்தது! வெஸ்டர்னுக்காகவும் எல்லா மனித இனத்திற்காகவும் அவன் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது! ஆனால் இன்னும் மூன்று நொடிகளில் இந்த சுற்றித்திரிகின்ற பேர்வழி முடியவடையப் போகிறான். மேலும் எல்லாமே முற்றுப்பெறப் போகிறது.

மனசாட்சிப் பிடியிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது. ஆனால் அது மிக நீண்ட காலத்திற்கு முன்னால், குற்றவாளிகளுக்குக் கூட உரிமைக்காலம் உண்டு?! சார்லியின் முகம் சாவு

பயத்தால் சீர்குலைந்திருந்ததை அர்பன் கண்டான்.

இரண்டாவது படிக்கட்டு.

வெளியேறுகின்ற சார்லி (இரண்டு மகிழ்ச்சியான மாதங்களாக இவன் அவனைப் பார்க்கவே இல்லை; இதற்காக மட்டுமே இவன் ஆல்வாவிற்கு நன்றியுடையவனாக இருக்கத்தான் வேண்டும்), குழந்தைப்பருவத் தோற்றம் இவன் மனத்தில் பளிச்சிட்டது. இவனது தந்தையாரின் பண்ணை மேற்கே இருந்தது... ஒரு பழைய காற்றாலை... அர்பனும் அவனது நண்பர்களும் ஓடிப்பிடித்து விளையாடியபடி சுற்றிலும் ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். அவன் சாவுடனா விளையாடுவான்? வாழ்க்கையில் ஓரிரு நிமிடங்களை வெல்வதற்காக?

மூன்றாவது படிக்கட்டு...

முட்டாள்தனம். அந்த சில நிமிடங்களைப் பெற அவன் கொடுத்துவைக்கவில்லை. புகைக் கூண்டிற்குள் குச்சி நுழைவதைப் போல அந்த கருங்கல் தூணை ஆல்வா கடந்து விடுவான். கூவிமாடத்தை அவன் கடந்து அர்பனைச் சுலபமாக எட்டிப் பிடித்து விடுவான்.

கோழிப் பண்ணையில் அக்கறையற்று சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு கோழிக் குஞ்சு, மேலேயிருந்து கீழே படியும் நிழல், பருந்தின் இறகால் எழுதப்பட்ட மரணதண்டனை என்பதை அறியாது.

அர்பன் தனது தண்டனையை அறிவான். பாதுகாப்பற்ற இந்தக் கோழிக் குஞ்சுக்கும்

அவனுக்கும் இடையே இருந்த ஒரே வித்தியாசம் அதுதான். பிளாஸ்டிக்கின் நீண்ட மூலக்கூறுகளுடைய பாலிமர் இழைகள் மட்டுமே ஆல்வாவிடமிருந்து அவனைக் காப்பாற்ற முடியும்.

அர்பன் பின்னால் சாய்ந்தான். குவிமாடத்தின் சுவரை அவனது கை தொட்டது. அது செவ்விணைவக ஓடுகளால் கட்டப்பட்டிருந்தது. குளிர்ந்து பனிக்கட்டி போல வழுக்கலாக இருந்தது. இந்த உலகத்தில் அவன் அறிந்த கடைசி உணர்வு அதுதான். மறு உலகு என்பது இருக்குமேயானால், அவன் விரைவாகவே சார்லியைச் சந்திப்பான். அவனிடத்தில் என்ன சொல்லப் போகிறான்?

காற்றை எதிர்த்து நடக்கும் ஒரு மனிதனைப் போல ஆல்வா குனிந்து இருந்தான். இந்த நொடியில் தான் அது அர்பனைத் தொட்டது — அந்த ஓடுகள் பிளாஸ்டிக்கால் ஆனவை!

...சுவர்ப்பக்கம் முதுகைக் காட்டியபடி ஒரு மனிதன் நின்றான். அவனது கைகள் நீட்டியபடி இருந்தன. அடுத்த ஒருவன் படிக்கட்டுகளில் ஏறி அவசரமில்லாமல் அவனது இரட்டையை நெருங்கிக் கொண்டிருந்தான். சுவரை அழுத்திக் கொண்டு நின்ற அம்மனிதன் திடீரென்று அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு குவிமாடத்தைச் சுற்றி நகரத் தொடங்கினான். ஒரு துரத்தலைக் காட்டுகின்ற, மெதுவாகச் செல்லும் திரைப்படமாக வண்ணப்படம் இருந்தது. வேகம் அதிகரிக்கப்

படுமேயானால், பார்வையாளன் ஒரு சிறந்த ஓட்டத்தைக் காண முடியும். ஆனால் படமும் இல்லை, பார்வையாளர்களும் இல்லை.

இந்த புதிய கண்மாறாட்ட நடவடிக் கையை எதிர்பார்த்தவன் போல ஆல்வா காணப்பட்டான். குவிமாடத்திற்குப் பின்னால் நின்றுவிட்ட தனது இரட்டையைப் பின் பற்றி விரைவாக அவன் சென்றான். பிளாஸ் டிக் இழைத்த சுவரைச் சுற்றி எழுந்த மேகம் குறுக்காகச் செல்வதைத் தடுத்ததோடு, அவனது பலிக்குரியதை எட்டிப் பிடிக்க முடியாத படியும் செய்தது.

ஆக, விதி மேலும் சில நிமிடங்களை அவனுக்கு வழங்கியது அவ்வளவு தான். இதற்கு மேல் எதுவும் இருக்க முடியாதென்று அர்பன் உணர்ந்தான். வட்ட ஓட்டத்தில் இவனை எப்பொழுதுமே ஆல்வா முந்திவிடக் கூடியவன். அர்பன் களைப்படைந்து சாய் வதற்கு முன்னதாகவே, ஆல்வா அவனை எட்டிப்பிடிப்பான். அர்பன் இப்பொழுது அதை மிக நன்றாகவே அறிந்திருந்தான். இது நேர் கோட்டுத் துரத்தல் அல்ல, அதில் அர்பன் செய்ய வேண்டியது அவனிடமிருந்து விலகிச் செல்வதுதான். ஓர் வட்டத்தைச் சுற்றி நகரும் போது, ஆல்வாவிற்குக் கூடுதலான அனுகூலம் உண்டு. அவனால் திடீரென்று திரும்பி தனது எதிரியைச் சந்திக்க முடியும். மறுபுறத்தில் அர்பனால் அத்தகைய கண் மாறாட்ட நடவடிக்கையைச் செய்ய முடி யாது. ஆகவே அவர்களுக்கிடையே இருந்த

இடைவெளி மெதுவாக சுருங்கிக் கொண்டே வந்தது. ஒருவகையில், முழுக்க எந்திரமயமான இந்த வழிமுறையில் திறமையாகச் சிந்திக்கவும், எதிரி எம்மாதிரியாக இயங்குவான் என்பதையும் கற்பனை செய்து அதற்கேற்ப தனது ஒவ்வொரு அடியையும் திட்டமிட்டு எடுத்துவைக்கவும், தூரத்தலுக்கேற்ப சரியான சைபர்நேட்டிக் பொறியுடன் தனது திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளவும் அர்பனால் முடிந்ததா?

திரும்பிப் பார்க்க அர்பன் அஞ்சினான். தனக்குப் பின்னால் ஆல்வா மூச்சு விடுவதை அவனால் கேட்க முடிந்தது என்று கற்பனை செய்தாலும் உண்மையில் ஆல்வா சுவாசிக்கவே இல்லை. அதாவது நரம்புகள் அவனிடத்தில் தந்திரங்கள் செய்ததைத் தவிர வேறொன்றுமில்லை. நியூமோரால் எஃகு நரம்புகளை அவன் உரிமையாகப் பெற்றது இந்த ஆபத்து வேளையில் வேலை செய்யாது என்பதை அவன் ஒருபோதும் கற்பனை செய்யவில்லை. எல்லாவகையான விசித்திரங்களும் அவனுக்கு ஏற்பட்டு விட்டன. இன்னும் அழகன் சார்லி கூட அடிமனத்திலிருந்து தவழ்ந்து வந்துவிட்டான். அவனது வாழ்க்கையின் கடந்த சில ஆண்டுகளாக ஒரு நிமிடங்கூட அமைதியில்லாமல் அவனை அழுத்திய மனத்தோற்றத்திலிருந்து விடுபட வீணாகப் போராட வேண்டியதாயிற்று. தனது துயரங்களை மற்றவர்களோடு அவனால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. லிண்டா

விடம் கூட சொல்ல முடியவில்லை. சொல்வது அவனுக்கு இலகுவாகக் கூட இருந்திருக்கலாம். பிறகு தான் நியூமோர், அவனது எல்லா நினைவுகளையும், கவலைகளையும் எதிர்ப் பில்லாத ஆல்வாவிற்கு மாற்றித் தரும் கவர்ச் சியுள்ள யோசனையை முன்வைத்தான். இவை எல்லாம் அர்பனை அரித்துக் கொண் டிருந்தன. ஒத்துக் கொள்வதைத் தவிர அவ னால் என்ன செய்ய முடியும்? குவிமாடத் தைச் சுற்றிக் கொண்டு பல முறை அவர்கள் வந்தார்கள். ஒவ்வொரு முறையும் அவர் களுக்கிடையே இருந்த இடைவெளி குறைந்தது.

ஆல்வாவின் நீட்டிய கரத்திற்குப் பிடிபடா மல் அர்பன் தப்பியது ஏதோ ஒரு சிறு அற் புதந்தான். இந்தத் தொடுதலால் அர்பனின் மேற்சட்டை அனல் போலப் புழுங்கியது. அர்பன் அதைத் தூக்கி எறிந்தான்.

குவிமாடத்தைச் சுற்றி குதிபோட்டு நடந்து போகையில், நீண்ட தெருவின் தொலைவுத் தோற்றம் மங்கலாகவும், அதன் கடைசியில் அவனது காரின் முன்விளக்கின் வளைவையும் அவனால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. அதன் பின்னர் ஒரு சிறிய ஒளிமயமான திட்டம் அவனுக்குத் தோன்றியது. தெருவில் நடந்து போய் காரை நோக்கி ஏன் திரும்பச் செல்லக் கூடாது. ஆல்வா நிச்சயமாக அவனது காலடி களைப் பின்பற்றி வருவான். ஆனால் நேர் கோட்டில் செல்கின்றபோது அவனைப் பற்றி கொஞ்சமும் பயமில்லை. உண்மையில் தொலை ஒன்றும் அதிகமில்லை, ஆல்வா அவனை நெருங்

கும் முன்னதாக அவன் காரைப் பிடித்தாக வேண்டும்.

ஓர் ஓட்டம் — அவனது உயிரைக் காப்பாற்றிய குவிமாடத்தை விட்டு அர்பன் திரும்பவும் சாலை நெடுகிலும் ஓடினான். ஆல்வா அவனை ஒன்று அல்லது இரண்டு மீட்டர் என்ற வித்தியாசத்தில் பின்தொடர்ந்தான். அவனைத் தொட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் அர்பன் தனது கைகளைக் கூட வீசவும் பயந்தான்.

ஒவ்வொரு எட்டும் தப்பித்தலை நோக்கி வந்து கொண்டிருந்தது. லிண்டாவின் வீட்டிற்கு முன்னர், காரை எங்கு விட்டுச் சென்றானோ, அங்கேயே அது நின்று கொண்டிருந்தது. அப்பெண் என்ன செய்து கொண்டிருப்பாள்? பெரும்பாலும் இப்பொழுது தூங்குவாள், அல்லது தி கால் ஆஃப் தி ஆபீஸ் என்ற இதழைப் படித்துக் கொண்டிருப்பாளா? அல்லது தி ரோடு டு டிலைட் என்ற மோசமான இதழைப் படித்துக் கொண்டிருப்பாளா?

காரின் கதவைத் திறந்து ஆல்வாவிற்கு முன்னமேயே உள்ளே நுழைந்து இறுகப்பூட்டிக் கொள்வதற்கு அவனுக்கு நேரம் தேவைப்பட்டது. இன்னும் பதினைந்து எட்டுக்களே இருந்தன... பத்து... இரண்டு... அர்பன் கலவரத்தோடு கதவை வெடுக்கென்று இழுத்து காரின் அறையில் விழுந்தான். அதற்குப் பின்னால் துணி கிழிப்பதைப் போன்ற ஒலி கேட்டது. ஒரு வெள்ளையாகப் பளிச்சிட்டது. இவன் தனது தலையின் பின்புறம் கூர்மையான வலியை உணர்ந்தான். அது அலையாய் அவன் உடல் முழுக்கப்

பரவியது. ஆனால் ஸ்பிரிங் கதவு தக்க சமயத்தில் மூடிக்கொண்டது.

சற்று நேரத்திற்குப் பிறகு அர்பன் சுய உணர்வு பெற்று புலம்பினான். அவனுக்குத் தலைவலி கடுமையாக இருந்தது. அவன் உடல் முழுக்க மரமரத்துப் போய் பருத்திக் கம்பளி நிறைந்த கோணிப்பை போல உணர்ந்தான். துரத்தலையும், அவன் அதிசயமாகத் தப்பியதையும் நினைவு கூர்ந்தான். மிகுந்த சிரமத்துடன் தனது கைகளை ஊன்றி தானாகவே எழுந்தான். சுற்றிலும் பார்த்து மீண்டும் திகைப்புற்றுப் போனான். காரின் முன்கண்ணாடியில் ஒரு வெள்ளை நிழலுருவம் ஒட்டிக் கொண்டிருந்தது — அது ஆல்வா தான். அர்பனுக்கு மிக நெருக்கமான இடமாகப் பார்த்து நின்றான். அவனது குளிர்ந்து போன முகம் உருமாற்றம் பெற்றது போலக் காணப்பட்டது. அவனது கைகள் ஆர்வத்தோடு ரேடியேட்டரைப் பற்றிக் கொண்டிருந்தன. முழுக்க செயல்பட முடியாமற் போனான். அவனது பலி கிளம்பட்டும் என காத்துக் கொண்டிருந்தான் — அதற்குத் தேவையான பொறுமை அவனிடமிருந்து.

சொல்ல முடியாத ஓர் ஆறுதல் பெருமூச்சை அர்பன் விட்டான். தொடாமல் இடம் மாறிப் போயிருந்த மூலையிலிருந்த பிளாஸ்டிக் பூச்சைத் தொட்டு அழுத்தி, திரும்பவும் வைத்தான்.

சற்று ஓய்வு எடுத்துக்கொண்டதாக உணர்ந்த போது, ஸ்டார்ட்ரை அழுத்தினான். கார்

முன்னோக்கி நகர்ந்தது. காரின் முன் கண்ணாடியில் தெரிந்த ஆல்வாவின் முகம் மறைந்தது. அவனது உடம்பு ரேடியேட்டரிலிருந்து நழுவியது.

அர்பன் காரைத் திருப்பி பின்னால் பார்த்தான். ஆல்வாவினுடைய மஞ்சுபடர்ந்த தோற்றம் தொலைவில் கரைந்து போய்க் கொண்டிருந்தது. அர்பன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். இப்பொழுது அவனுடைய நரம்புகள் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. ஆனால் தலையின் பின்புறத்தில் வலி இன்னமும் பயங்கரமாகவே இருந்தது.

ஆகவே, அவன் இன்னமும் சார்லியின் நினைவிலிருந்து முழுமையாக விடுபட முடியாமல் இருந்தான். செத்திருந்தாலும் அவன் இன்னமும் அர்பனை வாட்டினான். ஆல்வா கூட இரண்டு மாத காலத்திற்குத்தான் அவனிடமிருந்து பிரிந்து இருக்க முடிந்தது. துயர் செய்யும் நினைவு திரும்பவும் வந்தது...

நியூமோர் தனது ஆய்வுக்கூடத்திற்குள் நுழைந்து ஒரு நாற்காலியில் சோர்ந்து விழுந்தான். அருவருப்பான மனநிலையில் அவன் இருந்தான். ஆகவே, நல்லிசைவாகத் தொடங்கிய அந்தச் சோதனையை அவன் தடைசெய்ய வேண்டி இருந்தது. சாதித்ததெல்லாவற்றையும் அழிக்க வேண்டி வந்தது. அவனது மூளைக் குழந்தையான ஆல்வாவையும் அழிக்க வேண்டியிருந்தது. ஆதார

துகள்களின் திரளையாக அவனைக் குறைக்க வேண்டும். அவனைப் படைப்பதற்காக எத்தனை இரவுகளைத் தூங்காமல் கழித்திருக்கிறான். அவன் மீது எவ்வளவு நம்பிக்கைகளை வைத்திருக்கிறான். அதற்காக எவ்வளவு பணத்தை முதலீடு செய்திருக்கிறான்! இவை எல்லாமே அழியப் போகின்றன.

நியூமோர் தனது தொண்டையை மெல்லத் தொட்டான். அருந்தகத்தில் நடந்த அருவருக்கத்தக்க நிகழ்ச்சிக்குப் பிறகு அர்பனிடத்தில் வெறுப்பாகவே இருந்தான். ஆனால் நியூமோர் வியக்கும்படி அவனது வெறுப்பு விரைவிலேயே மறைந்து போயிற்று. மாறாக இம்மனிதன் மீது வருத்தப்பட்டான். ஆல்வாவின் நடத்தை பற்றி அர்பன் கூறிய தொடர்பற்ற கதை அழிவைப் பற்றிய முன்னுணர்வை அவனுக்கு ஏற்படுத்தியது. இந்தக் கதையானது என்ஜினியரது கற்பனையின் ஒரு புனை சுருட்டாக இல்லாமல் இருக்குமேயானால், அது நியூமோரின் திட்ட மதிப்பீடுகள் தவறு என்றும், அவன் எதிர்பார்த்தலுக்கு முரணாக ஆல்வாவின் நடத்தை இருந்தது என்றும் பொருள்படும். அல்லது அது எல்லாமே அர்பனின் தவறா? போதுமான கவனத்தோடு அவன் இல்லையா? மொத்தத்தில் ஆல்வா ஒரு முட்டாள். அவனை ஏமாற்றுவது மிகவும் சுலபமான காரியம்.

ஆனால் விஷயத்தின் மூலத்தைத் தெரிந்து கொள்வது என்பது மிகவும் சுணங்கிவிட்டது. நியூமோர் வாக்குறுதி தந்திருந்தான். அதைத்

தான் காப்பாற்றப் போவதாகக் கூறி இருந்தான். ஆல்வா மறைந்து விடுவான். அர்பன் பொறாமை கொள்ளத்தக்கதாய் இராத தனது பழைய நிலைக்குத் திரும்பி விடுவான்.

நியூமோர் எழுந்து திரும்பி, அறையின் மேலும் கீழும் வந்தான். ஆல்வாவை அழைப்பதற்குரிய பொத்தானை அமுக்குவதற்கு அது தான் நேரம். ஆனால் அவன் சுணக்கினான்.

வழக்கமாக அமைதியாக இருக்கும் அவனை விடாதபடி வழமைக்கு மாறான எண்ணங்கள் அவன் தலையில் எழுந்தன. ஆக, இந்த அமைதியானது உண்மையில் ஒரு மாயத் தோற்றமே. ஒரு குளத்தின் நீர்ப்பரப்புப் போல, வளவளப்பாகவும் எஃகுப் போலவும் காணப்பட்டது. அதன் ஆழத்தில் மேகங்கள் மிதந்தன. நீரின் விளிம்பில் நின்ற மரங்கள் தங்களது பிரதிபலிப்பை மாறுபடக் காட்டிக் கொண்டிருந்தன. அடிப்பரப்பு அசைக்க முடியாதபடி இருந்தது. ஆனால் ஒரு காற்றுவீச்சில் அமைதியான அந்த மாயத் தோற்றம் துண்டாகச் சிதறடிக்கப்பட்டது.

ஆக, அது நியூமோர் உள் உலகம் பற்றியது. அசைக்க முடியாத சட்டங்களின் கவசமாய் அது காணப்பட்டது. ஒருவகையில், அவைகளை தெரிவிக்கும் வாய்பாடுகள் மிகவும் சிக்கலானவை, எப்படி இருப்பினும் அவை உண்மையானவை. நியூமோர் தனது சொந்த தலையை பிணைவைக்கத் தயாரானான். பிறகு ஏன் ஆல்வா அம்மாதிரி விந்தையாக

நடந்து கொண்டான்? நெருப்பில்லாமல் புகையில்லாதது போல காரணமில்லாமல் எந்த விளைவும் இல்லை. அவன் எங்கு தவறு செய்து விட்டான்?

திடீரென்று நியூமோர் மனத்தில் ஒரு கருத்து தோன்றிவிட்டது. நன்மைக்கும் தீமைக்கும், ஒழுக்கத்திற்கும் தீயொழுக்கத்திற்கும் எந்திரமயமாக ஒரு மனிதன் தன்னைத் தானே ஈடுபடுத்திக் கொள்ள முடியுமா? எல்லா மனிதப் பண்புகளோடும், தோல்வியையும் சேர்த்து, தனித்தன்மை என்பது இணைந்தது தானா?

ஏதோ காரணத்திற்காக, விண்வெளிப் பயணத்திலிருந்து தனது தந்தை கொண்டு வந்த பொம்மையை நியூமோர் நினைத்துப் பார்த்தான். அது ஒரு சின்னப் பந்து, 'எல்லாம் காணுகிற கண்.'

...அந்த அறை ஓரளவுக்கு இருட்டாக இருந்தது. ஒரு மூலையில், மேசை கிடந்த இடத்தில், நீல ஒளி மின்னியது.

''எவ்வளவு அருமை!'' வாசல் வழியில் நின்று கொண்டிருந்தபடி லின்டா கூறினாள்.

''அருகில் வா, பயப்பட வேண்டாம்,'' நியூமோர் அவளை வலியுறுத்தினான். அவள் முதுகில் லேசாகத் தட்டிக் கொடுத்தான்.

அக்கண் ஒளி விட்டுக் கொண்டிருந்தது, அற்புதமாக இருந்தது, மூடப்பட்ட நகை போல.

''எல்லாம் காணுகிற கண்,'' நியூமோர் கூறினான்.

அதை நம்பவில்லை என்பது லின்டாவின் முகத்தில் எழுதப்பட்டிருந்தது.

''நீ என்னை நம்பவில்லையா?'' நியூமோர் கோபத்தோடு இரைந்தான். ''பிறகு கேள்.'' ஒளி விடும் பந்தை நோக்கி தனது கையை நீட்டி ஏதோ ஒன்றை அழுத்தினான். பிறகு அந்தப் பந்து பேசத் தொடங்கியது. தேவையான விவரத்தை சாரமில்லாத குரலில் அது பட்டியலிட்டது:

''இனம் — மனிதன், பால் — பெண்... பூமிக் கணக்கில் வயது ஏறத்தாழ — 14 ஆண்டுகள்... மூளை பொதிந்த குடுவையின் பரும அளவு... (சன்னலுக்கு வெளியே பறந்த ஏரோபஸ்ஸின் ஓசை எண்ணை விழுங்கிவிட்டது) ...பற்கள், நல்ல நலம்,'' பந்து தொடர்ந்தது. லின்டா கேட்டுக் கொண்டே அசைவற்று நின்றாள். ''தலை முடி — பொன்னிறமாக...''

''ஜிஞ்சர்,'' நியூமோர் மேலும் தெரிவித்தான்.

''உள் அமைப்பு வருமாறு,'' பந்து தொடர்ந்தது. ''உணவுக் குழாயின் நீளம்...''

''நிறுத்து!'' லின்டா திடீரென்று இரைந்தாள். அந்தப் பந்தும் கீழ்ப்படிந்து நின்றது.

லின்டாவின் கோபம் குறைந்தது. கண்ணீருடன் அவள் அறையை விட்டு ஓடினாள்.

அந்த இரவு நீண்ட நேரமாக நியூமோருக்குத் தூக்கமே வரவில்லை. தனது படுக்கையில் புரண்ட படியே இருந்தான். எழுந்

திருப்பது, தலையணையை அமுக்குவது, கொஞ்சம் தண்ணீர் குடிப்பது இப்படியாக இருந்தான். ஆனால் தூக்கம் அவனை விட்டு நழுவி விட்டது. முதல் முறையாக, தனது வாழ்க்கையில் ஒருபோதும் நடந்திராதவைகளைப் பற்றி அவன் வியந்து கொண்டிருந்தான். அப்பொழுதுதான் ஆல்வா பற்றிய எண்ணம் அவன் மனத்தில் கருக்கொண்டதா?.. ஒருவனுடைய நோய்களையும் துயரங்களையும் தான் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு மனிதனுடைய இரட்டை பற்றிய எண்ணம் எழுந்ததா?

பிறகு இப்பையன் தனது தூக்கத்தை எது பறித்துக் கொண்டிருந்ததோ அதைப்பற்றி முன் கூட்டி உணரலானான். மூலையிலிருந்து வந்து கொண்டிருக்கின்ற நீல வெளிச்சம் தான் அது. 'எல்லாம் காணுகிற கண்' — அது எவ்வாறு செய்யப்பட்டது?

அதன் மூலத்தை அவன் அறிந்தாக வேண்டும்.

குளிர்ந்த தரை மீது தனது கால்களை நியூமோர் பதிய வைத்தான். அந்த நீல ஒளி அவனை காந்தம் போல இழுத்துக் கொண்டது.

குளிர்ந்து போன பிளாஸ்டிக்கின் மீது நடந்தபடி, அப்பையன் மேசையை நெருங்கி, இந்தப் பந்தைத் தொட்டான். அதிலுள்ள சிறிய குமிழைத் தொட்டவுடனேயே அவனுக்கு எத்தனை விலாவெலும்புகள் இருக்கின்றன என்று அந்தப் பந்து உடனடியாகக் கூறும், அவனது இதயத்தசையின் வலு எப்படி

என்பது போலக் கூறும். அச்சம் விளைவிக்கக் கூடியதொன்று. லிண்டாவினுடைய உள அரிப்பை அவன் புரிந்து கொண்டதாக அவன் நினைத்தான். அவளிடத்தில் அவன் மன்னிப்புக் கேட்பதா? ஓ, பரவாயில்லை! காலைக்குள்ளாக அவள் எல்லாவற்றையும் மறந்து விடுவாள். எந்த வகையிலோ, ஒன்றுக்காகவோ, மற்றதற் காகவோ அவள் எப்பொழுதுமே அழுது கொண்டிருந்தாள். என்ன பெண்ணோ அவள்?

ஓர் உந்துதல் சக்தி மேஜை டிராயரை இழுத்து ஓர் அறுவைக் கத்தியை எடுக்க நியூமோரைத் தூண்டியது. தொலை தூரத்து கோளிலிருந்து வந்த தூதுவனாகிய பந்து களங்கமற்ற சுடரொளியை விட்டுக்கொண்டிருந் தது.

பந்தை நோக்கி தனது கையை அப்பையன் சில முறை நீட்டி எடுக்க முயன்ற பொழுது நியூமோரின் பிடியில் அறுவைக் கத்தி சூடேறி விட்டது. கடைசியாக, அதன் வெளிப்புற சவ்வை மட்டும் சிறிதளவு வெட்டுவதென்று அவன் முடிவு செய்தான். இது கண்ணிற்கு உண்மையில் எந்தத் தீங்கும் செய்யாது. அதற்குள்ளாக என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு மட்டுமே விரும்பினான். பிறகு பயோபிளாஸ்டிக்கால் வெட்டை சரிசெய்து விடுவான். எந்தத் தழும்பும் இருக்க முடியாது. போன கோடை யின் போது கூட ஒரு தவளையின் மீது ஒரு சோதனை செய்தான். எல்லாம் நல்லபடியாக முடிந்தது.

வெட்டுவதற்கு வேண்டிய துணிவைக் கடைசியாக நியூமோர் வரவழைத்துக் கொண்டான். வெளிப்புறச் சவ்வு வெட்டுவதற்கு மிகச் சுலபமாக இருந்தது, எந்தவித எதிர்ப்பும் ஏற்படவில்லை. பெரும்பாலும் நியூமோர் பயந்தபடி, வெட்டிலிருந்து திரவம் ஏதும் வெளிப்படவில்லை. பந்து தொடர்ந்து ஒளிவிட்டது. ஒளி மிகுந்து பிரகாசித்தது. நியூமோர் வெட்டை ஆழப்படுத்தினான். ''ஒருவகையில் நலமின்றி இருக்கும் போது ஓர் உயிருள்ள மனிதனை டாக்டர்கள் வெட்டுகிறார்கள். பிறகு அவர்கள் தையல் போட்டு விடுவார்கள். அதற்காக நோயாளிக்கு எந்தக் கேடும் விளைவதில்லை,'' என்று அவன் நினைத்தான். ''இதில் மிக முக்கியமானது கவனமாக இருப்பதுதான். ஒரு மனிதனை விட இந்தப் பந்து நிச்சயமாக எந்தவகையிலும் சிக்கலானதாக இருக்காது.''

சவ்வுக்குக் கீழே கணக்கற்ற மெல்லிய நரம்புகள் தோலிழை மத்தில் இருந்தன. உலகத்திலேயே மிகவும் பொறுமை சாலியான ஒருவனால் கூட அவற்றை முறுக்கவிழ்த்துப் பிரிக்கும் நம்பிக்கை இல்லாதபடி அவைப்பின்னிக் கிடந்தன. ''நரம்பு செல்கள்,'' நியூமோர் ஊகித்தான். வழக்கமான கொள்கலம், நுண்ணிய குழாய்கள் — உண்மையில் அபூர்வமாக எதுவும் இல்லை...

நியூமோர் பிளந்த பந்திற்கு மேலாகக் குனிந்து பார்த்தான். அது அயற்பண்புடைய ஒரு பழத்தை அவனுக்கு நினைவூட்டியது.

அது ஒருவகையான நறுமணத்தை வெளியிட் டதையும் நியூமோர் கவனித்தான். திடீரென்று அந்த நீல ஒளி மங்கத் தொடங்கியது. அறைக்குள் இருள் பாய்ந்தது. ஸ்விச்சை நியூ மோர் போட நினைத்தான். கண நேரத் தில் அவன் அதைச் சரிசெய்வான். அவன் உண் மையில் அந்தக் கண்ணுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை. ஒரு நூலைக் கூட அவன் நறுக்கவில்லை. அவனுக்குத் தேவையானதெல் லாம் வெட்டின் முனைகளை ஒன்று சேர்த்து அவற்றை பயோபிளாஸ்டிக்கால் ஒன்று சேர்ப் பதே ஆகும்.

மெல்லிய சவ்வு விரைவாக ஒட்டிக்கொண் டது. இப்பொழுது பந்து திரும்பவும் முழுமை யாக இருந்தது. ஆனால் அது வெளிச்சம் தர வில்லை. நியூமோர் ஸ்விச்சைப் போட்டான். ஊடுருவிச் செல்ல இடந்தராத இருள் அறை யைச் சூழ்ந்தது.

வீணாக அவன் குமிழை அழுத்தினான் — பந்து அமைதியாக இருந்தது. 'கண்' செத்து விட்டது. நியூமோர்தான் தனது சொந்தக் கை களால் அதைக் கொன்றவன். குடும்பத்தினர் அனைவருமே அவனைத் தேற்ற முயற்சித்தார் கள். அடுத்த முறை செல்கின்ற போது அவனுக்கு வேறு ஒரு பந்து வாங்கித் தருவதாக தந்தை வாக்குறுதி தந்தார். தாயாரும், லின்டாவும் தேற்றினார்கள். ஆனால் நியூமோர் தேறுதலடை யவில்லை.

இப்பொழுதுதான், அநேக ஆண்டுகளுக்குப் பிறகு, உண்மையைத் தெரியலானான். அந்த

தொலைவான இரவில் அறுவைக் கத்தியை ஆயுதமாகக் கொண்டு அந்த நீலப் பந்தின் ஒற்றுமையை அவன் குலைத்தான். ஆ! அதற் காகத்தான் அவன் அதை நினைவு கூர்ந்தான். இப்பொழுது கூட ஒவ்வொரு மனிதனையும் பிரிப்பதன் வாயிலாக ஒற்றுமையை, குறிப்பாக வெஸ்டர்னில் வேலையிலிருக்கும் அர்பன் பெயர் கொண்ட ஓர் என்ஜினியரை, அவன் குலைக்க வில்லையா?

நியூமோர் சன்னலுக்கு அருகே வந்தான். இந்தப் பைத்தியக்கார உலகம், பைத்தியக் கார தட்பவெப்ப நிலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. ஒருசில மணி நேரத்திற்கு முன்னால், அவன் அர்பனிடம் பேசிக் கொண்டிருந்த போது வானத்தில் மூடுபனியிருந் தது, இப்பொழுது உருகு நிலைக்கு வந்து விட்டது.

ஒரு சொட்டு நீர் சன்னலுக்கு வெளியே குறுக்கு நெடுக்கான பாதையை ஏற்படுத்திக் கொண்டு கீழே விழுந்தது. அது சிறிய பல்லியைப் போல அசைந்தது. நியூமோரின் வெப்பமான நெற்றி குளிர்ச்சியான கண்ணா டிக்கு எதிராக நிற்பது மகிழ்ச்சியாக இருந்தது. அந்தச் சொட்டு நியூமோரின் கண்ணிற்கு முன்பாக விழுந்து கீழே மறைந் தது.

''அந்த ஒரு சொட்டில், நீ விரும்பினால், உலகின் முழு பிரதிபலிப்பையும் காண முடி யும்,'' நியூமோர் சிந்தித்தான். ''பொருள்களின் சரியான தோற்றம் மட்டுமே தேவைப்படு

கிறது. இந்தத் துளியை எடுத்துக்கொள்வோம்: இது இரண்டு தனிமங்களின் ரசாயனக் கூட்டுச் சேர்க்கை, அதாவது ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன். அவற்றில் ஒன்றைப் பிரித்துவிட்டால், நீர் உள்ளபடியே காணாமற் போய் விடும்...''

நியூமோரின் ஆய்வுக்கூடம் தரை மட்டத்திற்கு மேலே அமைந்திருந்தது. வாசலுக்கு வெளிப்புறமாக ஊரின் ஒரு பகுதியை பறவைப் பார்வை போல சன்னல் காட்டியது. பிரகாசமான நாளில் தொலைதூரத்துப் பொருட்கள்கூட நன்றாகத் தெரியும். ஆனால் இப்பொழுது மிகச் சிறிய மழைத் தூறலால் தெரியாதிருந்தது.

பிரதான வாசலுக்கு முன்னால் உள்ள சதுக்கத்தில் ஏதோ சாலை வேலைகள் நடந்து கொண்டிருந்தன. நியூமோர் மிக நெருங்கிப் பார்த்தான். ஒரு திமிங்கிலம் போலக் காணப் பட்ட ஒரு டிரக் வண்டி ஒரு வட்டமாக நகர்ந்து கொண்டிருந்தது. பின்புறம் மினுமினுக்கக் கூடிய ஒரு புதிய பாதையை ஏற் படுத்திக் கொண்டு சென்றது. பொருந்தாத பருவகாலச் சூழலில் சதுக்கத்தை ஏன் அவர்கள் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்? ஒருவேளை செயற்கை பனிச் சறுக்குக் களத்தை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்களா? இந்த நாட்களில் ஏதாவது விழா அல்லது வேறு ஏதேனும் நடைபெறலாம். ஒவ்வொரு மாதமும் பத்துப் பன்னிரண்டு நடத்துவார்கள்.

நியூமோர் கண்ட்ரோல் பேனலுக்கு வந்து அழைப்பதற்குரிய பொத்தானை அழுத்தினான். நியூமோரால் உருவாக்கப்பட்ட உடல் சரீரமில்லாத ஆல்வா எங்கே? அர்பனைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக குறிக்கோளில்லாமல் நகரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறானா? அல்லது அர்பனின் வீட்டிற்கு அருகில் அமர்ந்தபடி காத்துக் கொண்டிருக்கிறானா? இந்தப் பதுங்குதலுக்குத் தான் பெரும்பாலும் பாவம் அர்பன் பயந்தான். ஒரு மியூசியம் அல்லது அவனது இரட்டையான அர்பனுக்கு அணுக முடியாத வசதிபடைத்தவர்களின் பொழுதுபோக்கு மையமாகிய 'பித்தக்கோரஸ் கிளப்' போன்ற ஏதோ பொருத்தமில்லாத இடங்களில் ஆல்வா இருக்க முடியுமா? பொதுவாக ஆல்வாவிற்கு எந்தக் கதவும் சாத்தப்பட்டதில்லை, அல்லது, ஒருவேளை, அவனுக்குக் கதவுகளே தேவைப்படாது இருக்கலாம்.

ஆல்வாவினுடைய அமைதியான நிழல் உருவத்தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்தில் அர்பனது சந்திப்புகளைச் சற்று கற்பனை செய்து பார்!

இப்பொழுது ஆல்வா இந்நேரத்தில் எங்கிருக்கிறான் என்பதை அவன் அறிந்து கொள்வான். சில நொடிகளுக்குள்ளாகவே ஆல்வா வானொலி சமிஞைக்கு ஏற்ப செயல்படுவான்.

நேரம் கடந்து கொண்டிருந்தது. ஆனால் தொடர்பு விளக்கு ஒளிதரவில்லை. அது ஒத்து வராததாகி விட்டது. முன்பெல்லாம் அதன்

அழைப்புகளுக்கு பதிலளிக்காமல் ஒருபோதும் ஆல்வா இருந்ததில்லை.

விசும்புடன் ஏதேனும் மாறுபாடு ஏற்பட்டு விட்டதா? அல்லது அமைப்பில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டு விட்டதா? அதை சரி பார்க்கவும் செயல்பட வைக்கவும் சில நிமிடங்களே தேவைப்பட்டன. பிறகு ஒரு தெளிவற்ற பயம் நம்பிக்கையாக மாறியது.

ஆல்வா கீழ்ப்படியாமலேயே போய் விட்டான்! தனக்கென்று எந்த ஒரு மனத்திட்பமும் பெற்றிறாதும் எதிர் துகள்களின் செயற்கைத் திரளையாகியதுமான இந்த மாயத்தோற்றம், நேற்றுத் தான் தன்னைப் படைத்தவனுக்கு எந்தக் கேள்வியுமின்றி கீழ்ப்படிந்தஇது, இந்தப் பெரிய நகரத்தில் காணாமற் போய்விட்டது. ஒரு குறிப்பிட்ட நபரைத் தவிர வேறு யாருக்கும் இதனால் ஆபத்தில்லை...

இது விஷயங்களை மிகவும் சிக்கலாக்கி விடும். அவனால் செய்ய முடிந்ததெல்லாம், இரவு நேரத்திலும் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாது என்று நம்பியது தான். மறுநாளும் அர்பன் சந்திப்புக்காக வருகின்ற பொழுது சக்திவாய்ந்த காந்தக் கண்ணிகளின் உதவியால் ஆல்வாவைப் பிடிக்க நியூமோரால் முடியும். இத்தகைய கண்ணிகள் முன்னைய காலத்தில் அதிர்வு விண்கலங்களில் எதிர் துகள்களினின்று காத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்டன. அர்பன் மிகச் சிறந்த தூண்டிலாகப் பயன்படுவான்.

எந்தவகையிலாவது அவன் அர்பனை வீடி

யோபோனில் அழைத்து எச்சரிக்கை செய்ய வேண்டும். வாயிற் புறத்திற்கு நேராக அவன் ஓட்டிச்செல்வான். நியூமோர் அவனைச் சந்திப் பான். கடந்து செல்வதற்கு அர்பனுக்கு ஒரு சிறிய திறந்தவெளி மட்டுமே உண்டு. ஆய்வுக் கூடத்தில் அர்பன் முழுமையான பாதுகாப்போடு இருப்பதற்கு வேண்டியதை நியூமோர் பார்த்துக் கொள்வான்.

''வெஸ்டர்ன்!'' நியூமோர் வீடியோபோனில் கேட்டான். ஆனால் திரை இருளாக இருந்தது. நெற்றியில் திடீரென்று ஏற்பட்ட வியர்வை யை நியூமோர் துடைத்துக் கொண்டான். எல் லாமே அர்பனுக்கு எதிராக இருப்பது போலத் தோன்றியது.

நியூமோர் சிவப்புக் குமிழை நகர்த்தி னான்.

''கட்டுப்பாட்டு மையம்,'' ஓர் இனிய குரல் பேசியது.

''என்னால் வெஸ்டர்னோடு தொடர்பு கொள்ள முடியவில்லை,'' என்றான் நியூமோர். (குறைந்தது அவன் கட்டுப்பாட்டு மையத் தோடு தொடர்பு கொண்டால் நல்லது!)

''கவலைப்பட வேண்டாம், தயவு செய்யுங் கள். தொடர்பு சீர்குலைந்து உள்ளது.'' (''அது ஒரு ரோபாட்டா, உயிருள்ள பெண் பேசுகிறதா?'' ஜியோமிதிப்படி சரியான உருவங் களைக் காட்டும் பசுந்தலை இளம் பொன் மேனியளைப் பார்த்து நியூமோர் வியந்தான்.)

''எப்போது இந்தக் குறை சரிசெய்யப் படும்?''

"ச லை வாக்கில்." ("கடைசியில் அது ஒரு பெண்ணா கத்தான் இருக்க வேண்டும்.")

"எதனால் சீர்குலைவு ஏற்பட்டது?"

"சதுக்கத்தில் நடைபெறும் மராமத்துகள்." ("ஒரு பெண்ணால் தான் அப்படிச் சிரிக்க முடியும்.")

"ஆம். சன்னல் வழியாக என்னால் பார்க்க முடிகிறது."

கட்டுப்பாட்டு மையத்தின் பெண் நியூமோரைப் பதவிவாய்ப்பை எதிர்நோக்குவது போலப் பார்த்தாள்.

"அந்த அற்பத்தனமான புதிய மேல்தளத்தை எதற்காக அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை எனக்குக் கூற முடியுமா?"

"என்னை மன்னியுங்கள். நகர மேலாண்மையரின் உத்தரவுகளைப் பற்றி விவாதிக்க நான் அதிகாரம் பெற்றிருக்கவில்லை," அந்த இளம் பொன்மேனியள் குளுமையாகச் சொன்னாள்.

திரை இருளானது.

"ஒரு ரோபாட்டே போதுமானது," நியூமோர் முடிவு செய்தான். சரி, நிலைமைத் தெளிவாக இருக்கிறது. நாளைக் காலை அவன் வெஸ்டர்னை அழைத்து அர்பனை எச்சரிக்க நினைத்தான்.

நியூமோர் தனது பிரம்மாண்டமான, கோபுரம் போன்ற ஆய்வுக்கூடத்தை ஒரு பார்வை செலுத்திவிட்டு கதவுக்குள் நுழைந்தான்.

நியூமோர் மனித உதவியாளர்களை விரும்பி

யதில்லை. அறிவுமந்தமாக இருந்தாலும் சுறு சுறுப்பான ரோபாட்டுகளையே மனிதர்களை விட விரும்பினான்.

செய்ய வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. அந்த இரவு தூங்க முடியும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆல்வாவின் திடீர் கலகம் — விநோதமான நடத்தை கலகம் என்று அழைக்கப்படுமேயானால் — அவனது திட்டங்களை சீர்குலைத்துவிட்டது.

முதற் காரியமாக அவன் காந்த கண்ணியை ஏற்பாடு செய்தாக வேண்டும். இத்துடன், அவனது ஆய்வுக்கூடத்தில் குறைந்தது ஓர் அறையையாவது, சிறிதாக இருந்தாலும், சுவர்கள், தரை மற்றும் கூரை இவற்றைப் பாது காப்பு பிளாஸ்டிக்கால் பூச ஏற்பாடு செய்தாக வேண்டும். காந்த கண்ணியில் ஆல்வா பிடிபடுகின்றவரை அர்பன் இங்குதான் வசித்தாக வேண்டும்.

முக்கியமான விஷயம் ஆல்வாவைப் பிடிப்பது தான். பிறகு நியூமோர் சிக்கலின் மூலத்தை அறிந்துகொள்ள முடியும். மேலும் இரண்டு பகுதிகளை ஒன்றாக ஒட்ட வேண்டும். அதன் பெயர் என்ஜினியர் அர்பன்.

பிளாஸ்டிக்கால் சுவர்களைப் பூசுவது ஒன்றும் சிரமமான காரியமில்லை. எந்த ஆய்வுக்கூட உதவியாளனும் அந்தப் பணியைச் செய்யக் கூடும். ஆனால் மிகக் குறைவானவர்களே அதைப் பற்றி அறிந்தால் நல்லது.

இல்லை, ரகசியத்தை அவன் ரோபாட்டிடம் கூட ஒப்படைக்க மாட்டான். அதை

அவனே செய்ய முடியும். மேலும் அவன் அந்த வேலையை ஒழுங்காகச் செய்வான். ஒரு துளை கூட இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் அது சேதத்திற்குக் காரணமாகும்.

நியூமோர் அயானாபிளாஸ்டிக் உருளையைத் தயாரித்து வேலையைத் தொடங்கினான். இருப்பினும் அவன் வலுத்த முன்னெச்சரிக்கைக்கு ஆட்பட்டான். திரும்பத்திரும்ப அவனது மூளை காந்தத்தின் இரு முனைகளைப் பற்றி, அவன் உண்டாக்கிய ஆல்வா மற்றும் அர்பனை ஒரு பெரிய நகரத்தில் திகைப்பூட்டும் சிக்கலுக்கு ஆளாகி அலைந்து கொண்டிருக்கும் நிலையைக் கற்பனை செய்தது.

'வளர்ச்சியடைந்த திரிபுரு'வாக அர்பன் உலவப் போவது இந்தக் கடைசி இருபத்தி நான்கு மணி நேரம் மட்டுமே. பழைய அர்பனை விட இது எதார்த்தமாகவே வளர்ச்சி பெற்றது தானா? அவன் அதை சீக்கிரமே அறிவான் — இன்னும் சில மணி நேரங்களே எஞ்சி இருந்தன.

அர்பன் தனது காரை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்தான், தானியங்கு ஓட்டுநர் பொறுப்பாக இருந்தான்.

இல்லை, நியூமோரினுடைய சோதனை ஒரு வெற்றியாக நிரூபிக்கப்படவில்லை. ஆரம்பத்திலேயே அது தோல்வியாகக் கருதப்பட்டதை

யார் அறிவார்? மனித இயல்பை மாற்றிவிடவா முடியும்?

சரீரமில்லாத ஆல்வா தனது பணியைச் செய்வதில் தோல்வியடைந்து விட்டான் — அழகன் சார்லியின் நினைவுகளிலிருந்து அர்பனை விடுவிக்கக்கூட அவன் தவறிவிட்டான்.

''உனது சொந்த வரைபடங்களுக்கு ஏற்ப உயிரை வடிவமைப்பது என்பது எவ்வளவு அதிசயமானதாக இருக்கும்!'' அர்பன் வேடிக்கையாக நினைத்தான். திரும்பவும் புதிதாக உயிர்களை உண்டாக்கும் பணி அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால், உலகத்திலுள்ள மிகச் சிறிய உயிரினம் கூட மகிழ்ச்சியடையும் படி அவன் பார்த்துக்கொள்வான்.

தெருவின் வழியாக ஓசையின்றி அவனது கார் விரைந்தது. அசதியாகச் சுற்றிலும் பார்த்தவாறு, அர்பன் நாளைத் தனக்கு என்ன காத்திருக்கிறது என்று சிந்தித்தான்.

...உலகத்தில் ஏன் உயிர் துயரத்திலிருந்து விடுபட முடிவதில்லை?

எப்போதோ மறந்துபோன உணர்ச்சி அர்பனைக் கிளறியது. அது எப்பொழுதுமே ஈடுபாட்டை ஏற்படுத்தியது. அதை அவன் வளர்த்துக் கொள்ள முயன்றபோது, வார்த்தைகள் தாங்களாகவே வலியவந்து வரிகளாக அமைத்துக்கொண்டன, சிந்தனைகள் கற்பனை உடைகளைத் தரித்துக் கொண்டன. நகரத்தின் தெருக்களில் ஆல்வா தோன்றிய பிறகு இந்த உணர்வு அவனிடம் தோன்றவே இல்லை... இங்கும்கூட நியூமோரினுடைய

கண்டுபிடிப்பு தோல்வியையே வெளிப்படுத்தியது.

அர்பன் தனது கண்களை மூடினான். ஒன்றன் பின் ஒன்றாக வரிகள் அவன் எண்ணத்தில் பளிச்சிட்டன.

''நான் அதைக் குறித்துக்கொண்டிருக்க வேண்டும்... பரவாயில்லை, நாளைக்குச் செய்வேன், நியூமோரிடமிருந்து நான் திரும்பும் போது,'' என்று அர்பன் நினைத்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவன் சார்லியை நினைவு கூர்ந்தான்.

...கல்லூரியில் அவன் இரண்டாம் ஆண்டு இருந்த போது அது எப்போதோ நடந்தது. அவனும் அழகன் சார்லியும் பக்கத்து வகுப்புகளில் இருந்தார்கள். அழகு என்பது வெறுமனே அழகு மட்டுமல்ல — மிக அருமையாக வருவான், பயிற்சியின் போது ஒவ்வொரு பயிற்சியாளனும் தாடி முளைத்துக் காணப்பட்டாலும் எப்போதுமே மழித்த முகம் நேர்த்தியான உடையுடன் காணப்படுவான். இயற்கையாகவே, சார்லி பெண்கள் மிகவும் விரும்பக் கூடியவனாக இருந்தான்.

ஆனால் அது அவனது இயல்பின் ஒரு கோணம் மட்டுமே — மிக முக்கியமான ஒன்று அல்ல. இதில் மிகவும் வியக்கத்தக்கது, அவனது இத்தகைய எல்லா காதல் கற்பனைகளுக்கு மாறாக அவன் அந்தக் கூட்டத்திலேயே சிறந்தவனாகத் திகழ்ந்தான். ''சுறு

சுறுப்பான பேர்வழி,'' சிலர் கூறினார்கள். ''அவனுக்கு வேண்டியதை அவன் அறிவான்.'' மற்றவர்கள் தோளைக் குலுக்கினார்கள். இக்கூற்று எதுவாக இருந்தாலும், சிக்கலான பொறி இயல் வினாவுக்கு சார்லி கன்ஸோனையை விட தீர்வுகாணக் கூடியவர்கள் அந்தப் பள்ளியிலேயே யாருமில்லை. மேலும் ஆய்வாளர்கள் பள்ளிக்கு வருகின்ற நேரமெல்லாம், பள்ளியின் கௌரவத்தைக் காப்பாற்ற எப்போதுமே இவன் அழைக்கப்படுவான். அர்பன் பொறாமைக்கு ஆட்பட்டான். புத்திசாலி சார்லியைவிட தனது திறமைகள் தன்னை வெகுதூரம் தள்ளிவைத்திருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டான். எவ்வளவுதான் கஷ்டப்பட்டு அவன் முயன்ற போதும், ஒருமுகப்பட்டு உழைத்ததால் அடைந்த சாதனையை அதிர்ஷ்டத்தின் அன்பு மகவு சார்லி தனது கை விரல்களால் கட்டிக்கொண்டு போய்விடுவதுண்டு. மேலும் அவனது பொறி இயல் தீர்வுகள் ஒட்டு மொத்தமாக ஒப்பிட முடியாத அளவுக்கு அர்பனுடையதைக் காட்டிலும் மிகப் பாங்காக இருந்தன. ஒரு சுரங்கப் பாதை அமைப்புப் பற்றிய அர்பனுடைய வரைபடத்தைக் . கண்டு ஓர் ஆய்வாளர், ''ஒரு கோடரியால் துண்டி,'' என்றார்.

விருப்புகளை காலவரையறைப்படி ஒழுங்குபடுத்தும் பணியினைச் செய்யும் ஆகாயத்தின் உயிரியின் தோற்றமுடைய வின்னிபெக், அவனுடைய சுற்றில் வந்தபோது அர்பனுக்கு வாழ்க்கை தாங்க முடியாத துயரமுடையதாக

மாறியது. ஆரம்பத்தில் தனது வாழ்க்கையின் பொருளை அறிந்ததாக அர்பன் கற்பனை செய்து கொண்டான். வின்னியும் போதுமான அளவுக்கு நட்புப் பாராட்டினாள். அவனோடு உரையாட முற்றிலும் விரும்பினாள். ஒரு முறை ஓர் அருந்தகத்திற்கு அழைத்துச் செல்ல ஒப்புதல் தந்து அங்கு கொஞ்சம் ஐஸ்கிரீமும் பெற்றுக்கொண்டாள். ஆனால் ஒரு அதிர்ஷ்டமில்லாத நாளில் வின்னியை சார்லியுடன் அர்பன் பார்த்தான். கவலை அவனை விழுங்கியது. தனது எதிரியை ஒழித்துக்கட்ட வேண்டிய வழியைக் கண்டு பிடிப்பதில் தனது நாட்களை அவன் செல விட்டான். ஆனால் இரவில் சாத்தியமாகத் தெரிந்தது, பகல் வெளிச்சத்தில் முட்டாள் தனமான தந்திரமாக நிரூபனமானது. மணிக் கணக்காக அர்பன் கண்ணாடியின் முன் அமர்வதுண்டு, தனது மிகச் சாதாரண முகத்தை ஆராய்ந்தபடி. இல்லை, வெல்ல முடியாத சார்லிக்கு சவால் விடும் வகையில் அவன் சாதனவாய்ப்புக்களைப் பெற்றிருக்கவில்லை...

தனது இருக்கையின் பின்புறம் சாய்ந்தபடி, ஆழ்ந்த உறக்கத்தில் இருளடைந்து காணப்பட்ட வீடுகளை கவனிக்காது பார்த்தபடி இருந்தான். கடினமான பகலுக்குப் பிறகு நகரம் சீக்கிரமாகவே தூக்கத்தில் ஆழ்ந்தது. இரவு விடுதிகளின் குவிமாடங்களே ஒளி விட்டன.

விமானக் கோட்டத்திற்கு அன்று ஏன் அவன் வந்தான்? எண்ணெய்க் குப்பியைத் தேடியா? அல்லது பெர்மாலோய் கலவைக்

கம்பி உருளையைத் தேடியா? அல்லது வெறுமனே வெக்கையிலிருந்து விடுதல் பெறும் தேடலா? அன்றைய தினம் நடந்த ஒவ்வொரு மிகச் சிறிய விஷயங்களையும் 'திரும்ப நினைக்க அர்பன் ஆயிரக்கணக்கான தடவைகள் முயன் றான். ஆனால் இந்தக் குறிப்பிட்ட விஷயம் மட்டும் அவனது நினைவிலிருந்து முற்றாக நழுவியது.

அது ஜூலை மாதத்தின் நண்பகல். அந்த அட்சாம்சத்தில் வெப்பம் முற்றாகக் கேள் விப்பட்டதே இல்லை. எல்லாருமே சோர் வுற்று இருந்தனர். அர்பன் ஒரு வடக்கத் தியனாதலால் வெப்பத்திற்குக் கிட்டத்தட்ட நோய்வாய்பபட்டுப் போனான். விமானக் கோட்டத்திற்குள் இறுதியாக நுழைவதற்கு முன்னால், பயிற்சி விமானதளத்தில் சில காலம் அலைந்து திரிந்ததை அவன் நினைவு கூர்ந்தான். கிட்டத்தட்ட பாதி இருட்டில் பார்க்க அவன் கண்கள் பழகிப்போகின்ற வரை அவன் வாசலில் நின்றான். அந்தக் கோட்டத்தில் குளிராக இருந்தது. அர்பன் தீர்மானத்தோடு உள்ளே நடந்தான். திடீ ரென்று அவன் நின்றான், ஒரு சுவற்றுக்குள் ஓடுவது போல. நீண்டு வந்த சூரியனின் பொன்னிறமான ஒளியின் மையத்தில் சார்லி நின்றான். அவனது முகம் கடுகடுப்பாக இருந் தது. அர்பன் உற்றுப்பார்த்தான். காடாபுல்ட் சார்லி மும்முரமாக இருந்தான். ''நாளை அவன் பறக்க வேண்டிய நாளா?'' அர்பன் வியந்தான்.

என்ஜினியர்களுக்குப் பறக்கும் பயிற்சி கட்டாயமாக இருந்தது. அதில் தனித்துறை பயிற்சிக்கேற்ப ஒரே ஒரு தடவை சப்-ஸ்பேஸ் பறத்தலோ அல்லது இரு வாரகாலம் முறையாக விண் வெளியில் பயிற்சிப் பறத்தலோ அடங்கும். அர்பனும் சார்லியும் அந்த ஒரே பயிற்சியை மட்டும் அப்போது தான் தொடங்கியிருந்தார்கள். தரை வேலையில் தனித்துறை பயிற்சிபெறும் என்ஜினியர்கள் மேற்கொண்டு எதுவும் செய்ய வேண்டியதில்லை.

பயிற்சிப் பறப்புகளின் போது காடாபுல்ட் அரிதாகத்தான் பயன்பட்டது. எதார்த்தத்தில் அர்பனால் ஒரு நிகழ்ச்சியைக்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஆனால், பறக்கும் போது ராக்கெட் தீப்பற்றிக் கொள்வது, மயக்கத்தில் இருக்கும் பயிற்சியாளனை ராக்கெட்டிலிருந்து காடாபுல்ட் வெளித்தள்ளுவது போன்ற புராணக்கதை அப்போது மாணவர்களிடையே பரவி இருந்தன. பாராசூட் அவனை ஒரு ஏரியில் இறக்கியது. அங்கிருந்து அதிர்ஷ்டமில்லாத அந்த விண்வெளி வீரனை சாரணர்கள் பாதுகாப்பாக கரையேற்றினர். இந்தப் புராணக் கதையில் ஏதேனும் உண்மை இருக்குமா என்பது யாருக்கும் தெரியாது.

காடாபுல்ட் செயல்படுவதன் மூலக்கோட்பாடு எளிமையானது தான். ஆபத்தின் போது ஒரு பொத்தானை அழுத்தினால் விண்வெளிக் கூண்டின் மேற்பகுதி திறந்து,

விமானி மேல் நோக்கித் தள்ளப்படுவான். புராணக் கதையில் கூறப்பட்டது போல ஏதேனும் கோளாறு ஏற்பட்டால் எந்திரம் தானாகவே செயல்படுவது போல வடிவக்கப் பட்டது.

தானியங்கி முறையைப் படிப்பது போல சார்லி காணப்பட்டான். தீவிபத்து ஏற்பட் டால் காடாபுல்டின் வெடிப்புக்கான பொறி இயங்கி ஒரு ரசாயன சங்கிலியால் அணைக் கப்படும் என்பதை அர்பன் அறிவான். இந்தக் கோட்பாடு பற்றி சார்லிக்கு முற்றாகத் தெரியாது. உண்மையில் அவன் ஊக்கிகளை அசுத்தப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தான். ஒரு ரசாயனச் சங்கிலியை அமைக்க வேண்டும் என் பது தெளிவாக இருந்தது.

இப்போது அவன் அர்பன் இருப்பதை அறிந் தான்.

''வெளியே வெப்பமாக இருக்கிறதா?'' ஒரு சோதனைக் குழாயில் பிரகாசமான பச்சை திரவத்தை சோதனை செய்தபடி உரக்கக் கேட்டான் சார்லி.

அர்பன் முணுமுணுத்தபடி பதில் கூறி அருகில் சென்றான். அவனது அதிர்ஷ்டக்கார எதிரி ஒரு காந்தம் போல அவனை இழுத் தான்.

''அது தானாகவே இயங்கத் தொடங்குமா என்பதை நான் கண்டுபிடிக்க விரும்புகிறேன்,'' சிம்மாசனம் போலக் காணப்பட்ட கைவைத்த ஒரு நாற்காலியைக் காட்டியவாறு சார்லி பேசினான்.

‘‘எப்படி?’’ வியப்போடு அர்பன் வினவினான்.

‘‘எந்தக் காரணமும் இல்லாமல் அல்லது ஏதோ ஒரு அற்பமான காரணம் என்று நான் கருதுகிறேன்,’’ சார்லி இரக்கத்தோடு விளக்கினான்.

அர்பனோடு கருத்தூன்றி சமமாக சார்லி பேசியது இதுதான் முதல் தடவையாகும். இதுவரை அவனது பேச்சுக்களைக் கேலியாகத் தான் கருதினான். இது அர்பனின் தவறா? அவன் எப்பொழுமே மனிதர்களைத் தவிர்த்து வந்திருக்கிறான்.

‘‘எந்த ஒரு விநோதமான காரணத் திற்காகவும் காடாபுல்ட் வேலை செய்யாமல் போகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்,’’ என்றான் அர்பன்.

‘‘அதைப் பற்றி நான் நிச்சயமாக இல் லை.’’

பயிற்சிக் கருவி நோக்கி அர்பன் சென்றான். ஸ்விச்சு நிறுத்தப்பட்டது. எதிர்கால என்ஜினி யர்களின் அநேகத் தலைமுறையினர் மெல் லியதான கால்சட்டை அணிந்து கொண்டு அமர்ந்த பிளாஸ்டிக் இருக்கையை சார்லி தட்டினான்.

‘‘சார்ந்திருத்தல் என்பது முதலாவது சிக் கல்,’’ என்றான் சார்லி. ‘‘ஒவ்வொரு பகுதி யும் கெட்டியானதாக இருக்க வேண்டும்.’’

‘‘நான் ஒத்துக் கொள்ளவில்லை,’’ என்று தனது பலத்தைக் காட்டுவதுபோல அர்பன் பேசினான்.

‘‘ஏன் அப்படி?’’ சோதனைக் குழாயை

துளையில் வைத்து விட்டு, ஒரு வெள்ளைக் கந்தல் துணியால் தனது கைகளைத் துடைத்த படி சார்லி கேட்டான்.

''சேமிப்பின் கெட்டி கூடுதலாக இருக்கு மானால், அமைப்பு மிக்வும் வலுவுள்ளதாக் கும்.''

''குறைவான கெட்டி இன்னும் அதிக ஆபத்தானது என்று நீ கருதவில்லையா?'' கண்களைச் சிமிட்டியபடி சார்லி கேட்டான். ''அம்மாதிரியான வேளையில் காற்று சுவாசிப் பதிலேயே தொடர்புகள் விடுபட முடியும். இதன் விளைவாக தானியங்கி ராக்கெட் பாதையை விட்டு விலகும், இலேசான பூமி அதிர்ச்சியினால் ஒரு கட்டடம் அமிழும், ஒரு பெண்...'' சற்று நேரம் இடைவெளி விட்டு பிறகு மணிச் சுருக்கமாகச் சொன் னான்: ''ஒரு பெண் மற்றொருவருக்காக உன்னை விட்டுப் பிரிவாள்.''

அர்பனின் முகத்தில் குருதி ஓடியது, அவன் திகைத்துப் போனான். ஒரு நாயை ஆரம்பத்தில் தட்டிக்கொடுத்து விட்டு பிறகு அதன் மூக்கில் எரிகின்ற சிகரெட்டை திணித்தது போல அவன் உணர்ந்தான்.

அதன் பிறகு அநேக ஆண்டுகள் கடந்து விட்டன. தனக்கு முன்னால் சிரித்த முகத் தோடு சார்லி நின்று கொண்டிருப்பதை அவனால் இன்னமும் காண முடிந்தது...

நகர மையப் பகுதியிலிருந்து அர்பனின் கார் கடந்து சென்று ஒதுங்குப்புறமாக விரைந்தது. இங்கு வீடுகள் தனிவாக இருந்

தன, விளக்குகளும் மோசமாக இருந்தன. விரைவிலேயே அவன் வெஸ்டர்னை அடைந்து விடுவான். வீடு, இனிமையான வீடு. மறுநாள் அவன் சிறப்பாக பணியாற்ற அவன் நன்கு தூங்கியாக வேண்டும். விரைவிலேயே அவன் தூங்கிப்போவான் என்று நம்ப வேண்டும்: அவனது நரம்புகள் இன்னமும் நன்றாகவே இருந்தன.

சார்லி...

கசக்கிப் பிழியப்பட்டது போன்ற அர்பனை கவனிக்காமலேயே சார்லி ஸ்விச்சை கவனக் குறைவாக அழுத்தினான். பிறகு பயிற்சி காடாபுல்டின் இருக்கையில் சாய்ந்தான். தானே கண்டுபிடித்த புதிய இரசாயன கல வையைச் சோதனை செய்ய அவன் விரும்பி னான் என்று பின்னதாக ஆய்வுக்குழு உறுதி செய்தது.

மேலேயிருந்து விழுந்த சூரியக் கதிர் சோதனைக் குழாயின் செப்புக் கம்பியில் விழுந்தது. இருக்கைக்குச் செல்லும் முன்பாக, ஆதரவாக ஒரு மணல் நாழிகை வட்டிலை வைத்தான். பொன்னிறமான மணல் கீழே விழ ஐந்து நிமிட நேரமானது. சார்லி தான் கண்டுபிடித்த முறையின் கெட்டி அளவை சோதிக்க விரும்பினான். காடா புல்டை இயக்கிய ஐந்து நிமிடங்களில் அந்த ரசாயனக் கலவை கம்பியைக் கரைக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தான். எதார்த்தமாகவே, காடாபுல்டில் அடிச்சுமை வைத்தது நல்ல காரியமாகும். ஆனால்

சார்லி கைநாற்காலியில் குதிக்கத் தயங்க வில்லை. அவனைப்பற்றி எத்தகைய குறிப்புரை சொன்னாலும், அவன் துணிவை இழக்க மாட் டான்.

சார்லி கைநிலைக்காலை அழுத்தினான், பிளாஸ்டிக்காலான மடிப்பு முகடு ஒன்று அவனை நோக்கித் தணிந்து வந்தது. மாலுமி அறையில் அவன் இப்போது ஒரு விண்வெளியாளனைப் போலக் காணப்பட் டான். குழந்தைகள் புத்தகத்தின் படத்தில் இருப்பது போல இருந்தது. இத்தகைய சர்க்கரை இனிப்பு மந்திரவாதிகள், விண் வெளி சிலிர்ப்புகளின் ஒவ்வொரு பக்கத்திலும் தோன்றினார்கள்.

''தேவைக்கு மேல் செய்து விட்டான், வீம்புக்காரன்,'' கனத்த மடிப்பு முகட்டைப் பார்த்தபடி அர்பன் நினைத்தான்.

மணல் நாழிகை வட்டின் அடிப்பரப்பில் பொன்னிறமான மணல் மெதுவாக வளர்ந்து கொண்டே இருந்தது. செப்புக் கம்பி மிக நுண்ணியதாக இருந்தது. அதனை சாதாரணக் கண்ணினால் பார்ப்பது கஷ்டமாக இருந்தது.

''வெளியே போ, போதும்!'' அர்பன் உரக்கக் கத்த விரும்பினான். ஆனால் அவன் கத்தவில்லை. இதில் என்ன விஷயமிருக் கிறது — மடிப்பு முகடு ஒலி புக வழியளிக் காதது.

தூண்டப்பட்டவன் போல அர்பன் மெல் லியதாக மணல் வடிவதைப் பார்த்தான். கடைசியாக! ஐந்து நிமிடங்களாகி விட்டன.

சார்லி அர்பனைப் பார்த்துச் சிரித்து, அவனை நோக்கி கையை அலைத்தான். பிறகு அவன் தனது கையை, கைநிலைக் காலுக்குத் தாழ்த்தினான்... ஆனால் மடிப்பு முகடு உயரவில்லை. ''அது நெருக்குண்டு விட்டது,'' அர்பன் உணர்ந்தான். ஊடுருவிக் காணக்கூடிய பிளாஸ்டிக் வழியாக சார்லியின் அழகிய முகம் வெளிறிப் போவதை அவன் பார்த்தான். தனது இருக்கையிலிருந்து எழுந்து, மடிப்பு முகட்டை வலிந்து அழுத்தினான். ஆனால் அது நகரவில்லை. அதனது நோக்கம், தேர்வுகளின் போது பயிற்சியாளர்களை நச்சுத்தன்மையான சூழ்நிலைகளிலிருந்து பாது காப்பதே ஆகும். மேலும் அதைக் கையினால் நீக்கி விடுவது என்பது இயலாதது.

சார்லி உறுப்புகளை அசைத்தான். அந்த கருவியைச் சுட்டிக்காட்டி ஏதோ கத்தினான். ஆனால் அர்பன் அவனது வார்த்தைகளைக் கேட்க முடியவில்லை. இருப்பினும், அவனுக்கு என்ன தேவைப்பட்டது என்பதை அவன் மிக நன்றாகவே அறிவான் — அவசரகால நிறுத்தல் பொத்தானை முடுக்குவதுதான். பிறகு காடாபுல்ட் செயல் தடைப்பட்டுப் போகும். அவன் வெறுமனே ஏதும் செய்ய முடியாதவனாக தோளைக் குலுக்கிக்கொண் டான்; சார்லியை இரக்கத்தோடு பார்த் தான். இருப்பினும், தனது தலையை அழகாக வைத்துக்கொண்ட சார்லி, அத்தகைய தெளி வான சைகை செய்தான். அதைப் புரிந்து கொள்ளாததற்கு ஒருவன் பேதையாகத்தான்

இருக்க வேண்டும். அர்பன் அதற்கு மேல் பா சாங்கு செய்ய முடியவில்லை.

"நீ மாட்டிக்கொண்டாயா," அவன் நினைத்தான். மற்றொரு சிந்தனையும் அவனது மனத்தில் தோன்றியது: மடிப்பு முகட்டிலிருந்து ஒரு முறை பாதுகாப்பாக வந்தானென்றால், இந்த மாட்டுதலை சார்லி ஒருபோதும் மன்னிக்க மாட்டான்.

கம்பி இதற்கிடையே காணக் கூடியதாக இல்லை. நிறுத்தல் பொத்தானை நோக்கி அர்பன் தனது கையை நீட்டினான் — மிகவும் மெதுவாகத்தான். அந்நேரத்தில் கயிறு அறுபட்டதால் ஏற்பட்ட நாண் தெறிப்பொலியால் அவன் செவிடானான். ஆபத்தான ஆரஞ்சு வண்ண தீநாக்குகள் காடாபுல்டின் கீழே ஒவ்வொரு காற்றாடியாக உடைந்தது. காப்ஸூல் சடசடவென மேல்நோக்கி ஏறியது. அவன் மிகவும் சுணங்கிவிட்டான்!.. யாருடைய அவல ஒலி, முயல் போலக் கத்தும் ஒலியாகக் கேட்கிறது? அவனுடையதா சார்லியினுடையதா?

உயரமான மடிப்பிட்டு வளைக்கப்பட்ட விமானக் கோட்டத்தின் இரும்புக் கூரை எதிரொலிக்கக் கனத்த வேகத்துடன் விழுந்தது. அதன் கிராதிகள் இத்தனை பெரிய அதிர்வைத் தாங்கக்கூடியவைகளாக இல்லை. மடிப்பு முகடு சிம்புசிம்பாகத் தெரித்து மழைபோல அர்பன் மீது விழுந்தது.

அர்பன் நின்று கல்பக்கம் திரும்பி மேலே பார்த்தான். கூரையின் மீது பயங்கரமான

கறை ஒன்று பரவியது. அதன் வழியாக சூரியக்கதிர்கள் உள்ளே நுழைந்தன. ஒரு கனத்த சொட்டு அர்பனின் தோள்மீது விழுந்தது. அதை எந்திர கதியில் தனது விரலால் அவன் தொட்டான். பிறகு பத்து நிமிடங்களுக்கு முன்னர் சார்லி பயன்படுத்திய பழைய கந்தையால் கையிலிருந்த குருதியைத் துடைத்துக் கொண்டான். பிறகு விமானக் கோட்டத்திலிருந்து உயிருக்குப் பயந்து ஓடினான்...

...சார்லியிடமிருந்து இரண்டு மாதகால இடைவெளியைப் பெற்றிருந்தான். இந்த இரண்டு மாதங்களாக சரீரமில்லாத ஆல்வா மிகவும் நேர்மையாக தனது பணியைச் செய்து கொண்டிருந்தான் — தனது மனச் சாட்சியின் பேயுருவினின்றும் தன்னைப் பாதுகாத்து வந்தான். ஆனால் கடைசியில் ஆல்வாவின் சொந்த அட்டூழியமே மிகவும் அஞ்சத்தக்க பேயுருவாகி விட்டது. அது யாருடைய தவறு, நியூமோரின் கட்டாய நிபந்தனைகள் எல்லாவற்றையும் நிறை வேற்றாத அர்பனுடையதா? அல்லது தனது சொந்த ஆல்வா குறித்து முழுமையாக சிந்திக்காது விட்ட நியூமோருடையதா? பெரும்பாலும் நியூமோர் மிகவும் அவசரமாக அவனது மூளைக்குழந்தையை வெளி உலகுக்கு விட்டிருக்க வேண்டும். அவனுக்குச் சிக்கலாக விளங்கிய சில வினாக்களைத் தெளிவுபடுத்தி இருக்கலாம். பிறகு பெருத்த அளவில் உற்பத்தியைத் தொடங்கி இருக்கலாம். பணக்

கார வாடிக்கையாளர்களிடமிருந்து நிறையப் பணத்தைக் கறந்திருக்கலாம்.

''என்னை அவன் மோசடி செய்தது போல மற்றவர்களையும் அவன் மோசடி செய்யலாம்,'' மோட்டார் வண்டி கொட்டடியில் தனது காரை நிறுத்தியபடி அர்பன் நினைத்தான். ''பணம் அவனுக்கு முதலாவதாக இருந்தது, மனித உயிர்கள் பொருட்டல்ல. நியூமோர் மாயைகளின் விற்பனையாளன். ஆல்வாவிடமிருந்து நான் விடுபட்டதுமே, இதன் விளைவு குறித்து ஓர் அறிக்கையை வெளியிடுவேன்...''

கார் கொட்டடியிலிருந்து அர்பன் வெளியே நடந்தான். குளுமையான இரவுக் காற்றைச் சுவாசிப்பதற்காக நின்றான்.

...இந்தக் கொட்டடியை விட விமானக் கோட்டம் மிகவும் உயரமானதாக இருந்தது — வடக்கில் அர்பனுடைய சொந்த நகரத்தில் அண்மையில் கட்டப்பட்ட நவீனமான சர்ச்சைப் போலத் தோன்றியது. கோட்டத்திலிருந்து அவன் விரைந்து வெளியே வந்தபோது, சுற்றிலும் எந்த மனிதனையும் அவன் காணவில்லை — கொளுத்தும் சூரியனுக்கு பயந்து எல்லாருமே ஒளிந்து கொண்டிருந்தார்கள். இவனது கூக்குரல் காரணமாக தூக்கக் கலக்கத்தில் இருந்த சில பயிற்சியாளர்கள் மர நிழல்களிலிருந்து வெளியே வந்தார்கள். நண்பகல் இடைவேளையை அங்கு அவர்கள் மகிழ்ச்சியோடு கழித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன், ''உனது தலைபோகும் படி எதற்காகக் கூக்குரலிட்டாய்?'' என்றான்.

''தீக்கனா எதுவும் கண்டாயா?'' ஒரு அரக்கன், சிவந்த தலையுடைய கடந்தாண்டு மாணவன் ஒருவன் கேட்டான்.

''அவனுக்கு ஒரு கைக்குட்டை கொடு!''

''அவனது தலையைத் தட்டு!'' அர்பனின் மீது கேலிப் பேச்சுக்கள் மழையாய் விழுந்தன.

அக்கறையில்லாது அவர்களை அவன் பார்த்தான்.

''ஹை... முற்றிய பைத்தியம் போலக் காணப்படுகிறான்!'' சிவத்த தலையுடையவன் ஆர்வத்தோடு கூவினான். பயிற்சிப்பள்ளியில் தனது நான்கு ஆண்டு காலத்தில் எல்லா வகையான விபத்துக்களையும் அவன் கண்டிருக்கிறான். சில பயிற்சியாளர்களின் நரம்புகள் கூடப் போய்விட்டன.

அர்பனுடைய கையைப் பற்றியடி, ''நிழலுக்கு வா,'' என்று யாரோ கனிவுடன் பேசினான்.

அர்பனுடைய கண்ணாடிக் கண்கள் கெஞ்சுவது போலக் காணப்பட்டன, ஆனால் அவன் ஒரு வார்த்தைகூட வெளிவிடவில்லை. கேலி செய்கின்ற அல்லது அலட்சியமான முகங்கள் அருவருப்பான வேஷமாக மாறியது.

''நீ ஏன் எதுவும் சொல்லாதிருக்கிறாய்? எதைப் பற்றி நீ கூக்குரலிட்டாய்?''

''கூறு! உனது வாய் மூடிப்போய் விட்டதா?''

''ஹை... சார்லி எங்கிருக்கிறான்?'' இளைஞர்களில் ஒருவன் நினைவு கூர்ந்தான்.

''இந்த பிரச்சினையை அவன் கணநேரத்தில் கண்டறிந்து விடுவான்.''

''அவன் இங்கு தான் இருந்தான். பிறகு எங்கோ மறைந்து போய்விட்டான்.''

''சார்லி!''

''அழகன்!''

''தேவதை முகம்!'' கூக்குரல் கேட்டன.

அர்பன் நடுங்கினான்.

''அங்கே... அங்கே,'' விமானக் கோட்டத்தைச் சுட்டிக்காட்டியபடி திக்கிப் பேசினான்.

''அங்கே என்ன?'' சிவப்புத் தலையன் பொறுமையாக, ஒரு குழந்தையிடம் பேசுவது போலக் கேட்டான். மற்றவர்களை அமைதியாக இருக்கும்படி அடையாளங் காட்டினான்.

''அங்கே... சார்லி அங்கே...''

' ''கோட்டத்திலா?''

''கூரையில்...''

''இப்போது எல்லாமே தெளிவாகி விட்டது. சார்லி கூரையின் மீது இருக்கிறான். வேறு எங்கு அவன் இருக்க முடியும்?'' சிவப்புத் தலையன் மகிழ்ச்சியோடு கூறினான். தனக்குப் பக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து, ''திசைத் தொடர்பமைவின் இழப்பு,'' என்று தணிந்த குரலில் பேசினான்.

யாரோ தலையை அசைத்தான். அப்படியானால், அப்பாவியின் இடத்தில் இருப்பதற்கு யாரும் விரும்பவில்லை.

கோலாகலமான கூட்டம் கேலியோடும் சிரிப்போடும் கோட்டத்திற்குள் நுழைந்தது. அர்பன் வெளியே தனிமையில் நின்று

கொண்டான். அவனது முறைப்படுத்தும் காலணியின் கனத்த உள்ளங்காற் பகுதி வழியாகக் கூட விமானத் தளத்தில் வரிசை யாக வைக்கப்பட்டிருந்த தீக்கல் கொடிக் கற்களின் வெப்பத்தை அவனால் உணர முடிந்தது. செங்குத்தான சூரியக்கதிர்கள் அவனை சுட்டெரித்தன. அழுக்கு வியர்வை அவன் முகத்தில் வழிந்தோடியது. அதை அர்பன் துடைத்துவிடவில்லை. அவன் அசை யாமல் நின்றான்.

...இரவின் குளுமையை துய்த்து மகிழ்ந்தபடி அவன் அசையாமல் நின்றான். இப்போதைக்கு அவனுக்கு ஆல்வா குறித்து அஞ்ச எந்தக் காரணமும் இல்லை. அவனது இரட்டை நகரத்தின் மத்தியில் எங்காவது கட்டாயம் அலைந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே, வெளிப்படையாக அத்தகைய நினைவுகளை ஒருவரும் ஒருபோதும் உதறித் தள்ளிவிட மாட்டார்கள். அவன் முயன்று பார்த்தான், ஆனால் எதுவுமே வரவில்லை. அதாவது அவனது சாகும் நேரம் வரை சார்லி அவனுடன் இருப்பான் என்பது பொருளாகும்.

உறைபனியாய் உயிரோட்டமிழந்த நிலைக்கு ஆளானதற்கு முன்னர் அர்பன் தனது தனி யறைக்குச் சென்றான். ''நாளைக்கு நான் டாக்டரைப் பார்ப்பேன்... நான் தீக்காயம் பட்டதை அவருக்குச் சொல்வேன்,'' தனக்குப் பின்புறம் கதவை சாத்தியபடி அவன் முடிவு செய்தான்.

ஆனால் டாக்டரைப் பார்க்க வேண்டிய

அவசியம் அவனுக்கு இல்லை. காலையில் வலி மறைந்து விட்டது. மகிழ்ச்சியாக சீழ்க்கை யொலி செய்தபடி அர்பன் வீடியோபோனை இயக்கினான். அர்பனைப் பார்த்த மாத்திரத் தில் அந்த அழகிய செயலாளர் தனது கண் களைத் தவிர்த்தாள். அவனது கருத்தூன்றிய பார்வையை அவளால் தாக்குப்பிடிக்க முடிய வில்லை.

''இன்று நான் வர முடியாது,'' என்று அர்பன் சாதாரணமாக அவளிடம் தெரிவித் தான்.

''தலைவரிடம் நான் என்ன சொல்ல?'' செயலாளர் வினவினாள்.

''நியூமோரிடம் ஒரு விஷயத்தை கலந்து பேசுவதற்காகச் நான் போய்க் கொண்டிருக் கிறேன் என்று அவரிடம் கூறவும்.''

''அவர் ஏற்கெனவே அழைத்துவிட்டார்,'' செயலாளர் எதிர்பாராதபடி வலியப் பேசினாள்.

''அவன் அழைத்தானா? இந்த எண்ணிலா?''

''ஆமாம். கம்பெனியின் எண்ணில்.''

''விசித்திரமானது!'' அர்பன் நினைத்தான்.

''அவரோடு ஒரு முக்கியமான விஷயம் உங்களுக்கு இருக்கிறது என்று டாக்டர் நியூ மோர் கூறினார். நீங்கள் நிறுத்தி வைக்கப் படக் கூடாது என்று அவர் கேட்டார்.''

''தலைப்புச் செய்தியில் அவனை நான் கூறி வைக்கப் போகிறேன் என்பதை அவன் அறிந் திருந்தால் மட்டுமே!'' அர்பன் முகஞ்சுளித்த படி எண்ணினான். பிறகு வீடியோபோனை நிறுத்தினான்.

ஆல்வா எங்கே இருக்கிறான்? இரவு நேரத்தில் அவன் தனது வீட்டைப் பார்த்துப் போயிருக்க வேண்டும். அல்லது திசை குறியை அவன் இழந்தபடி தெருக்களில் குறிக்கோள் இல்லாது சுற்றிக்கொண்டிருக்கிறானா? நடைமுறையில் நேரமே இல்லை என்பதை அந்த அப்பாவி எங்ஙனம் அறிந்திருக்க முடியும்? கேலியாகச் சொன்னால், தன்னைப் படைத்தவனாலேயே அவன் கொலை செய்யப்படவிருக்கிறான். அர்பன் விரைவிலேயே தனது பழைய நிலைக்குத் திரும்புவான், அதே வேளை ஆல்வா, ஆதாரதுகள்கள் பிரிந்து போவதனால் மறைந்து போவான். இது எவ்வாறு நிகழப் போகிறது: காலப்போக்கில் அல்லது திடீரென்று வாணவேடிக்கைபோல நடக்கும் என அறிந்து அவன் வியப்படைவான். அவன் நியூமோரை கேட்க முடியும். மறுபுறத்தில் கேட்காமலிருப்பது நல்லது. இது அவனுக்குப் புண்ணாகிவிட்ட இடமாகும்.

எவ்வளவு குறைவாக தலையை அசைக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய அர்பன் முயன்றான். அவனது கழுத்து இன்னமும் வலிக்கவே செய்தது. ஆனால் அந்த வலி அவனது மைய மனநிலையைக் குறைக்கவில்லை.

சார்லி யார்? ஓ! விமானக் கோட்டக் கிராதிக்கு எதிராகத் தன்னையே சின்னா பின்னமாக்கிக் கொண்ட பாத்திரம்! சரியாகவும் செய்தான். இதில் அர்பனுக்கு எந்தத் தொடர்

பும் இல்லை.

இரவின் அரையிருளில் அவனது அச்சங்கள் அடித்துச் செல்லப்பட்டன. அர்பன் தனது தன்னம்பிக்கையைத் திரும்பப் பெற்றான். ஒரு வேளை அவன் நியூமோரிடம் போகாது இருக்கலாம்? ஒருவேளை விஷயங்களை அப்படி யே விட்டு விடுவது நல்லதாக இருக்கும்? ஆனால் அவன் இந்த எண்ணத்தைத் தவிர்த்து விட்டான். ஆள் நடமாட்டமில்லாத தெரு நெடுகவும், குவிமாடத்தைச் சுற்றிலும் இரவு முழுக்கத் துரத்திய நினைவு புத்தம் புதியதாக வும் அச்சத்தைத் தருவதாகவும் இருந்தது. ஆல்வாவைத் துரத்த அவனுக்கு அந்தக் குவி மாடம் மட்டும் இல்லாதிருந்தால் அவன் இறந் திருப்பான்...

அதன் பிறகு மிகவும் எதிர்பாராது ஏற் படும் சார்லியைப் பற்றிய இந்த நினைவு மிக வும் பயங்கரமானதாக, இரண்டு மாத மறதி யின் பரிமாணத்தைக்கூட உடைத்துவிட்டது. அது இவ்வாறு இருக்கையில், நியூமோரின் கண்டு பிடிப்பு சல்லிக்காசு பெறாது. சோதனை செய்து பார்ப்பதற்கு அவன் வேறு முட்டாள் களைத் தேடட்டும். அர்பன் தனது உயிரை இழக்க வைத்த ஆல்வாவின் இந்தத் தோல் விக்குப் பிறகு அநேக விருப்பார்வம் கொண்ட வர்களை அவன் பெறுவது அரிதாகத்தான் இருக்கும். நியூமோர் அவனை ஏமாற்றி விட் டான். இதைப் பற்றிச் சொல்லாது அவன் வாய்மூடி இருக்கப் போகிறானா?

முன்னதாக, ஆல்வா வரு முன்பு அவன் நலமின்றி இருந்தான். இப்பொழுது அவன் திரும்பவும் நலமாகி விட்டான். நிச்சயமாக அவன் தனது முன்னைய நிலைக்குத் திரும்ப வில்லை!..

அர்பனை விடாது பிடித்துக் கொண்டிருந்த எல்லாவித மூளைத் தொல்லைகளுக்கும் சார்லி என்ற ஒரு பெயர் உண்டு என்பது பிறருக்குத் தெரியாது. பேயுருக்களால் அவன் கொடுமைப் படுத்தப்பட்டான், தூக்கம் பிடிக்கவில்லை, அவனது ஆற்றல் எல்லையின் கடைசி நிலைக்குத் துரத்தப்பட்டான். ஆல்வா அவனது தீய நினைவுகளினின்றும் அவனை விடுவிப்பான் என்று நியூமோர் சுட்டிக்காட்டிய போது, அத்தகைய ஒரு வாய்ப்பை அவன் தவற விடு வானா?

ஆனால் இப்பொழுது என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியும். சார்லியை துரத்தி அடித்துவிடுவான்.

"...நீ ஒரு கொலைகாரன்," என்று சார்லி பழக்கப்படி கேட்கலாம்.

"அது ஒரு பொய்," அர்பன் பதிலளிப் பான்.

"பொய் என்றால் என்னவென்று நீ நினைக்கிறாய்?" வியப்போடு சார்லி கேட் பான். "பிறகு என்னைக் கொன்றது யார்?"

"நீ உன்னைக் கொன்று விட்டாய். அல் லது, ஒருவேளை உனது வீம்புரை உன்னைக் கொன்றுவிட்டது. நமது கடைத்தேற்றம் அடக் கத்தில் தான் இருக்கிறது."

''ஓ... நான் காடாபுல்ட்டில் அடைபட்ட போது, அவசரகால நிறுத்தல் பொத்தானை இயக்காமல் உன்னைத் தடுத்து நிறுத்தியது எனது செருக்குத்தானே?''

...சார்லியின் வசைப் பாங்குடைய குரல் எதார்த்தமாக ஒலித்தது. அர்பன் கிளம்பி சுற்றிலும் பார்த்தான். உண்மையில் யாரும் அங்கு இல்லை. நகரத்தின் கிழக்கு மேற்குப் பகுதிகளை இணைக்கும் பாலத்தின் மீது அவன் கார் விரைவாகச் சென்று கொண் டிருந்தது. அர்பனால் குறியிட்டுத் தரப்பட்ட இடத்தில் மிகக் குறுகிய வழித்தடத்தில் தானியங்கி ஓட்டுநர் அதைச் செலுத்திக் கொண்டிருந்தான். ஒளியுடன் கூடிய புள்ளி கள் தொலைவில் பாதிதூரத்தை ஏற்கெனவே அது கடந்துவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டி யது.

''நியூமோர் எனக்காக அவசியம் காத்துக் கொண்டிருப்பான்,'' வெஸ்டர்னிலிருந்து வெளி யேற்றப்படும் கதிரியக்கக் கழிவுப் பொருட்கள் பாய்வதால், குளிர்காலத்தில் கூட உறைந்து போகாத ஆற்று நீரை கீழே பார்த்தபடி அர்பன் நினைத்தான். கடலை நோக்கி, பனிபடர்ந்த இரு கரைகளையும் தழுவியபடி கருப்பு நிற நீர் மெதுவாகச் செல்வதைப் பார்க்க விசித்திரமாக இருந்தது. கழிவுப் பொருட்கள் தீங்கு விளைவிக்காதவை என கம்பெனி உறுதிகள் தந்துள்ளது. இருப்பினும், ஆற்றில் ஏராளமான மீன்கள் இருக்கின்றன. எனினும் இந்த நீரில் குளிப்பதற்கு நகரவாசி

கள் தயங்கினார்கள். நகரின் குளியல் இடங்கள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன.

ஒளியுடன் கூடிய புள்ளிகளின் கோடு வளரவே, ஒரு வெறுமையான ஆர்வம் அர்பன் இதயத்தில் குடி கொண்டது. அவர்களது சந்திப்பிற்காக பயோ சென்டரை ஏன் நியூமோர் தேர்ந்தெடுத்தான்? அர்பன் அங்கு பலமுறை இருந்திருக்கிறான். அதன் எல்லைக்குள் கார்கள் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதை அறிவான். நுழைவுச் சீட்டு வாயில் வழியாக அர்பன் செல்ல வேண்டும். நியூமோரின் கையெழுத்துக் கொண்ட அட்டையைக் காட்டி, ஜன்னலுக்கு அப்பால் வைக்கப்பட்டுள்ள எலெக்ட்ரானிக் பொறியில் வைக்க வெண்டும். நியூமோரின் கையெழுத்தை அந்தப் பொறி அசலானது தானா என்பதை உடனடியாக முடிவு செய்யும் — எந்தக் கள்ளத்தனத்திற்கும் வழியில்லை — ஓர் ஒளி அதிலிருந்து கிளம்பும். அந்த குறுக்கைக் கடவு முழுமையாகத் திரும்பி நிற்கும், அர்பன் அதற்குள்ளாகத் தடையின்றி போகலாம். அங்கு நியூமோரின் புயத்தின் கீழ் அவன் பாதுகாப்பாக இருப்பான். ஆல்வா அதற்குள்ளாக நுழைந்து விட்டால், நியூமோரும் அவனும் சாக வேண்டியதுதான். சந்தேகத்திற்கிடமின்றி நியூமோர் அதை அறிந்திருப்பான். ஆபத்தான வருகைக்கான ஏற்பாடுகளை அவன் கட்டாயம் செய்திருப்பான், சுவர்களையும் கூரையையும் பிளாஸ்டிக்கால் மெழுகி இருப்பான்.

கார் திடீரென நின்றதால் அர்பன் முன்னுக்குத் தள்ளப்பட்டான். அவனது தலையின் பின்பக்க வலி அவனை ஊக்கமற்றவனாக்கி, புதிதாக வலித்தது. அர்பன் முன் பக்கம் பார்த்தான். பயோ சென்டரின் முன் பக்கச் சதுக்கம் வேலிபோடப்பட்டிருந்தது. சுரங்க வேலை நடை பெறுவதால் நேரான பாதை இல்லை என்பதை ஓர் அறிவிப்புத் தெரிவித்தது.

காலைச் சூரியனின் கதிர்பட்டு மென்மையான பனிக்கட்டி ஒளிர்ந்தது. துணிவை வரவழைத்தபடி அர்பன் காரில் உட்கார்ந்து இருந்தான்.

''நான் இங்கிருக்கிறேன் என்பதை ஆல்வா எங்ஙனம் அறிய முடியும்?'' அவன் கேட்டுக் கொண்டான். ''இந்த இரண்டு மாதத்தில் அவன் ஒருவகையான பண்புருவை வளர்த்துக் கொண்டிருப்பான். மேலும் இந்த நேரத்தில், நகரத்தின் மறுபுறத்தில் உள்ள வெஸ்டர்னில் இருப்பேன் என்பதை கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். நியூம் அழைத்திருக்கிறான். அவன் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான்.''

பாய்ந்து செல்வதென்று அர்பன் முடிவு செய்தான். கதவைத் திறந்து விட்டு வெளியே குதித்தான். அன்று குளிராக இருந்தது. சதுக்கத்தில் பனிப்படிவு பளபளப்பாகப் பிரகாசித்தது. ''விநோதமான பனி,'' அர்பன் நினைத்தான். பனி படர்ந்த மேல்தளத்தில் அவன் காலை வைத்தவுடனேயே வழுக்கி விட்டு கீழே விழவிருந்தான். அவனது கை மினு

மினுக்கும் தரையைத் தொட்டது. "செயற் கையான பனிக்கட்டி. அதுதான் இது. எந்த முட்டாள் இதை இதில் வைக்க நினைத்தான் — சதுக்கம் முழுமையும் செயற்கைப் பனிக் கட்டியால் பரப்பி? எவர்க்கு இது தேவைப்பட் டது? எதற்காக? சாதாரண நீரையே ஏன் பயன்படுத்தி இருக்கக் கூடாது? ஓ... ஆமாம். நேற்று மிகவும் வெப்பமாகத்தானே இருந்தது. நீர் உறைந்து போகவே முடியாது!"

குழந்தைப் பருவத்தை நினைத்துக்கொண்டு நெடுகிலும் நழுவியோடி விடலாம் என எண்ணியபடி அர்பன் ஓர் ஓட்டம் பிடித்தான். ஆனால் எதிர்த்துத்தாக்கும் ஓர் அலை அவன் முகத்தில் மிக வலுவாக அடித்தது. "பரவா யில்லை, இந்த வேக அளவு சீக்கிரமாகவே மறையும்," கவனத்தோடு தனது வழியில் முன்னேறியபடி அவன் நினைத்தான்.

சதுக்கத்தில் அவ்வளவாக ஆட்கள் காணப் படவில்லை. ஓரத்தில் நடந்தபடி ஓரிரு பாத சாரிகள் தங்கள் வழியைப் பார்த்துச் சென்று கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கத்தில் வழுக்கல் மிகக் குறைவாகவே இருக்க வேண் டும். ஆனால் அர்பன் குறுக்காகச் செல்ல முடிவு செய்தான்.

அவனது எண்ணங்களில் மூழ்கியவனாக அர்பன், சதுக்கத்தின் மையத்தில் இருந்த நினைவுச் சின்னத்திலிருந்து தனியாகப் பிரிந்து அவனைநோக்கி வந்த ஓர் உருவத்தை உடனடி யாக கவனிக்கவில்லை.

அதை பார்த்தபொழுது அவன் "சார்லி!..

மீண்டும்...'' என்று முணுமுணுத்துப் பார்ப்பதைத் தவிர்த்தான்.

ஆனால் அது சார்லி அல்ல. அது அவனது இரட்டை என்பதையும், கொல்வதற்காக வந்து கொண்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள அர்பனுக்கு நீண்ட நேரம் பிடித்தது.

அவன் நேரத்தைத் தவறவிட்டு விட்டான். மேலும், கண்மாறாட்ட நடவடிக்கைக்கான வாய்ப்புகளும் வழுக்கல் தரையில் செயலாக்க முடியாததாகிவிட்டது. ஆல்வாவைப் பொருத்த மட்டில் பனிக்கட்டி அல்லது கருங்காரை எது வாகவும் இருக்கலாம். எல்லாமே அவனுக்கு ஒன்றுதான்.

மேலும், தனது வழியில் நின்று, ஓடுவது பற்றி அர்பன் சிந்தித்தான். இருப்பினும், அது பயன் தராது என்றாலும் கூட, அடுத்த நொடி அவனுக்குத் தோன்றியதெல்லாம், சார்லி திரும்ப வந்து விட்டபடியால், அதை முடிவு கட்டியாக வேண்டும் என்பதுதான். ஆக வே அவன் முறுவலித்தான். தனது பேய்யுருவின் இரட்டையைச் சந்திக்க நடந்தான்... சார்லி யைச் சந்திப்பதற்காக, அவனது மனச்சாட்சி யின் ரகசியமான வேதனைகளைச் சந்திப்பதற் காக...

''ஆனால், இந்தக் காலையில் நான் இங்கு இருப்பேன் என்பதை அவன் எங்ஙனம் அறிந்தான்? நிச்சயமாக சேணிலை உணர்வுத் திறமைகளை வளர்த்துக்கொண்டிருக்க முடியு மா?'' அர்பன் கடைசியாக நினைத்தான்.

அந்த வெடிப்பு அவ்வளவு ஒன்றும் உரக்க

இல்லை. திடீரொளி ஏற்பட்ட இடத்தில் பழுப்பு நிறக் காளான் மேலே எழுந்தது. ஒரு நிமிடத்திற்கு முன்னர் பாலைவனமாய்க் காணப்பட்ட அச்சதுக்கம் திடீரென்று உயிர் பெறலாயிற்று. எந்த நகரத்திலும் எந்த நேரத்திலும் பகலாகட்டும் இரவாகட்டும் ஆர் வமுள்ள பார்வையாளர்கள் எப்பொழுதுமே ஒரு நிமிடத்திற்குள்ளாகவே ஒரு விபத்தைப் பார்க்கக் கூடி விடுவார்கள் — இரண்டு ஹெலி காப்டர்கள் மோதிக்கொண்டனவா, அருகே சென்ற எவரேனும் மயங்கிவிழுந்து விட்டானா.

''குழாய் வெடித்து விட்டது,'' அவர்களில் ஒருவன் ஆலோசனை சொன்னான்.

''இருக்க முடியாது. அவர்கள் வெடிகுண்டை வெடித்தார்கள். நான் அதை எனது சொந்தக் கண்களால் பார்த்தேன்,'' மற்றொருவன் கூறி னான்.

புதிதாக மக்கள் விரைந்து வந்தபோது, பழுப்பு மேகத்தைச் சுற்றிய வளையம் அடர்த்தியானது. இருப்பினும் யாரும் அருகில் வரத் துணியவில்லை. கவனமாகப் பின்னுக்கு நகர்ந்தார்கள்.

விநோதமான வடிவம் கொண்ட அம்மேகம் நீண்டு வளர்ந்து உச்சியில் அகன்று போனது.

''அதை நான் முழுக்கப் பார்த்தேன்,'' உணர்ச்சிவயப்பட்டு யாரோ கூறினான். ''சதுக்கத்தின் குறுக்காக யாரோ ஒரு மனி தன் நடந்து கொண்டிருந்தான். ஒருவகை யில் நடந்து போகவில்லை, எல்லா நேரமும் வழுக்கிக்கொண்டே சென்றான்.''

''அவன் எங்கு போய்க் கொண்டிருந்தான்?''

''அதை நோக்கித்தான்,'' பேச்சாளன் பழைய நினைவுச்சின்னத்தைப் பார்த்துத் தலையசைத்தான். ஒரு மரத்தின் நிழலில் ஓய்வெடுக்கும் ஓர் ஆயனையும், ஆய்மகளையும் அது சித்தரித்தது. ''நல்லது, ஆக அவன் நெடுக நடந்து போய்க் கொண்டிருந்தான். திடீரென்று மற்றொரு மனிதன் நினைவுச் சின்னத்தின் பின்புறமிருந்து தோன்றி அவனைச் சந்திக்கச் சென்றான். நான் உற்றுப்பார்த்தேன். எனது கண்களை நான் நம்பவில்லை. ஒரு நெற்றின் இரு விதைகள் போல அவர்கள் ஒன்றுபோலக் காணப்பட்டார்கள். அவர்கள் இரட்டையராகத்தான் இருக்க வேண்டும்...''

''இரட்டையரை நீ பார்த்தாயா?'' ஓர் இளைஞன் சந்தேகப் புன்னகையோடு கேட்டான்.

பேச்சாளன் தொடர்ந்து பேசினான்: ''என்னை முடிக்க விடு. மிகவும் சாதாரணமான முறையில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள அவர்கள் நடந்தார்கள். நினைவுச் சின்னத்திற்குப் பின்னாலிருந்து வந்த மனிதன் மற்றவரை நோக்கி கைகளை நீட்டியபடி வந்தான். அவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொள்ளப் போகிறார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் தொட்ட நொடியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டது...''

''மிகவும் குறும்புக்கார ஆட்கள் அவர்கள்!'' அந்தக் கூட்டத்தை ஏளனச் சொற்களால் மகிழ்விக்க தானே முன்வந்த இளைஞன் கூறினான்.

''நல்லது, அந்த இரண்டு பேருக்கும் என்ன நிகழ்ந்தது?'' கருப்பாக இருந்த கிழவி கேட்டாள்.

''எனக்குத் தெரியாது... அவர்கள் மறைந்து விட்டது போலக் காணப்பட்டார்கள்,'' பேச்சாளன் முடித்தான்.

''காணாமல் போதல் என்னவென்று நினைக்கிறீர்கள்?'' அக்கிழவி உறுதியாகக் கேட்டாள், நிகழ்ச்சி முழுவதையும் அந்தப் பேச்சாளனிடமிருந்து தெரிந்துகொள்ள முற்படுவது போல. ''அவர்கள் மறைந்து போயிருக்க முடியாது. அவர்கள் கடவுளின் சொந்த தேவதைகள். இப்பொழுது அவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்,'' அவள் பெருமிதத்தோடு முடித்தாள்.

கிண்டலான பதில்கள் எல்லாத் தரப்பிலிருந்தும் வந்தன.

''தேவதைகள் தாங்களாகவே வெடித்துப் போய்விட்டார்கள்,'' ஒரு பையன் மகிழ்ச்சியோடு கூறினான்.

''நியூக்கிலியர் தேவதைகள்,'' ஒருவன் கூறினான்.

இது உச்சக் கட்டத்திற்குச் சென்றபோது வெளிறிய மனிதன் ஒருவன் பயோ சென்டரின் வாசலிலிருந்து வெளியேறினான். கூட்டம் அப்படியே அடங்கிப் போயிற்று. உராய்வைத்

தடுக்கும் காலணிகள், அந்த மனிதன் நம்பிக் கையோடு நடந்து வந்தான்.

''அது நியூமோர்,'' என்று யாரோ குசு குசுத்தான்.

கூட்டம் விலகியது. புகைத் தூண் இருந்த இடத்திற்கு நியூமோர் நடந்து போனான். அதனது கருப்புப் படிவு பெரும்பாலும் குறைந்து போயிருந்தது. தனது சட்டைப் பையிலிருந்து ஒரு டோஸிமீட்டரை எடுத்து, புகை அடர்த்திக்குள் அதை நுழைத்தான். அதன் பிறகுதான் மக்கள் கதிரியக்கத்தின் அபாயத்தை அறியத் தொடங்கினார்கள். முன் வரிசையில் நின்றவர்கள் பின்னுக்கு நகரத் தொடங்கினார்கள்.

டோஸிமீட்டரின் அளவை நியூமோர் ஒரு பார்வை பார்த்துவிட்டு தலையை அசைத்தான்.

''தயவுசெய்து கூறுங்கள் என்ன நடந்தது?'' இளம் வேடிக்கை மனிதன் கேட்டான்.

''இந்தக் குழாய் கூட வெடிக்குமா?'' யாரோ கேட்டான்.

''அது உண்மை தான்,'' நியூமோர் முணுமுணுத்தான். ''சுரங்க பிரதானக் குழாய் ஒன்று வெடித்து விட்டது.''

''அது தான்... நான் சொன்னது!''

தனது பையிலிருந்து சிறு பொட்டலத்தை நியூமோர் எடுத்தான். அதைக் கிழித்துத் திறந்தான். ஒரு வெள்ளைப் பொடியை அந்த மேகத்திற்குள் எறிந்தான். புகை வேகமாக மறையத் தொடங்கியது. அதில் பிளவுகள்

தோன்றின. ஒரு நொடியில் பழுப்பு நிறத் தூண் மறைந்தது. அதன் இடத்தில் இருந்த ஆழமான குழியில் எண்ணெய் போன்ற திர வம் மினுமினுத்தது. அஞ்சாதபடி உற்றுப் பார்த்த கூட்டம் கூர்மையான ஓஜோன் நெடி யை உணர்ந்தது.

''உயிருக்கு பயந்தால் தயவுசெய்து போய் விடுங்கள்,'' என்றான் நியூமோர் கண்டிப்பாக.

பார்வையாளர்கள் தங்கள் வழியைப் பார்த்து நடக்க ஆரம்பித்தார்கள். செயற்கைப் பனிக்கட்டியில் வழுக்கும் தளத்தில் கவனத்துடன் கால் பதித்துச் சென்றனர்.

தகவல் நாடு



உண்மையில் நீண்ட நேரத்திற்கு முன்பே நான் ரயில் நிலையத்திற்குச் சென்றிருக்க வேண்டும். பார்வைக்கு இன்னும் தெளிவான பாதை இல்லை, மரங்களின் அடர்வில் வெளி யில்லை. நாய் போல் களைத்து, நான் இந்தக் காளான்களைக் கரித்துக்கொண்டேன். காளான் களைத் தேடிச் சென்ற என் துணைவர்களிடமி ருந்து மிகவும் பின்தங்கிப் போய்விட்டேன். இப்பொழுது எஞ்சியிருக்கும் ஒன்று நான் வழி தப்புவதுதான்!

நான் மெதுவாக ஊர்ந்து சென்றபோது, பசியின் கொடுமையை மறக்க பச்சையாகவே சில காளான்களை மென்றுகொண்டேன்.

கடைசியில் மரங்களுக்கிடையே இடை வெளி அதிகமாகியது. எங்கிருந்தோ புகையின் வாசனை லேசாக மூக்கில் துளைத்தது. "இலைகள் எரிகின்றன, நிச்சயமாக ஸ்டேஷ னாகத்தானிருக்கும்." நிம்மதியாய் நான் பெரு மூச்சுவிட்டேன்.

இருப்பினும் அது ஸ்டேஷன் இல்லை, ஆனால் எனக்கு முற்றாக அறிமுகமில்லாத ஒரு சிறிய பட்டணம். முக்கியத் தெருக்களின்

நெடுகிலும் பன்னிறமுள்ள சிறிய நேர்த்தியான ஓட்டு வீடுகள் இருந்தன.

மொத்தத்தில் இது ஸ்டேஷன் இல்லை! இலைகளும் இல்லை, யாரோ ஒரு சிறிய குட்டையான மனிதன் முன்புறம் இருந்த தோட்டத்தில் நீண்டு வளைந்து நெளிந்த நாடாக்களை எரித்துக் கொண்டிருந்தான்.

நான் இன்னும் நெருங்கிச் சென்றேன்.

நான் முதலில் நினைத்தபடி ஒரு சிறுவனாக இல்லாமல் வயதான ஒருவனே தீயைக் கிளறிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் என் இடுப் பளவு இருந்தான்.

''என்ன எரித்துக் கொண்டிருக்கிறாய்?'' நான் நின்று கொண்டே கேட்டேன்.

''இதுவா?'' குள்ளன் குரல் இனிமையாக இருந்தது. அவனது அசைவுகள் நேர்த்தியாக இருந்தன. வெளியில் நெளிந்து கிடந்த நாடாக்களின் பகுதிகளை எடுத்து தீக்குள் திணித்துக் கொண்டிருந்தான்.

''இது தகவு.''

''தகவா?'' நான் சரியாகக் கேட்காதது போல் நினைத்தேன்.

''ஆம், பழைய தகவல். பயன்படுத்தியது,'' வியப்புற்ற என் முகத்தைப் பார்த்துக்கொண்டு பதில் சொன்னான்.

''ஆமாம், பழைய தகவல் யாருக்குத் தேவை,'' அவனுடைய விநோதமான உடை களைப் பார்த்துக்கொண்டே நான் மகிழ்ச்சி யோடு குறிப்பிட்டேன்.

''நீ ஓர் அந்நியனாக இருக்க வேண்டும்?''

"ஆம், நான் ஓர் அந்நியனே. உணவுக்கு எங்கே போவது என்று எனக்குத் தயவு செய்து சொல்ல முடியுமா? எனது ரயிலைப் பிடிக்க எனக்குச் சற்று நேரமாகும்..."

"சற்று தூரத்தில் உன் இடது கைப்புற மாகத் திரும்பினால் உண்ணுமிடம் இருக்கிறது."

"நன்றி."

வேலியிலுள்ள பின்னலமைப்பு விநோதமான எழுத்துக்களைப் போல எனக்குத் தோன் றியது. கலை நுட்பத்துடன் உள்ள, பின்னல மைப்பினால் ஏற்பட்ட சித்திர எழுத்துக்கள் மீது என் பார்வை தோய்ந்தது. நான் வீங்கிய பிளாஸ்டிக் பாதைப் பக்கம் ஒதுங்கி னேன்.

"ஆனால் நான் உன்னை அந்த இடத் திற்குப் போகும்படி உண்மையாக ஆலோ சனை கூற மாட்டேன். அவர்கள் நாட்பட்ட தகவலையே கொடுப்பார்கள்," என்றான் குள் ளன்.

"அப்படியானால்... புதியதை எங்கே பெறலாம்?" என்று குழம்பியபடியே கேட் டேன்.

"நீ தலை நகரிலிருந்து வருகிறாய் போலும். அங்கே உண்மையில்..." குச்சியினால் குள்ளன் தீயைக் கிளறியதால் தீப்பொறிகள் இருண்ட வானில் பறந்தன. "ஆனால் இங்கே..." கையை அலைத்தபடியே சொன்னான், "எதற் கும் நாம் எவ்வாறேனும் முயன்று பார்க்க லாம்."

ஓர் அழகிய சிறுமி பொம்மை வீட்டின்

வாசலில் தோன்றினாள் — முதல் நாள் என் மகளுக்கு வாங்கிய பொம்மை உயிர் பெற்றது போல இருந்தது.

''ஓல், நமது விருந்தாளியை மையத் தகவுக்கு தயவுசெய்து அழைத்துச்செல்,'' குள்ளன் சொன்னான்.

''மிகவும் நல்லது!'' அவள் குரல் வெங்கல மணி போல ஒலித்தது. வாசலின் கீழிறங்கி இலேசாக ஓடினாள்.

நாங்கள் ஓரளவு தூரம் சென்றோம். புதுமையான பொருட்களால் கட்டப்பட்ட மஞ்சடைப்புக் குடிசைகளை ஆர்வத்துடன் நோக்கினேன்.

ஓர் இருமாடிக் கட்டிடத்தின் சுவரைத் தொட்டுக் கொண்டு, ''இது என்ன பொருள்?'' என்று வினவினேன். கூரையின் மோட்டுவரை நான் செல்ல முடியும் என எனக்குத் தோன்றியது.

''இது இறுகிப் போன தகவலைக் கொண்டு செய்யப்பட்ட கற்கள்,'' ஓல் விளக்கினாள்.

இவள் கூடவா! நான் எதற்குள் நுழைந்திருக்கிறேன்? பைத்தியக்கார இடத்திற்குள் என்றே எண்ண முடியும். ஆனால் நகரம் முழுதும் பைத்தியங்கள் கொண்டதுதானோ?

பேச்சை வளர்ப்பதற்காக, ''நல்ல பொருளாகத்தான் இருக்க வேண்டும்,'' என்று குறிப்பிட்டேன்.

''எல்லாமே இதனால் ஆனதுதான்,'' என்றாள் ஓல்.

''நிலைத்திருக்கக் கூடியதா?''

''எப்பொழுதும் இல்லை,'' ஓல் தனது சிறிய தலையை ஆட்டினாள். ''சில வேளை களில் தகவல் மிகவும் மோசமானதாக இருக் கும்.''

''அப்போது என்ன நடக்கும்?''

''கற்கள் துண்டுகளாக உடையும். ஒரு சமயம் இதனால் ஒரு முழு வீடே சரிந்தது.''

''ஒரு முழு வீடா? என்ன பயங்கரம்!''

''ஆம், உண்மையாகத்தான். அஸ்திவாரத் தை ஆக்கிய கற்கள் முழுவதுமே பொய்த் தகவல் கொண்டது என்று தெரியவந்தது. உங் களால் கற்பனை செய்ய முடிகிறதா?''

நான் அநுதாபத்தால் தலையை ஆட்டி னேன்.

''அப்போதிலிருந்து தகவல் எப்பொழுதும் முழுக்க நன்கு சோதிக்கப்படுகிறது.''

நாங்கள் நெடுகிலும் நடந்தபோது என்னைச் சந்தேகத்துடன் பார்த்த பல சின்னஞ்சிறு மனிதர்களுடன் ஓல் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டாள்.

பெருமையடித்துக் கொள்ளும் படியாக நான் உயரமாக இல்லாவிட்டாலும், அவ்வூர் மக்களுக்கு நான் ஒரு கலியாத்துப் போல இருந்தேன்.

''இதுதான் நமது இடம்,'' வியந்தாள் ஓல். ஊடுருவிப் பார்க்கக் கூடிய ஒரு கதவைக் காட்டிவிட்டு அவள் ஓடி விட்டாள்.

கூரையை என் தலை தட்டும் என்பதால், இயல்பாகவே குனிந்து கொண்டு அந்தத் தகவுக்குள் நுழைந்தேன். என்னைக் காட்டிக்

கொள்ளக் கூடாது என்ற எண்ணத்துடன் — அது முடியவில்லை என்றாலும் — ஒரு சிறிய தட்டை எடுத்துக் கொண்டு கவுண்டரை ஒட்டியுள்ள வரிசையின் கடைசியில் நின்றேன். எல்லாமே சுய சேவை! குறைந்தது இது எங்கும் காணப்படக் கூடியதுதான். ஆகை யால் நான் தைரியம் அடைந்தேன். எதாவது கொஞ்சம் உண்டு விட்டு ஸ்டேஷனுக்குப் போக லாம். ஞாயிற்றுக்கிழமைகளில் ரயில்கள் பின் னேரத்தில் கூட ஓடுகின்றன.

இருப்பினும், காட்சிப் பெட்டியிலிருந்த உணவுப் பொருட்கள் என்னை மீண்டும் குழப்பின. என் வாழ்நாளில் இத்தகைய உணவுப் பொருட்களை நான் பார்த்ததேயில் லை. பச்சை முக்கோணங்கள், நீள உருண்டை கள், சிவப்பு கனசதுரங்கள்.

என் முறை வந்ததும் நான் ஓர் ஆயுத வடிவ வெள்ளைப் பொருள் ஒன்றைக் கை யிலெடுத்தேன்: ஒரு முட்டை! ஆனால் ஓர் உலோகத்தைத் தொட்டது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. தோள்களைக் குலுக்கிக் கொண்டே நான் பார்க்க முடிந்த அத்தனை சிறிய உணவு வகைகளையும் ஒன்றைக் கூட விடாமல் என் தட்டில் நிரப்பிக் கொண் டேன். வரிசையில் நின்றவர்கள் கிசுகிசுத்தார் கள்:

''ஏய்... அங்கே பார்... அங்கே பார்!''

''அவன் பசியாக இல்லையா!''

தரையைப் பார்த்துக் கொண்டே தாழ்ந்த கூரையுடைய அறையின் வழியாக நடந்தேன்.

கடைசியாக ஓர் இடத்தைப் பிடித்து அமர்ந்தேன். சிவப்பு கனசதுரத்தை ஒரு கடி கடிக்க முயன்றேன். இந்த முயற்சி கிட்டத் தட்ட எனது ஒரு பல்லைக் கேட்டது. மேஜையில் என் அருகிலிருந்தவன் தனது வாயைத் திறந்தபடி என்னை வியப்புடன் நோக்கினான். ஒரு மிருகக் காட்சி சாலையில் ஒரு வெளீசிய ராட்சசப் பல்லியைப் பார்த்த போது என் இளைய மகளின் வாய் அப்படித்தான் இருந்தது.

அசடு வழியச் சிரித்தபடி, ''மன்னிக்கவும், புதுவகையான உணவு,'' என்று முணுமுணுத்தேன்.

புரிந்துகொண்டது போல அந்த மனிதன் தலையாட்டினான். நான் முதலாவதாகச் சந்தித்த அந்த மனிதனைப் போல, வளைந்து நெளிந்த நாடாக்களை எரித்துக் கொண்டிருந்தவனைப் போன்ற அச்சாகவே இவனும் இருந்தான். இருப்பினும், எனது கண்களுக்கு இந்தப் பட்டினத்துவாசிகள் எல்லாரும் ஒரு பொது மூதாதையரிடமிருந்து பிறந்தவர்களாகவே தோன்றியது.

''பாருங்கள்,'' என் பக்கத்திலிருந்தவன் முணுமுணுத்தான். சிவப்பு கனசதுரத்தை தன் மெல்லிய விரல்களில் எடுத்துக்கொண்டு, அவன் எழுந்து அதனை என் நெற்றியருகே கொணர்ந்தான்.

ஓர் அதிசயம்! என் உடல் முழுக்க ஏதோ ஒன்று பரவுவது போல திடீரென்று உணர்ந்தேன். என் மனத்தில் விநோதமான

இசை ரீங்காரமிட்டது. என் காதுகளில் தொலை தூர இசையின் ஒலிகள் கேட்டன. என் கண்களுக்கு முன்னால் தீவளையங்கள் நடனமாடின.

''அதை தயவு செய்து நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்,'' அந்தச் சிறிய மனிதன் குசுகுசுத்தான்.

படிப்படியாக என் கண் முன்னால் தோன்றும் ஒளிப் பிழம்பில் ஏதோ, வார்த்தைகளால் விவரிக்க முடியாத, ஒரு வடிவ ஒழுங்கைப் பார்த்தேன். மற்றவர்கள் கேட்கவோ, பார்க்கவோ முடியாதபடி இசை அலைகள் ஒளி அலைகளுடன் இணைந்து, வெந்நீரில் பனி உருகுவது போல என் களைப்பையும் போக்கி என்னை எங்கோ இட்டுச் சென்றது, என் பசி கூட குறைந்தது.

இசை உரக்க ஒலித்த போது காட்சிகளும் மிகத் தெளிவாயின. அது இன்பமும் துன்பமும், மென்மையும் வன்மையும் சேர்ந்த அதிசய இணைப்பு. கேத்தல் மேளங்கள் அதிர்ந்தன, பிரெஞ்சுக் கொம்புகள் ஊதின, செல்லோ முணகியது. ஏன் அவற்றை கேத்தல் மேளங்கள், செல்லோ என்கிறோம்... இவை ஒருவகையில் எனக்கே தெரியாத இசைக் கருவிகள். என் மகளும் நானும் 'வீடியோ' திரையின் மறையைத் திருகிய காலங்களில் இது போன்றவற்றைக் கேட்டதே இல்லை...

என் இளைய மகளைப் பற்றி நான் நினைத்ததுமே, இசை மெல்ல மறைந்தது.

தீவளையங்கள் மெல்ல மெல்ல தெரியலாயின.

கனசதுரத்தை நெற்றிப் பொட்டில் அழுந்தத் தேய்த்தேன். ஆனால் இசை நின்றுவிட்டது. படிகத்தை மேஜை மீது போட்டேன்.

"நல்லது, தகவை எந்த அளவுக்கு விரும்புகிறீர்கள்?" என் துணைவன் கேட்டான்.

எனது அமைதி — நான் இன்னும் நினைவுக்கு வராதது — ஒரு வகையில் விநோதமானதாகவே கருதப்படும்.

"அவ்வளவு புதிதாக இல்லை என்று நான் நினைக்கிறேன்?" என்று வருத்தத்துடன் அவன் கேட்டான். "நாம் தலை நகரிலில்லை, உங்களுக்குத் தெரியுமே... இதை சோதித்துப் பாருங்கள்," என்று அலுமினியம் போன்ற லேசான உலோகத்தால் ஆன ஒரு முட்டையைக் காட்டியவாறு அவன் கூறினான்.

"இது என்ன?"

"நிலையற்ற நட்சத்திரங்களைப் பற்றிய தகவல்! எனது விருப்பமான உணவு," சிறிய மனிதன் சிரித்தான்.

அவனுக்குப் பிடித்தமான உணவு முதலாவதைப் போல அவ்வளவு இனிமையாக இல்லை. மற்ற உணவுகளும் அப்படியே, ஆனால், பார்ப்பதற்கு விநோதமாகப் பட்டது, எனக்குப் பசியே இல்லை. நான் வீதிக்குள் வந்தபோது, மாலை நேரத்திற்காக, அந்தப் பொம்மை நகரில் ஏற்கெனவே விளக்கேற்றப் பட்டிருந்தது. கட்டுக் கதைகளில் வருவது

போன்ற இப்பட்டிணத்தை நான் ஏற்கெனவே பார்த்தது போன்ற ஓர் உணர்வு எனக் கேற்பட்டது. ஆனால் எங்கே? என் மகளுடன் இதைப் பற்றி நான் படித்திருக்கிறேனா? தரையில் பார்த்திருக்கிறேனா? நினைவு கூர முயன்றேன், ஆனால் முடியவில்லை.

குறுகலான நெருக்களின் வழியாக ஜாக் கிரதையாக நடந்து கொண்டு, ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். இதை நான் ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். இம்மக் களைப் புரிந்துகொள்ளவும், அவர்கள் இருப் பதன் பொருளைக் கண்டுபிடிக்கவும் விரும்பி னேன்.

சில ஜன்னல்களில் நான் பழக்கப்பட்ட காட்சிகளையே பார்த்தேன். சிறு உருவங்கள் உருண்டைகளையோ, கனசதுரங்களையோ தங் கள் நெற்றிப் பொட்டுக்களில் வைத்துக் கொண்டு தம்மை மறந்திருப்பதை முகங்கள் காட்டின. நான் கதைகள் சொல்லும் போது என் மகள் அப்படித்தான் இருப்பாள்...

ஒழுங்கான ஜியோமிதி வடிவ அந்தச் சிறிய பொருட்கள் தகவல் பாளங்கள் என்று நான் ஏற்கெனவே புரிந்து கொண் டேன். நான் பணியாற்றும் கழகம் பலவிதமான தகவலையும் பதிவு செய்து அனுப்பக்கூடிய பாளங்களை உருவாக்க ஆண்டுக்கணக்காக முயன்று கொண்டிருக்கிறது. விண்வெளி வீரர்களுக்கு இது எவ்வளவு முக்கியமான தாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என் பதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?

நூற்றுக்கணக்கான கனமான களஞ்சியங்களுக் குப் பதிலாக, தங்கள் பயணத்தின் போது ஒரு சிறிய கோள அல்லது கன சதுரத்தை அவர்கள் எடுத்துச்சென்றாலே போதுமானது. விண்வெளியில் ஒவ்வொரு கிராம் எடையும் முக்கியத்துவம் பெற்றது. பூமியிலும் கூட இத் தகைய பாளங்கள் பயனுள்ளதாக இருக்க முடியும். எங்கள் கழகம் பெரும்பாலும் அதன் லட்சியத்தை அடைந்து விட்டது... ஆனால், தோற்றத்தில் இந்த பொம்மை போன்ற மக்கள் எங்களை மிஞ்சி விட்டார் கள்.

இல்லை, இல்லை என்று நான் நினைத் தேன். இந்த உருவங்கள் மனிதர்கள் அன்று, நம்மைப் போல அவர்கள் தோன்றினாலும். எவ்வளவுதான் ஆர்வமுடையதாகவும், பல தரப்பட்டதாகவும் இருந்தாலும், ஒரு மனிதன் எப்படி தகவலிலேயே வாழ முடியும்?

மாலை வெளியில் நியான் ஒளியில் தெரிந்த வாசகங்களை இப்பொழுது நான் கவனித்தேன். ''நாங்கள் அதிகத் தகவை உரு வாக்குவோம்'', ''உயர்தரத் தகவு மட்டும்'', மேலும் இதுபோன்று பல காணப்பட்டன.

நான் உண்ட தகவால் என் தலை அதிர்ந்தது. கவனமான சிந்தனை அவசியம் என்பது போல நான் உணர்ந்தேன். இதனை என் நண்பர்களுக்குத் தெரிவிப்பேனாகில் அவர் கள் என்னை ஒருபோதும் நம்ப மாட்டார் கள். என்னுடன் பணியாற்றுவோர் என்னைக் கிண்டல் செய்வார்கள். ஆனால் அது முற்றி

லும் உண்மை! சுறுசுறுப்பான தெருவின் ஒரு மூலையில் இங்கே நான் நிற்கிறேன். சொந்த அலுவல்களை முன்னிட்டு மக்கள் அங்குமிங்குமாக விரைந்து செல்கிறார்கள். என் கடிகாரத்தைக் காதருகே வைக்கிறேன். அது வழக்கம் போல ஓடுகிறது. முட்கள் எட்டரை மணியைக் காட்டுகின்றன. இலையுதிர் காலத்தில் விரைவாகவே இருள் கவ்வுகிறது. என்னை நானே கிள்ளிப் பார்க்கிறேன் — உண்மையாகவே வலிக்கிறது.

ஒருவேளை விண்வெளியிலிருந்து வந்தவர்களோ? முட்டாள்தனம்! ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்தில்தானே இருக்கிறது? ஆனால், என்னைத் தவிர யாருமே பார்க்கவில்லையே? தவிர, 'தலைநகரம்' என்று சொன்னதால் இந்தச் சிறிய நகரம் மட்டுமே அவர்கள் சமுதாயத்திற்குச் சொந்தமில்லை. ரயில் பாதைக்கும் காட்டுக்குமிடையே ஒரு பெரிய தேசமே இருக்கிறது என்று பொருளா? தகவல் நாடு தேசப்படத்திலே காணப்படாதது?

ஒரு மனிதன் அவசரமில்லாமல் நெருங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் மிகச் சிறிய வடிவில் இருந்தாலும், மனிதர்களை ஒத்துக் காணப்பட்டதால், அவர்களை வேறுவிதமாக என்னால் நெஞ்சார நினைக்க முடியவில்லை. இந்த நபர் வயதானவனாகவும், அறிவாளியாகவும் காணப்பட்டான். இவன்தான் எனக்குத் தேவை. எல்லாவற்றையும் விளக்குமாறு நான் கேட்கலாம்.

நான் நின்று அவன் கையைத் தொட்டேன். ''உங்கள் மன்னிப்பை வேண்டுகிறேன். ஆனால் எனக்காக கொஞ்ச நேரம் ஒதுக்க முடியுமா?'' என்று கேட்டேன். முதியவன் வியப்புற்றதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

''ஏன் முடியாது, நாம் தகவைப் பறி மாறிக் கொள்வோமே,'' என்று பதிலளித் தான்.

''தகவு... தகவு,'' நான் முணுமுணுத் தேன், ''இதைத் தான் நான் எங்கும் கேட்கிறேன். உரையாடுவதற்கு உங்களிடம் வேறு விஷயங்களே இல்லையா?''

''இந்த உலகில் தகவை விட மிக முக்கிய மானது ஏதேனும் உண்டா?'' என முதியவன் கேட்டான்.

முழுமதியின் நிலவொளிபடியும் ஒரு திறந்த வெளியில் நாங்கள் ஒருவழியாக நின்றோம். வளையாத புல் என் துணைவனின் முட்டுவாய் அளவுக்கு வளர்ந்திருந்தது.

ஒரு புல்லிதழைத் தட்டியபடியே, ''அருமை யான தகவு,'' என்றான். நெருங்கிப் பார்த் ததில் அது புல் அல்ல என்பதையும், முதன் முதலாக நான் சந்தித்த மனிதன் எரித்துக் கொண்டிருந்த நாடாக்களைப் போன்ற தென்றும் அறிந்தேன். மற்றவை வெளிறிய மஞ்சளாக இருந்தாலும் இந்த நாடாக்கள் மட்டும் பச்சையாக இருந்தன.

இளந்தென்றலில் மெதுவாக உரசியபடி நாடாக்கள் ஏதோ கிசுகிசுப்பது போல எனக்குத் தோன்றியது.

கிழவன் தலையைத் திருப்பிய போது நில வொளியில் அவன் முகம் பளிச்சிட்டது.

''இவை என்ன வகை நாடாக்கள்?'' என வினவினேன்.

''வெறுமனே சாதாரணத் தகவல் நாடாக் கள்.''

''தகவல் அவற்றில் பதிவாகின்றன என்கிறீர் களா?''

''இயற்கைதான்.''

''ஆனால் என்ன தகவல்?''

தனது தோள்களைக் குலுக்கியபடியே அந்தக் கிழவன், ''எல்லாவகையானதும்,'' என்றான். புல்லிதழ் ஒன்றை அவன் ஒடித்து — மன்னிக்கவும், ஒரு நாடாத்துண்டை — சுவைத் தான்.

''அது எப்படிச் சுவைக்கிறது?'' உணர்ச்சி யற்றுக் கேட்டேன்.

''முற்றிவிட்டது. அறுவடை செய்ய வேண் டிய நேரமிது,'' என்று கிழவன் கண்டிப்பாகச் சொன்னான்.

''பிறகு அவற்றைக் கொண்டு என்ன செய்ய லாம்?''

''என்ன? கால்நடைகளுக்கு தீவனமாக ஏன் பயன்படாது.''

''கால்நடைகள்... தகவல் தீவனமா?'' நான் உண்மையாகவே குழம்பினேன்.

''பிறகு என்ன? ஆனால் தகவு முற்றிய நேரம் பார்த்து பிடிக்க வேண்டும். நீங்கள் தாமதமாகப் போனால் அது தகவலை மறைக்கும். பிறகு நாடாக்கள் எதற்குமே

பயன்படாது போகும்.''

''ஆக, நீங்கள் அவற்றை தூக்கி எறிவீர்கள்?''

''நாங்கள் அவற்றை எரித்துவிடுவோம்.''

''கேளுங்கள்,'' நான் விளித்தேன். ''என்னால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. உங்கள் மனிதர்கள் தகவலில் வாழ்கிறீர்கள், உங்களது மிருகங்களுக்கு தகவல் தீவனமாகத் தரப்படுகிறது — ஆனால் உண்மையான உணவு என்னவாயிற்று?''

''தகவு மட்டுமே உண்மையான உணவு,'' என்று முதியவன் பதிலளித்தான். ''இந்த உலகிலுள்ள ஒவ்வொன்றும் தகவல் சாறு எடுக்கப்படாததா?''

நாங்கள் இப்பொழுது புதுமையான செடிகள் வளரும் வெளிச்சம் குறைவான தெருவுக்குள் அமைதியாக நுழைந்தோம். நான் உற்று கவனித்தேன். ஒவ்வொரு புதரும் தகவல் அடங்கியதாகக் காணப்பட்டன, ஒவ்வொரு மரமும் — தகவல் பாளமாக நின்றன.

என்னால் நீண்ட நேரம் தாங்க முடியவில்லை, கத்தினேன்:

''இப்பொழுதாவது, எல்லா நேரமும் நீங்கள் பேசும் இந்தத் தகவல் என்ன என்பதை விளக்குவீர்களா? தகவல் என்பது வெறும் தகவல் மட்டுமல்ல — அது எதைப் பற்றியோ இருக்க வேண்டும். ஆக அது எதைப் பற்றி?!''

''அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?'' விநோதமான சிறிய மனிதன் பதில

ளித்தான். ''தான் பெறும் சக்தி மூலம் பற்றி ஓர் எந்திரம் வினவுகிறதா? இல்லை, அது அப்படியில்லை. அது நிலக்கரியா, விற கா, ஓர் அணு ஆற்றலா அதைப் பற்றி எல் லாம் எந்திரம் எந்த வேறுபாடும் காட்டுவ தில்லை. அதற்கு வேண்டியதெல்லாம் கலோரி கள் மற்றதெல்லாம் ஒரு பொருட்டல்ல,'' என்றான் அம்மனிதன்.

அவனது விநோதமான தர்க்கத்தால் முற்றாகக் குழம்பிப்போன நான், ''நல்லது, சில எரிபொருட்கள் பொருத்தமற்றவையாக வும் போய் விடுவதுண்டு,'' என்று முணுமுணுத் தேன்.

''மிகவும் சரி,'' என்று கலகலத்தான் அந்த முதியவன் மகிழ்ச்சியோடு. ''நீங்கள் விஷயத்தின் முக்கிய அமிசத்தைத் தொட்டிருக் கிறீர்கள். இதே விஷயம் தகவுக்கும் பொருந் தும். இது மனிதனுக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றலாம்.''

''ஏன்?''

''பல காரணங்கள். உதாரணமாக, அது நாட்பட்டதாகப் போகக் கூடும்... பொதுவாக, மிகவும் நொய் வானதும், மிகவும் அழிந்து போகக் கூடியதுமான பொருள் எதுவும் இல்லை. சில நேரங்களில் தகவல் வைட்டமின் குறைபாடு கொண்டதாக இருக்கும்.''

''அது எப்படி இருக்க முடியும்?''

''சரி, எல்லாருக்கும் தெரியும் பொருட் களை அது திரும்பச் செய்தால் தான். இருப் பினும், மிக முக்கியமான விஷயம் பொய்

யாகும். நீங்கள் எப்பொழுதாவது பொய் யான தகவலினால் நஞ்சூட்டப் பட்டிருக்கிறீர் களா?''

''ஆமாம். நான்... சிறிய அளவில்,'' நான் சமாளிக்க முயன்றேன்.

''உங்கள் அதிர்ஷ்டம் சிறிய அளவில் போயிற்று. தகவின் காரணமாக மூச்சு முட்டு தல் மற்றொரு இடையூறு,'' என்றான் கிழ வன்.

''மூச்சு முட்டுதலா?''

''ஆமாம். தகவு அவசர அவசரமாக விழுங்கப்படும் பொழுதும் அப்படி ஏற்பட லாம்.''

''நாம் எந்திரங்களைத் தனியாக விட்டு விட்டு மனிதர்களுக்குத் திரும்புவோம்,'' என் றேன். ''ஓர் உயிருள்ள ஜீவனுக்குத் தகவல் மட்டுமே உணவாகக் கொள்ளப்படுதல் உண் மையிலேயே சாத்தியமானதுதானா?''

''ஆக, நீங்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை,'' என்றான் கிழவன் வருத்தத்துடன். ''மனிதன் உடல் உள்பட எந்த உயிரும் தன் சுற்றுப்புறத்திலிருந்து எடுத்துக் கொண்ட எந்தப் பொருளும் இறுதியில் தகவலாக ஜீரணிக்கப்படும் என்று நான் உங்களுக்கு ஒரு மணி நேரமாகவே சொல்லிக் கொண்டிருக்கிறேன். வாழ்நாள் முழுக்க மனிதன் வெறுமனே தகவைப் பெறு வதும் ஜீரணிப்பதுமாக இருக்கிறான். நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், இது இல்லா மல் எந்த உயிரிகளும் இல்லை. தகவு இல்

லையெனில் மனித இனமே சிதைந்து அழிந்து போயிருக்கும்!''

''ம்... அப்படியா...'' சந்தேகத்தோடு நான் வியந்தேன்.

''ஒருவகையில்! மரபு செல்கள் என்பது என்ன? ஒரு குறிப்பிட்ட உயிரின மூலம் முழுவதையும் பெற்றுக் கொண்டு பரம்பரை பரம்பரையாக அடுத்தடுத்த சந்ததிகளுக்குக் கடத்தும் தகவல் தானே அவை?''

''நல்லது, ஒருவேளை...''

''நினைவு — தகவலின் விரிவான சேகரிப்பு என்பதைத் தவிர வேறென்ன?''

இதிலிருந்து கிழவன் தன்னையும் அவனது அற்பக் கூட்டத்தையும் மனித இனத்தோடு சேர்த்திருக்கிறான்...

''நினைவாற்றலை அழியுங்கள் — மனித இனம் என்னவாகும்?'' கிழவன் மேலும் தொடர்ந்தான். ''வரலாறு, கலை, கலாசாரம் — இவை எல்லாம் மறைந்து போகும். பழங்கால எழுத்தாளர் ஒருவர் கதை ஒன்று எழுதினார். அதில் ஓர் ஏழையின் முன்னால் சாத்தான் தோன்றி அவன் நினைவாற்றல் ஒன்றுக்கு மட்டும் ஈடாக உலகிலுள்ள செல்வம் அனைத்தையும் தர முன்வருகிறது. மனிதன் ஒத்துக்கொள்கிறான். சாத்தான் அவனை ஏமாற்றவில்லை. மனிதனால் எதையெதை எல்லாம் விரும்பிப் பெற முடியுமோ, அதை யெல்லாம் பெறுகிறான். அவனது நினைவாற்றலைத் தந்து விட்டதால், அவன் தனது மனிதத் தன்மையையே இழந்து விட்டான்.

ஆகவே,'' கிழவன் தனது கையை ஆட்டிக் கொண்டே மேலும் தொடர்ந்தான், ''நினைவு தான் எல்லாம். ஆனால் நினைவு என்பது என்ன? அதில் தகவலைத் தவிர வேறு எது வுமே இல்லை.''

''நீங்கள் எதை நோக்கி என்னை இட்டுச் செல்கிறீர்கள் என்று நான் புரிந்துகொள்ள முடிகிறது,'' என்றேன் நான். ''ஆக, சாதாரண உணவு, ஒரு ரொட்டித் துண்டு, சொல்லுங் கள்...''

''...இவை எல்லாம் தகவல் துணுக்கைத் தவிர வேறில்லை,'' என்று கிழவன் முடித் தான். ''வயிற்றுக்கு, நரம்பு செல்களுக்கு, ஜீரணத்துக்கு — முடிவாக உடல் முழுதுக்குமே — தகவல் தான், ஆனால் இந்த விஷயத்தில் இது தரக்குறைவானது, மட்டமான தகவல் என ஒருவர் கூறலாம். இவற்றை ஆரம்பத் தகவல் என்று சொல்லலாம். இப்படிப்பட்ட உணவு கலப்படம் அற்றதாக, சுத்தம் செய் யப்பட்டு தூய தகவலாக மாற்றப்படலாம். அப்படிப்பட்ட தகவல் பாளங்களையே நாம் உணவாகக் கொள்கிறோம்.''

''ஆமாம், நானும் அவற்றை உண்டிருக் கிறேன்,'' என்றேன்.

''இனி உரையாடலின் தொடக்கத்திற்கு வருவோம். எரி பொருள் மட்டும் ஒரு குறிப்பிட்ட தரமுடையதாக இருந்தால், எந்திரம் அதனைப் பொருட்படுத்துவதில்லை. நல்லது, மனிதனும் ஓர் எந்திரமே, சற்று சிக்கலான எந்திரம். ஆகையால் உண்மைத்

தகவல் ஒரு நல்ல தரமுள்ளதாக இருக்கும் நிலையில் அதை அவன் பொருட்படுத்தத் தேவையில்லை. தரமற்ற உணவுக்கு என்ன அவசியம் ஏற்படுகிறது? மனிதன் இயல்பான தூய நிலையிலுள்ள தகவலைப் பெற வேண்டும். இதை நாங்கள் சாதித்து இருக்கிறோம்,'' என்ற கிழவனின் குரலில் ஓரளவு பெருமிதம் தொனித்தது. ''அதே சமயத்தில் வயிற்றுக் கோளாறுகளால் ஏற்படக் கூடிய வியாதிகளையும் நாங்கள் சமாளித்திருக்கிறோம். பொதுவாக எங்களது உடலில் உணவுப்பாதை என்பதே மறைந்து போய்விட்டது.''

இப்போது நான் காணும் இந்த உலகம் முதலில் கண்டது போல அவ்வளவு விநோதமாக இல்லை. இது தன்னுடைய சொந்த சட்டங்களால் அதற்கென்று உரிய தர்க்க வாதத்தைக் கொண்ட சட்டங்களால் ஆளப்படுவதாகத் தெரிகின்றது.

இருப்பினும் இந்த மக்களுக்கும் எனக்குப் பழக்கமான பழைய உலகத்திற்கும் ஏதோ ஒன்று பொதுவானதாக இருக்கத்தான் வேண்டும்.

''ஆனால், பண விஷயம் என்னவாயிற்று? குறைந்தது நீங்கள் பணம் வைத்திருக்க வேண்டுமே?''

''பணமா, அது என்ன?'' என்று கிழவன் திரும்பக் கேட்டான்.

''பணம்?'' நான் குழம்பினேன். ''நல்லது,

பணத்தைக் கொண்டு உங்களுக்குத் தேவையான எதையும் நீங்கள் வாங்கலாம்.''

''இங்கே ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான அளவுக்குத் தகவைப் பெறுகிறார்கள். உதாரணமாக, உங்கள் விவகாரத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். மைய தகவுக் கேந்திரத்தில் உணவு உண்டதாக நீங்களே என்னிடம் சொன்னீர்கள். தகவல் பாளங்களுக்கு இந்த... பணம் செலுத்தினீர்களா?''

அவன் சொன்னது சரிதான். ஆனாலும் நான் விட்டுவிடுவதாக இல்லை.

''நீங்கள் பணம் இல்லாமல் என்ன செய்ய முடியும்?''

''எங்களுக்கு அது தேவையில்லை.''

''ஆனால் இரு தகவல் பாளங்களை ஒப்பிட வேண்டியதாக இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். எது அதிக மதிப்புடையது? ரூபாய் மற்றும் பைசாக்களை ஒப்பிடுவது போல மிக எளிமையாக இருக்கும். ஆனால் பணமின்றி...''

''தகவை அளவிடுவது மிகவும் எளிமையானதென்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்றான் கிழவன். ''தகவலின் அளவே ஒரு 'பித்' தான். ஒரு 'பித்' என்பது...''

''பேச்சு போதும், தயவுசெய்து நிறுத்துங்கள்,'' நான் சலிப்படைந்தேன். ''பேச்சால் நான் களைத்துப் போய் விட்டேன்...'' நான் சுற்றிலும் பார்த்தேன். கிழவன் காணாது போயிருந்தான்.

உண்மையிலேயே நான் உண்ட தகவல்

வேலை செய்து கொண்டிருந்தது. உள்ளே ஒரு தீ என்னை உண்ணத் தொடங்கியது போலவும், என்னை உள்புறம் வெளிப்புறமாக மாற்றுவது போலவும் உணர்ந்தேன். ஓர் அரு வருப்பு உணர்வு தோன்றியது. ஓர் அழுகிய தகவலையோ, பொய்யான ஒன்றையோ நான் உண்டிருக்க வேண்டும்?

துயரத்துடன் நான் நெடுக நடந்தேன். மூடுபனி ஊடாக முன்னும் பின்னுமாக ஆடித் தெரிந்த சிறிய வீடுகள் தம்மைக் காட்டுவதும் மறைப்பதுமாக இருந்தன.

''ஒருவேளை எல்லாமே தகவலை அடிப் படையாகக் கொண்டிருக்கின்றன போதும்,'' என் தலை கனத்தை என்னால் வெளிக்காட்ட முடிந்தது. ''இதைப் பற்றி நீங்கள் தீவிரமாகச் சிந்தித்தால்... ஆகையால் ஒரு மாணவனைச் சோதிக்கின்ற போது அவன் பெற்ற தகவலைத் தவிர வேறு எதை நான் எதிர்பார்க்க முடியும்? அறிவு! ஆனால் அறிவு என்பது கிரகிக்கப்பட்ட தகவல். ஆகவே நான் ஒரு மாணவனைத் தோல்வியுறச் செய்கிறேன் என்றால் அவன் பெற்ற தகவல் முறையாக ஜீரணமாகவில்லை என்பது பொருள். நாம் ஒரு நூலைப் படிக்கும் போது எல்லாவற்றுக் கும் மேலாகத் தகவலைத் தேடுவதில்லையா? இதுவரை நாம் அறியாத பொருட்களைப் பற்றிய தகவல், நமக்குக் கவலையூட்டும் அல் லது மகிழ்விக்கும். இதெல்லாம் அதில் இல்லை யென்றால் — கோபத்துடன் நாம் புத்தகத்தை மூலையில் போட்டு விடுகிறோம்...''

மங்கலான ஒளியில் ஏதோ ஒன்றின் மீது மோதி நிலை தடுமாறினேன். அப்பொருளைக் கையில் எடுத்தேன் — அது துளையுள்ள ஒரு கல், அழற் பாறை வகையைச் சேர்ந்தது. மற்றவர் அதை எறிந்திருக்க வேண்டும். ஆனால் அநுபவம் காரணமாக, அதைத் தெரு வெளிச்சத்திற்குக் கொண்டு சென்றேன். ஒரு வகையில், இந்த நாட்டில் ஒருவன் எதை எதிர்பார்க்க முடியும்? அது கல்லே அல்ல. கல்லாலான ஒரு தகவல் துண்டு.

அதை என் சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன். நான் என் சொந்த இடத்திற்குத் திரும்பும் போது இந்தத் தகவல் உலகத்தைப் பற்றி அவர்களுக்குச் சொல்வேன். என் மகள் — அவள் நிச்சயம் என்னை மனப்பூர்வமாக நம்பலாம். ஆனால் வேறு யாரேனும் சந்தேகித்தால் அவர்களுக்கு இந்தத் துண்டைக் காட்டுவேன், அவர்கள் இந்த சாட்சியை மறுக்கட்டும், பார்ப்போம்!

''விஞ்ஞான கண்டுபிடிப்புகளெல்லாம், நமது சுற்றுப்புறத்தைப் பற்றிய புதுத் தகவல் துணுக்குகளைத் தவிர வேறென்ன?'' நான் சிந்திக்கத் தொடங்கினேன்.

இவ்வுலகில் உள்ள ஒவ்வொன்றும் இறுதியில் உண்மையாக, தகவலாகவே மாற்றப்படும் என்பது சம்பந்தமாக புதிய புதிய சான்றுகள் குறித்து நான் சிந்தித்தேன். எதிர்காலத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடிய சில கணக்குகளைப் பற்றி, பிறகு நான்

கற்பனை செய்தேன்: ''ஒரு நீச்சல் குளத்திற்கு இரண்டு குழாய்கள் உள்ளன. குழாயின் விட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்றின் வழியாகத் தகவல் வெளியேறி மற்றொன்றின் வழியாகச் சேர்வதாக இருந்தால் குளம் நிரம்ப எத்தனை மணி நேரம் பிடிக்கும்?''

நான் மீண்டும் பிரதான வீதிக்கு வந்து சேர்ந்தேன். யாருமே தென்படவில்லை. தகவலை உண்டு வளரும் சிறிய மக்கள் வாழும் இந்த நாட்டில் நான் ஓர் அந்நியன் என்பதை நானாகவே உணர்ந்தேன்.

ஆகையால், எனக்கு முன்னால் ஒரு பழக்கப்பட்ட குள்ளமான உருவத்தை நான் பார்த்த போது எவ்வளவு மகிழ்ச்சியடைந் திருப்பேன் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அவள் ஓல் தான். சிறிய இறகு அடர்ந்த பறவைகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி உரக்கக் கத்திக் கொண்டும், வட்டமிட்டுக் கொண்டும், அவளது வலது உள்ளங்கையிலிருந்து சிறிய துணுக்குகளை, அதாவது தகவல் துணுக்கு களை அவை கொத்திக் கொண்டிருந்தன.

''ஓல்!'' நான் கத்தினேன்.

''கடைசியில்,'' என்று ஒரு மகிழ்ச்சியான குரல் என்னருகே ஒலித்தது.

நான் என் தலையைத் திருப்பினேன்.

''அசையாமல் இருங்கள். நீங்கள் நகரக் கூடாது,'' என்று வெண்ணிற மேற்சட்டை அணிந்த ஒரு சிறுமி கண்டிப்புடன் கூறினாள். இருளிலிருந்து திடீரென்று அவள் வெளிப்

பட்டது போலத் தோன்றியது. தன் பிஞ்சுக் கரங்களால் சிறிய பறவைகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்த அந்தச் சின்னஞ்சிறு பெண் போலவே இவள் முகமும் ஒன்று போலக் காணப்பட்டது.

''ஓல்!''

''ஆம், என் பெயர் ஓல்கா. என்னைத் தெரியுமா?''

''ஆம், அறிவேன். தகவல் நாட்டைச் சேர்ந்த ஓல் தானே நீ!''

''மீண்டும் மயக்க வெறிகொண்டதாகத் தெரிகிறது,'' என்று யாரோ கவலையோடு கூறினான்.

''குறிப்பிடத்தக்கக் காளான் நஞ்சுண்ட ஆசாமி,'' என்று மற்றொரு குரல் கூறியது. ''நாம் மீண்டும் அவன் வயிற்றைத் துப்புரவு செய்ய வேண்டும் என்று அஞ்சுகிறேன்.''

இந்த வார்த்தையைக் கேட்ட உடனேயே நான் மிகவும் நலமாக இருப்பதாக உணர்ந்தேன்.

''இவனை நீங்கள் எங்கே கண்டீர்கள்?'' யாரோ கேட்டான்.

''காட்டு ஓரமாக.''

''ஸ்டேஷன் அருகிலா?''

''ஆம்.''

''தண்டவாளத்திலிருந்து இரண்டு எட்டுக்கு மிகாத தூரத்தில் அவன் கிடந்தான்,'' என்றாள் ஓல்.

''பச்சையாகக் காளான்களை உண்பது நல்ல எண்ணம், நண்பரே!'' என்றது ஓர் ஆண்

குரல். "இங்கே, இதைக் குடி." எனக்கு இளஞ்சிவப்பு நிற திரவம் ஒன்று கொடுக்கப் பட்டது.

குடித்த உடன் நான் முழு உணர்வைப் பெற்றேன். ஓலை நான் வெறித்து நோக்கி னேன். அவள் தடுமாற்றத்துடன் மறுபுறம் திரும்பிக் கொண்டாள். ஒரு சிறு முயற்சி போதும், இதுவரை நான் அலைந்து திரிந்த அந்தச் சிறிய நாடு, நகரம், வீதிக்கு நான் திரும்பி விடுவேன்.

"நல்லது, உங்களுக்கு எப்படி இருக்கிறது?" எனக் கேட்டார் டாக்டர்.

பதில் சொல்வதற்குப் பதிலாக நான் எழுந்து நின்று, படுக்கையிலிருந்து கொஞ்ச தூரம் நடந்தேன்.

"இப்போது குணமாகி விட்டீர்கள்," என் றார் அவர்.

ஓல் என்னைப் பார்த்து நகைத்தாள். சும் மா எழுந்திருந்து போய்விடுவது என்பது முடி யாத செயல் என்றுணர்ந்தேன். நம் இருவருக் கிடையில் பொதுவான ஒரு ரகசியம் இருக் கிறது, இல்லாமலா?

"ஓல்கா, இளைஞனை ஸ்டேஷனுக்குக் கொண்டு செல். கடைசி வண்டியில் இவன் செல்வதற்கு வாய்ப்பு உண்டு," என்றார் டாக்டர்.

சட்டைப் பையில் கையை விட்டேன். ஏதோ கடினமான ஒன்று கையில் பட்டது. அதை வெளியில் எடுத்தேன். அது ஒரு விநோத வடிவுள்ள ஒரு கல். அதன் தேய்ந்த

பகுதியில் ஏதோ எழுத்துக்கள் தெரிந்தன.

''இது எங்கிருந்து வந்தது? விநோதமானது...'' என்றார் டாக்டர் புருவத்தை உயர்த்தியவாறு. கல்லை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் புரியாத எழுத்துக்களைப் படிக்க முயல்வது போலத் தோன்றியது.

''மண்ணிலுள்ள அமிலத்தன்மை பாறையின் மிருதுவான பகுதியை கரைத்து விடுவதாகும் என்பதே இந்த உருவத்திற்குக் காரணம்,'' என்றார் அவர் கல்லை என்னிடம் கொடுத்துக் கொண்டே.

நான் எதுவும் பேசவில்லை. ஏனென்றால் புரியாத நிகழ்ச்சிகளுக்கு எளிதாக விளக்கம் கொடுக்கக்கூடிய மக்களை இந்த உலகத்தில் மற்ற எதை விடவும் நான் அவ்வளவாக விரும்புவதில்லை.

நோக்கமும் வழிகளும்

முன்னுரை

கடத்தல்

லீகோ ஸ்டேவன் என்ற புகழ்பெற்ற கழைக்கூத்தாடியின் வருகையை அறிவிக்கக் கூடிய சுவரொட்டிகள் நகர முழுதுமிருந்தன. அவன் அந்த அளவுக்குப் புகழ்பெற்றவனில்லை. உண்மையாக, அவன் புதியவனாக இருந்தால் அவனுடைய புகழ் மாநில எல்லையைத் தாண்டி இருக்காது. இருப்பினும் வல்லுநாகள் ஸ்டேவனுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தைக் கணித்தார்கள். நடைபாதையை ஒட்டியுள்ள ஆர்போர்வில் போன்ற சிறிய ஊருக்கு, தலைநகரிலிருந்த புகழ்பெற்ற நட்சத்திரங்கள் அடிக்கடி வந்ததில்லை.

அவன் செய்ய வேண்டிய நான்கு நிகழ்ச்சிகளில் ஒன்றை ஏற்கெனவே நடத்திவிட்டதால், சர்க்கஸ் காணவந்த மக்களால் லீகோ ஓரளவுக்கு அறிமுகமாகி இருந்தான். அவர்கள் தங்களுடைய பழைய தொப்பிகளை உயர்த்தி மரியாதையுடன் அவனை வாழ்த்தினார்கள்.

லீகோ தனது ஹோட்டலிலிருந்து வெளி வந்து ஒரு விநாடி ஏதோ நினைத்தபடி நின்றான். தூசி மற்றும் காய்ந்த சருகுகளை

காற்று தெருவில் இறைத்தது. வீதியின் இரு மருங்கிலும் உள்ள தாழ்வான வீடுகள் ஏதோ ஒரு சோகச்சாயலைக் காட்டி நின்றன. ஹோட்டல் வரவேற்பாளன் முதல் நாள் வா சகம் பொறிக்கப்பட்ட ஒரு பெரிய சாவியை அவனிடம் கொடுத்த போது, ''இந்நகரில் பார்க்க வேண்டிய இடங்கள் மூன்று—ஆறு, நகர் மன்றம், சிறைச்சாலை,'' என்று சுட்டிக்காட்டினான்.

குன்றிலிருந்து தெரு விலகிச்சென்றதால் அது ஆற்றை நோக்கிச் செல்ல வேண்டும் என்று லீகோ யூகித்தான். ஒரு நொடி அசையாமல் நின்றவன் மழைக்குப் போட்டுக் கொள்ளும் மேலங்கியால் தன் உடலை இறுக்க மூடியவாறு தெருவில் இறங்கி நடந்தான். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்னதாக உலாவுதல் லீகோவின் பழக்கம். அவனாகவே இப்படிச் செய்ய விரும்பினான். அறிமுகமில்லாத ஒரு நகரத்தின் தெருக்களில், மன எழுச்சி தரும் கூடாரத்தின் உச்சியில் கழிபேருவகை தரும் அந்த கண நேரத்தை வெறுப்புடனும் கிளர்ச்சி யுடனும் எதிர்நோக்கியபடி, அவனது உடல் எடையற்றதாகக் காணும் நேரங்களையும், கடு கடுப்பை இழக்காது அவனது இதயம் மகிழ்ச்சி யால் நிறைவதையும் எண்ணி, அவன் அலை வான்.

அன்று எந்த ஒரு வலையுமில்லாமல் அவன் மீண்டும் வித்தை செய்யப் போவதாக அவன் அறிந்தான். ஆர்போர்வில் மக்கள் இந்த விஷயத்தில் மற்ற நகர மக்களிடமிருந்து

வேறுபட்டவர்கள் இல்லை. இருப்பினும் இது போன்ற பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் வித்தை செய்ய லீகோவிற்கு மனமில்லை: தனது சொந்தத் திறனில் அவனுக்கு நம்பிக்கை உண்டு.

இந்த நம்பிக்கை எதிலிருந்து பிறந்தது என்று சொல்வது கடினம். லீகோ தன் தொழில் திறனைத் தானாகவே கற்றவன். அது மட்டுமல்ல, இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தொழில் வல்லுநர்கள் இவனைக் கண்டு பெருமூச்செறியவும், சர்க்கஸ் உலகம் வியப்பில் ஆழும்படியாகவும் செய்தவன்.

இந்த ஒல்லியான இளைஞன் கழைக் கூத்தே தனது உண்மையான தொழில் என்று உணர்ந்தவன். கூடாரத்தின் அதி உச்சியில் வித் தை செய்வதே ஆகாயக் கழைக்கூத்து என் பதாகும்.

வானளாவிய உயரத்தில் காற்றின் ஊடே தாவும் போது ஏற்படும் விபத்துக்களைப் பற்றி நீள நினைத்துப் பார்க்க லீகோ தவறியதில்லை. அத் தருணங்களில் தன் உடலின் ஒவ்வொரு செல்லும் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், எல்லையற்ற சக்தி பெற்றிருப் பதாகவும் அவன் உணர்ந்தான்... பின்பு அவன் கால்கள் தரையைத் தொட்டதும், மீண்டும் உயரத் தொங்கும் வளையங்களையும், கம்பி களையும் அதில் பறப்பதால், அவன் முன் பின் எதுவுமே தெரியாதவன போல உண்டாகும் விடுதலை உணர்வுகள் பற்றி எண்ணத் தொ டங்குவான்.

தனது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு இன்னும் இடமிருப்பதாக லீகோ நிச்சயமாக நம்பினான். இந்தப் பயணத்தின் போது தனக்குக் கிடைக்கும் ஓரளவு பணத்தைக் கொண்டு, ஏதாவது ஓர் இடத்தில் தங்கி, மேற்கொண்டு எந்த நிகழ்ச்சிகளிலும் ஈடுபடாமல், நன்கு பயிற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தான். ''ஆகாய கழைக்கூத்தாடி'' என்று ஒரு நிருபரால் பெயர் சூட்டப்பட்ட அவன் தனது துறையில் பூரணத்துவத்தை அடைய விரும்பினான். அம்முடிவுக்கு வந்தவுடன் லீகோ மிகுந்த விடாமுயற்சி எடுத்துக் கொண்டான்...

அவனுக்கு இன்னும் மூன்று நிகழ்ச்சிகளே இருந்தன. மூன்று நாட்களுக்குப் பிறகு சாரமற்ற இச்சிறு நகரத்தை விட்டு நீங்கி தனது முக்கியப் பணியாக எதைக் கருதுகிறானோ அதில் ஈடுபட்டு விடுவான்.

பணத்திற்காக மட்டும் இல்லாமல் இருந்தால் இவ்வளவு நீண்ட பயணத்தை லீகோ மேற்கொண்டிருக்கவே மாட்டான். பரிபூரணத்துவத்தை நோக்கிச் செல்லும் பாதை அடைபட்டிருக்கிறது என்பதையும், அதற்கான காலத்தைப் பாதுகாத்து வர வேண்டும் என்பதையும் அவன் உணர்ந்திருந்தான்.

இருப்பினும் இந்தப் பயணம் ஒரு சாதகமான அம்சத்தையும் கொண்டிருந்தது. ஆர் போர்வில் போன்ற பழமை நலங்கனிந்த சிறிய இடத்தை அவன் வேறு எங்கே பார்க்கப்

போகிறான்? இதற்கு முன்பாக இது போன்ற பட்டணங்களை பழைய திரைப்படங்களில்தான் பார்க்க முடியும் என்றே அவன் நினைத்திருந் தான்.

நவீன காலம் பற்றிய உணர்வு அந்தப் பழைய சுவர்களை ஒட்டியே கடந்து சென்றது. ஆர்போர்விலில் இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டது என்பதை நினைப்பது நம்பக் கூடியதாக இல்லை.

லீகோ மனம் போன போக்கில் செல் பவன் போன்று இருபுறமும் உள்ள தெரு அடையாளங்களைப் பார்த்தவாறே நடந் தான்.

எதிர்பாராத ஒரு வளைவைத் திரும்பிய வுடன் எதிர்ப்பட்ட ஒரு நேர்த்தியான காட்சி யால் லீகோ திகைத்துப் போனான். செங்குத் தான சரிவில் கொத்துக்கொத்தாக அமைந்த வீடுகள் நெருங்கி நின்றன. சரிவுக்குக் கீழே வளைந்து நெளிந்து செல்லும் ஆற்றை — கடலை நோக்கி, அவன் இப்போது அறிந்திருந்தது போல, — அவை பார்த்தவாறு அமைந்திருந்தன.

எப்போதோ ஒரு சமயம் வெள்ளை வர்ணம் பூசப்பட்ட கல் தடுப்புச் சுவரை நோக்கி லீகோ நடந்தான். அவனுக்குக் கீழே ஆர்போர்வில் பூங்கா, ஆற்றின் வளைவு களையெல்லாம் ஒட்டிச்சென்றபடி நீண்டு கிடந் தது.

இன்னும் கீழே செல்ல வேண்டும் என்ற திடீர் ஆசைக்கு அவன் பணிந்தான்... அந்

நகர மக்களை மேலுங்கீழுமாக இழுத்துச் சென்ற அந்த இளமைக் கால நினைவுகளை கயிற்றினால் இயங்குகின்ற வண்டிப்பாதை மறைந்திருந்தது. அந்தக் காலத்திய பச்சைப் பெட்டிகள் இப்போது அருவருக்கத்தக்கவாறு காணப்பட்டன. தண்டவாளங்களுக்கு இடையில் ஆங்காங்கே வேலமரப் புதர்கள் மண்டிக் கிடந்தன. எப்போதோ தங்களது கதவுகளை இழந்து விட்ட ரயில் பெட்டிகளிலிருந்து விளையாடும் சிறுவர்களின் கூக்குரலைக் கேட்க முடிந்தது.

மங்கலான சூரிய அஸ்தமனத்தைக் கொஞ் சம் நின்று மகிழ்ந்தவாறே லீகோ இன்னும் கீழே இறங்கலானான். மாலை வேலைக்காக தனது சக்தி முழுதும் தேவை என்று எண் ணியதால் அவன் அவசரப்படாமலேயே சென் றான்.

பூங்காவில் பெரும்பாலும் ஆள்நடமாட்ட மே இல்லை. மக்களை வெளியில் அழைக்கக் கூடிய மாலைப்பொழுதல்ல அது. கரையை ஒட்டி லீகோ நடந்த போது உதிர்ந்த இலைகள் அவன் காலில் பட்டு சலசலத்தன. இடம் பெயர்ந்திருந்த பூங்காவின் பெஞ்ச் ஒன்று இப்போது பாதையின் குறுக்காக கிடப்பதை அவன் கவனித்தான். ஒரு கோடைக்கால மாலை நேரத்தைக் கழிக்க வந்த ஓர் இளம் ஜோடி அதை அங்கே போட் டிருக்க வேண்டும். இலையுதிர் காலம் மரத் திலுள்ள இலைகளையெல்லாம் அகற்றுவதற்கு

முன்பு அது ஓர் ஒதுங்குப் புறத்தில் இருந்திருக்கும்.

பெஞ்சின் மீது உதிர்ந்து கிடந்த சுத்தமான பொன் போன்ற மேப்பிள் மர இலை ஒன்றை தட்டி விட்டு அதன் ஓரத்தில் லீகோ அமர்ந்தான். அவன் தனது கடிகாரத்தைப் பார்த்தான். இன்னமும் அவசரப்பட அவசியமில்லை.

அப்போது பாதையின் ஒரு திருப்பத்திலிருந்து இரு மனிதர்கள் வெளியே வந்தனர். அவர்கள் அவசரப்படாமல் நடந்து வந்து லீகோவை வெறித்து நோக்கினார்கள். திடீரென்று ஐய உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அவர்களை அவன் அதற்கு முன்னர் எங்கோ பார்த்ததாக உறுதியாக நம்பினான்.

அவர்கள் பாதையை விட்டு விலகி அவன் அமர்ந்திருந்த பெஞ்சை நோக்கி நடந்து. வந்தது அவனுக்கு வியப்பைத் தரவில்லை.

ஒருவன் பணிவாக தன் தொப்பியை உயர்த்தியவாறே ''நாங்கள் அமரலாமா?'' என்று தொடங்கினான்.

''உலாவுதற்கு இது ஒரு மோசமான இடமில்லை, அப்படித்தானே!'' என்று புன்னகை செய்தவாறு, மற்றவன் தன் பையிலிருந்த சிகரெட் பெட்டியை வெளியே எடுத்தான்.

''நீங்கள் லீகோ ஸ்டேவன், கழைக்கூத்தாடி, இல்லையா?'' என்று விசாரித்தான் முதலாமவன்.

அவர்களை இனியும் அலட்சியப்படுத்த முடியாது என்பதை லீகோ இப்போது உணர்ந்தான். இலேசாக வாயைத் திறந்த வாறு ''ஆம், நான் லீகோ ஸ்டேவன்,'' என் றான்.

''உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி,'' என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

''நான் இன்று மாலையும் வித்தை காட்டப் போகிறேன். மேலும் நான் தனிமையில் இருக்கவே விரும்புகிறேன்,'' என்றான் லீகோ.

''நாங்கள் உங்களைக் காக்க வைக்கப் போவதில்லை,'' என்றான் அவர்களில் இளை ஞனான ஒருவன். ''சொல்லப்போனால் அரு காமைத் தோற்றத்தில் உங்களைப் போன்று முன்னுக்கு வரும் நட்சத்திரம் எப்படி இருப் பார் என்பதை அறியவே நானும் என் நண் பனும் விரும்பினோம்.''

இருவரும் பெஞ்சின்மீது அமர்ந்தார்கள். அவர்களில் அகன்ற தோளையுடைய இளைஞன் புகைக்கத் தொடங்கினான். வெளிவரும் வெளி றிய நீலப் புகையை கையால் ஒரு புறமாக நிதானமாக விலக்கி விட்டுக் கொண்டிருந் தான்.

லீகோவுக்கு புகைப்பிடிப்பவர்கள் அருகில் நிற்க முடியாது. அவன் எழுந்திருக்க முயன் றான்.

இருவரில் வயதானவன் லீகோவின் தோளில் கையை இட்டவாறே, அவனது நண்பனை ஒரு பயமுறுத்தலோடு பார்த்தவாறே, ''அவனை மன்னிக்கும்படி நான் வேண்டிக் கொள்கிறேன்.

நாங்கள் இவ்வளவு நீண்ட தூரம் வந்ததே குறிப்பாக உங்களைப் பார்ப்பதற்காகத்தான்,'' என்றான்.

''என்னைப் பார்ப்பதென்பது ஒரு பிரச்சினையில்லை. இன்று எட்டு மணியளவில் சர்க்கசில் நான் நிகழ்ச்சி செய்ய விருக்கிறேன்,'' என்று சற்று வெறுப்பாக பதில் அளித்தவாறே மீண்டும் லீகோ பெஞ்சிலிருந்து எழுந்திருக்க முயன்றான்.

''சற்று பொறுக்கும்படி உங்களை வேண்டிக் கொள்கிறேன்,'' என்றபடி புதியவன் அவனை மீண்டும் நிறுத்தி வைத்தான். ''நீங்கள் வித்தை காட்டும் போது பார்ப்பது ஓர் உள்ளக் கிளர்ச்சியே. ஆனால் எங்களுடைய ஆர்வம் முற்றிலும் வேறுபட்டது.''

''சற்றே வேறுபட்டதா?'' என்றான் லீகோ அனிச்சையாக.

''நாம் விஷயத்திற்கு வருவோம். உங்களைக் காக்க வைக்க விரும்பவில்லை,'' என்று ஆலோசனை கூறிய புதியவன், லீகோவின் பதிலுக்காக காத்திராமல், ''உங்களிடம் ஒரு மிக முக்கியமான விஷயத்தைப் பேச நாங்கள் விரும்புகிறோம்,'' என்றான்.

அதற்குப் பதிலளிப்பது போல லீகோ தோள்களை குலுக்கினான்.

''கிராவிடோன்களின்* இயல்புகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று

---

* ஈர்ப்பாற்றல் மண்டலத்தின் கருதுகோள் அடிப்படைத் துகள்கள். — ப-ர்.

லீகோவை ஒட்டி அமர்ந்திருந்தவன் கேட்டான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்... கிராவிடோன்களா?"

புதியவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இந்த எதிர்பாராத கேள்வி கேட்ட நபர் பேசத் தொடங்கினான். "மன்னியுங்கள், நாங்கள் உங்களுக்குப் பழக்கப்பட்டவர்கள் அல்ல. நீங்கள் சந்தேகத்துடன் பார்ப்பது சரியே. நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். நான் ஜில்ட்சோனி, ஆல்வார் ஜில்ட்சோனி. நீங்கள் என் பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்?"

இல்லை என்பது போல லீகோ தலையாட்டிவிட்டு இரண்டாவது நபரைப் பார்த்தான். அவன் சிகரெட் பிடித்த கையை ஒரு புறமாகத் தொடங்க விட்டவாறு பெஞ்சின்மீது சாய்ந்து கொண்டிருந்தான். இங்கு என்ன நடைபெறுகிறது என்பதைப் பற்றிக் கொஞ்சங்கூட அக்கறை காட்டாதது போல அவன் முகம் காட்டியது. இளைஞனின் போக்கிரிக் கண்களுக்கு முன்னால் நீண்டிருப்பது கிளர்ச்சியற்ற இலையுதிர்காலக் காட்சி அல்ல, ஆனால் அவனது சொந்த தனிப்பட்ட சொர்க்கம் என எண்ணக் கூடும் — அவனது துரித்த நோக்கு மிகவும் கனவுமயமானது.

அவனது கையிலிருந்த சிகரெட்டைப் பற்றிக்

காலில் போட்டு மிதித்து அவனை உலுக்கிய வாறே, ''எழுந்திரு!'' என்றான் ஆல்வார் ஜில்ட்சோனி.

''ம்... செயல்படத் தயார்.''

ஜில்ட்சோனி இரண்டாமவனை தனது உதவியாளன் அபார் இசாவ் என்று அறிமுகப் படுத்தயவாறு மேலும் தொடர்ந்தான்: ''பரி பூரண பூஜ்யம் என்பது அடைய முடியாத ஒன்று என்று பௌதிகவாதிகள் சொல்கிறார் களே, அது அப்படித்தானா?''

''ஆம், அப்படித்தான் நான் கேள்வியுற்றி ருக்கிறேன்,'' ஒத்துக்கொண்டான் லீகோ.

''ஆக, நீங்கள் அதையும் கேள்வியுற்றிருக் கிருக்கிறீர்கள்... நல்லது, அன்புக்குரிய லீகோ, சற்றே கற்பனை செய்து பாருங்கள். பௌ திகவாதிகள் எதையெல்லாம் கூறுகிறார்களோ அவற்றை இந்தக் கட்டுறுதி வாய்ந்த வாலிபன் இங்கு மறுக்க முடிகிறது. இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''நம்ப முடியாது,'' என்றான் லீகோ வியப் பை வெளிப்படுத்தும் துணிச்சலுடன்.

''அவன் எப்படி இதைச் சாதித்தான் என்று தானே நீங்கள் வியப்படைகிறீர்கள்?''

''ஆம், எப்படி?''

''தனது சொந்த நடத்தையின் மூலம் பரிபூர்ண பூஜ்யநிலை நமது கையில் இருப்ப தாக அவன் நிரூபித்துக்காட்டினான்,'' என் றான் ஜில்ட்சோனி வெற்றிப்பெருமிதத்துடன். லீகோவின் கண்களில் காணப்பட்ட குழப் பத்தைக் கண்டவாறே மேலும் தொடர்ந்து,

''பௌதிகத்தைப் பொருத்தவரை அபார் இசாவ் ஒரு பரிபூரண பூஜ்யம்,'' என்றான் தனக் கேயுரிய நையாண்டித்தனத்துடன் சிரித்த படி.

இந்தப் பேச்சுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாதது போலவும் தனக்கு சலிப்பூட்டுவது போலவும் காட்டியபடி அபார் இசாவ் அங்கு அமர்ந்திருந்தான்.

''ஒரு பௌதிகவாதியாகிய நான் இவனை ஏன் வைத்திருக்கிறேன் என்று நீங்கள் அதிச யிக்கலாம். ஒரு தத்துவார்த்தக் கேள்விதான். விஷயம் என்னவென்றால் பௌதிகத்தில் அவன் எதையும் அறிந்து கொள்ளாத போது இசா வுக்கு வேறுபல திறன்கள் வருகின்றன,'' என்று விளக்கினான் ஜில்ட்சோனி. ''தொடக்கத் தில் நான் சொல்வதை அவன் செய்கிறான். தேவையான பொழுது சிப்பியினுள் நத்தை போல அடங்கியிருப்பான். ஆனால் உடல் பலத்தை காட்ட வேண்டிய அவசியம் வரும் போது அவனைக் கட்டுப்படுத்தவும் முடியுமா?''

முன்னர் போல சலிப்படைந்தவனாகக் காணப்பட்ட இசாவ் பையினுள் கையை விட்டு ஒரு நாணயத்தை எடுத்தான். அதைத் தன் கை விரல்களுக்கிடையே வைத்து வளைக்கத் தொடங்கினான். இரண்டாக மடித்தது போல வளைந்த அந்நாணயத்தை அவன் ஸ்டேவனிடம் கொடுத்தான்.

''அருமை,'' என்ற ஸ்டேவன், அந்த ஐந்து சத நிக்கல் நாணயத்தைப் பழைய நிலைக்கு

நிமிர்த்த முயன்று தோல்வியுற்றான். ஒரு கழைக்கூத்தாடி என்ற முறையில், மனிதர்களின் பிற சாதனைகளை விட உயர்ந்த, உடல் பலத்தையும் சுறுசுறுப்பையும் கண்டு அவற்றை மதித்தான்.

''பரவாயில்லை,'' என்றான் ஸ்டேவன். ''உங்களுடைய தேவை என்ன என்பதை நான் தெரிந்து கொண்டேன் என்று நினைக்கிறேன்... உங்களுக்கு ஒரு வேலை வேண்டும், அவ்வளவு தானே? நல்லது. நிகழ்ச்சிக்கு முன்னதாக அங்கு வந்து சேருங்கள். எனக்கு நன்கு தெரியாதவராக இருந்தாலும் சர்க்கஸ் இயக்குநரிடம் உங்களுக்காக நான் பேச முயற்சிக்கிறேன். ஆர்போர்வில் மக்களுக்கு இந் நேரத்தில் ஒரு புதிய வித்தையைக் காட்ட அவர் திட்டமிட்டிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.''

''இதைக் கேட்டாயா, அபார்?'' என்றான் ஜில்ட்சோனி தன் நண்பனின் விலாப்புறத்தை இடித்தவாறே. ''கடினமான வேலையாக இருந்தால் உனக்கும் ஏதாவது கிடைக்கும்.''

''உங்களைப் பற்றி?'' லீகோ கேட்டான்.

''என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' வியப்புடன் ஜில்ட்சோனி கேட்டான்.

''எங்களுக்கு நீங்கள் என்ன காட்ட முடியும்? கிடைத்தளக் கம்பியா, பிரமிடா வளையங்களா? ஒருவேளை ஆகாயக் கழைக்கூத்து வித்தையா?''

ஜில்ட்சோனி முகச்சுளிப்புடன் கவலை தோய்ந்த குரலில் பேசினான்: ''சிறுவனே, நீ

உனது வேடிக்கையை எங்களுக்குக் காட்டிவிட்டாய். அது போதும். அப்படியானால் ஆல்வார் ஜில்ட்சோனியைப் பற்றி நீ கேள்விப்பட்டதேயில்லை, இல்லையா?''

இந்த வினாவுக்கு குற்ற உணர்வோடு கூடிய புன்னகையுடன் லீகோ பதிலளிக்கலானான்: ''நான் அறியவில்லை என்பதை நேர்மையாக ஒத்துக்கொள்கிறேன்.''

பெஞ்சின் பின்புறத்தில் விரல்களால் தாளமிட்டவாறே, ''அப்படியா... ஆக, நீ எனது கட்டுரைகளை படித்ததில்லை என்பது தானே பொருள்?'' என்றான் ஜில்ட்சோனி.

''சர்க்கஸ் பற்றிய கட்டுரைகளா?''

''பொது மண்டலத் தத்துவம்* பற்றிய நான்கு கட்டுரைகள்,'' என்றான் ஜில்ட்சோனி சீரிய உணர்வோடு. ''அதைப் பற்றித் தீவிரமாக நொடிப் பொழுது சிந்தித்தால் அதன் முக்கியத்துவம் உனக்கு விளங்கும்.''

''அது மாதிரி எதையும் நான் படித்ததில்லை,'' என்று லீகோ தலையாட்டினான்.

''ஒருவேளை நீ பௌதிகப் பத்திரிகையே படிப்பதில்லை போலும்?'' கேட்டான் ஜில்ட்சோனி. அதில் ஏதோ நகைப்புக்கிடமிருப்பது போல ஓரப் பார்வை பார்த்தான்.

''நான் அவற்றைக் கண்ணெடுத்தே, பார்ப்பதில்லை,'' என்றான் லீகோ.

---

* பொருள்களின் எல்லாவகையான எதிரெதிர் விளைவுகளையும் — நியூக்ளியர், மின்காந்த, ஈர்ப்பு விசை — ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு கொள்கை. — ப-ர்.

''பரவாயில்லை,'' என்றான் ஜில்ட்சோனி, லீகோவின் முழங்காலில் தட்டியவாறே. ''எங்களை நம்பவில்லை என்றால் அது உனது சொந்த விஷயம். ஓரளவுக்கு அது சரியும்கூட. ஆனாலும் நாம் இப்பொழுது தீர்க்கமாகப் பேசுவோம்...''

இம்முறை லீகோ தீர்மானத்துடன் எழுந்தான்: ''நான் வருந்துகிறேன், நான் போக வேண்டும்.''

''நிகழ்ச்சி தொடங்க இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது,'' என்று ஜில்ட்சோனி நினைவுபடுத்தினான்.

''நான் கம்பிகளைச் சோதிக்க வேண்டும்...''

''அமர், சிறுவனே,'' என்றான் ஜில்ட்சோனி. இம்முறை அவனை தோளைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தான்.

''உங்களுக்கென்ன வேண்டும்?''

''நமது பேச்சு இன்னமும் முடியவில்லை.''

அபார் இசாவின் பெரிய திண்ணிய தோள்களையும், அவன் தன் கையை மடக்கி நீட்டுவதையும் லீகோ பார்த்தான், பிறகு நடமாட்டமே இல்லாத தெருவையும் நோக்கினான்... தங்குவதைத் தவிர வேறு வழியில்லை அவனுக்கு.

அபார் கஞ்சா சாப்பிடுபவனைப் போல் தோற்றமளித்தாலும் அவர்கள் குடித்திருக்கவில்லை என்று அவன் நினைத்தான்.

''ஆமாம், உண்மையிலேயே இன்னும் கொஞ்சம் நேரம் இருக்கிறது. உங்களுக்காக

நான் இருக்கிறேன்,'' என்று லீகோ ஒத்துக் கொண்டான்.

''சிறுவனே, இது தான் மிகவும் விரும்பத் தக்கது,'' என்று ஜில்ட்சோனி இதை ஆதரிப் பதைப் போலத் தலையாட்டினான். ''உன்னைப் பற்றி எங்களுக்கு எல்லாமே ஏற்கெனவே தெரியும். நீ உன்னைப் பற்றி அறியாததும் தெரியும்... அதுவல்ல இப்போது முக்கியமா னது.''

லீகோ தனது கடிகாரத்தைப் பார்த்தான். அப்போது ஜில்ட்சோனி தொடர்ந்தான்: ''எது முக்கியமோ அதிலிருந்து நாம் தொடங்கு வோம்... பொது மண்டலத் தத்துவம் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''மண்டலமா?'' எதிரொலித்தான் லீகோ.

''ஆமாம், மண்டலமேதான்,'' ஜில்ட் சோனி திரும்பக் கூறினான். பொறுமையில் லாதவாறு தனது தொப்பியைச் சரி செய் துகொண்டான். ''பொது மண்டலம் குறித்த பணி முட்டுக் கட்டையிடப்பட்டது குறித்து நீயாக ஒருபோதும் நினைத்துப்பார்த்ததுண் டா?''

''நான் நினைத்தேன் என்று என்னால் சொல்ல முடியாது...''

''மின்காந்த மண்டலங்கள் குவாண்டும் ஆக்கப்பட்டது பற்றி நீ என்ன சொல்லப் போகிறாய்?'' என்றான் ஜில்ட்சோனி மேன் மேலும் பொறுமை இழந்தவனாக.

லீகோ தனது நெற்றியைத் துடைத்துக் கொண்டு, இத்தகைய விஷயங்களில் அவர்

களுக்குத் தன்னால் எதுவும் உதவ முடியாது என்று சுட்டிக்காட்டினான்.

''ஒருவேளை அவன் தனது கருத்தை ஏற்கெனவே செலவழித்து விட்டான் போலும்?'' என்றான் இசாவ்.

''அப்படியிருந்தால் அவன் தனது முட்டாள்தனமான கழைக்கூத்தை என்றோ கைவிட்டிருப்பான்,'' என்று ஜில்ட்சோனி எரிந்து விழுந்தான்.

இப்போது லீகோ சுறுசுறுப்படைந்தான். திடீரென்று எழுந்து ஓடுவதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தான்.

''ஒருவேளை அவனது கழைக்கூத்தெல்லாம் ஓர் ஏமாற்று வித்தை அல்லது சாதாரணமாக ஒரு பொழுதுபோக்காகத்தான் இருக்கும்,'' என்றான் அகன்ற தோளையுடைய அபார்.

ஸ்டேவனின் திசையிலேயே ஜில்ட்சோனி பார்வையைச் செலுத்தினான்.

''நீங்கள் நேர்மையானவர் என்பது எனக்குத் தெரிகிறது...'' தொடங்கினான் லீகோ.

''எனது நிலையிலிருந்து என்னைப் பிறழ முயற்சிக்க வேண்டாம்,'' என்று குறுக்கிட்டான் ஜில்ட்சோனி. ''கண்டுபிடிப்புகளை மறைப்பது நல்லதல்ல. ஏனெனில் அது விஞ்ஞான வளர்ச்சிக்கு தடையாக இருக்கும். பௌதிகவாதிகளாகிய நாம் எல்லாரும் ஒரே குடும்பத்தினர். நீ ஒப்புக்கொள்கிறாயா?''

''ஆனால், நான் ஒரு பௌதிகவாதியல்ல,''

கடைசியில் தனது எதிர்ப்பை லீகோ வெளியிட்டான்.

''பௌதிகவாதியில்லை—ஆக ஒரு பௌதிக வாதியில்லை,'' ஜில்ட்சோனி எதிரொலித்தான். ''அற்ப விஷயங்களை விவாதிப்பதில் இப்போது அர்த்தமில்லை, அப்படித் தானே?''

பிறகு ஆல்வார் அபாருக்கு சைகை காட்டியதன் பேரில் அவன் சிகரெட் பாக்கெட்டை லீகோவிடம் நீட்டி அவற்றை எடுக்கும்படி கேட்டுக் கொண்டான்.

லீகோ தனது தலையை அசைத்துச் சொன்னான்: ''நான் புகைப்பதில்லை.''

''ஓ... ஆமாம், விளையாட்டுவீரர்களுக்கு அது நல்லதல்ல, அப்படித்தானே?'' என்றான் ஜில்ட்சோனி.

அபார் புகையை ஆழ இழுத்து வெளி விட்டான். அவன் பாக்கெட்டைத் தன் பையில் திரும்பப் போட்டபோது, லீகோ தன் இருக்கையிலிருந்து குதித்து எழுந்தான். இதனை எதிர்பார்த்தவன் போல அபாரும் எழுந்து ஒரு பயமுறுத்தும் பார்வையோடு சிகரெட் புகையை ஸ்டேவனின் முகத்தில் ஊதினான்.

களைக்கூத்தாடியும் பலமிழந்தவனாகவும், எதிர்க்கத் துணியாதவனாகவும் பெஞ்சில் திரும்பச் சாய்ந்தான். அவன் கைகள் தாமாகவே ஓய்ந்து விழுந்தன. தலை தோள் புறமாகச் சாய்ந்தது.

''இவ்வளவு போதுமானது,'' என்றான் ஜில்ட்சோனி. அவன் ஸ்டேவனை இயல்பான

தோற்றத்தில் அமைத்து வைத்தான். ஸ்டேவனோ தூங்கிப் போய்விட்டான். அவ்வழி செல்வோர் யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று ஜில்ட்சோனி தன் தொப்பியை எடுத்து அவன் முகத்தில் மீது நெருங்க வைத்தான்.

இதற்குள்ளாக தொலைவில் அந்த மூன்று மனிதர்களும் குடிகாரக் குழுபோலத் தோன்றினார்கள், மற்ற இருவரை விட அதிகம் குடித்தவனாகக் காணப்பட்டவன் இப்போது தூங்கிக் கொண்டிருந்தான்.

ஜில்ட்சோனி நாற்புறமும் பார்த்தான். பூங்காவில் நடமாட்டமே இல்லை என்பதைக் கண்டான். நடந்து போக இதைவிடச் சிறந்த இடம் இல்லை என்று கூறினான். ''இப்போதைய முக்கியக் கேள்வி: நமக்குத் தேவைப்படும் மனிதன் இவன்தானா?''

அதில் சந்தேகமே இல்லை என்பது போல அபார் சைகை காட்டினான். ஆனால் அது ஜில்ட்சோனிக்கு நூற்றுக்கு நூறு திருப்தியளிக்கவில்லை.

கழைக்கூத்தாடியின் மெலிந்த உருவத்தைப் பார்த்தவாறே, ''இதுதான் நமக்குக் கடைசி வாய்ப்பு. பிக் எக்ஸ் தவறு செய்யவில்லை என்பது உனக்கு நிச்சயமா?..'' என்றான் ஜில்ட்சோனி.

''தகவலுக்காக பிக் எக்ஸை நான் வினவிக் கொண்டிருந்தபோது, உன்னுடைய அறிவுரைகளைத்தான் ஆரம்பத்திலிருந்து பின்பற்றினேன்,

பாஸ்,'' என்று அபாரிடமிருந்து கடுப்புமிக்க பதில் வந்தது.

''நீ அப்படியே செய்தாய் என்ற நம்பிக்கை ஒன்றே இப்போதைக்குப் போதுமானது. நல்லது, நாம் போகலாம்!''

தோளைப் பற்றி அபார் இசாவ், லீகோ ஸ்டேவனைத் தூக்கினான். கழைக்கூத்தாடியின் முகம் குழந்தையைப் போலவே இருந்தது. அபார் அவன் முகத்தில் ஓர் அறை விட்டான். லீகோ கண்ணைத் திறந்து சுற்றும் முற்றும் குழப்பத்தோடு பார்த்தான்.

''காலை வணக்கம்,'' என்றான் அபார். ''எழுந்திரு, சுறுசுறுப்பாயிரு!''

ஜில்ட்சோனி ஸ்டேவனைப் பொறுமையில்லாமல் ஒரு தள்ளுத் தள்ளினான். ஸ்டேவன் அதே குழம்பிய பார்வையுடன் முன்னால் ஓர் எட்டு எடுத்துவைத்தான். போதை மருந்தின் பாதிப்பிலிருந்து இன்னமும் அவன் தெளிவு பெறவில்லை.

லீகோவால் துணையின்றி நடக்க முடியாததால் இசாவும் ஜில்ட்சோனியும் அவனைத் தோளில் தாங்கிக் கொண்டார்கள். பூங்காவின் வெளியே செல்லும் பாதையை நோக்கி மெதுவாக நகர்ந்தார்கள். ஸ்டேவனின் கால்கள் பின்னின. அவன் கீழே விழுவது போல இருந்தான். நன்கு பழுது பார்க்க வேண்டிய ஒரு ரோபாட் போல முன்னோக்கி நகர்ந்தான். ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று அடிகளுக்கும் அவன் நின்றுகொண்டே வந்தான்.

ஜில்ட்சோனி அடிக்கடி சுற்றும் முற்றும் பார்த்தான். தொடக்கத்திலிருந்து மிகவும் நயமாகச் செல்லும் திட்டம் ஒரு சந்தர்ப்ப வசமான எதிர்ப்பின் காரணமாக மூழ்கிப் போய்விடலாம். மக்கள் என்ன வேண்டுமானா லும் பேசட்டும், நமது நவீன உலகில் ஒரு வனைக் கடத்திச்செல்வது என்பது ஓர் எளிய செயலன்று!

விஷயத்தை மோசமாக்குவது போல அபார் சந்தேகிக்கும் விதத்தில் திடீரென்று இப்படியும் அப்படியுமாக ஆடத் தொடங்கி னான்:

"அறிவுகெட்டவனே! நீ அதிகமாகத் தானே புகைத்து விட்டாய்? ஒத்துக்கொள்," கேட்டான் ஜில்ட்சோனி.

"கடவுளறிய... ஒரே ஒரு முறைதான்," முணுமுணுத்தான் அபார் குற்ற உணர் வோடு.

"நாம் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போ தைக்கு போதும்," ஜில்ட்சோனி அவனை இடைமறித்தான்.

இலைகள் சிந்திக்கிடந்த கோடைக்கால அருந்தகத்தைக் கடந்து, குன்று நோக்கிச் செல்லும் பிரதான சாலையின் ஓரப்பா தையை அடைந்தார்கள். இப்போது ஓரளவு இருட்டிக் கொண்டு வருவதால், பிளாஸ்டிக் நடைபாதையிலிருந்து வெளிச்சம் வரத் தொடங் கியது. இருண்ட அடர்ந்த வானத்தின் பின்னணியில் மொட்டை மரங்கள் அழகாகப் பரிணமித்தன.

முன்னிலும் அதிகமாகியுள்ள ஒளி வெள்ளம் போலப் பாய்ந்த நடைபாதையில் செல்லும் போது, ''உனக்கு ஒரு நல்ல கருத்து இருக் கிறது,'' என்றான் அபார்.

''பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மிகவும் அதிசயமான விஷயங்களைப் பற்றி நினைக்கத் தொடங்குவார்கள்,'' என்று பதில் கூறும் வகையில் சீறியுரைத்தான் ஜில்ட்சோனி.

அபார் பதில் பேச முயலவில்லை. பய னற்றுக் கிடக்கும் கம்பி ரயில் பெட்டிகளில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களும் இவர் களைப் பற்றி எந்த அக்கறையும் காட்டவில் லை. செங்குத்தான படிகளின் அறுந்து போன நூலிழைகள் இத்தருணத்தில் உயரே செல்லும் அவர்களது முன்னேற்றத்தைத் தடை செய்தது.

''விரைவாக,'' ஜில்ட்சோனி தூண்டினான். ''இப்போது மூச்சுவிடத் தொடங்கி விட்டான். நினைவு சீக்கிரமாக வந்து விடும்.''

தங்களின் ஆர்னிதாப்டரை விட்டு வந்தி ருந்த திறந்த வெளியில் ஒரு ஜீவனைக்கூடக் காணோம். ஆளற்ற பாலைவெளியிலே என்ன செய்வதற்கென்று யார் வர முடியும்?

அந்த எந்திரத்தின் மேற்சிறகுகள் காற்றில் அசைந்தாடிக் கொண்டு கிரீச்சிட்டன. ஜில்ட் சோனி தட்டான் பூச்சி வடிவ மெல்லிய எந்திரத்தின் உடலைத் தட்டிக்கொடுத்தபடி சொன்னான்: ''உன்னால் விஷேடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேதாவிகளைப் போலில் லாமல் நம்மை இதுவரை கைவிடாத இதோ ஒன்று இருக்கிறது.''

''பிக் எக்ஸால் தான், என்னால் இல்லை,'' திருத்தினான் அபார்.

ஆர்னிதாப்டரின் திறந்த சாரளத்தின் வழியாக இருவரும் சிரமப்பட்டு லீகோவை உள்ளே தள்ளினார்கள். அதற்காக அவர்கள் சிறு படிக்கட்டை — மூன்று காலெட்டு மட்டுமே — தாண்டிச் செல்ல வேண்டி இருந்தது.

பைலட்டின் இருக்கையில் சாய்ந்தபடியே, ''இந்தத் தேவையற்ற கழைக்கூத்தாடியிடமிருந்து உலகச் சமன்பாட்டு விதியை எப்படியும் வெளிக் கொணர வேண்டியதுதான் நமது தேவை,'' என்றான் ஜில்ட்சோனி.

எந்திரம் இருண்ட வானத்தில் உயரக் கிளம்பிய போது மூவரும் இருக்கையில் தொப்பென்று விழுந்தார்கள். ஸ்டேவன் ஒரு மூலையில் விழுந்து தன் கைகளைப் பக்கவாட்டில் போட்டபடி உறக்கத்தில் ஆழ்ந்து நகைப்புக்கிடமானது போலானான்.

ஏற்கெனவே திட்டமிட்டபடி ராக்கி மலைகளை நோக்கி அந்த விமானத்தை தானியங்கி விமான ஓட்டி செலுத்தினான்.

முதலாம் இயல்

புதுக் கருத்துக்களுக்கான தேவை

தீவட்டிகளிலிருந்து பிரதிபலித்த வெளிச்சம் நீரில் எண்ணெய் படிந்த திட்டுக்களைக் காட்டியது. காற்று ஏதும் அடிக்கவில்லை. எனவே நீண்ட தீ நாக்குகள் இலேசாக அலைந்தன. மிதவையின் ஓரத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒரு தீவட்டி நடனமாடிய ஒரு ஜோடியால் இடிக்கப்பட்டு நீரில் விழுந்து உஸ் என்ற ஓசையுடன் வெண்மையான நீராவி மேகத்தை ஏற்படுத்தியது.

நடனமாடுவதற்குப் பொருத்தமான தளத்தை ஏற்படுத்த வேண்டி தடித்த பிளாஸ்டிக் உறையை வாத்துக் கால்களைக் கொண்ட, திட்டமிட்டுக் கட்டப்பட்ட அந்த மிதவைகளில் பரப்பி, பட்டம் பெறத் தகுதிபெற்றதற்கான இந்தப் பெரு விருந்தை தீவட்டி வெளிச்சத்தில் நடத்த வேண்டும் என ஆரம்பத்தில் திட்டமிட்டது யார் என்று ஒருவருக்கும் நினைவில்லை.

புதிய பௌதிகப்பட்டதாரிகளில் ஆர்வமிக்க ஏழு பேரைக் கொண்டிருந்த இசைக் குழு, பயன்படாது நின்ற கலங்கரை விளக்கின் இருண்ட இருளுக்கு அண்மையில், சற்று

தொலைவில் இருந்த ஒரு சிறிய மிதவையில் இடம் பிடித்துக் கொண்டிருந்தனர். இக்குழுவின் மிதவையிலிருந்து இசை அலைகள் நடனமாடியவர்களுக்குச் சென்றன. சாவுத் திமிங்கில குடாவைச் சுற்றி நேரம் செல்லச்செல்ல மகிழ்ச்சி வெள்ளம் எதிரொலித்தபடியே இருந்தது.

ஒரு பெரிய மிதவையில் அச்சந்தரும் வெளிச்சத்தில் அமர்ந்திருந்த ஜோடிகளைப் பார்ப்பதற்கு வேறு ஏதோ ஓர் உலகத்திலிருந்து வந்த நான்கு கால்கள் கொண்ட பெரிய பிராணிகளைப் போலத் தோன்றியது.

நடனமாடுபவர்களுக்கு இடையூறு இல்லாதபடி மிதவையின் ஓரத்தில் மிக நெருக்கமாக ஒரு நீண்ட மேசை போடப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் உணவிற்காகத் திரண்ட போது, மிதவை மெலிந்து காணப்பட்டது கூட ஒரு விதமான மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

''ஒவ்வொருவரும் கீழே வாருங்கள்!''

''யார் மீன் உணவுக்காக?''

''சாவுத் திமிங்கிலடத்திடமிருந்து வாழ்த்துக்கள்!''

''இது அழகாக இருக்கிறது, இல்லையா?'' என்று ஷெல்லா தனது துணைவனிடம் முணுமுணுத்தாள்.

''எது அழகாக இருக்கிறது?'' ஒரு பெரிய நண்டுக் காலை முறித்தபடி அவன் கேட்டான்.

''இது எல்லாமே தான்...'' தனது கையை வெறுமையாக நீட்டியபடி ஷெல்லா பதில

ளித்தாள். "இரவில் புகை கக்கும் தீவட்டிகள், மிதவையில் நடனமாடுவது..."

அவளது பங்காளி வெறுமனே தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டு, "இதில் என்ன அழகு இருக்கிறது? சலிப்பூட்டுகின்ற நடவடிக்கையாலும், சாராயத்தின் உதவியாலும் ஏற்படுத்தப்பட்ட செயற்கையான சூழ்நிலை."

"ஆல்வி... விட்டு விடு," என்று பெருத்த ஏமாற்றத்தோடு ஷெல்லா எதிர்ப்புத் தெரிவித்தாள்.

"சரி, நான் வெறுமனே கேலிக்காகப் பேசிக் கொண்டிருந்தேன்," என்று அவளது உணர்வுகளுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய வகையில் ஆல்வார் பேசினான்.

"உனது கேலி விஷயங்கள் சிறிதும் மகிழ்ச்சியடையச் செய்யவில்லை."

"...இது குடும்பத்தின் கடைசி நாள் ஒன்று சேர்ப்பு," மேசையின் கடைசியில் இருந்த யாரோ உரக்கச் சொன்னான்.

"நீ இரவைக் குறிப்பிடுகிறாய்," மற்றவர்கள் தலையிட்டுச் சொன்னார்கள்.

"மேலும் முக்கியமான காரணம் அதை முழுமையாகப் பயன்படுத்துவதுதான்!" என்று முதலில் பேசியவன் பதில் உரைத்தான். "நமது இந்த மிதவை, எனது நண்பர்களே, இது மிதவையல்ல. ஆனால், புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட அறிவுடன் நம்மைத் தயார் படுத்தி எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் கப்பல் இது..."

"ஹிப்-ஹிப்..."

''பல்கலைக் கழகத்திற்காக நாம் குடிப் போம்!''

''அல்மா மாட்டர்!''

''அருமையிலும் அருமை!''

''அது நாசமாகப் போகட்டும்!'' மேசையின் மற்றொரு ஓரத்திலிருந்து ஒரு குரல் வந் தது.

''ஒரு நிமிடம் பொறுங்கள்!'' என்றான் விழாக்களின் தலைவன் தனது ஷாம்பேன் கோப்பையில் கரண்டியை வைத்தபடி. அமைதி யாக இருக்கக் கேட்டுக் கொண்டது பயனளிக் கவில்லை. ''இன்னும் ஏதோ சொல்ல வேண்டி இருக்கிறது.''

எங்கோ ஷாம்பேன் பாட்டிலில் இருந்து தக்கை ஒன்று எழும்பி காற்றில் ஒரு வட்ட மடித்தபடி நீரில் விழுந்தது.

''ஆக, நமது கப்பல் எதிர்காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது, இல்லையா? இப்போது பீரங்கி ஓசைக்கு பதிலாக ஷாம்பேன் தக்கை எழுப்பும் ஓசை கேட்கிறது. நம்மில் யாரும் ஒருபோதும் பீரங்கிக்கு இரையாகாது போய் விட மாட் டோம்...''

பேச்சின் முடிவு தொடர்பில்லாத கூக்குர லால் முடிவுற்றது.

''அந்தப் பிரச்சாரத்தை நிறுத்து!''

''உனக்கு யார் சம்பளம் தருவது?''

''அகாதமிக் குப்பை!'' (அந்த ஆண்டைய மாணவர்களுக்கிடையே 'அகாதமிக்' என்பது மிக மோசமான சொல்.)

ஷெல்லா வெட்கப்பட்டுப் பேசினாள்: ''குறைந்தது இன்றைக்காவது நிச்சயம் அரசியலை விட்டுவிட முடியுமா?''

''அரசியல் என்பது திறமையற்றவர்களுக்கானது,'' விமர்சித்தான் ஆல்வார். குனிந்துகொண்டே அவன் மேலும் கூறினான்: ''திறமை இல்லாத பௌதிகவாதிகள் தாம் அரசியலுக்குப் போகிறார்கள்.''

''அல்லது பொது ஒழுங்கைப் பராமரிக்கும் நிறுவனங்களில் சம்பளம் வாங்குபவர்கள்,'' அவனுக்கு அருகே இருந்த யாரோ கூறினான்.

''இருபத்தி ஒன்றாவது நூற்றாண்டைய ஆண்களாகிய நாம்...'' இருட்டிலிருந்து ஒரு குடிகாரக் குரல் பேசியது.

யாரோ மார்க் நூரஷுக்காகக் குடிக்கச் சொன்னான். அவன் விஞ்ஞானியாகத் தமது பணியை விட்டு விட்டதால் மறுப்பு வந்தது.

''நல்லது, பிறகு நாம் ஆல்வார் ஜில்ட்சோனிக்காகக் குடிப்போம். அவன் விஞ்ஞானத்தை இன்னமும் விட்டுவிடவில்லை, அது நிச்சயம்.''

சில குரல்கள் இதைச் செவி மடுத்தன:

''நமது உள்ளூர் மேதைக்காக!''

''நமது அன்பிற்குரிய காட்டுமிராண்டிக்காக!''

''மேலும் அவனது உலகச் சமன்பாட்டுக்காக...''

''கடைசியில் அவன் அதைக் கண்டுபிடிக்கத்தான் போகிறான்,'' என்று முடித்தது சோர்

வற்ற ஒரு குரல்.

ஒருவகையில் குடிவெறியில் இருந்த தனது சக மாணவர்களைப் பக்கவாட்டில் தள்ளிக் கொண்டு, ஆல்வார் மேசையின் தலைப் பக்கம் மிகுந்த சிரமத்துடன் தனது வழியை அமைத்துக்கொண்டு சென்றான். இரைச்சலும் ஆரவாரமும் அடங்கியது. ஜில்ட்சோனி போன்ற விசித்திரமான மனிதர்களிடமிருந்து எதை எதிர்பார்ப்பது என்று உங்களுக்குத் தெரியவே தெரியாது.

"உங்களது பருகும் அவாவை நான் ஏற்றுக்கொள்கிறேன்," என்று அறிவித்த ஆல் வார், அடர்ந்த தனது தலைமுடியை பின்னுக்கு இழுத்து விட்டுக் கொண்டான். "உலகச் சமனபாடு என்பது ஒருவன் வாழ்க்கை முழு மையையும் அர்ப்பணித்திருப்பதற்குச் சமமானது. பத்து வாழ்க்கை நான் வாழ வேண்டி இருந் தாலும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனால் தொடங்கப் பட்ட அப்பணிக்கு, எந்தவிதத் தயக்கமும் இன்றி அவைகளை நான் அர்ப்பணிக் கிறேன்."

இந்த இளைஞனுடைய வார்த்தைகளுக்குப் பின்னாலிருந்த பேருணர்ச்சி இளம் பௌதிக வாதிகளின் முகங்களை இன்னும் சீரிய நோக் குடையதாக மாற்றியது.

உரையை முடித்துக் கொண்ட ஆல்வார், ஷெல்லாவின் அருகே தன் இருக்கையில் திரும்பவும் போய் அமர்ந்து கொண்டான். அவள் வியப்படைந்தாள். வழக்கமாக — அவளும் ஆல்வாரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்

டது நான்கு ஆண்டுகளாகத்தான் — அவன் சில வார்த்தைகளே பேசுவது பழக்கம். தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியவன். வார்த்தைகளை அவனிடமிருந்து இழுக்க வேண்டும்.

ஷெல்லா, ஆல்வாரின் கையைப் பற்றிக் கொண்டு மேசையை விட்டு வெளியேறினாள். இப்போதும் இசைக்கலைஞர்கள் ஆர்வமூட்டும் எதையோ வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

''ஏன் இசைக் கருவி ஒரு தனி மிதவையில் இருக்கிறது?'' என்று ஷெல்லா கேட்டாள். ''இங்கேயே அதற்கு ஓர் இடம் பார்க்க முடியாதா?''

''மிதவை அலைவது அவர்களுக்குச் சிரமமாக இருக்கும்,'' விளக்கினான் ஆல்வார். திடீரென்று சிரித்த பிறகு திரும்பவும் அவன் பேசாமடந்தையாகி விட்டான்.

இசைக்கு ஏற்ப ஜோடிகள் அசைந்து கொண்டிருந்தது ஏராளமான மிதவையை ஒரு வகையில் அலைத்தது. தீவட்டிகளின் வெளிச்சம் நடுக்குற்றது. தொலைவில் தெரிந்த நட்சத்திரங்கள் கூட மெதுவாக மறையத் தொடங்கின. விடியல் தனது வழியில் வந்து கொண்டிருந்தது.

நடனத்தரையில் ஷெல்லா வட்டமிட்டு ஆடிய போது ஆல்வாரை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு தனது கண்களையும் பாதி மூடிக்கொண்டாள். இன்று கடைசியாக அவன் மிக முக்கியமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறான். அதன் பிறகு

அவர்கள் எப்பொழுதுமே சேர்ந்திருப்பார்கள். நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட அந்த வார்த்தைகள்...

திடீரென்று ஆல்வார் நின்று விட்டான்.

''என்ன விஷயம்?'' அச்சத்தோடு கேட்டாள் ஷெல்லா.

''நான் களைத்துப் போய்விட்டேன்.''

''நாம் போகலாம், அமர்வோம்,'' என்று யோசனை கூறினாள். கூட்டத்திலிருந்து விலகி அவர்கள் மிதவையிலிருந்து விடப்பட்ட ஒரு மரக்கட்டையில் அமர்ந்தார்கள்.

''இப்படிப்பட்ட மரக்கட்டைகளை முன்னாளைய பாலினிஷியர்கள்* பெருங்கடல்களைக் கடப்பதற்குப் பயன்படுத்தினார்கள்.''

''அவர்கள் காலமெல்லாம் முடிந்து போய் விட்டன,'' என்று வருத்தந்தோய்ந்த குரலில், வேகமாக எரிந்த தீ நாக்குகளைப் பார்த்தபடி கூறினாள் ஷெல்லா. ''மிதவைகளைப் பற்றி என்ன வேண்டியிருக்கிறது. அணுசக்தியுடன் கூடிய கலங்களை நாம் இப்பொழுது கொண்டிருக்கிறோம்.''

''அந்த வீரச் செயல் நாட்கள் இன்னமும் மறைந்து போய்விடவில்லை...'' ஆழ்ந்து போய் நின்ற தனது கண்களால் அவளைப் பார்த்தபடி ஆல்வார் பேசினான். ''நீ பார்க்கவில்லையா... மனிதனுடைய நோக்கங்கள் உயர்வானதாகவோ, இழிவானதாகவோ இருக்க முடியும்.

---

* ஆஸ்திரேலியாவுக்குக் கிழக்கில் பசிபிக் பெருங்கடலிலுள்ள சிறு தீவுக் கூட்டத்தினர்கள். — ப-ர்.

இரண்டாந்தர விஷயங்களில் நேரத்தைச் செல விடுவதில் அர்த்தமில்லை. பெரிய நோக்கங் களைப் பொருத்தமட்டில்... அற்புதமான அவற் றைப் பெறுவதற்காக எல்லா வழிகளுமே சரி யானவை.''

''அந்த வழிவகைகள் இழிவானதாக இருந்து விட்டால்?''

''நோக்கம் வழிகளை நியாயப்படுத்தி விடும்...''

''எனக்கு அப்பாற்பட்டது...'' என்றாள் ஷெல்லா அமைதியாக. தங்களுக்குள்ளாகவே மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டு மாணவர் கள் போட்ட இரைச்சலாலும், இசை அலை களாலும் அவள் கூறியதை ஆல்வாரால் அவ் வளவாகக் கேட்க முடியவில்லை. இருவரும் அமைதியாக இருந்தார்கள்.

நடனமாடுபவர்களைப் பார்த்துக் கொண்டு ஷெல்லா பேசத் தொடங்கினாள்: ''என்னிடம் கூறு, ஆல்வார். நம்மில் ஒவ்வொருவருக்கும் இதுபோன்ற லட்சியம் இருக்க முடியுமா?''

''இல்லை,'' என்று தனது குரலில் இகழ்ச்சி தொனிக்கச் சிரித்தான் ஜில்ட்சோனி. ''தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கே அது அநு மதிக்கப்பட்டது.''

''சரி, மற்றவர்கள் விஷயத்தில் என்ன செய்வது? நாமெல்லாம் லட்சியங்கள் இல்லாம லேயே வாழ வேண்டுமா?'' கேலி செய்ய முயன்றபடி கேட்டாள். சீரிய உரையாடல் களின் போது சரியான பங்காளியாக அவளை ஆல்வார் கருதுவது அபூர்வம் தான். பெரும்

பாலான நேரங்களில் அவன் அதனை முக்கியமாகக் கருதாததால், ஏற்றுக்கொள்வதில்லை.

''அவை சுற்றுப்புறத்தை ஏற்படுத்துகின்றன.''

''சுற்றுப்புறத்தையா?''

''காற்றில்லாத வெளியில் பறவையால் பறக்க முடியாது. காற்று என்ற சுற்றுப் புறத்தை அது பெற்றிருக்க வேண்டும். அது போல மாபெரும் அறிவு முதிர்ச்சியை அறிஞர்கள் அடைவதற்கு சாதாரண திறமையாளர்கள் அல்லது மனித இனத்தின் பெரும் பகுதியினர் படிக் கல்லாகப் பயன்படுகிறார்கள்.''

''ஆக, உன்னைப் பொருத்தமட்டில் பெரும்பாலானவர்களது லட்சியம் அறிஞர்களுக்கு படிக்கல்லாக அமைவது தானா?''

''துல்லியமாகச் சொன்னாய்.''

''இது ஒரு பழைய கதை,'' அவன் தன்னைக் கேலி செய்கிறானா என்று பக்கவாட்டில் பார்த்தபடி ஷெல்லா கூறினாள்.

ஜில்ட்சோனியின் முகம் சற்று மாறுபட்டது: ''அதை என்ன செய்வது? அந்த வழியில் தானே உலகம் படைக்கப்பட்டிருக்கிறது.''

''தனது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை ஒருவன் எங்ஙனம் அறிந்து கொள்ள முடியும்? மேலிருந்து குரல் வரும் என்று காத்திருப்பதா?''

ஆல்வார் தனது முகத்தை ஷெல்லாவிற்கு நேராகத் திருப்பினான். ''மேலிருந்து குரல்

என்பது முட்டாள்தனமானது. தனது வாழ்க்கையில் தனிப்பட்ட மனிதனே தனது சொந்த நோக்கத்தை வரையறை செய்கிறான்.''

அவர்கள் அங்கே உட்கார்ந்து இருந்த போது, சில படகுகள் அங்கே வந்து கொண்டும், சில வேறு போய்க் கொண்டும் இருந்தன. தரைக்கும் மிதவைக்கும் இடையே இருவழிப் பாதை இருந்தது.

ஆல்வார் தனது கைகடிகாரத்தைக் குனிந்து பார்த்து முணுமுணுத்தான்: ''அது மிகவும் அருமை.''

''எங்காவது விரைவாகச் செல்லப் போகிறாயா?'' ஷெல்லா கேட்டாள்.

''இல்லை... இல்லை... என்னைப் பார்ப்பதற்கு யாரோ இங்கு வந்து கொண்டிருக்கிறான். அவன் இன்னமும் வரவில்லை...''

''அவன் சுணங்கி விட்டானா?''

''ஆம். அதுதான் மோசமானது. அவன் வந்து விடுவான் என்று இன்னமும் நம்புகிறேன்.''

''அது யார்?''

ஆல்வார் குலுக்கிக் கொண்டபடி ஒரு வெறுமையான பதிலைச் சொன்னான், ''எனது நண்பன் ஒருவன்.''

''ஆனால் உனது நண்பர்கள் ஒவ்வொருவரையும் நான் அறிவேன்,'' என்று ஷெல்லா மறுத்துப் பேசினாள். ''அவர்கள் ஒன்றும் அதிகமில்லையே.''

''இவனை உனக்குத் தெரியாது. இருக்கட்டும், இவனைச் சந்திப்பது உனக்கு ஆர்வமுடை

யதாக இருக்கும்.''

ஷெல்லா மகிழ்ச்சியோடு கேட்டாள்: ''இங்கே அவனைச் சந்திப்பதற்கு நீ ஏற்பாடு செய்தாயா?''

''ஒருவகையில் சொல்லப் போனால்,'' என்று வறட்டுச் சிரிப்புடன் தனது சட்டைப் பையைத் தட்டியபடி ஆல்வார் சொன்னான்.

ஷெல்லா வியப்போடு அவனைப் பார்த்தாள். ஆனால் எதையும் அழுத்திச் சொல்லவில்லை: சமீபத்தில் ஆல்வார் மிகவும் எரிச்சலுடையவனாகக் காணப்பட்டான். சிறு விஷயம் என்றாலும் கூட அவன் உடைந்து போய் விடக் கூடும். அவனது இத்தகைய திடீர் எழுச்சிகளை எந்தவகையிலும் தவிர்க்க வேண்டும் என அவள் ஆர்வத்தோடு விரும்பினாள்.

மிதவையின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருந்த ஒரு படகைப் பார்த்தபடி ஆல்வார் ''கடைசியாக!'' என்று வியந்தான்.

படகிலிருந்து குதித்து வெளியேறிய ஒரு மனிதன் மிதவையைச் சுற்றிப்பார்த்தபொழுது, ஆல்வார் கண்ணில் படவே, நடனமாடிக் கொண்டிருந்த ஜோடிகளைப் பொருட்படுத்தாமல், இவன் இருந்த திசையை நோக்கி நகர்ந்தான்.

அவன் தோள்கள் பெருத்துக் காணப்பட்டன. அசாதாரணமான முறையில் அழுத்தமாக அவன் நடந்தான்.

''ஹலோ, பாஸ்,'' என்று ஆல்வாரைப் பார்த்துச் சொன்னான். பிறகு அவன் பார்

வையை திடீரென்று ஷெல்லா பக்கம் திரும்பி னான். கண்களைச் சிமிட்டாமல் அவளையே பார்த்தது; அவளுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தி யது.

வாழ்த்துக் கூறுவதுபோல ஆல்வார் தலை யசைத்தான்.

''ஏதோ ஒரு காரணத்திற்காக என்னை நீ காண விரும்புகிறாய், துல்லியமாகச் சொன் னால் இங்கே இப்பொழுது, என்று நினைத் தேன்,'' என்றான் அகன்ற தோள்களைக் கொண்ட அப்புதியவன்.

''முற்றிலும் சரிதான், நண்பனே. நீ துயில் நிலையில் இருந்தாயா?''

'' 'துயில் நிலை' என்றால் என்ன?'' என்று ஆல்வாரின் நண்பன் புருவங்களை உயர்த்திய படி கேட்டான். ''இன்று காலையிலிருந்தே எனது தலையில் எல்லாவகையான முட்டாள் தனங்களும் நிறைந்து இருக்கின்றன. அது தூக்கமில்லாமல் செய்து விட்டது. ஏனென்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நீண்ட பறத்தலுக்கு ஏதுவாக ஆர்னிதாப்டர் தேவைப் படுகிறது என்று முடிவு செய்தேன். காலை விடியலில் இருந்தே விமானக் கோட்டத்தில் பொருட்களை ஒழுங்குபடுத்துவதில் மும்முர மாக இருந்தேன். பிறகு நான் பைத்தியத்தைப் போல உன்னிடம் மிதவைக்கு விரைந்து வந் தேன்.''

''எல்லாமே சரியானது முறையானது,'' என்று ஆல்வார் உறுதி செய்தான். அவனது

குரலில் ஒப்புதலைத் தெரிவிக்கும் குறிப்பு இருந்ததை ஷெல்லா ஊகம் செய்தாள்.

முரட்டுத் தோற்றத்தோடு காணப்பட்ட அந்தப் புதியவன் தனது நிறையை ஒரு காலி லிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவது போல, மிதவைப் பாறையை மாற்றிக் கொண்டிருந் தான். ''அரை டன் நிறையாவது இருப்பான்,'' என்று ஷெல்லா தனக்குத் தானே நினைத்துக் கொண்டாள்.

புதியவன் புன்னகை செய்தபடி தனது கை யை ஷெல்லாவிடம் நீட்டி, ''அபார் இசாவ்,'' என்றான்.

''அபார் இசாவா?'' தனது குரலில் கேள்விக்குறி தொனிக்க திரும்பச் சொன்னாள் ஷெல்லா. ''உங்கள் பெயரை ஏற்கென வே நான் எங்கேயோ கேள்விப்பட்டிருக் கிறேன்.''

''நிச்சயமாக இருக்கக் கூடும்,'' விளக்கி னான் ஆல்வார். ''சில ஆண்டுகளுக்கு முன் னர் கவர்ச்சியூட்டும் இந்த நபரைப் பற்றி பத்திரிகைகள் முழுக்க செய்திகள் வந்தன.''

இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் ஷெல்லா முகஞ் சுளித்தாள்.

''எனது கதையைத் திரும்பச் சொல்ல என்னை விடுங்கள்,'' அபார் புன்னகையோடு தொடர்ந்தான். ''இரண்டு ஆண்டுகளுக்கு முன் னர் மார்க் நூரஷின் ஆய்வுக்கூடத்தில் நான் உதவியாளனாகப் பணியாற்றிக் கொண்டிருந் தேன். பல்கலைக் கழகத்தில் புகழ் பெற்ற

அந்த பௌதிகவியலாளரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''அது விஷயம் குறித்து காதுக்குத் தேவையான அளவை ஆல்வார் எனக்குத் தந்திருக்கிறான்.''

''நல்லது, அப்படியே,'' அபார் தொடர்ந்தான், ''அங்கிருந்த அமைப்பு வெடித்தது. கடுமையான கதிரியக்கத்திற்கு ஆளானேன். மறு உலகிற்குப் போகும் நபர் என்று நான் உறுதியாக நம்பினேன். இருப்பினும் எப்படியோ என்னை மருத்துவ மனையில் சேர்த்தார்கள்...'' அபார் ஆல்வாரை உற்று நோக்கவே, அமைதியாகிப் போனான்.

''பிறகு என்ன நடந்தது?'' ஷெல்லா கேட்டாள்.

''எத்தனையோ யுகங்கள் அந்த மருத்துவ மனையில் நான் இருந்தேன். மிகப்பெரியவர் மென்ஸி கவனிப்பின் கீழ் இருக்கும் அதிர்ஷ்டம் எனக்கு அடித்தது. எனது இதயமும், ஈரலும் மாற்றப்பட்டன. எனது தலையோடு அவர்கள் நீண்ட காலம் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடைசியில் பாசிட்ரான் மூளையை எனக்குப் பொருத்தினார்கள். அது நவீன அமைப்பு, மிகச் சிறந்ததாகும். ஏன் என்னை அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? எதார்த்தத்தில் நான் பாதி ரோபாட்தான்.'' தனது குரலில் வருத்தம் தொனிக்க அபார் பேசினான். ''உண்மையான ரோபாட்டுகளை உருவாக்க

அவர்கள் இன்னும் கற்றுக்கொள்ள வில்லை...''

''என்னை மன்னி,'' முணுமுணுத்தாள் ஷெல்லா. அவளது சொந்த கண்களுக்கு முன்னால் ஏற்பட்டிருக்கக் கூடிய வியத்தகு மருத்துவ முன்னேற்றங்கண்டு வியந்தாள். இருபதாம் நூற்றாண்டில் இதய மாற்று அறுவை சிகிச்சையில் பெற்ற பயிற்சிகளின் விரிவான நினைவுகளை ஒவ்வொருவரும் கொண்டிருக்கிறார்கள். அவை எல்லாம் ஏமாற்றம் தருகின்ற சோதனைகள். ஒன்றன் பின் ஒன்றாக அவை தோல்வியிலேயே முடிந்தன. திசுக்களின் ஒவ்வாமையால் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஏமாற்றம் அடைந் தார்கள். முந்திப்பிந்தி புதிய இதயத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அந்நிய திசுவை ஏற்றுக்கொள்ளாமல் மடிந்தார்கள். இன்றோ மாற்று இருதய சிகிச்சைகள் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டான. சற்று செலவு பிடித்த வை என்பது உண்மை.

இருப்பினும் இப்பொழுதுதான் இதயம் மற் றும் ஈரல் இரண்டையும், செயற்கை மூளையை உட்புகுத்தி, ஒரே நேரத்தில் மாற்று சிகிச் சை — அளவுக்கு அதிகமானது. கதிரவன் மண் டலத்தின் மருத்துவத்துறையில் மிகப் பெரிய புள்ளியாக மென்ஸி கருதப்படுவது வெறுமனே அல்ல.

''இது அற்பம். நான் எளிதில் கோபப்படு வன் அல்ல,'' என்றான் அபார். ''எல்லாவகை யான கருவிகளையும் எனக்குள்ளாக வைத்தார்

கள். பிறகு நடக்கத் தொடங்கியவை அறுவை மருத்துவர்களாலும், பயோபௌதிகவாதிகளாலும் முன்னோக்கிப் பார்க்க முடியாதவைகளாகும்.''

''இதயத்திலா?'' ஷெல்லா கேட்டாள்.

அபார் தனது தலையை அசைத்துவிட்டுச் சொன்னான்: ''தேவைப்படும் அளவில் என் இதயம் வேலை செய்தது. எனது ஈரலும் மூளையும் கூட அப்படித்தான். இதில் சிக்கல் என்னவென்றால் அவைகளால் ஒருங்கிணைக்க முடியவில்லை. சொல்லப்போனால் ஒவ்வொரு உறுப்பும் தங்கள் விருப்பப்படி செயல்பட்டன: மூளையின் கட்டளைகளுக்கு இதயம் கீழ்ப்படியவில்லை, நரம்பு மண்டலத்தின் உந்தல்களுக்கேற்றபடி மூளை செயல்படவில்லை என்பன போன்று பல.''

''எப்படி நடந்தது?'' ஷெல்லா கேட்டாள்.

''இதில் சிக்கல் என்னவென்றால் இதற்கு முன்னர் வேறு யாரும் இப்படி அநேக உறுப்புக்களை மாற்றிக் கொண்டதில்லை,'' விளக்கினான் அபார். ''இதுதான் முதன் முறை. எல்லாவற்றுக்கும் தேவையானவற்றை மருத்துவர்களால் செய்ய முடியவில்லை என்று தெரிகிறது.''

''இப்பொழுது எல்லாம் சரியாகச் செயல்படுகின்றனவா?''

இசாவ் புன்னகையுடன் பதிலளித்தான்: ''உங்களுக்கு முன்னால் என்னை நீங்கள் பார்ப்பது போல.''

''மென்ஸிதான் உங்களைச் சரியானபடி வைத்தவரா?'' ஷெல்லா கேட்டாள்.

''இல்லை. அந்த நிலையில் மென்ஸி பின்தங்கிவிட்டான்,'' தலையை அசைத்து விட்டு அபார் சொன்னான். ''நான் வாழ்வதற்காக ஜில்ட்சோனிக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.''

''அது போதுமானது, அபார்,'' என்று ஆல்வார் அவனைக் கண்டிப்பான குரலில் தடுத்து நிறுத்தினான். அவர்கள் மூவரும் உட்கார்ந்திருந்த கட்டைக்கு அருகே புகை வந்த தீவட்டியை ஆல்வார் தண்ணீரில் காட்டினான்.

''ஒரு பழைய காரைப் போல பாஸ் எனக்கு நல்ல வேலை செய்திருக்கிறான்,'' என்றான் அபார். ''சில மாதங்களை அவன் எடுத்துக் கொண்டான், பல இரவுகளில் தூங்காமல் கூட.''

'' 'பாஸ்' என்ற சொல்லை நீ கட்டாயம் பயன்படுத்த வேண்டுமா?'' ஜில்ட்சோனி கோபமாகக் கேட்டான்.

''மிகவும் வருந்துகிறேன், ஆல்வார். 'பாஸ்' என்ற சொல்லை நான் ஏன் பிடித்துக் கொண்டிருக்கிறேன் என்று எனக்குக் கூட உண்மையாகவே தெரியவில்லை.'' அபார் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். ''உங்களுக்குத் தெரியுமா, மருத்துவமனையிலிருந்து வந்ததில் இருந்து எனக்கு அது அடிக்கடி நேர்கிறது,'' என்று அவன் ஷெல்லாவிடம் விளக்கினான். ''யாரோ என் காதுகளில் முணுமுணுப்பது

போல இருக்கிறது — இதைச் செய், அதைச் செய், என்பது போல. அல்லது சில சிறிய சொல் அல்லது வேறு ஏதோ சிராய்ப்புப் போல ஒட்டிக்கொள்கிறது.''

''நீங்கள் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது உண்மையில் ஓர் அதிசயந் தான்,'' ஷெல்லா வியப்போடு குறிப்பிட்டாள். அவள் ஆல்வாரிடம் தொடர்ந்து பேசினாள்: ''நான் நினைப்பதை விட நீ அதிக அடக்கத் தோடு இருக்கிறாய். ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றுவது பற்றி ஒரு வார்த்தையைக் கூட நீ சொல்லவே இல்லை.''

''அதில் ஒன்றும் இல்லை,'' என்றான் ஆல் வார். ''இதில் வீரமிருப்பதாக நான் காண வில்லை. அப்பாவி இசாவை பல்வேறு எலெட் ரானிக் பொறிகளுடன் நிரப்பி, அவற்றிற்கிடை யே வானொலித் தொடர்பை ஏற்படுத்தினேன் — இது போதுமானது!''

''மாற்று சிகிச்சைக்குப் பிறகு ஏற்பட்ட வலி இன்னமும் உங்களுக்கு இருக்கிறதா?'' அபாரி டம் ஷெல்லா கேட்டாள்.

''ஆக, எப்படி அதை நான் சொல்வேன்?..'' என்று முணுமுணுத்தான் இசாவ், திடீரென்று வார்த்தைகள் கிடைக்காமல் போனதால். ''முழுமையான மகிழ்ச்சி என்பதை ஒருவகை யில் எங்குமே காண முடியாது. சில நேரங் களில் எனது தலையின் பின்புறம் என்னைச் சித்ரவதைப்படுத்தும் வலி மட்டும் இல்லை என்றால் எல்லாமே சரிதான். ஒரு முறை

அவை தொடங்கி விட்டதென்றால் நான் உயி ரோடு இருப்பதற்கு மகிழ்ச்சியடையவில்லை. என் தலைக்குள்ளாக யாரோ பழுத்த ஊசியை திணிப்பது போல இருக்கும். இங்கு வந்து ஆல்வாரைப் பார்க்க நான் திட்ட மிட்டுக் கொண்டிருந்த போதுதான் அது என் னைத் தாக்கியது... பிறகு அது விட்டுவிட் டது.''

ஷெல்லா பரிவோடு ஆல்வாரைப் பார்த்துக் கேட்டாள்: ''அந்த வலி குறித்து உண்மையாக வே எதுவும் செய்ய முடியாதா?''

''நான் அறுவை மருத்துவனல்ல, வெறும் பௌதிகவியலாளன்தான்,'' ஜில்ட்சோனி மறு மொழியளித்தான். இந்த உரையாடலில் அவன் மகிழ்ச்சியடையவில்லை என்பது தெளிவா னது.

''அந்த வலியைக் குறைப்பதற்கு ஒரு வழி உண்டு...'' அபார் தொடர்ந்தான்.

அச்சுறுத்தக் கூடிய வகையில் ஜில்ட் சோனி தனது விரலைக் காட்டினான். உட னே அபார் நிறுத்திக் கொண்டான். பிறகு அவன் கேட்டான்: ''ஆர்னிதாப்டர் தயாரா?''

''ஆமாம்.''

''நீ அதை நிரப்பி விட்டாயா?''

''எல்லாமே ஏற்றப்பட்டு விட்டன. எனக்குத் திடீரென்று தோன்றியது, அதாவது நாம் கட் டாயம் எடுத்துப்போக வேண்டியது...'' அபார் தொடங்கினான்.

''நாம் எங்கே பறந்து போகப் போகி

றோம் என்று உனக்குப் பட்டதா?'' ஜில்ட் சோனி குறுக்கிட்டான்.

''ராக்கி மலைகளுக்கு.''

''எந்த இடம்?''

''ஏதோ ஒருவகையான பெயர் — 'காகத்தின் கூடு'? என் மண்டையில் எந்தவகையிலும் அது தங்கவில்லை,'' என்று புகார் செய்தான் அபார். ''ஆனால் அது எந்தவகையான கூடு என்பதை என்னால் நினைவு வைத்திருக்க முடிந்தால் நான் தடுத்து நிறுத்தி இருப்பேன்.''

''நீ கவலைப்படத் தேவை இல்லை, அபார்,'' என்று ஜில்ட்சோனி மறுபடியும் அவனுக்கு உறுதிதந்தான். ''அங்கு இன்னமும் எந்தக் கூடும் இல்லை, ஆனால் நாம் அதைக் கட்டுவோம்.''

அபார் தனது நெற்றியைத் துடைத்துக் கொண்டான். பிறகு நினைத்தான்: ''என்ன சனியனை நான் இங்கு செய்து கொண்டிருக்கிறேன், இந்த மிதவையில்? நான் கிறுக்கனாகி விடுவேன்!''

''நீ இங்கு வந்ததால் தான், பறந்து போவதற்கு முன்னர் ஒவ்வொன்றும் சரியான நிலையில் உள்ளது என்று நான் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.''

''நான் இன்னமும் அதைப் புரிந்துகொள்ள வில்லை...''

''புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் உனக்கில்லை,'' ஆல்வார் சிரித்தான் இரக்கம் காட்டுவது போல. ''ஆர்னிதாப்டருக்குச்

சென்று எனக்காக காத்திரு.''

ஷெல்லாவிடம் புதுமாதிரியாக விடை பெற்றுக் கொண்டு, அபார் படகை நோக்கிச் சென்றான். இப்போது குறிப்பிடும்படியாக குறைந்த எண்ணிக்கையிலேயே ஆடிக் கொண் டிருந்தனர்.

அபார் படகுக்குள் ஏறியதும் அவனை கவனித்துக் கொண்டிருந்த ஷெல்லா தாழ்ந்த குரலில், ''ஒரு விநோதமான நண்பனை நீ பெற்றிருக்கிறாய்,'' என்றாள்.

ஆல்வார் தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டு, ''எல்லா மக்களுமே விநோதமானவர் கள் தாம்.''

''அவன் ஏன் உன்னை பாஸ் என்கிறான்? வெறுமனே கேலிக்குத்தானா?''

''பெரும்பாலும் அது வெறுமனே ஓர் இயற்கையான நன்றி பாராட்டும் உணர் வுதான். மாற்று உறுப்புக்கள் பொருத்தப் பட்டவரை ஒருங்கிணைந்து செயல்பட வைப் பது அவ்வளவு சுலபமானது என்று நீ நினைக்கிறாயா? சர்க்யூட்டுகளுக்கு முன்னால் அநேக மாதங்கள் உட்கார்ந்திருக்கிறேன். என்னிடமிருந்த எல்லாப் பணத்தையும் செலவிட் டேன்...''

''பிறகு, அந்த வலியைக் குறைப்பதற்கு அவனுக்கு எது உதவுகிறது?'' ஷெல்லா கேட் டாள்.

''போதை மருந்துகள். போதை அதிகமுள்ள வை. மற்றவர்களிடத்தில் ஏற்படுத்தும் விளை வை அவனிடத்தில் அது ஏற்படுத்தாது.''

''ஏன்?''

''ஏனெனில் அவனது நுரையீரல்கள் செயற்கையானவை,'' ஜில்ட்சோனி விளக்கினான்.

''நீ அவனது பாஸ் போலவும், அவன் உனது அடிமை போலவும் உன் நண்பனை நடத்துகிறாய்.''

''நீ என்ன நினைக்கிறாய்? நான் இவற்றை எதற்காகவுமா செய்து கொண்டிருந்தேன்?''

''அடிமை கலகம் செய்வான் என்று நீ பயப்படவில்லையா?'' என்று ஷெல்லா கேட்டாள்.

ஜில்ட்சோனி ஏளனமாகச் சிரித்துவிட்டுச் சொன்னான்: ''வெறுமனே அவன் முயற்சிக் கட்டுமே!''

''அவன் உன்னைவிட பத்து மடங்கு வலிமை உள்ளவனாக இருக்கிறான்.''

''அது எதையும் மாற்றிவிடாது. நாம் நடனமாடுவோமா?''

''நடனமாடும் மனநிலையில்லை. நீ அபாரை நடத்தும் முறையை நான் விரும்பவில்லை,'' ஷெல்லா கூறினாள்.

''எப்போதாவது சந்தர்ப்பவசமாக நீ அவனைக் காதலித்து இருக்கிறாயா?''

''நீ என்ன செய்ய முயற்சிக்கிறாய்? எனக்குக் கோபம் உண்டாக்கவா? இது வீண் வேலை. நான் உன்னோடு சண்டை போடப் போவதில்லை,'' ஷெல்லா தனது மெல்லிய குரலில் பேசினாள். சிறிது நேரம் அவர்கள் மௌனமாக இருந்தார்கள். இரு நடனங்களுக்கிடையே ஏற்பட்ட இடைவெளியைப் பயன்

படுத்தி ஷெல்லா மெதுவாகக் கேட்டாள்: "ஆனால் ஒரு நிமிஷம், ராக்கி மலைக்குப் பறந்து போய் விட வேண்டும் என்று நீ உண்மையாகவே திட்டமிட்டுக் கொண்டிருக்கிறாயா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அங்கு செய்ய வேண்டிய வேலை இருக்கிறது." பிறகு அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்து விட்டு ஆல்வார் மேலும் தொடர்ந்தான்: "வேலை, வாழ்க்கையில் வெறு எதைக் காட்டிலும் அதுவே மிக முக்கியமானது."

"மேலும், அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது..."

"இப்படித்தான் நடந்தது, ஷெல்லா. கோபமடையாதே, நான் எல்லாவற்றையும் விளக்கிச் சொல்கிறேன்... இங்கு பார். நான் ஒன்றைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்: உன்னை அல்லது உலகச் சமன்பாட்டை."

"தேர்ந்தெடுக்க?" ஷெல்லா நடுக்கத்தோடு கேட்டாள். தன் காதில் விழுந்தது தவறாகத் தான் இருக்க முடியும் என்று அவள் உணர்ந்தாள்.

"நேற்று மென்ஸியுடன் நீண்ட நேரம் பேசினேன். என்னை முழுமையாகச் சோதித்துப் பார்க்கும்படி அவரிடம் கேட்டுக்கொண்டேன்."

"நீ நன்றாக இருப்பதாக உணரவில்லையா? உனக்கு உடல் நலமில்லையா?" ஷெல்

லா ஆர்வத்தோடு கேட்டாள்.

''அப்படியல்ல. எனது மூளையினுடைய உள்ளார்ந்த ஆற்றலை மதிப்பிட, எடுத்துக் காட்டாக, எனது திறமைகளின் எல்லையைத் தெரிந்து கொள்ள நான் முடிவு செய்தேன். தனது அரிய நேரத்தின் பெரும் பகுதியை மென்ஸி எனக்காகச் செலவிட்டார்.

''அவர் என்ன செய்தார்?''

''என் உடல் இயக்கங்களை அளந்து சில வரைபடங்கள் தயாரித்தார். பிறகு அவர் கூறினார்: 'இளைஞனே, மேதைக்குரிய அடையாளங்கள் உன்னிடம் இருக்கின்றன என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. அவைகளாக வெளிவரவில்லை என்றால் பரிதாபத்திற்குரியது, ஆனால் அது சுலபமாக நடைபெறக் கூடும்!' — 'ஏன்?' என்று நான் கேட்டேன்.

''அரிதான வகை, துரதிரஷ்டவசமான அமைப்பை நான் பெற்றிருக்கிறேன் என்பதை மென்ஸி விளக்கிச் சொல்ல ஆரம்பித்தார். பிறகு ஒரு குறிப்பிட்ட வரைபடத்தை உற்றுப் பார்க்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். கண்டறியும் கம்பியூட்டரில் அதனை எனக்குக் காட்டினார். மட்டமான ஒரு சிவப்புக் கோட்டை, கீழ்நோக்கிச் சென்ற ஒரு வளைகோடு வெட்டுவதை அது காட்டியது.

''அதை அவர் விளக்கினார்: 'இந்த சிவப்புக் கோடு மனித மூளையின் சராசரித் திறமையைக் காட்டுவது. சற்று உற்றுப்பார்:

உன்னுடைய முகடு எவ்வளவு உயரத்தில் இருக்கிறது.' வளைவு கீழ்நோக்கி வந்ததை நான் சுட்டிக்காட்டியபோது, அவர் பேசத் தொடங்கினார்:

"'சரிதான், இளைஞனே, இதனுடைய சாரத்தை நீ புரிந்து கொண்டாய். நான் பொறியை இயக்கி உன்னை உனது சிந்தனைகளோடு அறையில் தனியாக விட்டபோது, வரைபடம் உயர்ந்த அளவைக் காட்டியது. இந்த அறையானது நீ பார்ப்பது போல பாதுகாக்கப்பட்டது. ஆகவே தனித்திருப்பது முழுமையானது. ஆனால் நான் உள்ளே நுழைந்த உடனேயே, அந்த உச்சியானது, சூடான தேநீரில் போடப்பட்ட சர்க்கரை கரைவதைப் போல, ஒன்றுமேயில்லாது மறைந்துவிட்டது. இப்பொழுது நான் எதைப் பற்றிச் சொல்கிறேன் என்பது உனக்குப் புரியும் என்று நம்புகிறேன். உனது திறமைகளை முழுமையாக வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், நீ பூரணமான தனிமையில் இருப்பது அவசியம் என்பதையே உனது நரம்பு மண்டலம் காட்டுகிறது. பூரணமான தனிமையை அழுத்திக் கேட்டேன். நீ பிறரோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றவரை, அவர்கள் யாராக இருந்தாலும் சரி, உனது ஆராய்ச்சின் போது சராசரிக்கு மேலாக நீ அடையவே முடியாது.' "

"அவர் சொன்னதை நீ நம்பினாயா?"

"அது தான் எனக்குரிய பாதை என்று

நினைக்கிறேன், ஷெல்லா. ஏதோ ஓர் ஒதுங்குப் புறத்திற்குச் சென்று, அங்கேயே வாழ்ந்து கொண்டிருப்பது...''

''எவ்வளவு காலத்திற்கு?''

''ஓர் ஆண்டு. ஒருவேளை பத்து.''

''அல்லது உனது வாழ்நாள் முழுக்க.''

''ஒருவேளை அந்த அளவுக்குக் கூட.''

''ஆக, பிற மக்களோடு முழுமையாகத் துண்டித்துக் கொண்டு, நீ மலைகளிலேயே இருக்கப் போகிறாய்,'' என்றாள் ஷெல்லா.

''வெளி உலகத்தோடு எனது தொடர்பு அபார் இசாவோடுதான். அவனை நான் ஏன் தேடுகிறேன் என்பது இப்போது உனக்குத் தெரிகிறதா?''

''மென்ஸியின் நிபந்தனை என்ன ஆவது?''

''அபாரிடம் பாசிட்ரான் மூளை இருக்கிறது. அவன் சாதாரண மக்களைப் போல ஆல்ஃபா-தாளங்கள் வெளியிடவில்லை.''

''அப்படியா, நீ எல்லாவற்றையுமே நன்கு சிந்தித்து விட்டாய். என்னைத்தான் மறந்து போய் விட்டாய்,'' ஷெல்லா குறிப்பிட்டாள்.

''சமன்பாட்டுக்கு வந்தவுடன் நான் உன்னிடம் திரும்பி வருவேன்,'' என்றான் ஆல்வார். ஆனால் அவன் வார்த்தைகள் நம்ப வைப்பது போல இல்லை.

''ஆக, உனக்காக என்னைக் காத்திருக்கச் சொல்கிறாய். ஓர் ஆண்டா? பத்து ஆண்டுகளா? எனது வாழ்நாள் முழுக்கவா?'' கண்கள் நிறைய நீரைச் சொரிந்தபடி ஷெல்லா ஆல்வாரைப் பார்த்தாள். ''ஒரு நிமிடம் கேள்.

ஒவ்வொன்றுக்கும் விலை உண்டு. நான் கொஞ்சம் பணம் சேகரித்திருக்கிறேன்... எங்கு வாங்க வேண்டுமென்று விருப்பமோ அங்கே நீ உனது தனிமையை வாங்கிக் கொள்ளலாம். பெரிய நகரத்தின் மையத்தில், அடர்த்தியான பூங்காவுக்கு இடையில் ஒலி தடுப்புச் சுவர்களுடன் கூடிய வீட்டை வாங்கலாம். என்ன சொல்கிறாய்?''

''அப்படியல்ல,'' ஆல்வார் தனது தலையை அசைத்துச் சொன்னான். ''ஆல்ஃபா கதிர்கள் எந்தத் தடுப்பையும் கடந்து விடும். ஒரே ஒரு நம்பிக்கைதான் — மென்ஸி அதைச் சுட்டிக் காட்டியது போல — போதுமான தொலைவு இருந்தால் அவை தங்கள் சக்தியை இழந்து விடும்.''

குறுகிய அமைதிக்குப் பிறகு ஆல்வார் தொடர்ந்தான்: ''பொது மண்டலத் தத்துவத்திற்காக ஐன்ஸ்டீன் தனது வாழ்நாளில் பாதியைச் செலவிட்டார். அவர் பெரியதாகச் செய்தார், ஆனால் அந்தப் பணியை முழுமை பெறச் செய்யத் தவறிவிட்டார் — சாவு அவர் வழியில் குறுக்கிட்டது. ஐன்ஸ்டீனுடைய கொள்கையை முழுமையடையச் செய்வதே எனது நோக்கம் என்று நான் நம்புகிறேன். அது மனித மூளையின் அபார சக்தியாகும். அந்த நோக்கத்தை அடைவதற்கு எந்த வழியும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே?''

* * *

சாவுத் திமிங்கிலக் குடாவுக்கு மேலாக சாம்பல் நிறப் பனிமூட்டம் அலைந்தது. தொடுவானத்திற்கு மேலாக சூரியன் எந்த நிமிடமும் வெளிவரக் கூடும் என்ற நிலை. சுற்றியிருந்த எல்லா முகங்களும் பனிமூட்டத் திற்கு ஏற்ப சாம்பல் நிறமாகவே தோன்றின. குழுவின் மகிழ்ச்சி வெகுவாகக் குறையத் தொடங்கி இருந்தது.

பக்கத்து மிதவையில் இருந்த வாத்தியக் குழு இசைப்பதை நிறுத்திவிட்டது. தொலை விலிருந்த கலங்கரை விளக்கம் இப்போது பெரியதாகவும் புதிராகவும் தெரியவில்லை. அளவில் சிறியதாகவும், தொலைவில் இல்லாதது போலவும் காணப்பட்டது.

''நாம் போகலாமா?'' என்றான் ஜில்ட் சோனி.

அவர்கள் படகை விட்டு இறங்கி கரையில் நின்ற போது, ஆல்வார் ஒரு வார்த்தை கூட பேசாது துறையை நோக்கி சில அடிகள் நடந் தான். ஷெல்லாவின் மனநிலையை சரிப்படுத்த ஆல்வார் முயன்றான். ஆனால் அவனால் அதைச் செய்ய முடியவில்லை.

''ஆக, நாம் பிரிந்து போக வேண்டியது தானா?'' அமைதியாக இருந்தது போல பாசாங்கு செய்த ஷெல்லா கடைசியாகக் கூறி னாள். ''பயணத்திற்குத் தயாராவதற்காக நீ உனது நண்பனிடம் செல்லப் போகிறாய்?''

''இன்றைய பொழுதை நாம் சேர்ந்தே

செலவிடுவோம்,'' என்று ஆலோசனை கூறினான் ஆல்வார். ''நாம் கிராமப்புறத்திற்குப் போய் நடப்போம்.''

''பிரிந்து போக வேண்டிய நேரம் வந்து விட்டது,'' ஷெல்லா நடுங்கினாள். ''எப்பொழுது புறப்படுவது என்று முடிவு செய்திருக்கிறாய்?''

''நாளைக்கு.''

''அவ்வளவு சீக்கிரமாகவா?'' ஷெல்லா நின்றாள். ''நாம் எப்படி சுற்றித்திரிய முடியும்? எல்லாவற்றையும் தயார் செய்வதற்கு உனக்கு ஒரே ஒரு நாள்தானே இருக்கிறது.''

''எனக்கு வேண்டிய பொருட்களையும் புத்தகங்களையும் எனது சொந்தக் குறிப்புகளையும் நான் ஏற்கெனவே கட்டிவைத்து விட்டேன். மற்றவற்றை இசாவ் பார்த்துக் கொள்வான்,'' என்று பதில் சொன்னான் ஜில்ட்சோனி.

''உனக்குத் தேவையானவற்றை எடுத்து வைக்காமல், எல்லாவற்றையும் போட்டு அவன் குழப்பிவிட்டால் என்ன செய்வது?''

''அவ்வாறு செய்ய மாட்டான். எனது சிந்தனைகளை அவனால் படிக்க முடியும்,'' அல்வார் சிரித்தான்.

அவர்கள் துறையைக் கடந்து சென்று ஏரோபஸ் நிறுத்துமிடத்திற்கு வந்தார்கள்.

''நாம் எங்கு போவது?''

''அது என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப் போகிறது?''

அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி ஏரோபஸ் சரிவாக வந்து கொண்

டிருந்தது. கருங்காரைப் பூச்சுக்கு மேலாக அரை அங்குல உயரம் கொண்ட காற்றழுத்த அடுக்கில் கிஸ் என்ற ஒலியுடன் அது நின்றது.

ஏரோபஸில் அவர்களுக்குக் கீழே நடப் பதைப் பார்த்த வண்ணம் அவர்கள் இருவரும் எதுவும் பேசாது நீண்ட நேரம் நின்றார்கள். பக்கவாட்டில் பார்க்கையில் ஒரே மாதிரியான வளைவுகள் கொண்ட விமான செல்பாதையை ஏற்படுத்துவது போலக் காணப்பட்டது. சற்று நேரம் டேக் ஆஃப் நிலையில் ஓடிய அந்த ஏரோபஸ், காற்றில் கல் எறிப்பட்டது போல உயரே கிளம்பியது. திட்டமிடப்பட்ட அதிர்வு களுக்கு ஏற்பச் சரியாகச் செயல்பட்டு, குறிப் பிட்ட இடங்களில் அது கீழே இறங்கி புதிய பயணிகளை ஏற்றிக்கொண்டு திரும்பவும் புறப் பட்டது.

இப்போது அந்த எந்திரம் நகரத்தின் மையப்பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தது. கட்டிடங்கள் மேலும் மேலும் உயரமாக இருந் தன. இறுதியாக, குதித்துச் செல்ல முடியாத அளவுக்கு உயரமான கட்டிடங்கள் வந்த போது, பள்ளத்தாக்கில் ஒரு பறவை பறப்பது போல, ஏரோபஸ் கட்டிடங்களுக்கு இடையே பறக்கத் தொடங்கியது.

இப்போது வானளாவிய கட்டிடங்களுக் கிடையே நின்ற ஒரு மிகப் பெரிய கட்டிடத் தைச் சுட்டிக்காட்டி ஷெல்லா கூறினாள்: ''இது போன்ற வீடுகளில் வாழ்பவர்கள், வெளியே போக வேண்டிய தேவையே இல்லாது, வாழ் நாள் முழுக்க அதிலேயே இருக்கலாம் என்று

கூறுகிறார்கள்.''

''அதைப் பற்றி என்ன?'' என்றான் ஆல் வார்.

''சன்னல் வழியாக நீல வானத்தையும், மரங்களையும் பார்த்துக் கொண்டு முழு வாழ்க்கையையும் இந்தக் கான்கிரீட் பெட்டிக் குள் செலவிடுவது என்பது மிகவும் பயங்கர மானது...''

ஆல்வார் வெறுமனே தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு சொன்னான்: ''அது வழக்கத்தைப் பொருத்தது என்று நினைக் கிறேன்.''

கடைசி நிறுத்தத்தில் அவர்கள் இறங் கினார்கள். காலைச் சூரியனின் கதிர்கள் பட்டு வண்ணமயமாகக் காட்சியளித்த ஒரு சுவரின் ஓரமாக அவர்கள் நடந்தார்கள்.

''இந்த நகரத்தில் எனது வாழ்நாள் முழு வதையும் நான் செலவிட்டிருக்கிறேன். ஆனால் இந்தச் சுவரைப் பொருத்தமட்டில் நான் பார்த்ததே இல்லை. இதற்குமுன் நீ இங்கு வந்திருக்கிறாயா?'' எனக் கேட்டாள் ஷெல் லா.

''இல்லை.''

சொரசொரப்பான சுவரின் மீது தனது விரலை ஓட விட்ட ஷெல்லா கூறினாள்: ''இங்கு மிக அருமையாக இருக்கிறது. காற்று துப்புர வாக இருக்கிறது. எங்கும் பசுமையாக இருக் கிறது.''

''சுவர் கட்டப்பட்டதால் நகரம் விரிவடை வது நின்று போனது,'' என்றாள் ஷெல்லா.

''மறுபுறம் நகரம் இன்னமும் மேல்நோக்கி யும் கீழ்நோக்கியும் வளர்ந்து கொண்டேதான் போகிறது.''

''ஆனால் இதுபோல முடிவில்லாது அது செல்ல முடியாது, அல்லவா?''

''ஆகவேதான் இந்த நகரம் இப்போதோ, பிறகோ அழியப் போகிறது.''

''நகரம் அழியப் போகிறதா? அது ஏற்படு வதை நீ எங்ஙனம் காண்கிறாய்?'' என்று வின வினாள் ஷெல்லா.

''சரி, ஒரு நிமிடம் சிந்தித்துப்பார். மனி தன் அழியக் கூடியவன், இல்லையா? காலப் போக்கில் தீங்குதரும் தகவல் படிப்படியாக அவனது செல்களில் சேர்கிறது. பல்வேறு கா ரணங்களுக்காக, அவனது செல்களின் 'நினைவி' லேயே பல திரிபுகள் ஏற்பட்டு பிறகு அவை மறுபடியும் உண்டாகும். தெளிவாக விளக்கி னால், பல்வேறு நோய்கள் ஏற்படத்தொடங்கி மனிதனை கடைசியாக கல்லறைக்குக் கொண்டு செல்லும்.''

''சில நேரங்களில் வியாதிகள் குணப் படுத்தப் படுகின்றனவே.''

''ஆமாம், ஆனால் பிறகு, ஒன்று குணப் படுத்தப்பட்டது மூன்று புதிய வியாதிகளைக் கொண்டு வந்து சேர்க்கிறது. ஆனால் அது வல்ல முக்கியம். ஏதோ ஒருவகையில் மனிதன் மடிவான். அவன் மிகவும் முதுமையை அடைந் தால்தான் — முடிவில் அது என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப் போகிறது?''

''ஆனால் இதற்கும் நகரங்களுக்கும் என்ன

சம்பந்தம்?'' ஷெல்லா கேட்டாள்.

''நகரம் என்பதும் ஓர் உயிரிதான். இயற்கையானதோ, செயற்கையானதோ கொண்ட அமைப்பைத் தன்னுள் கொண்ட ஒரு தனித்த உயிரி. அது பிறக்கிறது, வளர்கிறது, பக்குவமடைகிறது, அதன் பிறகு அதுவாகவே அழியத் தொடங்குகிறது.''

அவர்கள் வார்ப்பிரும்பால் செய்யப்பட்ட ஓர் இருக்கையில் அமர்ந்தார்கள். அதன் நிழல் சரிந்து எதிரே இருந்த குளத்தில் விழுந்தது. அதில் அழுக்கு வெண்மை பிடித்த இரு அன்னங்கள் நீந்திக் கொண்டிருந்தன.

''அங்கு குளிராக இருக்கக் கூடும்,'' ஷெல்லா கூறினாள்.

''எங்கு?'' வினவினான் ஆல்வார்.

''ராக்கி மலைகளில்தான். அங்கு எப்படி காலந்தள்ளப் போகிறாய் என்பதைக் கற்பனை செய்து பார்க்கவே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''

''நானும் அதைத்தான் உணர்கிறேன்,'' ஆல்வார் ஒத்துக்கொண்டான். ''ஆனால் உண்மையில் அதுவல்ல மிக முக்கியமானது, இல்லையா? அபார் உதவியுடன் நான் அங்கு ஒரு புகலிடத்தை அமைத்து எப்படியாவது சமாளிப்பேன். நான் தேவை அதிகமில்லாதவன் என்பது உனக்குத் தெரியும்.''

''புகலிடம் கட்டுவதா?.. என்ன? நீங்கள் இருவருமாகச் சேர்ந்தா ஒரு வீடு கட்டப் போகிறீர்கள்?..'' என்று கேட்டாள் ஷெல்லா.

''நான் கையாளப்படும் ரோபாட்டுகளை வைத்திருக்கிறேன். அவை பயன்படும் என்று நம்புகிறேன்.''

''ஓர் உண்மையான உதவியாள் வேலையை மிக விரைவாகச் செய்து முடிப்பான். இல்லை, நான் என்னைக் குறிப்பிடவில்லை... யாராவது ஒரு பௌதிகவியலாளனைக்கூட நீ அங்கு அழைத்துப் போகலாம். நிச்சயமாக ஒரு நபர் மென்ஸியின் நிபந்தனையை தகர்த்துவிட மாட்டான்.''

''அந்த ஆபத்தை எதிர்நோக்க நான் விரும்பவில்லை.''

''இதை நீ டாக்டர் மார்க் நூஷிடம் விவாதித்துப் பார்க்கலாம்...'' என்றாள் ஷெல்லா.

''பொது மண்டலத் தத்துவம் இறுதி அளவுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமென்றால் ஒரு மனிதன் சொந்தமாகச் செய்தாலே போதுமானதென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எப்படியும் அது நூஷாக இருக்க முடியாது,'' என்று அவளை மடக்கினான் ஆல்வார்.

''ஏன்? நீயாகத்தானே அவன் முன்னேறி வரும் பௌதிகவாதி, நோபல் பரிசு பெற்றவன் என்று கூறினாய்...''

''அது எல்லாம் கடந்த காலத்தில்.''

''பௌதிகத்தை அவன் விட்டு விட்டானா என்ன?''

''துரதிரஷ்டவசமாக.''

''அவனுக்கு என்ன நடந்தது?''

''இங்கு பார். என்னைப் போலவே அவனும் பொது மண்டலத் தத்துவத்தில் ஈடுபட்டிருந்தான். அந்தத் திசையில் அவன் குறிப்பிட்ட முன்னேற்றங்களைக் கண்டான். ஒரு பௌதிகக் கருத்தரங்கில், அவன் பெற்ற முடிவுகள் கடவுளுக்கு எந்த இடமும் அளிக்கவில்லை என்று சொன்னான். அவனது 'நலம் விரும்பிகளும்' அதனை பல்கலைக் கழகப் புரவலரிடம் தெரிவித்தனர். நூரஷின் இந்தத் தகுதிக்கேடான பேச்சு அந்தப் பெரியவர்க்கு மனநிறைவளிக்கவில்லை. ஆகவே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் நூரஷை நெருக்கத் தொடங்கினார். அதற்கு ஏராள மான வாய்ப்புகள் இருந்தன. இந்தப் போ ராட்டத்தில் நூரஷ் களைப்படைந்தவன் போலக் காணப்பட்டான். அவன் ஓடி ஒளிந்து கொண் டான்.''

''இப்போது அவன் என்ன செய்து கொண்டு இருக்கிறான்?''

''ஒரு புத்திசாலி மனிதன் எப்போதுமே தன்னை உயர்த்திக் கொள்ள முடியும்,'' என் றான் ஆல்வார். ''முதலில் ஆசிரியராக இருக் கிறான். இரண்டாவது ஜனரஞ்சகமான விஞ் ஞான நூல்களையும் எழுதுகிறான்.''

''அவை எதைப் பற்றியன?''

''எப்போதுமே ஒரே பாடந்தான். பௌதி கத்திற்கு வரும்போது என்னைப் போலவே மார்க் நூரஷுக்கும் ஒரு வழி மூளை. அண்மை யில் பொது மண்டலத் தத்துவத்தைப் பற்றி ஒரு நூல் கொணர்ந்திருக்கிறான்: **சமன்பாடு**

களில் சிக்குண்ட ஓர் உலகம். அது மிக நன்றாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் எதார்த்தமான விஞ்ஞானத்தோடு அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை. அது எனக்கானது அல்ல. நான் உலகச் சமன்பாடு பற்றி தனிமையில் ஆராயப் போகிறேன்,'' என்று கூறி முடித்தான் ஆல்வார்.

...அதற்குப் பிறகு, அன்றைய நாளில் எந்தப் பகுதி மிக முக்கியமானது என்று ஷெல்லாவால் தீர்மானிக்க முடியவில்லை.

அவர்கள் காலைச் சிற்றுண்டியை எந்த வித விஷேடக் காரணமும் இன்றி விரைந்து சாப்பிட்ட அந்தச் சிறிய அருந்தகமா? சிரிப்பே வராத கேலிப் படமான **மாலிக்குலர் அட்வன்சர்** என்ற தலைப்பில் அவர்கள் பார்த்த படமா? உயிருள்ளவைகளைச் சுட்டுத் தள்ளும் களமா? பாதாளத்தில் பதினேழாவது அடுக்கில் ஏற்பட்ட சாதாரண சாலை விபத்தா?..

விருந்து நடந்த அந்த தூக்கமில்லாத இரவின் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் அப்பால், ஆல்வாரும் ஷெல்லாவும் நெருக்கடியான நேரத்தில் சுரங்கப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். நெருக்கடி அதிகம் இருந்ததால், மூச்சுவிடக் கூட கஷ்டப்பட்டார்கள். ஆறுதல் கூறுவது போல ஆல்வார் கூறினான்: ''மத்திய பகுதியை நாம் கடந்து விட்டால் சுலபமாகி விடும்.''

இருபது நிமிடங்கள் அந்த வண்டியில்

பயணம் செய்த பிறகு, ஆட்கள் குறைந்து, கடைசியில் ஓர் இருக்கையை எப்படியோ பிடித்தார்கள்.

ஒவ்வொரு முறையும் கீழே இறங்க ஆல்வார் முயற்சித்த போது, ''இன்னும் கொஞ்ச தூரம் போகலாம்,'' என்று ஷெல்லா கூறினாள்.

கடைசியாக சுரங்கப் பாதையிலிருந்து அவர்கள் வெளியேறினார்கள். ஆல்வார் அவளைத் தன் கையில் பற்றினான். தனது இதயம் துடிக்கத் தவறியது போல ஷெல்லா உணர்ந்தாள். ஒழுங்காக வாரப்படாத தலையும், நல்ல உடற்கட்டும் இல்லாத அந்த இளைஞனை அவள் காதலித்தாள். அவனது விநோதமான நடத்தைகளுக்கெல்லாம் மாறாக அவள் அவனைக் காதலித்தாள். அவ்வப்பொழுது இந்த இளம் அறிஞன் செய்த தவறுகளைக் கூட மன்னிக்க அவள் எப்பொழுதுமே தயாராக இருந்தாள்.

''கேள், ஆல்வி... உனது உலகச் சமன்பாடு, நமக்கு எதற்காகத் தேவைப்படுகிறது?''

''நீ ஒரு பௌதிகவாதி அல்ல. எனவே உன்னால் புரிந்துகொள்ள முடியாது.''

''அப்படியா?''

''இந்தப் பிரபஞ்சம், அதில் அடங்கியுள்ள பொருள், மற்றும் அதனுடைய மாற்றங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக எல்லையற்ற சக்தியை மனிதனுக்குத் தரும் சாவி போன்றது

இந்தப் பொது மண்டலத் தத்துவம். விண் வெளியையும் காலத்தையும் வெல்ல முடியும். அது போதாதா?''

அவர்கள் பேசாது விரைந்து நடந்த போது, ஏதோ மீன் எலும்பு போல, ஊசிமு னைக் கட்டிடம் ஒன்று அவர்களைத் தட்டியது.

''நீ எங்கே இருக்கிறாய் என்று என்னைக் கேட்டால்?'' அமைதியை முறித்துக் கொண்டு ஷெல்லா கேட்டாள்.

''உனக்குத் தெரியாது.''

''எப்படி இருக்க முடியும்?'' ஷெல்லா அச்சத்தோடு கேட்டாள். ''ஒவ்வொருவருக்கும் தெரியும் நீயும் நானும்...''

''போய்விட்டான், அமிழ்ந்து போனான், காணாமற் போய்விட்டான்,'' ஆல்வார் எரிச் சலோடு பேசினான். ''விரும்பியதைத் தேர்ந் தெடு.''

''ஒரே தடவையில் உனக்குத் தேவையான வற்றை எல்லாம் நீ எடுத்துக்கொள்ள முடியு மா?'' என்று பேச்சை மாற்றியபடி ஷெல்லா கேட்டாள்.

''என்னிடம் நிறைய சாமான் இல்லை. ராக்கி மலைகளில் எனக்கு அதிகம் தேவைப் படுவன பெரும்பாலும் கருத்துக்கள் தான். புதிய கருத்துக்கள், கருத்துக்களின் நீருற்றுதான். அவை அங்கே தோன்றும் என்று நான் நம்புகிறேன்,'' தனது உள்ளங்கையை நெற்றியில் வைத்தபடி ஆல்வார் பேசினான். ''மேலே, மலைகளில், சிந்திப்பதிலிருந்து என்னைத் தடுக்க ஒருவரும் அங்கு இல்லை.''

நகரும் பாதையை அடுத்து அவர்கள் நீண்ட நேரம் நின்றார்கள். தெருவழியாக ஆண்களையும் பெண்களையும் அந்தப் பழுப்பு நிற நகரும் பாதை இழுத்துச் சென்றது. ''அநேக மரத்துண்டுகளைப் போல,'' தனக்குத் தானே ஷெல்லா எண்ணினாள்.

''நாம் பிரிந்து செல்வோமா,'' என்றான் ஆல்வார்.

''விரைந்து நீ போக வேண்டுமா?''

''நான் எனது சாமான்களைத் திரும்ப ஒரு முறை பார்த்தாக வேண்டும். நீண்ட நேரம் நான் போகாது இருந்தால், இசாவ் கவலைப்பட்டுக் கொண்டிருப்பான்.''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய எண்ணங்களை அறிந்துகொள்ள முடியும் என்பது உனக்குத் தெரியும் தானே,'' என்று சொல்லி சிரித்தான் ஆல்வார்.

''பிறகு இதற்கு மேல் எதுவும் சொல்லத் தேவையில்லை. வெற்றி பெற உன்னை நான் வாழ்த்துகிறேன்.''

''நன்றி. ஷெல்லா...''

''என்ன?''

''நீ எனக்காகக் காத்திருப்பாயா?''

''என் வாழ்நாள் முழுக்க நான் காத்துக் கொண்டிருப்பேன். எதற்காக என்று தான் எனக்குத் தெரியவில்லை...'' கவலையோடு ஷெல்லா கூறினாள்.

அவர்கள் முத்தமிட்டுக் கொண்டார்கள்.

''நான் திரும்ப வருவேன். நான் உன்னைக்

காண்பேன், ஷெல்லா,'' கண்ணில் இருந்து மறையும் தறுவாயில் ஆல்வார் எப்படியோ சமாளித்துக் கொண்டு இதைச் சொன்னான்.

நகரும் பாதை வழியாகச் செல்லும் மக்கள் வெள்ளம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. காலியாக இருந்த ஓர் இடத்தை ஷெல்லா தெரிவு செய்து கொண்டு, ஒரு நொடிப்பொழுது தயங்கியபடி, நகரும் பாதையில் கால் வைத்தாள்.

இரண்டாம் இயல்

காக்கைக் கூடு

மலைகளில் பொழுது சீக்கிரம் விடிகிறது. ''மலைகள் சூரியனுக்கு அருகில் இருக்கின்றன,'' என முன்னோர்கள் கூறுவது வழக்கம். சூரியன் மலை முகட்டிலிருந்து முழுமையாக இன்னும் வெளி வரவில்லை. ஆனாலும் கடுமை தணி யாத ஒளிக் கதிர்கள் காலவரையற்ற பழுப் படைந்த சிகரங்களின் மீது இப்போது பாய்ந் தது.

இருப்பினும் மூன்று சரிவுகளில் இருக்கும் கணவாயிலிருந்து இரவு வெளியேறிவிட அவசரப்படவில்லை. அங்கு சாம்பல் நிறமான இருள் குடி கொண்டு விட்டது போல காணப் பட்டது. சமமற்ற அந்தக் கற்பாறை இடுக்கி லிருந்து நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரிந் தன.

மலை மடிப்புகளில் இயற்கை ஏற்படுத்தி யுள்ள உருமறைப்பு அந்தக் கணவாயைப் பக்கவாட்டில் எளிதில் காண முடியாதபடி செய்தது. அதற்கு நேர் மேலே பறந்து செல்பவர்களால் மட்டுமே அதைக் காண முடிந்தது. இருப்பினும் விமானப் பாதைகள் எல்லாம் ராக்கி மலைகளின் ஓர் ஓரமாக

மற்றொரு புறமாகச் சென்றன — இதை ஆல் வாரும் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறான். நீல வண்ண நிலப் பகுதியை குறுக்காகக் கடந்து செல்லும் கழுகுகள் மட்டுமே தங்கள் இரையை கீழே பாறையில் தேடிப் பறந்து சென்றன.

கணவாய் ஏற்படுத்தியுள்ள அந்த செங் குத்துப் பாறையின் அடியில் உயரம் குறைவான கவிகை மாடம் போன்ற ஒரு கட்டிடம் இருந் தது. அந்த நிலையில் பொருத்தமில்லாதது போல காணப்பட்டது.

அந்தக் கவிகை மாடத்தின் மேலே உள்ள மோட்டுப் பலகணி வழியாக தலை குனிந்து ஆல்வார் வெளியேறினான். காலைக் குளிரில் நடுங்கிக் கொண்டு அவன், அருகிலுள்ள ஒரு மரத்திற்குச் சென்று அடிமரத்தில் அடுத்த வடுவை ஒரு கத்தியால் பொறித் தான். மற்றவர்கள் உண்மையாகக் காணாது கற்பனையில் மட்டுமே நினைக்கக் கூடிய பாதையில் மெதுவாகச் சென்றான். கடந்த பதினைந்து ஆண்டுகளில் அந்தப் பாதையில் அவன், மிகுந்த இருட்டில் கூட சிரமமின்றி செல்லப் பழக்கப்பட்டு விட்டான். அப்பா தையின் இரு பக்கங்களிலுமிருந்த குட்டைப் புதர்களில் இப்பொழுது பனி மூடியிருந்தது. அதைத் தொடாமல் இருக்க ஆல்வார் முயற்சித்தான்.

தானே ஏற்படுத்திக் கொண்ட இந்தச் சிறையில் இருக்கும் குடியிருப்பாளன் குறுகிய நிலப்பிளவிலிருந்த நீரோடையை நோக்கி

மெல்ல நகர்ந்தான். பரவலான வெளிச்சம் தொலைவிலுள்ள அந்தக் குறுகிய கணவாயிலிருந்து ஊடுருவி வந்தது. ஆல்வார் நீருக்கு மேலாகக் குனிந்தான். ஒரு மெலிந்த தாடியுள்ள முகம் அவனை நோக்கித் திருப்பிப் பார்த்தது. தனது சுருளான செம்பட்டைத் தாடியை நீவி விட்டான். மீண்டும் தன்னுடைய முகத்தை நீரை நோக்கிக் குனிந்தான். தேவையான அளவு நீரைப் பருகிவிட்டு ஆல்வார் நன்கு நிமிர்ந்தான். வானம் மெல்ல ஒளி பெறத் தொடங்கியது. நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக மறைந்தன.

அன்று தனது கணக்கு வேலையில் இரவில் நீண்ட நேரம் அமர்ந்திருந்தான். இறுதிச் சமநிலை அவனிடமிருந்து தப்பிவிட்டது. சில சமயங்களில் இறுதிச் சமநிலை அவன் கைக்குள் இருப்பது போலத் தோன்றினாலும் அது அவனிடமிருந்து நழுவியது. சூரிய ஒளியில் மூழ்கிய மலைச் சிகரங்களைப் போல இதுவும் முற்றிலும் அடைய முடியாத தாய்த் தோன்றியது. அவை கைக்கு எட்டிய தூரமே இருப்பது போல மாயையாகத் தோன்றினாலும் ஆர்னிதாப்டரின் இறகுகள் மேலும் கீழும் அடித்த போது, அந்தச் சிகரங்கள் முன்னர்போலவே தொலைவில் இருப்பதாகவே தோன்றின...

பல முறை ஆல்வார் தனது பணி முடிந்து விட்டது போல உணர்ந்திருக்கிறான். ஆனால் ஒவ்வொரு முறையும் தனது கணக்கிடுகளில் குறையைக் கண்டுபிடித்து விடு வான்.

ஆல்வார் தனது குடியிருப்பை ஒரு காகத்தின் கூட்டிற்கு ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். இவனுடைய இருப்பிடம் லூனார் ராப்சோடி நிறுவனத்திலிருந்து அதிகாரபூர்வ மற்ற முறையில் பெறப்பட்ட ரோபாட்டு களால் இவனுக்காகவே அமைக்கப்பட்டது. விரைவில் புவியியல் ஆய்வுக்காக செவ்வாய் கோளத்திற்கு அனுப்பப்படவிருக்கும் இந்த ரோபாட்டுகள், அங்கே காணப்படும் கடுமை யான நிலைமைகளில் செயல்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டவை.

அந்தக் காக்கைக் கூட்டிற்கு தன் எஜ மானனின் வேலைக்குத் தேவையான அனைத் தையும் அபார் இசாவ் கொண்டுவந்து விட்டான். குறிப்பாக ஒரு சக்திவாய்ந்த சிக்க லான கம்பியூட்டரும் காந்த நாடாக்களில் மிகு தியான தகவல் கொண்ட வங்கியும் இருந் தன.

வளர்ச்சியடைந்த இச் சாதனங்களைக் கொண்டுவருவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் அபாருக்கு, ஜில்ட்சோனியினுடைய உத்தரவு கள் அவற்றை நிறைவேற்றுவதில் உயிரே போ னாலும் சரி, சட்டம் போன்றவை. ஆதாரத் துகள்களின் விநோதப் பாதைகளைக் கண் காணிக்கவும் தனது கணக்கிடுதல்களோடு ஒப் பிடவும் வில்சன் சேம்பரையும், ஒரு சிறிய ரியாக்டரையும் ஆல்வார் வைத்திருந்தான். ஒவ்வொன்றும் சரியாக வைக்கப் பட்டதும் ஆல்வார் வேலை செய்யத் தொடங்கி, அபாரை

நகரத்திற்குத் திரும்ப அனுப்பினான். காற்றுப் புகாது அடைக்கப்பட்ட ஒருவரே இருக்கக் கூடிய இந்தக் கவிகை மாடத்தில் அவனது வாழ்க்கை முறை ஸ்பார்டா வாசியைப் போல இருந்தது.

ஆல்வார் அந்தப் புதிய சூழ்நிலையில் தன்னுடைய வீட்டை அமைத்துக் கொண்ட போது வீட்டு ஏக்கம் வருவதற்கு நேரமே இல்லை. முதல் மாதங்களில் அவன் கடுமை யாக உழைத்துக் கொண்டிருந்த போது, முன் னைய வாழ்க்கை பற்றி யோசிக்க நேரமில் லை. சில அபூர்வ சந்தர்ப்பங்களில் அபார் புதிய பௌதிக இதழ்களையோ, உணவுப் பொருட்கள் அல்லது புதிய கருவிகளையோ கொண்டுவந்து வைப்பான். அந்த உதவியாள னோடு ஆல்வார் அபூர்வமாக எப்பொழு தாவது அதுவும் சில வார்த்தைகளே பேசு வான்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஜில்ட்சோனி யின் மனநிலை வெகுவாக மாறிவிட்டது. தனி மை உணர்வு அவனை வாட்டத் தொடங்கி யது. துளை விழுந்த பாத்திரத்தின் வழியாக நீர் புகுவது போல அந்த உணர்வு அவன் மனத்தை அமைதியாகவும் உணர முடியாதவா றும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது. வேலை நன்கு நடை பெறுவதாகத் தோன்றவில்லை. எனவே அபாரின் உதவியின்றி செய்வதென்று ஆல்வார் முடிவு செய்தான். பாதி ரோபாட் டைப் போன்ற தன் நண்பனுடைய தொடர்பு

மென்ஸியால் ஏற்படுத்தப்பட்ட நிலைமைக் கெதிராகப் போய்விடும் என்று பயந்தான்.

பிறகு, தன் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது ஆல்வாருக்கு திடீரென்று பேசுவது எப்படி என்பது மறந்து விட்டது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது.

எனவே அவன் தனக்குத் தானே பேசத் தொடங்கினான். காகிதங்களில் தனது குறிப்பு களை நிரப்பிக் கொண்டும், வில்சன் சேம் பரால் எடுக்கப்பட்ட படங்களைப் பார்த்தும், தன்னுடைய புதிய கணிப்புகளை சோதனை யால் அறிந்து கொண்டும் நாளெல்லாம் ஏதா வது முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய முடிவற்ற வசை மொழிகளை உதிர்ப்பான். ஷெல்லாவின் பிரியமான பாடல்களைத் தனக்குத் தானே பாடிக் கொள்வான். அல்லது ஒரு கருமி தனது பணப்பேழையில் துருவித் தேடுவதுபோல் கடந்த கால நினைவுகளைத் தேடிப்பிடித்துச் சொல் வான்.

உலக சமன்பாடு பற்றிய எண்ணத்தை அவன் தன் ஆத்மாவில் நுழைய விட்டது எப்போது? கல்லூரியில் முதலாண்டு மாண வனாக இருந்த போது ஐன்ஸ்டீனுடைய முடிக்கப்படா பொது மண்டலத் தத்துவத்தில் அவன் பழகிப் போய்விட்டான். கருத்தியல் திட்டத்தை அடிக்கோளாகக் கொடுக்கப்பட்ட சுருக்கமான அடிப்படை அமைப்பின் உதவி யுடன் அத்தகைய மாசற்ற படைப்புகளை மனித மூளையால் நிலைநிறுத்த முடியும் என

வியப்படைந்த அந்த இளைஞனுடைய கற்பனை தூண்டப்பட்டது.

ஆனால் படைப்பு அல்லது பெருஞ்செயற் கட்டமைவு என்ற வார்த்தைகளைப் பன்மையில் பயன்படுத்துவது இங்கு பொருந்தாது. அது ஒன்றே ஒன்றுதான், அதுவும் தனித்து ஒன்றுதான். வேறெதுவும் இருக்க முடியாது. ஐன்ஸ்டீன் உலகம் முழுவதையும் ஒரே சமன்பாடுகளின் சங்கிலியால் பிடித்து விடும் துணிவான முயற்சியை மேற்கொண்டார்.

முதலாம் ஆண்டு படிக்கும் போதுதான் ஆல்வார், ஐன்ஸ்டீன் தொடங்கிய வேலையை பூர்த்தி செய்வதென்று உறுதி எடுத்துக் கொண்டான். தன் திட்டம் பற்றிக் கூறிய மாத்திரத்தில் மற்றவர்கள் கேலி செய்வார்கள் என்பதால் அவன் அப்பொழுது யாரிடமும் கூறவில்லை.

பல ஆண்டுகளாக புகழ்பெற்ற பௌதிக வாதிகள் பொது மண்டலத் தத்துவத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இருப்பினும் ஒரு துறையில் கூட ஆராய்ச்சி வெற்றி பெறவில்லை.

மூன்றாமாண்டு கல்லூரிப் படிப்பின் போது நடந்த சம்பவத்திற்குப் பின் ஆல்வார் ஜில்ட்சோனியையும் அவனுடைய வேலைகளைப் பற்றியும் பல்கலைக்கழக அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பார்வைக்கு வந்தனர். மார்க் நூஷின் நடவடிக்கைகளைப் பின்பற்றுவது போல அவன் கல்லூரி புரவலரின் உறவை முறித்துக் கொள்ளும் அளவுக்குக் கவனக் குறைவாக இருந்து

விட்டான். இருப்பினும் தனது ஆசிரியரைப் போல் அல்லாமல் தனது விமர்சனத்தைத் துணிந்து மக்களிடையே தெரிவித்தான்.

பல்கலைக்கழக நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சியின் போது ஜனாதிபதியே நேராக வந்திருந்தபோது அது நடந்தது. புரவலர் தளர்ந்த முதியவர் குரலில், விஞ்ஞானிகளுக்கு நன்றி கூறும் பொழுது, அவர்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளை கண்டுபிடிக்கும் பயனற்ற தங்கள் முயற்சியை கைவிடுவது நல்லது என்று கூறினார். தேசத்தினுடைய அவசரத் தேவைகளில் கவனம் செலுத்துவோரைப் பாராட்டி (சீச்சொலிகள் எழும் வரை மனச்சோர்வுடன் பேசினார்), கூட்டம் நிரம்பி வழிந்த அந்த மண்டபத்தின் நடுவில் இருந்த ஒரு பழுப்பேறிய இளைஞன் எழுந்து நின்று மூர்க்கமான குரலில் கீழ்வருமாறு பேசத் தொடங்கினான்:

''போதிப்பது பாதிரியார்களிடம் விடப்பட வேண்டும். அடைய முடியாதது என்று எதுவும் இல்லை. அடையப்படாததுதான் இருக்கிறது... பௌதிகவாதிகள் இறுதியில் பொதுவான அண்ட வெளியின் படத்தை அமைக்க கடமைப்பட்டவர்கள்.''

''அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயன்றது யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்று இடைமறித்தார் பல்கலைக்கழக வேந்தர்.

''ஆம். ஆனால் அப்பொழுது பொது விஞ்ஞான அறிவு குறைவாக இருந்தது. ஆதாரத்

துகள்கள் பற்றிய தகவல் மிகக் குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தது,'' என்று ஜில்ட்சோனி பதிலளித்தான்.

''ஒருவகையில் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தானாகவே எடுத்துக்கொண்டது நீங்கள் தானோ, இளைஞரே?'' என்று உரத்த குரலில் கேலியுடனும் எரிச்சலுடனும் புரவலர் வினவினார்.

அம்மண்டபம் முழுக்க எழுந்த பல்வேறு பட்ட குரல்களுக்கு மத்தியில் ஜில்ட்சோனி தனது தோள்களை உலுக்கிக்கொண்டு அமர்ந்தான்.

ஜில்ட்சோனி பேசிய தீப்பொறி பறக்கும் பேச்சினால் புண்படுத்தப்பட்டது புரவலர் மட்டுமல்ல. ஜில்ட்சோனியின் வார்த்தைகளுடைய உள் அர்த்தம் என்னவென்று நன்றாக அறிந்திருந்ததால் பல்கலைக்கழகத்தின் மூத்த ஆசிரியர்கள் மிகுந்த கவலை கொண்டனர்.

இந்தப் பிரச்சினையின் சாராம்சம் என்னவென்றால் பொது மண்டலத் தத்துவம் முடிக்கப்படும் என்றால் அது பிரபஞ்சத்திலிருந்து கடவுளை ஒட்டு மொத்தமாக வெளியேற்றி விடும்: அவருக்காக ஒரு மூலை கூட விட்டு வைக்கப்படமாட்டது. அதனால் தான் பல்கலைக்கழகத்தில் பொறுப்பில் உள்ளவர்கள் அந்தத் தத்துவம் மீதும், அதன் பால் ஈடுபாடு கொண்டவர்களையும் கோபமாகப் பார்த்தனர்.

புரவலர் முகம் கோபத்தில் சிவப்பாக

மாறியது. அருகிருந்த ஜெனரல் பக்கம் குனிந்தவாறு திரும்பி அவர் காதில் ஏதோ அவசரமாகச் சொன்னார். அவரும் அதைக் கேட்டு தொடர்ந்து பல முறை மரியாதை யுடன் தலையசைத்தார்.

அந்நிகழ்ச்சி முக்கியத்துவமற்றதாகக் கருதப் பட்டது. எந்த விளம்பரமும் இல்லாதவாறு செய்ய வேண்டுமென்றே முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அந்தப் போக்கிரித்தனமான மாணவனுக்கு பல அச்சுறுத்தல்கள் வந்தன. ஆனால் இறுதியில் அவன் நிம்மதியாக இருக்க விடப்பட்டான். நோபல் பரிசு பெற்ற பல்கலைக்கழகத்தின் பிரபல விஞ்ஞானி மார்க் நூரஷ், ஆல்வாருக்கு முற்றிலும் உதவினார். ஆனால் வெகு விரைவிலேயே அவர், ஆல்வார் ஜில்ட்சோனியின் அரவணைப்பில் போய்விடு வார் என்று நூரஷ் சந்தேகப்பட்டிருக்க முடியு மா?..

எப்படியாவது ஜில்ட்சோனி பௌதிகத் துறையில் பட்டம் பெற அநுமதிக்கப்பட் டான். டாக்டர் நூரஷ் ஆல்வாரிடம் அக்கறை காட்டினார். இருவரும் உண்மையைத் தேடிக் கொண்டு நீண்ட நேரத்தை முடிவற்ற விவாதத்தில் செலவிட்டார்கள். அவர்கள் இரு வரும் சோதனை செய்கின்ற பௌதிகக் கூடத் தில் சேர்ந்தே அடிக்கடி காணப்பட்டார் கள்.

இறுதித் தேர்வு வந்தபோது ஆல்வார் ஜில்ட்சோனி பிரகாசிக்கவில்லை என்பது சுட்டிக்காட்ட வேண்டியதாகும். பிறகு, காகத்

தின் கூட்டில் அவ்வாறு ஏன் நிகழ்ந்தது என்பதை, அவனது சுற்றச் சூழலின் விளைவையும் பிற மக்களையும் அவன் உணர்ந்து கொண்டான். ''முன்னிலை விளைவு,'' என்று கிழவர் மென்ஸி அழைப்பது போல.

இப்போது அதன் மீது கற்பித்துக் கூறுவதற்கு எதுவுமில்லை. தனது சுயமான விருப்பத்தின் பேரில் எடுக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதிலிருந்து ஆல்வாரை எதுவும் தடுக்கவில்லை.

ஆரம்பத்தில் காணப்பட்டதை விட அந்தப் பணி இன்னும் கடினமானது என்பது நிரூபிக்கப்பட்டது. அதற்காக அவன் பதினைந்து ஆண்டுகளைச் செலவிட்டான். ஆனாலும் இறுதியில் முடிவு கண்ணுக்குத் தெரிவது போலவே காணப்பட்டது. முடிவான லட்சியத்தை நோக்கி அவன் அருகே வந்தாலும், விஷயம் கடினமானதாகியது: கடைசி நேரத்தில் வேலை அடிக்கடி நின்று போனது. இதற்கிடையே ஆல்வார் புதிதாக ஒன்றைப் பற்றி சிந்தித்தான். ஒரு வகையில் கம்பியூட்டரின் தகவல் வெளித் தரும் பகுதியில் சாதாரண ஒலியின் சவ்வுக் கருவியை இணைப்பது மிகவும் பயனுள்ளது. பிறகு அவனால் தனக்குத் தானே மட்டும் பேசிக் கொள்வதோடு, நிறையத் தகவலைச் சேகரித்து வைத்துள்ள கம்பியூட்டரோடும் பேச முடியும்...

ஒருவகையில் உரையாடலில் இவனோடு பங்கு பெறக்கூடிய நபர் புத்திசாலியாக இருக்கும் என்று எதிர்பார்ப்பது கேலிக்குரியதாகும்.

எந்த எந்திரமும் புத்திசாலியானது அல்ல என்பதை ஆல்வார் எப்போதோ உணர்ந்துவிட்டான். புத்திசாலித்தனமான எந்திரம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் மனிதர்கள் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எவ்வளவோ காலத்திற்கு முன்போ மறைந்துவிட்டது. இருப்பிலும் முட்டாள்தனமாக உரையாடுபவன், ஒன்றுமில்லாததைவிட மேலானவன்.

அந்த சிந்தனையில் மகிழ்வோடு ஆல்வார் இந்தப் புதிய எண்ணத்தை ஆர்வத்தோடு செயல்படுத்தினான். ஆரம்பத்தில் சில சொற்றொடர்களை அவன் பதிவு செய்தான். பிறகு பேச்சு அனலைசர் அவனது குரலை இரண்டு தனிக் குழுவாக பிரித்தது: இணக்கமான கூறுகள் மற்றது மேற்சுரங்கள். இதையடுத்து அது மனிதக்குரல் போன்ற எந்திரமயமான மாதிரியை துல்லியமாக ஒன்று சேர்த்துத்தரும். தனது கேள்விகளுக்கு ஜில்ட்சோனி விடைகளை அச்சு வடிவில் பெறுவதற்கு முன்னதாக, அவனது சொந்தக் குரலிலேயே இப்போது விடைகள் திரும்பவந்தன. ஒருவகையில் அது உணர்ச்சி குறைவான பேச்சுப் போல இருந்தது.

''இங்கே விஷயங்களைப் பேசுவதற்கு யாருமில்லை. நான் ராபின்சன் குரூஸ் போல இருக்கிறேன்,'' என்று ஆல்வார் ஒரு முறை குறிப்பிட்டான், நன்கு நிரப்பப்பட்ட ஒரு துண்டுக் காகிதத்தைத் திருகியவாறே.

அந்தக் கருவி எந்த மறுமொழியும் தரவில்லை,

ஏனெனில் குரூஸ் என்ற பெயரில் எந்த அர்த்தமும் புலப்படவில்லை. தொகுப்பு என்ற விநோதமான புத்தகங்களின் பக்கங்களிலிருந்து மிகக் குறைவான தகவலையே அந்த கருவி இன்னமும் பெற வேண்டியிருந்தது. அதை உருவாக்கியவர்கள் கருவிகளுக்கு அம்மாதிரி கூடுதலான அறிவு தீங்குதரத்தக்கது என்றும் அதில் எந்தவித முற்போக்கு பயனும் முற்றாக இல்லை என்றும் முடிவு செய்தார் கள்.

''பிறகு நீ எனது வெள்ளிக்கிழமை மனித னாக இருப்பாய், சரிதானே?'' கம்பியூட்டரை நோக்கி அடுத்த வினா கேட்கப்பட்டது. மறு முறையும் எந்திரம் மௌனமாக இருந்தது. ஏனெனில் வாரத்தின் ஒரு நாளாக அதுவாக வே மாறிக் கொள்ளும் என்பதால் எடுத் துரைக்கப்பட்டது முழுக்க அபத்தமாயிற்று.

அந்தோ! எந்திரத்தால் ஜில்ட்சோனிக்கு, தனக்குத் தேவையானது சாதாரண சூழ்நிலை, அது இன்றி ஒரு மனிதனால் சுவாசிக்கவோ, ஒரு பறவையால் பறக்கவோ முடியாது என் பதை விளக்க முடியவில்லை...

கையாளப்படும் ரோபாட்டுகளால் உரு வாக்கப்பட்ட கவிகை மாடத்தின் உள்ளே இட வசதி குறைவாக இருந்தாலும், ஆல்வார் முற்றிலும் நல்ல ஏற்பாடு செய்திருந்தான். அவனுக்குத் தேவையான எல்லாவற்றையும் அவன் பெற்றுக்கொண்டான். மைக்ரோ-ரியாக்டர் நல்ல நிலையில் இருந்தது. இதர கருவிகள் எல்லாம் எந்த வகையிலும் அவன்

புகார் செய்ய இடமளிக்கவில்லை. அவனது அன்றாட வாழ்க்கை முறை முற்றிலும் மாறு பட்ட ஒன்றாகும்...

காக்கைக் கூட்டிற்குப் பறந்து செல்ல அபாரை ஆல்வார் தடுத்த பிறகு, விண்வெளி விமானிக்குரிய உணவை விடுத்து குளோரெல் லாவை உட்கொள்ள வேண்டியவனானான். காக்கைக் கூட்டிற்கு தனது கடைசிப் பயணத் தின் போது அபார் கொண்டுவந்த பொருட் களில் உணவு சேர்ந்திணைக்கும் கருவியும் ஒன்று.

''இக்கருவி உனக்குத் தேவைப்படும் என்று நான் நினைக்கிறேன், பாஸ்,'' ஏராளமான கூம்பு வடிவ உணவு சேர்ந்திணைக்கும் கருவியைக் கீழே இறக்கியபடியே அவன் கூறி னான்.

ஆல்வார் தலையசைப்பின் மூலம் பதிலளித் தான். தன்னை 'பாஸ்' என்று அழைப்பதில் விடாப்பிடியாக இருப்பதனால், அதைக் கவ னிப்பதை எப்போதோ விட்டுவிட்டான்.

காலை உணவு, மதியச் சாப்பாடு அல்லது இரவு உணவு இவைகளில் எவற்றிற்கேனும் அவன் தனது வேலையில் இடைவேளை விடும் போது, உணவு சேர்ந்திணைக்கும் கருவி சரியாக உடைத்து செங்கல் போல வைக் கும் உணவை ஆல்வார் வெறுப்போடு பார்ப் பான்.

விஞ்ஞான ஆய்வுகளின் போது ஒரு புதிய ஆதாரத் துகள் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இப்பொழுது ஆல்வார் அதனை சமன்பாட்

டோடு இணைத்துக் கொள்ள முயன்றான். சில அபூர்வமான சந்தர்ப்பங்களில் மட்டுமே, ஒருவித சிக்கலான விதிமுறைகளை சரி பார்ப்பதற்காக அவன் கம்பியூட்டரைப் பயன் படுத்தினான். இருப்பினும் அவனது ஆசிரியர் மார்க் நூரஷ் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்தது, கோட்பாட்டியலான பௌதிகவாதி உண்மையில் பெனிசில் மற்றும் தாள் ஆகிய வற்றேயே கருவிகளாக வைத்திருக்க வேண்டும் என்பதாகும்.

ஆதாரத் துகள் பற்றிய அண்மைக் காலத் திய கண்டுபிடிப்புகளை கம்பியூட்டர் நெட் ஓர்க் மூலமாக ஜில்ட்சோனி அறிந்துகொண் டான்.

ஒரே அச்சில் வார்க்கப்பட்டது போல நாட்கள் ஒன்றை அடுத்து மற்றது நகர்ந்தன. மிகவும் வெப்பமான தட்பவெப்ப நேரத்தில் கூட கணவாயில் குளிர்ச்சியாக இருக்கும், புழுக்கமான நாட்களில் அல்லது குளிர்ச்சியான நாட்களில் ஆல்வார் வெப்ப சீர்செய்க் கருவி யை இயக்குவான்.

ஜில்ட்சோனியின் மேதாவிலாசத்தை முழு அளவில் செயல்படுவதிலிருந்து தடுக்க மலையில் எதுவும் இல்லை. இருப்பினும், ஆல்வாரின் அறிவுரையின் பேரில் காந்தக் கவசத்தடுப்பை ஏற்படுத்தும் கையாளப்படும் ரோபாட்டுகள் நிறுவப்பட்டன. ஏனெனில் சுற்றித் திரியும் ஒரு பறவை கூட ஆல்வாரின் உலகத்திற்குள் ஊடு ருவக் கூடாது. ஆயினும் பார்க்க முடியாத தடை, பறவைகளைத் தடுப்பதற்காக மட்

டும் ஏற்படுத்தப்பட்டதல்ல. மென்ஸியின் எச்சரிக் கையை ஆல்வார் நெஞ்சில் வைத்திருந்தான். காந்தத் தடுப்பு, அந்த இளம் அறிவாளியின் மனத்தில் முழுமையாக தனிமையை ஏற்படுத் தும். காக்கைக் கூட்டைப் பொருத்த மட்டில், எந்த ஆல்ஃபா கதிர்கள் தங்கள் வழியைப் பார்த்துச் செல்ல வேண்டி இருந்தாலும், அவை தளர்வுற்ற நிலையில் இருந்தாலும், அது பிரதி பலிக்கச் செய்யும் என்பதை ஜில்ட்சோனி, தா னே உணர்ந்து இருந்தான்.

மூன்றாவது இயல்

உலகச் சமன்பாடு

ஆல்வாருடைய குவிமாடத்திலுள்ள ஒரே அறையின் விளக்கு அமைப்புகளிலிருந்து செயற்கை வெளிச்சம் வெளியே மின்னியது. அது மாலை நேரமாகத்தான் இருக்க வேண்டுமென்று அவன் கணித்தான். ஆனால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது பிடிவாதமாக இருந்தான். வெளியே செல்ல அவனுக்கு விருப்பமில்லை. இன்று ஏதோவித நலமின்மையை உணர்ந்தான். குளிர் அவனை வாட்டியது. இருக்கையில் கவனமின்றி தூக்கி எறியப்பட்ட தனது சட்டையை ஆல்வார் திரும்ப தோள்களில் எடுத்து மாட்டிக்கொண் டான். அது மலேரியாக் காய்ச்சலாக இருக்க முடியும் என்று நினைத்தான். ஆனால் அது எப்படித் தன்னைப் பிடித்திருக்கும் என்று வியந்தான். ஒவ்வொருவரைப் போலவும் அவன் பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே தடுப்பு ஊசியும் போட்டுக் கொண்டான். ஆனால் ஒருவேளை ஒரு கொசு இந்த காந்தத் தடுப்பைத் தாண்டி ஊடுருவி இருக்கக் கூடுமோ?

இந்தக் கேள்வியே ஆல்வாரின் சிந்தனை

யைக் கலைப்பதற்கு போதுமானதாக இருந்தது. அவன் தனது தாடியைப் பிடித்துவிட்டுக் கொண்டான். பென்சிலை ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு வியப்புறலானான். தனது தாளில் வரையப்பட்டிருந்த கணித அடையாளங்களைக் கீழே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனது சிந்தனை வெகு தொலைவு தள்ளிப் போயிற்று.

இன்று ஆண்டு விழா நாள். இந்த மலை மறைவு இடத்திற்கு இதே நாளில்தான் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அவன் பறந்து வந்தான். கலகலத்துப் போன ஏராளமான பழுது நீக்கத்திற்குப் பிறகு ஆர்னிதாப்டர், இவனையும் அபாரையும் ராக்கி மலைகளுக்கு, ஏற்கெனவே ஆல்வார் ஸ்டீரியோ வரைபடத்தை ஆழ்ந்து கற்று தேர்வு செய்திருந்த இடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தது.

அவன் சிறிதளவே பொருட்களை, ஆனால் நிறைந்த நம்பிக்கைகளை கொண்டு வந்திருந்தான்.

இத்தனை ஆண்டுகளும் கடினமாக உழைத்ததனால் அவன் எதைச் சாதித்தான்?

முதல் நோக்கிலேயே மிக அருமையாகத்தான் காணப்பட்டது. பாசிட்ரான்கள் முதல் ஹைபெரான்கள் வரையிலான் குறைந்தது முப்பது ஆதாரத் துகள்களுக்கிடையே உள்தொடர்புகளை ஏற்படுத்துவதில் அவன் வெற்றி அடைந்திருக்கிறான். ஆயிரக் கணக்கான கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்ட ஆயிரக் கணக்

கான சோதனைகளின் முடிவுகளைத் தொகுத்திருக்கிறான். இந்தளவு பணியை எந்த ஓர் எலெட்ரானிக் மூளையும் செய்ய முடியாது.

இதில் சிக்கல் என்னவென்றால் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் முற்றிலும் உடன்பாடு கொண்டதாக இல்லை. சில வேளைகளில் நேரடியான முரண்பாடுகளும் ஏற்படுவது உண்டு. அதன் ஆணிவேரை அவன் எங்ஙனம் அறிய முடியும்? ஏன் அது ஏற்பட்டது? சில பரிசோதனைகள் முறையாகச் செய்யப் படவில்லையோ? அளவுகள் சரியில்லாது போய் விட்டனவோ? ஒருவேளை, குறைந்தது ஓரளவாவது புகழைப் பெறலாம் என்பதற்காக யாராவது ஒரு விஞ்ஞானி தனது கண்டுபிடிப்புகளை முழுமையாகச் சோதித்து அறியாமல் எழுதிய கட்டுரையாக இருக்கலாமோ?

இதிலிருந்து வழி தெரிந்து கொள்வது ஏறத்தாழ சிரமமானதுதான். ஒவ்வொரு நுண்ணிய அளவு முன்னேற்றத்திற்கும் முன்பு ஆல்வார் சரிபார்த்தான், திரும்பச் சரிபார்த்தான். பிறகு தவறுகளை வேட்டையாடித் தேடிக் கண்டுபிடிப்பான். எந்த ஓர் எலெட்ரானிக் மூளையும் இது போன்ற பணியைச் செய்ய ஒப்படைக்கப்பட்டிருக்குமேயானால், முதல் குளறுபடியிலேயே அது எரிந்து போயிருக்கக் கூடும்.

ஜில்ட்சோனி இந்தச் சோதனையில் நின்று நிலைத்துவிட்டான். மேலும் எந்திரங்களை

விட மனிதன் உறுதியாகவும், தேவைக்கேற்ப வளைந்து போகும் தர்க்க முறையோடும் இருப்பதை உணர்ந்தான். அந்த முப்பது ஆதாரத் துகள்களும் ஒரே ஓர் அடிப்படை அணுத் துகளைச் சார்ந்ததேயன்றி, வேறல்ல என்பதையும், அவை சக்தி அளவில் தான் வேறுபடுகின்றன என்பதையும் அவன் விளக்கிக் காட்டி நிறுவுவதில் வெற்றி அடைந்தான். இதே முறையில், ஒரு சில ஒப்பனைகளுடன் ஒரு நடிகர் பல்வேறு விதமான பாத்திரங் களை நடித்துக் காட்ட முடியும்.

கடினமாகப் பெற்ற இந்த வெற்றியால் சக விஞ்ஞானிகள் திகைப்படைந்து போவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இருப்பினும் ஆல்வார் தனது வெற்றிகளோடு நின்று விடவில்லை: பொது மண்டலத் தத்துவம், அல்லது உலகச் சமன்பாட்டை அடைய இன்னும் நீண்ட தொலைவு இருக்கிறது என்பதை அவன் உணர்ந்திருந் தான்...

இருப்பினும் ஆல்வாருடைய திட்டத்தோடு பொருந்தாது சில 'விநோதமான' அணுத் துகள்கள் அருவருப்பாகத் தோன்றின. ஒரு வேளை அது வெறும் அற்பமானவை தானா? அந்த 'அற்பங்களின்' முக்கியத்துவம் பற்றி ஜில்ட்சோனிக்கு மிக நன்றாகவே தெரியும். ஒரு சிறு சோதனை முடிவு, அது தற்செய லாக ஏற்பட்டது போலத் தோன்றினாலும், ஒரு புதிய அடிப்படைக் கொள்கையின் ஆதா ரத்தையே தகர்த்துவிடக் கூடும்.

அவன் இருக்கையை விட்டு எழுந்து, வெதுவெதுப்பைப் பெறுவதற்காக சில அடிகள் எடுத்துவைத்தான். உணவு எந்திரம் அமைதி யாகச் சுழன்றது. அதைக் கடந்து சென்ற போது, அதன் திசையில் பார்க்காமல் செல்ல முயன்றான். எந்த மனிதனின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. சில வேளைகளில், மோசமான குளோரெல்லாவை இரக்கமின்றி உற்பத்தி செய்யும் 'வயிற்றின்' மீது அவ னுக்கு வெறுப்பு ஏற்பட்டு, ஒரு சுத்தியலால் அதை நொறுக்க வேண்டும் என்ற கட்டுப் படுத்த முடியாத ஆர்வத்தை அவன் உணர் வான்.

கடைசியாக ஆல்வார் தனது கடிகாரத் தைப் பார்த்தான். ஏறத்தாழ நடு இரவு ஆகி விட்டதைக் கண்டான். மேசைக்கு நடந்து சென்றான். கவனக்குறைவாக அங்கு விரிக்கப் பட்டிருந்த சில பக்கங்களைப் பார்த்துவிட்டு, "இதற்கு ஒரு முடிவை என்னால் காண முடி யாது," என்று பெருமூச்சு விட்டான்.

"எதற்கு ஒரு முடிவு, ஜில்ட்சோனி?" என்று ஒரு திடீர்க் கேள்வி அவனது சொந்தக் குரலில் கேட்டது. அவனது சொந்தக் குரலா? ஆரம்பத்தில் ஆல்வார் மிகவும் அதிசயித்துப் போனான். பதிவு செய்யப்பட்ட குரல்தான். அவன் கம்பியூட்டருக்குக் கொடுத்தது என் பதை அவனால் அறிந்து கொள்ள முடியவில் லை.

"கட்டளை இல்லாமல் நீ ஏன் வேலை செய்யத் தொடங்கினாய்?" என்று கண்டிப்

போடு ஆல்வார் கேட்டான். இந்நேரம் வரை கம்பியூட்டர் அவனது கேள்விகளுக்கு மட்டுமே பதில் சொல்லியது.

''ஏனென்றால் நீ ஏதோ அபத்தமாகப் பேசினாய்!..''

''நிறுத்து,'' என்று எரிச்சலோடு ஆல்வார் இடைமறித்தான். கம்பியூட்டரும் கீழ்ப்படிந்து நின்றது.

கம்பியூட்டர் தனது போக்கை மாற்றிக் கொண்டது. இந்த மனிதனைப் பற்றியே அநேக ஆண்டுகளாக மேன்மேலும் தகவலைச் சேகரிக்கத் தொடங்கிய பிறகு, அது புது விதமான குணாம்சத்தைப் பெறத் தொடங்கி யது.

ஆல்வார் படுத்துக்கொண்டு, ''கம்பியூட்டர்!'' என்றழைத்தான்.

''ஆம்!'' என்று பணிவோடு அந்தக் கருவி பதில் பேசியது.

''உனக்கு ஒரு பெயர் வைப்பது பற்றி நாம் யோசிப்போம்.''

''மக்களுக்கு மட்டுமே பெயர்கள் இருக்கும்.''

''மக்களுக்கு மட்டுமல்ல. எந்தக் கடைக்கும், அல்லது விண்வெளி கப்பலுக்குக் கூட பெயர் இருக்கிறது,'' என்று ஆல்வார் குறிப்பிட்டான்.

தனது கைகளைத் தன் தலைக்குப் பின்னால் வைத்துக் கொண்டு ஆல்வார் யோசனை கூறி னான்: ''நாம் உன்னை... இப்போதைக்கு சார்லி என்று அழைப்போம். அந்தப் பெயரில் முன்னர் எனக்கு ஒரு நண்பன் இருந்தான். சரி தானா?''

''நீல்ஸ் என்பது சிறப்பாக இருக்கும்.''

''ஏன் நீல்ஸ்?''

''அது ஒரு பௌதிகவியலாளரின் பெயர், அவர் தான் முதலாவதாக அணுவின் மாதிரியைக் கொண்டு வந்தவர்... அது கூட...''

அடுத்து எது என்பதை எதிர்பார்த்த வனாக, ''நீல்ஸ் போர்க்கு மரியாதை செய்யும் வகையில் தானே. அப்படியானால் உனக்குப் பிடித்தபடி வைத்துக் கொள் நீல்ஸ்,'' என்றான்.

''ஜில்ட்சோனி, பொது மண்டலத் தத்து வத்தின் சாரம் என்ன என்பதை என்னிடம் கூறு,'' என்று எந்தவித முன்னறிவிப்பும் இன்றி திடீரென்று கம்பியூட்டர் கேட்டது.

''அதற்கு நான் விடை சொல்ல முடியும் என்றால், நீல்ஸ், நீயும் நானும் இங்கே எது வும் செய்ய இருக்காது,'' ஒரு புன்னகையுடன் ஆல்வார் பதில் கூறினான்.

கம்பியூட்டருடன் பேசியதில் ஆல்வார் சற்று உற்சாகமாகக் காணப்பட்டான். இப் போது அவன் எழுந்து, கொஞ்சம் காஃபி தயாரிப்பான்.

பொது தத்துவத்திற்கும் முக்கிய சங்கிலி தொடர்புக்குமான ஒரு பிரச்சினைக்கு வெற்றி கரமாகத் தீர்வு காண்பதில் சில நாட்களுக்கு முன்னர் ஈடுபட்டிருந்தான். அவனால் இன்னும் முடிவைக் காண முடியாவிட்டாலும், கொஞ் சம் ஓய்வு உரிமை இருப்பதாக உணர்ந் தான்.

நீல்ஸுடன் அவன் பேச முடியும். அது

தகவலால் நிரம்பி இருந்தது. பத்து நூலகங்களுக்குப் போதுமான தகவல் அதனிடமிருந்தது. ஆல்வாரின் உதவியோடு அது நாள்தோறும் புதிய அறிவைப் பெற்று வந்தது.

நீல்ஸ் போன்ற சைபர்நேடிக் முறையால் தகவலைத் தருகின்ற வழியில், ஒரு காலக் கட்டத்தில் சில புதிய தர்க்கரீதியான தொடர்புகள் ஏற்படக் கூடும் என்று ஜில்ட்சோனி புரிந்து கொண்டான். அளவை குணமாக மாற்றக் கூடிய இயக்கவியல் விதி எங்கும் பொதுவானது. இருப்பினும் இந்த அமைப்பின் புதிய அம்சங்கள் எப்படி இருக்கும்? ஏழு வயதுக் குழந்தையின் அளவுக்கு நீல்ஸால் சிந்திக்க முடியும் என்பது தெரிகிறது. தர்க்க சிந்தனை பற்றி நீல்ஸின் தகுதி — அது ஏற்பட்டுள்ள அந்த அளவிலேயே — கம்பியூட்டர் இயக்குநர்களோ, தர்க்கக் கருவிகளாலோ இல்லாமல் எந்த மேற்பார்வையும் இல்லாது தானாகவே ஏற்பட்டு உள்ளது.

காஃபியைக் குடித்த போது, ''நல்லது,'' என்று ஆல்வார் தானே எண்ணிக் கொண்டான், ''நீல்ஸின் சிந்தனை முறைகள் எளிமையானவை, அதன் தர்க்கம் அப்பாவித்தனமானவை என்றாலும், குறைந்தது ஆர்வத்தையாவது ஏற்படுத்தும்.''

மறுநாளும் வேலை மீண்டும் நின்று போனது. அது அவனை வேகமூட்டியது. தான் மேற்கொண்ட முயற்சியில் வெற்றிபெற வேண்டுமானால் யாரையாவது கொல்வது அவசியமானதே என்றாலும் அவ்வாறே செய்திருப்

பான் என்ற எண்ணத்தை அவன் பெற்றான். அடுத்த நிமிடமே ஆல்வார் அச்சத்தில் சிக்குண்டான். அவனது துறவு வாழ்க்கை கட்டாயமாக மனித உணர்வை அவனிடமிருந்து பறித்திருக்க முடியாது. ஒருவேளை அவன் சிந்திய குருதி, வியர்வை மற்றும் கண்ணீர் இந்த வளர்ச்சியை ஏற்படுத்தி இருக்கக் கூடுமா?..

ஆல்வாரின் காய்ச்சலால் ஏற்பட்ட கற்பனையின் ஒரு பகுதியாக, அன்று அவனது மனக்கண் முன்னால் ஓர் அருவ உருவம், நீண்ட நாட்களுக்கு முன்னர் அவனுக்கிருந்த ஒன்று இரண்டு நண்பர்களைப் பற்றிய உருவங்கள், தோன்றி அலையலாயிற்று. அவன் கொன்று விட்டானா? இல்லையா?

''இல்லை, இல்லை,'' உரத்த குரலில் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டான். இருப்பினும் ஆல்வார்க்கு உள்ளேயே ஒரு குரல், எவ்வளவுதான் கடினமாக முயற்சித்தும், அவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள முடியாது என்று கூறியது.

கடைசியாக, மனித இன நலத்தின் அக்கறையால் எந்த தியாகமும் மிகப் பெரியது இல்லை என்ற முடிவுக்கு ஆல்வார் வந்தான். ஒரு பெரிய சாதனையால் பல லட்சக்கணக்கான மக்கள் பயனடையப் போகும் போது, ஓர் உயிர் எம்மாத்திரம்? மேலும் மோசமான காக்கைக் கூட்டில் ஏற்கெனவே அவன் தனது சொந்த வாழ்க்கையைத் தியாகம்

செய்து விட்டான். அவன் தேடி அலைந்து கொண்டிருந்த முடிவுகள் நினைவுச் சின்னமாக ஒரு தாளில் இருப்பதைக் கருதி அவனாகவே தன்னை ஒரு கணவாய்க்குள்ளாக மகிழ்ச்சி யோடு வீழ்த்திக் கொண்டான்.

ஷெல்லாவைப் பற்றி எதையும் தேடிக் கண்டுபிடிக்கக் கூடாதென்று அபாருக்கு அவன் கண்டிப்பான தடையை விதித்திருந்தாலும், ஆல்வார் அவளைப் பற்றி அடிக்கடி சிந்திக்க லானான். அவள் இப்போது எங்கு இருக்கிறா ளோ, என்ன செய்து கொண்டிருக்கிறாளோ, யாரோடு தன் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறாளோ என்று வியந்தான். அவர் கள் பிரிந்த போது அவளுக்கு வயது இரு பது. அதாவது அவளுக்கு இப்போது முப்பத்து ஐந்து. மகிழ்ச்சியற்ற கணக்குகள் பரவாயில் லை.

இப்போது போவதென்றால் கூட அதிகத் தொலைவு இல்லை. பொது மண்டலத் தத் துவம் என்ற சங்கிலியில் காணாமற்போன தொடர்பை அவன் கண்டுபிடிப்பான். பிறகு பின்னால் சென்று அவளைக் காண் பான்.

அந்த மகத்தான முயற்சிக்குத் தான் அருகதை உள்ளவன் என்பதை நிரூபிக்கா விட்டால் என்னாவது?.. பொருளின் உருமாற் றத்தால் ஏற்பட்ட சான்றுகளின் சரிவை அவனால் சமாளிக்க முடியாது போனால்? எதுவுமே இல்லாமல் அவனது வாழ்க்கை வீணாய்ப் போனால் என்ன ஆவது? இந்தச்

சிந்தனையே அவனை வதைத்தது. இப்போது வரை ஆல்வார் தனது விதியை நம்பி வந்தான். மென்ஸியுடைய ஆதரவான முடிவுகள் இவனது நம்பிக்கைக்கு ஆதரவு தருவதாக இருந்தன.

ஆனால் அந்தக் கிழவர் எல்லா நேரமும் தவறாக இருந்துவிட்டால் என்னாவது?..

ஒரே ஒரு நிமிடத்திற்குத்தான் ஆல்வார் தன் மனம் ஒடிந்து போனான். ஆனால் அந்த நினைவுகள் அவனுக்கு மகிழ்ச்சியற்ற மனநிலையை ஏற்படுத்தியது. எதையும் கூர்ந்து சிந்திக்க முடியாதபடி செய்தது. பிறகு ஓய்வு எடுக்கவும் தூங்கவும் இயலாது செய்தது.

நடு இரவில் இருளில் அவனது சொந்தக் குரலே பேசியது: ''ஜில்ட்சோனி, ஆதாரத்துகள் என்பது என்ன?''

தன்னிடம் நீல்ஸ் கேட்ட வினாவை நீரில் மூழ்கியவன் துரும்பைப் பிடிப்பது போல ஆல்வார் பிடித்துக்கொண்டான்.

''ஓர் ஆதாரத்துகள் என்பது பொருளின் ஆழத்துக்குள் மனிதன் அடைந்ததற்கான ஒரு படிக்கட்டு, நீல்ஸ்.''

''வெறும் படிக்கட்டுத் தானா?''

''ஆம்.''

''அதற்கு மேலும் கீழே செல்ல வேண்டுமென்றால் இன்னும் படிகள் இருக்கின்றனவா?'' வற்புறுத்திக் கேட்டது நீல்ஸ்.

''சந்தேகமில்லாமல்.''

''அந்த வழிமுறை முடிவற்றதா?''

''ஆமாம். பொருளின் ஆழம் தீர்க்க முடியாதது.''

''அப்படியானால், நீ செய்து கொண்டிருக்கின்ற வேலை பயனற்றது என்று நீ நினைக்கவில்லையா? மேலும் நீயாகவே வகுத்துக் கொண்ட பிரச்சினைக்குத் தீர்வு இல்லையா?''

''நான் நினைப்பது போல நீல்ஸ் முட்டாள் அல்ல,'' என்று ஆல்வார் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். ஏனெனில் இதே போன்ற சந்தேகங்கள் ஏற்கெனவே அவனுக்கு ஏற்பட்டவையே என்பது அவனுக்குத் தெரியும்.

''கீழ்நோக்கிச் செல்வதற்கான வெறும் படிக்கட்டாகிய உனது தத்துவத்தின் முக்கியத்துவம் எப்படி நிறைவானதாக இருக்க முடியும்?''

''அது நிறைவானதாகப் பாசாங்கு செய்யவில்லை.''

''பிறகு எதற்காக இதெல்லாம்?''

''இங்கு பார், நீல்ஸ்... ஒரு பௌதிக விஞ்ஞானியாகிய நான் இயற்கையின் சட்டங்கள் மிகவும் எளிமையானவை என்பதை உறுதியாக நம்புகிறேன். சிக்கலான முறையில் மனிதன் அவற்றை அணுகும் போது ஏற்படும் துல்லியமற்ற முடிவுகள் மனிதனது அறிவுப் பற்றாக்குறையைக் காட்டுகிறது. நான் வேலை செய்து கொண்டிருக்கும் பொது மண்டலத் தத்துவம் நிச்சயமாக பாதை காட்டும் விளக்குப் போல, மைக்ரோ உலகிலிருந்து பால் மண்டலங்கள் வரை

யிலான அத்தியாவசிய உண்மையையும் கண்டறிய உதவும்.''

''ஆனால் அந்தப் பாதையே முடிவற்றது, அப்படித் தானே?''

''அதைப் பற்றி என்ன?''

''அதாவது உன்னுடைய நோக்கம் அடைய முடியாதது என்பது பொருள்,'' என்று நீல்ஸ் குற்றமில்லா தர்க்க ரீதியில் முடித்தது.

இந்தக் கூற்று மார்க் நூஷினுடைய பிரபலமான வார்த்தைகளில் ஒன்றை ஆல்வாருக்கு நினைவூட்டியது: ''லட்சியத்தை நோக்கிச் செல்கின்ற பாதையும், லட்சியத்தைப் போலவே முக்கியமானது.''

அவ்வாறு செய்திருப்பானேயானால், நீல்ஸ் தனது தோள்களைக் குலுக்கி இருக்கும்...

''பௌதிக விஞ்ஞானிகள் எல்லாக் காலங்களிலும் புதிய மைக்ரோ துகள்களைக் கண்டு பிடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்,'' என்று அது சொன்னது.

அது இவ்வாறு ஏற்றுக்கொண்டதும் நரம்பு புடைக்க ஆல்வார் சிரித்தான்.

''எனக்குத் தெரியும்.''

''ஆனால் புதிய அணுத் துகள்களின் சரிவு உனது பொது மண்டலத் தத்துவத்தை கீழே தள்ளிவிடாதா?''

''இல்லை.''

''ஏன் நீ அவ்வாறு நினைக்கிறாய்?''

''எனது கொள்கையில் இன்னமும் கண்டு பிடிக்கப்படாத அணுத்துகள் உள்பட புதியன எல்லாவற்றுக்கும் இடம் இருக்கவே செய்கிறது,''

என்று விளக்கினான் ஆல்வார். ''மெண்டலேயி வின் அட்டவணையில் கண்டுபிடிக்கப்படாத ரசாயனத் தனிமங்களுக்கு காலியான இடங் கள் இருப்பது போல. அத்தகைய பொருட் களை இன்னமும் கண்டுபிடித்துக் கொண்டே வந்தார்கள். ஆனால் கண்டுபிடிக்கப்படாத தனிமங்களின் பண்புகள் என்ன இருக்கக் கூடும் என்று ஏற்கெனவே மெண்டலேயிவ் தெரிந்தி ருந்தார்.''

''ஆக, இன்னமும் கண்டுபிடிக்கப்படாத மைக்ரோ துகள்களை வகைப்படுத்துவதற்கு உனது கொள்கையால் முடியுமா?''

''ஆமாம்.''

நீண்ட நேரத்திற்கு நீல்ஸ் எதுவுமே பேசாது இருந்தது, எதைப் பற்றியோ சிந் திப்பது போல. பிறகு ஆல்வார் திரும்பவும் தூங்கிப்போன போது மீண்டும் எந்திரம் அறி வித்தது: ''ரசாயன தனிமங்கள் என்பது ஒன்று. ஆதாரத் துகள்கள் என்பது மற்றொன்று. உனது பணியை உன்னால் முடிக்க முடி யாது.''

''நீல்ஸ், உன்னால் அவ்வளவு முன்னோக் கோடு பார்க்க முடியாது.''

''மைக்ரோ உலகம் பற்றி துருவி ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு என்ன நேர்ந்தது என் பதை நினைவில் வைத்திரு,'' என்று கருவி தனது கரகரப்பான குரலில் பேசியது.

தன்னுடைய நினைவுப் பகுதியிலிருந்து சேகரித்த தகவலின் அடிப்படையில் சிரமமில் லாமல் பேசிய நீல்ஸின் குரல் விர்விர் என்று

ஒலித்தது. காலை மூன்று மணிக்கு, விளங்காத அணு ஆற்றலின் இயல்பை, ஒளிச்சிதைவோடு நெருக்கமான தொடர்பை நீல்ஸ் பெற்றது. தனது முன்னைய உரையாடல்களின் போது ஆல்வாரிடமிருந்து அறிந்து கொண்டதையும், அத்துறை வரலாற்றோடு தொடர்பு கொண்டதையும் நினைத்துப் பார்த்தில், ''பௌதிகத்தில் ஒளி என்பது எதார்த்தத்தில் இருண்ட பகுதி!'' என்பதாகும்.

''ஒளியைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்!'' என தனது சிந்தனைத் தொடரில் நீல்ஸ் அடுத்த படியில் நின்று விளக்கத் தொடங்கியது. ''மரபு சார்ந்த பௌதிகத்தில் கூட, ஏணியில் தெளிவான முறை இருந்தும், தெளிவுபடுத்தப்பட வேண்டிய சில இடங்கள் இன்னமும் இருக்கவே செய்கின்றன. நீ முன்னோக்கிப் பார்க்க வேண்டியதில்லை. நேரடியாகச் சொன்னால் நியூட்டனியன் எந்திரவியலில் 'சக்தி' என்பதற்கு நிறைவு தரும் விளக்கம் இன்னமும் சொல்லப்படவில்லை. சக்தி என்பது எந்திரவியலில் ஒரு நலிந்த இடம்,'' நீல்ஸ் பேசி முடித்தது.

ஆல்வார் சுறுசுறுப்பின்றி பதில் சொன்னான்.

விடியல் நேரத்தில் எந்திரம் திடீரென்று பேசியது: ''நீ எடுத்துக்கொண்ட பணி முடிக்க இயலாதது என்பது இப்போது தெளிவாகி விட்டது.''

''நிறுத்து!'' என்று கத்தினான் ஜில்ட்சோனி. ஆனால் நீல்ஸ் மேலும் தொடர்ந்தது:

''உனது வினாவுக்குத் தீர்வே கிடையாது. அது மனித மனத்தினுடைய வரம்புகளால் மட்டுமல்ல.''

''நல்லது, பிறகு என்ன?''

''பொருட்களின் இயற்கையான தன்மை தான் காரணம். முடிவற்றதை மைல்களாலும், அங்குலங்களாலும் அளக்கக் கூடாது.''

உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து ஆல்வார் குதித்து எழுந்து, எந்திரத்தை நிறுத்தினான். அவனது சொந்த சந்தேகங்களையே அவனால் கேட்காமல் நிறுத்திக் கொள்ள முடிந்தது! மைக்ரோ உலகத்தின் குழப்பங்களை மட்டுமே ஆராய முடியுமா? மனிதனது பரிணாமத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்த பொது அறிவு என்பது கேலிக்குரியதாகவும் பயனற்றும் போய்விடுகிறதே. அந்த வகையில் இடையறாத வெடிப்புகளும், அழிவுகளும் எங்ஙனம் இறைவரியாக உலகத்திற்கு பயன்பட முடியும்? ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு நுண்ணிய கால அளவுக்குள், எத்தனையோ துகள்கள் வந்த சுவடு கூடத் தெரியாமல் பிறந்து அழிந்து போகின்றன. இப்படி இருக்க மனிதனால் குடியிருக்கப் பெறும் இந்த உலகத்தை தர்க்கரீதியான முறையில் படம் வரைந்து காட்ட முடியுமா? ஒருவகையில் இத்தகைய பணி தீர்வு காண முடியாததுதானோ? ஒருவகையில் நீல்ஸ் கூற்று சரியாகவும் இருக்கக் கூடும்?

கலக்கத்தோடு ஆல்வார் தன் தலையைப் பற்றினான். அவன் மனத்தைக் குழப்பிவிட அதற்கு நீண்ட நேரம் தேவைப்படவில்லை. அவன் உடனடியாக மற்றொரு மனிதனைப் பார்த்தாக வேண்டும்! அவனது அலைந்த பார்வை ஒரு திறப்பான் மீது விழுந்தது. அவனால் குளோரெல்லாத் தாங்கிக் கொள்ள முடியாத போது, தனக்கு அது இசைவானது இல்லை என்றாலும் குவளையை நாடுவான். சிந்திக்காதபடி அவன் உலோகக் கருவியை தனது கையால் திரும்பத்திரும்பத் திருகிக் கொண்டிருந்தான். தனது விரலால் மூடியைத் திருகினான். அது மழுங்கலாக இருந்தது. அதோடு உயிரைப் போக்கிக் கொள்வது நல்லதல்ல. அதைக் கூர்மைப்படுத்த வேண்டி யிருந்தது. தனது சகா ஒருவரைப் பார்க்க வேண்டுமென்று சில நிமிடங்களுக்கு முன்னர் எண்ணியதை அவன் மறந்தே போய்விட் டான்.

ஆல்வார் எழுந்து மாடத்தைவிட்டு வெளி யேறினான். சரிவுகளில் புகை மேகங்களைப் படிய விட்டபடி வானத்தின் குறுக்காக மேகங்கள் தாழப் பறந்தன. மர உச்சிகளை சூறைக் காற்று இழுத்துக் கொண்டிருந்தது. அவன் மரத்திற்கு அடியில் சென்றான். திறப்பானால் தனது அடுத்த வடுவை அதன் பட்டையில் பொறித்தான். இப்போது அதன் தண்டில் தொடாமல் விடப்பட்ட பகுதி ஏதும் இல்லை. பிறகு தன் காய்ச்சல் கொண்ட

நெற்றியை மரத்தோடு சாய்த்துக் கொண்டான்.

எந்திரத்தால் திரும்பச் சொல்லப்படும் தனது சொந்தக் குரலை மட்டுமே கேட்காது, உண்மையான முகங்களைப் பார்க்கவும், சிரிப்புகளைக் கேட்கவும், மற்ற பிறருடைய உரையாடல்களைக் கேட்கவும் விரும்புகிறானா என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் தனது தோல்வியை ஒத்துக்கொள்வானா, ஆயிரக்கணக்கான பிற பௌதிக விஞ்ஞானிகளில் ஒருவன் போல வெறுமனே ஆகிவிடுவானா? சிறு அளவிலான சோதனைகளைச் செய்து பார்க்கத் திரும்பி விடுவானா? தனது சொந்த மூக்கையே மேலும் ஆய்வு செய்யாமல் திரும்புவானா? தனது வாழ்வின் எஞ்சிய பகுதியை ஏதாவது மைக்ரோ துகளைத் தேடுவதில், ஒருவேளை அதை எப்போதுமே கண்டுபிடிக்க முடியாமல் செலவிடுவானா? இல்லை, அதைத் தவிர வேறெதுவும் இல்லை!

ஆல்வார் முழங்காலிட்டுக் குனிந்து, காலத்தாலும் புயலாலும் பளபளத்துப் போயிருந்த கருங்கல் பாறையில், திறப்பான் பிளேடைத் தீட்டத் தொடங்கினான்.

இந்த வகையில் அவன் தனது வாழ்வை முடித்துக் கொள்வது அற்பத்தனமானது. ஆனால் அவன் என்னதான் செய்வது? உண்மையாகவே எந்த வழியும் இல்லை. அவன் இறந்து போவான், அவனது தசை அழுகிப் போகும், அவனது துணிகள் மக்கிப்

போகும். யாருக்குத் தெரியும், ஆனால் ஒருவேளை, ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு தனிமையான பயணி, இந்த தொலைதூரப் பள்ளத்தாக்கிற்கு முற்றிலும் எதிர்பாராத வகையில் வந்து சுற்றித் திரியலாம். அந்நேரத்தில் காக்கைக் கூட்டைச் சுற்றி இருக்கும் காந்தக் கவசம், அதன் வலிவை இழந்திருக்கலாம். ஒரு மலை ஏறியோ, தனது தோழர்களை விட்டு மிகவும் பின்தங்கிப் போய்விட்ட ஒரு புவியியலாளனோ, இந்தக் கணவாயில் கிடக்கும் விநோதமான கூட்டைப் பார்க்க நேரிடலாம். அதில் துருப்பிடித்த கருவிகளும், மரத்தில் கருப்பான வடுக்களும், அதற்கு அருகே மலையின் தெரியும் சூரிய ஒளியில் மின்னும் எலும்புகளையும் காணலாம். அந்தப் பயணி வியப்புறலாம், தான் கண்டதைப் பற்றி ஏதாவது யூகம் செய்யலாம். ஆனால் மறந்துபோன அந்தப் பள்ளத்தாக்கில் நிகழ்ந்த கோர சம்பவத்தை அவனால் ஒருபோதும் கண்டுபிடிக்கவே முடியாது.

ஆல்வார் ஜில்ட்சோனி தானாகவே விரும்பி வெளியேறி காக்கைக் கூட்டில் எல்லையற்ற வெறியுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, ஆயிரமாயிரம் முரண்பட்ட புள்ளிவிவரங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததையும், இயற்கையின் மகத்தான அரிய ரகசியத்தைக் கண்டறிவதில் மிக அண்மையில் வந்ததையும் ஒருவேளை மனித இனம் தானாகவே கண்டறிய முடியாமற் போகலாம்.

இருப்பினும் ஆல்வார் ஜில்ட்சோனி, அவன்

மட்டுமே உலகச் சமன்பாட்டை வரைவதில் தகுதியுடையவன் என ஒருவன் கூடச் சொல்லவில்லை. ஒருவேளை பொது மண்டலத் தத்துவம் என்ற சுமையை தனது தோள்களில் ஏற்றுக்கொள்ளத் தயாராக யாரேனும் ஒருவன்வரக்கூடும். கற்பாளத்திற்கு அருகில் முழங்காலிட்டு நின்ற ஆல்வார்க்கு இந்தச் சிந்தனைகள் அச்சத்தை ஏற்படுத்தின. இப்போது அவன் தோல்வியின் விளிம்பில் நின்ற போது, தனது லட்சியத்தை நிறைவேற்றக் கூடிய ஒரு மகிழ்ச்சியான மனிதன் என்ற உணர்வு திடீரென்று தோன்றியது. ஆல்வார் ஜில்ட்சோனி எதைப் பெற முடியாமல் தோல்வியுற்றானோ அதை இவனால் வெற்றி பெற முடியும். ஒருவகையில் மிகக் குறைந்த முயற்சியில்.

எவ்வளவு நியாயமற்றது! இந்த உலகத்தில் நியாயத்தைப் பற்றிப் பேசுவது கூட இன்னமும் கேலிக்குரியதாகத்தானே இருந்தது. வெற்றியைத் தழுவாத பௌதிகவியலாளன் ஆல்வார் ஜில்ட்சோனியை ஒருவன் கூட நினைவில் வைத்திருக்க மாட்டார்கள். சாபமிடு! இழக்கப் போகிறவனுடைய பாத்திரம் அவனுடையதல்ல. களத்தை விட்டு ஆல்வார் போகப் போவதில்லை. திரை இன்னமும் விழவில்லை. வேலை இன்னமும் தொடரவே செய்கிறது. மூச்சு விட்டுக் கொள்வதற்கு அவனுக்கு இன்னமும் லேசான வாய்ப்பு இருக்கவே செய்கிறது. ஒருவேளை அவன் தனது சொந்தக் கணக்கீடுகளின் வாயிலாக மீண்டும்

ஒரு முறை கடைசி விவரம் வரைத் திரும்பச் சோதித்து இருக்கலாம். எங்காவது தவறு நுழைந்திருக்கலாம் அது கூட ஆல்வாரது அமைப்புக்களைப் பொருளற்றதாகக் காட்ட லாம்.

அவன் சலிப்புடன் குலுக்கிக் கொண்டான். திறப்பானை வீசி எறிந்துவிட்டு, கூவிமாடத் தை நோக்கித் தீர்மானத்தோடு நடந்தான். சன்னல்கள் விளக்குகளால் அவனை வரவேற் றன.

தொடங்குவதற்காக ஆல்வார் விரைந்து சிற்றிடையுணவைக் கொண்டான். சலிப்பைத் தருகின்ற குளோரெல்லாக் கூம்புகள் கூட இந்தச் சூழலில் மனத்திற்குப் பிடித்தமானதாக இருந்தது. வேலை செய்யும் மேசையில் முன்னர் அவன் அமர்ந்து தனது கணக்கீடு களை செம்மையாகச் சரிபார்க்கத் தொடங்கி னான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு எந்த நம்பிக்கை யும் விட்டுப் போகவில்லை என்பதை ஜில்ட் சோனி உணர்ந்தான். தனது கணக்கீடுகளில் எந்த இடத்திலும் தவறுகளையே அவன் காண முடியவில்லை. குறைந்தது தவிர்க்க முடியாத தவறுகள் கூட இல்லை. ஆனால் அதே நேரத் தில் அவனது கொள்கையை அடிப்படையாகக் கொண்ட எந்தவித ஊகங்களோ, முன்கூட்டித் திட்டமிட்டதோ கூடத் தவறாகக் கூடும். இந்தக் கருதுகோளின் நீர்ப்பாசியினின்றும் அவ னால் வெளியேற முடியவில்லை. சில சூழ்நிலை களில் அவை பொருந்திவந்தன, மற்ற பிற

சூழ்நிலைகளில் அவை ஒன்றை ஒன்று முரண் பட்டன.

எல்லாமே முடிந்துவிட்டது. அவனது கடைசி நம்பிக்கையைக் கூட அந்த வாரம் விழுங்கி விட்டது. முதலாவது நரைமயிர் அவனது தாடி யில் காணப்பட்டது. தன்னுடைய கருத்திற் காக சாதாரண மனிதன் மிகவும் அரிதாகக் கருதுகின்ற ஒன்றை—அவனது இளமையை, வாழ்க்கைப் பணியை, தனிப்பட்ட மகிழ்ச்சியை நிச்சயமாக அவன் தியாகம் செய்துவிட்டா னா?

தனது உயிரைக் கூடத் தருவதற்கு ஜில்ட் சோனி தயாராக இருந்த இதன் பயனை யா ராவது ஒருவர் அறுவடை செய்து கொண்டு போகக் கூடும் என்று எண்ணினான். ஆல்வார் ஜில்ட்சோனி, பொது மண்டலத் தத்துவத்திற் கான போராட்டத்தில் தன்னை மிகமிக அதி கமாகவே ஈடுபடுத்திக் கொண்டான். உலகச் சமன்பாட்டைக் கண்டுபிடித்த பெருமை அவனை யே சாரும், இந்த உலகில் வேறு எவனையும் அது சேராது!

...பல ஆண்டுகளுக்கு முன்னால், தங்களுக் குள் நட்புறவைத் தொடங்கிவைத்த, டாக்டர் நூரஷுடன் தான் மேற்கொண்ட உரையாடலை அவன் திரும்ப எண்ணிப்பார்த்தான். அவர்கள் அப்போதுதான் ஒளிக்கதிர்ச் சிதைவு பற்றிய சிக்கலான ஒரு சோதனையை மேற்கொண்டி ருந்தார்கள். அந்த ஆய்வுக்கூடத்தில் குளிர் சாதனக்கருவி இயக்கப்பட்டிருந்தால் கூட புழுக்கமாக இருக்கும். மார்க் நூரஷ் கட்டம்

போட்ட தனது சட்டையைக் கழுத்துப் பக்கம் திறந்து விட்டபடி ஒரு மேசையில் மூலையில் நீண்ட பெருமூச்சு விட்டபடி, உட்கார்ந்தான்.

''எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாய், ஆல்வார்?'' என்று அவன் தனது ஆய்வு உதவியாளனைக் கேட்டான்.

கருவிகளினின்றும் ஜில்ட்சோனி முகத்தைத் திருப்பி, சிரித்தபடி ''பொது மண்டலத் தத்துவம்,'' என்றான்.

முக்கியமான சோதனையின் போது தனது எண்ணங்களை இப்படி அலைய விட்டுக் கொண்டிருப்பது குறித்து கடுமையான விமர்சனத்தை அவன் எதிர்பார்த்தான். ஆனால் திடீரென்று நூரஷ் சொன்னான்: ''நானும் அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இளைஞனே, உனக்குத் தெரியுமா இது போன்ற சவாலை ஏற்றுக்கொள்ளக் கூடியவன் யார் என்று?''

''யார்?'' ஆல்வார் ஆர்வத்தோடு கேட்டான்.

''எதிலும் நம்பிக்கை வைக்காத ஒருவன், மறுத்துச் சொல்ல முடியாதது என்று மற்ற பௌதிக விஞ்ஞானிகள் சொல்லக் கூடிய எல்லா விஞ்ஞானக் கோட்பாடுகளையும் விமர்சிக்கக் கூடிய ஒருவன். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இத்தகைய ஒரு மனிதனாகத்தான் இருந்தார்.''

தனது உள்ளார்ந்த சிந்தனைகளுக்கு குரல் கொடுத்துக் கொண்டிருந்த இந்த மனிதனிடம்

ஜில்ட்சோனி விளக்கமுடியாத நெருக்கத்தை உணர்ந்தான். இம்மாதிரியான பதிலையே அளித்தான்: ''பொருள்களைப் பற்றி சரியான அணுகுமுறையை மேதையால் மட்டுமே பெற முடியும்.''

''மிகச் சரியாகச் சொன்னாய், எனது சகாவே,'' என்று ஏற்றுக்கொண்டான் நூரஷ். இவனும் கூட பளிச்சிடும் கண்களைக் கொண்ட இந்த இளைஞனிடம் பரிவு கொண் டான்.

''மற்றவர்களை விட ஓர் மேதை ஏன் முன்நோக்கி நடக்கிறான், தனது சக விஞ் ஞானிகளுக்கு ஒரு புதிய வழித்தடத்தைக் காண்பிக்கிறான். அவனுடைய தவறுகள் ஆபத்தானவை, ஏனெனில் அவை பௌதிகத் தின் முன்னேற்றத்தைச் சார்ந்து இருக்கின் றன. இருப்பினும் அவனது வெற்றிகள் விலைகளுக்கு அப்பாற்பட்டவை!..'' ஜில்ட் சோனி அமைதியற்ற குரலில் பேசினான். தூக்கமில்லாத அநேக இரவுகளிலும், எரிச் சலூட்டுகின்ற உரைகளிலும் அல்லது பௌதிக கருத்தரங்குகளிலும் தான் நினைத்து ஏங்கிய வற்றை நூரஷிடம் சொல்ல அவன் அவசரப் பட்டான்.

பகல் சாப்பாட்டை சிற்றுண்டி சாலையில் வைத்துக்கொண்ட போதும் அவர்கள் உரை யாடலைத் தொடர்ந்தார்கள். ஜில்ட்சோனி வலியுறுத்திச் சொன்னதாவது: ''தனது நோக் கத்தை அடைய வேண்டும் என்பதற்காக ஒரு

மேதை எந்த வழிகளையும் பயன்படுத்த லாம்.''

''எந்த வழியும் என்பது இல்லை, ஆல் வார்,'' தனக்கு வேண்டிய உப்பை எடுத்துப் போட்டுக் கொண்டு, தனது தலையை அசைத்தபடி நூரஷ் குறிப்பிட்டான்.

''எந்த வழியும்,'' ஆல்வார் திரும்பச் சொன்னான். ''முதற் காரியமாக நீ செய்ய வேண்டியது இதனை நீயாகவே கைவிட்டு விடுவதுதான்.''

பெருமூச்சு விட்டபடி நூரஷ் கூறினான்: ''எல்லாராலும் அதைச் செய்ய முடியாது''.

''தனது சக்திகளை, அற்பத்தனமான காரி யங்களிலும், திறமையற்றவர்களுக்குக் கற்பிப் பதிலும், பயனற்ற புத்தகங்களை எழுதுவதிலும் செலவிட்டால் ஒரு பௌதிக விஞ்ஞானியால் எதார்த்தமாகவே அர்த்தமுள்ள எதையும் சா திக்க முடியுமா?''

''ஜனரஞ்சகமான விஞ்ஞானப் புத்தகங்கள் என்பதும் மிகவும் முக்கியமானது,'' என்று சிறு தயக்கத்தோடு நூரஷ் எடுத்துரைத்தான். ஏனெனில் இந்த 'உண்மை'யை தனது நண் பனுக்கு எடுத்துக் கூறுவதைவிட தன்னையே ஏற்றுக்கொள்ளும்படி செய்ய அவன் முயற் சித்துக் கொண்டிருந்தான்.

இதற்குள்ளாக ஆல்வார் மிகவும் கலவரம் அடைந்தான்: ''டாக்டர் நூரஷ், நீங்கள் எதற்குத் தகுதி உடையவர் என்பதை உங் களாலேயே தெரிந்து கொள்ள முடியவில்லை!''

''ஒருவேளை இருக்கக் கூடும். பிக் எக்ஸின் அலுவல் துறை என்னைப் பற்றி நான் அறிந்ததைவிட அதிகம் அறியும்,'' என்று வருத்தத்தோடு நூரஷ் ஏற்றுக்கொண்டான். ''ஆனால், நான் உன்னை நம்புகிறேன். என்னைவிட இரண்டு மறுக்க முடியாத அனுகூலங்களை நீ பெற்றிருக்கிறாய் — ஒன்று இளமை, மற்றொன்று வேட்கை. உனது விநோதமான வெளிப்பாடுகளுக்கெல்லாம் மாறாக உன்னால் மிகப் பெரிய சாதனைகளைச் செய்ய முடியும்.''

ஆல்வார் தன்னையே நம்பினான். எதுவாக இருந்தாலும் அவன் தன்னிடத்தில் நம்பிக்கை கொண்டிருந்தான். ஆனால் இப்போது பதினைந்து ஆண்டுகள் காக்கைக் கூட்டில் இருந்த பிறகு, அந்த நம்பிக்கையை அவன் இழந்து விட்டான்.

முன்னேற்றத்திற்கான எந்தவித அடையாளமும் இல்லாமல், கணக்குப் புத்தகத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கும் கீழ்நிலை எழுத்தனைப் போல, அவனது அளவுக்கு மீறிய கற்பனை, அவனைப் படம் பிடித்துக் காட்டியது. மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு அவனால் வியர்வையைச் சிந்த முடியும். பிறகு, திடீரென்று ஜில்ட்சோனி தன் வாழ்நாள் முழுக்க அடைய முயற்சித்த போராட்டத்தில் தோல்வி அடைந்துவிட்டான் என்று இலகுவாகக் கூறி முடித்து விடக் கூடும். தூக்கமின்மையால் களைத்துப் போன ஆல்வார் பட்டைகள் நிறைந்த மரத்

தண்டில் முதுகை வைத்தபடி சாய்ந்து நின்றான்.

தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பதை உணராமலேயே அவன் முணுமுணுத்தான்: ''அந்த பேனா தள்ளுபவனைக் கொல்ல நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அவனை எப்படிக் கண்டுபிடிப்பது, அதிர்ஷ்டக்கார பிசாசு?''

ஓ, அவனைக் கண்டுபிடித்தல்லவா! ஆனால் அந்த மாதிரி நிலையில் அவனைக் கொல்ல வேண்டிய தேவையே இருக்காது, அவன் யாராக இருந்தால் தான் என்ன—எழுத்தன், சமையல்காரன் அல்லது பல் மருத்துவன். அவன் தான் வித்தியாசமாகப் போகிறவன் ஆயிற்றே!..

நோக்கம் வழிமுறைகளை நியாயப்படுத்தி விடுகிறது!

காக்கைக் கூட்டில் ஆல்வார் ஒரு புதிய பார்வையைத் தேர்ந்தெடுத்தான். இந்த கொடிய மூலையில், இங்கே எதிர்க்க இயலாத சர்வாதிகாரி அவன்தான். அந்த அதிர்ஷ்டக்காரப் பிசாசை அவனால் இங்கே கொண்டு வர முடிந்ததென்றால்... பிறகு அவனோடு பேசுவான். பொது மண்டலத் தத்துவத்தைப் பற்றிய அவனது கருத்து அவ்வளவு சிரமமானதல்ல என்று கண்டுபிடித்ததனால்... எப்போதுமே வலிமையும், கீழ்ப்படிதலுமுள்ள இவனது உதவியாளன் அபார் இசாவ் கைவசம் இருக்க வேண்டியவன், நம்பிக்கையானவன்.

உலகச் சமன்பாடு குறித்து வேலை ஏதும் தொடங்காத போது, காக்கைக் கூட்டிற்கு இந்த மனிதனைக் கொண்டுவந்தால், பின்னர் காரியங்கள் மிகவும் எளிமையாக இருக்கும் என எண்ணினான்.

ஜில்ட்சோனி வெறுமனே அவனோடு வேலை செய்யத் தொடங்குவான். தேவையான நூல்கள், குறிப்பு அகராதிகள், விஞ்ஞான இதழ்களிலிருந்து எடுக்கப்பட்ட கட்டுரைகளின் மைக்ரோ பிலிம் பிரதிகள் ஆகியன கேட்ட மாத்திரத்தில் கையில் வந்து சேர்ந்தன.

பொறுமையான விவசாயி தன் ஆட்டில் பால் கறப்பது போல, ஒவ்வொரு நாளும் அவனிடம் ஏதாவது கறந்து விடுவான். சமன்பாடு தீர்வு செய்யப்பட்ட போது... ஆனால் அதைப்பற்றி அப்போது கவலைப்படத் தேவையில்லை... ஒரு மேதை எதையும் செய்ய அநுமதிக்கப்படுவார். சாதாரண மானவர்களினும் மேலாகச் சட்டதிட்டங்களிலும், நீதி நியாயங்களிலும் மேம்பட்டவனாக ஜில்ட்சோனி திகழ்ந்தான்.

இருப்பினும் சமகாலத்திய மிகவும் திறமை வாய்ந்த பௌதிக விஞ்ஞானிகளில் மேம்பட்ட இவனை எந்த மாதிரியாக அவன் புரிந்து கொண்டுள்ளான்? குறிப்பாக அவன் ஒரு பௌதிகவியலாளனாக மாறலாம், மேலும் இப்போதைக்கு அவன் வேறு வேலையில் தானே ஈடுபட்டிருக்கிறான்? ஒரு மனிதனைப் பற்றி உண்மையாக மதிப்பிடவும், அவனது

எதிர்காலத்தை கணிக்கவும், அந்த மனிதனைப் பற்றிய தேவையான எல்லா விவரங்களையும் கண்டறிவதற்கு தெளிவு மிகவும் இன்றியமை யாதது. இருப்பினும் தனது எதிர்கால சகா பற்றி கூடுதல் குறைவாக எல்லாவற்றை யும் தெரிந்து கொள்ள அவன் விரும்பி னான். ஆனால் எல்லாரைப் பற்றியும் எல்லாம் எப்படி இவனால் தெரிந்து கொள்ள முடி யும்?

சற்று பொறுப்போம்! பிக் எக்ஸ் எத்தகை யது?

ஆல்வார், ஒவ்வொருவரையும் போல, பொது ஒழுங்கைப் பராமரிக்கும் துறையில் தொட்டிலிலிருந்து கல்லறை வரையிலான எல்லா விவரங்களையும் உள்ளடக்கி, அந்தக் குடியரசில் வாழ்ந்த ஒவ்வொரு குடிமகனைப் பற்றிய விவரங்களும் அங்கு சேகரிக்கப்பட்டி ருந்தன என்பதை அறிவான். தேனீ சேகரிப் பது போல ஒவ்வொருவரைப் பற்றியும் தெளி வான மைக்ரோ செல்களில் சேகரிக்கப்பட்டி ருந்தது. ஒருவர் அறிந்துகொள்ள வேண்டிய அனைத்தும் அந்தச் சிறிய செல்லில் அல்லது பகுதியில் அடங்கி இருந்தன.

ஆம், பிக் எக்ஸுடன் — மிகப் பெரிய எலெட் ரானிக் புள்ளிவிவர வங்கி — ஒரு பேச்சு ஒன்றும் தவறான எண்ணமல்ல. அந்த புள்ளிவிவரச் சேகரிப்பு செல்கள் வழியாகச் சென்று, எந்த நாட்டில் குடியிருப்பவன், மேதைக்கான அடுத்த ஆள் என்பதைக் கண்டறிந்து கொள்ளட் டும்.

ஆனால் அவனால் எங்ஙனம் பிக் எக்ஸை அடைய முடியும்? தலைநகரத்திற்குப் பறந்து சென்று, கட்டடத்தை ஊடுருவிப் பார்ப்பது வீணான முயற்சி. கிடைக்க முடியாத அந்த மைக்ரோ செல்களை ஜில்ட்சோனியே பெற்று விட்டான் என்றால், பிறகு என்ன? அவை களை அவன் எங்ஙனம் விளங்க முடியும்? மேதையை அடையாளம் கண்டுகொள்வது, ஆல்வார் மனத்தில் நினைத்தது போல, அவ்வளவு எளிமையானது அல்ல. ஆட்சிக்கு எதிர்ப்பான ஆட்களைப் பின்பற்றிச் செல்வது முற்றிலும் மாறுபட்ட விஷயம். ஒரு விசேடக் கருவி 'எல்லாம் காணுகிற கண்' இருப்பதை அவன் அறிவான். மாறுபாடான சொற்றொ டர்களோ, ஜனாதிபதியைப் பற்றிய விமர் சனங்களோ — அதில் எதையும் மறைக்க முடி யாது.

பிக் எக்ஸை அவனால் அடைய முடிந்தா லும், தற்போது உள்ள பௌதிகவியலாளர் களில் உள்ளார்ந்த ஆற்றல் கொண்ட மேதையைக் கண்டுபிடிப்பதற்கான கணக்கற்ற செல்களை ஆய்வு செய்வதற்கு அவன் இசைவு தருவானா என்ற ஐயம் ஏற்பட்டது. எதிர்காலத்து முன்னணி பௌதிகவியலாள னைக் கண்டுபிடிப்பது எவ்வளவு சிரமமான காரியம். பிக் எக்ஸின் புள்ளிவிவர வங்கியில் லட்சக்கணக்கான செல்கள் அடங்கி இருக்கின் றன.

''உலகச் சமன்பாட்டைக் கண்டறிவதைக் காட்டிலும் இலகுவானதல்ல,'' என்று ஆல்வார்

தனக்குத்தானே எண்ணிக் கொண்டு, எரிச்சலோடு மரத்தை உதைந்தான்.

ஆல்வார் தற்போது ஈடுபட்டுள்ள 'மேதை வேட்டை'யானது சூழ்ச்சியால் செயல்படும் கம்பியூட்டரால் மட்டுமே முடியும். வாய்ப்புள்ள வழிமுறைகளைப் பகுத்து ஆய்ந்து, தர்க்கரீதியான தேர்வை அது செய்யும். அத்தகைய கருவிகளில் ஒன்றைக் கைப்பற்றுவது அப்படி ஒன்றும் சிரமமான வேலை அல்ல. ஆனால் பிக் எக்ஸிடம் அது எடுத்துச் செல்லப் படுமா?

''இல்லைவே இல்லை,'' ஆல்வார் தனது கையை நெற்றியில் வைத்தான். அந்த கருவிகளில் ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை என உணர்ந்தான். 'மேதை வேட்டை'யைப் பிக் எக்ஸ் தானே மேற்கொள்ள முடியும். அதற்குத் தேவையானதெல்லாம், பிரச்சினையை பிக் எக்ஸிடம் சொல்வதுதான். வேறு வார்த்தைகளில் கூறினால் இந்தப் பிரச்சினையை முறையாக ஒழுங்குபடுத்த வேண்டும். அப்போதுதான் பிக் எக்ஸ் தானே அந்தக் காரியத்தைச் செய்யும்.

தனது மூளையின் எல்லாப் பகுதியிலும் அது ஓடிச் செல்லட்டும். இந்தப் பணியானது கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டது... நீரூற்றை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்த ஆல்வார் மெதுவாகக் கூறினான்: ''இப்போது உயிருள்ள மனிதர்களில் பௌதிகத்தில் நிறைவான சிறப்பு பெற்றிருப்பவன் (அல்லது

பெறப் போகிறவன்) ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.''

எங்ஙனம் ஒரு வெளிநபர் பிக் எக்ஸிடம் போகக் கூடும்? ஓர் எலெட்ரானிக் மூளை, அவனது சொந்த காக்கைக் கூட்டைப் போல, ஊடுருவி வருபவர்களிடமிருந்து பாதுகாக்க, காந்த மண்டலத்தால் சூழப்பட்டிருக்கும். பாதுகாக்கப்பட்ட பகுதியில், அந்த குறியீட்டு எண்ணை ஒருவர் தெரிந்திராவிட்டால், உள்ளே போக முயற்சிக்கும் எவரையும் அது தடுத்து நிறுத்தி விடும். அந்தக் குறியீட்டு எண்ணைப் பெறுவது ஓரளவே சாத்தியமுள்ளதாகத் தோன்றியது. ஆல்வார் இதை உறுதி செய்து கொண்டான். ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியாக அவனது மூளையின் ஆல்ஃபா தாளத்தின் அலைவுகளுக்கு ஏற்ப உள்ளே நுழையும் பாதுகாப்பு வளையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இரண்டு மனிதர்கள் ஒன்று போல இருக்க முடியாதது மாதிரி இரண்டு ஆல்ஃபா தாளங்கள் ஒன்று போல இருக்க முடியாது.

அந்த ராட்சச எந்திரத்தில் பணியாற்றக் கூடிய எல்லா ஊழியர்களது ஆல்ஃபா தாளங்கள் குறித்த அட்டவணையானது, பிக் எக்ஸ் உள்ள கட்டடத்தின் பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஊழியனும் தனக்கே உரிய தனிப்பட்ட ஆல்ஃபா தாளத்தைக் கொண்டிருந்தான். உள்ளே நுழைய அதுவே அனுமதியாகப் பயன்பட்டது. அதைத்

தவறவிடவும் கூடாது, மாற்றுப் பிரதி எடுக்கவும் முடியாது.

தனது மாடத்தை ஒருங்கிணைக்கப் பயன்பட்ட கையாளப்படும் ரோபாட்டுகளை ஆல்வார் உற்று நோக்கினான். அதன் விடை ஒரு வேளை பிக் எக்ஸிடம் ஒரு ரோபாட்டை, அந்த எலெட்ரானிக் மூளையோடு தொடர்பு கொள்ளக் கூடியவாறு முன்கூட்டியே அமைத்து, அனுப்ப முடிவு செய்தான். காந்தப் பாதுகாப்பு ரோபாட்டுகளை எரித்து விடாது இருப்பினும், பாதுகாப்பு அமைப்பு இது போன்ற சாத்தியப்பாடுகளையும் எதிர்நோக்கி, பிக் எக்ஸிற்குத் தர்க்கமுறையான மாயவழியையும் அமைத்து, எந்த ரோபாட் செய்வதை விடவும் அது கூடுதலாகச் செய்யுமாறு அமைக்கப்பட்டிருந்தது.

மற்றொரு புறம், ஒரு மனிதனால் இந்த மாயவழியைக் கடக்க முடியும், ஆனால் மின் காந்தத் தடுப்பைத் தாண்ட முடியாது. அங்ஙனமாயின் ஓர் எந்திரமும், மனிதனும் இணைந்த குணங்களை யாரால் உருவாக்க முடியும்? இது போன்ற பிறவி இருக்கவில்லையே.

ஓ... இருக்கிறது — அபார் இசாவ்! இந்தக் காரியத்தை அவனால் செய்ய முடியும். இந்த மாயவழியில் ஏற்படும் தர்க்கப் பிரச்சினைகளை அவனால் தீர்க்க முடியும். நேரத்திற்கு நேரம் அவை மாற்றிக் கொண்டிருந்தாலும், ஒரு சாதாரண எந்திரத்தை செயல்படாதபடி முட்டுக்கட்டையிட முடியும்.

ஜில்ட்சோனியின் மேதமையை உறுதிப் படுத்த மேலும் ஒன்று! தண்டனை விதிக்கப் பட்ட அபாருடன் சள்ளை பிடித்த வேலை செய்து கொண்டிருந்த போது, பாதி ரோபாட் ஒரு நாள் தனக்குப் பயன்படக் கூடும் என்று மதிநுட்பத்தைக் காட்டினான்.

ஆல்வார் இதுவரை செய்த சாதனைகள் எல்லாம் அற்பமானவை. ஒரு மேதை எல்லா வற்றையும் புதிதாகவே தொடங்க வேண்டி இருந்தது. தான் முன்னோக்கித் திட்டமிட்ட வைகளின் எதார்த்தமான பயனைச் சிந்திக்க லானான். அபாரினுடைய சொந்த மூளையை மாற்றிவிட்டு, அதற்கு பதிலாக எலெட்ரானிக் மூளையில் சில மாற்றங்களை மென்ஸியுடைய மருத்துவமனையில் செய்ய எண்ணினான். இப் போது அபார் இசாவ் ஒரு ரோபாட்டுக்கும், மனிதனுக்கும் இடைப்பட்ட ஒன்றாக எங்கோ இருந்தான். இந்த தொடர்பில் அறுபட்ட சங்கிலியால் ஆல்வார் ஜில்ட்சோனி தனது திட்டத்தைச் செயல்படுத்த இப்போது முடி யும்.

பிக் எக்ஸின் தடை அருகே நெருங்கவுமே அபார் அழித்து போவான். ஆனால் உண் மையில் எந்தவித தியாகங்களும் செய்யாமல் விஞ்ஞான முன்னேற்றங்களை அடைய முடியாது தான். தர்மோ நியூக்கிளியரின் விளைவை அறிந்துகொள்ளும் முன்னர் எத்தனை மக்கள் அழிய வேண்டி இருந்தது! விண்வெளியை வெற்றி கொள்வது குறித்துச் சொல்லவே வேண்டியதில் லை!

இருப்பினும் அத்தகைய முக்கியமான ஒரு வகையில் பாதி வெற்றி பெற்றவைகளையும், உலகச் சமன்பாட்டைப் பற்றியும் இதே அள வில் யார் குறிப்பிடப் போவது? பொது மண் டலத் தத்துவம் தனது குறியீட்டு இலக்கை அடைகின்ற நேரத்தில், ஒரு பாதி மனிதனது தியாகம் உண்மையிலேயே குறிப்பிடத்தக்க சிறப்பை அடையாமலா போகும்?

மேசைக்குக் கீழே கிடந்த டிரான்ஸ்மீட் டரைத் தேடிக் கண்டுபிடிக்க ஜில்ட்சோனி விரைந்தான். அது இப்போது தூசி மண்டிக் கிடந்தது. கடைசியாக எப்போது அவன் அபாரோடு தொடர்பு கொண்டான் என் பதைக் கூட அவனால் நினைவு கூர முடியவில் லை. சாதாரண பயோலிங்கைக் கூட தொடர்பு ஏற்படுத்த அவன் பயன்படுத்தி இருக்கலாம். அவன் எப்போதுமே ஒரு சிறிய கூட்டைத் தனது சட்டைப் பையில் வைத்திருப் பான். ஆனால் டிரான்ஸ்மீட்டர் மிகவும் நம்பத் தக்கது.

ஒரு கந்தல் துணியால் அவன் திரையைத் துடைத்தான். அதைச் செய்த போது, காக் கைக் கூட்டிலிருந்து தான் வெளியேற வேண்டிய அவசியம் இல்லை என்ற முடிவுக்கு வந்தான். அவன் மேற்கொண்ட முறை எவ்வாறு செயல் படுகிறது என்பதை அவன் இங்கிருந்தபடியே மேற்பார்வை செய்யலாம். ஒரு நொடியைக் கூட வீணாக்க முடியாது. ஏற்கெனவே ஏராள மான நேரம் அவனிடமிருந்து நழுவிப்போய் விட்டது.

குமிழை அவன் திரும்பிய போது, தனக்குத் தானே ஆல்வார் எண்ணிக்கொண்டான் வெறும் அவசரம் என்பது குறைந்த வேகம் என்பதாக. வேலைத்திட்டம் ஒன்றை முதலாவதாக ஓர் அடிப்படையை திட்டமிட வேண்டும். டிரான்ஸ்மீட்டரை அவன் கீழே விட்டுவிட்டு, சுத்தமான துண்டுத் தாளை தன் பக்கம் இழுத்தான். நீண்ட நேரமாக திட்டமிடுவதிலேயே மூழ்கி இருந்தான். ஆரம்பத்தில் சில குறிப்புகளை அவன் குறித்துக் கொண்டான். பின்னர் அவற்றை அடித்து விட்டு, புதியனவற்றைச் சேர்த்தான். பிறகு எல்லாவற்றையும் முழுமையாகப் படித்து கடைசியில் மனநிறைவு அடைந்தான். அங்கங்கே கிறுக்கி இருந்தவை தர்க்கரீதியாகத் தோன்றின. இப்போது அவன் அபாரோடு தொடர்பு வைத்துக்கொள்ள முடியும்.

டிரான்ஸ்மீட்டரை டியூன் செய்து முடித்த போது, ''நமது முக்கியத் துருப்புக் கார்டுகள் — துணிச்சலும், நமது தாக்குதலில் வியப்பான அம்சமும் தான்,'' என ஜில்ட்சோனி முணுமுணுத்துக் கொண்டான்.

* * *

ஆரம்பத்தில் திரையில் தெளிவற்ற உருவத்தைத்தவிர எதுவுமே தெரியவில்லை. படிப்படியாக அத்தோற்றம் அபாரின் உருவ அமைப்பைப் பெறலாயிற்று. அப்போது மாலை நேரம். அபார் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான்.

எதுவுமே சொல்லாமல் அபாரின் சலனமற்ற முகத்தை ஆல்வார் கூர்ந்து நோக்கினான். அத் தோற்றம் உத்தரவுக்காக் காத்திருந்தது. இப் போது அபாரின் எஜமானனை நோக்கி அது இருந்தது. மிக முக்கியப் பணித்திட்டத்தைச் செயல்படுத்துபவன் இந்த மனிதன் தான்! ஆல்வார் ஜில்ட்சோனி தானே அமைத்துக் கொண்ட லட்சியத்தை அண்மையில் நெருங்க அபார் இசாவைத் தவிர வேறு எவராலும் முடியாது.

''அபார், கவனமாகக் கேள்,'' என்று தொடங்கிய ஜில்ட்சோனி, எந்தக் காரணமும் இன்றி சுற்றிலும் பார்த்துக்கொண்டான்.

அபாரிடத்தில் மிகச் சிறிய வியப்பைக் கூட ஏற்படுத்தாத தனது கட்டளைகளை விவரித்த பிறகு, டிரான்ஸ்மீட்டரை ஆல்வார் நிறுத்தினான். இப்போது சக்கரங்கள் சுழல ஆரம்பித்துவிட்டன. திட்டத்தின் முதற் பகுதி யை நிறைவேற்றுவதற்கு அபார் தயாராகிக் கொண்டிருந்தான். தையல்காரரிடம் போய்ச் சேர அவனுக்கு நாற்பது நிமிடங்கள் பிடிக் கும்.

இப்போது ஆல்வார் நேரத்தை எப்படிப் போக்குவது? பிக் எக்ஸ் தேர்ந்தெடுத்த நபர் பிடிவாதமாக நடந்தால் அவனை எப்படிச் சமாளிப்பது என்று சிந்திக்கலாம்.

கடந்த முறை காக்கைக் கூட்டிற்கு வருகை தந்தபோது அபார் மறந்து விட்டுப் போயிருந்த திறந்து கிடந்த சிகரெட் பாக்கெட்டை ஆல்வார் பார்த்தான். அபார்

அத்தகைய காரமான சிகரெட்டுகளையே புகைப்பான். அவை பெரும்பாலும் ஆல்வாரின் மூச்சைத் திணறடித்து விடும். அவன் புகையி லையில் கஞ்சாவையும் சேர்த்துக்கொள்வது வழக்கம். அவ்வப்பொழுது தனது தலையின் பின்புறம் ஏற்படக் கூடிய வலி அப்படிச் சேர்த்துப் புகைத்தால் சற்று குறைவாக இருக்கிறது என்று ஆல்வாரிடம் உறுதி தந்திருக்கிறான். அந்த வலி எதனால் ஏற்படு கிறது என்பது ஜில்ட்சோனிக்கு மிக நன் றாகத் தெரியும். அதன் காரணமாகத்தான் அவன் அபாரின் குறைபாடு பற்றிக் கவலைப் படவில்லை.

அந்த சிகரெட் பாக்கெட்டைக் கையில் திருப்பினான். தனது மேசையின் உள்ளறை யில் ஆல்வார் சிறிதளவு காரமான கஞ்சா — ஸெவோன் — வைத்திருந்தான். காக்கைக் கூட் டில் அபார் இருக்கும் போது ஏதாவது வலி வருமேயானால் தேவைப்படும் என்று கொஞ் சம் அதை அவன் வைத்திருப்பது வழக்கம்.

அந்த கஞ்சாத் தூளைக் கொண்டு சிகரெட்டு களை நிரப்பி மூடிவைத்து விட்டான். யாரை யாவது சரிப்படுத்த வேண்டி இருந்தாலோ, யாருடைய மன வலிமையையாவது திருட வேண்டி இருந்தாலோ இது பயனுள்ள கருவி யாகப் பயன்படும். அந்த சிகரெட்டுகளில் பில்டர் உண்டு. தாக்கும் பகுதியில் அது இருப்பது நல்லது. மேலும் ஸெவோன் கொண்ட சிகரெட்டின் புகை சீக்கிரமாகவே மறைந்து விடுகிறது. யாராவது பாதுகாப்பாக

இருக்க வேண்டுமென்றால் இந்தப் புகையை வாயில் மட்டும் வைத்துக் கொண்டு, உள்ளே இழுக்காமல், உடனடியாக வெளியே ஊதிவிட லாம். சந்தேகிக்காத ஒருவன் இதை நன்றாக வே சுவாசித்து விடுவான்...

மேசையில் தனக்கு முன்னால் ஜில்ட்சோனி தனது கைக்கடிகாரத்தை வைத்தான். மேசை யின் உள்ளே இருந்து ஸெவோனை எடுத்து சிகரெட்டுகளுக்குள் வைக்க ஆரம்பித்தான். எல்லாவற்றையும் செய்து முடித்து, கவனமாகப் பொட்டலத்தை மூடி பிறகு கைக்கடிகாரத் தைப் பார்த்தான். முப்பத்தைந்து நிமிடங்கள் கடந்து போனதை அது காட்டியது.

''யாரிடமாவது இந்த சிகரெட்டுகளைக் கொடுத்து சோதித்துப் பார்த்தால், மிகவும் ஆர்வம் ஊட்டக் கூடியதாக இருக்கும்,'' என்று ஆல்வார் தனக்குத்தானே நினைத்தான்.

திரும்பவும் அவன் டிரான்ஸ்மீட்டரைத் திருகி னான். அபார் இசாவின் நடவடிக்கைகளை, அவன் வேலை செய்யும் போது, கவனிக்கத் தொடங்கினான்.

நான்காவது இயல்

பிக் எக்ஸால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

தான் பல ஆண்டுகள் மலைகளில் இருந்த தால் ஆல்வார் தனது விருப்பு வெறுப்புகளை மறந்துவிட்ட வெளி உலக வாழ்வில் அவ்வள வாக ஆர்வங்காட்டவில்லை. என்ன நடை பெற்றுக் கொண்டிருக்கிறது, இப்பொழுது எப் படி இருக்கிறது, மக்கள் என்ன அணிகிறார் கள் அல்லது தங்களது ஓய்வு நேரத்தை எப் படிச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என் பதில் மிகக் குறைந்த ஈடுபாடே காட்டினான். காக்கைக் கூட்டில் போதுமான கவலைகளும், ஏமாற்றங்களுமே இருந்ததனால், அவை அவ னை சுறுசுறுப்பாக வைத்திருந்தன.

தெருவழியாக அபார் அடைந்திருக்கும் முன் னேற்றத்தை திரையில் உற்றுப்பார்த்ததன் மூலம், இடைக்காலத்தில் ஏற்பட்டுள்ள மகத் தான முன்னேற்றங்களைப் பார்த்து, ஜில்ட் சோனி இப்போது அதிசயித்துப் போனான். வாழ்க்கையின் வேகம் தேவையான அளவுக்கு இன்னும் கூடியிருக்கிறது. பல்வேறு வகைப்பட்ட விவரங்கள் ஆல்வாரின் கவனத்தை முழுதுமாகக் கவர்ந்தது.

நடப்பு வழக்கைக் கூட இரண்டாவது

முறை பார்க்க அவன் அக்கறை காட்ட வில்லை. பெண்களின் உரத்த கரகரப் பொலி வுடைய ஆடைகளின் வண்ணங்கள், இராசி மண்டல அடையாளங்களிட்ட அவர்களது எடுப்பான தொப்பிகள், காதுகளில் அவர்கள் அணிந்திருந்த இரட்டை வளையங்கள் அல்லது அவர்கள் வாயைச் சுற்றி முப்பட்டை வடிவில் போட்டிருந்த உதட்டுச் சாயம் இவைகளில் கூட அவன் குறிப்பிட்டு கவனமேதும் செலுத்த வில்லை.

அபார் விரைவாகக் கடந்து சென்ற சில கடைகளின் அடையாளங்கள் ஆல்வாரை சிந்திக்கத் தூண்டின. எடுத்துக் காட்டாக "தனி நபர் தெளிப்புக்கான சலூன்," என்ன என்பதை அவனால் நினைக்க முடியவில்லை. ஆடையற்ற எழில்மடமாது இடுப்பளவு ஆழத் தில் நுரையுடைய அலைகளுக்கிடையே, பிற்காலத்திய அப்ரோதித் போன்று இருக்கும் படம் ஒன்று கதவில் இருந்தது. சலூனை விரைந்து கடந்து கொண்டிருந்த அபார் வேகத்தைக் குறைத்து கடையில் அதை உற்றுப்பார்ப்பதற்காக நின்றே விட்டான். தனது உதவியாளன் பாலுணர்வில் சற்று மோசமானவன் என்பதை அறிந்ததனால், அபார் அந்த எழில்மடமாதை ரசிப்பதற்கா கத்தான் நின்று கொண்டிருக்கிறான் என்று ஜில்ட்சோனி முடிவு செய்தான். தேவையற்று சுணங்குவதற்காக அபார் கட்டாயம் தண்டிக் கப்பட வேண்டும். அவனது பயோடிரான்ஸ் மீட்டர் உள்ள பாக்கெட்டுக்குள் ஆல்வார்

கையை வைத்திருந்தான். ஆனால் அதே வேளையில் அபார் கதவைத் தள்ளிவிட்டு சலூன் உள்ளே சென்றுவிட்டான்.

விநோதமான புன்னகையுடன் அபார் மிக விநோதமான வேண்டுகோளைக் கோரினான்: பிக் எக்ஸுக்குத் துணை நிற்கும் ஊழியர்களில் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அணியும் ஆகாய நீலநிற சீருடை அணிவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அந்தச் சீருடை ஒன்றும் ரகசியமானதல்ல. ஏனெனில் தொலைக்காட்சித் திரையில் ஏறத்தாழ ஒவ்வொரு நாளும் அதைக் காண முடியும். வாடிக்கையாளரது விருப்பத் திற்குக் காட்டும் பணிவிசைவுடன், தெளிப் பான் கட்டுப்பாட்டினை முதலில் சரி செய்த படி, இரண்டு பெண்கள் ஆளில்லாத தனி யறை ஒன்றினை அவனுக்குக் காட்டினார் கள்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அறை யிலிருந்து அபார் வெளியே வந்தபோது, அவனது இயல்பான உடல் மீது நெருக்கமாக நீல வண்ண பிளாஸ்டிக் சுற்றியிருந்தது. இதைப் பார்த்ததும், ஜில்ட்சோனி, அபாருக்கு சிந்தனை கட்டளை ஒன்றை அனுப்பினான். அவன் திரும்பவும் தனது பழைய உடைகளை மாற்றிக் கொண்டான். சீருடை ஒரு பொட் டலமாகக் கட்டப்பட்டது. பணத்தைக் கொ டுத்து விட்டு அவன் கிளம்பினான். முன்னர் போல தூக்கத்தில் நடப்பவன் மாதிரி அவன் வெளியேறியபோது, சலூன் ஊழியர்களிடத் திலே சுவையான விவாதம் தொடங்கியது.

ஜில்ட்சோனி அவற்றை மிகுந்த ஆர்வத்தோடு கேட்டான். அங்கு கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து, தனது பதினைந்து ஆண்டுகாலம் தான் இல்லாமற் போனபோது ஏற்பட்ட புதுமைகளை அவனால் அனுமானிக்க முடிந்தது.

''அந்த ஆள் உள்ளே நுழைந்த போது, அது ஒரு ரோபாட் என்று நான் நினைத்தேன். என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்!'' உடைகளின் வண்ணங்களுக்குப் பொறுப்பான அந்த இளம் பெண் கூறினாள்.

''ஆக, அவர்கள் ரோபாட் செய்வதற்கு அறிந்திருக்க வேண்டும்,'' என்று ஆல்வார் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

''வர்ணம் தெளிக்கப்பட்ட உடைகளை அணிய ரோபாட்டுகள் தடை விதிக்கப்பட்டிருக்கின்றன,'' என்றான் காசாளன்.

''திடீரென்று அவன் என்னை உற்றுப் பார்த்த பொழுது நான் போலீசை அழைப்பதாக இருந்தேன்,'' என்று தொடர்ந்தாள் அந்த வண்ணப் பெண்.

''எப்படி?''

''புத்திசாலித்தனமாக, கண்டு பிடிக்கும் வழி...''

''ரோபாட்டுகள் கூட உன்னை அது போலவே உற்றுப் பார்க்க முடியும்,'' என்று மற்றொரு உதவியாளன் குறிப்பிட்டான்.

''எந்த ரோபாட்டுகளும் அவன் என்னைப் பார்த்தது போல பார்க்க முடியாது,'' என்று முதலாமவள் மறுப்புத் தெரிவித்தாள்.

''நீ தவறு செய்துவிட்டாய், எனது காத லியே,'' சிவப்புத் தலைமயிர் கொண்ட சிப் பங்கட்டுபவன் மற்றவர்களைப் பார்த்து கண் சிமிட்டியபடி கூறினான். ''அது ஒரு மாதிரி யான ரோபாட்.''

அவனுக்கு அண்மையில் இருந்த பெண், விஷயத்தில் ஆர்வங்காட்டியவளாக, ''மேலும் அவன் மிகவும் குறிப்பிடத்தக்க ஆள். எந்தச் சாதாரண மனிதனுக்கும் அதைப் போல விரிந்த தோள்கள் இருக்க முடியுமா?''

''மேலும் அந்தத் தாடை—புர்!..'' மேலும் கூறினான் சிப்பங்கட்டுபவன்.

சலூனின் சொந்தக்காரனே இறுதியாகப் பேசியவன். வரவேற்பு சாய்வு மேசையின் மீது கையைத் தட்டியபடி வலிறுத்தியதாவது, ''ஒருவகையில் நாம் சேவை செய்து கொண் டிருக்கும் ஒரு மனிதன் அவன். சட்டத்தை நம்மால் மீற முடியும் என்று நீங்கள் நினைக் கிறீர்களா?''

அவனது தலையின் உச்சியில் சோம்பேறித் தனமாகவும், நிலையாகவும் தொடர்ந்து ஏற் பட்ட வலி, அவனை முன் எப்போதும் இல் லாத நடத்தையைச் செய்யத் தூண்டியது. உலகில் இதைத்தவிர அபார் வேறு எதையும் விரும்பவில்லை.

எது அவனை போக வைத்தது? விலை மதிப்புள்ள நீல துணியை அவன் ஏன் வாங்கி னான்? அவன் அடுத்து எங்கு போவான்?

வலிவருத்த அவன் நடந்து போகையில் சுற்றிலுமிருந்த மக்களது முகங்கள் மங்கலாக

வும் உண்மையற்றதுமாகக் காணப்பட்டன. அவை வடிவம் பெறுவதற்கு முன்னதாகவே சிந்தனைகள் அறுபட்டுப் போயின.

தூரத்தில் உள்ள ராக்கி மலைகளில் ஆல்வார் ஜில்ட்சோனி தனது பாக்கெட்டில் உள்ள பயோடிரான்ஸ்மீட்டரை அழுத்தி, கிட்டத்தட்ட ஓட்டமாக வரவிருந்த அபாருக்கு மேலும் சிந்தனை உத்தரவைப் பிறப்பித்தான்.

கண்களை திரையில் ஓடவிட்டபடி ஆல்வார், ''அது சிறந்தது, மகனே!'' என்று முணுமுணுத்தான். ''இப்பொழுது நேராக பிக் எக்ஸை நோக்கிப்போ. நீ அங்கு போய்ச் சேர்வதற்குக் கடவுள் உனக்குத் துணை புரிவாராக!..''

தொலைவிலிருந்து வந்த சிந்தனைக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த அபார் கூட்டத்தோடு முட்டிமோதிக் கொண்டு சுரங்கப் பாதைக்குச் சென்றான். இரயில் மெதுவாக அசைந்து செல்கையில் திரையில் படம் மோசமாகியது.

அவனுக்குரிய நீல வண்ண மேலங்கிப் பொட்டலத்தை இறுகப் பற்றியபடி அபார் அமர்ந்திருந்தான். ஒவ்வொரு முறையும் அவ்வப்பொழுது அவன் தனது விரல்களால் தலையின் பின்புறத்தை மெதுவாக அழுத்திக்கொண்டான்.

''தாங்கிக் கொள், இளைஞனே. எனக்கு வேறு வழியில்லை...'' ஆல்வார் முணுமுணுத்தான்.

துப்பாக்கிக் குண்டுபோல இரயில் தரை

மட்டத்திற்கு எழுந்தது. பிறகு பாலம் ஒன்றை விரைந்து கடந்து, புறநகர் நோக்கிச் சென்றது.

பிறிதொரு நேரம் ஜில்ட்சோனி, அவன் இல்லாத காலத்தில் ஏற்பட்ட புதிய கட்டடங்களை பேராவலுடனும், நகரத்தின் புதிய வானவிளிம்பை ஆர்வத்துடனும் பார்த்தான். ஆனால் கவர்ந்திழுக்கும் நகரமைப்பை பாராட்டுவதற்குத்தான் நேரமில்லை. அபாரை ஒரு நிமிடம் கூட பார்க்காமல் இருப்பதற்கு அஞ்சினான்.

பயோடிரான்ஸ்மீட்டரை இன்னமும் பிடித்தபடி இருந்த ஆல்வார், ''உடையை மாற்று, இதுதான் நேரம்,'' என்று நினைத்தான். நூற்றுக் கணக்கான மைல்கள் இடைவெளி அவர்களிடையே இருந்தபோதிலும், அபார் திடீரென்று தனக்கு அடுத்து வேண்டியதெல்லாம் பிளாஸ்டிக் சீருடைதான் என்று உணரத் தொடங்கினான். தனது இருக்கையிலிருந்து குதித்து எழுந்தான். அவனது கால்கள் இன்னமும் ஏதோ போல ஆடியது. வண்டியின் கடைசிக்குப் போனான். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு கழிப்பறையிலிருந்து வெளி வந்தபோது, பிக் எக்ஸின் பணியாட்களிலிருந்து பிற எந்த நீல வண்ண நிகழ்ச்சியமைப்பாளரிடமிருந்தும் பிரித்தறிய முடியாதவாறு இருந்தான்.

இரயில் நின்று, ஆள் அரவம் அதிகமற்ற புழுதிபடிந்த பிளாட்பாரத்தில் தயங்கியவாறே அபார் இறங்கிய போது, ஜில்ட்சோனி தனது

சக்தி முழுவதையும் ஒரு முகப்படுத்தி, எல்லா வகையிலும் முக்கியத்துவம் கொண்ட தகவலுடன் தனது நண்பனை அடைந்து, பயண விவரங்களைத் திரும்ப எடுத்துரைத் தான். அபார் இனிமேலும் பயோலிங்கைப் பயன்படுத்தி 'முன் செல்ல' விடுவது ஆபத் தானதாக அமையும். இப்போது அவன் முற்றிலும் சாதாரணமாக நடந்துகொள்ள வேண்டும். தன்னைச் சுற்றி இருப்பவர்களை விட்டு எந்தவகையிலும் வித்தியாசமாக நடந்து கொள்ளக் கூடாது.

குறுக்கைக் கடவினை நோக்கி மெதுவாக நகர்ந்த ஊழியர்களின் நீண்ட வரிசையில் அபார் சேர்ந்து கொண்டான். அந்த வரிசை யில் இருந்த ஒவ்வொருவரும் அபாரைப் போலவே உடையணிந்து இருந்தார்கள். தொலைவில் பிக் எக்ஸின் வீட்டுக் கட்டடத் தின் சுவர் சுற்றிலுமாக தெளிவற்றுக் காணப் பட்டது.

ஜில்ட்சோனி டிரான்ஸ்மீட்டரை நிறுத்தி னான். மணிக்கணக்காக காத்துக்கொண் டிருந்ததால் ஆல்வார் களைப்படைந்தான். நீருற்றுக்கு சென்றான். அந்தப் பாழ்கிடங்கில் சில கற்களைத் தூக்கி எறிந்தான். பிறகு திரும்பி காஃபி அருந்துவதற்காகச் சென் றான். அன்று மாலை பயன்படுத்த உள்ள சிகரெட் பெட்டியை ஒருகையிலிருந்து மற் றொரு கைக்கு மாற்றிய வண்ணமாக இருந் தான்.

அது தான் நேரம்!

ஜில்ட்சோனி மீண்டும் திரையை இயக்கினான். குறுக்கை கடவின் வழியாக மேலும் தொழிலாளர்கள் வரிசையாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் இம்முறை அவர்கள் வெளியேறிவிட்டார்கள். அவர்கள் அனைவரும் தரையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை.

அங்கு அபார் இருந்தான்! முற்றிலும் களைத்துப் போய்விட்டதை அவன் முகம் காட்டியது. கண்கள் பாதி மூடியவாறு இருந்தன. அவனது வாழ்க்கை இடர் நிலையில் இருப்பதை அவன் அறிவான். ஆனால் எஜமானனுடைய விருப்பத்திற்கு மாறாகச் செல்ல முடியாதவனாக இருந்தான்.

யாரை பிக் எக்ஸ் தெரிவு செய்திருக்கிறது என்பதைக் கேட்பதற்கு ஆல்வார் காத்திருந்தான். ஆனால் அவன் தன்னைத்தானே அடக்கிக் கொண்டான். எதிர்பாரா அதிர்ச்சி, அபார் தனது நிதானத்தை இழந்து விடச் செய்யும். அது எல்லாவற்றையுமே பாழாக்கி விடக் கூடும்.

அபார் இரயிலிலிருந்து வெளியேறி, நீண்ட நேரம் தெருக்களில் அலைந்தான். அவன் திரும்பவும் வட்டத்திற்குள் வந்தான், ஏதோ நீண்ட கனவிலிருந்து விழித்தவன் போல. ஆல்வார் பயோடிரான்ஸ்மீட்டரைத் தொடவில்லை. விஷயங்கள் இயற்கையாக நடக்கட்டும் என்று விட்டுவிட்டான்.

அபார் பாலத்தின் மையப்பகுதிவரை

நடந்துசென்று அங்கு நின்றுவிட்டான். போக்கு வரத்து நெரிசல் பேரிரைச்சலை ஏற்படுத்தியது. தங்கள் வியாபாரங்களைப் பார்க்கச் செல்பவர்கள் போல மக்கள் அவனை விரைந்து கடந்து கொண்டிருந்தார்கள். ஒரு நகரும் பாதையிலிருந்து மற்றொன்றுக்கு மாறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் இவையனைத்தையும் புறக்கணித்தவனாக நின்றான். தடுப்புச் சுவரின் கம்பி விளிம்பின் மீது சாய்ந்தவனாகக் கருமைதோய்ந்து காணப்பட்ட நீரை பாராத கண்களுடன் உற்று நோக்கினான்.

''மிக அதிகமான சுதந்திரம் நல்லதல்ல,'' என்று எண்ணிய ஆல்வார் இப்பொழுது கவலைப் பட்டான். ''அவன் கடைசியாகச் செய்ய வேண்டியது தானாகவே ஆற்றில் விழுந்து விடுவதுதான்.'' அடுத்த கட்டளையில் கவனம் செலுத்தினான். பயோடிரான்ஸ்மீட்டரை மெதுவாகத் தொட்டான். அபாரின் முகம் வலியால் கோணலாகி இருந்தது. சுற்றிலும் பாராமல், அவன் பாலத்திலிருந்து இறங்கி வந்தான். பல தெருக்கள் வழியாகச் சென்று ஏராளமான கட்டிடங்கள் நிறைந்த வட்டமான ஒரு சதுக்கத்தில் பிறகு நின்றான். அங்கு வேறு யாருமே இல்லை. ஓர் இருக்கையில் போய் விழுந்தது அவனை முழங்கால்களில் யாரோ அடித்து போல இருந்தது.

அவன் மூளை அவனது எஜமானனது கட்டளையிடும் குரலால் திரும்பவும் சுற்றி வளைக்கப்பட்டது: ''அறிக்கை செய்.''

அபார் அமைதியாகச் சொன்னான்: ''பணி

நிறைவு பெற்றுவிட்டது''.

''இப்பொழுது விவரங்களை அறிந்துகொள்ளலாம். நீ பிக் எக்ஸோடு தொடர்பு கொண்டாயா?''

''ஆமாம்.''

''பிக் எக்ஸைத் தேர்வுப் பணி நிகழ்ச்சி நடத்துவதில் நீ தவறேதும் செய்யவில்லை?''

''பிரச்சினைக்குரிய வார்த்தைக்கு வார்த்தை நீ எனக்குச் சுட்டிக்காட்டியது போல நான் திரும்பச் செய்தேன், பாஸ்.''

''அதை நிறைவேற்ற பிக் எக்ஸுக்கு எவ்வளவு காலம் பிடித்தது?''

''பத்து நிமிடங்கள்.''

''இந்த பல மில்லியன் பாலங்களைப் பார்க்க பிக் எக்ஸுக்குப் பத்து நிமிடங்கள் பிடித்திருக்கின்றன?'' நம்பாதவாறு ஜில்ட் சோனி திரும்பக் கேட்டான்.

''நான் நேரத்தைச் சரி பார்த்தேன். பிறகு சந்தேகத்தை எழுப்பலாகாது என்பதற்காக நான் உடன் அங்கிருந்து போகக் கூடாது என்று முடிவு செய்தேன்.''

''மிகவும் நல்லது,'' அங்கீகரிப்பது போல ஆல்வார் பேசினான்.

''தர்க்கமுறையான மாயவழி மிக எளிமையாக மாறி இருக்கிறது...''

''அது பற்றிப் பிறகு பேசுவோம்,'' என்று இடைமறித்தான் ஆல்வார். ''யாராவது எதை யாவது சந்தேகித்தார்களா?''

''இல்லை. மற்றொரு சிக்கல் இருந்தது.''

''என்ன?''

''பிக் எக்ஸிற்கு பணி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததும் நான் மயக்கமுற்றேன். நான் கிட்டத்தட்ட நிதானத்தை இழந்து விட்டேன். என் தலையில் ஏதோ கோளாறு செய்யத் தொடங்கியது.''

ஆல்வார் மூச்சைப் பிடித்துக்கொண்டு சொன்னான்: ''நீ பணியை முடித்து விட்டாய், அபார். நான் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். காக்கைக் கூட்டிலிருந்து நான் வந்ததும், உனது உடல்நலத்தைப் பார்த்துக்கொள்ளத் தொடங்குவேன். ஆனால் இப்பொழுது என்னிடம் பிக் எக்ஸ் உனக்கு என்ன பெயரிட்டது என்பதைச் சொல்!''

''லில்லி ஷார்லொ, வயது 22, கிழக்கத்திய பாலேயிலிருந்து...'' அபார் சலிப்பூட்டுகிற குரலில் பேசினான்.

''ஒரு பெண்?'' ஜில்ட்சோனி எல்லா வகையானதையும் எதிர்பார்த்தான், ஆனால் இது இல்லை. ''இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு காரணமுமில்லை என்று நான் நினைக்கிறேன். அவளுக்கு முன்னால் பெண் விஞ்ஞானிகள் இருந்தனர் — மேரி கியூரி... சோஃபியா கோவாலெவ்ஸ்கயா... எம்மா நேத்தர்... இப்பொழுது நாம் இந்த லில்லியை கண்டுபிடித்து, அவளைப்பற்றி அறிய வேண்டியவர்களாய் உள்ளோம்...''

''அன்டன் புல்வர், 54...'' அபார் தொடர்ந்தான்.

''என்ன? மேலும் ஒருவனா?'' ஆல்வாரே வியப்போடு கத்தினான்.

முன்னது கூறியது போக மரணச்சாயலோடு கூடிய குரலில் அபார் திரும்பவும், ''அன்டன் புல்வர்,'' என்றான். ''ஓர் இளநிலை எழுத் தன் 'லீபின் அன் சன்ஸ்' வர்த்தக நிறுவனத் தில்.''

''இளநிலை எழுத்தன்! ஆல்பர்ட் ஐன்ஸ் டீனைப் போல. ஓரளவுக்கு வயதானவனாக இருந்தான் — சார்பியல் கோட்பாட்டுக் கொள் கையை ஐன்ஸ்டீன் உருவாக்கும் போது, அவருக்குப் பாதிவயது ஆகியிருந்தது. ஆனால் அது எதையும் நிரூபிக்க வேண்டும் என்பதில் லை...''

''குரோான் ஃபிலின், மக்களுடைய கால்பந் தாட்டக் குழுவில் சென்டர் ஃபார்வேடு.''

''கால்பந்தாட்டக்காரனா?'' கிட்டத்தட்ட திகைத்துப் போனவனாய் ஆல்வார் முணுமுணுத் தான். ''எனக்கு எதுவும் புரியவில்லை... ஆனால் ஏன் மக்களுடைய?..''

மக்களைத் தவிர வேறு யார் கால்பந்து ஆட முடியும்? செவ்வாய் கோளத்தினர் களால் உறுதியாக முடியாது? இந்த நேரத்தில் திடீரென்று ஜில்ட்சோனிக்கு மலைகளில் செல விட்ட பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு காலத் திற்கு எவ்வளவு பிந்தி தான் இருக்கிறோம் என்பது விளக்கமாகப் புலப்படத் தொடங்கி யது. அவனுக்கு எத்தனையோ விஷயங்கள் விநோதமாக இருக்கின்றன...

''மக்களது உலகக் குழுவுக்குப் பொருந்த

மான நபர், வயது 19,'' அபார் தொடர்ந்தான்.

''மொத்தத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்... மேதமைக்கான வேட்பாளர்கள்?'' கடைசியில் ஆல்வார் எப்படியோ சமாளித்து சொல்ல வநதான். பொது மண்டலத் தத்துவத்தை உருவாக்க எதிர்பாராத வகையில் மிகுதியான வேட்பாளர்களைச் சேர்த்ததற்கு அபார் இசாவைக் குற்றம் சுமத்துவதுபோல, அவன் திரையை வெறுப்போடு பார்த்தான்.

''பிக் எக்ஸ் ஐந்து பேரைக் குறிப்பிட்டது.''

''அடுத்து யார்?''

''லீகோ ஸ்டேவன், ஒரு கழைக்கூத்தாடி...''

''அதுதான் நமக்குத் தேவைப்படுவது!'' என்று ஆல்வார் தனது கைகளில் முகத்தைப் புதைத்தபடி முணுமுணுத்தான். ''ஒரு கழைக் கூத்தாடி, ஓர் எழுத்தன், ஒரு பாலே நடிகை, ஒரு கால்பந்தாட்டக்காரன்... பௌதிகத்தை எடுத்துக்கொண்ட பௌதிகவாதிகள் ஏன் இருக்கக் கூடாது? ஐந்தாவது நபர் யார்?''

''ஆல்வார் ஜில்ட்சோனி...''

''நானா?''

''ஆமாம், நீ தான், பாஸ்.''

''ஆனால் நான்...'' ஆல்வார் தொடங்கினான். ஆனால் பிறகு வார்த்தைகள் கிடைக்காமல் தடைப்பட்டன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு தனக்கேயுரிய வழக்கமான குரலில் அழுத்தமாகவும், நம்பிக்கையுடனும் பேசினான்: ''சாவுத் திமிங்கிலக் குடாவுக்கு அருகில் நாளைக் காலை எனக்காகக் காத்திரு.''

''ஓ.கே.''

''நாம் கிழக்கு நோக்கிப் பறக்கிறோம். பாலே நட்சத்திரத்தை நாம் சந்திப்போம்.'' ஜில்ட்சோனி சிகரெட் பாக்கெட்டைப் பார்த்து தனக்குத் தானே சிரித்தான். உரையாடலின் போது, எங்காவது சந்தர்ப்பவசமாக அபார் ஷெல்லாவைச் சந்தித்தானா என்று கேட்க வேண்டும் என்ற உந்துதலை உணர்ந்தான். சந் தர்ப்பங்கள் மிகக் குறைவு என்பதை உணர்ந் தான். ஆனாலும் மொத்தத்தில் சாத்தியமே இல்லையென்று கூறிவிட முடியாது! இருப்பினும் அவன் கேட்கவேயில்லை. இப்பொழுது, முன் எப்பொழுதையும் விட முடிவு மிக அண்மையில் வந்தபோது, வேறு எதைப் பற்றியும் சிந்திக்க அவனுக்கு எந்த உரிமையும் இல்லை.

நல்ல காற்று வாங்க ஆல்வார் கோளத் தை விட்டு வெளியே வந்தான். வைகறை மெல்லொளியின் நிழல்கள் அவனைச் சந்திக்க வந்தன.

அவனது மலைச் சிறைவாசம் முடிந்தது. ஆனால் அது எப்படியிருக்கும் என்று அவன் கனவு கண்டதற்கு மாறாக முடிவின்றி இருந் தது. பரவாயில்லை, அவன் தனது நோக்கத் தை வேறு ஏதேனும் வழியில் நிறைவேற்றிக் கொள்வான். உலகச் சமன்பாட்டை மனித இனத்திற்கு அவன் தருவான். கணக்கற்ற தலை முறைகள் அவனுக்கு நன்றி பாராட்டும் — வெற்றி யாளர்கள் விசாரிக்கப்படுவதில்லை.

ஐந்தாவது இயல்

பாலே நடன நட்சத்திரம்

தனக்குக் கீழே இப்போது தாழ்வான குன்றுகள் நீண்டு கிடக்கக் கண்டான். அதிக உயரத்தில் ஆர்னிதாப்டர் பறந்து கொண்டிருந்தது. தனது நாட்களை எண்ணிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு கிழப் பறவை போல எந்திரம் கஷ்டப்படுவதாக ஆல்வார் உணர்ந்தான். மேலும் சற்று உயரம் சென்றதும் சிறகுகளை உள்ளுக்குள்ளாக இழுத்துக் கொண்டு ஜெட் எஞ்சினை இழுத்தான் ஆல்வார்.

அபார் இசாவ் சன்னலுக்கு எதிராக ஆழ்ந்து உறங்கினான். அவனது வெறுமையான பார்வை ஆட்டு ரோமம் போலச் சென்ற மேகங்களைக் கண்டது. அவை சில நேரங்களில் விரைந்து சென்றன. அவ்வப்பொழுது அவன் தனது தலையின் பின்பக்கத்தைப் பிடித்துக் கொள்வான். முகம் மீண்டும் வலியால் திருகிக் கொள்ளும்.

வலி குறைந்த போது அபார் தனது சட்டைப் பையிலிருந்து அறுகோணமுடைய பயோமெமரிக் கூட்டை எடுத்துத் தனது நெற்றிக்கு நேராக வைத்துத் தனது சிந்தனை

களைப் பதிவுசெய்யத் தொடங்கினான்.

''அபாருக்கு வேறு சிந்தனை என்ன இருக்கப் போகிறது?'' என்று ஜில்ட்சோனி ஏளன மனநிலையில் வியந்தான். ''அவை சாம்பல் நிறமாகவும், ஆர்னிதாப்டரைக் கடந்து செல்லும் மேகங்கள் போல எந்திரமயமானதாகவும் இருக்கும்.''

எந்திரம் தலைநகரத்தைத் தாண்டி கிழக்குப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்த போது, இந்த பயோமெமரிக்கூட்டைப் பயன்படுத்துவது எவ்வளவு சுலபமாக இருக்கிறது என்று தனது எஜமானனுக்கு அபார் விளக்கிக் காட்டினான். ''அவசரத்தில் எதையாவது குறித்துக் கொள்ள நீ விரும்பினால் தாளோ பென்சிலோ தேவைப் படாது.''

அந்தக் கூட்டைத் தன்னிடம் தந்த போது அதைத் திரும்பிப் பார்த்தபடி, ''இந்தக் கருவி எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?'' எனக் கேட்டான் ஆல்வார்.

''மூன்றாண்டுகளுக்கு முன்னால்.''

''யார் கண்டுபிடித்தது? உனக்குத் தெரியுமா?''

''சார்லஸ் மாக்கிரவுன்.''

''உண்மையாகவே?.. அவன் எப்போதுமே ஆர்வமில்லாதவன் போலக் காணப்படுவான்...''

அபார் கூட்டை நோக்கித் தலையை அசைத்து, ''இதை எடுத்துக்கொள், பாஸ். என்னிடம் வேறு சில இருக்கின்றன.''

ஜில்ட்சோனி தனக்குக் குறிப்பேடுகளே அதிகம் பிடிக்கும் என்று முணுமுணுத்தபடி அந்தக் கூட்டை அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்

டான். இதற்கிடையில் அடுத்த சில மணி நே ரங்கள் எப்படி இருக்கப் போகிறதோ என்று வியந்தபடி இருந்தான். ஒருவகையில் இந்த மாலையே உலகச் சமன்பாடு பற்றிய முழுமை யான அறிவால் வளம் நிறைந்த மேதையாகி விடுவான்?

ஆர்னிதாப்டர் எந்தவிதக் குலுக்கலும் இல்லாமல் நன்றாகப் பறந்து கொண்டிருந்தது. தவிர்க்க இயலா நிகழ்ச்சிகளின் முக்கியத் துவத்தை அது பாராட்டிச் செல்வது போலக் காணப்பட்டது. விரைவிலேயே அது தரை இறங்கிவிடும். ஆல்வார் கீழே இறங்கி நகரத் திற்குள் சென்று கூட்டத்தோடு கலந்து விடு வான்... பிறகு அரங்கு வரும், காதல் ஒளி வீசும் இசை நாடகத் தலைமைப் பாடகி வருவாள். தனது பிறவேலையாக ஆதாரத் துகள்களின் பௌதிகம் பற்றி அவளே தீவிரமாக இருப்பவள்... எந்தவகையிலும் அவள் பார்ப் பதற்கு அழகானவளாக இருக்க வேண்டும். ஏதோ காரணத்தால் இது பற்றி அவன் உறுதி யாக இருந்தான்.

தானியங்கி விமானி அறிவித்தது, ''நமது இலக்குக்கு நாம் இப்போது பத்து மைல் தொலைவில் இருக்கிறோம்.''

''நாம் கீழிறங்கிக் கொண்டிருக்கிறோம்,'' தனது நினைவுக்கூட்டை பைக்குள் வைத்தபடி அபார் கூறினான்.

''மிக முக்கியமானது இந்த லில்லிக்குப் பயப்படாமல் இருக்க வேண்டும்,'' தனது சுளுக் கிய கால்களை நீட்டியபடி ஆல்வார் நினைத்

தான். ''அவள் எதையும் சந்தேகிக்க மாட்டாள். முக்கியமானது எல்லாம் சரியான அணுகு முறைதான்.''

மலை மறைவில் ஆண்டுகளைச் செலவிட்டதால் சூழ்ச்சி நுட்பங்களை ஆல்வார் மறந்தே போய்விட்டான். நேர்மையாக இருந்தாலுங் கூட முதலில் அதிகமாக ஒருபோதும் பெற்றிருந்தது இல்லை. அதிர்ஷ்டவசமாக, தனது சொந்தக் குறைகளை அறிந்து கொள்ளும் திறனை அவன் இழந்து விட்டிருக்கவில்லை. இந்த நேரத்தில், முற்றிலும் அறிமுகமில்லாத சூழ்நிலைகளுக்கு விதி அவனை முன்னுக்குத் தள்ளிக்கொண்டு போகும் போது, தனது சொந்த வளர்ப்பு முறையில் ஏற்பட்ட குறைபாடுகள் அனைத்தையும் அவன் மிக நன்றாகவே புரிந்திருந்தான்.

ஆர்னிதாப்டரின் இறகுகள் மீண்டும் விரிந்து அது காற்றில் ஏதோ மிகப் பெரிய வௌவாலைப் போல மிதந்து சென்றது. அபார் தனது இருக்கையிலிருந்து எழுந்து, கீழ்ப்பாதி கதவை நோக்கி தாவி நடந்தான். மறைகின்ற சூரியனது கதிர்கள் எந்திர அறைக்குள் ஊடுருவி, இறங்குகின்ற கணப் பொழுதில் அவனது வலிமையான உடலையும் அகன்ற உள்ளங்கையையும் தெளிவாகக் காட்டியது.

''அவனை இருட்டில் சந்திக்க நான் விரும்பவில்லை!'' ஆல்வார் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

கட்டுப்பாட்டு கருவிகள் இவர்கள் கீழே இறங்குவதற்கு காலியான விமானதள ஓடுபா

தையைக் காட்டுவதில் சிரமப்பட்டன.

தரையில் கீழே குதித்தபோது ஜில்ட்சோனிக்கு ஏற்பட்ட மன உணர்வுகளை விவரிப்பது என்பது மிகவும் கடினமானது. பதினைந்து ஆண்டுகாலம் இராமைக்குப் பிறகு, தனது சக ஆட்களுக்கு இடையே ஆல்வார் இப்போது திரும்பிக் கொண்டிருப்பது, கெட்டழிந்து மீண்ட புதல்வனைப் போல இருந்தது. அவன் வயது முதிர்ந்து காணப்பட்டான். ஆனாலும் தன்னிடம் இன்னமும் ஏராளமான நம்பிக்கை கொண்டிருந்தான்.

அடிக்கடி இடைவெளி விட்டபடி அவன் மெதுவாக நடந்தான். புதிய கோளத்தில் விண்வெளி வீரர்கள் இறங்கும் போது ஏற்படும் உணர்வை அப்படியே ஏற்படுத்தியது.

இந்த இரண்டு பேரும், சுறுசுறுப்பான குறுக்குத் தெருவுக்கு வந்தார்கள். தனது எஜமானனின் அறிவுரைகளுக்குக் காத்துக் கொண்டு அபார் எதுவும் பேசாது இருந்தான். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவன் அறிந்திருந்தவைகளை விட அதிகமான வேகத்தோடு செல்லும் நகரும் பாதைகளை ஆல்வார் கடந்து சென்றான். ஒரு நிழலைப் போல அபார் அவனைப் பின்தொடர்ந்தான்.

தனது பார்வையில் பட்ட புதிய காட்சிகளை எல்லாம் ஆர்வத்தோடு ஆல்வார் சுற்றிலும் பார்த்தான். அவன் நினைத்திருந்ததற்கும் மாறாகக் கட்டடங்கள் எல்லாம் உயரமாக இருந்தன. இந்த இடைவெளிக் காலத்தில்

வளர்ந்தன போல அவை காணப்பட்டன. இருப்பினும் தங்களது துணிகளைத் தவிர, மக்கள் முன்னர் போலவே இருந்தார்கள். விரைந்து செல்லும் நீண்ட பள்ளத்தடங் கொண்ட பிளாஸ்டிக் இழைப்பட்டைக்கு சற்று வெளிப்புறத்தில் சரிந்தபடி கட்டடங்கள் வரி சையாக நின்ற தெருக்கள், தலைக்கு மேலாக இணைந்து காணப்பட்ட மலைச் சரிவுகளால் சுற்றிலுமாக வளையம் போல இணைக்கப்பட்ட பள்ளத்தாக்கு உள்ள காக்கைக் கூட்டிற்குத் திரும்ப வந்துவிட்ட உணர்வை ஆல்வாருக்கு ஏற் படுத்தியது.

வழியைக் கண்டுபிடிப்பதும், சரியான நக ரும் பாதையைத் தேர்ந்தெடுப்பதும் கஷ்டமாக வே இல்லை. அரங்குக்குச் செல்லும் பாதை இவர்களைக் கடந்துசெல்லும் எவராலும் காட்டக் கூடியதாக இருந்தது.

நகரும் பாதையில் ஒரு சிலரே நகராது நின்று கொண்டிருந்தார்கள். பெரும்பாலோர் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். மேலும் ஓரிரு நிமிடங்களைச் சம்பாதிக்கவே முன்னோக்கிச் சென்றார்கள். வழிப்போக்கர் கள் ஆல்வாரையும் அவனது துணைவனையும் மனங்குழம்பிய வியப்போடு உற்றுப்பார்த்தார் கள்.

உணர்ச்சிவயப்படும் போது, எப்போதும் ஏற் படுவதுபோல, ஆல்வார் கொள்ளை கொள் ளும் கடும்பசியை உணரலானான். ஆகவே அரங்குக்குச் செல்லும் முன்னர், ஓர் அருந்தகத்

திற்குச் செல்ல முடிவு செய்தான்.

ஓர் இருக்கையைப் பெற அவர்கள் கஷ்டப்பட வேண்டி இருந்தது. கடைசியாக ஒரு மூலையில் தூசி படிந்த பனை மரத்திற்கு அடியில் அவர்களுக்கு யாருமில்லாத மேசை தென்பட்டது. பருத்துக் குட்டையாகத் தோன்றிய வாடிக்கையாளன் அரைடஜன் இறைச்சித் துண்டத்திற்கு உத்தரவு இட்டது கண்டு பரிமாறுபவன் வியப்பால் தனது கண்களை அகல விரித்தான். இறைச்சி இருக்கும் என்ற எண்ணத்தில் தன் மனம் போனபடி உணவுக்கு ஆல்வார் உத்தரவு இட்டான்.

தங்களது உணவுக்காக இருவரும் அமைதியாகக் காத்திருந்தார்கள். இளம் பெண்கள் கடந்து போகின்ற போதுமட்டும் அபார் தன்னைச் சுற்றிலும் அண்மையில் பார்த்துக் கொண்டிருந்தான். இதற்கிடையில் ஜில்ட் சோனி தனது கத்தியாலும், கவைமுள்ளாலும் பொறுமையில்லாத ஒரு ராகத்தைத் தாளமிட்டான். சில நிமிடங்களில் தனக்கு முன்னால் உண்மையான இறைச்சித் துண்டு — பெட்டியில் அடைத்த உணவு இல்லை, வெறுப்புத்தரும் குளோரெல்லாத் துண்டுகள் இல்லை — இருப்பதைக் கண்டதும் அவனால் நம்பவே முடியவில்லை. வறுத்த இறைச்சியின் மணத்தை அவன் நினைத்துப் பார்க்க முயன்று காற்றை நுகர்ந்தான்.

கடைசியாகச் செயல்பட்ட சில நாட்களை அபார் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்

தான். தான் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டு தனது எஜமானனை விடியற்காலையிலேயே பார்க்கச் சென்றது எதற்காக என்று எண்ணிப்பார்த்தான். பிக் எக்ஸைப் பிரித்து வைக்கும் அரும்புதிர் வழியாகத் தான் நேற்றுச் செல்லும் போது உயிரைப் பணயம் வைக்க வேண்டி இருந்தது? தனது எஜமா னனால் பிக் எக்ஸிடம் செய்யும்படி பிறப்பித் ததை அவன் திரும்ப எண்ணிப்பார்த்தான்: ''இப்போது உயிருள்ள மனிதர்களில்... நிறை வான சிறப்பு பெற்றிருப்பவன் (அல்லது பெறப் போகிறவன்) ஒருவனை தேர்ந் தெடுக்க வேண்டும்...'' இது ஓரளவு பௌதிகம் சார்ந்தது என்பதை அவன் அறிவான். நீண்ட வார்த்தைகள் கொண்ட பரந்த பிரபஞ்சம் பற்றிய படம் அப்போது அர்த்த மற்றதாக அவனுக்குத் தோன்றியது. அவற் றை உச்சரிப்பது சிரமானதாக இருந்தது, அதனைக் காரி உமிழ்வது போல இருந்தது. பிறகு இவன் தலையின் பின்புறம் வலி இருந்தது. அது இவனைத் தொல்லைப் படுத்தியது. பிக் எக்ஸிடம் செய்ய வேண்டிய பிரச்சினையை இவனது வாய் வெறுமனே கிசுகிசுத்த போது அது இவனைத் தாக்கவும் செய்தது. ஏதோ பழுக்கக் காய்ச்சிய ஊசியை இவனது தலையின் பின்புறம் பார்க்கமுடியாத கை ஒன்று குத்துவது போலிருந்தது. தான் எந்த நிமிடமும் சாகக் கூடும் என்பது அபாருக்குத் தெரிந்தாலும், இது போன்ற தாக்குதல்களைத் தாங்கிக் கொள்வதை விட

சாவே மிகவும் இலகுவானது...

இவனது சிந்தனைத் தொடரை இடைமறிப்பது போல ஜில்ட்சோனி கேட்டான்: "உனக்கு வலிக்கிறதா?"

சற்று அசைத்தாலும் வலி திரும்பவும் வந்துவிடுமோ என அஞ்சி எச்சரிக்கையோடு அபார் தனது தலையை அசைத்தான்.

"கவலைப்பட வேண்டாம், அபார்... நமக்குத் தேவையான பணம் சீக்கிரமே கிடைத்துவிடும்."

அபார் தனது காதுகளைக் கூராக்கிக் கொண்டு கேட்டான்: "அதிகமாகவா?"

"அதில் ஒரு மில்லியனை உனக்காக ஒதுக்கித்தருகிறேன்!"

"யார் அதை நமக்குக் கொடுக்கப் போகிறார்கள்?"

"நமது சேவைகளுக்கு நன்றியாக மனித இனம்," என்று நன்கு சிரித்தபடி ஆல்வார் கூறினான்.

"ஒரு மில்லியன்! பிறகு நான் சரியாகி விடுவேன்!"

"எல்லாவற்றையும் நன்றாகச் செய்து கொள்வோம்," என்று உறுதியளித்தான் ஜில்ட் சோனி.

இவர்கள் கேட்ட பொருட்களோடு பரிமாறுபவன் வந்து நின்றான். எந்தவிதமான ஆர்வமும் இல்லாதது போல அபார் இறைச்சித் துண்டுகளைச் சாப்பிட்டான். பரிமாறப்பட்ட இறைச்சி ஒருவித விநோத சுவையை ஏற்படுத்துவதாக ஆல்வார் உணர்ந்தான்.

தலைமை வெயிட்டரை அழைத்துப் புகார் செய்தான்.

''என்ன எதிர்பார்க்கிறீர்கள்? இது செயற்கைச் சேர்மான இறைச்சி,'' என்று அடக்கத்தோடு பதிலளித்தான்.

''ஆனால் நான் செயற்கைச் சேர்மான இறைச்சிக்கு சொல்லவில்லையே!''

''நாங்கள் வேறு எந்தவகையும் பரிமாறுவது இல்லை.''

ஆவி பறந்து கொண்டிருந்த ஓர் இறைச்சித் துண்டை ஆல்வார் உற்றுப்பார்த்தான். உண்மையான இறைச்சித் துண்டிற்கும் அதற்கும் எந்த வேறுபாடும் தெரியவில்லை.

''உண்மையான உணவை நான் எங்கே பெறலாம்?''

தலைமை வெயிட்டர் இவனை உற்றுப் பார்த்து ஆர்வத்தோடு கேட்டான்: ''நீங்கள் கட்டாயம் வெளிநாட்டவராகத்தான் இருக்க வேண்டும். நான் கூறுவது சரியா?''

''எப்படி நீங்கள் ஊகித்தீர்கள்?''

''இது மிகவும் தெளிவானது. இங்கு வருவது இதுதான் உங்களுக்கு முதல் முறையா?''

''சொல்லப் போனால், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் இங்கு இருந்தேன்,'' என்று ஜில்ட்சோனி பதிலளித்தான்.

''பதினைந்து ஆண்டுகள் — ஒரு பேரூழிக் காலம்,'' என்று புன்னகையுடன் அதை விமர்சித்தான் தலைமை வெயிட்டர். ''முன் காலத்தில் நாங்கள் உண்மையான உணவைத்

தான் பரிமாறினோம். இப்போது நிலைமை மாறிவிட்டது...''

''ஓ... அப்படியா.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, அபார் முகத்தில் பளபளப்புத் தெரிய, இறைச்சித் துண்டுகள் விழுங்கியபடி அமர்ந்திருந்தான்.

''இந்த நகரத்தில் ஒரே ஓர் அருந்தகத்தில் தான் உண்மையான இறைச்சியைப் பரி மாறுகிறார்கள்,'' என்று தலைமை வெயிட்டர் தொடர்ந்து பேசினான். ''ஆனால் அது போன்ற ஒரு சாப்பாடு அதிக விலை பிடிக் கும்.''

மரியாதையான முறையில் தனது மன்னிப் பைக்கோரிய அவன் அங்கிருந்து சென்றான்.

ஜில்ட்சோனி ஒருவகையில் சாப்பாட்டை முடித்திருந்த போது, பக்கத்து மேசையில் இருந்த இளைஞர்கள் இவனது கவனத்தைக் கவர்ந்தார்கள். அவர்கள் மதுவை சப்பிக் கொண்டு மட்டுமே இருந்தார்கள். ஆனால் அவர்கள் கட்டாயமாக வெறி மயக்கத்தில் இருந்திருக்க வேண்டும். எனினும் அவர்கள் மிக அதிகமாகவே புகைத்தார்கள். அதிலும் ஒளிவு மறைவாகவே செய்தார்கள்: ஓர் இழு வை இழுத்துக்கொண்டு தங்களது சிகரெட்டு களை உடனடியாக மறைத்துக்கொள்வார் கள்.

மிக உன்னிப்பாக கவனித்தபோது, அந்த சிகரெட்டுகளிலிருந்து மிகக் குறைவான புகையே வெளிவந்ததை ஜில்ட்சோனி கவனித் தான்.

''அங்கு என்னதான் நடைபெறுகிறது?'' அவன் கேட்டான்.

''எங்கே?'' அவன் எதைப் பற்றிக் கேட்கிறான் என்பதைப் புரிந்துகொள்ளாமலேயே அபார் கேட்டான்.

''அங்கே பார்,'' என்று அந்த இளைஞர்கள் இருந்த மேசைப் பக்கம் தனது கண்களைத் திருப்பினான் ஆல்வார்.

''அவர்கள் கஞ்சாவைப் பயன்படுத்துகிறார்கள்.''

''அது இப்போதெல்லாம் அனுமதிக்கப்படுகிறதா?''

''உண்மையில் இல்லை. ஆனால் அருந்தக உரிமையாளர்க்கு அது ஒரு நல்ல வியாபாரம். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் காணாதவாறு கண்களை மூடிக்கொள்வார்,'' என்று விளக்கினான் அபார்.

''போலீஸ் இருக்கிறது, தானே?''

''பாம்பின் கால் பாம்பறியும்,'' என்றான் அபார் கொட்டாவி விட்டபடி.

திடீரென்று அவர்களுக்குக் கீழே இருந்து வெறியூட்டப்பட்ட ஆரவார இசைக் கூத்து அதிரொலிக்கத் தொடங்கியது. அதிர்ச்சியுற்ற ஆல்வார், அங்கே என்ன சனியன் நடக்கிறது என்று கேட்டான். அபார் விளக்கினான்:

''இதுதான் சமீபத்திய தந்திரம். நமக்குக் கீழே இருந்து இசை வருகின்ற போது நடனமாடுவது மிகவும் சுலபமானது என்று அவர்கள் கூறுகிறார்கள்.''

சாப்பாட்டிற்கான தொகையை ஆல்வார்

கொடுத்தான். பின்னர் அவர்கள் செயற்கை விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெரு வழி யாகச் சென்றார்கள்.

''பாஸ், இப்போது நாம் எங்கே போகி றோம்?'' எனக் கேட்டான் அபார்.

''நாம் நடந்து செல்லலாம்.''

''நமக்கு நேரம் இல்லையே.''

''நமக்கு நேரம் இல்லை என்று எதற்குச் சொல்கிறாய்?'' ஆல்வார் கேட்டான்.

''நாம் விரைந்து செல்ல வேண்டாமா.''

''எங்கே போவது, நான் கேட்கலாமா?''

''நீ பேசிய பணத்தைப் பெற்றுக்கொள்ள. எனக்கு அது தேவை என்று உனக்குத் தெரி யுமே.''

ஆல்வார் சிரித்தான். ''பணம் பெறுவது என் பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. நாம் சற்று சுற்றி வருவோம். எப்படி விஷயங்களைச் சமாளிப்பது என்று பேசி வருவோம்...''

ஜில்ட்சோனி பின்னர் என்ன கூறினான் என்பதை கவனியாமலேயே, அபார் உள்ளங்கை களை இறுகப் பற்றிய வண்ணம், ஆபத்தான முறையில் தனது எஜமானனை நோக்கி வந் தான். இதற்கிடையே ஜில்ட்சோனி வெறுமனே தனது சட்டைப்பைக்குள் கையை விட்டான். உடனே தனது தலையின் பின்புறத்தைப் பற்றிக் கொண்டு வலியால் துடித்து அபார் நின்று போனான்.

''மீண்டும், இல்லையா?'' என்று பரிவோடு ஆல்வார் விசாரித்தான். பதில் கூறக் கூடிய வகையில் அபார் எதையோ முணுமுணுத்

தான்.

கடைசியாக அவர்கள் எந்தச் சிரமமும் இன்றி அரங்கத்தைக் கண்டுபிடித்தார்கள். புதிய கட்டிடங்களால் சூழப்பட்டிருந்த அந்த மிகப் பழைய கட்டிடம் ஓரளவுக்குத் தன்னம்பிக்கையான தோற்றத்தைத்தர முயன்றது. அதன் நுழைவாயிலில் இருந்த வெண்கலத்தால் ஆன சிம்மங்கள் வருத்தம் தோய்ந்தன போலக் காணப்பட்டன.

நிகழ்ச்சி ஆரம்பமாக இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருந்தாலும், நுழைவுச் சீட்டுக்களை வாங்குவது சிரமமாக இருந்தாலும் அவர்கள் அதிகாரபூர்வமான விலையைவிட மூன்று மடங்கு அதிகம் கொடுத்து வாங்கினார்கள். இந்தப் பதினைந்து ஆண்டுகளில் இது நின்று நிலைத்திருந்தாலும், தனது கடைசி காலத்தில்தான் அது நிற்கிறது என எண்ணிய ஆல்வாருக்கு அது வியப்பாக இருந்தது. இருப்பினும் ஆர்வலர்களால் எல்லாச் சீட்டுக்களுமே வாங்கப்பட்டு விட்டன.

எனினும், அபார் இசாவ் ஒரு முறை கூட இதற்கு முன்னர் அரங்குக்கு வந்ததில்லை. பொதுவாகவே கலை அம்சத்தை அவன் ஐயுறவாகவே பார்த்தான், உண்மையில் அது பயனற்ற, தீங்குதரக்கூடிய பொழுது போக்கு என்று எண்ணினான். ஆனால் பாலே நடனம் மட்டும் அவனது கருத்திற்கு மாறுபட்டு நல்லதாகத் தோன்றியது. அதையும் அவன் தொலைக்காட்சியில் மட்டுமே

பார்த்திருக்கிறான்.

இப்போது அவன் நிகழ்ச்சி தொடங்கட்டும் என அமைதியாக உட்கார்ந்திருந்தான். திரை மேலே உயர்த்தப்பட்டதும் எந்தவிதமான பர பரப்பையும் அவன் அடையவில்லை. ஜில்ட்சோ னியைப் பொருத்தமட்டில், தனக்கு முன்னால் நடந்த கதைக்கு மிகக் குறைந்த முக்கியத்து வத்தையே அவன் கொடுத்தான். ஆடல் நங் கையர் மீது சற்று கூடுதலான ஆர்வம் காட்டி னான். அதில் லில்லி ஷார்லொ யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? காட்சிகள் மாறின. கோபங்கொண்ட விண் ஓநாய்கள் ஒருவகை நடனமாடின. வேடுவர்களால் காயம்பட்ட மான் ஒன்று காயம் அடைந்து, உண்மை யாகக் கண்ணீரைச் சிந்தியபடி பரிதாபமாக இறந்தது.

பிறகு திடீரென்று... ஓர் அதிசயத்தால் அவர்கள் சிக்கிப்போனார்கள். மேடைமீது உண்மையான அரசி தோன்றினாள். தனது ஏவலர்களை நோக்கி எந்த முயற்சியும் இன்றி அவள் மிதந்து வந்தாள். அவர்களது கண்கள் எல்லாம் அவள் மீதே பதிந்து இருந்தன. அவ ளது ஒவ்வொரு அசைவுமே ஒரு கவிதையாக இருந்தன. இசை தொடர்ந்தது, ஆனால் இசைக் கருவிகள் அதற்கு உயிரூட்டாது மகிழ்வுதரும் பாலே நடனமே சிறப்பாக இருந் தது.

தனது சொந்த உளப்பதிவை உறுதி செய்து கொள்ள ஜில்ட்சோனி தன்னைச் சுற்றி இருந்

தவர்களைப் பார்த்தான். இவனுக்குப் பக்கத்தில் மாலைநேர உடையோடு அமர்ந்திருந்த ஒரு முதியவன், சிறு தொலைக்காட்சிக் கண்ணாடி மூலமாக அவளைப் பார்த்தபடி வேறு உலகத்திற்குப் போய்க் கொண்டிருந்தான்.

அபார் கூட இதைக் கவனித்துவிட்டான். அவனது தோற்றத்தில் அறிவு கூர்மை மீண்டும் பளிச்சிட்டது.

தனது உதவியாளனை சுய உணர்வுக்குக் கொண்டு வர அல்லது இன்னும் தெளிவாக வலியை உண்டாக்கி அறிய முடியாதபடி செய்ய தனது பயோடிரான்ஸ்மீட்டரைப் பயன்படுத்த வேண்டும் என்ற வேட்கை ஜில்ட்சோனிக்கு அதிகமாகவே ஏற்பட்டது. மனிதாபிமானம் சிறிதும் இல்லாது ஆனால், தந்திரக் காட்சியை அபார் சீர்குலைத்து விடக் கூடும் என்ற பயம் காரணமாகத்தான் அவன் அதைச் செய்யவில்லை. சமீப காலங்களில், குறிப்பாக அவனது தலையின் பின்பக்க வலியால் அவதிப்பட்டான்.

மிகவும் மெல்லிய கிசுகிசுப்பில் தனக்கு அடுத்து இருந்த கிழவனின் இளஞ்சிவப்பு நிற காதில், ''யார் அது?'' என்று ஜில்ட்சோனி கேட்டான். அவனோ கோபமடைந்தான். ஆனாலும் நிகழ்ச்சி நிரலைத் தனது தொடையில் வைத்துகுத்திக் காட்டுவது போல அந்த வரியைக் காண்பித்தான்: ''எர்தானிய அரசி — லில்லி ஷார்லொ.'' இந்த வார்த்தை

களைப் பார்த்ததும் ஜில்ட்சோனி பரவசமடைந்தான்.

எர்தானிய அரசி மேடையில் தோன்றியுடனேயே, வேறு நாடகபாத்திரங்களோ ரசிகர்களுக்காக மறைந்து போய் விடுவார்கள். ஜில்ட்சோனி தன்னையே ஆற்றல் இழந்து பணிந்தது போல, துயிலூட்டும் தன்வயமிழந்த நிலைக்கு ஆளாகி, தனது கண்களை லில்லி மீது மட்டுமே பதித்தபடி இருந்தான். ஒருவகையில், இது மிகவும் வியப்பாகவே இருந்தது — பௌதிகத்தின் புதிய எல்லைகளுக்கு இந்த அரசிதான் தலைவியாக விளங்குவாளா என்று அவன் தன்னையே கேட்டுக் கொண்டான். ஒரு பார்வையிலேயே எல்லாவற்றையும் தன்னைச் சுற்றி நடப்பவைகளை புரிந்துகொள்ளும் ஆற்றல் அவளுக்கு இருந்தது. அவ்வாறு இருக்குமேயானால் மைக்ரோ உலகத்தின் ரகசியங்கள் அவளுக்கு நிச்சயமாக நன்கு திறந்த புத்தகமாகவே இருக்கும்...

ஒருவேளை இந்த தெய்வீகக் கொடையை இன்னமும் அவள் புரிந்துகொள்ளாமல் இருக்கக் கூடும். ஆனால் என்ன விஷயம்? இது அவற்றை எளிதாக்கி விடும். அவளது கண்டுபிடிப்புகளை ஆல்வாரிடம் தெரிவிப்பது கூட அவளுக்கு இலகுவானதாக இருக்கும். ஆனால் அவள் பிடிவாதக்காரியாக இருந்தால்.. அந்த சிந்தனை வந்த போது ஆல்வார் பைக்குள் இருந்த ஸெவோன் கலந்த சிகரெட்டு பாக்கெட்டை இறுகப் பற்றினான்.

பாலே நடனம் முடிந்ததும், ஜில்ட்சோனி அபாரை அரங்க வாசலிலேயே விட்டுவிட்டான். ஏனெனில் பிக் எக்ஸின் மேஜைக்கான வேட் பாளர்களில் முதலாவது நபருடன் அவனது விவாதம் தனிப்பட்டதாகவே இருக்கட்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்தான். அரங்கத்தின் பக்கப் பகுதிகள் தூசி படிந்து இருந்தன. ஜில்ட்சோனி குறுகலான தாழ்வாரத் தை நோக்கி நடந்தபடி, பல்வேறு அறைகளில் மாட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளை கவனித்தான்.

லில்லி ஷார்லொவின் தோற்றமானது ஆட்டக்காரர்கள் களிப்பூட்டிய பார்வையாளர் களை விட வேறுவிதமானது என்பது சீக்கிரமே தெரிந்துவிட்டது. அந்த இசை நாடகத் தலைமைப் பாடகி எங்கே இருக் கிறாள் என்று விசாரித்தபோது, வேறு இரண்டு நடனக்காரிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு ஒருமாதிரியாக இளித்து விட்டுப்போனார்கள். சீருடையில் இருந்த மனிதன் ஆல்வாருக்குப் பாதையைக் காட்டி விட்டு, அவனை நடுக்கத்தோடு பார்த்தான். வேறு ஏதோ விமர்சிக்கப் போவது போலக் காணப்பட்டு பிறகு வெறுமனே தனது தோள் களை மட்டும் குலுக்கிக்கொண்டு நடந்து போ னான்.

கடைசியாக போற்றத்தக்க அந்தக் கதவை அடைந்த போது, ஆல்வார் நின்று ஒரு நிமி டம் பொறுத்திருந்து விட்டு, தனது மூச்சை திரும்ப வரவழைத்துக் கொண்டு, பிறகு

மெல்ல ஒரு தட்டுத் தட்டினான். யாரும் பதிலளிக்கவில்லை. சற்று உரக்க அடித்த இரண்டாவது தட்டுக்கும் எந்தப் பிரதிபலிப்பும் இல்லை.

விரைந்து ஓடிக்கொண்டிருந்த ஒரு நடன மாது, ''சும்மா உள்ளே போங்கள்,'' என ஆலோசனை கூறினாள்.

ஜில்ட்சோனி கதவை ஒரு தள்ளுத் தள்ளி விட்டு உள்ளே நடந்தான்.

தனது ஒப்பனையைக் கலைத்தபடி, அரசி கண்ணாடிப் பக்கம் பாதி பார்த்தபடி அமர்ந் திருந்தாள்.

''மாலை வணக்கம்,'' என்றான் ஆல்வார்.

லில்லி பதிலேதும் கொடுக்கவில்லை. தனது கண்ணாடியில் அந்தப் பார்வையாளனைப் பார்த்துவிட்டு வெறுமனே சிரித்தாள்.

''உள்ளே நுழைந்ததற்கு என்னை மன்னிப் பீர்கள் என்று நம்புகிறேன்...'' என்றபடி ஆல்வார் தனக்குப் பின்னால் கதவை சாத் தியபடி, சில எட்டுகள் முன்னுக்கு வைத் தான்.

இப்போதும் லில்லி எதுவும் பேசவில்லை.

''உங்களது அநேக விசிறிகளின் சார்பாக இந்த உரிமையை நான் எடுத்துக் கொள் கிறேன்...''

எதுவுமே சொல்லாமல் அரசி தொடர்ந்து சிரித்தாள். ஆனால் அவளது சிரிப்பில் ஒரு வித ஏளனம் தெரிவது போலக் காணப்பட் டது. ''ஒரு கெட்ட கனவு போல இருக் கிறதே. நான் என்ன சொல்கிறேன் என்பதை

அவளால் புரிந்துகொள்ள முடியவில்லையோ?'' திடீர் கலவரத்துடன் ஜில்ட்சோனி வியந் தான்.

மேடையில் காட்டப்பட்டது போல அவ் வளவு அருமையாக அபிநயம் செய்து, லில்லி தனது காதுகளைச் சுட்டிக்காட்டினாள்.

''அவளால் கேட்க முடியாது, அவள் செவிடு,'' என்று உணர்ந்தான் ஆல்வார். ''ஆனால் அவள் ஆடும் போது எங்ஙனம் இசையின் ஓசையைப் புரிந்துகொள்ள முடி கிறது?''

பாலே நடிகையின் முன்னர் ஜில்ட்சோனி நடந்துபோய் குனிந்து அவளுக்கு மரியாதை செலுத்தினான். காலியாக இருந்த ஒரு நாற் காலியை லில்லி சுட்டிக்காட்டினாள். அவளது ஒவ்வொரு அசைவும் எல்லையில்லாது இயற் கையாகவே தோன்றியது. ஒருவேளை லில்லி ஷார்லொவின் வெற்றி ரகசியமோ அதுதா னோ?

''ஆனால், அவள் ஓர் உண்மையான அரசி, சந்தேகமில்லை...'' ஜில்ட்சோனி நினைத்தான். ''ஒரு செவிட்டு அரசி, அதை யும் அறியாது இப்போது அவளது குடிமக்களில் ஒருவர்க்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தரப் போகிறாள்.''

ஆல்வார் தனது குறிப்பேட்டையும் ஒரு பென்சிலையும் எடுத்து தெளிவான பெரிய எழுத்துக்களில் முதல் பக்கத்தில் எழுதினான்: ''உங்களது நடிப்பால் நான் கவரப்பட்ட வன்.''

லில்லி மெல்லிய குரலில் எதிரொலித்தாள்: ''நடிப்பா?''

''உங்களது நடனம் வியக்கத்தக்கது,'' இரண்டாவது தகவலை ஆல்வார் எழுதினான்.

''நீங்கள் உண்மையாகவே அதை விரும்பு கிறீர்களா?''

ஜில்ட்சோனி உற்சாகத்தோடு தலையசைத் தான். கடைசியாக எப்படியோ அவர்கள் தொடர்பு கொள்ள ஒரு வழி கிடைத்ததே என்று மகிழ்ந்தான்.

''நான் ஆடும் முறையை எல்லாருமே விரும்புகிறார்கள். ஒருவரைத் தவிர,'' லில்லி மெதுவாகப் பேசினாள்.

''ஆனால் அது யாராக இருக்கக் கூடும்?''

''நான் தான்.''

''உங்களுக்கா?''

''சில வேளைகளில் என்னால் நடனமாட முடியாது என்று நான் உணர்கிறேன். அல் லது குறைந்தது என்னால் மிகச் சிறப்பாக ஆட முடியும் என்று நினைக்கிறேன்... அந்த உணர்வுதான் எனக்குத் துன்பத்தைத் தரு கிறது...''

தனக்கு முன்னால் இருந்த ரோஜாப் பூங்கொத்தைத் தொட்டுவிட்டு லில்லி, தனது உள்ளார்ந்த எண்ணங்களால் சிரித்தாள்.

''நான் விரும்பியது போல உண்மையிலே யே நன்றாக ஆட முடிந்த போது... அது உண்மையான பேரின்பம்,'' அவள் தொடர்ந் தாள்.

ஜில்ட்சோனி தனது கைகளில் குறிப்பேட்

டைத் திருப்பினான். ஒரு நொடிப் பொழுது சிந்தித்த பிறகு அடுத்த பக்கத்தில் அவன் எழுதினான்: ''நடனமே வாழ்வில் எல்லாம் ஆகிவிடாது.''

''நடனத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமே இல்லை.''

ஜில்ட்சோனி தனது பையிலிருந்து சிகரெட் பெட்டியை எடுக்க நினைத்தான். ஆனால் திரும்ப விட்டுவிட்டான். லில்லி உண்மையைத் தான் சொல்லிக் கொண்டிருப்பதாக அவன் உணர்ந்தான்.

''நடனமே எனது முழு வாழ்க்கை...''

அந்தப் பெண்ணின் குரல் வழக்கமாக மென்மையாக இருக்கும். ஆனால் இப்போது நன்கு கேட்க முடியாதவாறு முணுமுணுப்பது போல குறைந்து விட்டது. அப்பெண் தூங்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

லில்லி ஷார்லொ ஒருவகையில் ஒரு மேதையாகத் தோன்றலாம். அவளது சொந்தத் துறையில் நடனமாது என்ற வகையில் யாரோடும் இவளை ஒப்பிட முடியாதபடி உயர்ந்தே காணப்பட்டாள் — இது ஆல்வார்க்கு மிகத் தெளிவாகவே தெரிந்தது. இருபத்தி இரண்டு வயதுடைய கிழக்கத்திய பாலேயின் தலைமைப் பாடகியான லில்லி ஷார்லொ எதிர்த் துகள்கள் மற்றும் குவார்க்குகளுக்கு மிகவும் அப்பாற்பட்டு இருந்தாள் என்று அவனுக்கு அப்படியே தெளிவாக தெரிந்தது.

நிச்சயமாக பிக் எக்ஸ் விஷயங்களைப்

போட்டுக் குழப்பி இருக்க மாட்டது! தவறான நபர்களையா தேர்ந்தெடுத்திருக்கும்? நிகழ்ச்சித் தகவு விதிப்படி மில்லியனில் ஒன்று நிகழ முடியும் தவறு நிச்சயமாக ஏற்பட்டிருக்க முடியுமா? ஒருவேளை எதிர்பாராத மின் உந்தல் காரணமாக, சரியான கூட்டிற்குப் பதிலாக அருகில் இருந்த தவறான ஒன்றை பிக் எக்ஸ் பொறுக்கி எடுக்கும்படி ஆகி இருக்கலாம்.

அதிர்ஷ்டவசமாகப் பிக் எக்ஸ் தனது தேர்வை லில்லி ஷார்லொ மற்றும் ஆல்வார் ஜில்ட்சோனியோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. இல்லையெனில் அந்தப் பட்டியல் ஏற்கெனவே நிறைவு பெற்றுப் போய் இருக்கும்.

தலைமைப் பாடகியின் ஒப்பனை அறையை விட்டு வெளியே வந்ததும், ஆல்வார் அந்தக் குறிப்பேட்டைத் தூக்கி எறிந்துவிட்டு, தனது முகவரி புத்தகத்தை வெளியே எடுத்தான். பிறகு அவன் லில்லி ஷார்லொவின் பெயரை தெளிவாக பெருக்கல் அடையாளமிட்டான்.

அவன் ஏற்கெனவே தனது பெயரையும் அவ்வாறே அடித்துவிட்டான். இதற்கு காக்கைக் கூட்டில் பதினைந்து ஆண்டுகள் அவனது அநுபவத்தின் தன்மையை மனத்தில் வைத்து அவ்வாறு செய்தான்.

தாழ்வாரத்தில் ஒரு தடித்த மனிதன், கீழ் உதடு கீழே தொங்கியபடி, மனம் உடைந்து போன ஆல்வாரை எட்டிப் பிடித்தான்.

''நீங்கள் பத்திரிகை அலுவலகத்திலிருந்து

தானே வருகிறீர்கள்?'' என்று தொடங்கினான்.

ஆல்வார் தனது நடையை வேகப்படுத்தினான். ஆனால் அந்த மனிதன் விடுவதாக இல்லை. அவனுக்குப் பக்கத்தில் உரசிக் கொண்டே சென்ற அந்த பருத்த மனிதன் தொடர்ந்து பேசினான்: ''முன்னதாகவே எங்களுக்கு அதிகமான பார்வையாளர்கள் வருவதில்லை. ஆனால் அண்மைக் காலத்தில் வானொலி, தொலைக்காட்சி இங்கிருந்தெல்லாம் ஒரே தொடர்ச்சியாக வருகிறார்கள்... இன்று நீங்கள் ஒருவர் தான் வந்திருக்கிறீர்கள். ஆனால் மற்ற நாட்களில் தொடர்ச்சியான முற்றுகை இருக்கும்.''

''உண்மையாகவா!''

''லில்லி ஷார்லொவினுடைய புகழ் எல்லாப் பக்கமும் பரவிக்கொண்டிருக்கிறது, ஓர் ஏரியில் தோன்றும் சிற்றலைகள் போல.''

''நான் அவளுக்காக மகிழ்ச்சி அடைகிறேன்,'' என்றான் ஆல்வார் வெறுப்புடன்.

''நீங்கள் நிகழ்ச்சியின் போது இருந்தீர்களா?''

''ஆமாம்.''

''என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள்: அது அற்புதமாக இல்லையா?''

''அது மோசமில்லை என்று நான் கூறுவேன்.''

அந்த பருத்த மனிதனின் உதடு ஏமாற்றத்தால் சுருங்கியது. அவன் மிக அருமையான பதிலைத்தான் எதிர்பார்த்தான்.

''லில்லி பற்றி பத்திரிகைகளில் என்ன எழுதுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''நான் பத்திரிகைகள் படிப்பதில்லை.''

''எவ்வளவு காலத்திற்கு முன்னால் நிறுத்தினீர்கள்?''

''பதினைந்து ஆண்டுகள்.''

''அதனால் ஒன்றும் மோசமில்லை! அப்படியிருந்தால் உங்களுக்கு சில விமர்சனங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்,'' என்று கூறியபடி அவன் தனது சட்டைப்பைக்குள் கையை விட்டு, கத்தரித்த பத்திரிகைத் தாள்களைக் கட்டுப் போல வெளியே எடுத்தான். இப்போது எல்லா வெட்டப்பட்ட விமர்சனங்களும் கையில் இருந்தன. பிறகு பார்வையாளன் பக்கமாக உற்சாகத்தோடு திரும்பி ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டான்.

இந்த உரையாடல் இப்போது மிகவும் ஆர்வமுடைய ஒன்றாக ஆல்வார்க்கு மாறியது.

''எங்கே அது... ஒரு நிமிடம்... ஓ... ஆமாம். இங்கே இருக்கிறது!'' தேடிய அந்த பத்திரிகைத்தாளை அவன் எடுத்து ஆர்வத்தோடு படிக்கத் தொடங்கினான்: ''லில்லி ஷார்லொவினுடைய நடனம் உண்மையிலேயே மந்திரம் போலத் தோன்றுகிறது. அது விண்ணார்ந்த ஆசிர்வாதத்தை எடுத்துக் கூறுவதாகத் தோன்றுகிறது. மனிதனை படைத்தவனோடு அது சமரசப்படுத்தக் கூடியவாறு இருந்தது.''

''அழுத்தமான விமர்சனம்,'' என்று விமர்

சித்த ஆல்வார் முகத்தைக் கோணிக்கொண்டு சிரித்தான். ''எனினும் மாநிலப் பத்திரிகைகள் எப்பொழுதுமே அளவுக்கு மீறி விமர்சித்தன. மார்க் டுவைன் தனது காலத்தில் கண்டறிந்தது போல.''

''அது சரியான கணிப்புத்தான்,'' என்று ஏற்றுக்கொண்டான் பருத்த மனிதன். ஒரு பழம் இயக்குநரின் அநுபவமிக்க பார்வையை நம்புவீர்கள்.''

பிறகு அவன் ஆல்வாரின் சட்டை முன் புறப் பகுதியைப் பிடித்தபடி சொன்னான்: ''லில்லி ஷார்லொவிற்கு நடனம் மட்டுமே செய்யத் தெரியும். இருப்பினும் இந்த பூமியில் அவளைவிட நன்றாக ஆடக்கூடிய ஆளே கிடையாது,'' ஒரு வெற்றிப் பெருமிதத்தில் பேசுவது போலக் கூறினான். ''அதை உங்கள் பத்திரிகையில் எழுத முடியும்.''

''அப்படியே செய்கிறேன்,'' உறுதி கூறி னான் ஜில்ட்சோனி.

அழுது வடியும் சிம்மங்களுக்கு அருகில் ஓர் இளம் நடனக்காரியுடன் ஆர்வமாய் உரை யாடிக் கொண்டிருந்தான் அபார்.

வேகமாக நடந்தபடி அவன் இருந்த திசை யை நோக்கி, ''நாம் போகலாம்!'' என்று ஜில்ட்சோனி முணுமுணுத்தான்.

* * *

அவர்களுக்குக் கீழாக முதலில் பூமி தள் ளாடுவது போலக் காணப்பட்டது. பிறகு அது

சரியாகி விட்டது. ஆர்னிதாப்டர் தேவையான உயரத்தில் பறக்கத் தொடங்கி புதிய பாதையில் செல்லலாயிற்று.

கட்டுப்பாட்டு மையத்தை விட்டு வந்த ஜில்ட்சோனி, அழ்ந்த உறக்கத்தில் கிடந்த அபாரை உற்று நோக்கினான். பிறகு தனது முகவரி புத்தகத்தை பெருமூச்சு விட்டபடி எடுத்தான். அதைத் திறந்து, பிக் எக்ஸால் தரப்பட்ட பட்டியலில் உள்ள இரண்டாவது பெயருக்குக் கீழாகத் தடித்த கோடு ஒன்றைப் போட்டான்.

அது அன்டன் புல்வர், 'லீபின் அன் சன்ஸ்' நிறுவனத்தின் இளநிலை எழுத்தன். இந்த முறை தான் வெற்றி பெற முடியும் என ஆல்வார் ஏன் நினைத்தான்? ஒரே வரிசையில் இரண்டு ஏமாற்றங்களை பிக் எக்ஸ் தந்திருந்தால் என்னாவது?

ஆறாவது இயல்

அன்டன் புல்வர்

ஆர்னிதாப்டர் எந்தவிதத் தீங்குமின்றி தரையிறங்கியது. 'தரையிறங்கியது' என்ற சொல் இவ்விஷயத்தில் அவ்வளவு பொருந்தக் கூடியதல்ல. ஏனெனில் நகரத்தின் மையப் பகுதியில் உள்ள ஒரு கட்டிடத்தின் ஒரே மட்டமான கூரையில் வந்து இறங்கியது. பிக் எக்ஸ் தந்த புள்ளிவிவரங்களின்படி இங்குதான் இரண்டாவது மேதைக்கான வேட்பாளன் கண்டுபிடிக்கப்படுகிறான்.

விமானப் பயணத்தின் போது, கிழக்கத்திய அரங்கையும் அதனது அழகிய பெண்களையும் விட்டு விட்டு அவ்வளவு விரைவாக ஏன் கிளம்பினோம், லில்லி ஷார்லொவைப் பார்க்கச் சென்ற அவனது பயணம் எப்படி முடிந்தது, அவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது வாக்குறுதி தந்த பணம் எங்கே இருக்கிறது என்பனவற்றை அபார் இசாவ், ஆல்வாரிடம் கேட்க முயன்றான்.

''விட்டுத் தள்ளு,'' ஜில்ட்சோனி முணுமுணுத்தான். மேலும் கேள்விகள் கேட்பதிலிருந்து அபார் பணிவோடு நிறுத்திக்கொண்டான்.

நகரத்திற்கு மேலே வானப்பகுதி ஒற்று மற்றும் பல இருக்கை கொண்ட விமான வண்டிகளால் மொய்த்துக் காணப்பட்டது, ஏனெனில் அது நெருக்கடி நேரத்தின் ஆரம்பம். வேலை செய்யும் நகரும் படிக்கட்டை ஜில்ட் சோனியும் அபாரும் தேடி, தரை மட்டத் திற்கு சென்றார்கள். சரியான இடத்திற்கு தானியங்கும் விமானி அவர்களை கொண்டு சேர்த்தது. அவர்களாக தரையிறங்கிய இடம் 'லீபின் அன் சன்ஸ்' நிறுவனத்தின் நிர்வாக அலுவலகக் கட்டடம் அது. அதன் செவ் வொளி அடையாளம் இதைப் பற்றிச் சொல் லும்.

இம்முறை ஆல்வார் முதலாவது சந்திப்பை அபாரிடம் ஒப்படைப்பதென்று முடிவு செய் தான். அவனது பணி அன்டன் புல்வர் எந்த மாடியில், எந்த அறையில் வேலை செய்தான் என்பதைக் கண்டுபிடித்த விவரங்களை அவனது எஜமானனுக்குத் திரும்பத் தெரிவிக்க வேண் டும்.

இருப்பினும் ஜில்ட்சோனியின் திட்டம் எதிர்பாரா இடையூறு ஒன்றினால் தடைப் பட்டது. வழமையான முறைகளால் அந்நிறு வனத்திற்குள்ளே நுழைவது முடியாத காரியம் என்பது ·தெரிந்தது. வேவுப் பணிக்காகப் புறப்பட்ட அபார் உடனேயே வெறுங்கை யோடு திரும்பினான்: நுழைவாசலை நோக்கி அவன் செல்கையில், தானியங்கி கேமராக்கள் அவனது உருவத்தைப் படம் பிடித்து, அவ் வுருவம் நிறுவனத்தின் ஊழியர்களில் ஒருவன்

இல்லை என்பதை பதிவு செய்தன. மேலும் எஃகு குறுக்கைக் கடவு உள்ளே பூட்டிக் கொண்டு, வெளியார் இலகுவில் வருவது தடை செய்யப்பட்டது.

''பிக் எக்ஸை விட லீபின் நன்கு பாது காக்கப்பட்டுள்ளது,'' என்று அபார் வியந்து கூறினான்.

ஜில்ட்சோனி விளக்கினான்: ''லீபின் ஒரு தனிக் கோட்டை.''

வேறு புதிய திட்டம் பற்றி அவர்கள் விவா திக்க வேண்டியிருந்தது. தனக்காக காத்தி ருக்கும்படி அபாரிடம் கூறிவிட்டு சிந்திப்பதற் காக தெருவுக்குள் ஆல்வார் சென்றான். ஜில்ட்சோனி நீண்ட நேரம் நடந்து போனா லும், எந்தத் தெளிவான யோசனைகளும் இல் லாது திரும்பி வந்தான்.

மேல் நிகழ்ச்சியாக களைப்புற்று, பசி யுற்று அருகிருந்த அருந்தகத்திற்குள் அவன் நுழைந்தான். மிக விரைவாக சிற்றிடையுணவு சாப்பிட்டான். பிறகு ஒரு போத்தல் ஒயின், அதன் நியாயமான விலை காரணமாக, வாங்கிச் செல்ல முடிவு செய்தான். இப் பொழுது பசியும், தாகமும் அவனை தொல் லை கொடுக்காமல், திரும்பவும் சிந்திப்பதற்கு ஜில்ட்சோனி தயாரானான். உண்மையில் நகரத்தில் யாரையாவது கண்டு பிடிப்பது எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அந்த நபரை அவனது சந்தேகங் களைத் தவிர்க்கும் வகையில் எப்படி அணுகுவது?

அடுத்த மேசையில் இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் உரையாடல் உரக்க இருந்ததால், எந்த அர்த்தமும் தனக்குத் தெரியாமலே ஆல்வார் கேட்க ஆரம்பித்திருந்தான்.

''ஆனால் லீபினுக்கு தானாகவே வாசனைப் பொருளைப் பற்றி எதுவும் தெரியாது என்று உனக்குச் சொல்கிறேன்,'' ஒருவன் அழுத்தமாகச் சொன்னான்.

''கேலி பேசாதே!'' மற்றவன் மறுத்துச் சொன்னான்.

''ஆனால், உண்மையில் அவனுக்குத் தெரியாது! மேலும் பிள்ளைகள் எல்லாம் தகப்பனாரைப் போன்றவர்கள் — அவர்கள் விரும்புவதெல்லாம் லாபம் மட்டுந்தான்.''

ஜில்ட்சோணி கூர்ந்து கவனிக்கத் தயாரானான். அந்த இருவரும் 'லீபின் அன் சன்ஸின்' வேலையாட்கள் என்பதை உணர்ந்தான். ஆல்வாரின் கைகளில் விதி விளையாடியது. மிகவும் எதிர்பாரா இந்த சந்தர்ப்பத்தை அவன் பயன்படுத்தலானான்.

சிந்தித்த பிறகு ஜில்ட்சோணி மற்றுமொரு போத்தலுக்கு உத்தரவிட்டான். அவர்களது மேசைக்கு வந்து சேர்ந்து கொள்ளலாமா என்று தனக்கு அருகிருந்தவர்களைக் கேட்டான். அந்த இருவரும் பேச்சை நிறுத்தி, ஜில்ட்சோணி என்ன செய்யப் போகிறான் என்பதைத் தெரிந்துகொள்ள முயன்றவர்களாக இருந்தனர்.

''உனக்கு என்ன வேண்டும்?'' அவர்களில் ஒருவன் கேட்டான்.

ஆல்வார் பாட்டிலைச் சுட்டிக்காட்டி, ''இதை முடிக்க நீங்கள் எனக்கு உதவி செய்ய முடியுமா?'' என்றான்.

''நீயே சமாளித்துக்கொள்ள முடியாதா?'' மற்றொருவன் முணுமுணுத்தான்.

''நான் அப்படி நினைக்கவில்லை,'' என்ற ஆல்வார், நட்புக்குரிய வகையில் புன்முறுவல் பூத்தவாறே சமாளித்தான்.

''நல்லது, நாங்கள் உனக்கு உதவி செய்கிறோம்,'' முதலாமவன் முடிவு செய்தான்.

''ஆக, எங்களோடு சேர்ந்துகொள்!'' அவனது நண்பன் அழைத்தான்.

போத்தல் மிக விரைவில் காலியானது. பரிமாறுபவனை ஜில்ட்சோனி அழைத்து மற்றொன்று கொண்டுவரச் சொன்னான்.

''காசைப் பற்றிக் கவலைப்படாதவர் என்பதை நான் காண முடிகிறது!'' மெலிந்த வெளிறிய தோற்றத்தோடு இருந்த முதல் இளைஞன் கூறினான். முப்பது வயதிற்கு மேற்படாது காணப்பட்டாலும், அவனது நெற்றிக்குப் பக்கத்தில் ஏற்கெனவே நரை விழுந்திருந்தது.

இரண்டாமவன், மற்றவகையில் மகிழ்ச்சியான தடித்த உருவம் கொண்டவன். ('துடிதுடிப்புக்காரன்' என ஜில்ட்சோனி தன் மனத்தில் அவனை வர்ணித்துக் கொண்டான்.) இலவசமாகக் குடிக்க வந்தவன் போல் காணப்

பட்டான.

"பிறகு வா, சீக்கிரம் சொல்," என்றான் துடிதுடிப்புக்காரன். "உண்மையில் உனக்கு என்ன வேண்டும்?" அவன் தனது கண்ணாடிக் குவளையை ஒரு புறமாக வைத்துக்கொண்டு, ஆல்வாரை நேருக்கு நேர் பார்த்தான்.

"நீங்கள் லீபினில் வேலை செய்கிறீர்கள், இல்லையா?" ஜில்ட்சோனி தொடர்ந்தான்.

"எது உன்னை அப்படி எண்ண வைத்தது?" மெலிந்த மனிதன் கேட்டான்.

"எதிர்பாராவிதமாக உங்கள் உரையாடலை நான் ஒட்டுக்கேட்டேன்."

"நீ ஒட்டுக்கேட்டலை நிறுத்தி விடுவது நல்லது."

"அவ்வளவு கலவரமடைய வேண்டாம்," குறுக்கிட்டான் துடிதுடிப்புக்காரன். "நகரத்தின் நான்கில் மூன்று லீபின் நிறுவனத்திற்காக எந்த வகையிலோ வேலை செய்கிறது."

"ஆக, நாங்கள் அங்கே வேலை செய்தால் என்ன செய்ய வேண்டும்?" மெலிந்த மனிதன் கேட்டான். "அடுத்து என்ன?"

ஆல்வார் திகைப்புடன் இருமினான். "ஆகவே, இந்த ஊரில் தங்கிவிட நான் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன்..."

"மேலும்?"

"நான் வேலை தேடுகிறேன்."

"நீ நீண்ட தொலைவிலிருந்து வந்திருக்கிறாயா?" துடிதுடிப்புக்காரன் விசாரித்தான்.

"ராக்கி மலைகளிலிருந்து."

''நீ ஏன் இடம் பெயர்ந்தாய்?'' மெலிந்த மனிதன் கேட்டான்.

அவர்கள் அவனை நம்பவில்லை என்று ஆல்வார் உணர்ந்தான். ஆகவேதான் அவர்கள் அவனை இப்படி வறுத்து எடுத்துக்கொண்டிருந் தார்கள். மிகவும் சரிப்படுத்துகின்ற வகையில் தனது அடுத்த பதிலை அளிக்க அவன் முயற்சித் தான். ''அந்த மலைகளில் மிகவும் சலிப்புற்றுப் போய்விட்டேன். என்னை நம்புங்கள், அங்கு பேசிக் கொள்வதற்குக் கூட ஓர் ஆள் கிடை யாது.''

மெலிந்த மனிதன் குலுக்கிக் கொண்டு சொன்னான்: ''இங்கு வாழ்க்கை அப்படி என்ன நன்றாக இருக்கிறது? நாங்கள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக நெருக்கிக் கொண்டிருக்கிறோம். மேலும் இப்பொழுது எல்லாவகை ரோபாட்டுகளும் தோன்றிவிட்டன. என்ன நடக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளும் முன்னமேயே நம் மை வெளியே தள்ளத் தொடங்கும். நாங்கள் ஏற்கெனவே போதுமான தந்திரங்களைப் பெற்றுள்ளோம்.''

''அதை விட்டு வா. எல்லாம் போலவே விஷயங்கள் மோசமாக இருக்காது,'' என்று புன்னகையுடன் துடிதுடிப்புக்காரன் சொன் னான்.

மெலிந்த மனிதன் வினவினான். ''உனது தொழில் எத்தகையது?''

சிந்தனையின்றி மிகவும் நெருக்கமான தொ ழிலைச் சொன்னான் ஜில்ட்சோனி: ''கம்பியூட்

டர் இயக்குநன்.''

துடிதுடிப்புக்காரன் தலையாட்டிவிட்டு, ''நாங்களும் அப்படித்தான்,'' என்றான்.

''தரையிலிருப்பதைவிட வேலைகள் சற்று கடினமானவை,'' மெலிந்த மனிதன் சொன்னான். ''நகரத்தில் வேலையில்லாதோர் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?''

துடிதுடிப்புக்காரன் ஆல்வார் தோளின் மீது உற்சாகமாக ஓர் அடி வைத்துச் சொன்னான்: ''மகிழ்ச்சியாக இரு, பெரியவரே. நாம் எதைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கிறோம், இல்லையா?'' அவன் தொடர்ந்து பேசினான், குடித்துக் கொண்டிருக்கும் தனது பங்காளி பக்கம் திரும்பியபடி.

''நாம் முயற்சிப்போம்.''

''நன்றி, நண்பர்களே,'' என்றான் ஜில்ட்சோனி, உரையாடலில் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டதைக் கண்டு சற்று தடுமாறியவனாக.

''பின்னர் உன்னுடைய நன்றி கூற நேரம் வரும்,'' என்றான் துடிதுடிப்புக்காரன், நொறுக்குத் தீனியை வாயில் அசை போட்டபடி. ''இப்போதைக்கு...''

''அடுத்த பீப்பாயை நாம் தொடங்கலாம்,'' என்றான் மெலிந்த மனிதன். இப்போது அவனது கண்கள் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

தனது குடிகார நண்பர்கள் பார்க்காதவாறு, தனது பணப்பை சுருங்குவதை உணர்ந்த

ஆல்வார் திரும்பவும் பரிமாறுபவனை அழைத்தான்.

''மற்றுமொரு போத்தல்,'' என்றான் ஜில்ட்சோனி.

துடிதுடிப்புக்காரன் தனது மூடிய கையை மேசையின் மீது வைத்து உரக்கக் கத்தினான்: ''அந்த மட்டமான சரக்கு பாட்டிகளுக்குத்தான் போதுமானது. நமது சந்திப்பை உண்மையான சரக்கோடு குறிப்பிடுவது தவறான கருத்தாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். அது எப்படிப்பட்ட சுவையுள்ளது என்பதை நான் மறந்துவிட்டேன்.''

''நானும் அப்படித்தான்,'' என்று எதிரொலித்தான் மெலிந்த மனிதன்.

''முதல்தரமான யோசனை,'' என்று ஒத்துக்கொண்டான் ஆல்வார், புன்னகை செய்ய முயன்றபடி.

வார்த்தைகளில் சொல்ல முடியாவிட்டாலும், செயற்கையான மதுவுக்கும் உண்மையான வகைக்கும் உள்ள வேறுபாட்டை உடனேயே ஆல்வார் உணர்ந்தான். ஆனால் சுவையுணவு விவரங்களுக்கு அதுவல்ல நேரம். விலையுயர்ந்த பானங்களினால் கண்ணாடிக் குவளைகள் நிரப்பப்பட்டுள்ளன என்பதை ஜில்ட்சோனி எல்லா நேரமும் கவனித்தான். உலகமே தங்கள் வயமானது போல இன்பத்தின் எல்லைக்கே அந்த மூவரும் விரைவிலே போனார்கள்.

''நண்பனே! அதிர்ஷ்ட மச்சத்தோடு பிறந்

திருக்கிறாய்,'' என்று துடிதுடிப்புக்காரன் ஆல்வாரிடம் நம்பிக்கைதோய்ந்த குரலில் சொன்னான்.

''லீபினுக்கு கம்பியூட்டர் இயக்குநர்கள் தேவைப்படுகிறது,'' விளக்கிச் சொன்னான் மெலிந்த மனிதன், தனது கண்ணாடிக் குவளையை நக்கியபடியே.

''உண்மையில் லீபின் என்ன உற்பத்தி செய்கிறது?'' தனக்கு ஆர்வமூட்டக் கூடியதாகவும், உரையாடலை ஒரு முடிவுக்குக் கொண்டுவர மற்றுமொரு முயற்சியாகவும் ஜில்ட்சோனி கேட்டான்.

''அது நன்கு தெரிந்த சர்வதேச நிறுவனம், வாசனைப் பொருட்கலையில் சம்பந்தப்பட்டது,'' என்றான் துடிதுடிப்புக்காரன். ''ஆனால் வாசனைப் பொருட்கள் ஒரு திரை மறைவு. எதார்த்தத்தில் லீபின், பல்வேறு வகைப்பட்ட போதை மருந்துகளை அல்லது வெறுமனே கஞ்சாவை முகப்பிலேயே விற்கிறது...''

''எதாவது ஸெவோன்?''

''அதுவுந்தான்... ஆனால் ஒரு நொடி பொறு. நீ சோதனைத் துறையிலிருந்து வரவில்லையே, அப்படித்தானே?'' மெலிந்த மனிதன் ஆல்வாரின் கையைப் பற்றியவாறு கேட்டான்.

''நீ என்ன நினைக்கிறாய்? கடவுள் பெயரால் நான் சத்தியம் செய்கிறேன்...''

''பொருட்படுத்த வேண்டாம். அவன் ஓர் ஆய்வாளர் போல துளியும் காணப்படவில்

லை,'' என்று துடிதுடிப்புக்காரன் நியாயமான ஆதரவோடு பேசினான்.

''லீபினின் எல்லாரையும் பெரும்பாலும் விலைக்கு வாங்கி விட்டார்,'' என்று தனது தோள்களை குலுக்கியபடி மெலிந்த மனிதன் கூறினான்.

எஞ்சிய மதுவை ஜில்ட்சோனி கண்ணாடிக் குவளைகளில் ஊற்றினான். ''லீபின் நிறுவனத் தில் ஆர்வமிக்க பல வேலைகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்,'' என்று மறுபடி யும் அவனுக்கு ஆர்வமிக்க அந்த விஷயம் குறித்துப் பேச முயன்றான்.

''எடுத்துக் காட்டாக?'' வெளிறிய பார் வையுடன் மெலிந்த மனிதன் ஆல்வாரைப் பார்த்துக் கேட்டான்.

''எழுத்தர்கள் வேலை என்னவாயிற்று?''

''எழுத்தர்கள்!'' என்று குடிவெறியோடு கூவினான் மெலிந்த மனிதன்.

''எழுத்தர்கள்!'' என்று பல்லவியோடு வியந்தான் துடிதுடிப்புக்காரன்.

எதிர்பாராத சிரிப்பொலியை ஏற்படுத்தும் அந்த வார்த்தை பற்றி எந்தச் சிந்தனையுமில் லாமல் மனங்குழம்பியவாறு ஆல்வார் அந்த இரண்டு பேரையும் பார்த்தான்.

''எங்களைப் பொருட்படுத்த வேண்டாம், நண்பனே,'' என்று துடிதுடிப்புக்காரன் தனது சிரிப்பை நிறுத்திவிட்டுப் பேசினான். ''எதார்த் தத்தில் இது மிகவும் நேரானது. லீபின் ஒரு மாதிரியாகி விட்டான்,'' என்று அதை வலியுறுத்தும் பொருட்டு தனது நெற்றியை

அழுத்திக் காட்டியவாறு பேசினான். ''பழமை யான எதையும் அவன் விரும்புவான், பழைய நாட்கள், பழமையான பொன்மொழிகள் மற்றும் அவை போன்றவை. அது 'எழுத்தன்' என்ற வார்த்தையை விளக்கும் கம்பியூட்டர் இயக்குநர்களாக அவனிடம் வேலை பார்ப்பவர் களை இந்த முத்திரையோடுதான் அவன் அழைப்பது வழக்கம்.''

''ஆக, எழுத்தன் என்பவன் கம்பியூட்டர் இயக்குநனா?'' என்று தனது முகத்தில் முட்டாள்தனமான வெளிப்பாட்டுடன் அதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆல்வார் மீண்டும் கேட்டான்.

''நிச்சயமாக,'' என்று உறுதி செய்தான் மிகப் பெரும் வெடிச்சிரிப்போடு துடிதுடிப்புக் காரன்.

நல்லிதயம் கொண்ட அந்த இரண்டு நண்பர்களை பல ஆண்டுகள் அறிந்தவன் போலவும், அவர்களில் அவன் ஒருவனென்றும், கடின உழைப்பாளனான மற்றொரு கம்பியூட்டர் இயக்குநன் மாலை நேரத்தில் குடிப்பதை வெறுமனே மகிழ்ச்சியோடு களிக்கிறான் என்றும் முடிந்தளவுக்கு நினைவு கூர்வது போல ஆல் வார் உணர்ந்தான். பதினைந்து ஆண்டுகால அர்ப்பணிப்பு, உலக சமன்பாடு, மலைகள், காக்கைக் கூடு ஆகியவை ஒரு கனவுக்கு மே லாகத் தோன்றின. எந்தவித விஷேடமான கவலைகளுமின்றி, ஒவ்வொரு நாளும் ஆர்வத் தோடு, வெளியே ஒரு அகன்ற உலகத்தைப் பற்றிய எந்த நினைவில்லாமல் அவனால் வாழ

முடியும். இந்த எல்லா வேலையையும் அட்லா ஸுக்குச் சேணங்கட்டிக் கொள்வது எவ்வளவு அற்புதமானது.

''உங்களது சிறந்த கம்பியூட்டர் இயக்கு நன் யார்?'' வேறு பிற விஷயங்கள் பற்றிப் பேசி அவர்கள் களைத்துப்போன பிறகு ஆல் வார் கேட்டான்.

துடிதுடிப்புக்காரன் தனது உதடுகளைப் பிதுக்கியபடி கூறினான்: ''அன்டன் புல்வர்''.

''அன்டன் புல்வர்,'' எதிரொலித்தான் ஆல் வார். அந்த மகிழ்ச்சியான செய்தி ஏதோ மின் னல் ஒளிபோல இருந்தது.

''நீ அவனைப் பற்றி கேள்விப்பட்டிருக் கிறாயா?'' மெலிந்த மனிதன் கேட்டான்.

''ஆமாம், நான் கேள்விப்பட்டிருக்கிறேன்,'' ஒத்துக்கொண்டான் ஆல்வார்.

''அதைப் பற்றி வியப்புக்கு ஏதுமில்லை. எங்களது அன்டன் ஓர் உண்மையான மேதை,'' என்றான் துடிதுடிப்புக்காரன்.

''மேதை?'' ஒவ்வொரு நொடியும் உணர்ச்சி வயப்பட்டவனாக ஜில்ட்சோனி விசாரித்தான்.

''உண்மையாகவே,'' உறுதி செய்தான் மெலிந்த மனிதன்.

''நீங்கள் அதை மிகைப்படுத்தவில்லையா?''

''அன்டன் எதையும் கண நேரத்தில் கணக்கிட்டு விடுவான். அதைப் பற்றி எதுவும் ஐயமில்லை,'' தொடர்ந்தான் துடிதுடிப்புக்கா ரன்.

''ஒரு கால்குலேட்டர் செய்யாத பிரச்சினை களை அவனால் செய்ய முடியும்,'' அவன்

நண்பன் மேலும் சொன்னான்.

''பிறகு ஏன் அன்டன் புல்வர் ஓர் இளநிலை எழுத்தனை விட மேலானவனில்லை?'' கேட்டான் ஆல்வார்.

அவனது குடிகாரச் சிநேகிதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். பிறகு மெலிந்த மனிதன் கூறினான்: ''அது லீபினின் மற்றொரு ஏய்ப்பு நடவடிக்கை.''

துடிதுடிப்புக்காரன் விளக்கினான்: ''கடவுள் மட்டுமே முதன்மை கம்பியூட்டர் இயக்குநர் என்று எங்கள் தலைவர் கருதுகிறார். உண்மையில் இதன் பொருள், தனது நிறுவனத்தின் ஊழியர்கள் இளநிலை இயக்குநர்களாகவே இருக்க முடியும் என்பதாகும்.''

மதுவினால் ஏற்பட்ட மயக்கம் விரைவிலேயே அவனை விட்டு மறைந்துவிட்டதாக ஆல்வார் உணர்ந்தான்.

''பௌதிகத்தில் அவனால் சிறுதிறமாகச் செயலாற்ற முடியுமா?'' என்று கேட்டான் ஜில்ட்சோனி, தொடர்பின்றி எடுக்கப்பட்ட ஒரு வினாவை தொடுப்பது போல இருந்தது அது.

''ஒருவகையில் அவனால் முடியும்,'' என்று துடிதுடிப்புக்காரன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு சொன்னான். ''அவைகளில் எதுவும் என்னைக் குறிப்பதாகாது.''

அவர்களுக்குச் சந்தேகத்தை அவன் ஏற்படுத்துகின்ற வகையில் கேள்வி கேட்பதிலிருந்து தன்னைத்தானே ஆல்வார் நிறுத்திக் கொண்டான். ''நமது அன்டன், ஐன்ஸ்டீனை

மூச்சுத் திணற விட்டிருப்பான்!'' மெலிந்த மனிதன் நிச்சயமற்று விளக்கினான்.

''உண்மையாகவேயா?'' ஜில்ட்சோனிக்குப் பிரதிபலிப்பாக மற்றவர்களைத் தூண்டும்படி வந்தது.

''என் வாழ்க்கையை அதற்காக ஈடுபடுத்துவேன்.''

''மேலும், என் அருமை நண்பர்களே, என் வாழ்க்கை லட்சியங்களில் ஒன்று என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று ஜில்ட்சோனி கேட்டான்.

''எதைப் பற்றி, சிறியவனே?'' சலிப்புற்ற குரலில் மெலிந்த மனிதன் கேட்டான்.

''உண்மையான மேதையைச் சந்திப்பது, உங்கள் அன்டன் புல்வரைப் போல.''

''எது உன்னைத் தடை செய்கிறது?'' துடிதுடிப்புக்காரன் வினவினான்.

''ஒரு பாவிக்கு சொர்க்கத்திற்குள் நுழைவது, உங்கள் நிறுவன வளாகத்திற்குள் நுழைவதை விட இலகுவானது.''

''அது உண்மைதான்,'' துடிதுடிப்புக்காரன் ஏற்றுக்கொண்டான். ''லீபின் பருந்து போல இடையறா விழிப்புடையது. எங்கள் இடத்தின் பாதுகாப்பு வேறு எந்த இடத்தைக் காட்டிலும் பாதுகாப்பானது.''

''பிக் எக்ஸைச் சுற்றிக்கொண்டு இருப்பது போல அவ்வளவு இறுக்கமானது என்று கூறுகிறார்கள்,'' என்று மெலிந்த மனிதன் மேலும் சொன்னான்.

அதிர்ஷ்டம் ஆல்வார் பக்கமாக அடிக்

கிறது. எந்தவிதச் சிரமமும் இல்லாமல், அவன் புதிதாகக் கண்டுபிடித்த நண்பர்கள் அவனை அன்டன் புல்வரிடம் அறிமுகப்படுத்த ஒத்துக் கொண்டார்கள். மறு நாள் அவர்கள் ஏற் பாடு செய்தார்கள். ஏனெனில் அன்று மா லையே செல்வது மிகவும் தாமதமாகி விட் டது.

ஜில்ட்சோனி விடுதிக்குத் திரும்பவந்த போது அபார் ஏற்கெனவே தூங்கிப் போய் விட்டான். அவன் விடும் ஒவ்வொரு மூச்சிற்கும் ஒரு பெரிய கற் பாளத்தை தூக்கிக் கொண் டிருப்பது போல அவ்வளவு அழுத்தமாக மூச்சு விட்டான்.

தனது சிறைப்பட்ட உதவியாளனிடம் ஜில்ட்சோனி திடீரென பரிவு உணர்வு கொண் டான். ''நான் அவனுக்குரியதை அவனிடம் கொடுப்பேன்,'' இப்பொழுது பெருந்தன்மையாக ஆல்வார் நினைத்தான். ''அவனது சிகிச்சை முறைக்காக நான் ஒரு மில்லியன் ஒதுக்கு வேன். ஏன் கூடாது? ஒருவேளை மருத்துவர் கள் இப்பொழுது அவனுக்கு உதவி செய்ய முடியும். கடந்த சில ஆண்டுகளில் எத்தனை யோ அநேக புதிய கண்டுபிடிப்புகள் ஏற்பட் டுள்ளன.''

தனக்குத்தானே முணுமுணுத்தபடி ஆல்வார் படுக்கையின்மீது விழுந்தான். ஜில்ட்சோனி அறிவுறுத்தியது போல அபார் மிகக் குறைந்த வாடகைக்கு அறைகளை எடுத்திருந்தான். சிறு அசைவிலேயே படுக்கை கிறீச்சிட்டது. மேலும் அறையின் காற்று அழுத்தமானதாகவும் நாட்

பட்டதாகவும் இருந்தது. ஆனால் அவை என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தின?

* * *

அன்டன் புல்வர் வசித்த வீடு புறநகரில் இருந்தது.

''இங்கிருந்து அதிகத் தொலைவில் இருக்கிறது,'' ஆல்வார் தனது புதிய நண்பர்களிடம் கூறினான்.

துடிதுடிப்புக்காரன் பெயர் எல்கார் என்பதையும், மெலிந்த மனிதனின் பெயர் நிக்கோலஸ் என்பதையும் அவன் இப்பொழுது தெரிந்து விட்டான். இன்று அவர்கள் அவ்வளவு உணர்ச்சி பொங்கக் காணப்படவில்லை. ஆனால் இருவரும் ஆல்வாரிடம் வெறுமனே நட்புப் பாராட்டியவர்கள் போலக் காணப்பட்டார்கள்.

அவர்கள் சரியான வீட்டையடைந்த போது, நிக்கோலஸ் மணியடித்தான். அவர்களைச் சந்திப்பதற்காக ஓர் உயரமான முதியவன் வெளியே வந்தான். அவனது முகம் வணங்கத் தக்க குடும்பத்தலைவன் போல, குழம்பிய நிலையில் இருந்தது. அவனது நரைத்த தலைமுடி தோள்பட்டை வரை தொங்கியது. அவன் குச்சிபோல மெலிந்து காணப்பட்டான். அவனது தோள்கள் கூனியிருந்தன.

''பிக் எக்ஸ் கூறுவது போல அவனுக்கு

வயது 54,'' ஜில்ட்சோனி நினைவு கூர்ந்தான். ''ஆனால் அவன் பத்து ஆண்டுகளுக்கு மூத்தவன் போலக் காணப்படுகிறான்.''

வாயிற்புறத்தை மறைத்துக் கொண்டு அன்டன் புல்வர் இன்னமும் அங்கே நின்று கொண்டிருந்தான். அவ்வளவு ஆர்வமில்லாது பார்வையாளர்களைப் பார்த்தான்.

''அன்டன், உன்னைக் காண்பதற்காக நாங்கள் ஒருவனை அழைத்துவந்திருக்கிறோம்,'' என்றான் நிக்கோலஸ்.

அவர்கள் கடந்து போக பாதை விட்டபடி புல்வர், ''நல்லது, இங்கே வந்து விட்டால், உள்ளே வாருங்கள்,'' என்று முணு முணுத்தான்.

தான் நுழைந்த அறையை ஜில்ட்சோனி முற்றிலுமாகப் பார்த்தான். கூரை வரை தொடும் படித்தட்டு கொண்டு இரண்டு சுவர்கள் நின்றன. படித்தட்டு முழுவதும் நினைவுப் பாளங்களாலும் புத்தகங்களாலும் நிறைந்து நின்றன. புத்தக விளிம்பு முனையில் பெயர்களைக் கண்டுபிடிக்க ஜில்ட்சோனி கண்களை முடுக்கிவிட்டான்.

புல்வர் மட்டும் தானே வசிப்பது போல காணப்பட்டது. அறை முழுதும் ஒழுங்கற்ற நிலையில் இருந்தது. மேசை மீது காகிதங்களும், பயோமெமரிக் கூடுகளும் உயரமாகக் குவிந்து கிடந்தன. அகலத்திறந்து கிடந்த அங்கிருந்த ஒரே சன்னல் பலகையில் புழுதி ஒரு திட்டுப் போலப் படிந்திருந்தது.

''யாராவது உட்கார விரும்பினால் அவர

வர் விரும்பிய இடங்களில் உட்காரலாம்,'' அன்டன் இசைவைத் தெரிவித்தான்.

கைவைத்த முதுகுப்புறம் வளைவான ஒரு நாற்காலியில் ஜில்ட்சோனி அமர்ந்தான். எந்தக் கேள்வியும் கேட்காமல் புல்வர் புத்தக அலமாரிகளில் ஒன்றினுக்குச் சென்றான். ஒரு பெரிய புத்தகத்தை இழுத்து ஆல்வாரிடம் ஒப் படைத்தான்.

''அது என்ன?'' ஜில்ட்சோனி வினவினான்.

''காரல் ஷென்கரின் பன்னிரண்டு வடிவ அட்டவணைகள்,'' பதிலளித்தான் புல்வர். ''அவர்களைப் போன்ற சைகோ இயக்குநர் களுக்கு இக்கையேடு தவிர்க்க முடியாதது,'' என்று விளக்கிய அவன் ஜில்ட்சோனியின் புதிய நண்பர்கள் இருந்த திசை நோக்கி தலை யசைத்தான். விவரிக்க இயலா வர்ணத்தில் இருந்த குறுகிய சோபாவில் அவர்கள் மொத் தமாக அமர்ந்திருந்தார்கள்.

''ஆனால், நீங்களும் ஒரு கம்பியூட்டர் இயக்குநரில்லையா?'' ஜில்ட்சோனி வியப்புடன் வினவினான்.

''நீங்கள்... சரிதான், இளைஞரே,'' புல்வர் கூறினான். ''அவர்களைப் போல நானும் ஓர் எழுத்தனே. அந்தக் கையேடு எனக்குத் தேவைப்படாது ஏனெனில் அதை நான் மனப் பாடமாக வைத்திருக்கிறேன்.''

''எல்லாவற்றையுமா?'' முற்றிலும் நம்பாத வனாக ஆல்வார் கேட்டான், புத்தகத்தின் கன மான நிறையை மீண்டும் கையில் பார்த்த உணர்வுடன்.

எல்காரும் நிக்கோலசும் புன்னகை செய்தார்கள். இத்தகைய திறமை பற்றி கேள்விப்படுவது அவர்களுக்கு பெரும்பாலும் இது முதல் முறையல்ல.

''என்னைச் சோதியுங்கள்,'' ஆலோசனை சொன்னான் புல்வர்.

மேலெழுந்தபடி மிகப் பெரும் தொகுதியை ஜில்ட்சோனி திறந்து தனது கை விரலை வைத்துக்கொண்டு முதல் வரியைப் படித்தான்: ''இருபத்து நான்கு டிகிரிகள், பதினெட்டு நிமிடங்கள் மற்றும் முப்பது நொடிகளின் சைன்.''

புல்வர் கணநேரம் கண்களை மூடினான். அவனது முகம் உறைந்து போனது. வெளியே இருட்டிக் கொண்டு வந்ததால், எரிய விடப்பட்ட சுவர்ப்புற விளக்குகளின் வெளிச்சம் பட்டு அவனது முகம் கிட்டத்தட்ட நீல நிறமாகக் காணப்பட்டது.

ஒரு நொடிக்குப் பிறகு புல்வர் விடையைச் சொன்னான். ஆல்வார் அதைச் சரிபார்த்தான். கையேட்டில் கொடுக்கப்பட்ட விடையோடு பொருந்தியிருக்கிறது என்றும் கண்டு பிடித்தான்.

''அற்புதம்,'' அவன் வியந்தான்.

புல்வர் சுருக்கமாகச் சிரித்தான். அவன் ஏற்படுத்திய விளைவு கண்டு முற்றிலும் திருப்தியடைந்தான்.

''மறுபடியும் முயற்சி செய்யுங்கள்.''

கையேட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆல்வார் எடுத்துக் காட்டுகளைக் கொடுத்

தான். ஆனால் 'இளநிலை எழுத்தன்' ஒவ்வொரு முறையும் சரியாகச் சொன்னான்.

''இவை எல்லாவற்றையும் சாதாரண மனிதனால் நினைவில் கொள்ள முடியுமா என்பது கற்பனைக்கு அப்பாற்பட்டது,'' புத்தகத்தை மூடியவாறே ஜில்ட்சோனி கூறினான்.

''இது வெறும் அற்பம்,'' என்றான் புல்வர். ''இப்பொழுது இதைவிட மிகவும் ஆர்வமூட்டும் ஒன்றை நான் உங்களுக்குக் காட்டப் போகிறேன்...''

அவன் மேசை அருகே போய், அதில் கிடந்த பல பொருள்களைத் துருவி, கடைசியில் அருவருப்பான பழைய கால்குலேட்டர் ஒன்றைத் தேடி எடுத்து ஆல்வாரிடம் ஒப்படைத்தான்.

கடந்த ஆண்டுகளில் காக்கைக் கூட்டில் அவனுக்கு உண்மையாக உழைத்த ஒன்றைப் போல அது இருந்தது.

மனிதனுக்கும் எந்திரத்திற்கும் இடையேயான நம்ப முடியாத போட்டிக்கு ஜில்ட்சோனி சாட்சியானான். அதில் கால்குலேட்டர் கீழானது என்பது உறுதியாகியது. ஒவ்வொரு தடவையும் — ஒரு நொடியின் பின்னமாக இருந்தாலும் கூட — அன்டன் தனது விடையால் கால்குலேட்டரையும் விஞ்சி நின்றான்.

மிகப் பெரும் மகிழ்ச்சியான உணர்வுடன் ஜில்ட்சோனி இருந்தான். திறந்த சன்னலருகே சென்றான். புழுக்கமான காற்று உள்ள இடத்தில் இளந்தென்றல் அங்கு வரவில்லை. அவ்வப்பொழுது அமைதியான மின்னற் கீற்றின்

ஒளியை தொலைவில் காண முடிந்தது. எங்கெங்கு அவன் பார்த்தாலும் வெளிறிய மிகப் பெரும் பழம் புறநகர் கட்டிடங்களைக் கண்டான்.

''நான் முற்றிலும் ஆச்சரியப்பட்டேன்,'' என்றான் ஆல்வார்.

கையைக் குலுக்கியபடி புல்வர் கூறினான்: ''அது வெறும் வெள்ளாட்டுக்குட்டியின் செத்தை...''

''நீங்கள் சொல்ல நினைப்பது...''

''நான் நினைப்பது... இந்த அடிப்படைக் கணக்கிற்குப் பதிலாக மிகவும் சிக்கலான பிரச்சினைகளை நான் விரும்புகிறேன்.''

''உதாரணமாக?''

''உதாரணமாக, வேறுபாட்டளவை சமநிலைகள், அல்லது தொடர்விளைவு முழுமைத் தொகையீடு போன்றதைச் சொல்லலாம்.''

அன்டன் புல்வர், கேட்டார்ப் பிணிக்கும் அதே நிலையில் வேறுபாட்டளவை மற்றும் தொடர்விளைவுச் சமநிலைகளைப் பேனா மற்றும் தாள் இன்றியே தனது மூளையாலேயே தீர்வு சொன்னான். ஒவ்வொரு சமன்பாடும் முன்னைய சமன்பாட்டை விட மிகச் சிக்கலானதாகவே இருந்தது. இவ்வாறு செய்ததால் கால்குலேட்டரை நிறுத்த வேண்டியதாயிற்று. பிக் எக்ஸ் சரியான பாதையில் செல்கிறது என்றும், உலகச் சமன்பாடு அவனது பிடிக்குள்ளாகவே இருக்கிறது என்றும் ஜில்ட்சோனி இறுதியாக நம்பலானான்.

இருப்பினும் எல்லாவித முக்கியத்துவம் பெற்ற சமன்பாட்டுப் பொருளை அவன் எங்ஙனம் கொண்டு செல்லப்போகிறான்?

"நீங்கள் ஆர்வங்கொண்டுள்ள விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள உங்களது நூல்களைப் பார்க்க முடியுமா?" அலமாரிகளைப் பார்த்தபடி ஆல்வார் கூறினான்.

"தாராளமாகப் பாருங்கள்," என்றான் அன்டன்.

ஜில்ட்சோனி அலமாரிகளை நோக்கிச் சென்று அவற்றில் ஒன்றின் மூலையில் இருந்த புத்தகம் ஒன்றை எடுத்தான். அதன் தலைப்பு **வேறுபாட்டளவை சமநிலைகளுக்கு எண்குறித் தீர்வுகள்**, அதையடுத்து வந்தவைகள் **விரைவான கணக்கீட்டுக்கான விவரங்கள், பெரிய எண்களின் செயல்பாட்டுக்கான நினைவுப் பயிற்சிகள், கம்பியூட்டர் மாயாவி, மனிதனது நினைவு எல்லையற்றது: நான் நிருவுகிறேன்!, நமது சொந்த நினைவைக் கட்டுப்படுத்தும் முழுமைத் தொகையீட்டு வழிகள்.** ஆனால் பௌதிகத்தோடு இவைகளுக்கு என்ன தொடர்பிருக்கிறது?

மற்றொரு புத்தக அலமாரியை நோக்கி ஆல்வார் நடந்தான். நினைவுப் பாளங்களுக்கும் புத்தகங்களுக்கும் வழியாக அவன் பார்த்துக் கொண்டிருந்தான். வெறியோடு அவன் பார்த்த பார்வை புல்வரின் கவனத்தைக் கவர்ந்தது. "நீங்கள் எதையேனும் தேடிக்கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

ஜில்ட்சோனி சற்று தடுமாறியவனாக

முணுமுணுத்தான்: "ஒரே ஒரு விஷயம்..."

"என்ன?" முன்னிலும் சற்று இரக்கமான குரலில் புல்வர் கேட்டான்.

"இங்கு பௌதிகத்தைப் பற்றி எந்தப் புத்தகங்களையும் நான் பார்க்கவில்லையே."

"அவைகளிலிருந்து நான் என்ன விரும்பப் போகிறேன்?"

"நான் விரும்பினேன்... தங்களது வியக்கத்தக்க கணிதத் திறமையை பௌதிகத்துறைக்கு விரிவடையச் செய்யக் கூடும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன்..." ஆல்வார் தனது வாக்கியத்தை எப்படி முடிப்பதென்று தெரியாமல் நிறுத்தினான்.

புல்வர் அவனுக்கு உதவிக் கரம் நீட்டுபவனாகக் கூறினான்: "இளைஞரே, உங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கிறீர்கள்."

மனங்குழம்பிய நிலையில் ஜில்ட்சோனி அவனை உற்றுப்பார்த்தான்.

"அந்த விஞ்ஞானத்திற்கு எனக்கு நேரமே இல்லை."

"பௌதிகத்திற்கா?" திடீரென்று கரகரப்படைந்த குரலில் ஜில்ட்சோனி உளறினான். அன்டன் புல்வர் பௌதிகத்தை வெறுக்கிறானா? ஆனால் இது மிகவும் நோய் வாய்பட்ட கேலியாகத்தான் இருக்க முடியுமா?

"ஆமாம். ஆமாம்... பௌதிகம்," என்று எரிச்சலுற்ற குரலில் புல்வர் திரும்பக் கூறினான். இதற்குள்ளாக தனது அறையில் மேலும் கீழும் தாவி நடந்தான்.

''ஏன்?'' ஆல்வார் விடாது கேட்டான்.

''இது போன்ற விஷயங்களை விளக்குவது என்ற பழக்கத்தை நான் கொள்ளவில்லை,'' என்றான் புல்வர். ''இருப்பினும் நான் உங்களிடம்...'' என்று தொடர்ந்த புல்வர், ஆல்வாரின் முகத்திற்கு அருகில் கூறினான். ''சில காலம் நீங்கள் இந்தத் துறையில் பணியாற்றியிருக்கிறீர்கள். அல்லது நீங்கள் இன்னமும் செய்கிறீர்கள்?''

ஆல்வார் தலையசைத்தான்.

''அதுதான் நான் நினைத்தது,'' புல்வர் தொடர்ந்தான். ''ஆகவே நான் உங்களுக்கு ஒரு சலுகை காட்டுகிறேன்.''

புத்தக அலமாரியில் சாய்ந்தபடி ஜில்ட் சோனி நின்றான்.

''பௌதிகம்!'' என்று எதிர்பாராத வேகத்தோடு புல்வரிடமிருந்து வெடித்துச் சிதறியது. ''பௌதிகம்! இயற்கைக்குத் திறவுகோலாக இருக்கும் விஞ்ஞானம்! ஆனால் குழம்பிய மனித மனத்தால் எங்ஙனம் இயற்கையை முழுமையாக அறிந்துகொள்ள முடியும்? பல்லாயிரம் ஆண்டுகால அநுபவம் நமக்குக் காட்டுவதாவது, விடை காணப்பட்ட ஒவ்வொரு புதிரும் டஜன் கணக்கான புதிய வினாக்களை வெறுமனே எழுப்புகிறது, மேலும் அவை ஒவ்வொன்றுக்குமான விடை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான பிரச்சினைகளை எழுப்புகிறது. இவ்வாறு மேலும் மேலும் முடிவில்லாது செல்கிறது என்பது உறுதி... காட்டில் விடப்பட்ட குழந்தை போன்றது

மனித இனம். அவனுக்குத் தேவையானது என்னவெனில் திரும்பிப் பார்த்து அவனது தடங்களில் திரும்பச் செல்வதாகும். பிறகு உயிர் வாழ்வதற்கு சில வாய்ப்பு ஏற்படலாம். ஆனால் வழியில் அவன் பறித்த பூக்களில் மகிழ்ந்தபடி, அடர்த்தியாக வளர்ந்த புதர் களின் வழியாக படிப்படியாக முன்னேறி, அவன் மிதிபோட்டுச் செல்லும் ஒவ்வொரு அடியும் சாவை நோக்கிக் கொண்டு செல்கிறது என்பதை உணராமல் சென்றான்.''

உலர்ந்து போன உதடுகளை ஆல்வார் நாவினால் துழாவினான். அணிநயங்கனிந்த அந்த சொற்றொடர்களை, அந்த வார்த்தை களை அவன் எங்கு கேட்டிருக்கிறான் அல்லது படித்திருக்கிறான்?

''சிறிய பையன் காணாமற்போய்விட்டான். நீண்ட காலத்திற்கு முன்பே நான் அதை உணர்ந்திருக்கிறேன்!'' புல்வர் தொடர்ந்தான், ஆல்வார்க்கு முன்னால் நின்றபடி. அவன் யாரைக் குறிப்பிட்டான் என்பது இப்பொழுதும் தெளிவாகத் தெரியவில்லை: மனித இனத்தை யா, அவனையா, ஜில்ட்சோனியையா? ஒரு வேளை புல்வர் ஏமாற்றிப் போய் விடலாம் என்று தனக்குத்தானே எண்ணியிருக்கலாம்.

''உங்களது முதனிலைக்கு எந்த அஸ்திவார மும் இல்லை,'' என்றான் ஆல்வார்.

அவர்கள் இருந்த அறை — அங்கு ஒரு கத்தி யினால் காற்றை வெட்ட முடியும் — அவனைச் சுற்றி நகருவதாகத் தோன்றியது. இது ஆல் வாரைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியது.

ஏனெனில் அவனை நிலைத்து நிற்க விடவில்லை.

''பொது மண்டலத் தத்துவத்தில் நீங்கள் வேலை செய்கிறீர்களா?'' ஜில்ட்சோனிக்கு முன்னால் நின்றபடி புல்வர் திடீரென்று கேட்டான்.

''ஆமாம்.''

''எவ்வளவு சீக்கிரம் அதை நிறுத்த முடியுமோ, நிறுத்தி விடுங்கள் என்பதே எனது ஆலோசனை,'' வலியுறுத்தினான் அன்டன்.

நிக்கோலசும் எல்காரும் கையற்ற நிலையைப் பரிமாறிக் கொண்டார்கள்.

'இளநிலை எழுத்தன்' புல்வர், ஜில்ட்சோனிக்கு முன்னால் நின்று கொண்டிருந்தான். பக்கத்திலிருந்து பார்ப்பதற்கு அது சீற்றங்கொண்ட ஓர் ஆசிரியர் மூக்கமான ஒரு மாணவனுக்கு அதட்டிக் கூறுவது போல இருந்தது.

''இருப்பினும், நீங்கள் அவ்வளவு உணர்ச்சியுள்ளவராய்த் தோன்றவில்லை,'' கேலி பேசினான் ஜில்ட்சோனி.

''நீங்கள் எதைப்பற்றிக் கூறுகிறீர்கள்?''

''பௌதிகத்தை விட்டுவிடும்படி நீங்கள் மற்றவர்களுக்கு ஆலோசனை கூறுகிறீர்கள். இருப்பினும் நீங்கள் அந்த அறிவு மரத்திலிருந்து உண்டீர்கள்,'' மெலிந்த குரலில் ஜில்ட்சோனி வலியுறுத்திப் பேசினான், புல்வர் கண்ணுக்கு நேராகப் பார்த்தபடி. புல்வருக்கு திடீரென்று ஒரு நடுக்க உணர்வு ஏற்பட்டதாக அவன் உணர்ந்தான்.

''நீங்கள் தவறாக எண்ணிவிட்டீர்கள், என் இளம் நண்பரே,'' என்றான் புல்வர். ''நான் அந்தப் பழத்தை ஒருபோதும் சாப்பிட்ட தில்லை.''

ஜில்ட்சோனி அவனை சவாலுக்கு இழுப்ப தென்று முடிவு செய்தான்: ''உங்களது புத்தக அலமாரிகளில் ஒரே ஒரு பௌதிக நூல் கூட ஏன் இல்லை என்பதை நான் புரிந்துகொள்ள வில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்களே வேண்டுமென்றே அவற்றை அழித்து விட்டீர்கள். ஏனெனில் நீங்கள் என்ன கண்டு பிடித்தீர்கள் என்பதை யாரும் சந்தேகிக்கக் கூடாது என்பதால்.''

புல்வரின் கண்களில் கணநேரம் ஒருவித மயக்கம் ஏற்பட்டதை ஆல்வார் உணர்ந்தான்.

''ஐன்ஸ்டீனுடைய துயரம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'' வளைத்துக் கேட்டான் புல்வர். ''அவர் மிகவும் முன்னதாகப் பிறந்து விட்டார். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் அணுக்கரு உலகம் பற்றி பௌதிக வாதிகளுக்கு மிகக் குறைவாகவே தெரியும். அந்நாட்களில் இவ்வுலகம் 'விநோதமானதாக' குறிக்கப்படும். விஞ்ஞானக் கட்டுரைகளிலேயே அப்படி என்றால், என்ன செய்ய! அந்த வார்த்தையே தனது இயலாமையை வெளிப் படுத்துகிறது, நிச்சயமாக? ஒரு மேதை ஆதா ரங்களிலிருந்து தொடங்க வேண்டியிருக்கிறது. தனது காலத்தில் எத்தனை பெரிய புத்திசாலி யும் ஒட்டுமொத்தமாக தடுத்து நிறுத்தப்படு வார். அவரது மேடையானது சமகாலத்திய

விஞ்ஞான சாதனைகளின் அளவைப் பொருத் தது. அந்த நிலைமேடை மிகவும் குட்டை யானதாக் இருந்தால், அவர் எவ்வளவு அரக் கனாக இருந்தாலும், உச்சியை அடைய முடி யும்?''

புல்வர் சற்று மூச்சு விட்டுக்கொண்டு மேலும் தொடர்ந்தான்: ''நான் ஐன்ஸ்டீனை விடப் பேறு பெற்றவன். நமது நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் விஞ்ஞானிகள், ஐன் ஸ்டீன் காலத்தில் தெரியாத மோன்ட் பிளாங் ஆய்வுப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து இருக் கிறார்கள்...''

புல்வர் என்ன சொல்லிக் கொண்டிருக் கிறான் என்பதை ஆல்வார் உண்மையாகவே கேட்கவில்லை. தனக்குத் தேவையான விவரத் தை 'இளநிலை எழுத்தனி'டமிருந்து எப்படி வெளிக்கொணரலாம் என்பது குறித்து சிந் தித்துக்கொண்டிருந்தான். அவன் தானாகவே அதை செய்வான் என்பது போல காணப் படவில்லை.

ஸெவோன் சிகரெட்டுகளை அவன் பயன் படுத்த வேண்டியவனானான். ஒரு சிறிய அளவு மனிதனுடைய மனவலிமையை இழக்கச் செய்து விடும். பெருமளவு ஒருவனை நிதா னமிழக்கச் செய்து விடும். அவனுக்கு அதிக ளவு தேவைப்படாது. 'இளநிலை எழுத்தனை'க் கடத்திக் கொண்டு போகும் எண்ணம் ஆல்வா ருக்கு இல்லை. கோட்பாட்டியலான பௌதி கத்தில் அவனுக்கு எவ்வளவு தெரியும் என்பதை கண்டுபிடிக்கவே அவன் விரும்பினான். புல்

வரது குறிப்பிடத்தக்க வயதைக் கருதி, காலத்திற்கேற்றபடி அவனது அறிவின் எல்லை வளர முடியும் என்று நம்புவதற்குக் காரண மில்லை.

இப்பொழுது முக்கியமானது நிக்கோலஸை யும் எல்காரையும் தவிர்ப்பதுதான். ஆல்வார் ஒரு சிகரெட் பாக்கெட் கொண்டு வந்திருந் தான். ஆனால் அதை மூடவில்லை.

''நீ புகைக்கப் போவதைச் சொல்ல விரும்புகிறாயா?'' நிக்கோலஸ் கேட்டான்.

''நான் கவலைப்படும் போது புகைப் பேன்,' என்று சுருக்கிக்கொண்டு பதிலளித்தான் ஜில்ட்சோனி. ஒரு விஷயம் உண்மையாக இருந்தது: அவன் இப்போது அதிகமாகக் கவலைப் படுகிறான். தனது பாக்கெட்டு களைக் கொடுத்த பிறகு ஜில்ட்சோனி கூறினான்: ''பாவம், எனது தீப்பெட்டி யை விடுதியிலேயே மறந்து வைத்து விட் டேன்.''

எல்காரோ, நிக்கோலஸோ புகைக்க மாட் டார்கள் என்று ஆல்வார் நினைத்தான். புல் வரும் புகைப்பவன் போலக் காணப்படவில் லை.

''நாம் சமையலறைக்குச் செல்வோம்,'' என அன்டன் ஆலோசனை கூறினான். ''மின் லைட் டர் அங்கிருக்கிறது.''

சமையலறையில் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்த ஜில்ட்சோனி, அதன் புகை யை புல்வர் மீது கவனமில்லாமல் விடுவது போல விட்டான். தெளிவாகக் காண முடி

யாதபடி நீல வண்ணப் புகை காற்றில் மிதந்தது.

''விநோத சிகரெட்டை நீங்கள் புகைக்கிறீர்கள்,'' என்றான் புல்வர்.

''அவை பற்றி என்ன?''

புல்வர் இருமத் தொடங்கினான். ''அவை ஏதோ வாசனையாக இருக்கிறது... இனிப்பு, இல்லையா?'' என்றான்.

ஜில்ட்சோனி முறுவலித்துச் சொன்னான்: ''எனக்கு விருப்பமான வகை''.

''அவை எப்படி அழைக்கப்படுகின்றன?''

'' 'அண்டவெளிக் கனவு.' ''

''அவை பற்றி கேள்விப்பட்டதே இல்லை,'' புல்வர் தனது தலையை ஆட்டியபடி விமர்சித்தான்.

புகை மேகத்திலிருந்து அவனால் முடிந்த அளவுக்கு நிற்க ஜில்ட்சோனி முயன்றான். அவர்கள் வரவேற்பு அறைக்குத் திரும்பச் சென்றபோது, விருந்தாளி பின்தொடர, ஜில்ட்சோனி சிகரெட்டை அணைத்துவிட்டு, திரும்பவும் தனது பைக்குள் வைத்துக்கொண்டான். எந்தவிதச் சான்றையும் விட்டு வைக்க விரும்பவில்லை...

புல்வரின் முகத்தில் திடீரென்று ஏற்பட்ட வியப்புணர்வு, சங்கடத்தை முகச்சுளிப்பாக்கிக் காட்டியது.

''என்னை மன்னியுங்கள், நன்றாக இருப்பது போல நான் உணரவில்லை,'' இவ்வாறு முணுமுணுத்து விட்டு அவன் ஒரு நாற்காலியில் அமர்ந்தான். விரைந்து ஓடியவந்தவன் போல

மூச்சுத்திணறினான். ''வெளியிலே புழுக்கமாக இருக்கிறது.''

''இடிமழை வந்து கொண்டிருக்கிறது,'' என்றான் நிக்கோலஸ்.

எல்கார் எழுந்து அன்டனுக்கு கொஞ்சம் நீர் கொண்டுவந்தான். அருவருப்போடு அவன் ஒரு வாய் நீர் குடித்தான்.

''ஒரு குவளை நஞ்சு அருந்திவிட்டானோ என்று யாராவது நினைக்கக் கூடும்,'' என்று ஜில்ட்சோனி தனக்குத்தானே நினைத்தான். என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ, அதில் தான் சம்பந்தப்படவில்லை என்று உணர்ந்தான். சாதாரண உலக வழக்கில் அவன் எந்தவகையிலும் குற்றவாளி இல்லை. ஆனால், மேடையில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ அதைக் காணும் வெறும் பார்வையாளர் மட்டுமே அவன். துயரமான நிகழ்ச்சிகளின் முதல் காட்சிகள், ஒருவகையில் எதார்த்தத்தில் கேலிக்கூத்தாக மாறியன. ஆனால் இங்கு இறுதிக் காட்சி வருகிறது. ஜில்ட்சோனி தனது பென்சிலையும், குறிப்பேட்டையும் கொண்டுவந்தான். பயனற்ற பயணங்களால் ஒருவகையில் அது அழுக்கேறிப் போயிருந்தது.

ஒத்தியைந்த வகை இப்பொழுது தேவைப்படுகிறது. எளிமையானதிலிருந்து மிகவும் சிக்கலானது வரை ஆல்வார் தொடங்குவது அவசியமாயிற்று. ஆரம்பத்தில் பௌதிகக் கொள்கைகளின் அடிப்படை சார்ந்த வினாக்களை

அவன் கேட்பான். பிறகு பொது மண்டலத் தத்துவத்திற்குச் செல்வான்.

ஆல்வார் கேள்விகள் கேட்க புல்வர் பதில்களை கூறினான். ஆனால் எந்த வகை யான விடைகளுடன் அவன் வந்திருந்தான். முதலாண்டு மாணவன் அறிந்திருக்க வேண்டிய கேள்வியைக் கேட்டபோது அவன் நிலை குலைந்தான். அடிப்படையை அவன் மறந்து விட்டானா? இதற்கு இடமில்லை. புல்வரின் நினைவாற்றலின் சக்தியை ஜில்ட்சோனி வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தான். ஸெ வோனைப் பொருத்தமட்டில், ஒரு சிறிய அளவால் மனிதனின் மன ஆற்றலைச் சீர் குலைக்கச் செய்ய முடியும். ஆனால் அவனது நினைவை ஏதும் செய்ய முடியாது. திரும்பிப் போவது என்பது இப்போது கிடையாது, காசைச் சுண்டிப்போட்டுப் பார்த்தாலும் சரி.

புல்வரின் மடியில் தனது திறந்த குறிப் பேட்டை வைத்துவிட்டு, அருவருக்கத்தக்க அமைதியைக் கலைத்தபடி ஜில்ட்சோனி கேட்டுக் கொண்டான்: ''நீங்கள் பார்த்தபடி பொது மண்டலச் சமன்பாடுகளை எழுதுங் கள்.''

தன்னிடம் தரப்பட்ட பென்சிலைப் புல்வர் எடுத்து, அதையே உன்னிப்பாகப் பார்த்தான். மிகவும் சுவையான இந்தப் பொருளை முதல் தடவையாகத் தொடுவது போல அவன் காணப்பட்டான்.

கடைசியில் அவன் தெரிவித்தான். ''இந்த

சமன்பாடுகளை என்னால் எழுத முடியாது.''

''உங்களால் முடியாது?''

''மனித இனத்தின் மிகப் பெரும் மூளை யுள்ளவர்களால் அடைய முடியாததை நான் எங்ஙனம் செய்ய முடியும்?''

ஏமாற்றத்தில் ஏற்பட்ட வெறியோடு ஆல் வார் தனது விரல்களை இறுகப் பற்றினான். புல்வர் மீது விழுந்து அவனைத் துண்டு துண் டாகக் கிழித்து எறிவதற்கு அவன் தயாராக இருந்தான். அதனால் லாபம் என்ன? அதைப் பற்றி எந்த ஐயமும் இல்லை. அன்டன் புல்வர் உண்மையைத்தான் சொல்லிக்கொண் டிருந்தான்.

''ஆனால் இவை எல்லாவற்றையும் நீங்கள் எங்கு கேட்டீர்கள்?'' என்று கேட்டான் ஜில்ட் சோனி. விஷயம் எதிர்பாராத வகையில் எப் படியாவது திரும்பி, கைவிடப்பட்ட நம்பிக்கை திரும்பாதா என்று ஏங்கினான்.

''எதைப் பற்றி?'' புல்வர் சுருக்கமாகக் கேட்டான்.

''பரப்பும் காலமும் பற்றி, ஆதாரத் துகள்கள் பற்றி, பொது மண்டலத் தத்துவம் பற்றி.''

''அவை எல்லாவற்றையும் பற்றி நான் படித்திருக்கிறேன்,'' பதிலளித்தான் புல்வர். ''நீண்ட நாட்களுக்கு முன்பு, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு. ஆமாம், இப்பொழுது எனக்கு நினைவிற்கு வருகிறது... அங்கு தான் இவை எல்லாம் தெளிவாகவும், ஆர்வ

மூட்டும் வார்த்தைகளாலும் விவாதிக்கப்பட்டன.''

''அந்நூலின் ஆசிரியர் மார்க் நூரஷ்தானே?'' ஜில்ட்சோனி கேட்டான், இந்நேரத்திற்குள்ளாக புல்வர் பௌதிகம் பற்றிய அவனது அறிவை எங்கே நினைவு கூர்வான் என்ற யூகத்துடன்.

மகிழ்வோடு உரக்க, ''ஆமாம், ஆமாம், அது சரிதான்,'' என்றான் புல்வர். ''கடவுள்தான் — அல்லது குறைந்தது மனித இனத்தின் கடவுள்தான் — பொது மண்டலத் தத்துவத்தின் கம்பீரமான மாளிகையை முடிவாக எழுப்பக் கூடியவர்,'' வெற்றிப் பெருமிதத்துடன் அவன் மெதுவாகக் குறிப்பிட்டான்.

''என்ன அது?''

''மார்க் நூரஷ், **சமன்பாடுகளில் சிக்குண்ட ஓர் உலகம்**, நான்காவது பதிப்பு, பக்கம் 289,'' அவன் விளக்கினான்.

''கணக்கிடுவதில் நீங்கள் மகா புத்திசாலி, கடவுள் சத்தியமாக,'' கூக்குரலிட்டான் ஜில்ட்சோனி, இதற்கு மேல் தன்னைத்தானே கட்டுப்படுத்த முடியாதவனாக. ''எனது கண்களுக்கு முன்னாலேயே வேறுபாட்டளவை சமநிலைகளைத் தீர்ப்பதில் கால்குலேட்டரை ஒதுக்கித் தள்ளிவிட்டீர்கள். அது ஆச்சரியப்படத்தக்கது!''

எல்கார் மேலும் கூறினான்: ''இவ்வுலகில் எவரை விடவும் அண்டன் நன்கு கணக்கிடக் கூடியவன்.''

''கணக்கென்று வரும்போது நான் ஒன்றும்

மோசமில்லை,'' ஒத்துக்கொண்டான் புல்வர். ''நான் குழந்தையாக இருந்தபோது விளங்க முடியாத இயல் நிகழ்ச்சியாக மருத்துவக் கல்லூரியில் நான் காட்டப்பட்டேன். பல தெரியா ராசிகள் கொண்ட சமநிலை முறை களை நான் விடுவித்திருக்கிறேன். நான் அதை எப்படிச் சமாளித்தேன் என்று வியப்படைந்து கூட நிற்கவில்லை.''

''ஆனால் பௌதிகம்? நீங்கள் ஒருபோதும் உண்மையாகவே அதன் பக்கம் திரும்பவில்லை யா?'' ஆல்வார் கேட்டான்.

ஆனால் புல்வர் தனக்குள்ளேயே எதையோ கேட்டுக் கொண்டிருந்தான். அது மற்றவர் களுக்கு உணர முடியாததாகவும், ஆனால் அவனுக்கு மிகவும் முக்கியமானதாகவும் இருந் தது.

ஜில்ட்சோனி தனது வினாவைத் திரும்பவும் கேட்டான்.

''பௌதிகமா? துரதிரஷ்டவசமாக ஒருபோது மில்லை,'' என்றான் தலையை ஆட்டியபடி புல் வர். ''ஆனால் அது ஒருவகையில் எல்லாவற்றுக் கும் நல்லதாகப் போய்விட்டது.''

இப்பொழுது கோபமடைந்த ஜில்ட்சோனி குறிப்பேட்டைத் திரும்பப் பிடுங்கி தனது சட்டைப்பைக்குள் திணித்தான். வெளியேறும் போது கதவில் பலமாகத் தட்டி தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டான். வெளியே சற்று குளிர்ச்சியாக இருந்தது.

மிகுந்த வியப்போடு இக்கதையின் கடைசி அமிசம் முழுவதையும் உற்றுக்கவனித்த நிக்கோ

லசும் எல்காரும் எழுந்து, விரைந்து போகத் தயாரானார்கள்.

''சீரியோ,'' அறையின் அடிப்பகுதியிலிருந்து புல்வரின் மாறுபட்ட குரல் திரும்பவும் வந்தது.

மனங்குழம்பியபடி ஆல்வார் அந்தக் கட்டடத்தை விட்டு வெளியே வந்தபோது, முதல் மழைத்துளிகள் அவன் முகத்தில் விழுந்ததை உணர்ந்தான்: அன்று பகல் முழுக்க மழை அச்சுறுத்திக் கொண்டே இருந்தது. நிக்கோலசும் எல்காரும் ஆல்வாரோடு கஷ்டப்பட்டு நடக்க வேண்டியிருந்தது.

ஆக, இங்கு மற்றுமொரு தோல்வி ஏற்பட்டது. பிக் எக்ஸ் மறுபடியும் விஷயங்களை குழப்பிவிட்டது. இந்தக் குழப்பத்திற்குப் பின்னே ஏதோ ஒருவகையான தர்க்கம் இருக்கிறதென்று ஜில்ட்சோனி இப்பொழுது சிந்திக்கத் தொடங்கினான். ஆனால் என்ன? அது இன்னமும் அவனால் தீர்வு காணப்படாத ஒன்று.

மற்றுமொரு நம்பிக்கை சோப்பில் எழும் குமிழ்போல வெடிக்கவே செய்தது... தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ள ஆல்வாரால் முடிந்தது. அந்தப் பட்டியல் இன்னும் முற்று பெற்று விடவில்லை தானே. கால்பந் தாட்டக் காரனும், கழைக்கூத்தாடியும் இன்னமும் இருந்தார்கள். அவன் கடைசி வரை அதைத் தொடர வேண்டி இருந்தது. எந்த ஒரு வாய்ப்பையும் தவறவிட முடியாது.

''கவலை வேண்டாம், நண்பனே,'' நட்

புடன் தோளைத் தட்டியபடி நிக்கோலஸ் கூறினான். ''லீபினில் உனக்கு ஒரு வேலை கிடைக்கும்.''

''உனக்குப் பணமும் கிடைக்கும்,'' என்று தேற்றினான் எல்கார். ''அன்டனைப் போல நீயும் விரைவாகச் செயல்படுகிறாய்.''

விடுதிக்கு அவர்கள் போய்ச் சேரு முன்னர் இடிமழை தொடர்ந்தது. இடி மேன் மேலும் அதிரிட்டது. வந்து சேர்ந்த போது ஆல்வார் உடல் முழுக்க நனைந்திருந் தான்.

* * *

ஒரு சைகோ கம்பியூட்டர் இயக்குநனின் திறமைகளை ஒழுங்காகவும் விரைவாகவும் செய்ய ஆல்வார் கற்றிருந்தான். லீபினில் கொடுக்கப்பட்ட ஊழியம் நியாயமானதாக இருந்தது. அவனால் ஏதோ கொஞ்சம் சேமிக்க முடிந்தது. ஒரு மேதையைத் தொடர்ந்து தான் தேடுவதற்கு ஆல்வாருக்கு இந்தப் பணம் தேவைப்பட்டது.

எந்திரங்கள் அல்லது ஓரிரு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புரோட்டீன் ரோபாட்டுகள் மீது நம்பிக்கை வைப்பது முற்றிலும் முடியா தது என்பது இதுவரை நிரூபிக்கப்பட்ட போதி லும் சைகோ இயக்குநனின் பணி சலிப்பூட்டி யதும், போதுமான அளவு எளிமைமிக்கதுமா கும்.

லீபினின் 'எழுத்தர்கள்' விளம்பரம் மற்

றும் விற்பனை பற்றிய பிரச்சினைகளில் ஈடு பட்டார்கள். வாடிக்கையாளனது உளவியலைக் கண்டறிந்து நிரல்படுத்தி வைப்பது எளிமையான தில்லை என்பது தெரிந்ததுதான்.

விண்வெளி நிலையத்தில் தனக்கென ஒரு வேலையை அபார் இசாவ் பிடித்துக்கொண்ட போது, விஷயங்கள் மிக நன்றாகச் செல்ல ஆரம்பித்தன. அங்கு எல்லா வேலைகளுமே புரோட்டீன் ரோபாட்டுகளால் செய்யப்பட்டன. ஆனால் விரைவிலேயே அபார் அவைகளோடு வெற்றிகரமாகப் போட்டி போடக் கூடியது தெரிந்தது.

ஒரு நாள் வேலை நேரம் முடிந்த பிறகு ஜில்ட்சோனி எல்காரைச் சந்திக்க வேண்டி வந்தது. முதலில் இவனால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

''எல்கார், உனக்கு என்ன ஆயிற்று?''

துடிதுடிப்புக்காரன் ஏமாற்றத்தோடு தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''அது நமது சவாரியின் விளைவாகும்,'' என்றான்.

''என்ன சவாரி?''

''அன்டனைப் பார்க்க நாம் சவாரி செய்தது. திரும்பி வரும் போது நான் நனைந்து போய்விட்டேன். நீர்ச்சளி பிடித் துக்கொண்டது. நான் இன்னமும் நன்றாக இல்லை. இப்போது ஒரு மாதம் ஆகிவிட் டாலும் எனக்கு இந்த இருமல் நின்றபாடில் லை.''

''அதாவது இங்குள்ள தட்பவெப்ப நிலையை

இன்னமும் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வில்லை என்றா கருதுகிறாய்?'' என்றான் ஆல் வார்.

''இங்குள்ளதா? என்ன சொல்கிறாய்?'' என்றான் எல்கார். ''நீ என்ன, நிலவிலிருந்தா வந்திருக்கிறாய்?''

''நான் சொல்ல விரும்புவது இங்குள்ள இந்த நகரத்தைப் பற்றி,'' என்றான் ஜில்ட் சோனி, தனது தவறை மறைக்க முற்பட்டவன் போல.

''நண்பனே, நீ காலத்தால் சற்று பின் னுக்கு இருக்கிறாய்,'' என்றான் எல்கார். ''தட்பவெப்ப நிலை தொடர்பான ஒரு பொது மையம் இருக்கிறது. அதுவும் தலை நகரத்தில்தான் உள்ளது. எனினும் இப்பொழு தெல்லாம் அங்கும் அதிகமான வேலை நடை பெறுவதில்லை. அது எந்த நேரமும் மூடப்பட லாம்.''

''மூடி விடுவதா, என்ன சொல்கிறாய்?''

எல்கார் விளக்கிச் சொன்னான்: ''கொஞ்சக் காலத்திற்கு முன்னால், அதாவது பத்து ஆண்டுகளுக்கு முன்பு, மக்கள் தட்பவெப்ப நிலையை மாற்றிக் கொள்வதில் மிகவும் ஈடுபட்டார்கள். அது முற்றிலும் குழப்பமாக இருந்தது. ஒருவன் மழையை விரும்பலாம், அதே இடத்திலுள்ள மற்றொருவன் வறட்சி யான தட்பநிலைக்கு ஆசைப்படலாம், மூன்றா வது நபர் முற்றிலும் மாறுபட்ட ஒன்றை விரும்பலாம். இந்நிலையில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஜனாதிபதி, பிக் எக்

ஸிடம் ஆலோசனை கேட்டு, கீழ்வரும் தீர்வைப் பெற்றார்: தட்பவெப்ப நிலையை இயற்கைத் தாயிடம் விட்டு விடுங்கள். அதைக் கட்டுப் படுத்த செயற்கை முறைகளைப் பயன்படுத்த வேண்டாம்.''

''அவர் ஒருபோதும் தவறே செய்ய மாட் டாரா?''

''ஜனாதிபதியா?''

''இல்லை, பிக் எக்ஸ்.''

''நீ கேலி செய்கிறாய் போலும்!'' என்று எல்கார் புன்னகை செய்தான். அவனை அது முன்னர் போலவே பார்க்க வைத்தது.

''நான் புல்வரை சமீபத்தில் இங்கு பார்த்ததில்லை.''

''நீ கேள்விப்படவில்லை என்று சொல்ல வந் தாயா?'' என்றான் துடிதுடிப்புக்காரன், ஆல் வாரை வியப்போடு பார்த்தபடி. ''நமது அன்டன் சுக்கு நூறாகிப் போய் இருப்பான். இதுவும் நாம் போய்ப் பார்த்த பிறகுதான் ஆரம்பமானது. நமது சந்திப்பில் ஏதோ கெட்ட சகுணம் இருந்திருக்க வேண்டும்.''

''அவனுக்கு என்ன நடந்தது?''

''உறக்கமின்மை நோய். நினைவு ஆற்றலும் இல்லை என்று அவன் கூறுகிறான். உனக்கே தெரியும், நினைவுதான் அவனுக்கு எல்லாம் என்று,'' என விளக்கினான் எல்கார்.

ஆல்வார் தலையாட்டிவிட்டு பிறகு கேட் டான்: ''அவனுக்கு என்னவாயிற்று என்று உனக்குத் தெரியுமா?''

துடிதுடிப்புக்காரன் தோள்களைக் குலுக்கிக்

கொண்டு சொன்னான்: ''அது என்னவென்று மருத்துவர்களாலேயே இன்னமும் தீர்மானிக்க முடியவில்லை. அன்று அடித்த புயல்தான் காரணம் என்று நான் நினைக்கிறேன். அவன் வலிமையான உடற்கட்டு பெற்றவனில்லை. அன்டன் தனது உடலையும் உள்ளத்தையும் எப்போதும் ஒரு சேர வைத்திருந்தான் என்பது வியப்பாக இருந்தது. அவன் பெருமையடித்துக் கொள்ள விரும்பினான், உண்மைதான். ஆனால் நல்ல வகையான மனிதன். தனது சகாக்களுக்கு விருப்பத்தோடு உதவி செய்யக் கூடியவன். நிக்கோலசும் நானும் அவனைப் பார்க்கத் திட்டமிட்டிருக்கிறோம். ஏனென்றால் அவனால் இப்பொழுதெல்லாம் எழுந்து கூட நிற்க முடிவதில்லை. நீயும் வருகிறாயா?''

வறண்ட குரலில் ஜில்ட்சோனி பதிலளித்தான்: ''நேரம் இல்லை''.

''என்ன நண்பனோ நீ,'' என்ற எல்கார் விடைபெற்றுக் கொள்ளாமலேயே நடக்கலானான்.

ஏழாவது இயல்

குரோன் ஃபிலின் அல்லது கால்பந்து விஞ்ஞானம் பற்றி

ஆக, கிழக்கத்திய பாலே நடனக் குழுவின் செவிட்டுத் தலைமைப் பாடகி லில்லி ஷார் லொவுடன் தொடங்கிய வியக்கத்தக்க எதிர் பாரா இடையூறுகளின் சங்கிலி சுற்றிக்கொண் டே சென்றது.

சங்கிலித் தொடரில் இரண்டாவது தொ டர்பு, முதலாவதை விடச் சற்றும் விநோதம் குறைந்தது அல்ல. 'மனிதக் கம்பியூட்டரான' அன்டன் புல்வர், 'லீபின் அன் சன்ஸ்' நிறுவ னத்தில் இளநிலை எழுத்தன் ஆவான்.

பிக் எக்ஸின் புதிரை விடுவிப்பது பற்றி மூளையைக் குழப்ப வேண்டியதில்லை: ஜனாதி பதியின் எலெட்ரானிக் உதவியால் தெரிவிக்கப் பட்ட எல்லா நபர்களையும் முதலாவதாக முன்னறிந்து, சோதிக்க வேண்டியது அவசியம் என்ற முடிவுக்கு ஜில்ட்சோனி வந்திருந்தான். சீட்டாட்ட உணர்வு அவனைப் பாதி வழி யில் விட்டுவிடாது.

தேட வேண்டும் என்ற துணிச்சலை அவனுக்குத் தந்ததே, அந்தப் பட்டியலில் அவ னது பெயரும் இடம் பெற்றிருந்ததே ஆகும். பொது மண்டலத் தத்துவத்தில் வேலை செய்து

கொண்டிருந்த அவன் வெளிப்படையாகக் குறிப்பிடத்தக்க அளவு சாதனை செய்திருக் கிறான்.

ஆல்வார் தனது தற்காலிகப் பணியில் போதுமான பணத்தைச் சேர்த்துக்கொண்டதும், அந்த வினா எழுந்தது: அந்தப் பட்டியலில் உள்ள அடுத்த நபர் யாராக இருக்க வேண்டும்? அதில் இன்னமும் இரண்டு பெயர்கள் இருந்தன. அதில் எது முதலாவதாக தொடர வேண்டியது?

இரு நபர்களுமே ஒரே வயதினர். இருவருமே விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்கள்: ஒருவன் உடற்பயிற்சி வல்லுநன் (அல்லது ஒரு கழைக்கூத்தாடி, ஜில்ட்சோனியைப் பொருத்த மட்டில் அதே போலத்தான்), மற்றவன் கால் பந்தாட்டக்காரன். ஜில்ட்சோனி விளையாட்டு உலகிற்கு முற்றிலும் புதியவன். மனிதச் செயல் பாடுகளில் இந்தத் துறையை அவன் எப்போதுமே விரும்புவதில்லை.

* * *

மறுநாள் பறப்பதற்காகத் திட்டமிடப் பட்டது. ஜில்ட்சோனி தெருக்களில் அலைந்து கொண்டிருந்தான். நகரும் பாதையை விட்டு அப்பொழுதுதான் அவன் வந்தான். தனது விடுதியை நோக்கி நடந்து சென்றான். லீபின் எதற்காகவும் சம்பளம் கொடுக்கப்படவில்லை, களைப்பால் ஆல்வாரின் முதுகு வலித்துக் கொண்டிருந்தது. தனக்குச் சேரவேண்டிய

சம்பள பாக்கி முழுவதையும் அவன் பெற்றுக் கொண்டான். நாளை புறப்படப் போகிறான்.

நன்கு வெளிச்சமாக இருந்த ஒரு கடையின் சன்னலுக்கு அருகில் ஒரு பெண் நின்று கொண்டிருப்பதை ஆல்வார் கவனித்தான்.

ஆல்வார் வேகத்தைக் குறைத்தான். அவனது கால்கள் கனந்த எஃகு போல திடீரென்று மாறின. அது ஷெல்லாவா?.. அவள் இங்கு என்ன செய்துகொண்டிருப்பாள்? அவன் பக்கம் முதுகைக் காட்டியபடி அவள் நின்றுகொண்டிருந்தாள். கைப்பிடியைப் பிடித்த வண்ணம், முன்னுக்குச் சாய்ந்தபடி எதையோ அழுத்தமாக உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளிடம் இவன் போகலாமா? முடிவு செய்ய முடியாமல் ஆல்வார் நின்றான். அவனைச் சுற்றி ஆட்கள் சென்றார்கள், நசுக்கவும் செய்தார்கள். ஆனால் எல்லாவற்றையும் அவன் புறக்கணித்தவனாக நின்றான்.

கடந்த காலத்தில் அவளை கைவிட்டு விட்டதாக அவன் முடிவு செய்ததில்லையே? எந்தவகையில் அவளுக்கு அவன் என்ன வழங்க முடியும்? தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதில் எந்தப் பொருளும் இல்லை. ஷெல்லா எப்போதோ அவனை மறந்து விட்டிருக்கக் கூடும். மேலும், அவ்வாறு அவள் செய்யாது இருந்தால் கூட? எதற்காக அவளுக்கு அவன் தேவைப்படுகிறான் — ஓர் அதிர்ஷ்டமில்லாத மேதை?

அது அவள்தானா, வேறு யாருமா? இதை உறுதி செய்துகொள்ள ஆல்வார்க்குத் தேவைப் பட்டதெல்லாம் சில அடிகள் எடுத்துவைக்க வேண்டியதுதான். இருப்பினும் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அந்தப் பெண் கடை சன்னலின் பின்னுக்கு நகர்ந்து, விரைவிலேயே கூட்டத்தோடு கலந்து விட்டாள்.

* * *

விளையாட்டு நகரியம் ஆல்வாரின் மனத்தைக் கவர்ந்தது. அது ஒரு பொம்மை போலக் காணப்பட்டது. குடிசைகள், பசுமையான திறந்த வெளிகள், போக்குவரத்தே முற்றிலும் இல்லாத நிலை, மற்றும் காற்று, அற்புதமான புத்தம் புதிய காற்று!

அந்தச் சிறிய நகரத்தின் அறிமுகமில்லாத சூழ்நிலையை நுகர்ந்து மகிழ்ந்தபடி அவன் காலை நேரம் முழுக்க தெருக்களைச் சுற்றி வந்தான். தன்னைக் கடந்துசென்றவர்களின் பேச்சுக்களை வலிந்து பற்றிக்கொண்டிருந்தான். அவன் அங்கேயே எப்பொழுதுமே வாழ்வதாக இருந்தால் மட்டுமே, சூரிய ஒளியில் கன்றிப் போன இளைஞர்களில் ஒருவனாக, எலெட்ராவின் பயிற்சியாளரால் தனிப்பட்ட முறையில் திட்டமிடப்பட்ட கடுமையான பயிற்சிமுறைகளைப் பின்பற்றுவது பற்றி மட்டுமே கவலைப் படலாம்!

அதிர்ஷ்டம் இந்த முறை அவனைப் பார்த்து சிரிக்குமேயானாலும், குரோன் ஃபிலின் உலகச் சமன்பாட்டை இறுதியாக்க உதவினாலும், அங்கேயே தங்கிவிடுவது நல்ல திட்டம் என்று ஜில்ட்சோனி தனக்குத்தானே எண்ணிக்கொண்டான். பிறகு அவனால் ஷெல் லாவைத் தேட முடியும்... புகழைப் பொருத்த மட்டில், அதன் கதிர்கள் இதுவரைகூடப் பரவி வரும்.

நகரத்திற்குள் சென்றுவரப் புறப்பட்ட போது, அபாரை ஆர்னிதாப்டர் அருகில் இருக்கும்படி ஆல்வார் அறிவுரை கூறி வந்தான்.

இந்த விளையாட்டு நகரியத்தில் குறிப்பிடும் படியான மையப்பகுதியோ வெளிப்புறங்களோ இல்லை. எனவே 'விளையாட்டரங்கம்' என்ற பெரிய அடையாளத்தை அவன் நகரத்தின் எந்தப் பகுதியில் சந்தித்தான் என்பதைச் சொல்ல ஜில்ட்சோனிக்கு முடியாது. அவன் நின்று விட்டான். கால்பந்து ஆட்டக்காரனைக் கண்டுபிடிப்பதற்கு அதுதான் சரியான இடம் என்று தானே எண்ணிக் கொண்டான்.

முன்பெல்லாம் ஆல்வார் நினைத்திருப்பது போல இந்த விளையாட்டு அரங்கில் பார்வையாளர்களுக்கான இடங்களே இல்லை. அவனால் பார்க்க முடிந்ததெல்லாம், அவனுக்குத் தெரியாத பயிற்சிக்கான கருவிகளும், கால்பந்தாட்டக் களமுமே. உண்மையான களம் மகிழ்ச்சிக்குரியதொன்று! அது வழவழப்பாக

புல்லெல்லாம் வெட்டப்பட்டிருக்கும். ஜில்ட் சோனி ஓடு தடத்தைக் கடந்து, வளவளப்பான பரப்பைத் தொட்டான். புல் புதியதாகவும் பசுமையாகவும் இருந்தது. எந்திரங்களால் புல் விதைக்கப்பட்டிருக்கும் என்று ஊகித்துக் கொண்டான். புல்லிதழ்கள் எல்லாம் ஒரே மாதிரியானதாகவே இருப்பதற்காக எந்திரங்கள் மேற்பார்த்து வரக்கூடும்.

விளையாட்டு அரங்கில் யாருமே இல்லை. களைப்பு மேலிட்ட ஆல்வார், அரங்கத்திற்கு அதிகம் தொலைவில்லாதபடி புல்லின் மீது படுத்தான், அருகே இருந்த திறந்த வெளி நீச்சல் குளத்தில் மஞ்சள் இலைகள் மிதந்து கொண்டிருந்தன. அவன் தனது பயோடிரான்ஸ் மீட்டரை மெதுவாக நெறித்தான். ஏனெனில் தனது இருப்பிடத்தை அபார் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக. பிறகு அவன் தூங்கிப் போய்விட்டான்.

அவன் எழுந்தபோது, பருவத்திற்கு மாறுபட்ட வெப்பமான சூரியன், தொடுவானத்தை நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் வீசிய குளுமையான காற்று இலையுதிர் காலம் வந்து கொண்டிருப்பதைக் காட்டியது. ஜில்ட்சோனி புல்லிலிருந்து எழுந்து, சோம்பல் முறித்துக்கொண்டான்.

இப்போது களத்தில் இரண்டு குழுக்கள் நின்றன — ஒன்று கரு நீலம் மற்றது மஞ்சள் சட்டைகளுடன்.

''தேசியக் குழுக்களின் வண்ணங்கள்,'' தூங்கி வழிந்த கண்களைத் தடவிக்கொண்டு

ஜில்ட்சோனி தனக்குத் தானே முணுமுணுத் தான்.

குழுக்கள் ஆட ஆரம்பித்தன. அந்த விளையாட்டு — அல்லது ஒருவேளை வெறு மனே ஒரு பயிற்சி நேரமாகக் கூட இருக் கலாம் — ஓர் எலெட்ரானிக் பொறி ஆட்ட நடுவராகச் செயல்பட்டது. அது ஒரு சிலந்தியைப் போலத் தோன்றியது. தொ லைவிலிருந்து பார்க்க அதன் இயக்கங்கள் சரியாகத் தெரியவில்லை. இருப்பினும் அது தேவைப்படும் இடங்களில் எப்போதும் நின்று கொண்டிருப்பது போலக் காணப்பட்டது. 'சிலந்தி' நம்பிக்கை தரும் வகையில் ஆட்ட நடுவராக விளங்கியது. அதனது எல்லா முடிவுகளும் எந்தவித முணுமுணுப்பும் இன்றி, போட்டியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் ஒன்றும் அதிசயம் இல்லை — ஏனெனில் சாதாரணமான பழையமுறை நடுவர்களைப் போல் அல்லாது 'சிலந்தி' அதன் தலை முழுக்கக் கண்களைக் கொண்டிருந்தது. களத் தில் ஏற்படும் எந்தச் சந்தர்ப்பங்களையும் அது ஒரு நொடிக்கும் குறைவான நேரத்திலேயே மதிப்பிட முடிந்தது. கவர்ச்சியான இந்த விளையாட்டின் ஒவ்வொரு நுட்பத்தையும் கால்பந்தாட்டத்தின் விதிமுறை நூலிலிருந்த எல் லா உட்பிரிவுகளையும் எலெட்ரானிக் நினை வில் பதிவுசெய்தது.

ஜில்ட்சோனி ஆரம்பத்தில் காக்கைக் கூட் டினின்று வந்தபோது, ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாக விளங்கிய உதை பந்தாட்டப்

போட்டிகள் ரோபாட்டுகளால் ஆடப்படுவதாக பல்வேறு மக்களிடமிருந்து கேட்டிருக்கிறான். ஆரம்பத்தில் பார்வையாளர்களுக்கு மிகுந்த ஆர்வத்தை ஊட்டியதன் விளைவாக புரோட்டின் விளையாட்டாளர்களைத் தயாரித்த நிறுவனங்கள் பெரும் பணம் சம்பாதித்து செழித்திருக்கின்றன.

இருப்பினும் இந்தச் செழுமை நீண்ட காலத்திற்கு நீடிக்கவில்லை. ரோபாட் விளையாட்டுகளில் ஏதோ காணப்படாதது போலத் தோன்றியது. ஒருவேளை வாய்ப்புக்கான அமிசம் அதில் இல்லாததுதானோ என்னவோ? அல்லது ஒரு விளையாட்டாளன் தனது கழுத்தை முறித்துக் கொள்ள இடர் வரவு எதையும் செய்ய இதில் கண்டிப்பான எந்தத் தீர்மானமும் இல்லையோ? எதோ ஒரு காரணத்தால் ரோபாட் விளையாட்டைக் காணவரும் பார்வையாளர்கள் குறையத் தொடங்கினார்கள்.

இந்த நேரத்தில் எழுச்சியற்ற நிலையில் இருந்த நிறுவனங்கள் தங்கள் கனவை நினைவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டன. அவைகளில் ஒன்று ரோபாட் கால்பந்தாட்டக்காரர்களின் சுய கட்டுப்பாட்டு உணர்வைக் குறைக்க முடிவு செய்து இருப்பினும் அது நிலைமையைச் சரிக்கட்டவில்லை. விளையாட்டுத் தொடங்கிய நிமிடங்களில் அது வெறும் தரையை மிதிப்பதாகவே இருந்தது. பந்து கைவசம் உள்ள விளையாட்டாளனை நோக்கி எல்லா எதிர் அணியினரும் ஒருசேர முன்னுக்குச்

சென்று திணித்துக் கொண்டு நிற்பார்கள். அதன் பிறகு தாக்கும் அணியின் ஃபார்வேடு கள் சேர்ந்து கொண்டார்கள். விரைவிலேயே அனைத்து இருபத்தி இரண்டு ரோபாட்டுகளுக் கிடையேயும் சச்சரவு வந்து நிற்கும். அது கால்பந்தாக இல்லாமல் மனம்போன போக்கில் அனைவரும் விளையாடும் களமாக மாற நீண்ட நேரமாகாது.

அதில் எந்த விதிகளும் இல்லை! சீற்றங் கொண்ட ரோபாட்டுகள் ஒன்றையொன்று சா வது போல அடித்துக்கொள்ளும். அவைகளின் நீண்ட கரங்கள் மற்றதன் கைகளைப் பற்றி பிரித்து விட முடியாதபடி நிற்கும். டிராக்டர் கள் வைத்து அவற்றை இழுத்துச் செல்ல வேண்டி இருக்கும். கால்பந்தாட்டக் களத்தில் — போர்க்களத்தில் இருப்பது போலக் காணப் படும் — எல்லாமே குவியலாகிவிட்ட பாகங்கள் போலாகி விடும்.

எந்திரமயமாக்கப்பட்ட கால்பந்தாட்டத்தில் அதிகமான குறியிலக்கு கொண்டிருந்த நிறுவனங் கள், விளையாட்டாளர்களின் சுய கட்டுப் பாட்டு உணர்வை வலிமைப்படுத்துவதில் சோத னை செய்ய முயற்சித்தார்கள். பந்துக்கான சண்டை இருப்பதற்கான எந்தத் தடயமும் இல்லை. களத்தில் ஒழுங்கற்ற வகையிலான சச் சரவே எஞ்சியது. சிராய்ப்புகள் அல்லது உண் மையான காயங்களுக்காக அஞ்சி, ஒவ்வொன் றும் இரு மாறுபட்ட திசைகளில் திரும்பிக் கொள்ளும்.

இது கால்பந்தாட்டத்திற்கான பொதுமக்

களின் ஆர்வத்தை எந்தவகையிலும் உயர்த்த வில்லை. மக்கள் மத்தியிலே விளையாட்டைப் புகுத்துவது அவசியமாக இருந்தது. இதன் காரணமாக ஜில்ட்சோனியும் அபாரும் வந்து சேர்ந்த அந்தச் சிறிய நகரத்தில் ஒரு விளை யாட்டு அரங்கு கட்டப்பட்டது.

இன்றைய விளையாட்டு உயிரோட்டமுள்ள தாக இருந்தது. ஒவ்வொரு பந்தய முடிவுக் கிடையேயும் பந்து துள்ளிப்பாய்ந்து கொண் டிருந்தது. 'சிலந்தி' நடுவரின் ஊதல் ஒலிகள் பந்தை உதையும் காலணிகளின் மெத் தொலிகளோடு ஒன்று கலந்தது. ஒரு சிறு பையனைப் போலவே காணப்பட்ட ஓர் இளைஞனின்மீது ஜில்ட்சோனியின் கவனம் திரும்பியது. ஆரம்பத்தில் மற்ற விளையாட் டாளர்களை விட இவன் சுணங்கியவனாகவே காணப்பட்டான். இருப்பினும், விரைவிலேயே தனது முதல் கணிப்பு அலட்சியப்படுத்தக் கூடியதே என்பதை ஆல்வார் உணர்ந்தான். இவன் எந்த ஓர் அபரீதமான போக் கையும் காட்டாததால் ஏற்பட்டதே அவ்வு ணர்வு. பந்தை பெற்றுக்கொண்ட உடனேயே அவன் மாற்றிக்கொண்டான். அது ஒரு வெடிப்பு அல்லது மத்தாப்பு வேலை போலக் காணப்பட்டது. இவன் இலக்கை நோக்கிப் பறந்தான். தன்னை எதிர்த்து நின்ற ஒவ் வொருவரையும் அலைக்கழித்தபடி சென் றான்.

கால்பந்தாட்டம் என்று வந்தபோது ஆல் வார் முற்றிலும் திகைப்புற்றவனாகக் காணப்பட்

டாலும், கருத்துப்போன முகத்தைக் கொண்ட இந்த இளைஞனது விளையாட்டு அவனுக்குப் பரவசமூட்டியது. கால்களை இலேசாக மிதித்து, எடுப்பாக இயங்கியது ஒரு சிறுத்தையை நினைவூட்டுவது போல அவனைப் பார்த்த போது, ஏதோ காரணத்திற்காக ஜில்ட் சோனி மேதைக்கான பிக் எக்ஸின் மற்றுமொரு வேட்பாளராகிய கட்புலனாகாத லில்லி ஷார்லொவின் காலடிகளை நினைவு கூர்ந் தான்.

...நடுவரின் ஒரு நீண்ட ஊதல் ஒலி விளையாட்டை முடிவுக்குக் கொண்டுவந்தது. கருநீலச் சட்டையினர்க்கு அபராத உதைப்பு ஒன்று அளிக்கப்பட்டது. அதைச் செய்வதற் காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் கால்பந் தாட்டக்காரனின் விளையாட்டு ஜில்ட்சோனியின் கவனத்தைக் கவர்ந்தது.

அடையாளங் காட்டப்படுவதை எதிர் பார்த்து அந்த இளைஞன் அசைவற்று நின்றான். ஊதல் ஒலி கொடுக்கப்பட்டது. ஒரு குறு ஓட்டத்திற்குப் பிறகு, அவன் பந்தை பக்கவாட்டில் உதைந்தான். தனது குழுவின் மற்றொரு ஆட்டக்காரனிடம் பந் தைச் செலுத்துவது போலக் காணப்பட் டது. ஆனால் முழுமையாக ஒரு வட்டம டித்து சூறையாடுவது போல அடித்து அவன் பந்தை வலைக்குள் தள்ளினான். எல்லைக் காப்பாளன் அதிர்ச்சியில் தலைமீது கைவைத் தான்.

ரசிகர்கள் இருந்திருப்பார்களேயானால் அரங்

கத்தைத் திணரடித்திருப்பார்கள். இருப்பினும் ஒரே ஒரு பார்வையாளன் இருந்தான்.

முதற்பாதி முடிந்ததைக் குறிக்க 'சிலந்தி' நடுவர் ஊதல் ஒலி கொடுத்தது. களத்தின் மையத்தை நோக்கி விளையாட்டாளர்கள் நடக்கத் தொடங்கினார்கள்.

''குரோன்!'' எங்கிருந்தோ ஒரு குரல்வந் தது.

அழைப்பு வந்த திசையை நோக்கி அக் கருத்த இளைஞன், தனது வெண்பற்கள் பளிச் சிட திரும்பிப் பார்த்தான்.

ஆக, அது இவன்தான்! அவன் நினைப்பது சரிதான். யார் தேடுவானோ அவனே கண்டு பிடிப்பான்! இப்போது ஆல்வார் தன்னைத் தானே அறிமுகம் செய்துகொள்ள வேண் டியதுதான். சந்தேகம் எழாதபடி இருக்க, அவ சரப்படாமல் இருக்க அவன் முடிவு செய் தான்.

மறுநாள் காலை தெளிவாக இருந்தது. சூரியன் நன்கு பளிச்சிட்டது. அபாரை விடுதியிலேயே தங்க வைத்துவிட்டு, தற்போது நன்கு அறிமுகமான விளையாட்டு அரங்கை நோக்கி ஜில்ட்சோனி மட்டும் சென்றான். திட்டமிட்டதற்குச் சற்று காலந்தாழ்த்தியே போனான். மஞ்சள் மற்றும் கருநீலச் சட்டை யினர் ஏற்கெனவே களத்தில் இருந்தனர். பந்தைக் கைப்பற்றுவதில் மும்முரமாக இருந் தார்கள். பழைய நண்பனைப் போல விளை யாட்டாளர்களில் ஒருவன் அவனிடம்தலை யசைத்தான். ஜில்ட்சோனியும் பதிலுக்கு தலை

யசைத்தான். ஒரே பார்வையாளனான இவனை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. எதோ ஒரு தூண் போலவோ; இலைகளின் தொகுப்போ என்று கூட எண்ணியிருக்கக் கூடும்.

விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த போது, தனக்கும் குரோனுக்கும் இடையே எப்படி சந்திப்பை வைத்துக்கொள்வது என்று மண்டையைக் குழப்பிக் கொண்ட போது அவனது மண்டை உடைந்தது போல இருந்தது.

நீலச் சட்டைக்காரர்களின் ஒரு பாது காப்பாளன் எறிவதற்காகப் பந்தைத் தூக்கினான். அந்தக் களத்தின் ஓரத்திலேயே நின்று கொண்டிருந்த ஜில்ட்சோனி, உயரச் சென்ற அந்தப் பந்தைப் பார்ப்பதற்காகத் தலையைத் திரும்பினான். கணப்பொழுதில் அவனுக்கு முன்னால் மஞ்சள் ஒளிக்கற்றை வீசுவது போல, மிகைப்படியான அளவில் தாவி அந்தப் பந்தின் போக்கை மிகவும் துல்லியமாக தடுத்து நிறுத்தப்பட்டு, எதிரியின் அபராதப் பகுதியை நோக்கி, மற்றொரு மஞ்சள் அணிக்காரனிடம் பந்து சென்றுவிட்டது. குரோன் ஃபிலின் எதிர்பாராத இந்தத் தடையை, உயிரற்ற பொருள் போல, விரைந்து கவனித்தான்.

கணநேரத்திற்குப் பிறகு அவர்கள் மீண்டும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டார்கள். பிக் எக்ஸினுடைய தேர்வாளனாகிய அவன் களத்தின் இடதுபுறத்தில் பந்தைக் கொண்டு வந்த போதுதான் இது நடந்தது. அவன்

தாவிக்குதித்தபடி, கிட்டத்தட்ட நடனமாடிய படி வந்தது ஜில்ட்சோனிக்குத் திரும்பவும் லில்லி ஷார்லொவை நினைவுபடுத்தியது. இதற் கிடையில் தன்னைத் தடுக்க வந்தவர்களிடையே வளைந்து சென்று, வெண்ணெய் நடுவே செல் லும் கத்திபோல, அடுத்த வெற்றிப்புள்ளியை ஈட்டினான்.

உடுப்பு அறையிலிருந்து குழுவினர் வெளி யே வரும்வரை ஆல்வார் காத்துக் கொண் டிருந்தான். பிறகு தீர்மானமான நடையுடன் குரோன் ஃபிலினை நோக்கி நடந்தான். அவ நம்பிக்கை, எச்சரிக்கை, எதிர்ப்பு ஆகிய எதற் கும் ஜில்ட்சோனி தயாராக இருந்தான். இருப் பினும் எல்லாம் மிகமிக மகிழ்ச்சியானதாகவும், நேரடியாகவும் இருந்தன.

மிகவும் விரும்பத்தக்க இளைஞனாக குரோன் காணப்பட்டான். அவனது புகழ் இன்னமும் அவனது மண்டைக்குள்ளாகச் செல்லவில்லை என்றே தோன்றியது. கிழக்கத் திய பாலே கம்பெனிக்குத் தான் சென்ற தை நினைவு கூர்ந்தவனாக, ஜில்ட்சோனி தன்னை ஒரு நிருபனாக அறிமுகம் செய்து கொண்டான். சில வழக்கமான வினாக்களுடன் தொடங்கினான்—ஆரம்பத்தில் சற்று தயக்கம் இருந்தது—உண்மையாகவே அவர்களது உரை யாடல் தொடங்கியது. அவர்கள் பேசிக் கொண்டே நடந்தார்கள், அவர்கள் இருவர் மட்டுந்தான்.

''கால்பந்தில் நான் விருப்பங் கொண்ட வன்,'' என்று தொடங்கினான் ஆல்வார்.

''ரோபாட்டுகளை வைத்து ஆடப்படும் போட்டிகள் கைவிடப்பட்டு மக்களுடைய குழுக்களுக்கு இடையேயான போட்டிகள் திரும்பவும் வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.''

மிகுந்த ஆதரவு தரும் நோக்கத்தோடு, 'நானும் அப்படித்தான் கனவு காண்கிறேன்,'' என்ற குரோன், குளியலுக்குப் பிறகு தன் தலைமுடியை நீவி விட்டவாறே கூறினான்.

''இங்கு பாருங்கள், குரோன்...''

''என் பெயரை எப்படி நீங்கள் தெரிந்து கொண்டீர்கள்?''

''அரங்கில் யாரோ கத்திய போது நான் கேட்டேன். ரோபாட்டுகளுக்கு இடையேயான போட்டி என்ஜினியர்களுக்கு வேண்டுமானால் ஆர்வமூட்டுவதாக இருக்கும் என்ற நம்பிக்கைக்கு வந்தேன். எந்த அணி சிறப்பாக இருக்கிறது என அவர்கள் ஆர்வங்காட்டலாம்.''

''ஒவ்வொருவரும் இதை உணர்ந்து கொண்டால்...''

''அவர்கள் உணரத்தான் போகிறார்கள்!'' என்று உறுதி கூறினான் ஜில்ட்சோனி. ''எனது கட்டுரையின் மையப் பகுதி, தேசியக் குழுவில் மைய ஆட்டக்காரனாக ஆடிய குரோன் ஃபிலினைப் பற்றித்தான்.''

''அதற்கு ஒன்றும் அவசியமில்லை.''

''நான் உங்கள் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்.''

''அதுவல்ல முக்கியம். மனிதக் குழுக்கள் ஆடுவதற்காக இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்

பட்ட வரை, இதுபற்றி ஒரு வார்த்தைகூட வெளியிடப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா என்ன?''

''எனக்குத் தெரியும்,'' என்று தலையசைத்தான் ஆல்வார். ''எனது கட்டுரை முன்கூட்டியே தயாரிக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். தடை நீக்கப்பட்டவுடனேயே நான் இக்கட்டுரையை வெளியிடுவேன்.''

பெரிய மரங்கள் வளர்ந்திருந்த முற்றிலும் சிறிய தெரு வழியாக இப்போது அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். குரோனின் நடக்கும் பாணியில் விளையாட்டு வீரனுக்குரிய ஆர்வம் காணப்பட்டது. ஒரு முழுமையான போட்டி விளையாட்டில் பங்கெடுத்துக்கொண்ட பிறகும் புத்தம் புது மலர் போல புத்துணர்ச்சியோடு இருந்தான்.

குரோன் கால்பந்தைப் பற்றித் திரும்பவும் பேசத்தொடங்கினான். உரையாடல் தொடர்ச்சியாக நடைபெற்று வெற்றிபெற வேண்டும் என ஜில்ட்சோனி முயன்றான். மிக முக்கியமான தலைப்புக்கு மாறுவதற்கான சரியான கணத்தைத் தேர்ந்தெடுத்தான்.

''கால்பந்தைப் போல மற்றவற்றிலும் நீங்கள் அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என நான் நினைப்பது சரிதானா?'' என்று ஜில்ட்சோனி தொடங்கினான்.

''என்ன?'' என்று ஆர்வத்தோடு வினவினான் குரோன்.

ஆல்வார் அவனை அழுத்தமாகப் பார்த்தபடி

சொன்னான்: "நீங்கள் வேறு எதிலாவது அக்கறை கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்."

"உதாரணமாக?"

"பௌதிகம் போல."

"மிகவும் வியப்புக்குரியது!" என்று குரோன் வியந்தான். "இதை எங்ஙனம் நீங்கள் ஊகித்தீர்கள்? உண்மையில் எனது ஓய்வு நேரத்தை நான் பௌதிகத்தில்தான் செலவு செய்கிறேன். ஆனால் இதுபற்றி எந்த ஆன்மாவும் இந்த உலகத்தில் அறியாது."

ஜில்ட்சோனியின் இதயம் தூள்தூளாக நொறுங்கத் தொடங்கியது.

"நான் முன்னமேயே கூறியது போல, நிருபர்களாகிய நாங்கள் எங்களுக்குரிய தொழில் ரகசியங்களைக் கொண்டிருக்கிறோம்!"

கடைசியாகத் தூண்டில் துடித்தது. கயிறு விறைப்பானது. இதோ ஒரு கடி! பிக் எக்ஸுக்கு நன்றி! சரியான நேரத்தில் இனி அதைப் பிடிக்க வேண்டியதுதான். மீனைத் திகிலடையச் செய்யக் கூடாது. ஸெவோன் சிகரெட்டுகளுக்குப் போக வேண்டி இருக்காது என்பது போலக் காணப்பட்டது.

"என்னைப் பொருத்தமட்டில் வாழ்க்கையில் முக்கியமானது கால்பந்தே தவிர, பௌதிகம் அல்ல," என விளக்கினான் குரோன்.

"உண்மையாகத்தான்!" என்று தூளாக்குவது போல ஜில்ட்சோனி பேசினான். "ஆனால்

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க முடியுமா?''

''கேளுங்கள்.''

''பௌதிகத்தில் எந்தப் பிரிவில் நீங்கள் ஆர்வம் கொண்டிருக்கிறீர்கள்?''

''கால்பந்தோடு தொடர்பு கொண்ட எந்திரவியலில் தான்,'' என்றான் குரோன்.

''குவாண்டும் எந்திரவியலா?'' என்று நம்பிக்கையோடு கேட்டான் ஜில்ட்சோனி.

''ஏன் குவாண்டும் எந்திரவியல்? இல்லை, நியூட்டனியன் எந்திரவியல்தான்.''

''நியூட்டனியன் எந்திரவியல்,'' என்று ஆல்வார் ஏமாற்றமடைந்த குரலில் எதிரொலித்தான்.

''நான் நேரடியாகவே எந்திரவியல் படிக்கிறேன், அடிப்படைக் கொள்கைகளை. இதைத்தான் நீங்கள் உங்களது கட்டுரையில் குறிப்பிட வேண்டும்,'' என்று குரோன் விளக்கினான். அவன் ஆல்வாரை உற்றுப்பார்த்துவிட்டுக் கேட்டான்: ''நீங்கள் நியூட்டன் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''இவன் என்னை பாதையிலிருந்து விலக்கிச் செல்ல முயற்சிக்கிறான்,'' என்று ஆல்வார் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

''உங்களுக்கு என்னவென்று தெரியுமா?'' என்று திடீரென்று குரோன் வினவினான். ''எனது தங்குமிடத்திற்கு நாம் போகலாம்.''

போகும் வழியில், குரோன் மற்ற எல்லா விளையாட்டுக்காரர்களையும் போல, இந்த

விளையாட்டுத் துறைக்கு வருவதற்கு முன்னர், பிக் எக்ஸைச் சந்தித்தது எப்படி என்பதை விளக்கிக்கொண்டு போனான்.

வித்தியாசமற்ற குரலில் ஜில்ட்சோனி கேட்டான்: ''இந்த பிக் எக்ஸ் யார்?''

''நீங்கள் பிக் எக்ஸைப் பற்றிக் கேள்விப் படவில்லையா?'' என்று வியப்போடு கேட்டான் குரோன். ''உங்களைப் பற்றி ஒவ்வொன்றும் அவருக்குத் தெரியும்.''

''ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமா?''

''பிக் எக்ஸ் ஒரு மனிதரல்ல, ஆனால் ஓர் எந்திரம்,'' என்று பேசிக்கொண்டே தாவியபடி விளக்கினான் குரோன். ''அவர் தனது நினைவில் ஒவ்வொரு குடிமகனைப் பற்றிய தகவலையும் சேகரித்து வைத்திருக்கிறார். பெரும்பாலும் ஒவ்வொரு கேள்வி பற்றியும் ஜனாதிபதியே பிக் எக்ஸிடம் பேசுவார். எனக்கும் பிக் எக்ஸிடம் பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. அவர் கேள்விகள் கேட்டார், நான் விடைகளைச் சொன்னேன்...''

''எதைப் பற்றி அவர் கேட்டார்?''

''சூரியனுக்குக் கீழே உள்ள எல்லாவற்றைப் பற்றியும். வீண்பேச்சுப் பேசும் சில கிழவர்கள் போல அவர் ஆர்வத்தோடு காணப்பட்டார். மிகவும் அற்பமான விஷயங்களைப் பற்றி என்னைக் கேட்டார். எல்லாவற்றையும் அறிந்துகொள்ள விரும்பினார்.''

''எதற்காக இத்தகவலை பிக் எக்ஸ் விரும்பினார்?''

''நீ எதற்குத் தகுதிபடைத்தவன் என்பதை

முடிவுகட்ட இந்த வினாக்கள் கேட்கப்பட்ட தாக கூறுகிறார்கள்.''

''அவர் உங்களை எப்படி மதிப்பிட்டார்?''

குரோன் குலுக்கிவிட்டுப் பேசினான்: ''என்னுடைய பயிற்சியாளர்கள் அதை அறிவார்கள், எனக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் இங்கிருக்கிறோம்!''

விளையாட்டாளர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தரமான கட்டடத் தொகுதியில் சிறப்பான அறை ஒன்றுக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

உள்ளே போனதும் குரோன் பேசினான்: ''தயவு செய்து அமருங்கள். ஒரு நிமிடத்தில் உங்களோடு இருப்பேன்.''

அவன் கதவைச் சாத்திவிட்டுப் போன உடனேயே ஆல்வார் புத்தக அலமாரிக்கு விரைந்தான். அதிகமாக படிக்கப்பட்ட ஒரு கனத்த தொகுதி ஒன்று அங்கே இருந்தது. மார்க்நூரஷ்! முதல் பக்கத்தில் இவ்வாறு அர்பணம் செய்யப்பட்டிருந்தது: ''குரோனுக்கு — குழுவிலுள்ள நண்பர்கள் சார்பாக, உனது பதினெட்டாவது பிறந்த நாளுக்கு, உடல் நலமும், மகிழ்ச்சியும், கணக்கற்ற வெற்றியும் பெற வாழ்த்திக் கொண்டு!''

குரோனுக்கு அவனது நண்பர்கள் மார்க்நூரஷினுடைய நூலைக் குறிப்பிட்டுக் கொடுக்க முடிவு செய்தது ஏன்? இவனுக்கு பௌதிகத்தில் ஆர்வம் இருக்கிறது என்பதற்காக மட்டும் குறிப்பாக இருக்க முடியுமா? ஆல்வார் அந்தப் புத்தகத்தை வைத்துவிட்டு அடுத்ததை

எடுத்தான்: கால்பந்து விளையாடுவது: இருபதாம் நூற்றாண்டில் கால்பந்து விளையாட்டின் ஆடும் முறை மற்றும் தந்திரங்கள் குறித்த திறனாய்வு. இது வண்ணப் புகைப்படங்கள் கொண்ட மிகப் பெரிய அளவு நூல். மனிதன் அல்லது ரோபாட்?, ரோபாட்டின் பிசகற்ற உதை, மனிதனது உதைக் கும் சக்தியை நாம் நம்பலாமா? — இவை பிற தலைப்புக்களாகும்.

பிறகு, தான் தேடிக்கொண்டிருந்ததை ஜில்ட்சோனி கண்டுபிடித்தான்: கவர்ச்சியாக கோப்பு செய்யப்பட்டிருந்த தொகுதி பகுப் பாராய்ச்சி எந்திரவியலின் கொள்கைகள். இது நியூட்டனின் எந்திரவியலின் விரிவான நூல் என்பதை அவனுக்கு விளக்க வேண்டியதில்லை. அந்த கணத்தில் நோய் கண்டிருந்த அவனது மனத்திற்கு நோய் தீர்க்கும் சஞ்சீவியாக அந் நூல் தோன்றியது. முனை கிழிந்து போயி ருந்த அந்நூலின் பக்கங்களிலிருந்து அதன் உள் ளடக்கத்தைக் குரோன் கவனமாகப் படித் திருப்பது தெரிந்தது. எல்லாமே மோசமான தில்லை.

அவன் கடந்த காலத்தில் தேடிக்கொண் டிருந்த ஒரு விஷயம் பற்றிய விதியை எண்ணிய வனாகப் பக்கங்களைப் புரட்டிக்கொண்டிருந்த போது...

அப்போதைக்கு குரோன் உள்ளே நுழைந் தான்.

புத்தகத்தை அலமாரியில் வைத்தபடி, ''கால் பந்து வீரர்கள் தங்களது ஓய்வு நேரத்தை எங்ஙனம் செலவு செய்கிறார்கள் என்பதை

அறிவதில் நான் அக்கறை கொண்டிருக்கிறேன்,'' என்றான் ஆல்வார். ''எனது கட்டுரைக்கு ஏதாவது விஷயம் வேண்டுமென்று விரும்புகிறேன். விஞ்ஞான ஆராய்ச்சியில் நீங்கள் அதிகமான நேரத்தைச் செலவிடுகிறீர்களா?''

''ஆராய்ச்சி என்று நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்? நான் முன்னமேயே உங்களிடம் சொல்லியிருந்தேனே, எனக்கு கால்பந்திற்கு எந்திரவியல் தேவைப்படுவதாக.''

ஃபிலின் பக்கத்தில் கூர்ந்து நோக்கியபடி, ''அதற்காக மட்டுந்தானா?'' என்று கேட்டான் ஆல்வார்.

''ஆமாம்,'' என்று உறுதிசெய்தான் குரோன். ''விளையாட்டு குறித்த கணக்கற்ற இலக்கியங்களை நான் படித்திருக்கிறேன். மிகப் பெரிய கால்பந்தாட்டக்காரர்கள் என்று அந்நாட்களில் பத்திரிகைகளால் பாராட்டப்பட்டவர்கள் மேற்போக்கான அறிவுள்ளவர்களே தவிர மற்றவர்கள் அல்ல, என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்.''

''அருமையாக இருக்கிறது,'' என்று ஜில்ட்சோனி அழுத்தமான குரலில் அதை விமர்சனம் செய்தான். தனது பையில் சிகரெட்டுப் பெட்டியை விரல்களால் தேடித்தடவிய போது, ''இந்த எந்திரவியல் எங்கிருந்து வந்தது?'' எனக் கேட்டான்.

''ஒரு நிமிடம் பொறுங்கள்! ஓர் உதாரணத்தோடு தொடங்குகிறேன். இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கால்பந்து ஆட்டம் பற்றிய

பழைய படச்சுருள் ஒன்றை திரைப்பட ஆவணக்காப்பகத்தில் நான் பார்த்தேன். ஒரு குழுவின் மைய ஆட்டக்காரன் ஒருவன் மீது எனது கவனம் திரும்பியது. அவன் பெயர் எவ்சீபியோ. அவனைப் புகழ்ந்து பத்திரிகைகள் எழுதின. மொஸாம்பிக்கின் மந்திரவாதி! கால்பந்துக் களத்தின் அதிசயம்! என்பன போன்ற வகையில் ஏராளமாக எழுதின. அந்த அதிசய விளையாட்டுக்காரனைப் பற்றி விவரமாகக் கற்றறிய விரும்பினேன் சொல்லப் போனால் அவனது ஆட்டத்தின் எந்திரவியல் மூலத்தைப் பகுத்துப் பார்க்க விரும்பினேன்.

அந்த நபர் நன்றாகவே விளையாடினான், மிக நன்றாகவே செய்தான் என்றே சொல்ல வேண்டும். இருப்பினும் களத்தில் எத்தனை மோசமான தவறுகளைச் செய்தான் என்பதை அறிய நீங்கள் வியப்படையக் கூடும். சில வேளைகளில் அவன் தவறான திசை நோக்கி ஓடத் தொடங்குவான். சில வேளைகளில் பந்தைத் தொடர்ந்து மிக வேகமாக ஓடுவான். ஆனால் சில நேரங்களில் தேவையான அளவுக்கு ஓட மாட்டான். சில நேரங்களில் தாவுவதைக் கூடத் தவறாக மதிப்பிட்டு விடுவான், அடிப்பதுகூடத் தவறிப்போகும்.''

''குறியிலக்கைப் பொருந்து?''

''நீங்கள் அவற்றைப் பார்த்திருக்க வேண்டும். அந்த ஆங்கில உலகக் கோப்பைக்கான குறியீட்டாளர்களில் எவ்சீபியோ முதன்மையாக நின்றான்.''

''வெற்றியாளர்கள் விமர்சனத்திற்கு அப் பாற் பட்டவர்கள்.''

''ஆனால் அவனால் இன்னும் பத்து மடங்கு அதிகமான குறியிலக்கைப் பெற்றிருக்க முடி யும்!''

நையாண்டிப் புன்னகை செய்தவாறு ஜில்ட் சோனி குறிப்பிட்டான்: ''அவன் எந்திரவியல் படித்திருப்பானேயானால்?''

''சரியாகச் சொன்னீர்கள்,'' என்று முற்றி லும் கலக்கமுறாதபடி ஃபிலின் குறிப்பிட்டான். ''விளையாட்டைப் பற்றி ஒன்றும் தெரியாத மக்கள் தான் அதை எளிமையானதாகவே பார்ப்பார்கள். ஒரு குறிப்பிட்ட விதிமுறை களுக்கு உட்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சக்திகள் போராடுவதைத் தவிர விளையாட்டில் என்ன இருக்கிறது? அப்படித் தான் இல்லையா?''

ஜில்ட்சோனி தலையசைத்தான்.

குரோன் மேலும் தொடர்ந்தான்: ''ஆனா லும் கிட்டத்தட்ட ஒவ்வொரு மனித நடவடிக் கையும் மேற்குறித்த நிபந்தனைகளில் விளக்கக் கூடியதே: போர், வர்த்தகம், காதல், புதிய கோளங்களை வெற்றி கொள்ளுதல். விஞ்ஞான வேட்கையில் கூட — அதுவும் ஒருவகை விளை யாட்டுப் போலத் தானே?''

''பௌதிகம் ஒரு விளையாட்டு என்றால், அது விதிகள் இல்லாத ஒரு விளையாட்டு,'' என்று ஆல்வார் கஷ்டத்தோடு கூறினான். பூமி யில் உள்ள எல்லாவற்றையுமே விளையாட்டாக வே மதிப்பிட குரோன் ஃபிலின் முயல்வது

அறிந்து அவன் அதிசயித்தான்.

''என்னால் ஒத்துக்கொள்ள முடியாது,'' என்று மறுத்துச் சொன்னான் குரோன். ''விதிகள் என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள் என்பதைப் பொருத்துத்தான் எல்லாமே அமையும். உலக அளவில் பௌதிக விதிகளைக் கூட எதாவது ஒரு விளையாட்டிற்கு சிறப்பு விதிகளாகக் கொள்ள முடியும்.''

''அப்போது யார் விளையாட்டாளர்களாக இருப்பர்?''

''அது உங்களது நோக்கத்தைப் பொருத்து அமையும். அணுக்களிலிருந்து நட்சத்திரங்கள் வரை எதை வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.''

''அது மிகவும் மலிவான, குறைத்து மதிப்பிடப்பட்ட பார்வை,'' என்று முணுமுணுத்தான் ஜில்ட்சோனி.

''நாம் திரும்பவும் கால்பந்திற்கே வருவோம்,'' என்று தொடர்ந்தான் குரோன். ஜில்ட்சோனியின் மதிப்புக்குறைவான விமர்சனத்தைக் கண்டுகொள்ளவே இல்லை. ''விளையாட்டுக் களத்தில் ஒரு சந்தர்ப்பத்தை நிறுத்தினால், தொடர்ச்சியாக பல வாய்ப்புகள் ஏற்படுத்தும், அவற்றில் ஒன்றே ஒன்றுதான் சிறப்பாக அமையும்.''

''மிகவும் விருப்பமானதை அளிக்கும் பிரச்சினை,'' என்று ஜில்ட்சோனி அனிச்சையாகப் பேசினான்.

''சரிதான்,'' குரோன் விளக்கினான். ''ஒரு குறிப்பிட்ட கணத்தில் பந்து என்னிடம் வரு

வதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தப் பந்தை நான் வைத்துக்கொள்ள வேண்டுமா, எங்கள் அணியினரிடம் செலுத்த வேண்டுமா? எந்த திசையில் நான் செல்ல வேண்டும்? எவ்வளவு விரைந்து? இந்த வினாக்களுக்கெல்லாம் பகுப்பாராய்ச்சி எந் திரவியலின் உதவியாலேயே விடையளிக்க முடி யும்.''

''ஆட்ட நடுவில் பென்சிலையும் தாளையும் தேடி எடுத்துக்கொண்டு, வேறுபாட்டளவை சமநிலைகளைத் தீர்வு காண முயலும் கால்பந்தாட்டக்காரனை இதுவரை நான் காணவில்லை. எந்தவகையிலும் நீங்கள் செஸ் ஆட்டத்தை கால்பந்தோடு ஒப்பிடக் கூடாது.''

''ஓர் உண்மையான கால்பந்தாட்டக்காரன் செஸ் ஆட்டக்காரன் சொல்வது போல, செஸ் போர்டு முழுவதையும் பார்க்க வேண் டும். அவ்வாறு செய்வதில்தான் அவனது திற மையே அடங்கி இருக்கிறது. இங்கு எந்திர வியல் பற்றிய அறிவு கட்டாயம் அவசியமா னது,'' என்று குரோன் வலியுறுத்திச் சொன் னான். ''இந்தப் பிரச்சினையானது கணக்கு அடிப்படையில் மிகவும் சிக்கலானது. ஆனால் அதை நான். தீர்த்து வைப்பேன். இதை நீங் கள் உங்களது கட்டுரையில் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.'' இந்நேரத்தில் குரோனின் கண்கள் கனலெழ எரிந்தன.

ஜில்ட்சோனி தனது உதட்டை ரத்தம் வரத் தொடங்கும் அளவுக்கு பலமாகக்

கடித்துக்கொண்டான். விதி திரும்பவும் அவனை ஏமாற்றிவிட்டது. இப்போது அவனுக்கு ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே எஞ்சி இருந்தது — கழைக்கூத்தாடி லீகோ ஸ்டேவன்.

* * *

ஒருவேளை அவன் கானல் நீரைத் தேடிக் கொண்டிருக்கிறானா? கடைசியில் அவன் தானாகவே மேற்கொண்ட பிரச்சினைக்குத் தீர்வு ஏதும் காணாவிட்டால் என்ன செய்வது? பிக் எக்ஸ் தேர்ந்தெடுத்த நபர்கள் பயனற்றுப் போய்விடுவது ஏன் என்பது தெளிவானது: தந்திரமான எந்திரம், அமைதியாக இருந்து தனது செயலற்ற தன்மையைக் காட்டுவதற்கு பதிலாகச் சரியற்ற தீர்வுகளைச் சொல்வதற்கு விரும்பியது.

இத்தனை ஆண்டுகளாக அவன் காக்கைக் கூட்டில் உட்கார்ந்து கொண்டிருந்ததில் தனது மகிழ்ச்சியை அவன் இழந்து விட்டானா? ஷெல்லா... அவள் இப்போது எங்கிருக்கிறாள்? அதைப் பற்றிய தகவலை பிக் எக்ஸிடம் தான் கேட்க வேண்டும்!

ஆர்னிதாப்டரின் அறையைச் சுற்றிலும் பார்த்தான் ஆல்வார். அபார் கருவிகளின் முன்னால் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தான். தன்னைச் சுற்றி இருப்பவைகளுக்கும், தனது எசமானனின் முணுமுணுப்புக்கும் சம்பந்தப்படாதவன் போல இருந்தான்.

இளநிலை எழுத்தன் அண்டன் புல்வர் வசித்த நகரத்தில் ஏற்பட்ட சந்திப்பின் விவ ரமனைத்தையும் கண்களை மூடிக்கொண்டு நினைவு கூர ஆல்வார் முயன்றான். தெரு, கடை சன்னல், தனக்குப் பின்னால் நின்று கொண்டு சன்னலில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த பெண். அது ஷெல்லா தானா? இல்லையா? இப்போது எதுவுமே பேச்சில்லை...

மகிழ்ச்சி... கடைசியில் இதை விளக்கத்தான் முடியுமா? ஒருவேளை கடவுள் விரிந்த அள விற்கு இல்லையென்றாலும் மிகக் குறைந்த அள வாவது கொடுப்பாரா? ஒருவேளை மகிழ்ச்சி யின் பகுதிகள் விரிவு செய்யப்பட்டால், யுரே னியம் தனது செறிதிரளை அடைகின்ற போது வெடிப்பது போல இருக்குமா? ஒருவேளை யாருடனாவது பங்கு போட்டுக்கொண்டால் தான் மகிழ்ச்சி ஏற்படுமா?

அனைத்து மனித இனத்தையும் மகிழ்ச்சியில் ஆழ்த்த அவன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்! கிளர்ச்சியற்ற அபார் இசாவின் உருவத்தையே ஆல்வார் உற்று நோக்கினான்.

சந்தேகமின்றி, உயர்ந்த நோக்கம் எந்த வழிவகையையும் நியாயப்படுத்தும். நீண்ட காலத்திற்கு முன்பே தனக்குத்தானே இதை முடிவுசெய்திருந்தான். இருப்பினும் இந்நோக்கம் அடைய முடியாததாகப் போகுமேயானால், வானவில்லின் முடிவைப் போல, என்னவாகும்?

தளர்ச்சியின் அக்கணத்தைப் போக்கிக் கொள்ள முயல்வது போல ஆல்வார் தலையை

விரைவாக ஆட்டிக்கொண்டான். இல்லை, ஒவ்வொரு முறையும் பிக் எக்ஸ் தவறாக இருக்க முடியாது.. இன்னும் கடைசி வாய்ப்பு இருக்கவே செய்கிறது—லீகோ ஸ்டேவன்.

அந்த வாய்ப்பை இழந்துவிடக் கூடாது.

எட்டாவது இயல்

கடைசிப் பணயம்

பயணத்தின் போது ஆல்வார் ஜில்ட்சோனி பிக் எக்ஸின் பட்டியலைத் திரும்பத் திரும்ப நினைத்துக்கொண்டே வந்தான்.

லில்லி ஷார்லொ, அன்டன் புல்வர், குரோன் ஃபிலின்... மற்றுமொரு நபரும் உண்டு —அவனேதான். பொது மண்டலத் தத்துவத் திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் தகுதி தனக்கு இருப்பதாக ஆல்வார் ஜில்ட்சோனி நம்பினான். மேதை பட்டியலில் தனது பெயர் இடம் பெற வில்லை என்பதை அறிந்துகொள்ள பதினைந்து ஆண்டுக்கால ஓய்வற்ற கடும் பணி அவனுக்குத் தேவைப்பட்டது.

பிக் எக்ஸ் போன்ற மென்ஸி ஒரு கெட்ட தீர்க்கதரிசியா? உறுதியாக இல்லை!

* * *

பிக் எக்ஸ் குறிப்பிட்ட இடத்தில் லீகோ ஸ்டேவன் காணப்படவில்லை. அப்போதுதான் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தலக் கலை ஞர்களுடன் வாய்ச்சண்டையிட்டுக் கொண்டு,

நகரை விட்டு ஓடிவிட்ட இளம் கழைக்கூத்தாடியைக் கண்டுபிடிக்க ஆல்வாருக்கு மிகப் பெரிய முயற்சி தேவைப்பட்டது.

நேரத்திற்கேற்ப முறுக்கேறும் மீசையோடு சூனியக்காரன் போலக் காட்சியளித்த சர்க்கஸ் முதலாளி சீற்றத்துடன் பேசினான்: ''நினைத்துப் பாருங்கள், அவன் பிற குழுவினரை, தனது சகாக்களை கடல் நாய்களின் கூட்டம் என்று அழைத்திருக்கிறான். அவர்கள் எல்லாருமே ரோபாட்டுகளிடம் எல்லாவற்றையும் பொறுப்புச் சாட்டக் கூடியவர்கள் தாம் என்றான். அவன் தன்னுடன் தனது சில நண்பர்களைக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறான், அவ்வளவு தான்.''

''ஆனால், லீகோ அவனைப் பொருத்த மட்டில் நல்லவனா?'' ஜில்ட்சோனி கேட்டான். ஆக, இந்தப் பயணம் அவனது லட்சியத்திற்குக் கொண்டுசெல்லவில்லை: மறதி மிக்க கிழப் பேர்வழிக்கு லீகோ ஸ்டேவன் எந்தத் திசையில் நடந்தான் என்பதைச் சொல்லும் அறிவு கூட இல்லை.

ஆல்வாரின் வினா கணநேரத்திற்கு எதுவும் பேசவிடாமல் அவனைச் செய்து விட்டது.

''நேர்மையாகச் சொன்னால்...'' கிழவன் தயக்கத்துடன் பேசினான், பதிலுக்குத் தேடுவது போல. ''தனது சகாக்களை கீழாகப் பார்க்க லீகோவுக்கு உரிமை இருந்தது.''

''ஏன்?''

''எனது நேரத்தில் நான் பல கலைஞர்களைப் பார்த்திருக்கிறேன். எல்லாவகையான

கழைக்கூத்தாடிகளையும் நான் பார்த்திருக்கிறேன். சிலர் மற்றவர்களைவிடப் பரவாயில்லை...''

''அப்புறம் லீகோ?''

''அவன் சிறப்பானவன்.''

''தனது தொழிலில் அவன் ஓர் உண்மையான பாண்டித்தியம் உள்ளவனா?'' என்றான் ஜில்ட்சோனி.

சர்க்கஸ் முதலாளி தலையை அசைத்து விட்டுப் பேசினான்: ''அதோடு மட்டுமல்ல. சில வேளைகளில் லீகோ அற்பமான தவறுகள் செய்தான். இருப்பினும் குறைபாடுடைய ஒரு சிங்கம் சிங்கந்தான், குறைபாடே இல்லாத சுண்டெலி சுண்டெலியே தான். இதைவிட வேறென்ன. உங்களுக்குப் புரிகிறதா? பிற நடத்துநர்களிலும் லீகோ வித்தியாசமானவன். சுண்ணாம்புக் கட்டி பாலாடைக் கட்டியிலிருந்து வித்தியாசப்படுவது போல.''

''ஆனால் பறவை பறந்துவிட்டது.''

''பாருங்கள், அந்த இழிந்த இளைஞன் மிகச் சிறந்த இயக்கத்தின் ஒருங்கிசைவு கொண்டிருந்தான்,'' சர்க்கஸ் உரிமையாளன் தொடர்ந்தான். ''அவன் இன்னமும் தீட்டப்படாத வைரந்தான். மறைத்து வைக்கப்பட்ட பளிச்சிடும் நகையைப் பற்றி பலர் அறிய மாட்டார்கள். ஆனால் இப்போதோ பிறகோ ஒவ்வொருவரும் அதைப் பார்ப்பார்கள்.''

''கழைக்கூத்தைத் தவிர லீகோ ஸ்டேவன் வேறு ஏதேனும் வேலை செய்தானா?'' ஜில்ட்சோனி கேட்டான்.

கிழவன் சுருக்கமாகப் பேசினான்: ''பெண் களுக்கு ஏற்றவனல்ல.''

''அவன் படித்திருக்கிறானா?''

''நீங்கள் தவறான நபரிடம் வந்திருக்கிறீர் கள்,'' என்றான் சர்க்கஸ் உரிமையாளன். அவன் மீசை சிலிர்த்தது. ''எனது ஊழியர் களைப் பற்றி ஒற்றுவேலை பார்ப்பது என்பது எனக்கு வெகு தூரம்.''

அந்தக் கிழவனின் கைகள் நடுங்கிக் கொண்டிருப்பதை ஜில்ட்சோனி கவனித்தான். அவனைச் சமாதானப்படுத்த வேண்டி விரைந்து கூறினான்: ''நான் ஒரு ரிப்போர்ட்டர்!'' இதைச் சொல்லும் போது தனது பையிலிருந்து எடுத்த குறிப்பு ஏட்டைத் தட்டினான். ''நான் லீகோ ஸ்டேவனைப் பற்றிக் கேள்வியுற்றிருக் கிறேன். அவனது கதை என்னைப் பரவசப் படுத்தியது. நீங்கள் அவனைப் பற்றிக் கூறு கின்ற விஷயங்கள் அளவுக்கு மீறிய புகழ்ச்சி என்று நான் நினைக்கிறேன்...''

''ஒரு பையன் போல! ஒரு சாதாரண முட் டாள்!'' என்றான் கிழவன் கோபத்தில் திண றியபடி.

''என்னை மன்னியுங்கள்?'' என்று முற்றிலும் அறியாதவன் போல ஜில்ட்சோனி பேசினான்.

''நான் உங்களை நினைக்கவில்லை, ஆனால் லீகோ. தனக்கு மூத்தவர்களது அநுபவத்தை யோ, அவர்களது ஆலோசனையையோ எது வாக இருந்தாலும் அவன் கேட்பதில்லை.'' தனது நெஞ்சைத் தட்டிக்கொண்டு சர்க்கஸ் உரிமையாளன் மேலும் தொடர்ந்தான்:

''அவனுக்குத் துடுக்குத்தனம் அதிகம். ஆகவே தான் இணைக் கம்பிகள் அல்லது பாதுகாப்பு வலைகள் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று அறிவித்தான். சற்று யோசியுங்கள்! சர்க்கசில் நான் நாற்பத்தைந்து ஆண்டுகளைச் செலவிட்டிருக்கிறேன்!..''

இந்தப் பேட்டிக்குப் பிறகு ஜில்ட்சோனி பிற கலைஞர்களிடம் பேசினான். லீகோ தனது நண்பர்களுடன் மேற்குக் கடற்கரைக்கு தங்களது சொந்தத் தொழிற் கருவிகளுடன், எத்தகைய விளைவுகளையும் சந்திக்கத் தயா ராக, செல்லத் திட்டமிட்டிருந்ததாக அவர் களில் ஒருவன் நினைவு கூர்ந்தான்.

மேலும் நேரத்தை வீணாக்கிக் கொண் டிருக்காமல் லீகோவைத் தேடுவதற்கு ஜில்ட் சோனி தயாரானான். சில பயனற்ற தங்கல் களுக்குப் பிறகு, அச்சிறு நகரத்தில் அவன் தனது பயணத்தை நிறுத்த வேண்டியவனா னான். பயணம் மேற்கொண்டுள்ள சர்க்கஸ் குழு முந்திய நாள் நடத்திய நிகழ்ச்சி பற்றிய வருணனை அடங்கிய ஒரு சிறு கட்டுரை வெளி வந்த உள்ளூர் பத்திரிகையை எதிர்பாராதவித மாக அவன் கண்டுபிடித்ததேயாகும்.

அந்தப் பன்னிரண்டு அல்லது அந்தளவுக்கு உள்ள வரிகளை ஜில்ட்சோனி ஆழ்ந்த கவனத் துடன் படித்தான். கையெழுத்து இல்லாத அந்தப் பத்தியின் கடைசியில், இளம் கழைக் கூத்தாடி லீகோ ஸ்டேவன் ரசிகர் மத்தியில் அருமையான பாதிப்பை ஏற்படுத்தி இருந்தான் என ஒரு வரி இருந்தது. அது கண்டுபிடிக்கும்

விளையாட்டையே அவனுக்கு நினைவுபடுத்தியது. அவன் ஸ்டேவனைக் கண்டுபிடிக்கும் வழித் தடத்தை இழந்து போயிருந்தான். இப்போதோ மீண்டும் தடத்தை அடைந்து விட்டான், அந்தக் கழைக்கூத்தாடி இவனைத் திகைக்கச் செய்தபடி இருக்கிறான். தனது கடந்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளை நினைத்து ஆல்வார் எந்நேரமும் அமைதியடைய வேண்டியவனானான்.

விரைவிலேயே ஓர் ஆர்வமூட்டும் விவரம் ஜில்ட்சோனியின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. லீகோ ஸ்டேவனைப் பற்றி உள்ளூர் பத்திரிகைகளில் எழுதும் தன்மை மேன்மேலும் ஆர்வமூட்டுவதாக இருந்தது. மிகக் குறைந்த காலத்திலேயே, சர்க்கஸ் விமர்சகர்கள் அனைவருமே லீகோ ஸ்டேவன் குறித்தே பேசலானார்கள். கடைசியில் மட்டுமே மற்ற குழுவினர்களைப் பற்றி மிகச் சிறிய விமர்சனம் இருந்தது.

அவனைப் பிடிப்போம் என்ற நம்பிக்கையை ஏறத்தாழ இழந்துவிட்ட வேளையில் ஜில்ட்சோனி ஒரு விளம்பரத் தட்டியை, கழைக்கூத்தாடி லீகோ ஸ்டேவனும் அவனது குழுவினரும் அந்த ஊருக்கு விரைவில் வரவிருக்கிறார்கள் என்பதை அவ்வூர் மக்களுக்கு அறிவிக்கக் கூடிய சிறிய கடற்கரை நகராகிய ஆர்போர்வில்லில் கண்டான். அத்தட்டி கழைக்கூத்தாடியை 'புகழ்பெற்ற' லீகோ ஸ்டேவன் எனக் குறிப்பிட்டிருந்ததைக் கவனித்தான். அதற்கு முன்னர் சென்ற எல்லா ஊர்களிலும்

ஸ்டேவன் ஒரே ஒரு தனி நிகழ்ச்சிதான் செய் தான். ஆனால் இங்கோ நான்கு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டிருந்தன.

''இந்தக் கழைக்கூத்தாடியை நாம் கடத்தப் போகிறோம் என்பது நீ அறிவாய் தானே,'' ஜில்ட்சோனி தனது பணியாளனிடம் அறிவித் தான்.

''அவனை நாம் எடுத்துக்கொண்டு எங்கே போகிறோம்?''

''காக்கைக் கூட்டிற்கு.''

''அதன் பிறகு...''

''பிறகு நீ உனது மில்லியனைப் பெறு வாய்,'' என்று அவன் பேச்சைக் குறைத்தான் ஜில்ட்சோனி. ''இப்போதைக்கு இதோ ஸெ வோன் சிகரெட்டுகள்!''

அபார் இசாவ் தன்னிடம் நீட்டப்பட்ட பொட்டலத்தை விரைந்து எடுத்தான், அதில் ஒரே ஒரு சிகரெட் தவிர முழுமையாக இருந் தது. அதுவும் ஆல்வார்—எந்த விளைவும் இல் லாதிருப்பினும்—அன்டன் புல்வரிடம் பயன்படுத் தியது. 'இளநிலை எழுத்தனை'ப் பார்த்தபிறகு அவன் பாக்கெட்டைத் திரும்பவும் கவனமாக மூடிவைத்துக்கொண்டான்.

அபார் அந்தப் பொட்டலத்தை தனது கைகளின் மேல்வைத்துக்கொண்டு, பசியோடு பார்த்தான்.

''அபார்... முட்டாள்தனமாக இப்போது எதையும் செய்து விடாதே,'' எச்சரித்தான் ஆல்வார்.

''ஒரே ஒரு சிகரெட் மட்டும், பாஸ்.''

''இல்லை.''

''ஓர் இழுவை...''

''ஸெவோனால் நீ சாகலாம்.''

அபார் தனது தலையின் பின்புறமாகத் தட வினான்: ''அது வலியைக் குறைக்கும்.''

''உனக்கொன்று சொல்ல இப்போது என்னை விடுவாயா. உனக்கு எது நல்லது எது இல்லாதது என்பது எனக்குத் தெரியும்,'' அழுத்தமாகச் சொன்னான் ஜில்ட்சோனி. ''உனக்குத் திரும்பவும் உயிர் கொடுத்ததே நான் தான், இல்லையா?''

''ஆமாம், பாஸ்,'' அபார் வெட்கத்துடன் ஒத்துக்கொண்டான், சிகரெட்டுகளை உள்ளே வைத்தபடி.

''நாம் கட்டாயம் அந்த இளம் திறமை யாளனைப் பிடித்தாக வேண்டும். இதில் முக்கியமானது என்னவென்றால் ஒரு சாட்சி யே இருக்கக் கூடாது. நான் அடையாளம் காட்டியவுடன் நீ புகைக்கத் தொடங்குவாய். அதன் பிறகு அவன் முகத்துக்கு நேராக புகை யை ஊத வேண்டும். புரிந்ததா?'' என்றான் ஜில்ட்சோனி.

''நிச்சயமாக.''

''மேலும் நீ புகையை உள்ளே இழுக்கக் கூடாது.''

அபார் கீழ்ப்படிதலுடன் தலையசைத்தான்.

''என்னுடைய அறிவுரை இல்லாமல் எதை யும் செய்யக் கூடாது. எப்படியும் எல்லாவற் றையும் நான் பார்த்துக் கொள்வேன்,'' என்று ஆல்வார் மேலும் வலியுறுத்திச் சொன்னான்.

அடுத்த இரண்டு நாட்களுக்கு அவர்கள் லீகோவின் நடவடிக்கைகளை மிக நெருக்க மாக கவனித்து வந்தார்கள். ஆனால் பயன் ஏதுமில்லை. இந்த வேட்டையால் ஏற்பட்ட வெறுப்பில் ஜில்ட்சோனி ஏறத்தாழ ஊளையிடத் தயாராக இருந்தான். லீகோ ஸ்டேவனைச் சுற்றி, பத்திரிகையாளர்கள், அண்டிப்பிழைப்ப வர்கள், விசிறிகள் தொற்றிக்கொண்டே இருந் தார்கள்...

மூன்றாம் நாள் ஆல்வாரின் அதிர்ஷ்டம் நல்லபடியாகத் திரும்பியது. நிகழ்ச்சிக்கு முன் னதாக உலாவி வர லீகோ ஆசைப்பட்டான். ஆனால் யாராவது ஒருவன் அவனுடன் இருப்பது உண்டு. இம்முறை கழைக்கூத்தாடி, தனது விடுதி யிலிருந்து தானாக எப்படியோ வெளியேறி விட்டான்.

அச்சிறு நகரத்தின் தெருக்கள் கூட்டமில்லா மலே இருந்தன. ஸ்டேவன் தன்னைச் சுற்றி மழை அங்கியை நெருக்கமாக அணிந்துகொண்டு, மலையடிவாரத்தை நோக்கி மெதுவாகச் சென் றான். அப்பாதை ஆறு வரை போகும் என்று அவன் முடிவு செய்தான்.

* * *

லீகோ கண்களைத் திறந்தான். அவனது தலை எரிந்துகொண்டிருந்தது. எல்லாவகையான குப்பைகூளங்களும் முழுக்க நிரம்பிக் கிடந்த இறுக்கமான அறையில் இருந்தான். அருகில்

இரண்டு அந்நியர்கள் இருந்தனர். இவனுக்கு அருகில் பூங்காவில் இருந்தவர்களே அவர்கள்.

''நான் எங்கிருக்கிறேன்?'' தளர்ந்த குரலில் லீகோ கேட்டான்.

''நண்பர்களுடன்,'' என்று பதிலளித்தான் ஜில்ட்சோனி. ''நீ விவேகத்தோடு இருந்தால் உனக்கு ஒன்றும் ஆகிவிடாது.''

''இங்கிருந்து என்னைப் போக விடுங்கள்,'' என்று கூறிய லீகோ எழுந்து போக முயன்றான்.

''பொருட்படுத்த வேண்டாம், சிறுவனே,'' எச்சரித்தான் ஜில்ட்சோனி.

அபார் எதுவுமே பேசவில்லை. வாயை மட்டுமே இறுக மூடிக்கொண்டு மேடைக்குள் செல்லும் குத்துச் சண்டைவீரனைப் போல் தயார் நிலையில் தோள்களை வளைய வைத்துக் கொண்டு நின்றான்.

லீகோ உறுமினான்: ''என்னிடம் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்?''

''சில வினாக்களுக்கு எதையும் மறைக்காமல் நீ விடை சொல்ல வேண்டும் என்றே விரும்புகிறேன்,'' என்றான் ஜில்ட்சோனி.

''இன்று மாலை எனக்கு நிகழ்ச்சி இருக்கிறது!''

''அது நடைபெறாது போகுமோ என்று நான் அஞ்சுகிறேன்.''

''என்னை இங்கு வைத்திருக்க உனக்கு எந்த உரிமையும் இல்லை!''

''மிகவும் சரி, சிறுவனே,'' என்றான் ஆல்

வார், தன்னுடைய கைதியைச் சிந்தனையோடு பார்த்தபடி.

மிகுந்த கவனத்துடன் ஒரு கணத்தைத் தேர்ந்தெடுத்து லீகோ துள்ளி எழுந்துநின்றான். அபார் அவனைக் கட்டிப்பிடிக்க முயன்று தோல்வியுற்றான். கழைக்கூத்தாடி சரிவாக இருந்த சுவரை நோக்கி ஓர் எட்டு வைத்து... நின்றுவிட்டான். வெளி திறப்பு என்று அவன் கருதியது ஆர்னிதாப்டரின் சன்னலாக இருந்தது. தூசி படர்ந்த பிளாஸ்டிக்கிற்கு அப்பால் விரைந்து செல்லும் நிழல்களையே அவனால் பார்க்க முடிந்தது. மிகுந்த கவனத்துடன் பார்த்தபோது அவை உண்மையிலேயே மேகங்கள் என்பது தெளிவாகியது.

ஒரு பயங்கரச் சிரிப்பொலி லீகோவை சுய நினைவுக்குக் கொண்டுவந்தது. அவன் திரும்பினான். யாரோ அவனுக்குச் சமீபத்திய கேலி ஒன்றைச் சொன்னது போல, ஜில்ட்சோனி நெஞ்சாரச் சிரித்துக்கொண்டிருந்தான்.

"உன்னை வெளியே விடவா? ஒருவகையில் உனக்குப் பறக்கத் தெரியும்," என்றான் ஜில்ட்சோனி. இப்போது அவன் சிரித்துக் கொண்டிருக்கவில்லை.

முட்டாள்தனமான முறையில் அபார் தனது கைகளை இறக்கைகளைப் போல மேலுங்கீழும் அசைத்துக்கொண்டான்.

"என்னை எங்கு நீங்கள் கூட்டிக்கொண்டு போகிறீர்கள்?" கிசுகிசுத்தான் லீகோ.

"ராக்கி மலைகளுக்கு," என்று அறிவித்தான்

ஆல்வார்.

''ஆனால் அது பல மைல்களுக்கு அப்பால் உள்ளது!''

''உறுதியாக அது அண்மையில் இல்லை.''

''அங்கு எதற்காக நீங்கள் போக விரும்பு கிறீர்கள்?''

''பூங்காவில் நான் ஏற்கெனவே உனக்குக் கூறியிருக்கிறேன். நாங்கள் உன்னோடு நீளப் பேச விரும்புகிறோம்,'' என்றான் ஜில்ட் சோனி.

''ஆர்போர்வில்லில் என்ன குறை?''

''நாம் அங்கு பேசியிருக்கலாம்,'' ஒத்துக் கொண்டான் ஆல்வார். ''ஆனால் உன்னைப் பொருத்தமட்டில் கீழ்ப்படியும் வகையில் நடந்துகொள்ளவில்லை. மேலும் ஓடிப்போக நீ முயன்றாய். ஆகவே, எங்கேனும் அமைதியான இடத்தில் உன்னோடு நாங்கள் பேச வாய்ப்பு வேண்டி நீண்ட தொலைவிற்கு உன்னைக் கூட்டிச் செல்ல முடிவு செய்தோம். ராக்கி மலைகளில் மிகவும் வசதியாக இருக்கும். அப்படித்தானே, அபார்?''

''அவர்கள் பைத்தியங்கள்,'' என்ற தீர் மானத்துக்கு வந்தான் லீகோ. அவர்கள் ஆரம்பித்து வைத்த விளையாட்டைத் தொடர் வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

''நமது... பேச்சை வைத்துக்கொள்ளும் போது பிறகு என்னை நீங்கள் போக விடு வீர்களா?'' விடா முயற்சியோடு லீகோ கேட் டான்.

''அது உன்னைப் பொருத்தது,'' பதிலளித்தான் ஜில்ட்சோனி. ''பரப்பையும் காலத்தையும் உள்ளடக்கிய சூத்திரத்தைக் கணக்கிட எனக்கு உதவ—நீ போக அனுமதிக்கப்படுவாய். பிறகு நீ உன்னுடைய உயரத் தாவுதலுக்குத் திரும்பப் போக முடியும்—அது உன்னுடைய சொந்த வேலை.''

ஸ்டேவன் களைப்போடு ஆல்வாரைப் பார்த்தான். எப்போதோ தனது சிறகுகளை மடக்கி விட்ட ஆர்னிதாப்டர் இப்போது கடும் வேகத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருந்தது. வெளிப்புறத்தில் வானம் இருட்டிக் கொண்டே வந்தது. முதலில் கருஞ்சிவப்பு, பிறகு முற்றாகக் கருப்பானது.

முடிவுரை

விண்தொடர்புக் கூண்டின் கடிகாரம் பத்து அடித்தது.

காலத்தை ஒருவரால் நிறுத்த முடியாது. கண்ணாடி கடிகாரத்தில் குறுமணல் விழுவது போல, தொடர்ச்சியற்ற ஒவ்வொரு விண் அணுவிலிருந்தும் அது கசிந்து ஓடிக்கொண்டிருந்தது. பரப்பிற்கும் காலத்திற்கும் எத்தொடர்பும் இல்லை என்று நியூட்டன் நம்பினார். ஆனால் அவர் கூறுவது தவறு.

மாற்ற முடியாத இயக்கவியல் ஒரே சங்கிலியால் எல்லாவற்றையும் நியூட்ரினோவிலிருந்து நட்சத்திரங்களுக்கு இணைக்கிறது. இந்த வாக்கியத்தை அவன் படித்திருந்தான் என்பது எங்கே இருக்கிறது? ஒருவேளை மார்க் நூரஷினுடையதாக இருக்கலாம். அக்கிழவன் நெற்றியைத் துடைத்துக்கொண்டான். ஆனால் நினைவு அவனுக்கு உதவிக் கரம் நீட்டவில்லை.

இயற்கையில் ஒவ்வொன்றும் பொது மண்டலத்தில் இணைகின்றன. ஆனாலும் அதனது சமன்பாடு இனித்தான் நிறுவப்பட வேண்டும். எந்தத் துகளும் அந்த பொது மண்டலத்தின்

ஓர் எழுச்சியேயாகும். நாமே அதன் கட்டிகள் என்பதைத் தவிர வேறென்ன. அம்மண்டலத் தின் சட்டங்களின் அறிவு ஆயுதங்கொண்டு மனிதன் பரப்பிலும் காலத்திலும் எசமானன் ஆகலாம்.

மனிதனுக்காக மிகச் சிறிய அளவே விடப்பட்டுள்ள போது, மனிதன் காலத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறான் என்பது நிச்சய மாக வஞ்சப் புகழ்ச்சியே ஆகும். அந்தக் கிழவன் குனிந்தவாறு தனது கால்குலேட்ட ரைப் பார்த்தான். புன்னகையால் அவன் முகம் நெளிந்தது.

உலகம் பற்றிய தங்கள் அறிவு முற்றுப் பெற்றுவிட்டது என்று பௌதிகவியலார்கள் கருதிய நேரம் ஒன்றுண்டு. நியூட்டனின் சமன் பாடுகள் உலக முழுமைக்கும் பொதுவான தாகக் கொள்ளப்பட்டது. எந்தச் சக்தியின் கீழ் எந்த வஸ்துவின் இயக்கத்தை அவை வர்ணித்தனவா? ஆரம்ப உந்து விசையாற்றல் அறிவைக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட கோணத்தில் தொடுவானத்தை நோக்கி எறியப்பட்ட ஒரு கல்லின் பாதையை நியூட் டனின் சமன்பாடுகளைப் பயன்படுத்திக் காண முடியும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு கோளின் இருப்பிட நிலையை அறிந்த அறிவோடு, அவரது சமன்பாடுகளைப் பயன் படுத்தி மற்றொரு குறிப்பிட்ட நேரத்தில் அக்கோளம் எங்கிருக்கும் என்பதைக் கணக்கிட முடியும்.

பௌதிகவியலாளர்கள் இந்த உலகம் முழு

மையும் அணுத் துகள்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், உண்மையில் அணுத் துகள்களையே கொண்டிருக்கின்றன என்றும் நம்பினார்கள். அணுக்களுக்குப் பிறகு இவ் வுலகில் வேறெதுவுமே இருக்க முடியாது என்று அவர்கள் கருதினார்கள். அவ்வாறானால், உலகம் பற்றிய, அதன் குணங்கள் பற்றிய பொருள் வரையறை மிகவும் சுலபமானதாக இருக்கும். உலகத்தில் எந்தப் புதிருமே இருக் காது.

இந்த எண்ணத்தை மிகவும் விரிவான வார்த்தைகளில் விளக்கியவர் லப்லாஸ் தான். உலகத்தை உருவாக்குகின்ற ஒவ்வொரு துகள் களின் அடிப்படைப் புள்ளிவிவரங்களை எனக்குத் தாருங்கள், அடுத்து எந்தக் காலக் கட்டத் தில் இந்த உலகம் எப்படியிருக்கும் என்பதை நான் உங்களுக்குக் கூறுகிறேன் என்று சொல்லி இருந்தார். நியூட்டனின் எந்திரவியலின் சமன் பாடுகள், இந்த இயற்கை உலகை முழுமை யாக விவரிக்க முடியும் என விஞ்ஞானி கள் கணக்கற்ற நம்பிக்கை கொண்ட நாளே நியதிவாதத்தின் உச்சநாளாகக் கருதப்பட் டது.

இருப்பினும், சிறிது காலத்திற்குப் பிறகு, ஒரு காலத்தில் நம்பப்பட்டது போல உலகம் அவ்வளவு எளிமையானது அல்ல என்பது நிறுவப்பட்டது. நியூட்டனின் சட்டங்கள் வரை யறைக்குட்பட்ட செயல்பாட்டைக் கொண்ட தே என்பது போலாயிற்று. சிறு அணுத் துகள் கள் பற்றியோ, ஒளி வேகத்தை ஒப்பிடுகின்ற

மிகப் பெரும் வேகங்கள் பற்றியோ தொடர்பு கொள்ள இவை பயன்படாது.

பரப்பின் சிறு பகுதிகள் தங்களுக்கே உரிய சொந்தச் சட்டங்களைக் கொண்டிருக்கின்றன. அவை நியூட்டனின் சட்டங்களுக்குச் சிறிதளவே பொதுவானவை.

எலெட்ரான் என்பது ஒரு துகள், ஆனால் அதேவேளை ஓர் அலையுமாகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் அது இருக்கிறது என்பதைச் சரியாகச் சுட்டிக்காட்ட முடியாது. எலெட்ரானின் சரியான இடத்தைச் சுட்டிக்காட்ட முடியாதது, நமது விஞ்ஞானக் கருவிகளின் குறைபாடுகள் அல்லது சாதாரணத் தன்மை என்பது பொருளல்ல. இதுதான் நிலைமை: நியூட்டனின் சமநிலைகளோடு பொருந்தாத படி தடுக்கும் மிகச் சிறிய அணுத் துகள்களின் உறுதியற்ற நிலை மைக்ரோ உலகில் நிலவுகிறது.

நியூட்டனின் எந்திரவியல் உலகம் முழுமைக்கும் பயன்படுத்தக் கூடியது என்ற நம்பிக்கையும், அதன் சமன்பாடுகள் 'உலகச் சமன்பாடுகள்' என்ற உண்மையும் இறந்து விட்டன. இறந்து விட்ட அது மீண்டும் பிறக்கப் போவதில்லை.

ஐன்ஸ்டீன் மேலும் விரிவான சமநிலைகளை, நியூட்டனின் எந்திரவியலை ஒரு குறிப்பிட்ட தனிமத்தைப் போல உள்ளடக்கியதாக வெளிக்கொணர்ந்தார். இருப்பினும் ஐன்ஸ்டீனின் சமநிலைகள் உலகத்தின் பல

வடிவங்கள் அனைத்திற்கும் பொருந்தக் கூடிய தாக இல்லை...

சிந்தனையில் மூழ்கிய கிழவன் மேசையின் மேல் குவித்து வைக்கப்பட்டிருந்த தனது குறிப்புத் தாள்களையும், அவசரமாக எழுதிய புள்ளிவிவரங்களையும் கூர்ந்து பார்த்தான். இந்த வேலை அவன் சிந்தனைகளைச் செயலிழக்கச் செய்து, ஓர் அமைதியான நிலைக்குக் கொண்டுவந்து விட்டது: அவன் மீது ஏற்பட்ட விளைவை ஸெவோன் 'கனவுப் புகையோடு' ஒப்பிட்டுப்பார்க்கக் கூடியதாக இருந்தது.

கடிகார ஓசையைக் கேட்டபோது அவன் எழுந்தான். சமையலறைக்கு நடந்துபோய் குளிர்பதனப் பெட்டியைத் திறந்தான். கொஞ்ச உணவே எஞ்சியிருந்தது. ஆனால் நகரத்திற்குள்ளாகப் போக வேண்டும் என்ற ஆசை அவனுக்கில்லை.

கிழவன் திரும்பவும் மேசைக்குப் போனான். தூக்கமின்றி கழித்த முந்தைய இரவில் தயாரிந்த குறிப்புக்களை உற்றுப்பார்க்கத் தொடங்கினான். சர்வதேச விஞ்ஞானம் குறித்த அண்மைக்கால முன்னேற்றங்களோடு அவனுக்குத் தொடர்பே இல்லை என்பதை அவன் அறிவான். இது காக்கைக் கூட்டில் அநேக ஆண்டுகள் தனிமை வாழ்வு வாழ்ந்ததன் விளைவாகும்.

பௌதிகத்திற்கு அவனது உண்மையான பங்களிப்புத்தான் என்ன? அவன் பல்கலைக் கழகத்தில் இருந்தபோது வெளியிட்ட பொது

மண்டலத் தத்துவம் பற்றிய ஒருசில கட்டுரைகள்? இருப்பினும் அவை சாரமற்ற குழப்பமான கொள்கைகளாக இன்று இருக்கின்றன. மொத்தத்தில் அவை நேற்றைய விஞ்ஞானமாகும்.

அச்சிடப்பட்ட ஒரு தாளை அவன் மறதியாக ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு மாற்றினான். அவனது சிந்தனைகள் அபார் இசாவைப் பற்றி இருந்தன. அவன் இப்போது எங்கிருக்கிறான் என்று கேட்டுக்கொண்டான். விஷேட டிரான்ஸ்மீட்டரில் பாட்டரியை மாற்ற ஜில்ட்சோனி மறந்ததனால் அதன் அடையாளங்கள் பூஜ்யத்திற்கு ஓடிவிட்டபோது அபார் அகன்று போய்விட்டான். அபார் போன பிறகு ஜில்ட்சோனி நாட்கள் குறித்து விட்டுவிட்டு எண்ணத் தொடங்கினான். அவன் உண்மையில் வயதானவனல்ல, ஆனால் சரியாகத் தாத்தா போல காட்சியளித்தான். அவனது தாடியே அதற்குப் பெரிதும் பொறுப்பாகும். காக்கைக் கூட்டில் வளர்த்ததைப் போல அவன் அதைத் திரும்பவும் வளர்த்திருந்தான். அதன் வெண்மை பழைய ஏற்பாட்டில் வரும் திருத்தூதரைப் போன்று ஆல்வாரை தோன்றச் செய்தது.

மற்றபிற மக்கள் பொறுத்துக்கொள்ளாத காட்சியை இப்பொழுது அவன் கண்டான். பொதுவாக மனித இனத்தால் கைவிடப்பட்டதாக அவன் உணர்ந்தான். அதனது சிறந்த பிரதிநிதிகளால் கூட, குறிப்பாக பிக் எக்ஸால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், உலகச்

சமன்பாட்டிற்குத் தீர்வுசொல்ல முடியவில்லை என்பது இப்போது ஆகிவிட்டது. ஜில்ட்சோனி தனது சக மக்களை அலட்சியம் செய்யவில்லை என்று நினைக்கக் கூடாது. நகரத்திலுள்ள மக்கள் அவனுக்குப் பொருளாகத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

மேதைக்கான கடைசி வேட்பாளரைக் குறித்த ஏமாற்றம் ஆல்வாரை முற்றாக நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது. மிகுந்த சிரமத்துடன் காக்கைக் கூட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட கழைக்கூத்தாடி லீகோ ஸ்டேவன், பிக் எக்ஸின் பட்டியலில் கண்ட பிற நபர் களைப் போலவே பௌதிகத்திலும் ஏதுமறியாத வனாக இருந்தான். ஆகவே ஜில்ட்சோனியின் கடைசி சூதாட்டம் அவனை எங்குமே கொண்டு செல்லவில்லை.

அவன் தனது சாய்வு மேசையின் மீது தாள்களை ஒழுங்கு செய்தபோது, ஆல்வார் பயோடிரான்ஸ்மீட்டரை பார்க்க நேரிட்டு அதை ஓர் ஓரத்தில் வெறுப்போடு எறிந்தான்.

அவனது சன்னல் வழியாக வைகறை மெல் லொளியில் விண்தொடர்புக் கூண்டு சூரியனது சாய்வான கதிர்களால் ஒளி பெற்றது. தாழ் வாக விரைந்து போய்க் கொண்டிருந்த மே கங்களை சூரியனிலிருந்து வந்த வண்ணக் கதிர் கள் திடீரென வெளிப்படுத்தின. காற்றுப் பட்டதனால் கடைசி மூச்சைப் பெற்ற நெ ருப்புக் கங்கு போல அது கொழுந்து விட் டது.

மார்பில் கைகளைக் கட்டியபடி சன்

னலுக்கு வெளியே பார்த்தபடி ஜில்ட்சோனி, ஒரு சிலை போல அசைவற்று நின்றான். ஒரு நொடிக்கு அவன் அபார் இசாவ் போல காணப்பட்டான். உண்மையில் அவனது பல வழிகளையும் சைகைகளையும் தன்னையும் அறியாமலேயே அவன் எடுத்துக்கொண்டு விட்டான். தன்னைச் சுற்றிலும் உள்ள அனைத்திலும் அபார் காட்டும் முரண்பட்ட போக்கு இவனையும் பற்றிக்கொண்டது. அவனைப் போலவே, உயரே இருந்து வருகின்ற உத்தரவுகளுக்குத் தன்னையும் அறியாமலேயே கீழ்ப்படிந்தான். பொது மண்டலத் தத்துவத்தையும் உலகச் சமன்பாட்டையும் அடைய வேண்டும் என்ற வேரூன்றிய வேட்கையே ஆல்வாரின் ஒரே எசமானனாக இருந்தது.

ஜில்ட்சோனி இன்னமும் அதே ஒருமுக எண்ணத்தில் கட்டளை விதியைக் காண்பதில் இரவெல்லாம் வேலை செய்துகொண்டிருந்தான். பிறகு, மறுநாள் காலை என்னவெல்லாம் எழுதினானோ அவற்றையெல்லாம் சரிபார்ப்பான். புடைத்துக்கொண்டு வரும் கோப்புகளில் பொறிக்கப்பட்ட 'முழுமை பெற்ற விளைவுகளின்' ஒன்று சேர்க்கப்பட்டவற்றில் எந்த ஒரு முதலாமாண்டு பல்கலைக்கழக மாணவனும் அப்பட்டமான பிழைகளை டஜன் கணக்கில் கண்டுபிடிக்க முடியும் என்பது அவனுக்குத் தெரியாது.

அந்த இரவும் மறுபடியும் அவனால் பல மணி நேரம் தூங்க முடியவில்லை. மேலும் காலை உதயத்தின் போது ஏற்பட்ட பயங்கர

மான கனவுகளினால் தொந்தரவுக்கு ஆளா னான். ஒருவேளை இன்னும் சில நாட்களில் அவன் உலகச் சமன்பாட்டு வாய்பாட்டை முற்றுப்பெறச் செய்யலாம். தன்னைச் சுற்றிலும் எதிர்ப்பு நிலவும் சூழலில் இங்கு பணியாற்று வது மிகவும் கடினம். ராக்கி மலைகளுக்கே திரும்பப் போவது எவ்வளவு நன்றாக இருக்கும்! எனினும் கையாளப்படும் ரோபாட்டு கள் வெடித்து காக்கைக் கூட்டை முற்றாக அழித்துச் சிதைத்து விட்டன. அந்தக் கவிகை மாடம் இப்போது இல்லை. அவர்களில் மூவர் மட்டுமே—ஆல்வார், அபார் மற்றும் லீகோ ஸ்டேவன்—மயிரிழையில் உயிர்தப்பிப் பிழைத்தனர்.

அதிர்ஷ்டவயமாகத்தான் அந்த வெடிப்பு பகல் நேரத்தில் ஏற்பட்டது. அறிவிப்பு அடை யாளத்தைக் கேட்டு கவிகை மாடத்திலிருந்து குதித்து வெளியேறி பாறைகளின் பின் ஒளிந்துகொண்டார்கள். தான் வைத்திருந்த மதிப்பிடற்கரிய பொருளாகிய—தனது தாள் களை—எப்படியோ ஆல்வார் கொண்டுவந்து விட்டான். பனிக்கட்டியின் மேல் வரையிலும், கீழே பாறைச் சரிவுகளிலும் நட்சத்திரங் களால் அவர்கள் தங்களது வழியைக் கண்டு பயணத்தை மேற்கொண்டார்கள். பூமிக் கோளத்திலிருந்து பல நூற்றாண்டுகால நாகரிகமானது மறைந்துபோய், அவர்கள் முற் கால நாகரிகமற்ற நிலைக்குத் திரும்பவும் மாறிவிட்டது போலக் காணப்பட்டது. எதை நம்ப முடியாவிட்டாலும் தங்களது முரட்டுத்

தனமான வலிமையை மட்டிலும் நம்பும்படி ஆனார்கள்.

கழைக்கூத்தாடியைக் கடத்தியது ஒரு பயனற்ற அநுபவம் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

பயணத்தின் போது லீகோ கிட்டத்தட்ட நிலை குலைந்து போய்விட்டான். ஒரு சந்தர்ப் பத்தில் அவர்கள் பனிப் புயற்காற்றைச் சமா ளிக்க வேண்டியிருந்தது. களைப்பு மிகுதியால் பாதி இறந்தவர்கள் போலாகி, ஒரு சிறிய குகைக்குள் வெதுவெதுப்புக்காக அவர்கள் ஒரு சேர நெருக்கமாக ஊர்ந்து சென்றார்கள். மற்றவர்களை விட அபார் பரவாயில்லை. ஏனெனில் குளிர் அவனை ஒன்றும் செய்யாது. மேலும் மோசமான நிலையிலும் அவனால் சமாளிக்க முடிந்து. கடைசி நாட்களில் அவ னும் சோர்வுற்றுப் போனான்.

நம்பிக்கைக்குரிய ஆர்னிதாப்டர் இப்போது எவ்வளவு மதிப்பற்றதாகி விட்டது! ஆனால் வெடிப்பினால் ஏற்பட்ட தீ விபத்தில் அதுவும் அழிந்துவிட்டது.

பள்ளத்தாக்கில் தானாகவே ஆபத்துக்களை எதிர்நோக்கியபடி இறங்குவதற்கு தனது கூட் டாளிகளைக் கைவிட ஜில்ட்சோனி தயங்கவே இல்லை. ஆனால் அவர்களோடு சேர்ந்திருந் தாலும் பிழைத்து வாழ்வதற்குத் தனக்குச் சிறந்த வாய்ப்பு இருப்பதாக அவன் உணர்ந் தான். காலையில் தூங்கி எழுந்தபோது புயல் வேகம் தணிந்திருப்பதைக் கண்டான். தெர்மா துணி ஆடையிருந்தும் அவனது ஆடை

யின் மீது பனி படர்ந்திருந்தது. குகை நுழை வாயிலில் பனி புடை பெயர்ந்து நின்றது. உச்சி மீது இருந்த சிறிய இடைவெளியின் வழியாக மங்கலான வெளிச்சம் உள்ளே பாய்ந்தது.

அபார் அடுத்து எழுந்தான். அவன் லீகோவை நோக்கி நடந்துசென்று, அவனை எழுப்புவதற்காக உலுப்பத் தொடங்கினான். களைக் கூத்தாடி தனது கண்களைத் திறப்பதற்குச் சற்று நேரம் பிடித்தது. இருப்பினும் அவன் மிகவும் களைப்புற்றுப் போனான். அவனால் கால்களால் எழுந்துகூட நிற்க முடியவில்லை.

''போய்விடுவதற்கு இதுதான் நேரம், மேதையே,'' என்றான் ஜில்ட்சோனி.

ஸ்டேவனுக்கு முன்பாக முழங்காலிட்டபடி நின்ற அபார், ''லீகோவால் நடக்க முடியாது,'' என்று தெரிவித்தான்.

ஜில்ட்சோனி தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டு சொன்னான்: ''அதுதான் அவனது பிரச்சினை.''

அபார் லீகோவைக் கிளப்புவதற்குச் செய்யும் பயனற்ற முயற்சிகளை சிறிது நேரம் பார்த்த பிறகு அவர்கள் இருவரும் போவதற்கு ஏதுவாக போதுமான அளவு பனியை நீக்கி விடுமாறு ஜில்ட்சோனி அறிவுரை கூறினான். அபார் தயங்கினான். தனது பையிலுள்ள டிரான்ஸ்மீட்டரை மெல்ல அழுத்துவதற்காகக் கையை விட்டான் ஆல்வார். பிறகு அபார் லீகோவை விட்டு நகர்ந்து மெதுவாகப் பாதையை நோக்கிச் சென்றான். சிறு ஓட்டம்

எடுத்து தலையை முன்னோக்கிக் கவிழ்த்தவாறு பனிச்சுவரை நோக்கி விரைந்து வந்தான். சில நொடிகளில் பாறை வழி திறந்து கொண்டது.

குகையிலிருந்து முதலாவதாக வந்தவன் ஜில்ட்சோனிதான். பின்புறம் கொஞ்சமும் திரும்பிப் பாராமல் நடந்தான். அபார் சிறிது நேரத்தை வீணாக்கி தனது எசமானனின் அடுத்த உத்தரவிற்காக வீணே காத்திருந்தான். பாஸின் உருவம் தொலைவில் மெல்ல மெல்ல சிறிதாகியது. அபார் வெறுப்பாக உறுமினான் — தனியாக எப்படி முடிவெடுப்பது என்பது அவனுக்குக் கிட்டத்தட்ட மறந்தே போய் விட்டது. டிரான்ஸ்மீட்டரைப் பயன்படுத்துவதை ஜில்ட்சோனி வேண்டுமென்றே செய்யாது இருந்தான்: லீகோ குகையில் விருப்பப்படி செயல்படுவதை அபார் தவிர்க்க வேண்டுமென்று அவன் விரும்பினான்.

ஒரு நூறு அடி தூர அளவு சென்றதும் ஆல்வார், அபாரைப் பார்ப்பதற்காகத் திரும்பினான். குகையிலிருந்து லீகோவைத் தூக்கிக் கொண்டு வருவதில் எடை தாளாது இரண்டாக வளைந்து காணப்பட்டான். பக்கவாட்டில் அசைந்தாலும், கவனமாக நடந்து வந்தான்.

ஆல்வாரின் முதல் விருப்பம் டிரான்ஸ்மீட்டரைப் பயன்படுத்தி, அபாரைப் பனியில் விழச்செய்து வலியினால் துடிக்கச்செய்ய வேண்டும் என்பதாகும். இருப்பினும் ஏதோ இனந்தெரியாத உணர்வு அவனது கையைத்

தடுத்தது. அபார் தன்னை வந்து அடையும் வரை பொறுமையாகக் காத்திருந்தான். பிறகு, அவர்கள் எல்லாருமாக முன்னோக்கிச் சென்றார்கள். நாட்களைப் பற்றிய எண்ணிக்கையையும் விட்டதோடு, காப்பாற்றப் படுவோம் என்ற நம்பிக்கையையும் இழந்து விட்டு அவர்கள் மெதுவாகவே முன்னேறினார்கள். முடிவில் ராக்கி மலைகளின் மேலே பறந்து சென்ற ஒரு விமானத்தால் அவர்கள் பார்க்கப்பட்டார்கள்.

அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குத் திரும்பி விட்டபோது லீகோ ஸ்டேவன் அவனுக்கு எவ்விதத் தொல்லையும் தர முடியும் என ஜில்ட்சோனி அஞ்சாதிருந்தான். ஸெவோனை சுவாசித்த பிறகு துரதிரஷ்டவசமான கழைக் கூத்தாடிக்கு, அவனது நினைவாற்றலில் தெளிவாகவே தொல்லை இருந்தது. கடத்தி வரப்பட்டதைப் பற்றியோ, தன்னிடமிருந்து உலகச் சமன்பாட்டை எப்படியாவது பிழிந்தெடுத்திட வேண்டும் என்பதற்காகக் கையாளப்படும் ஆல்வாரின் விநோதமான கேள்விமுறைகள் பற்றியோ லீகோ எதுவுமே குறிப்பிடவில்லை.

லீகோவிற்கு ஒரே ஒரு கனவு மட்டுந்தான் ஏற்பட்டது: அதுவும் சர்க்கசுக்குத் திரும்பப் போவது போல. இந்த ஆசை மிகவும் அழுத்தமாக இருந்தது. ஸெவோனால்கூட இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அறையின் நிழல்கள் பெரிதாகிக் கொண்டு வந்தன. ஆல்வார் சன்னலிலிருந்து தூரமாக

விலகிச் சென்றான். மேசையின் முன்னால் அமர்ந்து புதிய தாள் ஒன்றை எடுத்தான். நீண்ட இடைவெளியை அவனாக ஏற்படுத்திக் கொள்வதில்லை. இருப்பினும் அதிகமாக பாதிக்கப்பட்ட மூளை கீழ்ப்படியவும் வேலை செய்யவும் மறுத்தது.

தெருவில் நடக்கலானான். புழுக்கமான வெக்கைக்காற்று அவன் மீது படுவது தெரிந்தது.

ஒரு குரலைக் கேட்டான்: ''அதோ வழுக்கைத் தலை வந்திருக்கிறது!''

ஜில்ட்சோனி தன் நடையை வேகப்படுத்தினான். ஆனால் தாமதமாகி விட்டது. எங்கிருந்தும் பையன்கள் ஓடிவந்தார்கள். ஆனால் ஒரு நிமிடத்திற்கு முன்னால் இருண்ட தெரு பாலைவனம் போலாகி விட்டது.

''வழுக்கைத் தலை! வழுக்கைத் தலை!''

நன்கு குறிபார்த்து எறியப்பட்ட கல் அழுத்தமாக அவன் தோள்மீது விழுந்தது. மற்றொன்று அவனது தொப்பியில் பட்டு கண்ணுக்கு மேலாக அதை இறக்கியது. ஆல்வார் ஓடத்தொடங்கினான். முடிவாக, கூக்குரலிட்ட கூட்டம் தனது வேட்டையை விட்டுவிட்டு பின்னுக்குத் தங்கிவிட்டது.

உணவை வாங்கிக்கொண்டு திரும்பும் வழியில் ஜில்ட்சோனி அருகிலிருந்த சதுக்கத்தின் பக்கமாகத் திரும்பினான். அவ்வாறு செய்ய அவன் அடிக்கடி தன்னை அநுமதித்துக் கொள்வதில்லை. வாங்கிய பொருட்களை தன் பக்கத்தில் வைத்தபடி ஒரு பெஞ்சின் மீது அமர்ந்தான். அபார் மட்டும் அங்கு இருந்திருந்தால்,

அவை எல்லாவற்றையும் தூக்குவதற்கு உதவி யிருப்பான்...

கறைபட்ட நினைவுகள் அவனது மூளைக் குள் நிறைய வரத் தொடங்கின. இப்பொழு தெல்லாம் நினைவு அவனைக் கைவிட்டு விடுகிறது. சல்லடை வழியாக நீர் வெளி யேறுவது போல விஷயங்கள் அவனிடமிருந்து நழுவிப் போய்விடுகின்றன. தன்னைத் தானே ரகசியமாக ஒரு கீழ்ப்படிவுள்ள உதவியாள னாக ஆக்கிக்கொண்டு மென்ஸியின் மருத் துவ நிலையத்தில் அபார் விஷயமாக அவன் வேலைசெய்ததை திடீரென்று நினைத்துப் பார்த்தான். இது ஒரு மோசமான திட்டம் அல்ல...

நினைவுகள்...

வீட்டுக்குத் திரும்பியதும் ஜில்ட்சோனி தனது தாள்களை முறைப்படுத்தி வைக்க நினைத்தான். சிவப்பு வலையத்தினால் சுற்றிக் கட்டப்பட்ட குவியலைப் பிரித்துப் போடத் தொடங்கினான். அது அவனது பல்கலைக் கழக நாளைய பத்திரங்கள்தான். காலத்தால் பழுப்பாகி விட்ட அந்தத் தாள்களை அவன் மெதுவாகப் பார்த்தான். மார்க் நூஷுடன் நடத்திய அந்த முடிவற்ற பேச்சுக்கள்... கை வந்த போக்கில் ஒரு தாளை விடுக்கென்று இழுத்தான் ஜில்ட்சோனி.

''இரண்டு முடிவின்மைகள் — கடந்த காலமும் எதிர்காலமும் — சேரும் இடமே மனிதன்,'' இந்த வார்த்தைகளைப் பார்த்த மாத்திரத்தில் நூஷின் குரல் நினைவுக்கு வந்தது.

''அம்மாதிரியான நிலையில் ஒரு மனிதனுடைய மரணம் காலத்தின் போக்கை உடைக்கிறது,'' என்று ஆல்வார் மறுத்தான்.

''நீ இரண்டு விஷயங்களைக் குழப்புகிறாய்,'' என்றான் நூரஷ். ''அறிவான் காலமும் அறிபொருள் காலமும். அல்லது ஒருவேளை காலம் என்பதே இல்லாமல் கூட இருக்கலாம்.''

''அப்போது காலம் பற்றிய எண்ணம் எங்கிருந்து வந்தது?''

''மனிதன் அதைச் சிந்தித்தான்.''

''ஏன்?''

''வெளி உலகத்திலிருந்து அவன் பெறும் கருத்துப்பதிவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக...''

ஜில்ட்சோனி தாள்களை தனது பணி நாற்காலியின் ஓரத்திற்குத் தூக்கினான். பிறகு ஷெல்லாவின் கடிதங்கள் வந்தன. முடியாது, அவன் அவற்றைப் படிக்க மாட்டான். அது மிகுந்த துன்பத்தை ஏற்படுத்தும்...

பிக் எக்ஸால் தேர்வு செய்யப்பட்டவர்களான 'பழைய நண்பர்களோடு' தொடர்பு கொண்ட விஷயங்களைச் சேகரிக்கவும் பாதுகாக்கவும் ஜில்ட்சோனியின் மிகப் பெரிய கோப்பு பயன்பட்டது. அவற்றின் பெரும் பகுதி செய்தித் தாளில் வெட்டப்பட்டவை உண்டு, ஆனால் சில விளம்பரத்தாளும் உண்டு. நான்கு பேருடைய புகழ் மேன்மேலும் பெருகியது. பத்திரிகைகள் எல்லாம் பிக் எக்ஸால் தூண்டி விடப்படுகின்றனவோ என்று சிந்திக்க முடியும்...

ஆரம்பத்தில் ஆல்வார், இந்த நான்கு

பெயர்களோடு தொடர்பு கொண்ட எல்லா வெட்டுத் தாள்களையும் ஒரு குறிப்பிட்ட ஆல்பத்தில் தேதி விவரங்களுடன் ஒட்டி வைப் பதுண்டு. பிறகு அவை அதிகமாகிப் போக வே, மிகவும் சுவையானவற்றை மட்டிலுமே அவன் சேகரிக்கத் தொடங்கினான்.

இதுவே மிகச் சிறந்த வீரவிருது போலி ருக்கட்டும் என்ற மாய எண்ணத்தில் ஒரு பத்திரிகையாளன், "எந்த எந்திரமும் லில்லி ஷார்லோவோடு போட்டியிட முடியாது," என்று எழுதினான். "எந்த ஓர் எந்திரமும் ஒவ்வொரு இயக்கத்தையும் அசைவையும் லில்லி ஷார்லோவைப் போல அவ்வளவு துல்லி யமாகக் கணக்கிட முடியாது. நிறைவு என் பதே அவள்தான்."

குரோன் ஃபிலின் இதற்கிடையில் ஒவ் வொரு பள்ளிமாணவனுக்கும் விசிறியாகி விட்டான். பத்திரிகைகளில் அவனைப் பற்றிய ஏதாவது குறிப்பு இல்லாமல் ஒருநாள் கூடச் சென்றதில்லை. புகழ்பெற்ற கால்பந்தாட்டக் காரனுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட நூல் ஒன்று வெளியிடப்பட்டது. அதன் நடுவில் ஜில்ட்சோனி திறந்தான். அதில் ஒரு குறிப் பிட்ட பகுதியை பென்சிலால் அடையாளமிட்டு இருந்தான். அதை இப்போது மீண்டும் படிக் கலானான்:

"விளையாட்டில் புரோட்டீன் ரோபாட் களின் காலம் முடிந்து விட்டது. பசுமைக் களங்கள், வளையங்கள், உடற்பயிற்சிக் கருவி கள் மற்றும் ஓடு களங்கள் ஆகியவற்றையே

மக்கள் திரும்பவும் விரும்புகிறார்கள். போரிடு கின்ற ஆர்வம், வெற்றிக்காக மனவுறுதி, வற் றாத திறமை ஆகியன, பராமுகமான கணக் கீடுகளையும், செயற்கைப் படைப்புகளின் உயிரற்ற தன்மையினையும் வென்று விட்டன. கால்பந்தாட்டம் புத்துயிர் பெறுவதற்கு முக் கியக் காரணமான மனிதன், எண்ணற்ற பார் வையாளர்கள் கருதுவது போல குரோன் ஃபிலின்தான்.''

இது போன்று பெரிய இடத்து நட்சத்திர மாகிய லீகோ ஸ்டேவன் பற்றி, உவகை வெறியை குணாம்சப்படுத்தும் கட்டுரைகள் வந் திருந்தன. அன்டன் புல்வர் பற்றி அரிதாகத் தான் குறிப்பிடப்பட்டன.

இந்தப் பத்திரிகைகளைப் பார்த்த போது, பிக் எக்ஸால் ஏற்படுத்தப்பட்ட புதிர்த் தேர் வை திரும்பவும் ஒருமுறை புரட்டிப் பார்க்கத் தயாரானான். எலெட்ரானிக் ராட்சசன் தேர்வு செய்யப்பட்டவர்கள் குறித்து சந்தே கத்திற்கிடமின்றி சில மறைமுக அருத்தங் கள் உண்டு. ஏனெனில் அவரது ஒவ்வொரு ஆட்களும் தனது துறையில் உச்சாணியில் நிற்கிறார்கள். இருப்பினும் பௌதிகத்திற்கும் உலகச் சமன்பாட்டிற்கும் எங்கே தொடர் பிருக்கிறது?

* * *

ராக்கி மலைகளில் கடந்து போன காலத் தைப் போல ஆண்டுகள் சலிப்போடு அடுத்

தடுத்து நகர்ந்தன. ஜில்ட்சோனி பனிபோல அவ்வளவு வெள்ளையாக இருந்தான். பழுப் பேறிய வ்யது முதிர்ந்த கண்களால் ஒரு குறிப்பிட்ட இலக்கை தொடர்ச்சியாக நீண்ட நேரம் அவனால் உற்றுப்பார்க்க முடியவில்லை. அறையில் அமர்ந்திருக்கும் பல மணி நேரங் களில் அவன் கண்கள் சுவர்களை வட்டமிடும், புத்தகத்தின் பக்கங்களையும், விதிவாய்ப்பாட் டின் எண்களையும் பார்க்கும். அவன் தனது சரணாலயத்தை விட்டு மிகமிக அரிதாகத்தான் வெளியேறினான். தெருவிற்குள் நுழைந்து வரு வதை விட பட்டினி கிடப்பதையே அவன் பெரிதும் விரும்பினான்.

நேரத்திற்கு நேரம் ஜில்ட்சோனி தனது நாட்குறிப்பில் குறிப்புகளை எழுதுவது, பழைய நினைவுகளைப் பதிவு செய்வது, அவ்வப்பொ ழுது நிகழும் விரிவான நிகழ்ச்சிகளில் நிலை நிற்பனவற்றிற்கு மாறுபாடில்லாது வர்ணம் கொடுப்பதுமாக இருந்தான்.

பக்கங்களைப் புரட்டிப்பார்க்கின்ற போது தனது வாழ்க்கை முடிவுற்றதாக அவன் நினைத்தான். உணர்ச்சிக்கு ஆட்பட்ட நம்பிக் கைகளையும், தவறான மாயத்தோற்றங் களையும் தொடர் வரலாற்றையும் படிக்கப் போவது யார்? ஒழுங்கான எழுத்துக்களைக் கொண்ட தனது பக்கங்களை யார் புரட்டப் போகிறார்கள்? அவைகளில் இருக்கக் கூடிய தர்க்கத்தை யார் கண்டுகொள்ளப் போகிறார் கள்? அல்லது ஒருவேளை, மேலெழுந்த வாரி யாக ஒரு பார்வை செலுத்திவிட்டு, இதய

மற்ற மனிதன் அடைய முடியாத ஒரு கனவுக்காக எல்லாவற்றையுமே தியாகம் செய்திருக்கிறான் என நினைத்துக்கொண்டு அந்நியர் வெறுமனே புத்தகத்தை மூடிவிடலாம். அவன் யாரையும் விட்டுவைக்கவில்லை — தன்னையும் சரி, மற்றவர்களையும் சரி. ஆனால் அது நாசமாய்ப் போக. எனினும் அந்தக் கொள்கைகள் எல்லாம் உண்மையிலேயே சிந்திய வியர்வைக்கும், கண்ணீருக்கும், ஒரு மனிதனின் வாழ்க்கையைப் பாழாக்கும் அளவுக்குப் பெறுமானமுள்ளவை தானா?

மனக்கசப்பால் அரற்றிக் கொள்வதிலிருந்து தன்னைத் தானே நிறுத்திக்கொள்ள ஆல்வாரால் முடியவில்லை: ''நான் ஏதேனும் தவறாகச் சென்றிருந்தால், அது எல்லாம் நேர்மையின் பாற்பட்டது. மேலும், குறைந்தபட்சம் மனிதனுடைய தவறுகளில் ஏற்படும் நேர்மை குற்றத்திலிருந்து பாதியேனும் விடுவிக்காதா?''

எனினும் ஆல்வார் ஜில்ட்சோனிக்கு இன்னமும் கடைசி அதிர்ச்சி ஒன்று இருப்பில் இருந்தது.

காக்கைக் கூடு புகையில் அழிந்த போது, தனக்கு மிகவும் அரிய பொருள்களை — அவனது தாள்களையும் குறிப்புகளையும் — அந்தத் தீ நாக்கு களிலிருந்து காப்பாற்றுவதில் ஆல்வார் ஓரளவுக்கு வெற்றி கண்டான். அவனது சாய்வு நாற்காலிக்கு அருகில் குறிப்பு ஏடுகளும், கம்பியூட்டர் தாள்களும் இன்னும் பெரும் மலைபோல உயரக் குவிந்து கிடந்தன. அந்த மலைக் குவியலைப் பிரித்து ஒழுங்கு செய்ய

வேண்டும் என ஆல்வார் பல முறை தீர் மானித்ததுண்டு. ஆனால் ஒவ்வொரு முறையும் இந்த வேலையின் பெரிய அளவைப் பார்த்த மாத்திரத்தில் தயங்கி பாதியிலேயே நின்று போய்விடுவான்.

கடைசியாக போதுமான துணிவை வர வழைத்துக்கொண்டு, குவியலின் உச்சியிலிருந்து வேலை செய்யத் தொடங்கினான். ராக்கி மலைகளில் மறைவாக இருந்த போது தன்னை ஒரு பெரிய சுமையை சேகரிக்க வைத்தது எது என்று அவனாகவே வியந்தான். அவை எல்லாவற்றையும் தனக்குப் பின்னால் விட்டு விடுவதைவிட சாவதற்கு அவன் தயாராக இருந் தான். அவை எல்லாவற்றையும் தூக்கும்படி அபார் இசாவை கட்டாயப்படுத்தி இருக்க லாம். ஆனால் அப்போது லீகோ ஸ்டேவன் அழிந்துபோயிருப்பான். ஆகவே, அவன் அதைச் செய்யவில்லை.

அறிமுகமில்லாத பொருள் ஒன்று ஜில்ட் சோனியின் கண்ணில் பட்டது. அதை தனது கைகளில் திருப்பினான். அது நீண்ட ஆறு பட்டை கொண்ட கூடு, ஏதோ ராட்சசப் பென்சில் போல. ஓ... ஆம், பயோமெமரி கூடு அது. தனது பதினைந்து ஆண்டு கால 'நாடு கடத்தப்பட்ட' வாழ்க்கையின் போது கண்டுபிடித்த கருவிகளில் ஒன்று.

அதில் என்ன பதிவுசெய்யப்பட்டது? அது அவனுக்கு முக்கியமல்ல. அதை அவன் குப்பைக் கூடையில் தூக்கி எறியப் போனபோது ஏதோ ஒன்று அவனைத் தடுத்து நிறுத்தியது. பிளே,

பேக் பொத்தானை அழுத்தினான்.

''...மக்கள் பழுப்பு நிழலாக இருக்கிறார்கள். சில நேரங்களில், வலி அழுத்தும் போது, அவர்கள் எல்லாரும் எனக்கு ஒன்று போலவே காணப்படுகிறார்கள். மேலும் அவர்களிடத்திலே என்னால் வேறுபாடு காண முடியவில்லை.''

அந்தக் குரல் பழக்கமானதாக இருந்தது. ஆனால் ஒலியை எவ்வளவோ கூட்டியும் ஆல்வாரால் அதை அடையாளங் காண முடியவில்லை.

''நான் தூங்குகிறேனா, கனவு காண்கிறேனா என்று கூட என்னால் கூற முடியாது,'' அக்குரல் தொடங்கியது. ''கனவுகளும் எதார்த்தமும் இரண்டறக் கலந்தவை. சில வேளைகளில் அது என்னை முற்றாகத் திக்குமுக்காட வைக்கிறது. ஒருவகையில் மிக அண்மையிலோ, பிறகோ ஒவ்வொரு மனிதனுக்கும் மாற்ற முடியா அமைவாக அது இருக்கலாம். நான் எனது பாஸைக் கேட்க வேண்டும். அவன் எல்லாம் அறிவான்...''

''பாஸைக் கேட்க வேண்டும்!'' ஆனால் இது அபார் தனது நினைவுகளைப் பதிவு செய்ததாகும்.

''இந்தக் கடைசி சில நாட்களாக பாஸ் திரும்பவும் நல்ல மனநிலையில் இல்லை என்பதை நான் கவனித்தேன்,'' அபாரின் குரல் உணர்ச்சியற்றுப் பேசியது. ''இந்த மனநிலைகள் எப்போதுமே எனது மிக போசமான தாக்குதல்களோடு ஒத்துப்போகின்றன. ஒரு

வேளை இரண்டுக்குமிடையே ஏதேனும் தொடர்பு இருக்கக் கூடும்.''

தான் நினைத்ததை விட அபார் புத்திசாலி என்று ஜில்ட்சோனி தனக்குத்தானே சிந்திக்கலானான்.

''பாஸோடு எது என்னைக் கட்டுப்படுத்தி இருக்கிறது?'' அபார் தன்னைத் தானே கேட்டான். ''அவனது கட்டளைகளை நான் ஏன் நிறைவேற்ற வேண்டும்? அவற்றை நானாகச் செய்கிறேன் — அவன் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. நான் ஏன் ஆல்வாருக்குக் கீழ்ப்படிகிறேன்? ஒருவேளை, மரியாதைக்காக இருக்கும்? இல்லை, ஜில்ட்சோனி எனது உயிரைக் காப்பாற்றிய போதும் அவன் மகிழ்ச்சியற்று இருப்பதாக நான் உணர்கிறேன். அவனது வேலையைத் தவிர வேறு எதைப்பற்றியும் அவன் கவலைப்படுவதில்லை. அது எனக்கு அப்பாற்பட்டது. அதை நிறைவேற்றுவதற்காக யாரையாவது கொல்லவும் அவன் தயாராக இருப்பான் என்று நான் நினைக்கிறேன்...''

ஒரு வெறுப்புணர்வால் ஜில்ட்சோனி தனது முட்டியை சாய்வு நாற்காலியில் ஓங்கி அடித்தான். குருதி வடியத் தொடங்கும் அளவுக்கு அது அத்துணை வலுவாக இருந்தது.

''ஆம், நான் ஆல்வாரை விரும்பவில்லை,'' அபாரின் குரல் இரைச்சலிட்டது. ''ஆனால் ஏனென்று நான் விளக்க முடியாது. வார்த்தைகளைத் தேர்ந்தெடுப்பது எனக்கு மிகவும் கஷ்டமானது. 'நீ முழுக்க மதிப்பில்லாதவன்,

'ஏனெனில் உன்னால் சிந்திக்க முடியாது,' என்று ஒருமுறை அவன் என்னிடம் கூறினான். அவன் சரிதான், சிந்திப்பது எப்படி என்று எனக்குத் தெரியாது. நான் பார்க்கிறமட்டில் மற்றவர்களாலும் முடியாது தான், இருப்பினும் அவர்கள் குறைபாட்டை மறைத்துக்கொள்ள முடியும்.''

''அவன் இதைச் சரியாகப் புரிந்து கொண்டான்,'' என்று முணுமுணுத்தான் ஜில்ட் சோனி.

''மக்களுடைய நடவடிக்கைகளுக்குப் பின் னால் எந்த உட்கருத்தும் இல்லை. ஏதேனும் இருக்க வேண்டும் என்று நான் நினைப்பது வழக்கம், ஆனால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நான் தவறு என்று இப்போது காண்கிறேன். ஆர்னிதாப்டரில் இங்கு எனக்கு முன்னால் அமர்ந்துகொண் டிருக்கும் பாஸை மாதிரிக்கு எடுத்துக் கொண்டால்...'' அபாரினுடைய குரல் திடீ ரென்று தடைப்பட்டுப் போனது. அதைத் தொடர்ந்து வந்ததெல்லாம் ஒருவித உடைசல் ஒலிதான்.

அந்தக் கூட்டை எடுத்து மிக அண்மையில் வைத்து ஆல்வார் பார்த்தான். ஓர் இடத்தில் அது லேசாக சேதமடைந்திருந்தது. ஒரு வேளை அது ராக்கி மலைகளில் சேதமடைந் திருக்கலாம். அதன் பக்கங்களில் ஒன்றில் குறுக்காக வெடிப்பு ஓடியது தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. அதுதான் அபார் இசாவின் சுவையான கூர்நோக்கை இடையி

லேயே அறுத்தெறிந்து விட்டது. பிளேபேக் பொத்தானை திரும்பத் திரும்ப ஆல்வார் அழுத்தியும், ஒலியைக் கூட்டும் கருவியை திருகியும் பார்த்தான். அவனது கேட்கும் சக்தி சமீப ஆண்டுகளில் குறையத் தொடங்கி விட்டது.

''மிதவை நீரில் ஆடத் தொடங்கிவிட்டது. தீப்பந்தங்களிலிருந்து வரும் தீ நாக்குகள் சுண்டியிழுக்கின்றன,'' அபாரின் குரல் அலறி யது. ''நான் படகிலிருந்து வெளியேறி விட் டேன். குழு முழு வேகத்தில் இருந்தது. அந்த இரவு, என்னை சாவு திமிங்கிலக் குடாவை கடக்க வைத்ததும், படகை விட்டு வெளி யேற்றியதும் எந்த சக்தி என்று எனக்குத் தெரியாது.

''நான் உடனடியாகத் பாஸைப் பார்க்க முடிந்தது. மிதவைக்குப் பயன்படும் மரம் போன்ற ஒன்றில் எனக்கு முன்னால் அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு அருகே ஒரு பெண் அமர்ந்து கொண்டிருந் தாள். அதற்கு முன் நான் பார்த்த அனைவரி லும் மிகுந்த அழகாக இருந்தாள்! நடனக் காரர்களைத் தள்ளிவிட்டுக்கொண்டு அவர்களி டம் சென்றபோது, அவள் தனது கண்களை உயர்த்தினாள். நானும் அவளைப் பார்த்த போது, நாங்கள் ஒருவருக்கொருவராகத்தான் படைக்கப்பட்டிருக்கிறோம் என்று நான் உணர்ந்தேன்!

''தீப்பந்தங்களிலிருந்து மினுமினுத்த வெளிச் சம் அவள் முகத்தின் மீது விழுந்தது. என்னை

வாழ்த்துவதற்காக அவள் கையை நீட்டினாள். நாங்கள் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டதை பாஸ் விரும்பியிருப்பான் என்று நான் நினைக்கவில்லை...''

வயதான ஜில்ட்சோனி கைகளால் தனது முகத்தை மூடிக்கொண்டான். இளமையின் வழங்கொழிக்கும் மனநிலையும், உயரிய நம்பிக்கையும், ஷெல்லாவும்... ஷெல்லாவின் தோற்றத்தையும் கொண்ட தொலைதூரத்து நுண்ணிய நினைவுகளும் அவனுக்குத் திரும்ப வந்தன.

அபாரின் வார்த்தைகளிலிருந்து அவனது மனம் ஒரு கணம் அலைந்தது. ''பிக் எக்ஸைச் சந்தித்ததை என்னால் மறக்க முடியாது,'' என்ற வாக்கியத் தொடக்கம் வரும்வரை அப்படியிருந்தது.

ஜில்ட்சோனியின் இதயம் ஒரு துடிப்பைத் தவறவிட்டது. மிகவும் கவனத்தோடு இப்போது கேட்டான்.

''பாஸ் உண்மையாகவே கசப்புணர்வோடு இருக்கிறான்... அது கேலிக்குரிய மற்றொரு எண்ணமாகும்,'' அபாரின் குரல் பேசியது. ''பிக் எக்ஸினுடைய பாதுகாப்பு அரணை எப்படியாவது ஊடுருவும்படி எனக்கு நேற்றுக் கட்டளையிட்டான்... அவரிடத்தில் நிறுவ வேண்டிய பணி ஒன்று இவனுக்கு உண்டு!..''

அபார் கூப்பிடு தூரத்தில் இருப்பதுபோல ஆல்வார், ''அபார்... கூறு. எல்லாவற்றையும் கூறு. மேலும் சில விவரங்கள்,'' என்றான்.

''நான் எனது உயிரைப் பணயம் வைத்திருக்

கிறேன் என்பதை நான் அறிவேன். ஆனால் பாஸின் விருப்பங்களுக்கு மாறாக என்னால் செல்ல முடியாது. இனமறியாத சக்தி ஒன்று என்னைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. எல்லா முக்கியச் செயல்களிலும் போல, எனது ஒவ்வொரு நடவடிக்கையையும் அது இயக்கி வருகிறது.

''பிக் எக்ஸின் பாதுகாப்பு வளையத்தின் வழியாகச் செல்லும்போது, வெறும் ரோபாட்டு களை விலக்குவதற்காக நான் பல தர்க்க முறையான பிரச்சினைகளை உடைத்தெறிய வேண்டி இருந்தது. நான் அவற்றை சுலப மாகத் தீர்த்து வைத்தேன். எப்படி என்று என் னால் நினைவுபடுத்த முடியவில்லை, ஆனால், அந்நேரம் பிக் எக்ஸின் கம்பியூட்டர் இயக்கு நர்கள் அணியும் சீருடையும் அணிந்திருந்தேன். அவர்களுடைய குறிப்புகளைக் கொண்டு கட்டுப் பாட்டு அறை மையப் பகுதியில் இருப்பதாக உணர்ந்தேன்.''

''சீக்கிரம், சீக்கிரம், அபார்,'' என்று அவசரப்படுத்தினான் ஜில்ட்சோனி. ஆனால் அபார் அவசரப்படுவதாக இல்லை.

''மையப் பகுதியின் நுழைவாயில் எந்திரத் துப்பாக்கிகளுடன் கூடிய புரோட்டீன் ரோ பாட்டுகளால் பாதுகாக்கப்பட்டது. இவற்றை ஏற்கெனவே நான் சந்தித்திருக்கிறேன். பாஸ் காக்கைக் கூட்டில் வசித்துக்கொண்டிருந்த போது அவை முதல் முதலாகக் கொண்டுவரப் பட்டன. இது மேலும் ஒரு சரிபார்த்தல் என்று திட்டமிட்டேன். ஆனால் என்னைப்

பார்த்து சிறிதளவு சந்தேகங்கூட கொள்ளவில் லை. உண்மையில் புரோட்டீன் ரோபாட்டு கள் என் மீது நட்புப்பாராட்டுவதாகவே அறிந்தேன். ஆனால் மற்ற மனிதர்கள் அவைகளின் விருப்பத்திற்கு உட்படவில்லை என்று நான் முன்னமேயே கவனித்திருக் கிறேன்.

''மையப் பகுதி பூமியின் உள்ளே ஆழத்தில் சென்றது. நானாக நினைத்துக் கொண்டேன்: 'விஷயங்கள் மோசமாகுமேயானால் இங்கிருந்து என்னால் வெளியேறிப் போக முடியாது!' மேலும் அச்ச உணர்வு என்னைத் தொத்திக் கொண்டது.

''மையப் பகுதிக்குக் கீழே உள்ள ஒரு பெரிய கட்டுப்பாட்டு அறை இருந்தது. நான் அங்கு போனேன். முனைப்பான இயக்குநர் களும், நிகழ்ச்சி அமைப்பாளர்களும் மேலுங் கீழுமாக போனபடி விரிவான குறிப்புகளை மட்டுமே பரிமாறிக் கொண்டார்கள். நினைவுப் பாளங்களால் சுமையேற்றப்பட்ட கையாளப்படும் ரோபாட்டுகள் வியாபார நோக்கில் சுற்றி வந்தன. அவை காக்கைக் கூட்டில் பாஸுக்காக கவிகை மாடச் சோத னைக் கூடத்தைக் கட்டியது போல இருந் தன.''

''அதே நிறுவனத்தால்தான் இவையும் உற் பத்தி செய்யப்பட்டன,'' ஜில்ட்சோனி நினைவு கூர்ந்தான்.

''புள்ளிவிவரச் செல்களைத் தவிர பிற எதைக் கொண்டும் அந்த அறையின் மூன்று

சுவர்கள் கட்டப்படவில்லை. அவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நபர் குறித்த தகவலையே கொண்டிருக்கின்றன என்பதை நான் அறிவேன். நானாக நினைத்துக் கொண்டேன்: 'ஒன்று பாஸிடம் ஈடுபாடு கொண்டது, மற்றது என்னிடத்தில், வேறெங்கோ உள்ளது ஷெல்லாவிடம். கடைசி இரண்டும் அருகருகே இருந்தால் எவ்வளவு அருமையாக இருக்கும்...' ''

''உணர்ச்சிமிக்க விலங்கு,'' என்று உசு ஒலியை எழுப்பினான் ஜில்ட்சோனி இதைக் கேட்டதும்.

''குடியரசின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் கொண்டுவரப்படும் எல்லாவகையான தகவலையும் பேராவலுடன் விழுங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நொடியும் பிக் எக்ஸைப் பற்றி ஏதுமறியாத வெளியாளுக்கு கூட தெளிவாகத் தெரிந்தது.

''நான் கண்ட்ரோல் பேனலுக்கு நடந்து போனேன். காலியாக இருந்த இருக்கையில் அமர்ந்தேன். அந்நேரத்தில் நான் என்ன பயந்தேனோ அதுவே நடந்தது. தலையின் பின்புறம் திரும்பவும் வலிக்கத் தொடங்கியது. பாஸ் எல்லாமே அறியும் அத்தகைய தாக்குதல்களில் ஒன்றுதான் அது.''

''கடவுள் அறிவார், அபார், அவை எனது குற்றமல்ல,'' பயோமெமரிக் கூட்டின் மேலாக நீண்டு சாய்ந்தபடி இருந்த பழைய விஞ்ஞானி முணுமுணுத்தான். ''பிக் எக்ஸின் மையத்திற்குள்ளாக நீ இருந்தபோது நான் பயோடிரான்ஸ்மீட்டரை ஒருமுறை கூடத்

தொடவில்லை.''

''அந்தப் புரிந்துகொள்ள முடியாத பணி முடிவுற்றதும், பணம் வரத் தொடங்கும், அத்தகைய கொடுந் தாக்குதல்களினின்றும் என்னை விலக்கிவிடுவதாகப் பாஸ் உறுதி யளித்திருந்தான்,'' அபார் நினைவு கூர்ந்தான். ''இருப்பினும் அக்கணத்தில் ஆல்வாரின் உறுதி மொழிகள் அனைத்தையும் நான் மறந்து விட்டேன். சிவப்பு மற்றும் ஒள்ளிய மெல் ஊதா வட்டங்கள் என் கண்களுக்கு முன்னால் சுழன்றன. கீழே விழுந்து விடாதபடி எனக்கு முன்னால் உள்ள பேனலில் தலையைச் சாய்த்துக்கொண்டேன். பழுத்த சிவப்பு ஊசி என் தலையின் பின்புறம் செல்லுவது போலத் தெரிந்தது. ஒரு சிந்தனையில் உறுதியாக நின்றேன் — நான் உணர்வை இழந்து விடக் கூடாது.''

கதவை பலமாகத் தட்டும் ஒலி கேட்டு ஜில்ட்சோனி எழுந்தான். தொடர்ந்து 'தபால்' என்ற அறிவிப்பு புரோட்டீன் ரொபாட்டிடமி ருந்து வழமையான பிளாஸ்டிக் புன்சிரிப்புடன் வந்தது.

இந்த நம்பற்கரிய எந்திரங்களை நீண்ட காலத்திற்கு முன்னர் ஆல்வார் பயன்படுத்தி வந்தான். இருப்பினும் காக்கைக் கூட்டிலிருந்து வந்த முதற் கொண்டே அவற்றை அவன் வெறுப்போடு பார்த்தான்.

கன்த்த பொட்டலத்தை எடுத்தபடி, 'நன்றி,' என்றான். பிறகு அதைப் படிக்காமலேயே மூலையில் வைத்தான். புரோட்டீன் ரோபாட்

டின் அதிர்வு நடையை மாடிப்படிகளில் ஏறும் போது கேட்க முடிந்தது. பிறகு எல்லாமே அமைதியாகி விட்டது.

ஒரு காலத்தில் தனக்கு மிகவும் முக்கியமானவர்களாக கருதப்பட்ட ஷார்லோ, புல்வர், ஸ்டேவன் மற்றும் ஃபிலின் இவர்களைப் பற்றிய சமீபத்திய தகவலைச் சேகரித்து வைப்பதற்காக நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பல பத்திரிகைகளுக்கு ஜில்ட்சோனி சந்தா கட்டியிருந்தான். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவன் அந்தப் பொட்டலத்தை திடீரென்று உடைத்து, ஆர்வமூட்டும் கட்டுரைகளை வெட்டி, ஒழுங்காக வைத்து, ஆல்பத்தில் ஒட்டுவதுண்டு...

ஆனால் இன்றோ அவன் அபாரின் பதிவு செய்த சிந்தனைகளில் மூழ்கியவனாக இருந்தான்.

''...மற்ற எல்லாரையும் போல அவர்கள் இருவரும் நெருக்கமாகப் பிணிக்கப்பட்ட சீருடைகளுடன் இருந்தார்கள்,'' அபார் கூறினான். தபால்காரன் குறுக்கிட்டதால், ஆல்வார் வாக்கிய ஆரம்பத்தைத் தவற விட்டு விட்டான்.

''நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?' அவர்களில் ஒருத்தி கேட்டாள். அவளது முகம் ஓரளவு ஷெல்லாவினுடையதைப் போல இருப்பதை கவனித்தேன். நான் நிச்சயமாக வெளிறிப் போயிருக்க வேண்டும். தாக்குதல் வருமேயானால் நான் முற்றிலும் சாம்பல் நிறமாக ஆகிவிடுகிறேன் என்று பாஸ் சொல்

கிறான். எனது வாயைத் திறக்க நான் அஞ்சி னேன். ஏனெனில் ஏதாவது உளறி விடுவேனோ என்ற அச்சந்தான்.

'''இது மற்றொரு புதிய பேர்வழி!' என்று முதலாவது பெண் தன் கூட்டாளியிடம் சொன்னாள்.

'''ஆமாம், அவர்களில் யாருமே நீண்டு தங்கவில்லை,' அடுத்தவள் தொடர்ந்தாள், என்னை மிக நெருக்கமாகப் பார்த்தபடியே. 'இதுதான் இதயமா?' முதலாவது பெண் கேட்டாள். என்னால் முடிந்த அளவுக்கு ரகசியமாகச் சிரிக்க முயன்றேன்: 'அதொன்றுமில்லை, எல்லாமே சரியாக இருக்கிறது.'' அதன் பிறகு அந்த இரு பெண்களும் போய் விட்டார்கள்.

''நான் முன்நோக்கி நிலை கொள்ளாதபடி சென்ற போது தலை கூட அசையாது கவனமாக இருக்க முயன்றேன். குதிரை லாடம் போன்ற பிக் எக்ஸினுடைய கண்ட்ரோல் பேனலின் உள்ளே இருந்தேன். ஊடுருவிச் செல்பவர்களைச் சுற்றி வளைப்பதற்காக இரண்டு கைகள் நீட்டிக்கொண்டிருப்பது போலக் காணப்பட்டது.

''ஆஸ்த்மா நோயாளியைப் போல மூச்சிழுத்தபடி வயதான ஒருவன் என்னிடம் வந்தான். அவனுடைய சீருடை பொருத்தமற்று இருந்ததால், திருகிக்கொண்டு இருந்தன.

'''காலை வணக்கம், சக நண்பரே,' அவன் சொன்னான்.

“எனது பிடியை ஒரு நொடிக்கு இழந்த படி நான் தலையசைத்தேன். அதன் பிறகு வலி யினால் கிட்டத்தட்ட கதறி விட்டேன்.

“ ‘நீங்கள் ஜனாதிபதியிடமிருந்து வேலை கொண்டு வந்தவரா?’ அந்தப் புதியவன் கேட் டான்.

“ ‘ஆமாம்,’ என்று மேலெழுந்தவாரியாகச் சொன்னேன். நான் விரும்பியதெல்லாம் அவன் என்னைத் தனியே விட வேண்டும் என்பது தான்.

“எனது இரு புறமும் இருந்த ஆட்கள் கண்ட்ரோல் பேனலில் தங்கள் இருக்கை களைப் பிடிப்பதற்காக விரைந்து போய்க் கொண்டிருந்தார்கள். பிக் எக்ஸின் உள்வாங் கும் சவ்வு வழியாக அறிவுரைகளை முணு முணுத்துவிட்டு, பிறகு தங்களது விடை களைப் பெற்றுக்கொண்டு திரும்ப விரைந்து கொண்டிருந்தார்கள். ஓர் இருக்கை காலி யானவுடன் யாராவது ஒருவன் வந்து அமர்ந்துவிடுவான்.

“ ‘நீங்கள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக் கும் பொறுப்பில் இருக்கிறீர்களா?’ முதியவன் கேட்டான்.

“ ‘ஆமாம்’, என்று முணுமுணுத்த நான், உண்மைக்கு எவ்வளவு அண்மையில் அவன் வந்துவிட்டான் என்பதை அறிந்து திடுக்குற் றேன்.

“ ‘ஒரே திட்டத்தில் நாமிருவரும் பணி யாற்றிக் கொண்டிருந்தோம்,’ என்று குறிப்

பிட்டபடி சற்று முன்னர் காலியான ஓர் இருக்கையில் அமர்ந்தான்.

'' 'எனக்குத் தெரியாது...'

'' 'எந்தவிதமான உடற்குறைபாடும் இல்லாத ஆட்களை நான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.'

'' 'வீனசில் குடியமர்த்துவதற்கா?'

'' 'இல்லை, இது முற்றிலும் ஒரு புதிய முயற்சி,' என்றான் அப்புதியவன் தனது தலையை ஆட்டியபடி. 'எனது பணி பெயர் விளையாட்டை புணரமைக்கும் திட்டம். உங்களுடைய பணியின் பெயர்?..'

''அக்கணத்தில் ஒலிபெருக்கியின் ஓசை எனக்கு ஆதரவு தருவதுபோல கதறியது: 'பேனலில் எந்தச் சுணக்கமும் கூடாது!' பேனலில் எந்தச் சுணக்கமும் கூடாது!' அதையடுத்து அப்புதியவன் உடனடியாகத் திரும்பி தனது அறிவுரைகளை உள்வாங்கும் சவ்வை நோக்கி ஏதோ முணுமுணுத்தான்.

''பிற கம்பியூட்டர் இயக்குநர்கள் எப்படிச் செய்வார்களோ அதுபோல நானும் குனிந்து சவ்வை நோக்கி தெளிவாகப் பேசினேன்: 'மேதை வேட்டைக்கான திட்டம்: உயிர் வாழ்கிற எல்லா மனிதர்களிலும் யாரால் முற்றிலுமாக (அல்லது எதிர்காலத்தில்) மேலாண்மை அடையக் கூடும்...' பாஸ் எனக்குச் சொல்லித்தந்த இந்த வாக்கியத்தின் கடைசிப் பகுதியை நினைவுக்குக் கொண்டுவரப் போராடினேன். ஆனால் என் தலையில் இருந்த

வலி எனது சிந்தனைகளோடு ஒன்று சேர்ந்து விட்டது...''

கைகளில் தனது தலையைப் புதைத்தபடி, ''அயோக்கியன்!'' என்று ஜில்ட்சோனி கத்தினான். எதிர்பாராத இந்த கண்டுபிடிப்பின் விளைவாக, அவன் எல்லாவற்றையும் அறிந்து கொண்டான். பிக் எக்ஸை எப்படியும் குறை சொல்ல முடியாது. முன்வைத்த பணியை அது செயல்படுத்தியது. தங்களது தொழிலில் மிக உயரிய சாதனையைச் செய்யக் கூடிய ஆண்களையும் பெண்களையும் அது தெரிவுசெய்தது. ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்கள் சார்ந்த சிறப்புத் துறை தெரிவிக்கப்பட்டது. ஆனால் பௌதிகத்துறையில் இல்லை. ஏனெனில் அபார் அதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை...

சற்று பொறு! பிக் எக்ஸ், ஆல்வார் ஜில்ட்சோனியை ஏன் அந்தப் பட்டியலில் சேர்த்தது?.. குறைந்தது அவனால் ஏதாவது கணக்கிட முடியும் என்பதற்காகத்தான், பிறகு ஏன் அவனால் எதுவுமே சாதிக்க முடியவில்லை? அவனது உள்ளார்ந்த திறமை ஏன் உணரப்படவில்லை?

இதற்கிடையில் பயோமெமரிக் கூட்டில் பதிவுசெய்யப்பட்டவை மிகத் தெளிவாகப் பேசத் தொடங்கியது: ''...பிக் எக்ஸை விட்டு எவ்வாறு நான் வெளியேறினேன் என்பது எனக்கு நினைவில்லை,'' அபார் ஏற்றுக் கொண்டான். ''நான் ஏற்கெனவே சுரங்கப் பாதையின் நிலையத்தில் இருந்த போது, பிக்

எக்ஸ் தயாரித்திருந்த பட்டியலை எனது பையிலிருந்து எடுத்துப்படித்தேன்...''

பற்களை அழுத்தியவாறு பட்டியலை ஆல்வார் கேட்டான். அதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் அவனுக்கு மிகவும் பழக்கமானது போல் இருந்தது.

இப்போது எந்தவிதப் புதிர்களும் இல்லை.

அபார் இன்னமும் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். ஜில்ட்சோனி தனது விரல்களை மூடியவாறு பயோமெமரிக் கூட்டை ஓங்கிக் குத்தினான். இந்தக் குரல் அறுபட்டது. அவனது நம்பிக்கைக்குரிய உதவியாளனின் பதிவு செய்யப்பட்ட குரல் ஒட்டுமொத்தமாக அழிந்தது.

தெருவில் தனக்குப் பின்புறம் இரக்கமற்ற சிறுவர்கள், ''வழுக்கைத் தலை!'' என்று கூறி அவமதித்த பெயரை ஜில்ட்சோனி நினைவு கூர்ந்தான். ஆகவே, பிக் எக்ஸ் அவனது பெயரை ஏன் பட்டியலில் சேர்த்தது என்பதற்கு ஒருசில காரணங்கள் உண்டு. மார்க் நூஷும் மென்ஸியும் இவனுக்குச் சிறந்த எதிர்காலம் இருப்பதாகக் கணித்தார்கள்...

அவன் தனது திறமையை எப்போது சிதறடித்தான்? ஒருவேளை ராக்கி மலைகளுக்கு பறந்து செல்ல அவன் முடிவு செய்த அந்த குறிப்பிடத்தக்க வேளையும், மென்ஸியின் கேலிக்குரிய புத்திமதியைக் கருத்தில் கொண்டு தனது சக ஆட்களிடமிருந்து விலகிக்கொண்டதும் இருக்கலாம்?

இப்போது அது எவ்வித மாற்றத்தையும் செய்துவிடவில்லை... அந்த இரவு முழுக்க ஜில்ட்சோனி தனது அறையில் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான். அவனை அலைக் கழித்த ஒரு கருத்திற்காகதான் தியாகம் செய்த தனது பழைய வாழ்க்கையை அவன் திரும்பவும் நினைத்துப்பார்த்துக் கொண்டிருந் தான்.

காலைக் கதிரவனின் முதல் ஒளிக்கற்றையை வெளியே பார்க்க முடிந்தவுடன், ஆல்வார் சிந்திப்பதை கடைசியாக நிறுத்திவிட்டு களைப் படைந்தான். முதல் நாள் அறை மூலையில் தூக்கி வீசப்பட்ட பொட்டலத்தைத் திடீ ரென்று கவனித்தான்.

''நேற்றைய தபால்,'' அவன் தானாக நினைத்துக்கொண்டு தரையில் முழங்காலிட்டுக் குனிந்து பத்திரிகைகளைப் பிரித்து வைக்கத் தொடங்கினான். அபாரின் அறிவுரைகளின் படி பிக் எக்ஸ் பொறுக்கி எடுத்த நபர் களைப் பற்றி ஏராளமான குறிப்புகள் வந் திருந்தன.

''எழுதுவதற்கு வேறெதுவுமே இல்லையென்று நினைக்கலாம்,'' என்று முணுமுணுத்தான் ஜில்ட்சோனி, ஒவ்வொரு பத்திரிகையாகப் புரட்டிப் பார்த்தபடியே.

பூரணத்துவத்தை எய்த வேண்டும் என மனி தர்களை இயக்கும் ஓய்வில்லாத சக்தி எப் பொழுதுமே இருக்கக் கூடும் எனத் தெரி கிறது. ஒருவேளை அது உறுதிச்சொல்லை விளக்

கலாம்: Per aspera ad astra. *

ஜில்ட்சோனி சில அடிகள் எடுத்துவைத்தான். அறையின் சுவர்கள் ஆடின, சுழலத் தொடங்கின. அவனுக்கு ஏதோ ஆகிக்கொண்டிருக்கிறது. ஒருவேளை புயலுக்கு முன் தோன்றும் அழுத்தமான வெப்பமாக இருக்கலாம். புத்தகங்களாலும், நினைவுப் பாலங்களாலும் நிறைந்த அந்த அறையையும், எந்திரக் கால்குலேட்டரை வெற்றி கொண்ட அன்டன் புல்வரின் உள்ளூக்கம் பெற்ற முகத்தையும் அவன் நினைவு கூர்ந்தான். அதன் பிறகு... ஏதோ விபரீதம் நடந்தது... இதற்கு ஆல்வார் ஜில்ட்சோனிதான் குற்றஞ் சாட்டப்பட வேண்டும்.

ஒருவேளை அது ஒரு கெட்ட கனவாகிப் போகட்டும்? அவன் ஒருமுறை கண்ட ஒரு கொடூரக்கனாக் காட்சி? ஆல்வார் சுற்றிலும் பார்த்தான். தனது இன்றைய வாழ்க்கை கனவுதானோ என்று அதிர்ச்சியடைந்தான்...

* * *

கதிரவன் இப்போது அந்த அறைக்குள் கதிர்களைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். அது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்த கிழவன் மீது பட்டது. அவனது தலை காகிதக் குவியல் மீது இருந்தது. இளந்தென்றலில் அவனது வெந்

---

* *இன்னல்கள் மூலமாக நட்சத்திரங்களை நோக்கி (லத்தீன்).* — ப-ர்.

நிற தாடி மெதுவாக அசைந்து கொண்டிருந்தது.

வளைந்த உருவம் அசைவற்று, ஒரு கொடூரமான சிலை போல இருந்தது. அதன் நிழல் கூட உயிரற்றது போலவும் இறந்தது போலவும் காணப்பட்டது. சிட்டுக்குருவி ஒன்று திறந்த சன்னலின் வழியாக உள்ளே சென்று, சாய்வு நாற்காலியில் குதித்துக் கொண்டும், கீச் ஒலி எழுப்பிக் கொண்டும் இருந்தது.

ஊதாப்பூ



முகத்தில் சந்தேகத்தோடு அந்த மலரைக் குனிந்து பார்த்தவாறே ஆர்னோ காம்ப், ''இது எல்லாமே ஏதோ ஒருவகை ஏமாற்று உத்தியாக இருந்தால் என்ன செய்வது?'' எனக் கேட்டான். இறுக்கமான பொட்டலத்தில் இருந்தாலும் கொஞ்சம் கசங்கிப்போய் இருந்தாலும் இப்போது தான் பறித்தது போல புத்தம் புதியதாக அப்பூ காட்சியளித்தது.

''இது போன்று இல்லை,'' என்றான் மேசையின் எதிர்ப்புறம் அமர்ந்திருந்த ஆள்.

''இது மிகவும் தீங்கற்றுக் காணப்படுகிறது,'' என்றான் ஆர்னோ காம்ப், சற்று இடைவெளிக்குப் பிறகு.

''நான் ஒத்துக்கொள்கிறேன். உண்மையிலேயே இது தீங்கற்றதாகத்தான் காணப்படுகிறது. ஆனாலும் அதனுள் வேறு ஏதோ அடங்கியிருக்கிறது.''

''ஆமாம். அதில்தானே முழுமையான சிக்கல்,'' என்றான் போலீஸ் தலைமை அதிகாரி ஒரு பெருமூச்சுடன். கிழிந்து போன குறிப்பேட்டிலிருந்து சில பக்கங்களை எடுத்துக்

கொண்டு சர்வசாதாரணமாக, ஆனால் தெளிவாகப் படிக்கத் தொடங்கினான்: ''ஹ்யூ கோ லென்ஸ்! நீங்கள் மிகவும் அபாயகரமான பணியைச் செய்ய வேண்டிய இடர்ப்பாடான நிலையில் இருக்கிறீர்கள். நீங்கள் மட்டுமே ஓர் ஆபத்தில் இருந்தால் அது சரிதான். ஏனெனில் உங்களுடைய விஞ்ஞான முனைப் புகள் உங்கள் சொந்த அலுவலாகவே தெரியும். ஆனால் நீங்கள் பொருளின் ஆழ்ந்த ரகசியங்களை முனைந்து அறிய முயற்சிக்கிறீர் கள். அந்த ரகசியங்களோ பலிபீடத்தில் வைக்கப்பட்ட ஒரு புனிதப் பொருள்போல தொடப்பட்டால் மாசுபடக் கூடியது. இயற் கை சகிப்புத்தன்மை கொண்டது, ஆனாலும் அதற்கு ஓர் எல்லையுண்டு. வரம்பை மீறி னால் இயற்கையன்னை பழிவாங்குவாள். நோபல் பரிசும் வேறு பலவித விருதுகளும் பட்டங்களும் பெற்ற நீங்கள் நாட்டின் மிகப் பெரிய விஞ்ஞான மையத்தில் பொறுப் பேற்று இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரி யும்...''

''இதோ பாருங்கள், இந்தக் கடிதம் எழுதியவன் உங்களைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருக்கிறான்,'' என்று போலீஸ் தலைமை அதிகாரி குறுக்கிட்டுப் பேசினான்.

''அந்தத் தகவல் பற்றி எந்த ரகசியமும் இல்லை,'' என்றான் லென்ஸ் தோளைக் குலுக்கியபடி.

''பெரும்பாலும் சரிதான், ஆனால் நாம் இந்தக் கடிதத்திற்கு வருவோம். 'ஹ்யூகோ

லென்ஸ், உங்களுடைய விஞ்ஞானப் பட்டங்கள் எல்லாம் உங்களைத் தவறு செய்ய முடியாதவனாக ஆக்க முடியும் என்று நீங்கள் உண்மையாகவே நினைக்கிறீர்களா? அல்லும் பகலும் உங்களுக்கு விஷேடப் பாதுகாப்பு ஏற்பாடு இருக்கிறது என்பதும், உங்களது அணுவாராய்ச்சி மையத்தின் எல்லைக்குள் இளங்காற்றுக் கூடப் புக முடியாது என்பதும் எனக்குத் தெரியும். இதுதான் உங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது என்று நீங்கள் நம்ப வைப்பதாகும்.' ''

தான் படித்துக்கொண்டிருந்ததை விட்டு நிமிர்ந்து பார்த்து போலீஸ் அதிகாரி கேட்டான்: ''இயல்பான சிரிப்புத் துணுக்குகளை விரும்பும் நண்பர்கள் யாரேனும் உங்களுக்கு உண்டா, சொல்லுங்கள்.''

''இல்லை,'' என்றான் லென்ஸ் தலையை ஆட்டியவாறு.

''நாம் பார்த்தது போல இது சாதாரண மனிதனது கடிதமல்ல. பாவத்தையும் புண்ணியத்தையும் பற்றிய ஒரு நீதிநூல் இது.'' போலீஸ் தலைமை அதிகாரி பக்கங்களின் மெல்லிய ஓரங்களைத் தடவினான்.

''குறைந்தது இந்த எழுத்தாளன் தன்னுடைய உண்மைக் கருத்துக்களை மறைக்க முயலவில்லை.''

''உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களில் யாராவது ஒருவன் இக்கடிதம் எழுதியிருக்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என வினவினான் ஆர்னோ காம்ப்.

லென்ஸ் எதுவும் பேசாமல் தன் கைகளைக் குனிந்து பார்த்தான்.

''ஒருவேளை யாரையாவது நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?'' என்று தொடர்ந்தான் போலீஸ் அதிகாரி. ''நம் எல்லாருக்குமே எதிரிகள் உண்டு; அல்லது குறைந்தது நம்மீது பொறாமைப்படுபவர்களாவது உண்டு. இங்கு நாம் இருவர் தான் இருக்கிறோம். நீங்கள் சொல்லும் எந்த வார்த்தையும் இந்த நான்கு சுவர்களை விட்டு வெளியேறாது என்று உறுதி கூறுகிறேன். ஆழ்ந்து சிந்தியுங்கள், உணர்ச்சி வயப்பட வேண்டாம்.''

''துரதிரஷ்டவசமாக நான் யாரையும் சொல்ல முடியவில்லை,'' என்றான் விஞ்ஞானி, உறுதியான குரலுடன் காம்பை நேராகப் பார்த்தவாறு.

''ஒருவனைக் கூடவா?''

''ஒருவனுமே இல்லைதான்.''

''பரிதாபகரமானது. இந்தப் பொட்டலம் எப்போது வந்தது?''

''இன்று காலை தபாலில்.''

''இதில் உள்ளவை பற்றி நீங்கள் மற்ற பிறரிடம் பேசவில்லை என்று நான் நம்புகிறேன்.''

''என்னுடன் பணியாற்றுபவர்களிடம் இது பற்றிச் சொன்னேன்.''

''பரிதாபமானது.''

''இதில் என்ன தவறு?''

''தவறான இடங்களில் இதுபற்றிக் கேலியாகப் பேசத்தூண்டும்.''

“எனக்குத் தெரிய எவ்வளவு பேருக்கு இந்த பயமுறுத்தல் பற்றி தெரிகிறதோ அவ்வளவு நல்லது.”

“இச் சூழ்நிலையில் எது நல்லது, எது மோசமானது என்று என்னைத் தீர்மானிக்க அநுமதியுங்கள்,” என்றான் போலீஸ் அதிகாரி கண்டிப்பான குரலில். “நீங்கள் எதுவுமே சொல்ல விரும்பாமல் இந்தக் கடிதத்தை வெறுமனே சுற்றுக்கு விட்டீர்கள் போலும்?”

“இல்லை, அதன் விவரத்தை அவர்களிடம் சொன்னேன்.”

“அவர்களிடம் சுருக்கமாகச் சொன்னீர்களா?”

“இல்லை. ஒவ்வொரு வார்த்தையையும் சொன்னேன்.”

“அது எப்படி முடியும்? கடிதத்திலுள்ள விஷயம் முழுவதையும் அந்தக் குறுகிய நேரத்திற்குள் நீங்கள் மனப்பாடம் செய்துவிட்டீர்கள் என்று நினைத்தீர்களா?” என்றான் போலீஸ் அதிகாரி ஆர்வத்தை வரவழைத்துக் கொண்டு.

“எனக்கு ஒரு விசித்திரமான நினைவாற்றல் உண்டு. எந்த வாசகத்தையும் ஒன்று அல்லது இரண்டு முறை படித்தால் போதும், எனக்கு மனப்பாடம் ஆகிவிடும்.”

“அதிக காலத்திற்கா?”

“நிரந்தரமாக.”

“ஆச்சரியம்,” என்றான் அதிகாரி தனது சாய்வு நாற்காலியில் குனிந்து எதையோ குறித்துக்கொண்டே. “ஆனாலும் ஒரு விஞ்

ஞானிக்கு நல்ல நினைவாற்றல் அவசியந்தான்.''

சற்று நேரத்திற்கு யாருமே பேசவில்லை. பிறகு நகரிலிருந்து துப்பாக்கி குண்டு துளைக் காத கண்ணாடியையும் ஊடுருவி வந்த இரைச் சலை உற்றுக் கேட்டார்கள்.

''ஒரு பைத்தியம் அல்லது வெறியன் இக் கடிதத்தை எழுதியதாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?'' என்றான் போலீஸ் தலை மை அதிகாரி.

''ஒரு வெறியனாக இருக்கலாம். ஆனால் எந்தவகையிலும் ஒரு பைத்தியமாக இருக்க முடியாது,'' என்றான் ஹ்யூகோ லென்ஸ். ''அவனுடைய காரணங்கள் மிகவும் தர்க்கரீதி யானவை. இந்தப் பகுதியைப் படித்தால்...'' என்று சொல்லியவாறே எழுந்து போலீஸ் அதிகாரியின் மேசையில் குவிந்து கிடந்த பக்கங்களைப் பொறுக்க லென்ஸ் குனிந்தான்.

''ஒரு நிமிடம்,'' என்றான் அதிகாரி, உள்ளங்கையில் பக்கங்களை மறைத்தவாறே. ''உங்களுக்குத் தான் எல்லாம் மனப்பாடம் ஆகிவிட்டதே...''

''எனக்குப் புரிகிறது,'' என்று விடையளித் தான் லென்ஸ் ஒரு புன்னகையுடன்.

''என்னை மன்னியுங்கள்...''

''தயவுசெய்து வாசகத்தை கவனியுங்கள்,'' என்றான் லென்ஸ் குறுக்கிட்டு. பிறகு மேற் கூரையைப் பார்த்தவாறே தங்குதடையின்றி வரிக்கு வரி தலைக்கு மேலே உள்ள வெண் ணிறச் சாந்தில் எழுதியுள்ளதைப் படிப்பது போல ஒப்பிக்கத் தொடங்கினான். ''ஆம்,

இயற்கையிலுள்ள எல்லாவற்றுக்குமே ஒரு வரம்பு உண்டு. மற்றொரு சிறப்புச் சொல்லைப் பயன்படுத்தினால், நான் அதை 'நிலைப்பின் வரையறை' என்று சொல்கிறேன். நாம் இந்த எல்லையைத் தாண்டினால் மாளிகை முழுதுமே இடிந்து போகும், விமானம் நொறுங்கும், கப்பல் அடியில் அமிழும், அணுக் கரு சிறு சூரியன் போல வெடிக்கும்... லென்ஸ், நீங்கள் நாம் வாழும் இந்த உலகின் 'நிலைப்பின் வரையறைக்கு' அப்பால் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். காஸ்மிக் சக்தி கொண்ட துகள்களால் நீங்கள் குவார்க்குகளை — இந்தப் பிரபஞ்சமாகிய கட்டிடத்தின் செங்கல்களை — தகர்க்கிறீர்கள்.

''உங்கள் முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்றால் இவ்வுலகுக்கு நான் ஒரு காசுகூடக் கொடுக்க மாட்டேன். இந்த சங்கிலித் தொடர் விளைவு, சங்கிலியிலிருந்தே விடுபட்டு ஓர் எதிர்விளைவாக உருவாக்கும். பிறகு இவ்வுலகமே நாசமாகிவிடும்.

''கண்டிப்பாகச் சொன்னால், ஹ்யூகோ லென்ஸ், இம்மாதிரி சோதனைகள் செய்வதற்கு உங்களுக்கு யார் உரிமை கொடுத்தது? ஜனாதிபதியினுடைய வாழ்த்துக்கள் உங்களுக்கு உண்டு என்பது உண்மைதான். ஆனால் இப்போதுள்ள விஷயம், மனித இனத்தையே நாசத்தின் வாசலில் கொண்டுவந்து விடும் வேலையில் ஈடுபடுவதற்கான தார்மீக உரிமை பற்றியது. இந்த உரிமையையும் வாய்ப்

பையும் உங்களிடமிருந்து நான் பறிக்கப் போகிறேன்...''

''முற்றிலும் சரிதான்,'' என்றான் போலீஸ் அதிகாரி லென்ஸ் மூச்சு விடுவதற்காக நிறுத்திய போது.

''இந்தக் கடிதத்தைப் படைத்தவன் கருத்து சரியானது என்று நினைக்கிறீர்களா?'' எனக் கேட்டான் லென்ஸ் அவசரமாக.

''நான் என்ன நினைக்கிறேன் என்றால்... இந்தக் கடிதவாசகங்களோடு நீங்கள் ஒன்றி யிருக்கிறீர்கள்,'' என்று விளக்கினான் தலைமை அதிகாரி.

லென்ஸ் தனது நாற்காலியில் சாய்ந்தவாறு பேசினான்: ''எனது சோதனைகள் உண்மையி லேயே ஆபத்தானவை என்று நாம் ஏற்றுக் கொண்டால்...'' ஒரு கணம் தன் கண்களை மூடி மிகவும் களைத்தது போலக் காணப்பட் டான்.

''ஆபத்தானவையா?'' என்று வினவினான் காம்ப், தான் கேட்டது உண்மையா என்பதை உறுதிப்படுத்துவதற்காக.

''பொருளை அழித்து துகளாக மாற்றப் போவதாக அவை அச்சுறுத்துகின்றன என்று கருதமுடியும். ஆனாலும் நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு இக்கடிதத்தை எழுதியவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? இவனை மனித இனத்தின் காவலனாக யார் ஆக்கியது? இவ்வுலகின் தலைவிதியையே தன் கையில் வைத்திருக்கின்ற கடவுள் என்று அவன் தன்னை உண்மையிலேயே நினைக்

கிறானா? அல்லது எதிர்காலத்தை அறியக் கூடிய தீர்க்கதரிசியா? மிகப் பெரும்பாலும் குவார்க்குகளைப் பிளக்க முயலும் இந்த வேலையே பரிணாமத்தின் இயல்பான செய் முறையில் மிக முக்கியமான பங்கு வகிக் கிறது.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.''

''நான் சொல்ல விரும்புவது என்னவென் றால் குவார்க்குகளைப் பிளத்தல் தான் ஒவ்வொரு நாகரிகமும் அதன் பரிணாம வளர்ச்சியில் கடந்துசெல்ல வேண்டிய ஒரு படியாகும்,'' என்று லென்ஸ் விளக்கினான். ''ஆனால் இக் கடிதத்தை எழுதியவன் அதைப் பற்றி சிந்தித்ததுண்டா?''

விஞ்ஞானி போலீஸ் அதிகாரியையே மறந்து விட்டது போலத் தோன்றியது. கண்ணுக்குத் தெரியாத ஓர் எதிரியின் முன் அவ்விஷயம் குறித்து விவாதிப்பது போலவும், உண்மைகளை நிரூபிப்பது போலவும், அதை நம்பச்செய்ய முயல்வது போலவும் அவன் பேசிக்கொண்டே இருந்தான். அதற்கு எதிரான கருத்துக்களையும் அவனே சொல்லி ஒரு வெற்றிக் களிப்புடன் தன் 'எதிரி'யின் எதிர்ப் பைச் சந்தித்தபோது தன் குறுந்தாடியை இழுத்துவிட்டுக் கொண்டான். 'எதிரி'யினுடைய தீவிரமான மறுப்புக்குப் பிறகு மனம் புழுங்கி கைவிரல்களை மடக்கத் தொடங்கியும், தனது மூக்கையும் தடவிவிட்டுக் கொண்டான்.

லென்ஸ் சற்றுநேரம் பேசாமல் அனாம

தேயக் கடிதத்தை எழுதியவனால் முன்வைக் கப்பட்ட மற்றொரு எதிர்க் கருத்துக்கு தன்னைத் தயார் செய்துகொண்டு இருந்த போது, ''நீங்கள் அளவுக்குமிஞ்சி சிரமப்படு கிறீர்கள்,'' என்றான் போலீஸ் அதிகாரி. ''ஒரு நிழலுடன் விவாதிப்பதால் என்ன பயன்? இக் கடிதத்தின் பின்னணியில் உள்ள அம்மனிதன் நமக்குக் கிடைத்தால் அது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்.''

''அவனைப் பிடிப்பதா?''

''நம்மால் முடியும் என்றே நான் நம்பு கிறேன்.''

ஹ்யூகோ லென்ஸ் எழுந்தான். பேசுவதற்கு முன்பாக இடையே புறச் சட்டையை நேராக இழுத்துவிட்டுக் கொண்டான். ''ஆனாலும் அவன் எதுவும் சாட்சியங்கள் விட்டுச் சென்ற தாக எனக்குத் தோன்றவில்லை, இல்லை யா?''

''எனது அருமை திரு. லென்ஸ், விஷயங்கள் அப்படியே போவது கிடையாது. உங்களைப் போன்ற ஒரு புகழ்பெற்ற சக விஞ்ஞானி ஒருமுறை சொன்னார்: ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினை உண்டு என்று.''

''நியூட்டனின் மூன்றாவது விதி,'' என்று பதிலளித்தான் ஹ்யூகோ லென்ஸ் இயல்பாக.

''இதே பாணியில் நானும் குற்றவியலின் முதலானதும் அடிப்படையானதுமான விதியை நிர்ணயிப்பேன்,'' என்றான் காம்ப் மேசை யிலிருந்து எழுந்தவாறே. ''ஒவ்வொரு வினை யும் — இங்கு நான் குற்றச்செயல் என்று

கருதுவது — ஒரு தடயத்தை விட்டுச் செல்கிறது. இத்தடயம் எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடிப்பதே நமது வேலை.''

''நீங்கள் அதை எங்கே தேடப் போகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,'' என்றான் விஞ்ஞானி.

பௌதிகவியலாளனை முறைத்துப் பார்த்தவாறே, ''ஒவ்வொருவருக்கும் தொழில் ரகசியங்கள் உண்டு,'' என்றான் ஆர்னோ காம்ப். ''உங்களுக்கு உங்களுடையது, எங்களுக்கு எங்களுடையது.''

''ஒவ்வொருவருக்கும் அவருடையது,'' என்று லென்ஸ் ஒத்துக்கொண்டான்.

விஞ்ஞானியினுடைய ஆர்வம் தணிந்தது, முகம் சுருங்கியது. போலீஸ் அதிகாரி தன் அலுவலக அறைக் கதவு வரை அவனை அழைத்துச்சென்றான்.

''நீங்கள் உங்கள் பணியை அமைதியாகப் பார்க்கலாம். உங்கள் பாதுகாப்புக்கு நாங்கள் பொறுப்பேற்கிறோம். ஆனால் எங்களுடைய அறிவுரைகளை நீங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்,'' என்றான் காம்ப்.

''நான் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்கள்?'' என்றான் லென்ஸ், அவன் முகத்தைத் திரும்பிப் பார்த்தவாறு.

''இந்த அணுவாராய்ச்சி மையத்தின் எல்லைக்குள் எங்கள் ஆள் ஒருவனைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது,'' என்று விளக்கினான் காம்ப்.

''எனது மெய்க்காவலனா?''

''அப்படி ஒன்றுமில்லை.''

ஹ்யூகோ லென்ஸ் சற்று நேரம் சிந்தித்து பிறகு சொன்னான்: ''எல்லாம் சரி. உங்கள் ஆள் எப்போது வருவான்? நாளைக்கா?''

''இன்றே இன்னும் நாற்பது நிமிஷங்களில்,'' தன் கடிகாரத்தைப் பார்த்தவாறே தலைமை அதிகாரி பேசினான். ''அவ்விடத்திற்குப் போவதற்கு உங்களுக்கு நேரமிருக்கிறதா?''

''நான் புறப்படத் தொடங்கினால்.''

''அதைச் செய்யுங்கள். அநுமதிச் சீட்டு எங்கே?''

''இதோ ஒன்று,'' என்ற ஹ்யூகோ லென்ஸ் ஏதோ ஒருசில அடையாளங்கள் கிறுக்கப்பட்ட ஒரு மெல்லிய பிளாஸ்டிக் தகடை காம்பிடம் நீட்டினான்.

''யார் அவனைச் சந்திப்பார்கள்?''

''எனது செயலாளர்.''

''ஒரே ஒரு நிபந்தனை,'' என்றான் போலீஸ் அதிகாரி கதவுக் கைப்பிடியைப் பற்றியவாறே. ''முற்றிலும் ரகசியமாக இருக்க வேண்டும். யாரிடமாவது அவன் யார் என்று நீங்கள் தெரிவிப்பீர்களானால் அதுதான் அவனுக்கு முடிவு. உங்களுக்கும் அதுவே என்பது பொருள்.''

''என்னுடைய முடிவு ஏதாவது ஒரு வழியில் வந்து கொண்டுதான் இருக்கிறது,'' என்றான் லென்ஸ் கையை அசைத்தவாறு.

''இப்போதிலிருந்து தேசத்தின் போலீஸ்

படை உங்களது பாதுகாப்பை ஏற்றுக் கொள்கிறது,'' என்றான் காம்ப் உறுதியாக. ''அரசரது குதிரைப்படை முழுவதும், காலாட் படை முழுவதும் என்று சொல்லப்படுவது... இப்பொழுது உங்கள் ஆய்வுக்கூடத்திற்கு நீங் கள் விரைந்து செல்ல வேண்டும்.''

விஞ்ஞானி சென்ற பிறகு சில நிமிஷங்கள் அவ்வறையிலேயே மேலும் கீழுமாக தலைமை அதிகாரி நடந்தான். வழக்கத்திற்குமாறான இந்த விஷயத்தில் எவ்வாறு இறங்குவது என்று சிந்தித்தான். முக்கியமானதாகிய ஆரம்பக் கட்டத்தில் அவன் பின்பற்றப் போகும் நுணுக்க வழிமுறைகளைப் பொறுத்தே விளை வும் இருக்கும். குறிப்பேட்டிலிருந்து ஒரு தா ளை எடுத்து பொறுக்கி கடிதத்தின் கடைசிப் பகுதியை மெதுவாக வாசித்தான்.

''ஹ்யூகோ லென்ஸ், உங்களுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு: பிரபஞ்சத்தின் பனி மூடிய பிரதேசங்களில் பரவிக் கிடக்கும் நறுமலரைப் போன்று வாழ்வையே தாக்கி இயற்கையின் புனிதத்திலும் புனிதமான ஒன்றைத் தாக்கும் உங்களது முயற்சியைத் தானாகவே கைவிட்டுவிட வேண்டும். பரிபூரண ரகசியத்தின் சாவிகளை அடிகாண முடியாத ஆழத்தில் நீங்கள் வீசி எறிய வேண்டியது தான். அச்சாவிகள் யார் கையிலும் சிக்காது என்பதில் நீங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். இதற்காக நான் உங்களுக்கு மூன்று மாத அவகாசம் தருகிறேன். அந்த மூன்று மாத கால முடிவில் நீங்கள் எனது நிபந்தனை

களை நிறைவேற்றாவிட்டால் — நீங்களே உங்களைக் குற்றம் சொல்லிக்கொள்ள வேண்டும். நீங்கள் இறப்பீர்கள், எதுவும் உங்களுக்கு உதவிசெய்யாது. இவ்வளவுக்கும் பிறகு நீங்கள் போதுமான பகுத்தறிவோடு இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கையெழுத்துக்குப் பதிலாக நான் இந்த ஊதாப்பூவை வைக்கிறேன். இது அழகை மட்டுமல்லாது நமது உலகின் நிலையாமையையும் உங்களுக்கு நினைவுபடுத்தட்டும்.''

காம்ப் பூவை முகரப்போனான், ஆனால் அவனது கை பாதி வழியில் நின்றது. ஒரு எதிர்பாராத சிந்தனை காரணமாக அவன் முகம் வெளிறியது. இப்பூவில் நஞ்சிருந்தால் என்னவாகும்? இப்படி இது ஓர் எளிய திட்டமாக இருக்கலாம். ஒருவேளை மூன்று மாத காலததிற்கும் நீடித்திருக்கக் கூடிய நஞ்சை அதில் தோய்த்திருக்கலாம். இம்மாதிரியான சதிகள் மத்திய கால வரலாற்றில் மிகவும் சாதாரணம்.

அவன் அழைத்த போது ஒரு செயலாளன் ஓசை இல்லாது நடந்து வந்தான்.

கடிதம் எழுதப்பட்ட காகிதங்களையும் அவை இருந்த காகித உறையையும் காட்டியவாறே, ''தயவு செய்து இதை தீவிரச் சோதனைக்கு எடுத்துக்கொள்ளுங்கள். விரல் ரேகைகள் மற்றும் எல்லாவற்றையும் சரிபார்த்துக் கொள்ளுங்கள்,'' என்றான் போலீஸ் அதிகாரி.

''ஆகட்டும், ஐயா.''

''இந்தப் பூவையும் எடுத்துச்செல்லுங்கள். சற்று பொறுங்கள், முதலில் கையுறைகளை அணிந்து கொள்ளுங்கள்.''

காம்ப் சன்னல் வரை நடந்து சென்றான். சன்னல் கண்ணாடியில் தன் விரல்களால் தாளமிடத் தொடங்கினான். இவை எல்லாம் அற்ப முன்னெச்சரிக்கைகள். ஆனால் ஒரு காரியத்தை முழுமையாகச் செய்வதும் அமைதி யாக இருப்பதும் தலையானவை. ஒருசில நிமி ஷங்களில் சோதனைகள் முடிந்து போகும். அடுத்த அலுவலைத் தொடங்கும் முன்பு இதை முடிக்க வேண்டியவனாக இருந்தான்.

துயர சிந்தனைகள் மனத்தில் படர்ந்தன. தான் விரும்பாத கார்டினல்களை ஒழித்துக் கட்டுவதற்காக சேஸார் போர்ஜியா எப்படி சாவியை அவர்களுக்குக் கொடுத்து நகை களும் பிற செல்வங்களும் நிறைந்த பெட்டி யைத் திறக்கும்படி கேட்டுக்கொள்வார் என் பதை அவன் நினைவு கூர்ந்தான். சாவியின் விளம்பில் மெதுவாக வினைபுரியும் நச்சு தடவப்பட்டிருக்கும். பிறகு பெட்டி உள்ளடங் கிய பூட்டு மிக இறுக்கமாக இருக்கும். கார்டினல் சாவியை மிகவும் இறுக்கமாகப் பற்றிக்கொள்ள வேண்டி இருக்கும். இதனால் அவரது தோளை நச்சு ஊடுறுவும். சில மாதங்கள் கழிந்ததும் அந்த துரதிரஷ்டக் கார்டினல் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து முகம் வெளுத்து இறுதியில் மருத்துவர்களின் இடைவிடாத முயற்சிகளும் பயனளிக்காமல் மறைந்துபோவார்.

ஆனால் அப்போதிலிருந்து விஞ்ஞானம் வெகுவாக முன்னேறி இருக்கிறது. யாரும் கண்டறிய முடியாதபடி நோய் அறிதிறன் மாறி இருக்கிறது. சாதாரண மருத்துவக் கம்பியூட்டரில் உள்ள எலெட்ரானிக் நினைவு செல்கள் எல்லாவிதமான நச்சுகள் மற்றும் அவற்றின் சேர்க்கைகள் எல்லாவற்றையும் வைத்திருக்கும். ரத்தவெறி பிடித்த கதெரீனா டி மேடிச்சி 16ஆம் நூற்றாண்டிற்கு பதிலாக இப்போது இருந்தால், பயங்கரத் தீமையைச் செய்த அன்றே அவள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு இருப்பாள்.

ஹ்யூகோ லென்ஸ் பெற்ற கடிதம் ஒரு வகையில் விநோதமானது. வாசகம் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. அதைப் பெறுபவன் வாழ்வதற்கென்று அனுமதிக்கப்பட்ட மாதங் களின் எண்ணிக்கை '3' மட்டுமே கையால் எழுதப்பட்டிருந்தது.

அனாமதேயக் கடிதத்தின் காரணமாக ஹ்யூகோ லென்சின் பிரதிபலிப்பும் அவனது பொதுவான போக்கும் காம்ப்பையும் குழப் பத்தில் ஆழ்த்தியன. புகழ்பெற்ற விஞ்ஞானியா கிய அவன் தனது சாவு சமீபித்து விட்டதாகவும், அது தவிர்க்க முடியாதது என்று எண்ணுவதா கவும் நினைத்தான்.

நீட்டிய நரம்பிலிருந்து தோன்றுவதுபோன்ற ஓர் ஓசை போலீஸ் அதிகாரியை மீண்டும் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது. அவன் தன் இருக்கைக்கு வேகமாக நடந்தான். வீடியோ

தொலைபேசியிலுள்ள திரையில் திடீரென்று ஓர் ஒளி வீசியது.

''சோதனையின் முடிவுகளைத் தெரிவிக்கிறேன்...'' என்றபடியே மூத்த ஆய்வாளனின் குரல் தளதளத்து வந்தது.

''நான் கேட்கிறேன்.''

''உங்களுடையதும் ஹ்யூகோ லென்சுடையதுமான ரேகைகள் மட்டுமே காணப்படுகின்றன. கையுறை அணிந்த யாரோ ஒருவனால் கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.''

'' '3' என்ற எண் எதனால் எழுதப்பட்டது?''

''சாதாரண பால்பாயிண்ட் பேனா.''

''எத்தகைய மை?''

''தரமான வகைதான்.''

ஒரு விநாடி போலீஸ் அதிகாரி திடுக்கிட்டான். எந்தப் பதிலுக்கான கேள்வியைக் கேட்க வேண்டுமென்று நினைத்தானோ அதைக் கேளாமல் அடக்கிக் கொண்டான்.

''பூ நச்சிடப்படவில்லை,'' என ஆய்வாளன் தொடர்ந்தான்.

ஆர்னோ காம்ப் இருமிவிட்டுப் பேசினான்: ''இந்தச் சோதனையின் துல்லியமான முடிவுகளில்தான் உங்கள் உயிர் சார்ந்திருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.''

''ஆம், ஐயா. எப்போதும் போல.''

திரையில் ஒளி அவிந்தது. இந்தத் தொடக்கச் சோதனைகளின் முடிவுகளில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. மத்திய கால

வாசனையை வெளிப்படுத்தும்படியான முடிவு களை எதிர்பார்ப்பது பேதைமையே.

இப்போது அவன் ஓர் அவசரக் கூட்டத் தைக் கூட்டியாக வேண்டும். கொஞ்சமும் நேரத்தை வீணாக்க முடியாது. ஒருவேளை ‘மூன்று’ என்ற எண் ஒரு பொய்யாகவும் இருக்கலாம். மறுநாளே ஓசையில்லாமல் சுடும் ஒரு துப்பாக்கியால் இதயம் துளைக் கப்பட்டோ, மண்டை ஓடு சிதறப்பட்டோ ஹ்யூகோ லென்ஸ் இறந்து கிடப்பது காணப் படலாம்.

* * *

ஆர்னோ காம்பின் நாள் இப்போதுதான் தொடங்கி இருக்கிறது. இருப்பினும் எண்ணற்ற கவலைகளும் பிரச்சினைகளும் முன்னிற்பது போலத் தோன்றியது. டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் தீப்பிடித்தது, நகர அருங்காட் சியகத்தில் ஏற்பட்ட ரெம்பராண்ட் ஓவியத் திருட்டு, மாணவர்களின் வேலை நிறுத்தம், கடைசியாக இந்த ஹ்யூகோ லென்ஸ் விவ காரம்.

லென்ஸினுடைய விவகாரம் ஏதோ ஒரு ரகசிய ஸ்தாபனத்தின் வேலையாக இருந்தால் என்னவாகும்? மனமொடியச் செய்துவிடும். ஒரு போலீஸ்காரன் மிகச் சாதாரணமாக வாழ்க்கை நடத்துகிறான் என்று நினைக்கும் எவரும் தவறு செய்தவனாவான்...

தலைமை அதிகாரியின் அறையில் துணை அதிகாரிகள் கூடத்தொடங்கினார்கள். அவசரக்

கூட்டம் சுருக்கமாகவே இருந்தது. வார்த்தைக்கு வார்த்தைப் பேசுவது என்பது காம்பிற்குப் பிடிக்காது.

'ஊதாப்பூ' ரகசியத்தைப் பற்றி விவாதம் தொடங்கியது.

பொதுவாக நிகழக்கூடிய கொலை சதி விவகாரத்தின் முக்கிய அம்சமல்ல — அந்தோ, இது போன்ற விஷயங்கள் வழக்கமாக நடப்பவையே. அந்தக் குற்றவாளியினுடைய கோரிக்கைகளின் வழக்கத்திற்கு மாறான இயல்பும் பலி கொடுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் நாட்டின் மிகச் சிறந்த விஞ்ஞானி என்பதுமே காம்பின் மனத்தில் உறுத்தியது.

பல்வேறு சாத்தியமான விளக்கங்கள் இப்பொழுது பரிசீலிக்கப்பட்டன. கடிதத்தின் முழுப் பகுதியும் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததால் நாட்டிலுள்ள அத்தனை தட்டச்சு எந்திரங்களையும் சோதித்து விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

காம்ப் தமது அறையைத் துருவிப்பார்த்த போது சற்று நேரத்திற்கு முன்பு ஹ்யூகோ லென்ஸ் உணர்ச்சிவயப்பட்டவனாய் அமர்ந்திருந்த அதே நாற்காலியில் அமர்ந்த கருநிற முடியும் விறைப்பான தோற்றமும் கொண்ட இளைஞன் மீது அவன் பார்வை விழுந்தது.

''ஆர்தர் பார்க், உங்களுக்கும் பௌதிகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?'' எனத் திடீரெனக் கேட்டான் போலீஸ் தலைமை அதிகாரி.

''என்னை மன்னியுங்கள்... யாருடன்?''

''பௌதிகம் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.''

''நான் அதைப் பார்த்ததே இல்லை,'' என்றான் பார்க் அதைப் புரிந்துகொண்டவனாக.

''இன்று முதல் நீங்கள் அதனது மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவன். நான் உங்களை பௌதிக விஞ்ஞானி ஆக்குகிறேன், திரு. பார்க்,'' என்றான் போலீஸ் அதிகாரி.

''ஆனால் என்னால் மிசோனுக்கும் பைசனுக்கும் கூட வித்தியாசம் சொல்லத் தெரியாது!''

''அத்தகைய வீரமெல்லாம் உங்களுக்குத் தேவையில்லை. இந்த அணுவாராய்ச்சி மையத்தில் பணியாற்றும் ஊழியர்களைப் பொருத்தவரை நீங்கள் ஒரு பௌதிக விஞ்ஞானி. நீங்கள் அங்கே நேராகச் செல்ல வேண்டியதுதான். இதோ உங்களது அநுமதிச் சீட்டு. எல்லா ஏற்பாடும் தயார் செய்யப்பட்டு விட்டது. ஹ்யூகோ லென்ஸின் செயலாளர் உங்களுக்காக கிழக்கு வாயிலில் காத்திருப்பார்.''

''நான் என்ன, ஹ்யூகோவின் மெய்க்காவலனோ?''

''அது மட்டுமல்ல. நீங்கள் அவ்விடத்தின் நபர்களில் ஒருவராக முயற்சிக்க வேண்டும். அங்கு என்ன நடைபெறுகிறது என்பதையும், லென்ஸின் மீது பொறாமைப்படுபவர்கள் அல்லது யார் எதிரியாகச் செயல்படுவார்கள் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், அவனை அழிப்பதன்

மூலம் லாபம் அடைபவன் யார் என்பதைக் காண முயற்சி செய்ய வேண்டும்.''

''கவலை வேண்டாம், நான் அங்கேயே கால் ஊன்றிக் கொள்வேன்.''

''இழப்பதற்கு நேரமில்லை. அந்தக் குற்ற வாளி மூன்று மாதங்களில் அல்ல, நாளையே செயலாற்றத் துவங்கினாலும் துவங்குவான்.''

ஆர்தர் பார்க் தலையசைத்தான்.

''எச்சரிக்கையாக இருக்க வேண்டுவதே முக்கியம்,'' தலைமை அதிகாரி தொடர்ந் தான். ''அந்தப் பூக்காரனை நாம் பயமுறுத்த வேண்டியதில்லை. ஆனால் அவனைப் பிடித் தாக வேண்டும்.''

பார்க் தனது நாற்காலியிலிருந்து எழுந் தான்.

''நீங்கள் எதைக் கண்டுபிடித்தாலும் இரவோ பகலோ எந்நேரத்திலும் என்னிடம் நேரி டையாகச் சொல்ல வேண்டும்,'' அதிகாரியின் கடைசி உத்தரவு வந்தது.

''நான் இப்போது போகலாமா?'' தன்னை முழுதாக நிமிர்த்திக்கொண்டு பார்க் கேட் டான்.

''வெறுமனே போகாதே! ஆனால் பறந்து செல்ல வேண்டும்!'' காம்ப் தன் கைக் கடிகாரத்தை குனிந்து பார்த்தான். ''ஹ்யூகோ லென்ஸ் இன்னும் பத்து நிமிடம் அங்கிருப் பான். அதன் பின்பு நேரடியாக அணுவாராய்ச்சி மையத்தில் நீங்கள் இருக்க வேண்டும்.''

*   *   *

சூறாவளிப் பயணத்தால் இன்னும் சூடாக இருந்த காற்று வாகனத்திலிருந்து இறங்கிய பிறகு பார்க் அதைத் திரும்ப அனுப்பிவிட்டான். அந்தச் சதுக்கத்தை நடந்தே கடக்க முடிவு செய்தான். கோடை வெயில் தகித்தது. ஏப்ரல் மாதச் சூரியனின் கதிர்கள் எதார்த்த மாகவே வெப்பமாயிருந்தது.

கிழக்கு வாயிலில் யாருமில்லாது இருந்ததை அவன் கண்டான். மக்கள் அந்தப் பகுதியைத் தவிர்க்க முயன்றார்கள் என்பதை பார்க் அறிவான். பிற இடங்களை விட அணுவா ராய்ச்சி மையத்தைச் சுற்றி கதிரியக்கத்தின் அளவு அதிகமாக இருந்தது என்ற பீதி தரும் வதந்தி பரவி இருந்தது. நகராட்சி அதிகாரிகள் பல கட்டுப்பாடுகளுக்கு ஏற்பாடு செய்து அதில் உண்மையில்லை என்று தெரிந்துகொண்டாலும் கதிரியக்கத்தின் அபா யத்தைப் பற்றிய பேச்சுக்களுக்கு ஒரு முடிவு கட்டவில்லை. அப்போதைக்கு உபயோகத்தில் இருந்த கருவிகளால் கண்டுபிடிக்கப்பட முடி யாத புதிய வகை கதிரியக்கம் இருப்பதாக அப்பகுதி மக்கள் கருதினார்கள்.

நன்கு பிரபலமான பாட்டு ஒன்றை சீழ்க் கையடித்தவாறே ஆர்தர் பார்க் பாதுகாப்பு கட்டுப்பாட்டு அறைவரை நடந்துசென்று தனது அடையாளத் தகட்டை அங்கிருந்த ஒரு வட்டில் நழுவவிட்டான்.

தானாகவே சோதனை முடிந்த பிறகு

தெரியமுடியாத ஓர் ஒளி மின்னியது. ஒரு நெருங்கிய எஃகுக் கதவு மெதுவாகப் பின் புறம் நகர்ந்து அவன் நுழைய வழிவிட்டது.

தான் ஏற்கெனவே கேள்விப்பட்ட அந்த மையத்தின் எல்லைக்குள் சந்தேகங்களே இல்லாமல் பார்க் நுழையவில்லை. இருப்பினும் முதல் அநுபவம் அவனுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. நவீன ரோபாட்டுகளோ, வேறு அமைப்புக்களோ சோம்பேறிகளின் பேச்சில் இட்டுக்கட்டப்பட்ட எதுவும் அங்கு அவனுக்குத் தென்படவில்லை. அந்நிறுவனத்தின் முன்புறப் பாதைகள் நன்கு சுத்தப்படுத்தப்பட்டிருந்தன. நன்கு பராமரிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் சதுரம் சதுரமாக அமைந்து, தெருப் போக் கிரிகளுடன் ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு ஒரு மாதம் மகிழ்ச்சியாகத் தங்கிவந்த ஒரு மருத்துவ மனையை ஆர்தருக்கு நினைவூட்டி யது.

மிகவும் இடைவெளியிட்டு நடப்பட்டிருந்த மொட்டை மரங்கள் அப்போதுதான் பசுமை யாக மாறத் தொடங்கி இருந்தன. கிழக்கு வாயிலிலிருந்து பல திசைகளிலும் பிரிந்து சென்ற பாதையில் பார்க் நின்று தயக்கத்துடன் நாலாபுறமும் பார்த்தான். ஒரு ஜீவனைக் கூட காண முடியவில்லை.

ஒளிவீசும் நீல வானில் பருந்து ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒரு மிகப் பெரிய வட்ட மடித்த பின்பு மையத்தின் மைதானத்தை நோக்கி இறங்கத் தொடங்கி

யது. ஏதோ கண்ணுக்குப் புலனாகாத தடையில் மோதியது போல திடீரென்று பறவை வேகமாக மேல்நோக்கிச் சிறகடிக்கத் தொடங்கியது. மென்மையான ஆனால் உறுதியான ஒரு சக்தியால் தூக்கி எறியப்பட்ட பறவை இப்போது சாவது போல நடுங்கியது.

அணுவாராய்ச்சி மையம் பாதுகாப்பு ஏற்பாட்டிற்காக கண்ணுக்குப் புலனாகாத ஒரு விதானத்தால் அமைக்கப் பட்டிருந்தது. ''அவர்கள் சொல்வது உண்மைதான்: காற்றும் இங்கு நுழைய முடியாது,'' என்று பார்க் தனக்குத் தானே நினைத்துக் கொண்டான்.

தன்னை நோக்கி ஓர் இளம் பெண் வருவதைக் கண்ட ஆர்தர் கூனுடலை நிமிர்த்திக் கொண்டான்.

ஆனால் அவளோ பார்க்கின் புன்னகையைப் பொருட்படுத்தவில்லை.

''கிழக்கு வாயில் வழியாகத்தான் நீங்கள் வந்தீர்களோ?'' என்று அவள் கேட்டாள்.

''ஆம்.''

''நீங்கள் தான் ஆர்தர் பார்க், நியூட்ரினோ கற்றைகளைப் பற்றிய நிபுணர்.''

''ஆம்... அப்படித்தான்.''

''நான் ஷெல்லா வலேரி, டாக்டர் ஹ்யூகோ லென்ஸின் செயலாளர்.''

''உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.''

''என் பின்னால் வாருங்கள். டாக்டர் லென்ஸ் உங்களுக்காகக் காத்திருக்கிறார்.''

போகும்போது ஆர்தர் உரையாட முயன்றான். ஆனால் ஷெல்லாவோ நட்பு முகம்

காட்டாமல் ஓரிரு வார்த்தை பதில்களாகவே அளித்தாள்.

பாதையின் ஒரு வளைவில் பார்க் பெரு வியப்பினால் ஏறத்தாழ கத்தியே விட்டான்: கட்டடத்தின் நுழைவாயிலின் பக்கத்தில் ஊதாப்பூக்கள் நிறைந்த பூம்பாத்தி ஒன்று இருந்தது.

''ஊதாப்பூக்கள்? அதுவும் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில்?'' அவன் வினவினான்.

''காப்பு மண்டலத்தை மறக்க வேண் டாம்,'' எனச் சுற்றுமுற்றும் பார்க்காமலேயே அவள் விளக்கினாள்.

அணுவாராய்ச்சி மையத்தை வெளியிலி ருந்து பார்த்த போது ஏன் அது அவனை அவ்வளவாக ஈர்க்கவில்லை என்பது உள்ளே நுழைந்ததும் தான் பார்க் தெரிந்து கொண் டான். கட்டிடங்களின் முக்கியப் பகுதிகள் எல்லாம் பூமிக்கு அடியிலேயே இருந்தன. ஆட்களை எடுத்துச்செல்ல தயாராக இருந்த லிஃப்டுகளின் நீண்ட வரிசை இதை காட்டி யது. இருப்பினும் எவ்வளவு ஆழத்தில் அவை சென்றன என்பதை அவனால் ஓரளவு ஊகிக்கத் தான் முடிந்தது.

டாக்டர் லென்ஸ் அன்போடு கைகுலுக்கி ஆர்தரை வரவேற்றான்.

''இத்தருணத்தில் எங்களுக்குத் தேவைப்படும் நிபுணர் நீங்கள் தான்! என் பின்னால் வாருங் கள்,'' என்றான்.

கலக்கமும் குழப்பமுமடைந்தது போலத் தோன்றிய பல ஊழியர்கள் ஆங்காங்கே

மோதிக்கொண்டபடி பலவித ஆய்வகங்களின் ஊடே நடந்து சென்றார்கள்.

''லட்சியத்தை நெருங்கும் தருவாயில் தான் சிக்கல் அதிகமாகிறது,'' என்றான் ஹ்யூகோ லென்ஸ் நடந்துகொண்டே.

ஓர் அறையில் தடித்த பிளாஸ்டிக் தகடு களால் மூடப்பட்ட தரைப் பகுதி பார்க்கின் கவனத்தைக் கவர்ந்தது. அங்கு சென்று நெருக் கமாக அதைப் பார்த்தான். லென்ஸ் விருப்ப மின்றி பின்தொடர்வதை பார்க் கவனித்துக் கொண்டான்.

சரியாகப் பொருந்தாத இரு தகடுகளுக்கு இடையே உள்ள சிறு இடைவெளி வழியாக ஆர்தர் பார்த்தான். தீயினால் பொசுக்கப் பட்டும் கரியாகியும் நிலைமாறியும் கிடந்த ஓர் எந்திர அமைப்பின் துணுக்குகள் அவனுக்குத் தெரிந்தன. தரையின் காண்கிரீட் தளத்தில் வெப்பத்தால் உருகி அலைபோல் நெளிந்து ஏற்பட்ட ஆழமான பிளவுகள் தெரிந்தன. அங்கு இன்னமும் ஏதோ எரிந்து கொண்டி ருப்பதை தான் கண்டதாக ஆர்தர் உணர்ந்தான்.

''இங்கு என்ன இருக்கிறது?'' பார்க் வின வினான்.

''அணு உலை ஒன்று வெடித்துப் போனது.''

''என்ன காரணம்?''

''அது ஒரு விபத்து.''

அவர்கள் ஆய்வகத்தின் குறுகிய இடைப் பாதை வழியே நடந்து சென்ற போது ஒளிவீசும் பித்தளைக் கோளம் ஒன்றைத்

தொடுவதற்காக ஆர்தர் கையை நீட்டினான். லென்ஸ் அவனது கையைப் பிடித்து வேகமாகத் தள்ளியதில் பார்க் கிட்டத்தட்ட விழும் அளவுக்குத் தடுமாறினான்.

''அறுநூறு ஆயிரம் வோல்டுகள்,'' விளக்கி னான் லென்ஸ்.

பயத்துடன் இருமிவிட்டு பிறகு பார்க் கேட் டான்: ''அணு உலை வெடிப்பினால் ஏதாவது உயிர்ச் சேதம் உண்டோ?''

''நல்ல காலமாக இல்லை,'' என்று துயரத் தை மறைந்தவாறே பதில் அளித்தான் விஞ் ஞானி.

''ஆட்கள் குறித்த நேரத்தில் உடனே ஒளிந்து கொள்ள முடிந்ததோ?''

''யாருமே இல்லாத இரவு நேரத்தில் தான் வெடித்தல் நிகழ்ந்தது,'' என்றான் லென்ஸ்.

ஆய்வுக் கூடங்களின் வழியே நீண்ட நேரம் நடந்தது களைப்பை ஏற்படுத்தியது. இருவரும் லிஃப்டின் கீழே வந்து எண்ண முடியாத அறை கள், ஓரப் பாதைகள் வழியே நடந்துசென்றார் கள்.

பார்க்கினால் டாக்டர் லென்ஸைத் தொடர்ந்து நடக்க முடியவில்லை. ஹ்யூகோ வின் நடை வேகமாகச் சற்று அசைவுடன் இருந்தது. கடைசியில் கதவுகள் ஒன்றின் முன் னால் அவன் நின்றான்.

''எனது முதல் உதவியாளருக்கு உங்களை நான் இப்போது அறிமுகப்படுத்தப் போ

கிறேன்,'' என்று விரைந்து முணுமுணுத்தவாறே அவன் கதவைத் தள்ளித் திறந்தான்.

அறை பெரிதாக இல்லாவிட்டாலும் வெளிச்ச மானதாக இருந்தது. அங்கு கருவிகளோ எந்திரங்களோ இல்லை. தளத்திலிருந்து கூரை வரை அலமாரிகளே காணப்பட்டன. வரிசை வரிசையான புத்தகங்கள், பயோமெமரிப் பாளங்கள் மற்றும் நுண்படச் சுருள்களை பார்க் காண முடிந்தது. தடித்த பிளாஸ்டிக் தகடு போர்த்திய ஒரு சாய்வு மேசையில் ஒரு வன் எழுதிக் கொண்டிருந்தான். கதவு திறந்த போது அவன் தலையை உயர்த்தினான். பேனாவை (''ஒரு பால்பாயிண்ட்,'' பார்க் கண்டு கொண்டான்) கீழே வைத்துவிட்டு பார்வையாளர்களைச் சந்திக்க அவன் எழுந் தான்.

''இவர்தான் இமாண்ட் அர்டோனிஸ், எனது வலதுகரம் போன்றவர்,'' விளக்கினான் ஹ்யூ கோ லென்ஸ்.

அர்டோனிஸ் தலையசைத்தான்.

''இவர்தான் ஆர்தர் பார்க், நமக்குப் புதி யவர். நியூட்ரினோ ஆம்பிளிபயர்களைப் பற்றி ஆராய்பவர்,'' லென்ஸ் தொடர்ந்தான்.

''நமக்கு இப்போது தேவையானவர்,'' என்றான் அர்டோனிஸ் மிக மலர்ச்சியுடன்.

பார்க் நன்றியுடன் தலைவணங்கினான்.

அர்டோனிஸ் இளைஞன், அழகானவன். அவன் முகம் நன்கு மழிக்கப்பட்டிருந்தது. விலையுயர்ந்த ஆஃப்டர் ஷேவைப் பயன்படுத்து பவன்.

முன்னால் தொங்கிய தலைமயிரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டவாறே எதையோ விசாரிப்பது போல, ''அதாவது, டாக்டர் லென்ஸ், நீங்கள் திரும்பிவிட்டீர்களாக்கும்,'' என்று விமர்சித்தான் இமாண்ட்.

''ஆம், இந்த நிமிடத்தில்.''

''போலீஸ் தலைமை அதிகாரியை நீங்கள் பார்த்தீர்களா?''

''ஆம்.''

''ஏதாவது செய்வதாக வாக்களித்தானா?''

''முதலில் அவன் நிலைமையை ஆராய்ந்து அறிய வேண்டியிருக்கிறது...''

''குறைந்தது அந்தக் கடிதத்தையாவது அவன் படித்தானா?'' என்று கேட்டான் அர்டோனிஸ்.

''ஆம். அவன் படித்தான்...''

''அப்படி என்றால் ஏன் அவன் உடனடியாகச் செயல்படவில்லை? ஒரு குற்றம் அசாதாரணமாக இருந்தால் இந்த எதிர்கால உளவாளிகள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும் தானே, டாக்டர்?..''

கவனத்தை ஈர்ப்பது போல லென்ஸ் இருமினான்.

இருமலை அவன் கட்டுப்படுத்திக் கொண்ட போது, ''நான் திரும்ப வந்து உங்களுடன் எல்லா விஷயங்களையும் விவாதிக்கிறேன், இமாண்ட்,'' என்றான்.

''மிகவும் நல்லது, தலைவரே.''

''அக்சலரேட்டர் எப்படி இருக்கிறது?''

''உங்களுக்காகக் காத்திராமல் நான் திட்ட மிட்டபடி செயல்படுகிறேன். தாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொருளின் நிறை இப்போது நெருக்கடியாக இருக்கிறது. அதாவது எந்தத் தாமதமும்...''

''அதுதான் சரியானது, இமாண்ட்,'' என்று சொல்லிக் கொண்டே பேச்சைத் தடுத்தான் லென்ஸ்.

அந்தப் புகழ்ச்சியால் மகிழ்ச்சியடைந்த அர்டோனிஸ் தலையை ஆட்டினான். ''நான் சில கணக்கீடுகளைக் குறித்து வைத்திருக் கிறேன்,'' என்று தொடங்கினான்.

''அதெல்லாம் அப்புறம். நான் இப்போது வெளியேறி நமது புதிய சகாவை பணி முறைகளில் ஈடுபடுத்த வேண்டும்.''

இமாண்ட் ஊடுருவும் கண்களால் தன்னை விறைத்துப் பார்த்ததில் அவன் பார்வை தன்னைத் துளைத்துச்சென்றதாக ஆர்தர் உணர்ந்தான்.

ஆர்தர் வெளியேறுமுன் அவனுடைய கையைப் பற்றிக் குலுக்கிய போது இமாண்டின் நீண்ட கண்ணிமைகள் திடீரென மூடியதை கண்டான். அர்டோனிஸ் உடைய கைகுலுக்கல் வலுவாகவும், நெரிகுறடில் தனது கரம் பற்றியது போலவும் ஆர்தர் உணர்ந்தான்.

அவனும் லென்ஸும் அறைக்கு வெளியே நடந்து சென்ற போது, ''உங்களிடம் அங்கே இருப்பது சாதாரண வலது கரம் அல்ல,'' என்று பார்க் குறிப்பிட்டான்.

''என்ன சொல்கிறீர்கள் — வலது கரமா?''

லென்ஸ் வினவினான்.

''உங்களுடைய இமாண்ட் அர்டோனிசை குறிப்பிடுகிறேன்,'' என்றான் பார்க் கையைத் தேய்த்தவாறே. ''உண்மையிலேயே அவனுக்கு இருப்பது ஓர் இரும்புப்பிடி.''

''ஆம், அவன் ஒருவருடைய கையைப் பிடித்தால் அது, மிகவும் உறுதியானதாகத்தான் இருக்கும்,'' என ஏற்றுக்கொண்டான் ஹ்யூகோ லென்ஸ், வேறு எதையோ நினைத்துக் கொண்டு பேசியவனாக.

சிவப்பு நிற பெரிய பூனை ஒன்று நடைபாதையின் திருப்பத்திலிருந்து அவர்கள் பின்னால் வெளி வந்தது. 'வந்தது' என்று சொன்னது சரியல்ல, ஒரு ராஜ நடையுடன் தனது அடர்ந்த வாலை உயர்த்திக் கொண்டு கடந்து சென்றது. ஹ்யூகோவின் முகம் மலர்ந்தது.

''எனது ஊழியர்களில் மிகப் பிரியமான சகாவை உங்களுக்கு அறிமுகப்படுத்த மறந்து போனேன்! அவன் டான் பசீலியோ. மிக முக்கியமான நபர்,'' என்றான் லென்ஸ்.

''தெரிகிறது...''

''அவன் மிக வேண்டியவன்.''

''ஆய்வுக்குப் பயன்படும் விலங்கோ அவன்?''

''அட ஆண்டவனே!'' என்றான் லென்ஸ் அந்தப் பிராணியை அன்புடன் பார்த்துச் சிரித்தவாறே. ''டான் பசீலியோ ஆராய்ச்சிக் குழுவின் மிகவும் தகுதிவாய்ந்த உறுப்பினன். ஒரு விசித்திரப் பிராணி!''

''எந்த வகையில்?''

''நியூட்ரினோ ஆய்வுக் கூடத் தொடக்க நாளில் இருந்தே அவன் இருப்பது ஒன்றே போதுமான சான்று. அந்நேரத்தில் ஒருவகையில் பயிற்சி பெறாத ஒரு பூனைக் குட்டி. இப்போதோ நன்கு வளர்ந்து முதிர்ந்த பூனை.''

பூனை அவர்களை நோக்கி நடந்துவந்து ஹ்யூகோ லென்ஸின் கால்ச் சட்டையின் மீது உரசியது. ஹ்யூகோ குனிந்து அதன் காதுகளின் பின்புறம் சொறிந்து கொடுத்தான். மகிழ்ச்சியால் மல்லாந்து படுத்துக்கொண்டு நான்கு கால்களையும் முன்னும் பின்னும் ஆட்டி மகிழ்ச்சியுடன் உறுமியது அப்பூனை.

''பசீலியோ உங்களிடம் மிகவும் பாசமாக இருக்கிறான்,'' என்றான் பார்க்.

''ஆம்,'' என ஏற்றுக்கொண்டான் ஹ்யூகோ, மீண்டும் நிமிர்ந்தபடி. ''நான் செய்யும் எல்லாச் சோதனைகளின் போதும் அவன் இருப்பான்.''

''அப்படியானால் இப்போது அவன் சிறந்த அறிஞனாகி இருக்க வேண்டும்.''

''இங்குள்ள சில விஞ்ஞானிகளுக்குத் தெரிந்த அளவுக்கு அதற்கும் தெரியும்!'' என்று சொல்லிக் கொண்டே பாதை வழியாகச் சென்றான் லென்ஸ். ''அது மட்டும் நிச்சயம். பசீலியோ மட்டும் பேச முடியுமானால் அந்நிய உளவு நிறுவனம் அவனுக்கு எவ்வளவும் கொடுக்கத் தயாராக இருக்கும். ஆனால் அது நான் தொடர்பு கொண்டது அல்ல.''

அவர்கள் தாழ்ந்த சுருதியில் இயங்கிக் கொண்டிருந்த ஜெனரேட்டரின் பக்கத்தில் நின்றார்கள்.

''எனது துறை முழுவதையுமே இப்போது நீங்கள் பார்த்துவிட்டீர்கள்,'' என்றான் ஹ்யூ கோ லென்ஸ். ''மேலும் எல்லா ஊழியர்களை யும் டான் பசீலியோ உள்பட.''

''எனக்கு எல்லா அறைகளையும் காட்டி விட்டீர்களா?''

''ஒன்றைத் தவிர.''

''ரகசிய அறையோ?''

''எனது அலுவலக அறை.''

''அதையும் நான் பார்க்க விரும்புகிறேன், தயவு செய்யுங்கள்.''

லென்ஸ் முறைத்தான். பிறகு கூறினான்: ''அங்கு சிறப்பாக ஒன்றுமில்லை. ஆனால் நீங்கள் விரும்பினால், உங்கள் வேலைக்கு அவ சியமென்று தோன்றினால் வரலாம். உங்களை வரவேற்கிறேன்...''

இந்த மூலையில் உள்ள அறைதான் ஹ்யூகோ லென்ஸ் உடையது. தூசி படிந்த சன்னல்களும், சிதறிக் கிடந்த காகிதங்களும் அதன் வசதிக் குறைவைக் காட்டி நின்றன. கையால் எழுதப்பட்ட காகிதங்கள், புத்தகங் கள், பலவகைக் குறிப்புகள் மேசையில் அடுக் காக இருந்தன. ''விஞ்ஞானியின் மேசை என்று சொல்வதை விட எழுத்தாளனு டையது,'' என்று பார்க் தனக்குத்தானே நினைத்துக் கொண்டான்.

சன்னல் ஓரத்தில் உள்ள ஒரு தனி

மேசையின்மீது இருந்த பொருள் பார்க்கை மேலும் பேசவிடாமல் தடுத்தது. அது ஒரு தட்டச்சு எந்திரம்.

''நீங்களே தட்டச்சு செய்துகொள்வீர்களோ?'' அவன் சாதாரணமாகவே கேட்டான்.

''அவ்வப்போது அது அவசியமாகிறது,'' என்றான் லென்ஸ்.

''குழந்தையாக இருந்த போது நானும் ஒரு தட்டச்சை அடிக்க வேண்டும் என்று கனாக் கண்டேன்,'' என்று கூறியபடி எழுத்துக்களை ஆசையோடு அழுத்தினான் ஆர்தர் பார்க். ''இந்த தட்டச்சு எந்திரம் எங்கள் அடுத்த வீட்டுக்காரனுக்குச் சொந்தமானது. அவன் வழக்குரைஞன், மிகவும் கண்டிப்பானவன். ஒருமுறை எனது விரல்களில் தன் கைத்தடியால் அடித்தான். அந்த வலியை இன்னமும் நான் உணர்கிறேன்.''

''இப்போது உங்களுடைய பழைய கனவை நனவாக்கிக் கொள்ளலாம்,'' என்றான் லென்ஸ் மறதியாக, மேசையில் இருந்த சில காகிதங்களைச் சரிப்படுத்தியவாறு.

ஒரு சுத்தமான காகிதத்தை தட்டச்சுக்குள் நுழைத்து ஏதோ சில வரிகளை — அங்குமிங்குமாக சில வார்த்தைகளை — அடித்தான் ஆர்தர். பின்பு காகிதத்தை எடுத்து மடித்து தன் பைக்குள் திணித்துக் கொண்டான். பார்க்கிற்கு முதுகைக் காட்டியவாறு நின்று கொண்டிருந்த லென்ஸ் இன்னும் ஏதோ சில காகிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

''உங்கள் அலுவலகத்திற்கு யார் வருவார்கள்?'' வினவினான் பார்க்.

''யாருமில்லை. நான் யாரையும் இங்கு சுத்தம் செய்யக் கூட உள்ளே அனுமதிப்பதில்லை.''

''அது நன்றாகத் தெரிகிறது,'' என்று பார்க் தனக்குள் நினைத்துக் கொண்டாலும் வெளியில் எதுவும் சொல்லாமல் நிறுத்திக் கொண்டான்.

அலுவலகத்தை விட்டு வெளியேறிய பின்பு, ''நீங்கள் ஏதும் புத்தகம் எழுதுகிறீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்,'' என்று வினவினான் பார்க்.

''புத்தகமா?''

''உங்கள் மேசையின் மீது நிறைய குறிப்புகள், துணுக்குகள் குவிந்து கிடக்கின்றன,'' என்றான் பார்க்.

''புத்தகம் எழுத எனக்கு நேரமே இல்லை,'' என்றான் ஹ்யூகோ லென்ஸ் தனது கையைச் சாதாரணமாக அசைத்தவாறு. ''முன்பு எனக்கு அப்படி ஓர் எண்ணமுண்டு. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கான விஷயங்களையும் தயார் செய்தேன். ஆனால் இப்போதோ... எனக்குள்ள நேரத்தில் எனது அன்றாடக் குறிப்புக்களை சரிசெய்ய முடிந்தால் அதுவே போதுமானது.''

''உங்களுக்கு நிறைய வேலை இருக்கிறது என்பதை என்னால் காண முடிகிறது.''

''குறிப்பாக இப்போது. எனக்கு மூச்சுவிடக்

கூட நேரமில்லை. காஃபி ஒன்றே எனக்கு வாழ்வளிக்கிறது. அதை நான் எல்லா நேரமும் குடித்துக் கொண்டிருக்கிறேன்,'' என்றான் லென்ஸ்.

அவர்கள் நடைபாதை வழியாகச் சென்ற போது காலடியில் கிடந்த பிளாஸ்டிக் பட்டை கள் அவர்களது காலடி ஓசையை அமுக்கின.

''உங்களுக்குத் தேவையான காஃபியை நீங்களே தயாரித்துக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டான் பார்க் திடீரென்று.

''அந்த நுணுக்கத்தில் நான் தேர்ச்சி பெற வில்லை,'' என்றான் லென்ஸ் புன்னகையுடன். ''என் சகாக்களின் நல்லெண்ணத்தையே நம்பி யிருக்கிறேன். ஆய்வுக் கூடத்தில் இருந்து எனக்கு ஒரு குவளை காஃபி கிடைக்கும். அல்லது ஷெல்லா கொண்டு வருவாள். அவளிடம் வடி கட்டி உண்டு.''

''உங்கள் அலுவலகம் எப்படிப்பட்டது?''

''என் அலுவலகத்தில் காஃபி தயாரிக்கும் கருவி எதுவுமில்லை. என்னிடம் இருப்பதெல் லாம் ஒரு புன்சன் விளக்கும், ஒரு வாலையுந் தான்,'' என்றான் லென்ஸ்.

''அங்கே யார் காஃபி தயாரிக்கிறார்கள்?''

''இமாண்ட்,'' என்றான் லென்ஸ் சற்று மறதியாக. ''அவன் ஒரு குடிகாரனும்கூட.''

''ஆனால் உங்களைத் தவிர வேறு யா ரும் அங்கு போவதில்லை என்று சொன்னீர் களே.''

''மன்னித்துக் கொள்ளுங்கள். அது மூளை யிலிருந்து முற்றாக நழுவிவிட்டது... ஆனால்

அது இயல்பே,'' ஹ்யூகோ தொடர்ந்தான். ''இமாண்ட் அர்டோனிஸ் எனது முதல் உதவி யாளன் அல்லது எனது மாற்று வடிவம். ஒவ் வொரு வகையிலும் எனது வேலையைப் பொ ருத்தமட்டில்.''

''இருக்கலாம், இருந்தாலும் நாம் இன்னும் துல்லியமாகப் பேசிக் கொள்வோம். நான் புரிந்துகொண்டவரை இமாண்ட் உங்கள் அலு வலகத்திற்கு அடிக்கடி வருகிறான்.''

''ஆம்,'' என்று ஏற்றுக்கொண்ட லென்ஸ் பிறகு திடீரென்று நிறுத்தினான். ''கொஞ்சம் பொறுங்கள். நீங்கள் அர்டோனிசை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்... அது தேவையற்ற வினா. அர்டோனிஸ் எனது வலது கரம் போன்ற வன்.''

''வலக்கரம் செய்வதை இடக்கரம் அறியாத சம்பவங்களும் உண்டு,'' எனக் குறிப்பிட்டான் பார்க்.

''அது தேவையற்றது,'' என்று மீண்டும் லென்ஸ் சற்று உரத்த குரலில் கூறினான். ''நான் இமாண்டை முழுக்க நம்புகிறேன்.''

தன் சட்டைப் பையில் மடித்து வைத்துள்ள காகிதங்கள் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்த்துக்கொண்டு மேலும் பேசாமல் இருந்தான் பார்க்.

லென்ஸ் சொன்னதன் பேரில் இரு தாழ் வாரங்கள் சந்திக்கும் இடத்தில் உள்ள முன் கூடத்தில் இருவரும் அமர்ந்தார்கள்.

''எனது இதயம்,'' என்று லென்ஸ் முறை யிட்டான். ''சில நாட்களுக்கு முன்புவரை

நான் அப்படி ஒன்று பெற்றிருந்தேன் என்று எனக்குத் தெரியாது.''

பௌதிக விஞ்ஞானியும் அவனது புதுப் பாதுகாவலரும் சில விநாடிகள் ஏதும் பேசாமலிருந்தனர். பிறகு பார்க் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். ''ஒரு விஷயந்தான் என்னைச் சங்கடப்படுத்துகிறது. எனது சொந்தத் தொழிலைப் பற்றி அது வரும் போது என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். ஆனால் பௌதிகத்தைப் பொருத்தவரை எனக்கு முதல் தடயம்கூட இல்லை.''

''ஒவ்வொருவருக்கும் அவருடையது.''

''ஆம், சரிதான்,'' என்றபடி பார்க் தொடர்ந்தான்: ''உங்கள் அலுவலர்களில் ஒருவருடன் நான் ஒரு விஞ்ஞான சம்பந்தப்பட்ட விவாதம் நடத்தினால் எப்படி இருக்கும்? நான் அத்துடன் ஒழிந்தேன். நான் ஒரு பாசாங்குக்காரன் என்று அவர்கள் உணர்வார்கள்.''

லென்ஸ் ஒரு விநாடி யோசித்துவிட்டுப் பேசினான்: ''நீங்கள் ஆய்வு செய்யப்போகும் பொருள் மிகவும் ரகசியமானது என்று நான் ஒவ்வொருவரிடமும் கூறுவேன். பிறகு யாரும் உங்கள் விவகாரங்களில் குறுக்கிட மாட்டார்கள்.''

லென்ஸ் கடிகாரத்தைப் பார்த்து காஃபி சாப்பிடப் போகலாம் என்று அழைத்தான். ஆர்தரும் அதையே பெரிதும் விரும்பினான். அவர்கள் இமாண்டின் அறைக்கு அழைத்துச்

செல்வார்கள் என்று அவன் நினைத்தான். ஆனால் லென்ஸ் வீடியோபோன் மூலம் ஷெல் லாவை அழைத்தான்.

சீக்கிரமாகவே ஒரு தட்டில் இரண்டு கோப்பை காஃபியுடன் அவள் நுழைந்தாள். காஃபி கடுமையாகவும் சூடாகவும் இருந்தது. காஃபி கொடுப்பது என்பது ஓர் இயல்பான பழக்கம் என்று தனக்குத்தானே பார்க் நினைத்தான்.

கோப்பையைத் தட்டில் திரும்ப வைத்த பிறகு ஷெல்லா லென்ஸை பார்த்ததை ஆர்தர் கவனித்தான். அதிலிருந்து இவ்விடத் தில் தன் வீட்டில் இருப்பது போல சுகமாக இருப்பதாக அக்கிழவன் உணர்கிறான், குறைந் தது சமீப காலத்திலிருந்தாவது என இவன் எண்ணினான்.

தன்னை ஆர்தர் பார்ப்பதை கவனித்த ஷெல்லா நாணத்துடன் திரும்பிச் சென்றாள்.

''எங்களோடு நீங்களும் ஒரு கோப்பை ஏன் அருந்தக் கூடாது?'' என்று லென்ஸ் அவளைக் கேட்டான்.

''நன்றி, டாக்டர் லென்ஸ், இப்போதுதான் குடித்தேன்,'' என்று சொல்லிக்கொண்டு ஷெல் லா பயன்படுத்தப்பட்ட `குவளைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு சென்றாள். அவள் நடையை பார்க் கவனித்தான்.

ஒரு பெண்ணின் அழகு அவள் நடையில் தான் உள்ளது என்ற பிரெஞ்சு பழமொழி யைக் குறிப்பாகச் சொல்லத் தொடங்கிய ஆர்தர், லென்ஸின் கண்கள் அதை ஏற்றுக்

கொள்ளவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட போது நிறுத்தினான்.

எதுவுமே நடைபெறாதது போல சமாளித்துக்கொண்டு லென்ஸைப் பார்த்து, "ஏன் அந்த குவார்க்குகளைத் தாக்குகிறீர்கள் என்று எனக்கு விளக்க முடியுமா, டாக்டர் லென்ஸ்?" என்று வினவினான்.

"இன்னும் நன்றாக அவற்றைப் பற்றி அறிவதற்காகத்தான். அப்படிச் செய்யும் போது அந்தத் துகள்களின் எதிர்வினையை அறிகிறோம். அது அவற்றின் அமைப்பை நாம் சோதிக்கவும், புரிந்துகொள்ளவும் உதவுகிறது. மருத்துவர்கள் பிணங்களை அறுத்து உண்மையை அறியும்வரை மத்தியகால உடற் கூறியல் மந்தகதியில் தான் போனது."

"இந்த வேலை உண்மையிலேயே அபாயகரமானதா?" பார்க் கேட்டான். "அந்தக் கடிதம் எழுதியவன் என்ன சொல்கிறான் என்றால்..."

"அக்கடிதத்தின் ஒவ்வொரு விவரத்தையும் நான் நன்றாக அறிவேன்," என்று லென்ஸ் குறுக்கிட்டான்.

"இந்த உலகம் முழுவதும் பிணக்குவியலாக மாறிவிட்டால் அது மிகவும் கொடூரமானதாக இருக்குமே," என்றான் ஆர்தர்.

"ஆம்... அந்த அபாயம் இருக்கிறது," என்று அழுத்தமாகக் கூறினான் லென்ஸ். "இளைஞரே, நீங்கள் அதற்கு என்ன ஆலோசனை சொல்கிறீர்கள்?"

''நானா?'' என்று பெருமூச்சு இழுத்தான் ஆர்தர்.

''ஆம், நீங்களே, நீங்கள்தான் வேறு யாரு மில்லை.''

''நான் ஒரு பௌதிக விஞ்ஞானி இல்லை யே.''

''இது ஒரு பதில் ஆகாது. ஒவ்வொருவரும் இந்தப் பிரச்சினையைத் தீர்வு செய்ய வேண்டும். ஏனெனில் உலகின் தலைவிதி நம் அனைவரையும் பாதிக்கும் ஒன்று.''

பதில் சொல்ல முடியாமல் பார்க் தயங்கி னான். ஆனால் பிறகு தொடர்ந்தான்: ''நல் லது, பாருங்கள். விதிவிலக்கான சூழ் நிலைகள் இங்கு ஏற்பட்டுள்ளன... இந்தச் சோதனை களை நீங்கள் நிறுத்தாவிட்டால் உங்கள் உயி ருக்கே ஆபத்தாகும்.''

''இந்தப் பிரச்சினைக்கான தீர்வை நீங்கள் காண முயலும் போது, கணக்கிலெடுத்துக் கொண்டால் எனது உயிர் மிகமிக அற்பமானது,'' என்றான் ஹ்யூகோ லென்ஸ்.

இவ்வேளையில் உரையாடல் ஒரு முக்கிய திருப்பத்தை அடைந்திருப்பதையும், ஏதோ ஒரு காரணத்திற்காக தனது பதில் லென்ஸுக்கு அவசியமானதாக இருப்பதாகவும் ஆர்தர் உள் ளூர உணர்ந்தான்.

''நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்,'' என்று தன்னுடன் பேசியவனைப் பார்த்து லென்ஸ் கூறினான். ''எனது உயிர்க்கு எந்த வித பயமுறுத்தலும் இல்லை என்று வைத்துக்

கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் பதில் என்னவாக இருக்கும்? இந்தக் குவார்க்கு களைத் தாக்குவதை நான் தொடர்வதா கூடாதா?''

''எதுவாக இருந்தாலும் இச்சோதனைகளை தடைசெய்ய வேண்டும் என்றே நான் நினைக்கிறேன்,'' என்றான் பார்க் சிந்தித்த வனாக. தனது பதில் ஓர் இரக்க உணர்வை ஏற்படுத்தும் என உணர்ந்தான். ஆனால் ஹ்யூகோ லென்ஸின் முகம் தெளிவற்று இருந் தது.

''சோதனைகளைத் தடைசெய்ய வேண்டும் என்று தீர்மானிக்கும் முன்னர், அந்த முடி வைப் பற்றி நன்கு சிந்தித்தீர்களா, ஆர்தர் பார்க்?'' என வினவினான் லென்ஸ். ''ஏதோ ஓர் இரண்டாந்தர சோதனைகளைத் தடை செய்வதல்ல நாம் விவாதிப்பது. மிக முக்கிய விஞ்ஞான ஆய்வைப் பற்றி நாம் இங்கு விவா தித்துக் கொண்டிருக்கிறோம். இயற்கையின் மிக ஆழமான ரகசியங்களை அறிவதே நோக் கம்.''

''ஆனால் இச்சோதனைகள் மனித இனம் முழுமைக்கும் ஆபத்தைக் கொடுக்குமானால்?'' வலியுறுத்தினான் ஆர்தர்.

''ஆபத்து,'' ஆதரவு தரும் வகையில் லென்ஸ் புன்னகை செய்தான். ''நம்மைச் சுற்றியுள்ள எல்லாமே ஆபத்தானவைதாம். குழந்தை தானாகவே தனது தாயின் உதவி யின்றி முதல் அடி எடுத்துவைப்பது ஆபத்தா னது, இல்லையா? அல்லது ஒரு விமானியின்

முதல் விமானப் பயணம் அவனுக்கு ஆபத்தான தாக இருக்கக் கூடாதா? அப்படியானால் அது நனவாகாத கனவாகவே இருக்கும். இது போலவே ஒவ்வொன்றும் முயற்சியின்றி வெற்றி இல்லை. ஆபத்தை உட்படுத்திக்கொள்ளாமல் வெற்றியோ, முன்னேற்றமோ இருக்க முடியாது.''

''என் நினைவுக்கு எட்டியவரை விமானியின் முதல் பயணத்தை இப்போது உள்ள பிரச்சினையுடன் ஒப்பிடுவது அவ்வளவு பொருத்தமாகாது,'' என்றான் ஆர்தர், ஓரளவு தன்னைச் சமாளித்துக்கொண்டு. ''ரைட் சகோதரர்கள் இல்லை என்றால் வேறுயாராவது வந்திருப்பார்கள்.''

''அப்படியா நினைக்கிறீர்கள்?''

''நிச்சயமாக. மனித இனம் அறிவு முதிர்ச்சி பெற்றுள்ளதை எதுவும் பின்னுக்கு நிறுத்திவிட முடியாது. ஒருவன் அழிந்தால் அடுத்தவன் அவ்விடத்திற்கு வருவான். இரண்டாவது நபரும் தோற்றால் மூன்றாவது நபர் முன்வருவான்.''

''அப்படியானால் குவார்க்குகளைப் பிளப்பதற்கு மனித இனம் பக்குவமடையவில்லை என்று ஏன் நினைக்கிறீர்கள்?'' வினவினான் லென்ஸ்.

அது தொடர்பாக தனது தகுதியின் மையைக் கூறி வேறு ஏதாவது பற்றிப் பேசி உரையாடலை அத்துடன் நிறுத்திக் கொள்ள ஆர்தர் விரும்பினான். ஆனால் அதை எப்படிச் செய்வதென்று புரியவில்லை.

மாறாக லென்ஸ் பதிலுக்காக அவனை எதிர்நோக்கி இருந்தான்.

''மனித இனம் அறிவு முதிர்ச்சி பெற்றிருந்ததா இல்லையா என்பது மட்டுமல்ல வினா,'' என்று பார்க் ஆட்சேபித்தான். ''ஆனால் இந்தச் சோதனைகள், நான் புரிந்துகொண்டவரை, மனித இனம் நிலை பெற்று இருப்பதற்கு ஆபத்தானதாக இருக்கின்றன.''

''இல்லை, மனித இனத்தின் தயார் நிலைதான் இப்போது ஆய்வுக்குரியது,'' என்றான் ஹ்யூகோ லென்ஸ் திட்டவட்டமாக. ''நமது சோதனையின் முடிவுகள் பொறுப்பற்றவர்களின் கையில் சிக்கினால்...''

''பிறகு அவ்வாறு நடைபெறாதவாறு நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்...'' என்று பார்க் ஆலோசனை கூறினான்.

''அது அவ்வளவு ஒன்றும் கண்டிப்பானதல்ல, திரு. பார்க்,'' என்றான் ஹ்யூகோ. கொஞ்சம் எரிச்சலான குரலில் அவனை மடக்கினான். ''நமது நாடு அறிவாளிகளால் அல்லாமல் மிகப் பெரும் தொழில்களில் அக்கறை கொண்ட அரசியல்வாதிகளால் நடத்தப்படுவதுதான் வருந்தக் கூடியது.''

''ஆம், ஆனால் நீங்கள் அவர்களுடன் ஓர் உடன்பாடுக்கு வர முடியும்...''

''முடியுமா? எதற்காக என்னை நீங்கள் இப்படிப் பார்க்கிறீர்கள்? கிழவன் பேராசை பிடித்தவன் என்று நினைக்கிறீர்களா? ஏனென்று எனக்குப் புரியவில்லை, ஆனால் உங்களிடம்

எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மேலும் ஒருவனுக்கு சாவு இன்னும் மூன்று மாதங் களில் இருக்கிறது என்னும் போது அவன் தன் மனத்தை நன்கு திறந்து பேசலாம்.''

லென்ஸ் உணர்ச்சி வயப்பட்ட போது அவனது தாடி நடுங்கத் தொடங்கியது.

''நானே இந்தச் சோதனைகளை வலிந்து நிறுத்திவிட்டாலும் யாரேனும் ஒரு விஞ் ஞானி இச்சோதனைகளைச் செய்ய மாட்டான் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?''

''திரும்பவும் அவற்றைக் கண்டு பிடிப்பது என்பது மிகவும் கஷ்டமானது என்னும் அளவுக்கு இந்தச் சாவிகளை நீங்கள் தூக்கி எறிந்து விட வேண்டும். அதைத் தேடித்திரிய வேண்டிய காலத்தில் சூழ்நிலை மாறலாம்,'' என்றான் ஆர்தர்.

''அதை எப்படிச் செய்ய முடியும்?'' என்றான் ஹ்யூகோ லென்ஸ் பிடிவாதமாக.

சில மணி நேரத்திற்கு முன்புதான் அவர் கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண் டார்கள். ஆனால் லென்ஸைப் பல ஆண்டு கள் பழகியது போல ஆர்தர் கருதினான். துருவி ஆராயும் கண்களும் கூர்மையான குறுந் தாடியும் கூடிய கிழவனை ஏதோ ஒன்று ஆட் கொண்டு இருக்கிறது. அவனுடைய கருத்துக் கள் மிகவும் செறிவுள்ளவை. என்னதான் சொன்னாலும் அவ்விஷயம் பார்க்கின் துறை சார்ந்ததல்ல.

லென்ஸ் உயிர்க்கு ஆபத்து உள்ளது. ஆனால் இங்கோ அவன் உலகின் தலைவிதி

யைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் ஒருவகையில் இப்படியும் கொள்ளலாம்: ஏதோ ஒரு சாதாரண வியாதி அவனை ஒரு வாயாடியாக ஆக்கி உள்ளதோ?''

''இப்போது கீழே இறங்கிச் சென்று, நீங்களே அக்சலரேட்டரைப் பார்க்கலாம்,'' என்று லென்ஸ் வழக்கமான குரலில் அமைதியாகக் கூறினான்.

* * *

ஒரு பாதாள நகரம் போல உருவாகியிருந்த ராட்சசன் போன்ற சாதனங்களைப் பார்ப்பதிலேயே ஆர்தர் பார்க் தனது முதல் நாள் பணியில் எஞ்சிய நேரத்தைக் கழித்தான். அதே வேளை எதிர்ப்பட்ட மக்களைப் பற்றி கவனமாக ஆராய்ந்து அவர்களைப் பற்றிய பல விஷயங்களை புரிந்துகொள்ளத் தொடங்கினான். கூடுமானவரை அறிவியல் தொடர்பான பேச்சுக்களைத் தவிர்த்தான். அதிர்ஷ்டவசமாக அவனுடன் பேசிய யாருமே நியூட்ரினோ தொடர்பானவற்றைத் தொடவே யில்லை.

அவனுக்கு முற்றாகப் புரியாத அறிவியல் சொற்களைச் சொல்ல நேரிட்டால் தனக்கு அதுபற்றி ஓரளவுக்குத் தெரிந்திருப்பது போல வும், அதி ரகசியப் பணியாக இருப்பதால் தான் அதுபற்றிப் பேச விரும்பாது இருப்பது போலவும் ஆர்தர் காட்டிக் கொண்டான்.

இறுதியில் ஏராளமான புதிய உளப்பதிவு களால் குழம்பிப் போன தலையுடன் அந்த அணுவாராய்ச்சி மையத்தை விட்டு வெளியேறி னான் ஆர்தர் பார்க்.

தனது நெஞ்சுப் பையில் நான்காக மடிக்கப்பட்டு மறைத்து உள்ள காகிதத்தை பரிசீலனை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் கொழுந்து விட்டு எரிந்தது. இன்று எதைச் செய்ய முடியுமோ அதை நாளைவரை தள்ளிப்போடக் கூடாது என்ற பொன்னான விதிப்படி நடக்க வேண்டும் என உறுதிபூண் டான். வீட்டுக்குச் செல்லும் முன்பு தன் அலுவலகத்திற்குச் சென்று டாக்டர் லென் ஸின் அறையில் இருந்த தட்டச்சுப் பொறி தொடர்பாக சில விவரங்களை பரிசீலிக்க முடிவு செய்தான்.

சுரங்கப் பாதைக்காகக் கீழே சென்றான். வண்டியில் ஆட்கள் நிறைந்திருந்தனர். காற் றோட்டமின்மையாலும் இரயிலின் அசைவி னாலும் ஆர்தர் பார்க் சீக்கிரமே தூங்கிப் போனான்.

...கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு ஷெல்லா வலேரி அவனை நோக்கி வந்த போது அவன் எந்த வியப்பையும் காட்டிக் கொள்ளவில்லை. ஏதாவது ஒரு காரணத்திற் காக தன்னிடம் அவள் வருவாள் என அவன் எதிர்பார்த்திருந்தான். ஹ்யூகோ லென்ஸின் செயலாளரான அவளுடன் காலை யிலே முறையான உரையாடல் ஒன்றைத் தொடங்க முடியாமற் போயிற்று.

''நாமிருவரும் ஒரே திசை நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறோமா?'' ஆர்தர் கேட்டான்.

''அப்படித்தான் தோன்றுகிறது,'' என்றாள் ஷெல்லா புன்னகையுடன்.

முன்னதாக அலுவலகத்தில் இந்த ஒரு புன்னகையின் அடையாளத்தை அவன் காண வில்லை. தங்களைச் சுற்றியிருந்த நெருக்கமான கூட்டத்தைப் பற்றிக் கொஞ்சமும் பொருட் படுத்தாமல் சிறிது நேரம் அற்ப விஷயங்களைப் பேசினார்கள். பிறகு ஷெல்லாவின் கையைப் பற்றியபடி இறுக்கமாக இருந்த ரயிலை விட்டு தூய காற்று வீசும் வெளியிடத்தை அடைந் தான்.

அது ஒரு குளிர் மாலைப் பொழுது. ஆனால் வீடுகளெல்லாம் பகலில் சேகரித்த வெப்பத்தை வெளிவிட்டுக் கொண்டிருந்தன. பார்க் சுற்றிலும் பார்த்து நகரத்தின் வெளிப் புறத்தை அடைந்ததை உணர்ந்தான். நியான் விளம்பர விளக்குகள் நகர்ப் பகுதியில் இருந் தது போல அவ்வளவு அதிகமில்லை. நகரின் இக்குறிப்பிட்ட பகுதியில் அவன் இருப்பது இது வே முதல் தடவை.

''நாம் எங்கே போகலாம்?'' என்றாள் ஷெல்லா.

''ஏதோ மனம் போன போக்கில்,'' என் றான்பார்க்.

அமைதியாகவும் நடமாட்டமில்லாதும் இருந்த வீதியின் வழியே அவர்கள் நடந்தார் கள். ஆர்தருடன் கைகோர்த்தபடி ஷெல்லா

விடாமல் பேசிக்கொண்டே நடந்து கொண் டிருந்தாள்.

முகமலர்ச்சியடைந்த அவளது முகத்தைப் பார்த்து, ''முதலில் நீங்கள் எகிப்திய ஸ்பிங்ஸ் போல பேசாமடந்தையாக இருப்பீர்கள் என்று நினைத்தேன்,'' என்றான் ஆர்தர்.

''டாக்டர் லென்ஸின் முன்னிலையில் எனது நா அடங்கிப் போகிறது,'' ஏற்றுக் கொண் டாள் ஷெல்லா.

''அதை நான் கவனித்தேன்,'' என்றான் பார்க் கிண்டலாக.

''இப்போது இவ்வளவு அற்பமாக இருக்க வேண்டாம்,'' என்றாள் ஷெல்லா அவனது கையைத் தட்டியபடி. ''டாக்டர் லென்ஸ் எனது தந்தை என்று சொல்லுமளவுக்கு வயதானவன்.''

''உண்மைதான்.''

''அவனுடைய அன்புக்காக அவனை நான் விரும்புகிறேன், விஞ்ஞானி என்பதால் மரியா தை செய்கிறேன்.''

''அவ்வளவுதானா?'' என்றான் பார்க் நிறைவடையாத குரலில். ''நீங்கள் அவன்மீது அள்ளி வீசிய அன்புப் பார்வையை நான் கவனித்தேன்.''

''உண்மையிலேயே நீங்கள் அற்பமானவர்!'' சிரித்தாள் ஷெல்லா. அவளது சிரிப்பு நடமாட் டமில்லாத தெருவில் அலறும் சிறிய வெள்ளி மணி போல மிக்கக் கவர்ச்சியாக இருந்தது.

''நான் உங்களைப் பார்த்த நொடியிலி ருந்து உங்களை விரும்பினேன்,'' என்றாள்

ஷெல்லா. ''கிழக்கு நுழைவாயிலில் இன்று காலையில் உங்களைச் சந்திக்க வந்ததிலிருந்து,'' என்று தொடர்ந்தாள்.

இருள் அதிகரிக்க ஒளிரும் கட்டடச் சுவர்கள் இன்னும் கூடுதலாக ஒளிவீசத் தொடங்கின. அலட்சியமாக சுற்றித் திரிந்த ஜோடிகளின் நிழல்கள் வரவரப் பெரிதாகி இப்போது கிட்டத்தட்ட ஒன்றுமில்லாமல் மறைந்து போயிற்று.

''ஹ்யூகோ லென்ஸின் உயிருக்கு ஆபத்து இருப்பதை அறிய நீங்கள் வருத்தப்படவே இல்லையா, ஷெல்லா?'' என வினவினான் பார்க்.

''அவன் பெற்ற அந்த உதவாக்கரை கடிதத்தைச் சொல்கிறீர்களா?''

''அந்த பயமுறுத்தலை மிக கண்டிப்பாகக் கொள்ளக் காரணம் உண்டு என நான் கருதுகிறேன்...''

''ஒருவகையில் நீங்கள் சரிதான்,'' என்றாள் ஷெல்லா. ''ஆனால் அந்த ஆபத்தை விடுவிக்கத் தெரிந்த ஒரே ஒரு நபர் நான் ஒருத்தி தான்.''

''அந்தக் கடிதம் எழுதியது யார் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''ஓர் ஆள்தான் அந்தக் கடிதத்தை எழுதியிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எந்தக் கம்பியூட்டரும் அதுமாதிரியான வாசகத்தை உருவாக்க முடியும். ஒருவன் செய்ய வேண்டியதெல்லாம் அதற்கு முறையாகத் திட்டமிட வேண்டியது ஒன்றே. அப்புறம்

எந்த மட்டிப்பயலும் அதை தட்டச்சு செய்து விடலாம்.''

அவள் சொன்னதிலிருந்து திடுக்கிட்டவனாக, ''அப்படி என்றால் உண்மையில் ஹ்யூ கோ லென்ஸ் எந்த ஆபத்திலும் இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா,'' என்று கேட்டான் பார்க்.

''அதற்கு நேர்மாறாக, நாம் மட்டும் எதுவும் செய்யாமல் இருந்துவிட்டால் மூன்று மாத காலத்தில் டாக்டர் லென்ஸ் இறந்து விடுவான்.''

''ஆனால் அவனுக்கு எதிராக கையசைக்க யாருக்குத் துணிவுண்டு?''

''கையல்ல, ஆனால் நகத்தை.''

''நகமா?''

''நீங்கள் சரியாக கவனிக்கவில்லை என்பதை நான் ஏற்கெனவே தெரிந்துகொண்டேன்,'' என்றாள் ஷெல்லா மீண்டும் சிரித்தபடி. ''ஆனால் நமது துறையின் எஞ்சிய பகுதிக்கும் இது பொருந்தும்.''

''டாக்டர் லென்ஸுக்குக் கூடவா?''

''ஆம், துரதிரஷ்டவசமாக. நான் எஞ்சிய கதையை முடித்து விடுகிறேன்,'' என்றாள் ஷெல்லா தாழ்ந்த குரலில். ''நமது துறையில் டான் பசீலியோவை நீங்கள் பார்க்கவில்லையா?''

''அந்தப் பூனையைத் தானே குறிப்பிடுகிறீர்கள். ஆம், ஒரு நல்ல அழகான பிராணி. டாக்டர் லென்ஸ் எங்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.''

''பசீலியோ ஒரு பூனையல்ல. அது ஒரு சைபர்நெடிக் சாதனம்,'' என்றாள் ஷெல்லா மிகவும் மெதுவாக. ''என் ஒருத்திக்குத் தான் அது தெரியும்.''

''துறையில் வேறு யாருமே புரிந்துகொண்ட தில்லையா?''

''ஒருவருக்கும் தெரியாது. பூனையின் அனிச்சைச் செயல்கள் தான் மிகவும் சுலப மாகத் திட்டமிடப்படக் கூடியவை.''

''இது போன்ற ஒன்று இப்பூமியில் யாருக்கு வேண்டியிருக்கும்?''

தன் தோள்களை குலுக்கியவாறே ஷெல்லா பேசினாள்: ''ஒவ்வொருவருக்கும் எதிரிகள் உண்டு. நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானிக்கு குறிப்பாக உண்டு. நீங்கள் பார்த்தது போல அணுவாராய்ச்சி மையத்திற்குள் நுழைவது அவ்வளவு சுலபமல்ல. தெருவில் ஒரு கொலைக்குத் திட்டமிடுதல் என்பதும் சுலபமல்ல. இதுதான் டான் பசீலியோவை உருவாக்க அவர்களைத் தூண்டியது. இப்போது நீங்கள் புரிந்துகொண்டீர்களா?''

''முழுமையாக இல்லை. பசீலியோ துறைக்கு ஒரு சிறு பூனைக்குட்டியாகத்தான் கொண்டு வரப்பட்டதாக டாக்டர் லென்ஸ் கூறினான்...''

''சைபர்நெடிக் பற்றி ஓர் அடிப்படையான விஷயம் உங்களுக்குத் தெரியவில்லை என்பதை எவரும் சொல்ல முடியும். ஒரு மாதிரி திட்டம் காலப் போக்கில் மாறி பெரிதாக வோ சிறிதாகவோ தேவைக்குத் தக்கபடி உரு

வாகச் செய்வதென்பது ஒரு பிரச்சினையே இல்லை.''

''ஏதோ ஒருவகை பலூன் போல?''

''கிட்டத்தட்ட.''

''லென்ஸினுடைய விரோதிகள் அவனை எச்சரிக்கை செய்யாமல் ஏன் கொன்றுவிடக் கூடாது?''

''ஒருவேளை ஒரு பெரிய குழப்பத்தை ஏற்படுத்தி போலீசுக்கு அதிகத் தொல்லையை உண்டாக்க வேண்டும் என்று இருக்கலாம். ஏற்கெனவே அவர்கள் கைகளில் நிறைய வேலை இருக்கின்றன. கடைசியில் அவர்கள் எதுவும் செய்ய முடியாமல் தவிப்பார்கள். வேடிக்கையாக, இல்லையா?''

''இதில் வேடிக்கை எதுவும் எனக்குத் தெரியவில்லை,'' என்றான் ஆர்தர்.

''டான் பசீலியோவைப் பற்றி நீங்கள் ஏன் தக்க அதிகாரிகளுக்குப் புகார் செய் திருக்கவில்லை?''

''நான் யாரிடமும் கோள் சொல்லவும் இல்லை. அதைச் செய்ய விருப்பமும் இல்லை,'' என்று ஷெல்லா நறுக்குத் தெரித்தாற் போலப் பேசினாள். ''அது ஒரு நபரா, சைபரா, அதில் எந்த வேறுபாடும் இல்லை.''

''ஆக, ஹ்யூகோ லென்ஸ் அவனது முடிவைச் சந்தித்துவிட நீங்கள் தயாராகி விட்டீர் களாக்கும்?''

''இல்லை, அவன் சாக மாட்டான். சாவுக்கான நாள் வரும் போது நானே அவனுக்குக் கண்களைத் திறந்து விடுவேன்.''

திடீரென்று ஒரு பெரிய கரிய நிழல் ஆள் நடமாட்டமே இல்லாத அத்தெருவில் தோன்றியது. ஓசையில்லாமல் அது ஷெல்லாவையும் ஆர்தரையும் நோக்கி வந்து கொண்டிருந்தது. சீக்கிரத்திலேயே அதன் வடிவத்தைக் கொண்டு ஓசைப்படாமல் நடமாடும் அப் பெரிய பிராணியை அவர்கள் புரிந்துகொள்ள முடிந்தது.

''டான் பசீலியோ,'' என்றாள் ஷெல்லா அச்சத்தால் கண்கள் அகல விரிய.

அவளது மெல்லிய கரத்தைப் பற்றிய படியே, ''அவன் எப்படி இங்கே வர முடிந்தது?'' என்றான் ஆர்தர்.

''எனது திட்டங்களை அவன் முன்கூட்டியே தெரிந்திருக்க வேண்டும். அவன் என்னைப் பின் தொடர்கிறான். அவன் என்னைக் கொன்றுவிடுவான்,'' அரற்றினாள் ஷெல்லா. ''ஓடலாம்!''

டான் பசீலியோ அவர்கள் மீது பாயத்தயாராயிற்று.

ஆனால் அச்சமயம் பார்த்து அவர்கள் ஒரு வாயில் வழிக்குத் தாவினார்கள். அந்த வாசலில் ஒரே இருள் மயமாக இருந்தது. ஒருவரொருவராக கையைப் பற்றிய படியே இரவில் கருப்பாகத் தெரிந்த கட்டடங்களுக்கு இடையே வேகமாக ஓடினார்கள். மேலும் ஓர் அடி எடுத்துவைத்தால் இதயமே உடைந்துவிடும் என்று ஆர்தர் உணர்ந்த போது அவர்கள் நின்றார்கள்.

''கடவுளே, நாம் எங்கே இருக்கிறோம்?''

என்று திரும்ப மூச்சு வாங்கியபடியே கிசுகிசுத்தாள் ஷெல்லா.

''விரைவாகவே நாம் தெரிந்துகொள்வோம்,'' என்று சொன்னபடியே ஆர்தர் வந்து சேர்ந்த முதல் வீட்டின் கதவைத் தள்ளினான். உள்ளே ஒருவருமே இல்லை. தளத்தின் மத்தியில் அன்று காலையில் அணுவராய்ச்சி மையத்தில் பார்த்த அக்சலரேட்டர் போன்ற ஒன்று இருந்தது. அடையாளம் காண முடியாதபடி சுருங்கிப் போன அதே அக்சலரேட்டர்தான் இதுவோ? இதை யார் இங்கு கொண்டுவந்து வைத்திருக்க முடியும்? ஆர்தர் அதை நோக்கி நடந்துசென்று அதன் நெம்பு கோல் ஒன்றைத் தொட்டான்.

''வேண்டாம்!'' என்று ஷெல்லா வீறிட்டாள்.

ஆனால் அது மிகவும் சுணங்கிவிட்டது. கண்ணைக்கூசச் செய்யும் ஒளி அறை முழுதும் படர்ந்தது. அதைத் தொடர்ந்து இடி முழக்கம் போன்ற ஒரு வெடிப்பு. தன் முகத்தில் ஒரு வெப்ப அலை தாக்கியதை ஆர்தர் உணர்ந்தான்.

''நான் தாக்கப்பட்டு விட்டதாக உணர்கிறேன்,'' என உணர்வின்றி ஷெல்லா கூறியது, ஆர்தருக்கு பஞ்சினால் அடைபட்ட காதின் வழியாகக் கேட்பது போல இருந்தது.

அந்த மெல்லியலாளை ஆர்தர் தூக்கி தரையில் கவனமாகப் படுக்க வைத்தான். சில நிமிடங்களுக்கு முன்பு அக்சலரேட்டர் இருந்த அதே இடத்தில் திருகி வளைந்து

போன உலோகத் துண்டுகளின் குவியல்தான் இருந்தது. அவற்றில் சில இன்னும் சிவக்கப் பழுத்து செந்நிறத் தனலைப் பரப்பிக் கொண்டிருந்தது.

ஷெல்லாவின் கையில் ஓர் உலோகக் கோல் தாக்கி இருக்க வேண்டும். தரையில் ரத்தத் துளிகள் பரவிக் கிடந்தன. ''அவளுடைய ரத்தம் காஃபி போன்று கறுப்பாக இருக்கும் போலும்,'' எனத் தனக்குள் நினைத்துக்கொண்டான்.

''ஷெல்லா, அன்பான ஷெல்லா...'' என்றான் ஆர்தர்.

ஆனால் கலவரத்துடன் அவளுக்குக் கட்டுப் போட தனது சட்டையின் ஓர் ஓரத்தைக் கிழித்தான்.

''கவலைப் படாதீர்கள்,'' என்றாள் ஷெல்லா மெதுவாக அமைதியான குரலில். ''இந்தக் காயம் பரவாயில்லை. இன்னும் சில நிமிடங்களில் நான் போய்விடுவேன்.''

''ஆனால் இந்நிலையில் நீங்கள் நடக்க முடியாதே...''

''நான் நகரப் போவதில்லை. மறைந்து ஒழிந்து விடுவேன். நீங்கள் இந்த அக்சலரேட்டரை முடுக்கி விட்டு கட்டுப்படுத்த முடியாத ஓர் விளைவை ஏற்படுத்திவிட்டீர்கள். நான் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டு விட்டேன். போய்வருகிறேன், ஆர்தர்...''

அவர்கள் சந்தர்ப்பவசமாக நுழைந்து ஒரு சாவுக் கண்ணியாக மாறிய, அரைகுறை வெளிச்சம் உள்ள அந்த அறையில் ஷெல்லா

கொஞ்சங் கொஞ்சமாக உருகி காற்றோடு காற்றாகக் கலந்துபோகும் காட்சியை பார்க் கலவரத்துடன் அசையாது நின்றபடியே கவ னித்தான்.

''ஷெல்லா!'' என்று அரற்றினான் ஆர்தர் தனது உரத்த குரலில்...

விலாப் புறத்தில் யாரோ அவனை இடிக்க விழித்தெழுந்தான்.

''வண்டியில் தூங்கக் கூடாது,'' என்று அவன் காதுக்கு அருகில் ஒரு கிழவன் கூறினான்.

தனது அலுவலகத்தினுள் நுழைந்ததும் பார்க் ரேகை ஆய்வுப் பகுதிக்கு நுழைந்தான். அதிர்ஷ்டவசமாக அவனது நண்பன் ஒருவன் பணியில் இருந்தான். காட்டுமிராண்டி என்று தனது சகாக்களால் பட்டப் பெயர் சூட்டப் பட்ட இந்த அதிகாரி பணம் ஒன்றைத் தவிர ஆர்தர் விரும்பும் எந்த அற்பக் காரியத்துக் கும் இசைவு தெரிவிப்பான். ஆனால் இவ் வேளை பார்க் வியப்படையும்படி தட்டச்சுப் பொறியை அவன் ஆராய்வதற்கான வேண்டு கோளைக் கேட்டு காட்டுமிராண்டி எரிந்துவிழுந் தான்.

''நீங்கள் என்ன செய்யவிருக்கிறீர்கள்!'' என்றான் காட்டுமிராண்டி. ''இன்று பத்து, நூறு, ஆயிரம் மாதிரிகளை நான் ஆய்வு செய்ய வேண்டி இருக்கிறது. ஆய்வுப் பகுதியே ஓரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது. இந்த மூடன் எந்தத் தட்டச்சில் அவனது கடி தத்தை அடித்தான் என்று தெரிந்து என்ன பயன் சொல்லுங்கள்.''

''தெரிந்து கொண்டால் சந்தேகப் பேர்வழி களின் எண்ணிக்கை குறையும்,'' என்றான் ஆர்தர்.

''நீங்கள் சொல்லாமலேயே அந்த அளவுக்கு எனக்கும் தெரியும்,'' என்று காட்டுமிராண்டி கோபமுற்றான். ''இந்த பௌதிக விஞ்ஞானி கள் சும்மா வெறுமனே இந்த அணுவை ஆராயாமல் இருந்தால் நல்லது. நுனிமரத்தில் அமர்ந்து அடிமரத்தை வெட்டுகிறார்கள். நக ரில் கதிரியக்கத்தின் அளவு மிகவும் உயர்ந்து விட்டதென்றும்... அணுவாராய்ச்சி மையத் திற்கு அருகில் நடமாடுவதே அபாயகரமானது என்றும் கூறுகிறார்கள்.''

''அது ஒரு பழைய கதை.''

''சரி, நீ சொன்னபடியே செய்வோம்,'' என்று இணக்கமாய்ப் பேசினான் காட்டுமி ராண்டி. ஆர்தருக்கு அருகில் வந்து, ''அந்த வாசகத்தை இப்போது கொடு, நான் சோதிக் கிறேன்,'' என்று வாங்கினான். ஆர்தர் தந்த காகிதத்தை முன்னும் பின்னும் பலமுறை திருப்பிப் பார்த்தவாறு, ''இதை நீயே தட்டச்சு செய்தாயா?'' என்றான்.

''ஆம்.''

''மிகவும் அர்த்தமுள்ள வாசகத்திலிருந்து அது தெரிகிறது,'' என்று விமர்சித்தான் காட்டுமிராண்டி கோணல் சிரிப்புடன். ''இன்று போலீசாரிடமிருந்து உண்மையிலேயே சில விநோதமான மாதிரிகள் எனக்கு வந்திருக் கின்றன என்பது உனக்குத் தெரியுமா? ஒருவன் சம்பளம் கூட வேண்டுமென்று வற்புறுத்தி

இருக்கிறான். மற்றவர்களுடன் ஒப்பிடும் போது நீ உண்மையிலேயே கலையின் எதார்த்தமான ஒன்றைத் தந்திருக்கிறாய், அது மறைபொருள் நவிற்சிக் கலையாக இருந்தாலும். நல்லது, இப்பொழுது நாம் அதைப் பார்ப்போம். நீ அதிர்ஷ்டக்காரனாக இருக்கலாம்.''

காட்டுமிராண்டி தன் மேசையில் எதை யோ கிளறிக்கொண்டும் வாயில் முணுமுணுத்துக் கொண்டும் இருக்க பார்க் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

''நான் உன்னை ஏமாற்ற வேண்டும் என்றே நினைக்கிறேன்,'' என்றான் காட்டுமிராண்டி சில நிமிடங்கள் கழித்து. ''இலக்கை விட்டு நீ எங்கோ சென்று விட்டாய்.''

''இது அந்த தட்டச்சு இல்லையா?''

''அது போல இல்லை. இந்தப் பெரிய 'Y' என்ற எழுத்தைப் பார். இதனுடைய கால் வேறுவிதமாக இருக்கும்!''

ஓரளவு ஏமாற்றமடைந்தவனாக பார்க் வெளியேற எழுந்தான். புதிரை விடுவிப்பதற்கு அவன் கண்டுபிடித்த தெளிவான விடை இப்போது துண்டு துண்டாகப் போனது. பார்க் கற்பனை செய்திருந்த கூற்று திருப்தி யளிப்பதாகக் காணப்பட்டது: தனது மேலா ளரின் முழுநம்பிக்கைக்கும் பாத்திரமான அந்தப் பேராசை பிடித்த உதவியாளன் விஞ் ஞானியின் புகழைக் கண்டு பொறாமைப்பட் டிருக்கிறான். அந்த நிலையத்தின் தலைவராக வேண்டும் என்பது அவன் எண்ணம். இப் போதைய தலைவர் அதற்குக் குறுக்கே நின்

றார். ஆகையால் எந்தவிதமான தடயமும் இல்லாமல் தலைவர் தானே விலகி விட்டும் என்ற நோக்கத்துடன் இந்த அனாமதேயக் கடிதத்தை எழுதியிருக்கிறார். ஏதோ வார்த்தைப் புரட்டு நிரம்பியதாய் வேண்டுமென்றே தெளிவற்ற வாசகங்களுடன் கூடியதாக அக் கடிதம் இருந்தது. இந்த உதவியாளரின் திட்டப்படி இந்த நிலையத்தின் தலைவர் அச்சம் காரணமாக ஒன்று வெளியேறி விடுவார் அல்லது மாரடைப்பால் தாக்கப்படுவார்.

உதவியாளனின் மனோதத்துவக் கணக்கு மிகவும் துல்லியமானது தான். தலைவரின் சொந்த தட்டச்சை யார் சோதிப்பார்கள்? டாக்டர் லென்ஸ் மட்டுமே அதைப் பயன்படுத்துவான் என்று எல்லாரும் அறிவார்கள். எவர் தனக்குத்தானே அப்படி ஒரு கடிதம் எழுதிக்கொள்வார்கள்?

உதவியாளனை தொடர்புபடுத்திய இந்தக் கூற்று ஓரளவு திருப்தி அளிப்பது போலத் தோன்றியது. வாழ்க்கை நியதியே போட்டிதானே, இல்லையா? இதைத்தான் ஆர்தர் பார்க் குழந்தைப் பருவத்திலிருந்தே மிக முக்கியமாக கருதியிருந்தான். இந்தக் கூற்று ஒரு வடிவம் பெறு முன்பே உடைந்துபோனது எவ்வளவு வெட்ககரமானது!

அவசரப்பட்டு முடிவுக்கு வருவது தவறானது. தடயங்களை வெளிப்படுத்தும் அளவுக்கு இமாண்ட் அர்டோனிஸ் ஒரு முட்டாள் அல்ல. அவன் நினைத்திருந்தால் இக் கடிதத்

தை வேறு ஒரு பாதுகாப்பான இடத்தில் தட்டச்சு செய்வதை எதுவும் தடுத்துவிட முடியாது. சந்தேகப் பேர்வழியின் பட்டியலி லிருந்து அவனை நீக்கிவிடுவது அவ்வளவு சீக்கிரம் கூடாது. வெறுப்பான பார்வையும் விறைத்த கண்களும் கொண்ட அழகான ஆனால் ஆணவம் நிறைந்த அம்முகத்தை பார்க் தன் கண்முன் நிறுத்தினான்.

''இந்த இரும்புப்பிடி மனிதனை நாம் சிக்க வைக்க வேண்டும்,'' என்று பார்க் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

கதவருகில் போகும்போதே ஆர்தர் திடீ ரென்று கூறினான், ''ஓர் ஆளால்தான் இந்தக் கடிதம் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண் டுமா என நான் யோசித்துக் கொண்டிருக் கிறேன், காட்டுமிராண்டி?''

''வேறு யார் செய்திருக்க முடியும்?'' என்றான் காட்டுமிராண்டி வியப்புடன்.

''ஓர் எந்திரம், ஒருவகையில்?''

''நான் அப்படி நினைக்கவில்லை.''

''ஆனால் கம்பியூட்டர்கள் பலவிதமான வாசகங்களை, கவிதைகளைக் கூட வடிக்க முடியும்,'' பார்க் தொடர்ந்தான்.

''நீ மிகவும் முரணாகப் போய்க்கொண்டு இருக்கிறாய். ஊதாப்பூவை தேர்ந்தெடுத்தது கூட ஓர் எந்திரந்தானோ?'' என்றான் காட்டுமிராண்டி. பின்பு ஒரு தீர்மானமான குரலில் மேலும் சொன்னான்: ''இல்லை, ஒரு மனிதன் தான் இத்தனை தாழ்வாகப்போக முடியும்.''

''யாருக்குத் தெரியும்?''

''இந்தக் கடிதம் ஓர் எந்திரமே எழுதியதாக வைத்துக்கொண்டால் பயமுறுத்துவதை யார் செயல்படுத்துவார்கள்?''

''ஓர் எந்திரம்தான், ஒருவேளை ஒரு பூனை வடிவில்...''

''என்ன பூனை?''

''ஒரு சாதாரணப் பூனை, நான்கு கால்களும் ஒரு வாலும் கொண்டது,'' விளக்கினான் ஆர்தர்.

''என்ன, என்னைக் கிண்டலா செய்கிறாய்!'' என்று உறுமினான் காட்டுமிராண்டி. ''நீங்கள் இந்த முட்டாள்தனமான கேலிகளை சிறிதுநேரம் பேசாமல் இருப்பீர்களா?''

''நான் கிண்டல் செய்யவில்லை.''

''அப்படியானால் நீ உடனே ஒரு மருத்துவரை போய்ப் பார். கதிரியக்கத்தின் அளவு இங்கு அதிகமாகிப் போய்க்கொண்டிருக்கிறது என்று நான் உனக்கு ஏற்கெனவே சொன்னேன்,'' என்ற காட்டுமிராண்டி தன்னுடைய பொட்டைத் தட்டியவாறு பார்க்கிற்கு மூளைக் கோளாறாகிவிட்டது என்பதைக் குறிப்பாக உணர்த்தினான்.

காட்டுமிராண்டியிடமிருந்து விடைபெற்ற பிறகு அணுவாராய்ச்சி மையத்தில் செலவிட்ட தன் முதல் நாளைய அநுபவத்தை தன் தலைமை அதிகாரியிடம் கூறுவதற்காகப் புறப்பட்டான். போகும் வழியில் அவன் ஜூலைச் சந்தித்தான். அதிகாரி வெளியே போய்விட்டதாக அவன் சொன்னான்.

''எங்கேனும் விமானப் பயணமோ?'' என்றான் பார்க்.

''வெறுமனே நடந்துதான் சென்றிருக்கிறான்,'' என்று ஜூல் சரியாகக் குறிப்பிட்டான்.

* * *

ஹ்யூகோ வேலையில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்க ரீனா விரும்பினாள். கால்களை உள்ளிழுத்தபடி பக்கத்திலுள்ள நாற்காலியில் அமர்ந்துகொண்டு, ஹ்யூகோ தனக்கு மட்டுமே தெரியும்படியாக காகிதங்களை மேசையின்மீது பரப்பி எழுதிக்கொண்டிருப்பதை அவள் பார்த்துக் கொண்டிருப்பாள். தக்க சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் போது வெளியில் ஒரு பீரங்கி வெடிப்புக் கேட்டாலும் அவன் கண்ணை இமைக்கக் கூட மாட்டான். இத்தகு வேளைகளில் ஏராளமான காகிதங்களில் சிக்கலான பல வடிவங்களில் எண்களைக் குறித்துக்கொண்டு மிக வேகமாகக் கணக்கிடுவதைத் தவிர வேறு எதுவுமே அவனுக்காக எஞ்சியிருக்கவில்லை.

திடீரென்று ரீனா அமர்ந்திருந்த நாற்காலியை பலத்த ஓசையுடன் கீழே விழும் படியாகத் தள்ளிவிட்டு ஹ்யூகோ லென்ஸ் அவளைப் பற்றி அறையினுள் சுழன்றபடியே மெதுவாக பாட்டிசைத்தபடி நடனமாடத் தொடங்கினான்.

ரீனாவுடனான ஹ்யூகோவினுடைய வாழ்க்

கையை நன்கு மசகிட்ட எந்திரத்துக்கு ஒப்பிடலாம். சிறுசிறு வேறுபாடுகள் விரைவி லேயே சரி செய்யப்பட்டன. நாட்டின் ஏதோ ஒரு தொலைவான மூலையில் உள்ள சோத னைக் களத்துக்கு லென்ஸ் விரைந்து செல்ல வேண்டி இருந்தாலும் அவன் தன் மனைவியை உடன் அழைத்துப் போவான். அவளின்றி கழித்த ஒவ்வொரு நாளும் அவன் மனத் துக்குப் பாரமாகவே அமைந்தது.

ஹ்யூகோ புகழ்பெற்ற பிறகு அவர்கள் பயணம் பெருகியது. ஏனெனில் ஹ்யூகோ லென்ஸ் எல்லா முக்கிய பௌதிக மாநாடுகள் அல்லது கருத்தரங்குகளுக்கெல்லாம் அழைக்கப் பட்டான்.

ஒரே ஒரு நேர்வில், அதாவது ஜப்பானில் கூடிய அணுவியல் மாநாட்டிற்கு ரீனா இல்லாமல் லென்ஸ் சென்றான். தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஓரளவு துயரத் துடனும், எதுவும் பேச விரும்பாதும் வீட் டுக்குத் திரும்பினான். உதய சூரியன் நாட் டைப் பற்றி ரீனா கேட்ட கேள்விகளுக்கு ஹ்யூகோ அளித்த பதில் இதுதான்: ''ஹிரோ ஷிமா என்றுமே ஆறாத ஒரு காயம், நீ அதைப் பார்க்காததற்காக நான் மகிழ்கிறேன்.''

வீட்டு வேலையைப் பொருத்தமட்டில் ரீனாவின் வாழ்க்கையை இலகுவாக்குவதற்கு ராபின் என்ற புரோட்டீன் ரோபாட் உதவி யது. சொல்லப் போனால் அது அவர்கள் குடும் பத்தின் மூன்றாவது உறுப்பினனாக விளங்கி யது.

அவர்கள் எதையுமே சிந்திக்காதபடி காலம், நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் என்று வேக மாகக் கடந்தன. பிறகு திடீரென்று அந்த மசகிட்ட எந்திரத்திற்கு முக்கியமான கோ ளாறு ஒன்று ஏற்பட்டது.

அந்தக் கடிதம் வந்த முதல் நாள் அது ஆரம்பமானது. அன்றைய இரவு நிகழ்ச்சிகள் ரீனா மனத்தில் ஆழமாகப் பதிந்ததன் காரண மாக, அவள் அதன் ஒவ்வொரு அம்சத்தை யும் தன் மனத்தில் மிகச் சிறிய விவரத்தைக் கூட எப்போதும் நினைவு கூர முடியும்.

அவர்கள் படுக்கைக்குச் சென்று ரீனா கிட்டத்தட்ட தூங்கிப்போகும் சமயம் ஹ்யூ கோ திடீரென்று குதித்து, ''எனக்கு ஒரு யோசனை வருகிறது!'' என்று கத்தினான். ''இப்போதே நான் சென்று இந்தக் கருத் தைக் குறித்துக்கொள்ள வேண்டும். இல்லா விடில் அது என்னிடமிருந்து நிலையாக மறந்து போய்விடும். நீ கொஞ்சம் தூங்கு.'' ரீனாவிற்கு அவசர முத்தம் தந்துவிட்டு தன் அலுவல் அறைக்கு விரைந்தான்.

விளக்கை அணைத்துவிட்டு கண்களை அகல விரித்தபடியே இருளில் வெகு நேரம் கிடந்தாள் ரீனா. நேரங்கெட்ட நேரங்களில் ஹ்யூகோ இவ்வாறு திடீரென்று குதிப்பது அவளுக்கு ஒன்றும் புதிதல்ல! அவனுக்குத் திடீரென்று ஆலோசனை தோன்றி விட்டால் அவனை நிறுத்த முடியாது. சாப்பாட்டு மேசையில் இருந்தால் உணவைத் தட்டி விடுவான். ஒரு துண்டை மட்டும் போர்த்திக்

கொண்டு குளியல் அறையிலிருந்து வெளியில் குதிப்பான். அல்லது சதுரங்க விளையாட்டை நிறுத்திவிட்டு கையில் கிடைத்த காகிதத்தில் ஏதாவது தனது சிந்தனைகள் பற்றி எழுது வான்.

முதலில் அவனுடைய நடத்தை ரீனாவிற்கு வியப்பையும் ஓரளவுக்குத் திகிலையும் ஏற் படுத்தினாலும் தன் கணவனை அவனது மெய்மறந்த நிலையிலிருந்து திரும்பவும் இவ் வுலகிற்குக் கொண்டுவந்து அவள் மனநிலையை சரி செய்யத் தெரிந்து கொண்டாள். மறதி யாக, ஒன்றிரண்டு நிமிடங்களில் முடிந்துவிடக் கூடிய வேலை என்றும், 'கருத்துக்களைக்' குறித்துக்கொள்வது அவ்வளவு எளிதல்ல என்றும் அவன் சொன்னாலும் நிமிடங்கள் நீண்ட மணிகளாவதுண்டு.

ஆண்டுகள் கழிந்தன. 'கருத்துக்களுக்கு' மதிப்பளிக்க ரீனா தெரிந்து கொண்டாள். ஏனெனில் அத்தகைய கருத்துக்களால்தான் அவள் கணவன் உலகின் தலையாய பௌதிக விஞ்ஞானிகளின் வரிசையில் சேர முடிந்தது.

அரிதாகக் கிடைக்கக் கூடிய அவர்களது ஓய்வு நேரத்தில் சதுரங்கம் விளையாடுவது தான் தம்பதிகளின் விருப்பமான பொழுது போக்கு. அந்நாட்களில் ரீனா கல்லூரி சேம் பியனாக விளங்கினாள். அவள் தொடர்ச்சி யாகவும் வலிமையோடும் விளையாடினாள். ஒரு சமயம் அவள் ஆண்கள் பந்தயத்தில் கூட பங்கேற்று இருக்கிறாள். ஹ்யூகோ தன்னை ஓர் அமெச்சூர் ஆட்டக்காரராகவே

கருதியிருந்தான். பந்தயங்களில் கலந்து கொண்டதே இல்லை. நட்ட நடுவில் விளையாட்டை விட்டுவிட்டு சுற்றுப்புறத்தையே மறந்த நிலையில் தன் எதிரி வியப்படையத்தக்க வகையில் பௌதிகவியல் கோட்பாடுகளில் மூழ்கி இருக்கும்படியாகச் செய்த ஒழுங்கு விதிகள்தாம் யாவை?

ஹ்யூகோ லென்ஸுக்கு நோபல் பரிசு வழங்குவதற்கான இரண்டு நிகழ்ச்சிகளுக்கிடையில் சுவீடன் நாட்டு அரசருடன் அவன் விளையாடும் போதுதான் அதே போல ஒரு சங்கடமான சம்பவம் நிகழ்ந்தது. இருந்தாலும் சுயகட்டுப்பாட்டின் மாதிரி தான் என்பதை அரசர் நிரூபித்துவிட்டார். ஹ்யூகோவிற்காக ஒரு முழு மணி நேரம் காத்திருந்தார். மறுபுறமோ ரீனாவோ வெட்கத்தால் கூனிக் குறுகிப் போய் இருந்தாள்.

கண்ணைத் திறந்தபடி இருட்டில் படுத்திருந்த போது அந்நேர்வுகளை எல்லாம் அவள் திரும்ப நினைத்தாள். இறுதியில் தன்னையறியாமல் அவள் தூங்கிப்போனாள்.

திடீரென்று தன்னை யாரோ பிடித்துக் குலுக்குவது போல உணர்ந்து அவள் திடுக்கிட்டு எழுந்தாள். ஹ்யூகோ படுக்கை அறையில் இல்லை. கடிகாரத்தின் ஒளிரும் கைகள் அப்போது மணி இரண்டரை எனக் காட்டின. அவள் இதயமே நின்றுவிட்டது போல இருந்தது. ஏதோ கெட்ட எண்ணம் அவளை ஆட்கொண்டது. வெறுங்காலில் சில்லென்று பட்ட பிளாஸ்டிக் தகடுகளின் மீது

நடந்து அலுவலக அறையை அடைந்தாள். அங்கு ஒருவரும் இல்லை, அறை காலியாக இருந்தது. ரீனா வீட்டைச் சுற்றிலும் பார்த் தாள். ஹாட் ஹவுஸுக்குள்ளும் எட்டிப் பார்த்தாள். சிலவேளைகளில் உலோகங்களை மெருகிடுவதற்காக ஹ்யூகோ செல்லக் கூடிய பணி மனைக்கும் சென்றாள். எங்குமே அவனைக் காண முடியவில்லை. எஞ்சிய அந்த இரவு முழுவதும் ரீனாவிற்கு தூக்கமே பிடிக்க வில்லை.

விடியற் காலையில் அவள் தாழ்வாரத் திற்குப் போனாள். சுற்றிலும் உள்ள நகரின் வெளிப்புறத்தை மறைத்திருந்த கட்டடங்கள் வசந்தகாலப் பனியால் நனைந்திருந்தன. ஹ்யூகோவின் ஆர்னிதாப்டர் வீடு நோக்கி வருவதை அவளது ஆறாவது அறிவு அவளுக்கு உணர்த்தியது. ஆயிரம் இருந்தாலும் அவனு டையது எது என்று அவளால் அடையாளம் காண முடியும். மிகவும் பழையதாக இருந் தாலும் புதிய ஒன்றை வாங்க விரும்பாதபடி அதில் அவனுடன் எத்தனையோ மைல்கள் அவள் பறந்திருக்கிறாள்.

வேகமாகப் படுக்கையறைக்குள் சென்று முட்டுவாய் வரை போர்த்திக், கொண்டு படுத்துக் கொண்டாள்.

''தூங்குகிறாயா?'' என்றான் ஹ்யூகோ மிருது வான குரலில், கதவை மெதுவாகச் சாத்திக் கொண்டே.

ரீனா கண்களைத் திறந்தாள்: ''சரி, உனது 'கருத்து' எப்படியிருக்கிறது?''

''எல்லாம் ஒழுங்காகச் செல்கிறது. உனக்கு காஃபி வேண்டுமா?''

''நான் எதையும் விரும்பவில்லை.''

முதல் நாள் இரவு தான் வெளியே போனது பற்றி எதுவும் குறிப்பிடாமலே சற்று நேரங்கழித்து காலை நேரத்தில் ஹ்யூகோ லென்ஸ் அணுவாராய்ச்சி மையத்திற்குப் பறந் தான்.

பிறகு தான் ஊதாப்பூவுடன் அந்தக் கடி தம் வந்தது.

எதுவும் கேள்வி கேட்கவிடாமல் கர்வம் ரீனாவைத் தடுத்தது. தான் பொறாமைக்கு அப்பாற்பட்டவள் என்று அவள் எப்போதுமே தன்னைக் கருதியிருந்தாள். அவள் எதுவும் சொல்லாமலேயே அவன் எதையும் மறைக் காமல் அவனது மனத்தை முழுதுமாக தனக்குத் திறந்து காட்டுவதையே அவள் விரும்பினாள்.

அவளுக்குப் போட்டியாக முளைத்தது யார்? எத்தனை பெண்களோ?.. நாற்பத்தி நான்கு வயது நிறைந்த டாக்டர் லென்ஸுக்கு இளம் மாணவிகள் சில சமயங்களில் தனிப் பட்ட குறிப்புகள் எழுதுவதுண்டு. அவனுக்குத் தெரியாத பெண்கள் கூட, தொலைக்காட் சியில் மட்டுமே அவனைப் பார்த்தவர்கள் எழுதுவார்கள். ஒருவேளை அவனது செய லாளர் ஷெல்லா வலேரியோ? யாராயிருந்தால் என்ன? அவன் மகிழ்ச்சியாக இருந்தால் சரி தான். ஒருவேளை, ஒரு குழந்தைக்கு, அதா வது ஒரு மகனுக்காக ஹ்யூகோ இன்னமும்

ஏங்கலாம். அவன் அதைப் பற்றிப் பேசாதிருந்தாலும் தனது மனத்தை அது ஆக்கிரமித்திருந்தது என்பதை அவள் அறிவாள். நல்லது, அவனது வழியில் அவள் குறுக்கீடாக நிற்கப் போவதில்லை.

அந்த இரவு அவர்கள் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தன் கணவனைப் பிரிய ரீனா முடிவு செய்திருந்தாள். அந்த மோசமான கடிதம் வந்திராவிட்டால் அவள் அப்படியே செய்தும் இருப்பாள். இந்த இக்கட்டான நிலையில் ஹ்யூகோவைப் பிரிய அவள் விரும்பவில்லை.

ஒரே குழந்தையின் மீது உள்ள பாசத்தைப் போல ஹ்யூகோவின் மீது அவளுக்குப் பரிவு இருந்தது. ஆனால் அதை ரீனா ஏளனப் போர்வைக்குள்ளாக மறைத்துக் கொண்டாள். அவளை விரும்பி எத்தனையோ பேர் அவள் காலடியில் கிடந்தார்கள். ஆனாலும் தன் இளம் மனைவியின் எதிர்காலக் காதலர்களில் ஹ்யூகோ எப்போதுமே முற்றிலும் மாறுபட்டவனாகத் திகழ்ந்தான்.

ஒரு சமயம் இமாண்ட் அர்டோனிஸ் அவளை நாட்டிய அரங்குக்கு அழைத்து, ஹ்யூகோவும் அன்றைய மாலை நேரத்தைத் தனியே செலவிட விரும்பி அவளுக்கு தலையசைத்து இசைவு கொடுத்த போது, ''பொறாமை பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டாள் ரீனா.

''சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள்,'' என்றான் ஹ்யூகோ.

"சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட மனைவி யாருக்கு வேண்டும்?" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் ரீனா.

ஹ்யூகோ தன்னை ஏமாற்றுகிறான் என்ற முடிவுக்கு வருவது அவளுக்கு ஒரு பெருத்த அடியாக இருந்தது. ஆனாலும் இப்போது புதிதாக வந்துள்ள துன்பம் அதையெல்லாம் மறைத்துவிட்டது. இதையெல்லாம் மாற்ற முற்படும் முன்பே மூன்று மாதங்களுக்கு என்று வழங்கப்பட்டதில் உள்ள முதல் நாள் பங்கீடு தீர்ந்து போயிற்று. மெழுகு வர்த்தி சற்று அதிகமாகவே எரிந்துபோயிற்று, மணற் கடிகையினின்று ஓரளவு மணலும் உதிர்ந்துவிட்டது. ஹ்யூகோ உணர்ச்சி வயப் பட்டு, பசியை இழந்துவிட்டான். அவனுக்கு இரவுச் சாப்பாடு இல்லை. ரீனாவோ தன்னைத்தானே சித்ரவதை செய்துகொண்டு இருளை வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்தாள். தான் மறுபடியும் தன் அலுவலக அறையில் வேலைசெய்யப் போவதாக ஹ்யூ கோ சொன்னான். இதற்குள்ளாக அவன் ஒரு வேளை போயிருக்கக் கூடும். எழுந்து சென்று பார்ப்பதற்குக் கூட அவளுக்குத் தெம்பு இல் லை.

ஆனாலும் அபாயத்தைத் தாண்டும் வரை யில் அவனைக் கைவிடக் கூடாதென்று அவள் தீர்மானம் செய்தாள்.

* * *

அந்த ஏப்ரல் மாத காலைப்பொழுது வெதும்பிப் போன மனத்தையும் இதப்படுத்து வதாக அமைந்திருந்தது, அடிவானத்தில் தெரி யும் மலைச் சிகரங்களுக்கு மேலே ஒளிவிடும் நீலவானம் தெரிந்தது. கீழே துளிர்க்கும் இலைகளுடைய மரங்கள், சிறு விமானம், இவை எல்லாமே மகிழ்ச்சி தருவதாக இருந்தன.

அதே வேளையில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்த வியப்பான சம்பவங்கள் போலீஸ் அதிகாரியின் வாழ்க்கையைச் சங்கடப்படுத்திக் கொண்டிருந்தன.

ஆர்னோ காம்ப் தன் அலுவலக அறை யில் நுழைந்து முந்திய இரவு வந்த போலீஸ் அறிக்கையைப் படிக்க ஆரம்பித்தபோது ஜூல் கதவருகில் வந்து நின்றான்.

''உள்ளே வரலாமா?'' என்று வேண்டு கோள் வந்தது.

மேசையின்மீது இருந்த சிறிய அராபியக் குதிரைச் சிலை ஒன்றைத் தூக்கியபடி ஆர் னோ காம்ப் ஒரு வார்த்தை கூடப் பேசாது தலையசைத்தான்.

''உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக் கிறார்,'' என்றான் ஜூல், அறிமுக அட்டை யை அவனிடம் கொடுத்தபடி.

''ஈவ் சாயிச் — தேசிய மண்ணியல் மற்றும் புதைபொருள் ஆராய்ச்சி மையத்தின் இயக்கு நர்,'' ஆர்னோ காம்ப் படித்தான்.

அறிமுக அட்டையை கீழே வைத்துவிட்டு

சாயிச் உள்ளே வர அநுமதித்தான்.

தடித்த ஆனால் மிக சுறுசுறுப்பான ஒரு வன் உள்ளே நுழைந்தான். தன்னைப் பெருமையுடன் அறிமுகப்படுத்திக்கொண்டு காம்ப் காட்டிய நாற்காலியில் அமர்ந்தான். முகத்தில் அரும்பிய வியர்வையை கட்டம் போட்ட கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு, ஜூல் கதவை சாத்திவிட்டு வெளியேறும் வரை காத்திருந்தான்.

''நான் உங்களுக்கு என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான் போலீஸ் அதிகாரி.

''இதைப் பாருங்கள்,'' என்று ஏற்கெனவே திறந்திருந்த உறையை அவனிடம் நீட்டினான் கொழுத்த அம்மனிதன்.

அதைக் கையில் எடுத்தபோதே அது என்னவென்று காம்ப் யூகித்துவிட்டான்.

காம்பின் முகக் குறிகளை சாயிச் கூர்ந்து கவனித்தான்.

கடிதத்தைப் படித்து முடித்ததும், காம்ப் காகிதத்தை மடித்தபடி உறையைக் குலுக்கிய போது அதன் உள்ளிருந்து பூ ஒன்று விழுந்தது.

''இந்த... இக் கடிதத்தை நீங்கள் எப்போது பெற்றீர்கள்?'' என்று தனது வார்த்தைகள் தடுமாறக் கேட்டான் காம்ப். மனம் மிக நடுக்குற்ற நிலையில்தான் அவனுக்கு இது போன்று வரும்.

''இன்றைய காலைத் தபாலில்.''

''வீட்டிலா?''

''அலுவலகத்தில்.''

அது பற்றி சந்தேகமே இல்லை. பழக்கப் பட்ட நடையில் இருந்தது. கடிதம் எழுதி யவன் தனது நடையை மாற்றிக்கொள்வதில் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. செய்தி தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. பெறுநர் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்ட காலம் மட்டும் கையால் எழுதப்பட்டிருந்தது. இது மட்டுந் தான் ஒரு மாறுதல். முன்பு பெற்றவனுக்கு மூன்று மாதம் அளிக்கப்பட்டதற்கு மாறாக, ஈவ் சாயிச்சிற்குப் பதினெட்டு மாதங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

''இந்தக் கடிதத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்றான் ஆர்னோ காம்ப்.

''ஒரு கிண்டலுக்காக இது எழுதப்பட்ட தென்றால் இதைவிட மடத்தனம் எதுவுமில் லை,'' என்று கோபத்துடன் சொன்னான் அந்தப் பருத்த மனிதன்.

''இது கிண்டலாகக் கருதப்பட வேண்டிய ஒன்று இல்லை,'' என்று சொன்னான் ஆர் னோ காம்ப் தலையை ஆட்டியபடி.

''நான் ஒன்றும் சாவுக்கு அஞ்சவில்லை,'' என்றான் ஈவ் சாயிச். ''ஆனாலும் அந்தக் கடிதம் எழுதியவனின் கேலிக்குரிய கோரிக்கை களை சற்று பாருங்கள். ஆழ் துளையிடுதலை நிறுத்துங்கள்! கடற்படுகையில் துளையிடுதலை நிறுத்துங்கள்! உள்நோக்கமென்ன? ஏதோ பூமியின் மேற்பகுதியில் துளையிடுவதன் மூலம் நமது கோளத்தை பாழ்படுத்துகிறோம் என்று

அவன் நம்மை நம்பவைக்கிறான்!'' கோபத்தி னால் மூச்சு விடக் கூட இயலாமல் எல்லாவற் றையும் விளக்கினான் அந்தப் பருத்த ஆசாமி. ''துளைக்கப்பட்ட பொந்திலிருந்து மாக்மா வெளிவந்து எல்லா உயிரினங்களையும் அழித்து விடும் என்று அவன் நினைக்கிறான் போ லும்!''

''ஆனால் அப்படி இல்லையா?''

ஏற்றுக்கொள்ளாத தொனியில், ''ஒரு கட்டுக் கதை,'' என்றான் சாயிச். ''ஆனால் பாருங்கள், இந்தக் கடிதத்தை யார் எழுதி யிருக்கலாம் என்பது பற்றி ஒரு கருத்தை உருவாக்க நான் முனைகிறேன்.''

''நல்லது, தொடருங்கள்,'' என்று அவனை உற்சாகப் படுத்தினான் போலீஸ் அதிகாரி.

''போட்டியாளர்கள் வேறு யார்? ஜனாதி பதியால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத் தினால் நாட்டில் எல்லா ஆழ் துளையிடும் வேலைகளையும் நிறுத்தும்படி நான் பார்த்துக் கொள்ள வேண்டும். இதிலிருந்து இயல்பாக எழக்கூடிய கேள்வி என்னவென்றால்: இதனால் யாருக்கு லாபம் என்பது? பதில் மிகச் சாதாரணமானது: பூமியின் மேற்பரப்பில் சுரங்கம் தோண்டுவதில் ஈடுபட்டுள்ள கம்பெனி கள் தாம்... ஆனால் ஆழ் துளையிடுவதை நிறுத்துவது என்றால் என்னவென்பது பற்றி நீங்கள் ஏதும் கருதுகிறீர்களா? அப்படி யென்றால் கோடிக் கணக்கில் இடப்பட்ட முதலீடுகளை முடக்குவதும், இதற்கென்றே நிறுவப்பட்ட சிறப்பான எந்திரங்களை அகற்று

வதுமாகும். இந்த அளப்பரிய வேலைக்காக இக்கடிதம் எழுதியவன் பெருந்தன்மையுடன் எனக்குப் பதினெட்டு மாத கால அவகாசம் கொடுத்திருக்கிறான்.''

காம்ப் தன் நாற்காலியில் சாய்ந்து பிறகு பேசினான்: ''நிலவியலைப் பொருத்த வரை நான் ஒன்றும் அறியாதவன். இந்த ஆழ் துளையிடுதல் உண்மையிலேயே அவசியந் தானா? நமது கோளம் ஒரு தேங்காய் போன்று இருப்பதாகவும் அதன் உறுதியான ஆனால் மெல்லிய ஓட்டுக்குக் கீழே அசா தாரணமான அழுத்தத்தில் திரவம் இருப் பதாகவும் இக்கடிதத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. இந்த ஓடு மட்டும் உடைக்கப்படுமே யானால் அது மனித சமுதாயத்திற்கு சொல்லொணா துன்பத்தைத் தரும் என்று இதை எழுதியவன் கூறுகிறான். ஒரு நிபு ணராகிய நீங்கள் இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்கிறீர்களா?''

பருத்த அந்த நிலவியலாளன் திக்கித் திணறிக்கொண்டு பேசினான்: ''பாருங்கள்... ஒவ்வொரு புதிய உத்தியும் ஓரளவுக்கு அபா யம் கொண்டதே. ஆழ் துளையிடலும் விதி விலக்கானதல்ல. ஏதாவது புதியதைத் தேடிச் செல்லும் போது ஊறுபாடுகள் எப்பொழுது மே தோன்றத்தான் செய்கின்றன.''

''ஆனால் இதற்கு என்ன சொல்கிறீர் கள்?'' என்றபடியே தான் தேடிய ஒரு பத்தியை பிறகு ஆர்னோ காம்ப் படிக்கத்

தொடங்கினான்: "'பூமிக் கோளம் செயல் படும் இயக்கத்தில் நாம் குறுக்கிட்டால் ஓர் அழுகிய கொட்டையைப் போல நமது பூமி வெடித்து விடும்...' இப்படியெல்லாம் சொல் லப்பட்டிருக்கிறதே. இதெல்லாம் உண்மையாக நடக்கக் கூடியதா?"

"ஒருபோதும் இல்லை," என்று உறுதி யாகச் சொன்னான் சாயிச். "இந்தக் கடி தம் எழுதியவனின் தர்க்கம் அந்தத் தாளின் விலைகூடப் பெறாது. ஒரு நிலவியலாளன் என்ற முறையில் மனித இனத்தின் எதிர்காலம் இந்த பூமியில் உள்ளதே தவிர விண்வெளி யில் அல்ல என்பதை நானறிவேன். லட்சக் கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட பரிணா மம் ஏதோ சிற்சில நிலைகளுக்கு அல்லாது, பூமியில் நிலவும் நிலைகளுக்குப் பொருத்த மான ஒரு விவேகத்தைத் தான் உண்டாக்கி இருக்கிறது. மனித உடல் இந்த பூமியில் வாழ்வதற்கு மட்டுமே, அதாவது பூமியின் ஈர்ப்பு விசை, அதன் வளி மண்டலம், சூரிய ஒளி அளவு, கதிரியக்கத்தின் அளவு முதலியவற்றுக் குப் பொருந்துவதாக மட்டுமே ஏற்பட்டது."

"ஆனால் மற்ற கோள்கள்..."

"பிற கோள்களில் மனிதன் ஓர் அந்நிய னாகவே இருப்பான். சுக்கிரன் அல்லது செவ் வாய் இவற்றில் குடியேறியவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களது வாழ்க்கை துன்ப மயமானதாகவே உள்ளது. அவர்கள் கனமான விண்வெளி உடைகளைத் தரித்தவாறே இருக்க

வேண்டி உள்ளது. அவர்கள் வாழுமிடம் சிறைச் சாலை போன்றது. ஏனெனில் அவர்கள் வாழு மிடத்தின் கட்டிருக்கமான காற்றின் நிலை சீர் குலையுமேயானால் அதுவே அவர்கள் முடி வாக இருக்கும். இருபது ஆண்டுகளாகியும் இன் னும் முடியாமல், இழுத்துக்கொண்டே போவது போலத் தோன்றும் பூர்வீக மக்களுடனான இவர்கள் சண்டை என்னவாயிற்று?''

''மற்ற கோள்களை நாம் வெல்லவே றொரு வழியும் உண்டு,'' என்றான் ஆர்னோ காம்ப்.

''சைபர்ஜிசேஷன் பற்றி நீங்கள் கூறுகிறீர் கள்.''

''ஆம்.''

''நமது உடலை மாற்றி அமைப்பதை நான் கொள்கையளவில் எதிர்ப்பவன்,'' என் றான் ஈவ் சாயிச். ''வேறு எந்தக் கருவி களையும் விட நான் ஏற்கெனவே வைத்திருக் கும் ஒன்றை மிகவும் விரும்புகிறேன். மனிதனு டைய எதிர்காலம் இந்த உலகில்தான் உள் ளது,'' என்று திரும்பவும் உறுதியான தொனி யில் சொன்னான் அந்தப் பருத்த மனிதன்.

''இப்பூமியில் வாழ்க்கை அவ்வளவு ஒன்றும் மோசமானதல்ல. ஆனால் நமக்குத் தான் போதிய அளவு இடமில்லை,'' என்றான் ஆர் னோ காம்ப்.

''இன்னும் இங்கு எவ்வளவோ இடமிருக் கிறது.''

''நான் அப்படிச் சொல்லவில்லை,'' என்று

மறுத்துச் சொன்னான் ஆர்னோ காம்ப். ''பூமியில் பாலைவனங்களோ மனித சஞ்சாரமற்ற மலைகளோ வாழத் தகுதியற்றவை என்று விடும்படியாக இல்லை.''

''நீங்கள் பூமியின் மேற்பரப்பைப் பற்றிப் பேசுகிறீர்கள். நாம் கீழே செல்ல வேண்டும்.''

''பாதாள அடுக்குகளைக் கொண்ட வீடுகள் பல இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன.''

''அது வெறும் தொடக்கமே,'' என்றான் சாயிச். ''மேற்பரப்பில் ஒரு கீறல் அவ்வளவே. இன்னும் பூமியை ஆழமாகத் தோண்ட வேண்டும். ஒரு தேனடை போல ஆக்க வேண்டும். எந்த ஆழத்திலும் நாம் வீடு கட்ட தேவை ஏற்படும். வளிமண்டலத்து எந்த நிகழ்ச்சியின் காரணமாகவும் ஏற்படும் ஆபத்தைச் சமாளிக்க தகுந்த காப்பகமாக அது மாறலாம். வானவியல் விஞ்ஞானிகள் நமக்கு எச்சரிக்கை விடும் காஸ்மிக் கதிரியக்கத்திற்கு எதிராக பூமியின் மேலடுக்கு நமக்கு தக்க பாதுகாப்பைத் தரும். தலைக்கு மேலே பல மைல் உயரத்தில் பூமியின் மேலடுக்கு இருந்தால்கூட நான் உண்மையிலேயே அமைதியாக இருப்பேன்.''

''பூமியின் நட்ட நடுவிலே ஆழமாகத் தோண்ட வேண்டும் என்பது சொல்வதற்குச் சுலபமாகத் தான் இருக்கிறது. ஆனால் உருகிய நிலையில் உள்ள மாக்மா என்னாவது?'' என்றான் ஆர்னோ காம்ப்.

''அதை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கு தற்

காலத்தில் போதிய ஏற்பாடு உள்ளது. அது மட்டுமா, நமக்குத் தேவையான அத்தனை தாதுப் படிவங்களும் மாக்மாவில் உள்ளன. எதற்கும் நாம் விண்வெளியைத் தேடி அலைய வேண்டியதில்லை. நமக்குத் தேவைப்படும் ஒவ் வொன்றும் இங்கு நம் காலுக்குக் கீழே உள் ளன.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஆப் பிளைத் துளைத்துக் கொண்டு செல்லும் புழு வின் வாழ்க்கையைப் போல இப்பூமியில் மனித னின் வாழ்க்கையும் உள்ளது, சரிதானே?'' என்றான் காம்ப்.

''இல்லை, கூட்டிலே வாழும் கழுகின் வாழ்க்கையைப் போன்றது,'' என்றான் ஈவ் சாயிச்.

''சிறகு வெட்டப்பட்ட கழுகோ,'' என் றான் காம்ப் தன் கடிகாரத்தைப் பார்த்த படி. ''நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்புத் தருகிறோம். ஆனால் தற்போதைக்கு நீங்கள் பயப்பட வேண்டியது ஏதுமில்லை என்று நினைக்கிறேன்.''

''பதினெட்டு மாத காலம் முடிவதற்கு முன்பாக எனது உயிருக்கு ஆபத்தில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

காம்ப் இதற்குப் பதிலளிக்கவில்லை.

''எத்தகைய பாதுகாப்பு உண்டு?.. ஏதாவது துணைக்கு ஆட்கள் உண்டோ?'' எனக் கேட் டான் சாயிச்.

''அது உங்களுக்குத் தெரிய முடியாது,'' என்று உறுதி தந்தான் காம்ப்.

*   *   *

மீண்டும், கடந்த இரண்டு நாட்களில் ஏதோ சில நேரத்தில் காம்ப் ஊதாப்பூவும் கடிதங்களும் ஏதோ ஒருவகை வீம்பான அச்சுறுத்தலாக இருக்க முடியுமா என்று தன்னைத் தானே வினவிக் கொண்டான். எனினும் அது வீம்புச் செயலைவிடச் சற்று அதிகமானதே. போலீஸ் தலைமை அதிகாரி என்ற வகையில் அது அவனுக்கு எதையும் கலபமாக்கி விடவில்லை. லென்ஸ் மற்றும் சாயிச் போன்ற நபர்கள் அச்சுறுத்தலுக்கு ஆட்பட்டு இருந்தபோது, இது சுற்றிவந்து பாயத் தயாராக இருக்கிறது. பொதுவாக, அரசாங்கத்தில் உயர்மட்டத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் எப்பொ ழுதுமே அமைதியின்மையை ஏற்படுத்தி விடு கிறது. சமூக ஒழுங்கு எளிதில் உடைகிற மாதிரி ஏதாவது இதனால் ஏற்படக் கூடும் என்பது இதன் பொருளாகிறது.

அது வீம்புப் பேச்சு இல்லையா என்பதல்ல முக்கியம், இத்தகைய கடிதங்களை அனுப்பிக் கொண்டிருக்கக் கூடியவனை பிடித்தாக வேண்டும். வலை பெரிதாக இருந்தால் பிடிப்பது கலபம் என்று ஆர்னோ காம்ப் தனக்குத் தானே நினைவுபடுத்திக் கொண்டான். ஒரு வகையில் இவனது முகவர்களது வலை மிக விரிவானதாகவே இருந்தது. தெருக்களிலும் சிற்றுண்டி சாலைகளிலும் உரையாடல்களைக் கேட்பதற்கும், எல்லா இடங்களிலும் ஊடு

ருவிச் செல்வதற்கும், எல்லாவகையான ரக சியங்களையும் முயன்று வெளிக் கொணர்வதற் காக அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந் தார்கள்.

லெஸ்ஸும், சாயிச்சும் மிக நெருக்கமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தார்கள். ஆயினும் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் முயற்சி இதுவரை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. போலீஸ் அதிகாரி எடுத்திருந்த எல்லா நடவடிக்கைகளுமே ஓரளவு மந்தமா கவே இருந்தன. எனினும் நல்ல தட்பவெப்ப நிலை ஏற்படட்டும் என்று வெறுமனே உட்கார்ந்திருப்பது ஆர்னோவின் இயல்பு இல்லை. ஆகவே நிகழ்ச்சிகளால் எடுத்துச் செல்லப்படுவதற்கு மாறாக, வெற்றியடைந் தால் நல்ல பயனைக் கொடுக்கட்டும் என்று தானே அதனோடு இயங்கிச் செல்ல நினைத் தான். அவனது சிந்தனை ஓட்டம் மிக எளிமையானது: குற்றவாளி சாதாரண அஞ்சல் துறையையே பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது, அதே முறையை போலீசும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதுவேயாகும்.

தொற்றுநோய் பரவுவதைத் தடுப்ப மிக முக்கியமானதாகும். பழைய நாட்களில் காலராவோ பிளேக்கோ பரவுவதைத் தடு பதற்காக தெருக்களிலும், நெடுஞ்சா களிலும் அரண் எழுப்பப்பட்டன. சுருங்க சொன்னால், தனது முகவரியாளனை இ னமும் சென்றடையாத கடித உறை

உள்ள நாசமாய்ப் போன பூக்களில் ஒன்றைக் கண்டுபிடிப்பது இப்பொழுது மிக முக்கியமானதாக இருந்தது. குற்றவாளியை அவர்களால் கண்டுபிடிக்க முடியாமற் போனாலும், அடுத்த பலியாள் மீது தயாராகிக் கொண்டிருக்கின்ற அடியை முன்னுணர்ந்து கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

* * *

ஓர் ஓய்வான நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு டானோடு உரையாற்றுவதற்கு ரோன் திடுதிப்பென முயன்றான். காலை நேரத்துத் தபால்கள் பிரிக்கப்பட்டு, மதியத் தபால்கள் இன்னமும் வந்து சேராத குறுகிய இடை ஓய்வமைதி தபால் அலுவலகத்தில் நிலவிய நேரமது.

தபால்கள் பிரிக்கும் தனியறையானது இறுக்கமானதாக இருந்தது. அவன் பழக்கமாகச் செய்வது போல தொடர்பு ஊழியர்க்கான கையேடு என்று குறிக்கப்பட்டிருந்த கனத்த நூலை ஒரு பக்கமாகத் தள்ளி ரோன் மேசையின் மீது அமர்ந்தான்.

தனது கால்களை இங்குமங்குமாக அலைத்த [illegible], "நான் நேற்று ஒரு விசித்திரமான கதையைப் படித்துக்கொண்டிருந்தேன்!" என்று [illegible]ான் தொடங்கினான். "கடைசியில் நமக் [illegible] விஞ்ஞான புனைகதை எழுத்தாளர்கள் எழுதியவை."

''என்ன, யாராவது தபால் அலுவலக ஊழியனை சென்டாவுரஸ், ஒருவேளை அதற்கும் அப்பால் தொலைவில் அவர்கள் அனுப்பி வைத்துவிட்டதாகவா சொல்ல வருகிறாய்?'' என்று எரிச்சலுற்ற டான் கேட்டான்.

''இரண்டுமே தவறானவை. நிகழ்ச்சியானது பூமியில்தான் நடைபெறுகிறது. பறக்கும் தட்டுக்களில் சில உயிரினங்கள் நமது பூமியில் தரையிறங்கினர், இன்னும் சரியாகச் சொன்னால் அவர்கள் ஓடற்ற நத்தை போலக் காணப்படுகிறார்கள். பூமியை வெல்வதற்காக அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் நமது ஈர்ப்பு விசையானது அவர்களுக்கு மிக அதிகமாக இருக்கவே அவர்களால் நகரக்கூட முடியவில்லை. ஆக, அடுத்து அவர்கள் என்ன செய்யக் கூடும்? உன்னால் ஒருபோதும் அனுமானிக்க முடியாது என்று நான் பந்தயம் கட்டுகிறேன்.''

''இது போன்ற முட்டாள்தனமானவற்றில் நேரத்தை நான் செலவிட்டுக் கொண்டிருக்கவில்லை.''

''அவர்கள் தபாலைப் பயன்படுத்த முடிவு செய்தார்கள்!'' என்று வெற்றிப் பெருமிதத்தோடு ரோன் அறிவித்தான். ''இங்கிருக்கக் கூடிய கையேடுகள் போன்றவற்றில் ஒன்றை அவர்கள் கைப்பற்றி சில காகிதங்களையும் உறைகளையும் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களது திட்டம் இப்படித்தான் சென்றது: மக்கள் கடிதங்களைப் பெற்று

பிறகு உறைகளைப் பிரித்துப் பார்ப்பார்கள். ஒரு சுத்தமான வெள்ளைத் தாளைத்தவிர உள்ளே ஒன்றும் இருக்காது. அதைப் பெற்றுக்கொண்டவர்கள் வெறுமனே தங்களது தோள்களைக் குலுக்கிவிட்டு அந்தத் தாளைத் தூக்கி எறிவார்கள். அதன் பிறகுதான் மிகவும் சுவையான நிகழ்ச்சி நடக்கப் போகிறது. அந்தத் தாள் அந்தப் பார்வையாளர்களால் விஷேடமான ரசாயனக் கரைசலால் தோய்விக்கப்பட்டிருக்கிறது. ஒருமுறை கடித உறைகள் திறக்கப்பட்ட உடனேயே அந்தக் கரைசல் விடுவிக்கப்பட்டு பூமிக்கு மேலாக முடிவில்லாதபடி ஓர் அருமையான மென்படலத்தை ஏற்படுத்தி விடும். இத்தகைய தாள் எங்கெல்லாம் வீசி எறியப்படுகிறதோ அந்த ஒவ்வொரு பகுதியிலும் இந்த மென்படலம் உருவாகும். ஒழுங்கற்ற வடிவமுடைய அந்த முற்றுகையாளர்களின் நோக்கம் அருமையான முறையில் எளிதாக இருந்தது. வெறுமையான இந்த மென்படலம் பூமி முழுக்க ஒரே மாதிரியாகச் சுற்றி மூடப்படும் வரை, மேல் நிகழ்ச்சியாக பூமியின் மேற்பரப்பில் பல்வேறு பகுதிகளில் உருவாகியிருந்த மென்படலத் தொடரானது ஒன்றின் மீது ஒன்றாக இணைந்து கொண்டே போகும். அதன் உள்புறத்தில் ஒரு சவப் போர்வையை ஏற்படுத்தி எல்லா உயிரினங்களும் அழிந்து போகும். உண்மையில் இந்தக் கதையினுடைய தலைப்பு: **சவப் போர்வைத் திட்டம்.**''

''மேலே சொல்.''

''அந்த முற்றுகையாளர்கள் கடித உறை களின் மீது முகவரிகளைக் கிறுக்கித் தள்ளி, ஒவ்வொன்றுக்குள்ளாகவும் அழிவார்ந்த தாளை யும் வைத்து மூடி, எப்படியோ அவற்றை இழுத்துவந்து அருகிலுள்ள அஞ்சல் பெட்டிக் குள்ளாகப் போட்டு விடுகிறார்கள். அவர்கள் ஒரு வாரம், இரண்டு வாரம், ஒரு மாதம் காத்திருக்கிறார்கள்: என்ன தீங்கு நேர்ந் திருக்கும்? பூமியில் வாழ்க்கை வழமையாக நடைபெறுகிறது. இதற்கிடையில், அந்த முற்று கையாளர்கள் நமது பூமியின் ஈர்ப்பு விசை காரணமாக ஒருவர் பின் ஒருவராக மடிந்து போகிறார்கள். இறுதியில் தங்களது அருமை யான திட்டம் தோல்வியுற்றது ஏன் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமலேயே கடைசி ஆளும் இறந்து விடுகிறான்.''

''அற்பமான வேதியல்?''

''இல்லை, வேதியல் இல்லை, ஆனால் நீயும் நானும் வேலை செய்யக்கூடிய அஞ்சல் துறைதான்! வழியிலே சில கடிதங்கள் தவறிவிட்டன, சில தவறான முகவரிகளுக்குச் சென்றுதிரும்பின, மற்றும் சில தாமதமாக வந்துசேர்ந்தன. இதன் விளைவாக 'சவப் போர்வையில்' இடைவெளிகள் அல்லது துளை கள் ஏற்பட்டுப்போயின. இந்த விநோதமான ஆட்களால் உருவாக்கப்பட்டிருந்த முழுத் திட்டமும் தோல்வியுற்றது. அஞ்சல் அலு வலகத்திற்கு எவ்வளவு கடமைப் பட்டிருக் கிறோம் என்பதைப் பாருங்கள். பொதுமக்

களோ எப்பொழுதுமே புகார் செய்து கொண்டே இருக்கிறார்கள்...''

''மேலும் நாம் அறிந்தது போல மனித இனத்தையும் காப்பாற்றி இருக்கிறது.''

''படிப்பதற்குரிய தரமான கதை இது!''

''ரோன், நீ எப்பொழுதுமே முட்டாள்தன மானவற்றை உனது தலைக்குள்ளாகத் திணித் துக் கொண்டிருக்கிறாய். ஒரு போனஸ் பெறுவதற்கு நாம் ஓர் உண்மையான வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம். நீயோ இங்கு கேலிக்குரிய கதைகளைத் திரும்பவும் சொல்லி சுழற்றிக் கொண்டிருக்கிறாய்.''

''ஒரு போனஸா?'' தனது காதுகளை முனைப்பாக்கியபடி ரோன் கேட்டான்.

அன்று காலையிலே வந்து சேர்ந்திருந்த விஷேடமான அறிவுரையை விளக்குகின்றதாள் ஒன்றைதான் அவனிடம் அளித்தான்.

மேலும் ஏதாவது நடைமுறையிலான கேலி இருக்கப் போகிறது என்று ரோன் அதைத் தவறாகக் கருதினான்.

''ஆக, ஊதாப்பூ மூளைக் கோளாறு இந்த அளவுக்கு வந்திருக்கிறது,'' என்றான் டான்.

இப்பொழுது இது கேலி போலத் தோன்ற வில்லை. வலது பக்க மூலையில் ரகசியம் என முத்திரை குத்தப்பட்டு இருந்தது. தபால் களைப் பிரிக்கும் எல்லா அதிகாரிகளுமே எல்லாக் கடிதங்களையும் பொட்டலங்களையும் பார்த்து அவைகளில் ஊதாப்பூ இருக்கின்

றதா என்பதைச் சோதித்துப்பார்க்கும்படி அறிவுறுத்தப் பட்டிருந்தார்கள்.

ரோன் அறிவுரைத் தாளைப் பிடித்தபடி கையை தனது தொடைமீது வைத்தான். "இந்த ஊதாப்பூ இருப்பதை நாம் எங்ஙனம் கண்டு கொள்ளவதாகக் கருதுகிறார்கள்? ஒவ்வொரு கடிதத்தையும் பிரிப்பதா — இந்த வேலைக்கு முடிவே இல்லாமல் போய்விடும். பிறகு கடிதத் தொடர்பின் ரகசியம் என்ன வாவது?" தனது நெற்றியைச் சொறிந்தபடி வியப்போடு ரோன் வினவினான்.

"எஞ்சியதையும் படி," என்றான் டான்.

எஞ்சிய அறிவுரைகளை ரோன் வாசித்தான். "இது மிகத் தெளிவாக இருக்கிறது. முட்டைகளை நகரத்திற்கு அனுப்புவதற்கு முன்பு விவசாயிகள் அவற்றைச் சோதித்துப் பார்ப்பது போல நாமும் கடிதங்களை நல்ல வெளிச்சத்தில் பார்க்க வேண்டியிருக்கும்."

"மேலும் இது ஒவ்வொரு கடிதத்திற்கும் பொருந்தும்."

"பரவாயில்லை. ஆனால் ஒரு பூவை நீ கண்டுபிடித்தால் ஒரு போனஸ் காத்திருக்கிறது என்பதைச் சற்று நினைத்துப்பார். தபால் வந்திருக்கும் என நான் நம்புகிறேன். ஆகவே நான் இப்பொழுது எனது சொந்தத் தனியறைக்குத் திரும்பச் சென்றாக வேண்டும்," திரும்பவும் வேலைக்குச் செல்கின்ற துரித கதியில் ரோன் அடுக்கிக்கொண்டே போனான்.

அந்நாளைத் தொடர்ந்து தபால் அலுவலக

தொழிலாளர்கட்கு வழக்கத்தை விட அதிகமான வேலை இருந்தது. எனினும், தங்களுடைய கடிதங்களில் ஊதாப்பூவை அனுப்பி வைக்கும் நபரைக் கண்டுபிடிப்பதற்கு அது வழி செய்யவில்லை.

ரோனின் புதிய பணிகள் முற்றிலும் வழமையானது போலாகிவிட்டது. ஓர் எந்திரத்தின் துளை விளிம்பில் அவன் கடிதங்களைச் சொருகி அவைகளை ஒரு திரையில் பார்ப்பான்.

திடீரென்று கிளர்ச்சியூட்டக் கூடிய எதிர்பார்ப்பில் அவனது இதயம் ஒரு முறை துடிக்கத் தவறியது: மூடப்பட்ட ஒரு கடிதத்தின் பின்னணியில் ஓர் இருண்ட திட்டுப் போலத் தென்பட்டது. அதில் இருந்ததெல்லாம் — காம்பும் பூவிதழ்களும்: அது ஒரு பூவாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. அது ஓர் ஊதாப்பூவா? அது அப்படி இல்லாவிட்டால்? கனத்த உறையை எச்சரிக்கையோடு தொட்டபடி கண நேரம் அவன் சிந்தித்தான். போனஸ் குறித்து நம்பிக்கை இழப்பது பரிதாபத்திற்குரியது. பிறகு ரோனுக்கு ஓர் அருமையான திட்டம் உதயமாயிற்று. ஒருசில நொடிகளுக்குப் பிறகு அவன் டானுடைய தனியறைக்கு வந்தான். ஒரு கையை முதுகுப் பக்கம் வைத்துக்கொண்டு கதவருகில் நின்றான். மற்ற பிற கடிதப் பிரிப்பாளர்களைப் போல டானும் அதே வேலையைச் செய்தான் —

கடித உறைகளைச் சோதித்துக் கொண்டிருந் தான்.

''நல்லது, உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்?'' தலையை நிமிர்த்தியபடி டான் வினவினான். ''ஓடற்ற நத்தைகளின் ஒரு புதிய சாதனை பற்றி என்னிடம் கூறுவதற்காக நீ வந்திருக்கிறாயா? அதெல்லாம் இப்போது எனக்கு நேரமில்லை.''

தொலைவில் நின்றபடியே தனது கையிலி ருந்த கடிதத்தைத் தனது நண்பனிடம் அலைத்துக் காட்டியபடி, ''முழுமையான உள் ளடக்கத்தைக் கொண்ட ஒரு கடிதம் நான் பெற்றிருக்கிறேன்,'' என்றான் ரோன்.

''ஓர் ஊதாப்பூவா?''

''அப்படித்தான் நான் நம்புகிறேன்.''

தனது கையை நீட்டியபடி, ''நாம் அதைப் பார்க்கலாம்,'' என்றான் டான்.

''இவ்வளவு அவசரம் காட்ட வேண்டாம். இது எனது கண்டுபிடிப்பு.''

''பிறகு ஏன் நீ இங்கே வந்தாய்?''

''அதை வாங்க,'' என்றான் ரோன்.

அவனுக்கு உடனடியாக என்ன தேவைப் படுகிறது என்பதை டான் புரிந்துகொண் டான். பிறகு அதில் அனுப்பியவனது பெய ரும் முகவரியும் இருக்கிறதா என்று விசாரித் தான்.

''ஒன்று இருக்கிறது,'' பதிலளித்தான் ரோன்.

''பெரும்பாலும் பொய்யான ஒன்றாகத் தான்...''

''இருக்கலாம். நீ வாங்கப் போவது அனுப்பியவனது முகவரியை அல்ல, ஆனால் பூவைத்தான்,'' தருக்கத்திறமையோடு ரோன் சுட்டிக்காட்டினான்.

இயற்கையாகவே சாதனைபுரியத்தக்க டான், ''நல்லது. இதற்கு நீ எவ்வளவு விரும்புகிறாய்?'' என்றான்.

''போனஸில் பாதி.''

''ஒரு கால் பங்கு,'' எதிர்த்துச் சொன்னான் டான்.

இறுதியாக அவர்கள் மூன்றாவதாக ஒன்றுக்கு ஒத்துக்கொண்டார்கள். இந்தப் பேரத்தில் இருவருமே மகிழ்ச்சியடைந்தார்கள். ரோன் எந்தக் கவலையும் கொண்டிருக்கவில்லை, கையில் உள்ள ஒரு பறவையை விட மரத்திலுள்ள இரு பறவைகளை அவன் குறைவாக விரும்பினான்...

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தார்கள். மூன்றாவது கடிதத்தினுடைய வாசகம் பரிசீலனை செய்து கொள்ளப்பட்டிருந்த அதே வேளையில், போலீஸ் முகவர்கள் கடித உறையில் எழுதப்பட்டிருந்த இரு முகவரிகளுக்கும் அனுப்பப்பட்டார்கள்.

இம்முறை மிகுந்த எச்சரிக்கையோடு தபால் குவியல்களிலிருந்து ரோன் தனியாகப் பிரித்து எடுத்திருந்த கடிதத்தில் ஊதாப்பூ நிச்சயமாக இருக்கக் கூடும் என்பது தற்செயலாக நிகழ்ந்தது. முறைப்படி போனஸ்

டானுக்கு வழங்கப்பட்ட போது ஒரு சரியான முட்டாள் என்று அவன் நினைத்தான்!

* * *

கடிதம் ''எல்லாருக்கும் எல்லாம்'' என்ற விற்பனைக்களத்தின் முகவரிக்கு லிண்டா லானுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அனுப்பியவரின் பெயரும் முகவரியும் வருமாறு: அமாந்த் சாடோ, நான்காவது தொடுவானம், தெரு 10, ஊசி இல்லம். தளத்தின் எண் கூட குறிக்கப் பட்டிருந்தது. முன்னூறு கட்டிடத்தள அடுக்கு களைக் கொண்ட இந்த வீடு, வெஸ்டர்ன் கம்பெனி ஊழியர்களால் மட்டுமே குடியிருப் பிடமாகக் கொள்ளப் பட்டிருந்தது என்பது சாதாரண பொது அறிவுக்குட்பட்டதாக இருந் தது.

சிறிய குறிப்பின் வாசகத்தை ஆர்னோ காம்ப் திரும்பத் திரும்பப் படித்தான். காம்ப்பே தனது வாலிபப் பருவத்தில் எழுதியது போன்ற ஒரு சாதாரண காதற் கடிதமாக அது இருந்தது. அரைப் பக்கத்தை எடுத்துக்கொண்ட பாலினை விழைவு உறுதி மொழிகளுக்குப் பிறகு, இன்னமும் அறியாத அமாந்த், 'தனது வாழ்வின் ஒளிக்கும்,' 'காதல் ஒளி வீசும் கனவிற்கும்,' தனது 'செம்பொன்னிற நட்சத்திரத்திற்கும்' வரும் வெள்ளிக்கிழமை மாலை எட்டு மணிக்கு 'பழைய இடத்தில்' அவர்கள் சந்திக்க

வேண்டும் என ஆலோசனை கூறியிருந்தான்.

ஆனால், ஒருவேளை இந்தக் காதலர்களின் பிதற்றல் சொற்புரட்டான மறைகுறியீடாக இருக்கலாமோ? ஒரு நகல் எடுத்துக்கொள் ளப்பட்ட பிறகு கடிதம் உறையில் மறுபடியும் வைக்கப்பட்டுத் திரும்பவும் முத்திரையிடப் பட்டு முகவரியாளர்க்கு அனுப்பப்பட்டதா என்பது கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

''லின்டா லானும் அமாந்த் சாடோவும் ரகசிய இயக்கத்தின் உறுப்பினர்களின் பங்காளி களாக இருந்துவிட்டால்?'' ஆர்னோ காம்ப் தன்னை மறந்து சிந்தித்தான். எந்த வகை யிலும் இதில் ஏதாவது ஐயுறவு இருக்கவே செய்தது. ஏனெனில் அந்தக் கடிதம் மற்றும் ஒரு விநோதமான ஊதாப்பூவைக் கொண்ட தாக இருந்தது.

''எல்லாருக்கும் எல்லாம்,'' ஒரு முழுமை யான கட்டிடத் தொகுதிகள் முழுக்க இருந்தது. சிற்றுருவாக்கப்பட்ட மறுபடிவ ஊர் போல அது இருந்தது. அங்கு ஒருவர் தனது வழியைத் தவற விடுவது சுலபமானதாக இருந்தது. நிர்வாணமாக உள்ளே நுழைந்தால் திரும்பவரும் போது வாடிக்கையாளர் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடையணிந்து வர முடியும் எனப் பெருமையுடன் கூறிக் கொள்ளும் விளம்பரங்களைக் கொண்ட சுவ ரணைச் சட்டங்களும், உள்ளாக ஒவ்வொரு குறுக்கீட்டுச் சந்திப்பிலும் இதை விளக்கும் மின்னுகின்ற நியான் விளக்குகளும் இருந் தன.

விண்வெளிப் பயணத்திற்கான பிரிவில் லின்டா லான் பணியாற்றினாள். எடையின்மைக்குப் பொருத்தமான கருவிகலத் தொகுதிகளையும், காந்தம் நிலைப்படுத்தும் அமைப்புப் பொருத்தப்பட்ட காலணிகளையும், மற்ற கோளங்களில் வேட்டையாடுவதற்குத் தானே குறிபார்க்கின்ற துப்பாக்கிகளையும், புறவெளியில் மகிழ்ச்சி தருவதற்கான இன்ன பிற துணைக்கருவிகளையும் வாங்குவதற்காகப் பணக்காரப் பயணிகள் இங்கு செல்வார்கள்.

ஒருவகையில் சலிப்பூட்டுகின்ற வாடிக்கையாளியைத் தள்ளிவிடுவதில் லின்டா ஒருவாறு சமாளித்து முடித்த போது தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். ஏற்கெனவே மணி ஏழே காலைத் தாண்டியிருந்தது. லின்டாவைப் போல சுணங்கிவிட்ட மற்ற உதவியாளர்கள், நகரும் படிக்கட்டுகளை நோக்கி விரைந்தார்கள். கிளர்ச்சியுற்றவர்களாகத் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டு வெளியே நழுவிச் சென்றார்கள். எலெட்ரானிக் இரவுக் காவலர்கள் — நெகிழக்கூடிய பற்றிழைகளின் மேல் வண்டி போன்ற வடிவமைந்த கருவிகள் — ஏற்கெனவே பல்வேறு பிரிவுகளில் செயல்படத் தொடங்கியிருந்தன.

கண்ணாடிகளுக்கு ஒன்றின் முன்னால் லின்டா சுணங்கியபடி நின்று தனது தலைமயிரை நன்கு சரிசெய்து கொண்டாள். தலைமுடி நரைக்கத் தொடங்கிய உடனேயே அவள் சாயம் பூச ஆரம்பித்தாள். அவளுக்

காக மண உறுதிசெய்யப்பட்டவனாகிய அர்பன் இறந்த போது, ஓராண்டுக்கு முன்னதாக இது நிகழ்ந்தது. பிரபலமான விஞ்ஞானி நியூமோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சோதனைகளோடு சம்பந்தப்பட்டிருந்த ஒரு கேடார்ந்த விவகாரம் அது. தான் சாவதற்கு முன்னால் தனது சகாவான அமாந்தை அர்பன் அவளுக்கு அறிமுகம் செய்து விட்டிருந்தான்.

அவளது நிறுத்தத்தில் காத்துக்கொண்டிருந்த ஏரோபஸ்ஸில் அவள் விரைந்து தாவினாள். அது கிளம்புவதற்கு காற்றழுத்தத்தை ஏற்படுத்திக்கொண்டு கதவுகள் மூடத் தொடங்கியிருந்த நேரமது. அவள் பார்வையினின்றும் போய்விடக் கூடாது என்ற ஆர்வத்தில் ஓர் இளைஞன் அவளுக்குப் பின் தள்ளிக் கொண்டு சென்றான்.

உண்மையில் அவள் தாமதமாகிவிட்டாள். அமாந்த் காத்துக் கொண்டிருந்தான். நீரூற்றுக்குப் பக்கத்தில் அவன் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தான். அவ்வப்பொழுது தனது கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

சந்திப்பின் போது சில குறிப்புக்களை இருவரும் பரிமாறிக்கொண்டார்கள். அதன் பிறகு அமாந்த் லிண்டாவின் கையைப் பற்றிக்கொண்டான். சதுக்கத்தை நோக்கி இருவரும் மெதுவாக நடந்தார்கள். அவர்கள் நீண்ட நேரம் பேசினார்கள். ஒவ்வொரு வார்த்தையும், தெருவில் இவர்களுக்கு அருகே

நடந்துபோய்க் கொண்டிருந்த ஆட்களால் எடுத்துச் செல்லப்பட்ட கையடக்க ஒலிப் பதிவு நாடாக் கருவிகளில் கவனமாகப் பதிவு செய்யப்பட்டன.

இந்தத் துப்பறியும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்தவன், ஏதோ ஒரு கோளாறு நடந்து கொண்டிருக்கிறது என்பதை எப்போதோ உணர்ந்துகொண்டான். ஆனால் லாவையும், சாடோவையும் கைது செய்யும்படி அவன் அறிவுறுத்தப்பட்டிருந்தான். இயல்பாக, ஆர்னோ காம்பின் உத்தரவுகளுக்கு எதிராக அவன் செல்ல முடியாது. இதன் காரணமாகத்தான் அமாந்த் லிண்டாவை வீட்டுக்கு கொண்டு சென்று, முற்றத்தில் அவர்கள் பிரியும் முகத்தான் முத்தமிட்டுக் கொண்டிருந்த போது, பழைய மாதிரி செங்கல் கட்டிடத்தால் ஏற்பட்டிருந்த நிழலிலிருந்து வெளிவந்த ஒரு மனிதன் தாழ்ந்த குரலில் பேசினான்: ''நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள்.''

போலீஸ் நடவடிக்கையின் குளறுபடியானது எப்படியோ வெளியே தெரிந்துவிட்டது. பத்திரிகைகள் தங்களது பக்கங்கள் முழுக்க ஊதாப்பூக் கதையை வெளியிடத் தொடங்கி விட்டன. தனது உணர்வுகளை மிகைப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக ஓர் ஊதாப்பூவை சாதாரண காதற் கடிதத்துடன் இணைத்து அனுப்பிய ஆர்வமிக்க காதலன் பற்றிய செய்தியில் நிருபர்கள் அளவுக்கு மீறி ஆர்வங்காட்டினர். பயனளிக்காது போன போலீஸ் நடவடிக்கையின் எல்லா விவரங்

களும் விமர்சிக்கப்பட்டன. உண்மையான தகவலில் ஏதாவது இடைவெளி ஏற்படுமானால் அது அனுமானங்களாலும், ஊகங்களாலும் நிரப்பப்பட்டது.

தவறான நடவடிக்கையை அடுத்து போலீஸ் தலைமையிடத்தின் குழப்பம் அநேக விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. எல்லாவற்றுக்கும் முதலாக, தபால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுரைகள் நீக்கப்பட்டன. வழக்கம் போல இதே நேரத்தில் மற்ற திசையில் விஷயங்கள் வெகு தொலைவுக்குப் போய்விட்டன. டான் சம்பளத்திலிருந்து போனஸ் கழிக்கப்பட்டது. அதன் பிறகு எப்பொழுதுமே எச்சரிக்கையோடு இருக்கக் கூடிய ரோான் அவனைத் தவிர்க்கத் தொடங்கினான்.

அற்பமான பூ அச்சுறுத்தக் கூடிய ஒரு சின்னமாக மாறிவிட்டது. நாடு முழுக்க இல்லாவிட்டாலுங்கூட போலீஸ் தலைமை அதிகாரி ஆர்னோ காம்பிற்காவது குறைந்தது இருந்தது. ஒரு மூன்றாவது நபர் மூலமாக ஜனாதிபதி தனது மகிழ்ச்சியின்மையை அவனுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

வெகு சீக்கிரத்திலேயே தங்களது சொந்த முயற்சியின் பேரில் மருந்துக் கடைக்காரர்கள் தங்களது நச்சுப் போத்தல்களின் முகப்புவரிச் சீட்டுக்களின் மீது பரம்பரையாகப் போடும் மண்டையோட்டிற்கும், குறுக்கிட்டு நிற்கும் எலும்புகளுக்கும் பதிலாக ஊதாப்பூவைப் போடத் தொடங்கினர். மேலும் தன்னை

ஏமாற்றிய காதலனைக் குற்றங் கூறி, ஓர் ஊதாப்பூவுடன் கூடிய கடிதத்தை முதலில் அனுப்பிவிட்டு தன்னை அவன் கொன்று விடட்டும் எனக் கோரிய ஒரு பெண்ணைப் பற்றிய பாடல் பிரபலமானது.

மிகத் தெளிவாகவே, ஆர்னோ காம்ப் ஆரம்பத்தில் தான் வெறுமனே ஒரு சாதாரணமான, எனினும் மிகத் திறமையாகத் திட்டமிடப்பட்ட ஒரு மோசடி வழக்கிற்கு எதிராகச் செயல்படுவதாக நினைத்திருந்தான். கடிதம் எழுதியவனைக் கண்டுபிடிப்பதற்கான அவனது வேட்டை விரைவிலேயே எந்த உண்மையான நோக்கம் இல்லாது போயிற்று. பொதுவாக நல்ல பயனைத் தரக் கூடிய போலீசின் விதிமுறைகள், இப்பொழுது அவனை அச்சுறுத்தக் கூடிய அளவுக்கு வீணே இழுத்துச் சென்றன.

ஏப்ரல் மாதக் கடைசியில் ஜனாதிபதியைப் பார்க்க வரும்படி போலீஸ் தலைமை அதிகாரி அழைக்கப்பட்டிருந்தான்.

ஜனாதிபதி மாளிகைக்குப் பறந்து சென்று, பிறகு முடிவில்லாத தொடர்ச்சியான சோதனைகளைக் கடந்துசெல்லும் போது, எதைப் பற்றித்தான் அறிவிக்கப் போகிறான் என்பது குறித்து, தனது எண்ணங்களை ஒழுங்காகவும் ஒருமுகப்படுத்தவும் ஆர்னோ காம்ப் முயன்றான். ஊதாப்பூ வேட்டை எங்குமே நடைபெறவில்லை. இவனது துறையைச் சார்ந்த ஆட்களில் அநேகம் பேர் எந்த முடிவுமின்றி நேரத்தை வீணாக்கிக்

கொண்டிருந்தார்கள். இனந்தெரியாத மோசடிக் காரனால் கேட்கப்பட்ட வழக்கத்திற்கு மாறான இயல்பைக் கொண்ட கோரிக்கைகள் இவனைத் தொடர்ந்து திகைப்படையச் செய்தன. போலீசில் அதிகமான ஆண்டுகள் தான் பணியாற்றியதில், மனித இனத்தின் முகப்புகழ்ச் சிக்கு அப்பாற்பட்டு சாதாரண மக்களின் நடவடிக்கைகளும், குற்றவாளிகளின் சிந்தனைக் குப் பின்னாலுள்ள குயுக்தியும் — இவை சொல் லப்படும் போதும், செய்யப்படும் போதும் மனித இனத்தில் எந்த உறுப்பினரையும் ஓர் உள்ளார்ந்த குற்றவாளியாக ஆர்னோ காம்ப் பார்த்தான் — அவை அடிப்படையில் எளிமையானவை, மேலும் ஏதோ ஒருசில லாப நோக்கங் கொண்டவை என்பதைப் பொதுவாக விளக்கிவிடக் கூடும்: ஒன்று மிகப் பெரிய அளவிலான தொகையை அடையும் வாய்ப்பைப் பெறுவது, அல்லது பதவி உயர்வைப் பெறுவது, அல்லது இதே போன்ற முனைப்பானதும் தெளிவானதுமான ஆசைகளைக் கொண்டிருந்தல் என்ற முடிவுக்கு வருவதை ஆர்னோ காம்ப் வழக்கமாகக் கொண்டிருந்தான்.

இந்த ஊதாப்பூ வழக்கில், ஆயினும், இந்த ஆண்டுகளில் ஆர்னோ காம்ப் கண்டு பிடித்திருந்த குற்றப் புலனாய்வுக்கான எல்லாத் திட்ட அளவு முறைகளும் பயனற்றவை என நிரூபிக்கப்பட்டுவிட்டன.

முதலாவதாக, இனந் தெரியாத குற்றவாளி

(அல்லது குற்றவாளிகள்) தங்களுடைய மிகப் பெரிய அளவிலான மோசடியிலிருந்து பெறு வதற்காக நம்பிய அனுகூலத்தை காம்ப் அறிய முடியாதவனாக இருந்தான். பணம்? இருக்க முடியாது, ஏனெனில் ஹ்யூகோ லென்ஸோ, 'ஊதாப்பூவிற்குப் பலியான' வேறு எவருமோ பணம் கொடுக்க வேண்டு மென்று அனாமதேயக் கடிதங்களில் கேட் கப்படவில்லை. பதவி உயர்வா? டாக்டர் லென்ஸின் உதவியாளன் தனது இப்போதைய தலைவரது இடத்தைப் பெற வேண்டும் என்ற கனவை நெஞ்சார விரும்பி அந்த முடிவில் இந்தக் கடிதத்தை அனுப்பியிருப்பான் என்ற ஆர்தர் பார்க்கின் கருத்தை ஒரு சமயத்தில் ஆர்னோ காம்ப் உண்மையில் ஆதரிக்கவே செய்தான். மற்ற கடிதங்களைப் பொருத்தமட்டில், பார்க் கூறுவது போல, அவை ஏமாற்றுக் கருவிகளாகப் பயன்பட்டன.

ஆயினும், துரதிரஷ்டவசமாக ஆர்தர் பார்க்கினுடைய கூற்று தவறென்று நிரூபண மாயிற்று. முற்றிலும் முழுமையான புலனாய்வு டாக்டர் லென்ஸின் இளம் உதவியாளன் மீது குற்றச்சாட்டுக்கான எந்தத் தடயத்தை யும் தரவில்லை.

உற்சாகமிழந்த நிலையில் ஆர்னோ காம்ப் நகரும் படிக்கட்டில் ஏறி ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றான். வெகு நாட்களுக்கு முன்பு அல்ல, ஏப்ரல் மாத ஆரம்பத்தில் ஒரு நாள் காலை டாக்டர் லென்ஸினுடைய மேசைக்கு வந்து சேர்ந்திருந்த அவப்பேறான

ஊதாப்பூவின் மீது அவனது சிந்தனை திரும்பத்தொடங்கி இருந்தது.

பணமும் பதவி உயர்வும் சரியானதாகத் தோன்றாதிருக்கும் நிலையில் ஒருவேளை அது ஒரு பெண் குறித்ததாக இருக்கலாமோ? ஒருவேளை லென்ஸுக்கு வந்த கடிதத்தின் பின்னணியாக அதிர்ஷ்டமற்ற ஓர் எதிரியின் பொறாமைதான் காரணமாக இருந்திருக்குமா? ஆயினும், துலங்கிப் பார்த்ததில் இந்த அணுகுமுறை கூட எங்கும் கொண்டுபோய்ச் சேர்க்கவில்லை என்பதைக் காட்டியது. ஹ்யூகோ லென்ஸ் தனது மனைவியை நேசித்தான், அவளிடம் நம்பிக்கையோடும் இருந்தான். அவன் எந்த ஒரு காமக்கிழத்தியையும் கொண்டிருக்கவில்லை என்பதோடு, அதுபற்றிப் பார்ப்பதற்கான எந்தச் செய்திகளும் இல்லை. புகழ்பெற்ற பௌதிகவியலாளனது இளம் பெண் ஆர்வலர்களது பெருமகிழ்ச்சி தருகின்ற குறிப்புகளும், காதல் அறிவிப்புக்களைப் பொருத்தமட்டிலும் அவை எப்பொழுதுமே ஒரு வழிப்பட்டனவைகளாகவே இருந்தன.

எனினும், கடிதம் எழுதியவனின் நடத்தையை விளக்கக்கூடிய, எல்லாவற்றிலும் மிகவும் நேரடியான, ஒரே ஒரு நோக்கம் மட்டிலும் இன்னமும் இருந்தது. அது மிகத் தெளிவான வாக்கியத்தில் கடிதங்களில் இருந்தது: மனித இனத்தின் எதிர்காலம் பற்றியது. ஆயினும் இப்போதுங்கூட ஆர்னோ காம்ப் பொது நலப்பண்பை தீவிர ஆலோசனைக் குரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. மனித

இனத்தின் விதி: அது கூராய்வினைக் கொண்டதாக இருக்கவில்லை. மிகவும் தீவிர மாகத் தோன்றிய மன உணர்வுகளின் மேற் பரப்பைக் கீறிப்பார்த்தால் உள்ளே சுயநல மிக்க ஆர்வந்தான் இருக்க வேண்டும். ஆனால் அடிப்பரப்பை யாரும் கீறிப்பார்ப்பதாகத் தோன்றவில்லை...

சோர்வுற்ற மனநிலையில் ஜனாதிபதி போலீஸ் அதிகாரியை வாழ்த்தினார். தனது இருக்கையிலிருந்து அவர் எழுந்திருக்கவில்லை. வெறுமனே தலையசைத்து காம்பிற்கு வாழ்த் துக் கூறிய போது ஏதோ சில காகிதங்களைப் பார்ப்பதைத் தொடர்ந்தார்.

தொடர்ந்து ஏற்பட்ட இடைவெளியில், பழுப்பு நிறச் சீருடை அணிந்த இந்தச் சிறிய கிழவர் எவ்வளவுதான் பயனற்றவராகத் தோன்றினாலும், அளவுக்கதிகமான அதிகாரம் அவரது கைகளில் குவிந்திருந்தது, ஆர்னோ காம்பாகிய தன்னை நொடிப்பொழுதில் அவரால் காலிசெய்ய முடியும் என காம்ப் தனக்குத்தானே நினைத்துக்கொண்டான்...

''எனதன்புக்குரிய காம்ப், ஏன் இன்னமும் நின்று கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள்,'' கடைசியாக தனது காகிதங்களிலிருந்து பார் வையைத் திருப்பிய ஜனாதிபதியிடமிருந்து குளிர்ச்சியான வரவேற்பு வந்தது. ''என்ன செய்தி?''

''நாங்கள் மேற்கொண்ட முற்றான...'' காம்ப் தொடங்கினான்.

''நான் என்ன தெரிந்துகொள்ள விரும்

புகிறேன் என்றால்: ஹ்யூகோ லென்ஸுக்கு யார் அந்தக் கடிதத்தை அனுப்பியது?'' என இடைமறித்தார் ஜனாதிபதி.

''கடிதம் எழுதியவன் இன்னமும் கண்டு பிடிக்கப்பட முடியவில்லை.''

''நாம் மனநிறைவு பெறவில்லை, காம்ப். உங்கள் துறை குடியரசிற்கு ஏராளமான செலவை ஏற்படுத்துகிறது. ஆகவே அது ஓரளவு பயனையாவது தர வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். ஒருவேளை உங்களது இப்போதைய பதவியில் நீங்கள் போதுமான தகுதியைப் பெற்றிருக்கவில்லையா?'' ஜனாதிபதி தொடர்ந்தார். காம்பின் முகம் கீழே கவிழ்ந்தது. ''நாட்டின் முன்னணி பௌதிகவியலாளனை அச்சுறுத்தக் கூடிய நிலைகுலைவிக்கும் பாங்கான சக்திகள் முனைப்புக் கொண்டிருக்கின்றன என்பதற்கு முற்றிலும் மாறாக, இன்னும் அதிகப் பயணம் வைக்க வேண்டி இருக்கிறது. ஹ்யூகோ லென்ஸ் ஒருவிதக் குறியீடாகக் கருதப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். கடந்த வாரத்தில் ஊதாப்பூக்களைக் கொண்ட எத்தனை கடிதங்கள் பதிவு செய்யப்பட்டன?''

''எண்பத்தி நான்கு.''

''யாருக்கு அவை முகவரியிடப்பட்டிருந்தன?'' பிறகு ஜனாதிபதி குறுகிய நேரடியான வினாக்களுக்கு முழுமையாக வந்துவிட்டார். முன்னமேயே அவைகளைத் தயாரித்து மனப்பாடம் செய்தது போல இருந்தது. முழுதுமே

நன்கு செய்து பார்க்கப்பட்ட நாடகத்தின் சாயல் போல இருப்பதாக ஆர்னோ காம்பின் நினைவுக்கு வந்தது. ஆனால் யார் இயக்கிக் கொண்டிருப்பது?

''இதோ இருக்கிறது பட்டியல்...'' தனது கைப்பெட்டியைத் திறப்பதற்கு காம்ப் விரைந் தான். ஆனால் பொறுமையிழந்த ஒரு சைகை மூலம் ஜனாதிபதி அவனை நிறுத்தினார்.

''காகிதங்களை நாம் பிறகு பார்க்கலாம். அந்தப் பட்டியலில் எந்தமாதிரியான ஆட்கள் முக்கியமாக இருக்கிறார்கள்?''

''விஞ்ஞானிகள், பௌதிகவியலாளர்கள்.''

''அதாவது, பௌதிகவியலாளர்கள்!'' என்று ஜனாதிபதி கோபத்தில் இடைமறித்தார்.

''சில நேரங்களில் நம்மை திசை திருப்பு வதற்காக மோசடிக்காரர்கள்... அல்லது, ஒருவேளை தற்செயலாக ஒருங்கு நிகழ்ந்திருக் கலாம்...''

''என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடிகிறதா?'' இதற்குள்ளாக ஜனாதிபதி தானே உரக்கக் கத்தினார். ''அணுவாராய்ச்சி மையமானது மிகப் பெரிய கண்டுபிடிப்பின் விளிம்பிலே இருக்கிறது. அதனுடைய பணிக்கு இடையூறே ஏற்பட்டுவிடக் கூடாது. இதனால் வெஸ்டர்ன் கம்பெனி நிலைபெயர்ந்து விடும்...'' திடீர் வெளிப்பாட்டிற்குப் பிறகு ஜனாதிபதி இருமத் தொடங்கினார். தனது கைக்குட்டையால் துடைத்துக்கொண்டார்.

''ஆக, எங்கிருந்து கட்டளை வந்துகொண்

டிருக்கிறது என்பது இதுதானா! வெஸ்டர்ன் கம்பெனி நிலைபெயர்ந்து விடும், அப்படியா?'' காம்ப் தனக்குத்தானே குறித்துக்கொண்டான். போலீஸ் தலைமை அதிகாரி ஓரளவுக்கு அறிவான், ஆனால் எல்லாமே தெரியாது. ஆரம்பத்தில், குவார்க்குகள் பிளத்தல் தொடர்பான மிக முக்கிய தகவல் அதிசயமான முறையிலே ஊடுருவ முடியாத அணுவாராய்ச்சி மையத்தின் சுவர்களின் வழியாக வெஸ்டர்ன் கம்பெனியின் கைகளில் போய்ச்சேர்ந்திருக்கிறது என்பது அவனுக்குத் தெரியாது.

ஆயுதத் தொழிற்சாலை எப்பொழுதுமே விஞ்ஞானிகளின் சாதனைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தது. அதி முக்கியத்துவ மற்ற ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட உடனேயே, ஆயுத உற்பத்தியாளர்களின் எங்கும் நிறைந்திருக்கின்ற பற்றிழைகளானது அத்திசையை நோக்கி நீளத் தொடங்கும். புதிய வகையான ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் ஏற்படும் கணிசமான செலவுகள், கூடுதலாக ஒரு நூறு மடங்கை அவர்களுக்குப் பெற்றுத்தரும் என்பதை அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். குடியரசானது ஆற்றல் இழக்கச் செய்கின்ற ஒரு நீண்ட போரை மேற்கொண்டிருந்தது. அரசாங்கக் கோப்புகளில் 'சிறியது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், சிறிய அளவுக்கு அப்பாற்பட்டுப் பெரும் மூலதனத்தை அது விழுங்கிக் கொண்டிருந்தது.

கடைசியாகக் கேட்ட இதன் படி, தங்களது உரையாடலின் போது வெஸ்டர்ன் கம்பெ

ணியை ஜனாதிபதி குறிப்பிட்டு இருந்திருப் பதால், விஷயங்கள் தனக்குக் கறையை ஏற்படுத்துவதாகப் பொருள்படும் என்பதை எந்தவகையிலும் புத்திசாதுரியம் குறைவில்லாத ஆர்னோ காம்ப் உணர்ந்து கொண்டான். எப்பொழுது ஆட்கள் வெளியே வருவார்கள்? அப்பொழுது அவர்கள் எல்லாத் துருப்புச் சீட்டுகளையும் தங்களது கைகளில் வைத்துக் கொள்வார்கள். இந்த விவகாரம் எவ்வள வோ விரைவாகவும் உறுதியாகவும் முடிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது மட்டும் நிச்சய மாகத் தெரிந்தது.

* * *

பூமியின் மேற்பரப்பில் பெரும் பகுதியைச் சூழ்ந்திருக்கும் கடல்கள் மற்றும் பெருங் கடல்கள் இவற்றின் இயற்கை வளங்களுக் காக உழைத்த போது மனித இனத்திற்குச் சொல்ல முடியாத அனுகூலங்களைத் தந்திருக் கிறது. மிதவியம் மற்றும் திமிங்கிலத்திற்குப் புகலிடமான கடல் உண்மையிலேயே வற்றாத நீர்த் தேக்கமாக இருந்தது. மனிதனுக்கு அத் தியாவசியமாக இருந்த அநேக வேதியல் தனி மங்கள் கடல் நீரில் தான் கண்டுபிடிக்கப்பட முடியும் — சில நேரங்களில் அவை அதிகமாகவும் சில நேரங்களில் குறைவாகவும்.

படிப்படியாக, நீருக்கடியிலான நிலையான மையங்கள் கடல் வளத்தை அறுவடை செய்வதற்காகக் கடலுக்கடியிலே அமைக்கப்

படலாயின. ஆயினும், ஒப்பிட்டுப் பார்க்கையில் இத்தகைய மையங்கள் ஆழமில்லாத நீர்நிலைகளில் கூட அமைக்கப்பட்டிருந்தன: பெரும் ஆழத்தில் மனிதன் வாழவும் வேலை செய்யவும் தொடங்குவதற்கு மிக நீண்ட காலத்திற்கு அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

பூமியின் மேலடுக்கின் அமைப்பையும், கோளத்தின் உட்பகுதியையும் ஆராய்ச்சி செய்வதற்காகவும், புதிய தாதுவளங்களை அடைவதற்கான முயற்சியில் ஈடுபடவும் ஆழமாகத் துளையிடத் தொடங்குவதற்கான யோசனை முன்நின்ற போது கடற்படுகையானது விஞ்ஞானிகளுக்கு ஆர்வமூட்டக் கூடிய ஒரு விஷயமாக மாறியது.

இடைவழியில் மிகுதியான அளவுக்கு பாறை இருக்குமாதலால் கடற்படுகையில் துளையிடுவதென முடிவு செய்யப்பட்டது. இச் செயல்முறைக்குத் தெரிவு செய்து கொள்வதற்கான ஏராளமான திட்டங்களை ஈவ் சாயிச் கொண்டிருந்தான். எனினும், அவை எல்லாமே கடற்கரையிலிருந்து வெகு தூரம் தள்ளி உள்ள இடங்களில் தொடங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டன. அவை திட்டத்திற்குப் பெரும் செலவையும் ஏற்படுத்தும். ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது சாயிச் குறிப்பிட்ட ஓர் இடம் பொருத்தமானதாக இருந்தது எனக் கருதினான் — அட்லாண்டிக் கடற்கரையை ஒட்டிய நீள்வரிப் பள்ளம். ஆயினும் மீன்பிடிக்கும் இனத்தினர் கடற்கரை அருகே இருந்தார்கள்.

தனது முடிவை நிரூபிக்கவும், தனது சொந்த வழியை அமைத்துக் கொள்ளவும் சாயிச் அதிகமானவற்றைச் செய்ய வேண்டி யிருந்தது. துளையிடுவது மீன்பிடி இனத்தின் உறுப்பினர்களுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத் தவில்லை என்பதை ஜனாதிபதிக்குத் தெரிவிப் பதில் அவன் எப்படியோ வெற்றியடைந்தான்.

''துரப்பணப் பணியின் போது நானே அங்கு முன்னணியில் தொடர்ச்சியாக இருப் பேன்,'' என்று சாயிச் அறிவித்தான். அவனது திட்டத்திற்கு சாதகமான வலுவுள்ள விவாத மாக இந்த வார்த்தைகள் அவனுக்குப் பயன் பட்டன.

பள்ளத்தின் அடிப்புறத்தில் ஒரு முழுமை யான நீருக்குள்ளான நகரத்தை ஒப்பந்தக் காரர்கள் கட்டினார்கள். அது அக்குவாசிட்டி என வழங்கப்பட்டது. எங்கும் நிறைந்திருக் கின்ற வெஸ்டர்ன் கம்பெனி வழங்கிய, சாயிச்சின் வரையறைகளுக்கு ஏற்ப வடிவ மைக்கப்பட்ட அணு எரியிணைப்புக் குழாயுடன் கூடிய துரப்பணக் கருவியின் பணிகளின்றி அவர்களால் உருவாக்கியிருக்க முடியாது.

அக்குவாசிட்டி பற்றிய தகவல்கள் பத் திரிகைகளில் வெளிவந்தன, ஆனால் அபூர் வமாகத்தான் இருந்தது. அவை குறுகிய காலமே வாழ்வதாக இருந்தாலும், பத்திரிகை களுக்குக் கண்ணைக் கவருகின்ற செய்திகள் தேவைப்பட்டன. முக்கியமானது என்னவெனில், குறுகிய கால வாழ்க்கையைக் கொண்டிருந்

தாலும், வண்ணத்துப் பூச்சியைப் போல மினுமினுப்பதாக இருக்க வேண்டும்.

ஹ்யூகோ லென்ஸுக்கு அடுத்தபடியாக அச்சுறுத்தல் கடிதத்தைப் பெற்றவன் என்ற முறையில் ஒரு நேரத்தில் ஈவ் சாயிச் செய்திகளில் அதிகமாக அடிபட்டான். ஆனால் நாட்கள் கடந்து, ஏப்ரல் மாதம் முடிந்த போது ஈவ் சாயிச் தலைப்புச் செய்திப் பொருளாக இருக்கவில்லை. ஏனெனில் பெருந்தன்மையான முறையில் பதினெட்டு மாதங்கள் உயிர்வாழ்வதற்கு அநுமதிக்கப்பட்டான் என்ற எண்ணம் குறிப்பாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் வஞ்சப்புகழ்ச்சியான நீதியைப் பிரசுரிக்க, கீழைய நாட்டு முனிவரான ஹாஜி நஸ்ஸூருத்தின் ஒரு குறிப்பிட்ட முல்லாவின் கழுதைக்குக் குரானைக் கற்பிக்க ஒப்புக் கொண்டதை வாசகர்களுக்கு நினைவுபடுத்துவதை ஒரு பத்திரிகை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. அந்த முல்லாவிடமிருந்து இந்தக் கடினமான பெருஞ் செயலுக்கு, இதைச் செய்யத் தனக்குப் பத்து ஆண்டுகள் தேவைப்படும் என விளக்கி, ஒரு பெருந்தொகையான பணத்தைக் கோரினார். ''அந்தக் காலத்தில் நானோ, முல்லாவோ அல்லது கழுதையோ இறந்து போவோம். என்ன நடந்தாலும், எதைப் பற்றியும் எனக்குப் பயமில்லை,'' என்று முனிவர் வாதித்தார். ''ஒருவேளை மரியாதைக்குரிய இயக்குநர் இதே முடிவுக்கு வந்துவிட்டார் போலும்?''

என்று அப்பத்திரிகை குத்தலான பாங்கோடு கேட்டது.

இதற்கிடையில் ஈவ் சாயிச் தனது புதிய மூளைக் குழந்தையான — அக்குவாசிட்டி மீது — பெரும் நம்பிக்கை கொண்டிருந்தான். இயல்பாகவே ஒரு சூதாட்டக்காரனான சாயிச், போக்கர் ஆட்டத்தைப் போலவே ஓர் ஆட்டக்காரன் தன்னுடைய அனைத்தையும் துணிவுடன் பணயமாக வைக்க வேண்டிய நேரங்கள் இருந்தன என்பது போல வாழ்க்கையிலும் இருக்கும் என்பதை அறிவான்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கடிதம் அவனை நிதானமிழக்கச் செய்துவிட்டது. ஏனெனில் சாயிச்சுடைய பணித் தன்மையை நன்கு அறிந்த ஒருவனாலே வெளிப்படையாக எழுதப்பட்டிருக்கிறது. பணி தொடங்கிய இரண்டாண்டுகளுக்குப் பிறகே துளையிடுவதில் மிக ஆபத்தான நேரம் வந்தது என்ற உண்மையைக்கூட அவன் கிளறித்தேட வேண்டி இருந்தது. அவனைத் தவிர வேறு யாருக்குமே தெரியக்கூடாது என்று நம்பப் பட்ட ரகசியமாக அது இருந்தது என்று சாயிச் நம்பினான்.

ஒருவேளை கடிதம் ஏதாவது போட்டி நிறுவனங்களால் எழுதப்பட்டதாக இருக்குமோ? அல்லது, மறுபுறம் பார்த்தால் கடற்கரையை அடுத்த கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களால் அனுப்பப்பட்டிருக்கக் கூடும். அது யாராக இருந்தாலும், கையிலுள்ள வேலைக்கும் தனக்கும் இடையே அவர்களை

நிற்க விடாது—அதை முடிப்பது என்பதில் அவன் உறுதியாக இருந்தான். பின்னர், ராட்சசக் கிணறு செயல்படத் தொடங்கும் போதுதான் அவனால் ஓய்வெடுக்க முடியும்.

தொலைதூரத்தில் சுற்றுகிற ஏதாவது ஒரு செயற்கைக்கோளை வாங்குவது மிக நன்றாக இருக்கும், ஏனெனில் எல்லாவித நெருக்கடியிலிருந்தும் ஆரவாரத்திலிருந்தும் விடுபட்டுப் போகலாம். ஒருவகையில், மிகப் பெரிதாக எல்லாவிதமான தானியங்கி வசதிகளுடனும், சொந்த ராக்கெட்டுகள் இறங்கு தளமும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

பிறகு, நிச்சயமாக அங்கே செடிகொடி வளர்க்கும் கண்ணாடி வீடு இருக்க வேண்டும். எடையின்மையில் டியூலிப்புகளை வளர்ப்பது சாயிச்சினுடைய நீண்ட காலக் கனவாக இருந்து வந்திருக்கிறது.

இப்பொழுது கூட, தன்னைச் சுற்றிலும் கடுமையான முறையிலே இயங்கிக் கொண்டிருக்கும் தானியங்கி எந்திரங்களால் ஆடிக் கொண்டிருக்கும் உலோகத் தகடு சுவர்களால் ஆன மிகச் சிறிய அறையில், நிலத்திற்கும் நீருக்கும் அநேகக் கிலோமீட்டர்கள் தொலைவில், ஈவ் சாயிச் பெற்ற கண நேர ஓய்வில், வேலைகள் இடையூறின்றி போய்க் கொண்டிருக்க, அவனைப் பற்றி யாரும் கவலைப்படாத போது, தனக்கு விருப்பமான கனவுகளில் திளைத்தான்.

* * *

ராக்கி மலைகளில் இளவேனில் சீக்கிர மாகவே வந்துவிடுகிறது. புனித பார்த்த லோமியூ மருத்துவமனையின் நோயாளிகள், அநேகமான முதலாவது உண்மையான வெது வெதுப்பான நாளுக்கு ஆர்வமுற்று, தங்களது வார்டுகளை விட்டு வெளியே வந்து திடலிலே உருளத் தொடங்குவார்கள்.

அவர்களில் இருவர், திடலுக்குச் செல்லும் நுழைவாயிலில் ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு மிகவும் அமைதியான முறையிலே அணுசக்தி கொண்ட இதயம், சாதாரண இதயம் இவற்றில் எது சிறந்தது என்பதை விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏப்ரல் மாதச் சூரியனை கண்ணைத் திரு கிக்கொண்டு பார்த்தபடி அவர்களில் ஒருவன், ''இன்று ஓரியா டேர்வி அடையாளத்தைக் காணோம் என்பது வேடிக்கையாக இருக் கிறது,'' என்று குறிப்பிட்டான்.

''அவள் இங்கு வருவாள், கிளர்ச்சியடைய வேண்டாம். பார், அதோ அங்கே, மூக்கில் வியர்த்து விட்டது!'' மற்றவன் விமர்சித்தான்.

பச்சைப் புல் தரையில் ஒரு சிறிய விமானம் இறங்கியது, வாயில் வழியாகக் குதித்தாள் ஓரியா டேர்வி. மருத்துவமனையின் தலைமை சர்ஜன் தனது கைகளை அசைத்துக் கொண்டு அவளிடம் ஓடினான்.

பெஞ்சின் மீதிருந்த இரு ஆட்களும் மௌன மாக இருந்தார்கள். சர்ஜனும், மருத்துவ

மையத்தின் இயக்குநரும் எதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கஷ்டப்பட்டு கேட்பதற்காக முன்னுக்குக் குனிந்தபடி இருந்தார்கள். ஆனால் இரு டாக்டர்களும் அமைதியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பெஞ்சில் இருந்த ஜோடிகளால் தனித்தனி வார்த்தைகளாகத்தான் கேட்க முடிந்தது.

ஓரியா டேர்வி பார்வையிலிருந்து மறைந்த போது, ''ஒரு கடவுளைப் போல அவ்வளவு அழகானவள் அவள்,'' என்று ஒருவன் பெருமூச்சு விட்டான்.

''ஓர் ஆடையணிக் காட்சிக்காகப் பயன்படும் பொம்மை போல,'' என்று இரண்டாவது ஆள் அவனைத் திருத்தினான்.

தனது முதுகுக்குப் பின்னால் தான் ஓர் அரை ரோபாட் எனக் குறிப்பிடப்படுவது ஓரியா டேர்விக்குத் தெரியும். அதை அவள் வெளியே காட்டிக்கொள்ளவில்லை, ஆனால் அந்தச் செல்லப் பெயர் அவளைத் துன்புறுத்தியது.

சிறுமியாக இருந்த போதே அவள் நோய் வாய்ப்பட்டவளாக இருந்தாள். அவள் தனது பெற்றோர்களுடன் வடக்கே வாழ்ந்து கொண்டிருந்தாலுங்கூட, சாதாரண தட்டம்மை மற்றும் செம்புள்ளி நச்சுக் காய்ச்சல் முதல் வெப்ப மண்டலக் காய்ச்சல் வரை அவளுக்கு வராத நோயில்லை.

அவளுடைய தந்தை மிகுந்த வசதிபடைத்தவனாக இருந்தான்; தங்களுடைய ஒரே

குழந்தைக்காக அவளது பெற்றோர்கள் வழி பட்டார்கள். உதவி செய்யும் எனக் கருதப்பட்ட எந்த மருத்துவச் செலவும் செய்யத் தவறவில்லை. இளம் ஓரியா முதலில் அணு ஆற்றல் பெற்ற இதயம் பொருத்தப்பட்டாள், பிறகு செயற்கைச் சிறுநீரகங்களும் நுரையீரல்களும் பொருத்தப்பட்டாள். தனக்கு அரை ரோபாட் என மக்கள் செல்லப் பெயர் வைத்தது ஓரளவுக்குச் சரிதான் என்பதை இப்பொழுது புரிந்துகொண்டாள், பிற பெண்களைக் காட்டிலும் ஒருவகையில் தான் தகுதி குறைந்தவளாக இருக்கக் கூடுமோ என்ற அச்சம் அவளை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்கியது.

நாடு முழுக்க விரிந்த அளவில் இருந்த மருத்துவ நிறுவனங்களுக்கு அவள் பொறுப்பாக இருந்தாள். ராக்கி மலைகளில் இருந்த கிளினிக்கை அவள் பெரிதும் விரும்பினாள். மருத்துவ மனையின் சிறிய அமைப்புக்கு ஓரியா அடிக்கடி சென்று, டாக்டர்களுக்கு அறிவுரை கூறுவதும், குறிப்பிடத்தக்க 'ஆர்வமூட்டும்' காரியத்தைச் செய்ய வேண்டியும் இருந்தால், தானே இயக்கிப் பார்ப்பதும் உண்டு.

ஒருவகையில் அஞ்சத்தக்க புகழ்பெற்ற கல்வி நிலையமாக புனித பார்த்தலோமியூ கிளினிக் விளங்கியது, ஏனெனில் அங்குதான், செயற்கை உறுப்புகள் அடிக்கடி பொருத்தப் படாவிட்டாலுங் கூட, சரியாகச் செயல்படாத உறுப்புகளாகிய இதயங்கள், நுரையீரல்கள்

அல்லது சிறுநீரகங்கள் அகற்றப்பட்டன. அதே வேளையில் இந்தக் கடுமையான மருந்துகளின் சிக்கல்கள், ஓரியா ஓர் அரிய திறமை படைத்த சர்ஜன் என்பதால் அவளது அறிவைக் கொண்டது சற்று அச்சங் குறைந்தவையாக மாற்றப்பட்டது. ''அவள் பெற்றிருப்பது ஒன்றும் சாதாரணக் கைகள் அல்ல, துல்லியமாகக் கணக்கிடும் கருவிகள்,'' என சோம்பேறி நாக்குகள் விமர்சனம் செய்யும்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் இராணுவ விமானமானது பயிற்சியின் போது விழுந்து நொறுங்கி, விமானப் பணியாளர் மொத்தம் ஆறு பேருமே கொல்லப்பட்டனர். திருகிப் போன விமானி அறையானது மேல் நிகழ்ச்சியாக கட்டாயமாகத் திறக்கப்பட்ட போது, அருவருப்பான முறையில் தாறுமாறான வகையில் குருதி படிந்த உடல்களை அவள் பார்க்க வேண்டி நேரிட்டது. செயற்கை உறுப்புகள் அமைக்கப்பட்ட போதிலும், செத்துப் போன ஆட்களை திரும்ப உயிர்ப்பிப்பது அவளால் முடிந்தது.

அதன் பிறகு இராணுவத் துறையிலிருந்து அதிகாரபூர்வமான நன்றி அறிவிப்பை ஓரியா பெற்றாள், வம்பர்களும் சற்று நேரத்திற்கு அவளை அமைதியாக இருக்க விட்டார்கள்.

ராக்கி மலைகளுக்கு மேலாகப் பறந்த போது ஒருவகையில் ஹ்யூகோ லென்ஸுக்கு நடுக்கம் ஏற்பட்டது. கீழே பள்ளத்தாக்கில் மருத்துவமனையின் வெள்ளைப் பெட்டிகள்

பார்வைக்குத் தெரிந்து தானியங்கி விமானி, ''புனித பார்த்தலோமியூ மருத்துவமனையில் தரையிறங்க வந்துவிட்டோம்,'' என்று அறி வித்த போது, வழக்கத்தை விட மிக விரை வாக அவனது இதயம் அடிக்கத் தொடங்கி யது.

ஒரியா டேர்வியைப் பற்றி அவன் நிறையவே கேள்வியுற்று இருக்கிறான். வித் தியாசமான இந்தப் பெண்ணைப் பற்றிய அறிக்கைகள் மிகவும் மாறுபட்டனவாக இருந் தன. முன்னணியில் நிற்கும் ஆணோ பெண் ணோ வித்தியாசமில்லாதபடி தங்களுடைய வாழ்நாளிலேயே கட்டுக்கதை என்ற பனிப்பட லத்திற்குள் மூடி மறைக் கப்படுகிறார்கள் என்ற உண்மையில் அவன் ஆறுதல் பெற்றான். கூர்மையான குன்றுகளின் குவட்டு முனை களைக் கீழே பார்த்தபடி, டேர்வியோடு அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவன் முடிவெடுத்திருந்த அந்த இரவை லென் ஸால் நினைத்துப்பார்க்காமல் இருக்க முடிய வில்லை.

வெளிறிப் போன ஒரு மனிதன் முறு வலித்தபடி தன்னை நோக்கி நடந்துவருவ தைப் பார்த்ததும் ஒரியா வியப்புற்றுப் போனாள். வெளிப்படையாக அவன் ஒரு நோயாளி அல்ல — எந்த நோயாளியை எப் பொழுது அவள் நினைத்தாலும், அவளது கைகளில் ஒருபோதேனும் இருந்திருந்தால் தெளிவாகவே நன்றாகவே தெரியும்.

''காலை வணக்கம், டாக்டர் டேர்வி,''

என்று அவளை நோக்கி வந்தபடி அம்மனிதன் கூறினான்.

தனது வழியில் நின்றபடி, ''காலை வணக்கம்,'' என்று பதிலளித்தாள் ஓரியா. ''இதற்கு முன்னதாக நான் அந்த அஸ்ஸிரியன் தாடியையும், எரிகின்ற கண்களையும் எங்கு பார்த்திருக்க முடியும்?'' என்று வியந்தாள்.

''மாற்று சிகிச்சை கரணியமாக நீங்கள் பெரும்பாலும் இங்கே வந்திருக்கிறீர்கள் என்றால், தலைமை சர்ஜனைப் போய் பார்த்தாக வேண்டும்,'' என்று அவனது அமைதியைக் கலைத்தபடி அவள் பேசினாள்.

''உங்களைத்தான் நான் பார்க்க விரும்புகிறேன்,'' என்ற ஹ்யூகோ லென்ஸ் பிறகு தன்னை அறிமுகம் செய்துகொண்டான்.

...பகற் பொழுது முடிந்து கொண்டிருந்தது. அசாதாரணமான தங்களது உரையாடலில் மூழ்கிப் போன அவர்கள் இரண்டு பேரும் இருட்டி விட்டது என்பதை அறிந்து கொள்ளவே இல்லை. பிறகு, ஓரியா விளக்குப் பொத்தானை அழுத்தினாள்.

''நீங்கள் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய ஒவ்வொன்றும் மிகவும் ஆர்வமூட்டுவதாக உள்ளது,'' என்றாள் ஓரியா டேர்வி. ''அதே நேரத்தில் அது விநோதமானதாகவும் இருக்கிறது. சைபர்ஜிசேஷனை மக்கள் ஒதுக்கியாக வேண்டும் என்பதை நீங்கள் நம்பவில்லை. நான் பார்க்கின்றபடி, அழியாத்தன்மை பெற அதுதான் குறுக்கு வழியாக இருக்கிறது.''

''அழியாத்தன்மை... எதற்காக?''

''உங்களிடம் அதைச் சொல்லும்படி நீங்கள் என்னைக் கேட்கவில்லையே,'' என்று வியந்தாள் ஓரியா டேர்வி.

''அழியாத்தன்மையை அடைவது என்பது மனிதனுக்கு நீண்ட காலக் கனவாக இருந்து வந்திருக்கிறது என்பது நிச்சயந்தான் இல்லையா?''

''அழியாத்தன்மையை அடைவது என்பது முக்கியமான விஷயமல்ல, ஆனால் அதற்காக நாம் கொடுக்கப் போகிற விலைதான் முக்கியமானது,'' என்று மறுத்துப் பேசினான் லென்ஸ், தனது அடுத்த சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே. ''மொத்தத்தில், அனபயோசிஸ்கூட ஒருவகையான வாழ்க்கைதான். ஆனால், உதாரணமாக, அடுத்த ஆயிரமாண்டு காலத்திற்கு உங்களது வாழ்வை இழுத்துச் செல்லும் என்ற இனந்தெரியாத மகிழ்ச்சிக்காக ஓர் ஆயிரம் ஆண்டுகளை பாதுகாக்கப்பட்ட ஒரு குளத்தில் கழிக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?''

''நீங்கள் உண்மையாகவே விஷயங்களின் ஒரு பகுதியைத்தான் எடுத்துக்கொள்கிறீர்கள்,'' என்று மறுத்துரைத்தாள் ஓரியா. ''மனித அநுபவங்களின் சேர்மானம் போன்ற ஒன்றை ஒருபோதும் நிச்சயமாக அலட்சியப் படுத்த முடியாது தானே? ஒரு மனிதன் தன்னுடைய முழு நிறைவான நிலையில் உயிரை விடுகின்ற போது, முதிர்ந்த அநுபவத்தையும் அறிவையும் தன்னுடனே எடுத்துக்கொண்டு போகும்

போது, ஒருவகையில் மற்றவர்களுக்கு அதைத் துளித்துளியாகத் திரும்பவும் ஒன்று சேர்ப்பதற்கு பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதை ஒரு துயரமிக்கதாக நீங்கள் காணவில்லையா?''

தனது சிகரெட்டின் சாம்பலைத் தட்டி விட்டபடியே ஹ்யூகோ லென்ஸ் தொடர்ந்து பேசினான்: ''ஒரு புத்தகத்தைப் பற்றி உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அபூர்வமான சந்தர்ப்பங்களில் அழியாத் தன்மையுடையவர்கள் பிறந்த ஒரு நாட்டைப் பற்றிக் கூறுகிறது. அவர்கள் ஸ்டுருல்டுப்ருக்குகள் என அழைக்கப்பட்டனர் என நினைக்கிறேன். நெற்றியில் இருந்த ஓர் அடையாளமானது மற்ற மனிதர்களினின்றும் அவர்களைப் பிரித்துக் காட்டியது. அதைக் கொண்டு தங்களுக்கு முன்னால் உள்ள மனிதன் முடிவில்லாத வாழ்க்கைக்கு ஆட்பட்டவன், அழியாத்தன்மையுடையவன் என ஒருவன் அறிய முடியும். நம்முடைய பிரதிபலிப்பு நேர்த்தியானதாக, இல்லையா? நிச்சயமாக அது போல அமரத்துவம் பெற்றவர்கள் எந்த ஓர் அரசிற்கும் கௌரவம் மிக்கவர்களாக, சமூகத்தின் ஒரு தூணாக, ஒரு படிப்பினையின் தூக்கு நூலாக இருப்பார்கள், அல்லவா? மனித இனத்தால் சேகரிக்கப்பட்ட அறிவின் கொள்கலமாகவோ, வரலாற்றின் உயிருள்ள உருவமாகவோ இல்லாமலா போவார்கள்! ஆனால் நடைமுறையில் ஒவ்வொன்றுமே மிகவும் வேறுபாடனதாக மாறி

விடுகிறது. அந்தப் பழம் நூலின் ஆசிரியர், அழியாத்தன்மை பெற்றவர்கள் சக குடிமக்களிடம் மிகக் குறைவான மரியாதை பெற்றிருந்ததாகக் கூறுகிறார். உண்மையில் அவர்கள் பிற எல்லா ஆண்களையும் விட இழிவாகக் கருதப்பட்டார்கள். ஆண்டுகள் சென்ற பிறகு அவர்கள் பொறுக்க முடியாத அளவுக்கு, அவலமிக்கவர்களாகவும், சலிப் பூட்டுபவர்களாகவும் மாறினார்கள்; தங்களுடைய நினைவாற்றலை இழந்தார்கள். சமூக வாழ்க்கையில் ஒரு தீவிரப் பங்கு அவர்களுக்கு மறுக்கப்பட்டது... இந்த வழியில் அழியாத்தன்மையானது நடைமுறையில் முடிவில்லாத கிழப்பருவத்தை கொண்டு போய் தாழ் நிலைக்கு ஆளானதைத் அவர் காட்டினார்.''

''அற்புதங்கள் வர வேண்டும் என விரும்பும் நமக்குத்தான் அது. உண்மையில் இந்த இடம் அற்புத மருத்துவமனை என்று அழைக்கப்படுகிறது...'' என்று வார்த்தைகளுக்காக வேட்டையாடியபடி ஒரியா நிறுத்தினாள்.

''ஒரியா டேர்வியினுடைய அற்புதங்கள்,'' என்றான் லென்ஸ் வாக்கியத்தை முடிப்பது போல.

''ஆனால் உங்களை எது இங்கே அழைத்து வந்தது?'' ஒரியா கேட்டாள். **உங்களை** என்ற சொல்லில் அழுத்தம் அதிகமாக இருந்தது. ''நிச்சயமாக வெறுமனே இருக்காது...''

''வெறுமனே ஒரு விஷயம்: அற்புத வேலைகளை நீங்கள் விட்டுவிட வேண்டும் என்ற

நம்பிக்கையில்,'' ஹ்யூகோ லென்ஸ் மெதுவாகச் சொன்னான்.

தனது தலையை ஆட்டியபடி, ''முடியாதது,'' என்றாள் ஓரியா டேர்வி. ''நான் ஏற்கெனவே விளக்கிவிட்டேன்.''

''மருத்துவ மையத்திற்கு நீங்கள் பொறுப்பாக இருக்கிறீர்கள்.''

''அதுவல்ல முக்கியம். உறுப்பு மாற்றம் என்பது காலத்தின் அடையாளம்.''

ஏற்றுக்கொள்ளாதது போலத் தனது கையை அலைத்தபடி, ''அது வார்த்தைகள் மட்டுமே,'' என்று லென்ஸ் விமரிசித்தான்.

''முன்னேற்றத்தை யாராலும் நிறுத்த முடியாது.''

''ஆனால் ஒரு முயற்சி செய்யலாம்,'' என்று லென்ஸ் வற்புறுத்தினான்.

இத் தருணத்தில் பிரபல பௌதிகவியலாளன் ஒருவகையில் வெறியோடு இருக்கலாம் என்பது பற்றி ஓரியா தானாகவே சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஒருவேளை ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருந்த அச்சுறுத்துகின்ற மொட்டைக் கடிதம் அவனை நிலைகுலையச் செய்துவிட்டதா?

''அது சரி, நீங்கள் என்ன சொன்னீர்கள் என்பது பற்றி நான் சிந்தித்துப் பார்க்கிறேன், டாக்டர் லென்ஸ்,'' என்றாள் அவள். ''ஆனால் உங்களைத் திரும்பச் செய்வதற்கு நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்: கொஞ்சக் காலத்திற்கு நீங்கள் ஏன் இங்கேயே தங்கக் கூடாது. இத்தனை மனப்பூர்வ

மாக நீங்கள் வெறுத்து ஒதுக்கிய அற்புதங்களை மிக அண்மையில் ஏன் பார்க்கக் கூடாது. இங்கே மலைகளில் இருக்கக் கூடிய காற்று மிகவும் பயன்தரத்தக்கதாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்.''

''நான் புரிந்துகொண்டேன், ஒரியா டேர்வி,'' என்று புன்முறுவலோடு கூறினான் லென்ஸ். ''என்னுடைய விசித்திரமான திட்டம், நான் சரியான மனநிலையில் இல்லை என உங்களைக் கருத வைத்துவிட்டது. நான் பூரண மனநலத்தோடு இருக்கிறேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.''

''ஆனால் டாக்டர் லென்ஸ்...'' ஒரியா தொடங்கினாள்.

''முற்றுப்பெறாத விவாதம் என்று இதனை நாம் கருதிக் கொள்வோம்,'' என்று லென்ஸ் இடைமறித்தான். ''திரும்பவும் அதற்கே வர முடியும் எனவும், எனது கருத்திற்கு முற்றாக உங்களை வரச் செய்ய முடியும் எனவும் நான் நம்புகிறேன்.''

* * *

மிகவும் கவனமாக முகம் மழித்துக் கொண்ட பின்னர், ஒரு 'டை'யைத் தேர்ந் தெடுப்பதில் ஆர்தர் பார்க் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டான். வியப்புறும் வகையில் அன்று மாலை அரங்கத்திற்குத் தன்னோடு வரும்படி ஷெல்லாவை அவன் அழைத்திருந்

தான். அவளும் அதை ஏற்றுக்கொண்டிருந் தாள். அது இதயம் திரும்ப ஒப்பித்ததுதானா அல்லது வெறுமனே அலுவலக வியாபாரந் தானா? தனக்குத்தானே இக் கேள்வியைக் கேட்டுவிட்டு அதன் பிரதிபலிப்பைக் கண்ணாடி யில் பார்த்துவிட்டு ஆர்தர் சிரித்தான்.

அவனுடைய கற்பனையை ஷெல்லா பெரும்பாலும் கண்டு கொண்டுவிட்டாள், ஆனால் அணுவாராய்ச்சி மையத்தில் ஏற்பட் டுள்ள சூழ்நிலையைப் பிரித்தறிவதற்கு குறைந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லா திருந்தது. ஊழியர்களில் ஒருவர் அந்தக் கடிதத்தை ஹ்யூகோ லென்ஸுக்கு எழுதியிருக்க முடியுமா? அப்படித்தான் என்றால், யார்?

இந்தப் புதிருக்கான விடைக்கு பார்க் கிடம் எந்த அடிப்படையும் இல்லை, குறிப்பு கள் கூடக் கிடையாது. மேலும் அவன் மிகவும் தீவிரமாகக் கவலைப்பட ஆரம்பித்து விடுகிறான். இந்தப் பிரச்சினையானது நீண்ட காலத்திற்கு இழுத்தடிக்கப்படுமேயானால், விஷ யங்கள் இவனுக்கு மோசமானதாகி விடும் என்று அவன் உணர்ந்தான். லென்ஸினுடைய முதலாவது துணை ஆளான இமாண்ட் அர் டோனிஸ் மீது குற்றஞ் சுமத்தி தனது விரலை நீட்டுவதைத் தவிர, தனக்கு முன்னர் எதுவு மே சாத்தியமில்லை என்பதை அவன் அறிந் தான்.

அர்டோனிஸ் மீது வஞ்ச வலையை விரிப் பதற்கு பார்க் அநேக முறை முயன்றான். ஆனால் அவை எல்லாவற்றிலும் கலக்கமடை

யாத இமாண்ட் எந்தச் சிரமமுமின்றி தவிர்த்து விட்டான்.

தனது 'டை'யை முடிச்சுப் போடும் போது, ''ஒரு நழுவுகின்ற வாடிக்கையாளன்,'' என்று ஆர்தர் நினைத்தான். பிறகு ஒருவித நினைவுக் குறிப்போடு தன்னை நிறுத்திக் கொண்டான்: எல்லாருக்கும் முன்னால் எதார்த்தம்!

இயல்பான முரண்பாடு ஒரு விஷயம், ஆனால் அவனுக்கு ஆதாரங்கள்தாம் தேவைப் பட்டன. ''மணல் மீது ஒரு வழக்கைக் கட்டுவதற்கு ஒரு போலீஸ்காரனுக்கு எந்த உரிமையும் இல்லை, நிறுவனத்தின் மணலில் கூடத்தான்,'' ஆர்னோ காம்பினுடைய பிர பலமான முதுமொழிகளில் ஒன்று திடீரென்று அவன் மனத்திற்குப் பட்டது.

தலைவரைப் பற்றிப் பேசியிருந்தாலுங் கூட, அண்மைக் காலத்தில் அவன் விநோத மான முறையில் நடந்து கொண்டிருந்தான். ஒரு தொடக்கத்திற்கு, தலைமை நிலையத்தில் இருப்பது போன்ற அநேகப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இரண்டு முறை அவன் நிறுவினான். தனது ஜனநாயகப் படிப்பினை களை அவன் இன்னமும் கைவிட்டு விடாதது போலக் காணப்பட்டான். ஏனெனில், மக் கள் முதலாவதாக என்ன 'உணர்கிறார்கள்' என்பதையறிய அவன் இன்னமும் பொதுப் பயண ஊர்திகளையே பயன்படுத்தி வந்தான். ஆனால் அவன் ஒருபோதும் தனியே செல்ல வில்லை. அவன் எங்கு சென்றாலும், தெரு

வில் என்றாலும், சுரங்கப் பாதையில் என்றாலும், சாதாரண உடையணிந்த ஏஜண்டுகளால் அவன் சூழப்பட வேண்டும் எனக் கிழட்டு மனிதன் கட்டளைகள் இட்டிருப்பதாக ஜூல் இவனிடம் சொல்லியிருக்கிறான். காம்ப் கூட ஒரு ‘ஊதாப்பூ’ கடிதம் பெற்றிருக்கிறான் என்பதில் ஜூல் நிச்சயமாக இருந்தான்.

அது பெரும்பாலும் இருக்கக் கூடும் என்று பார்க் நினைத்தான். மொத்தத்தில் போலீஸ்காரர்களும் வெறுமனே மக்கள் தான். மற்றவர்களை விடச் சற்று குறைவாகவே மதிக்கப்பட்டார்கள்.

வெளிவேலையில் ஷெல்லா நல்ல வாயாடி என்பதை நிரூபிக்கக் கூடும் என்று ஆர்தர் நம்பியிருந்தான். லென்ஸின் செயலாளர் என்ற வகையில் மற்ற எல்லா ஊழியர்களோடும் உள்ள அவளது தொடர்புகளால் மிகப் பெருமளவுக்கு ஷெல்லா அறிந்திருக்க வேண்டும். பேச்சின் இங்கொன்றும் அங்கொன்றுமாக அவள் பெற்றுத் தந்தவைகள் எல்லா முக்கியமான வளர்ச்சி அல்லது ஓரளவுக்கு மேற்கொண்டு தொடர வேண்டியது இவற்றை ஆர்தருக்குத் தந்தன.

ஏற்பாடு செய்தபடி, இரண்டு இளைஞர்கள் அரங்க நுழைவாசலில் சந்தித்தார்கள். நிகழ்ச்சி தொடங்குவதற்கு சற்று நேரமே இருந்தது. இடைவேளையின் போது அமரக் கூடிய அறையின் ஒரு மூலையில் இருந்த ஓய்விருக்கையை ஆர்தர் கண்டு பிடித்து

இருவரும் அமர்ந்தார்கள். பழக்கத்திற்கு முரண்பட்டு நிறுத்தாதபடி ஷெல்லா பேசிக் கொண்டே இருந்தாள். தடையின்றி வந்த அவளது பேச்சை சரியான திசையில் திருப்பி விடுவதற்காக, அணுவாராய்ச்சி மைய் பற்றிப் பேசச் செய்வதற்காக, ஆர்தர் கவனமாக முயன்றான். எனினும், அவனுடைய எல்லா முயற்சிகளும் டான் பசீலியோ பற்றிய புகழ்ச்சியுரையாக இழுத்துக் கொண்டு போனது: எவ்வளவு புத்திசாலித்தனமாக, நல்ல முறையில் நடந்து கொண்டது, எவ்வளவு வேடிக்கையுள்ளதாக இருந்தது, டாக்டர் லென்னை எப்படி வழிபட்டது, அவனது கையிலிருந்து மட்டுமே உண்ணும், எஞ்சிய ஊழியர்களை அது வெறுப்போடு பார்த்தது.

''மேலும் டான் பசீலியோ ஒரு பூனை அல்லாது ஏதோ ஒரு சைபர்நேட்டிக் பொறியாக இருந்தால் என்னாவது,'' என்று தனக்குத்தானே வியப்புற்றவனாக ஆர்தர் கேட்டான். ''இப்பொழுதெல்லாம், பாருங்கள், எளிமையான அனிச்சைச் செயல்களை நிரல்படுத்துவது என்பது ஒரு பிரச்சினையே அல்ல.''

''நீங்கள் பயோ சைபர்நேட்டிக்கில் வேலை பார்த்திருக்கிறீர்களா?''

''ஓரளவுக்கு,'' என்று தொடர்ந்தான் ஆர்தர், ''பாலை நாவால் துழாவிக் குடிக்கவும், பூனை போல ஒலி எழுப்பவும், ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு விருப்பச் சார்பு

காட்டுவது போலவும் இருக்கக் கூடிய ஒரு பொறியை, சைபர்நேட்டிக் நிபுணர்கள் உருவாக்கி இருப்பதாக கண நேரத்திற்குக் கற்பனை செய்து பாருங்கள். அந்தப் பொறியானது பூனை போன்ற உருவமும் வர்ணமும் கொடுக்கப்பட்டிருக்கிறது; டாக்டர் லென்ஸுக்கு இருப்பது போல, ஷெல்லா பூனை மீது மிகுந்த விருப்பமாக இருக்கிறாள்.''

''மையத்தில் நீங்கள் வெறுமனே ஒரு கற்றுக்குட்டி என்று எவராலும் சொல்ல முடியும்,'' என்று விமரிசித்தாள் ஷெல்லா. ''அணுவாராய்ச்சி மையத்தில் இத்தகைய வாய்ப்புக்கூறுகளைப் பாதுகாப்பு அதிகாரிகள் தொலைநோக்குடன் காணவில்லை என்று நீங்கள் உண்மையாகவே நினைக்கிறீர்களா? எந்த ரோபாட்டும் மையத்தின் எல்லைக்குள்ளாக நுழைய முடியாது. பாதுகாப்பு சல்லடைகள் அவர்கள் வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்...''

அமரும் அறையானது மெல்ல மெல்ல நிறைந்து கொண்டே இருந்தது. காட்சி துவங்கட்டும் என, அரங்கு செல்வோர் அங்குமிங்கும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

சற்று இடைவெளிக்குப் பிறகு, ஆர்தர் புறப்பட்டான்: ''இமாண்ட் அர்டோனிசுக்கு தனது காரியங்கள் நன்றாகத் தெரியும் என்பதை நான் அறிவேன்.''

''அவனது காரியங்கள் பற்றி எனக்கு அவ்வளவு நிச்சயமாகத் தெரியாது, ஆனால்

மற்றவர்களின் காரியங்கள் பற்றி அவனுக்கு எப்பொழுதுமே தெரியும்,'' பையைத் தனது தொடை மீது வைத்து நிமிர்த்தியபடி ஷெல்லா கூறினாள்.

''மற்றவர்களா?'' தன்னால் வலிமை எல்லாம் ஒருங்கு திரட்ட முடியும் என்ற வழமையான குரலில் ஆர்தர் வினவினான்.

''மற்றவர்கள் விஷயத்தில் அர்டோனிஸ் எப்போதுமே தனது மூக்கை நுழைத்துக் கொண்டிருப்பான்,'' என்று ஷெல்லா விளக்கினாள். ''எந்த ஒரு சோதனையாக இருந்தாலும், அதன் முழுமைக்கும் யார் பொறுப்பாக இருக்கிறார்கள் என்ற சிந்தனையில்லாமல், அதில் தலையிட அவன் தயாராக இருப்பான்.''

''ஆனால் டாக்டர் லென்ஸ் ஒரு சோதனை செய்து கொண்டிருக்கும் போது, அத்தனை துணிவாக அர்டோனிஸ் தலையிடுவானா என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.''

''ஓ, ஆமாம், அவன் செய்வான்,'' என்று குறுக்கிட்டுச் சொன்னாள் ஷெல்லா. ''உங்களுக்கு அர்டோனிசைத் தெரியாது. அவனைப் பொருத்தமட்டில் எந்தப் புனிதமும் இல்லை, அவனுக்காக எந்த அதிகாரமுடையவர்களும் இல்லை. அவன் வினயமாக எடுத்துக்கொண்டதெல்லாம் பௌதிகம் தானே தவிர, வேறெதுவுமில்லை. டாக்டர் லென்ஸை விட தான் அதிகம் தெரிந்தவன் என்பது போல அவன் நடந்துகொள்கிறான்.''

''ஒருவகையில் அது சரிதான்,'' என்று எரிச்சலூட்டுவது போல ஆர்தர் துணிந்து கூறினான்.

ஒரு கேலிக்குரிய அனுமானத்தைச் சற்று முன்னர் பேசிய ஒரு மனிதனைப் பார்ப்பது போல ஷெல்லா ஆர்தரைப் பார்த்தாள்.

''இமாண்ட் அர்டோனிஸ் ஒரு வெறி பிடித்த விஞ்ஞானி, இது உண்மை,'' என்று சிந்தனை வயப்பட்டபடி அவள் கூறினாள். ''ஒரு முக்கியமான சோதனையில் அவன் ஈடுபட்டிருக்கும் போது, காஃபியை மட்டும் பருகிக் கொண்டு, தூங்காமல் ஓய்வில்லாது ஆய்வுக் கூடத்திலேயே மூன்று நாட்களுக்கு அவனால் இருக்க முடியும். பௌதிகத்தில் புரட்சி செய்ய வேண்டும், குவார்க்குகளைப் பிளக்கும் முதலாவது மனிதனாக இருக்க வேண்டும் என்று அவன் கனவு கண்டதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் எதற்காக முக்கியமில்லாதபடி நீங்கள் இமாண்ட் அர்டோனிஸ் மீது அக்கறை கொண்டிருக்கிறீர்கள்?''

''அர்டோனிஸ் என்பதில் எனக்கு எதுவுமில்லை,'' என்றான் ஆர்தர் தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டே. ''தனிமனிதர்கள் விஷயம் பற்றி நாம் பேசினால், லென்ஸைப் பற்றியே அதிகம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.''

''உங்களால் ஒரு சிறந்த மனிதனைக் காண முடியாது!'' என்று மெய்ப்பிப்பது போல ஷெல்லா கூறினாள். ''எங்களோடு நீங்

கள் சற்று வேலை செய்து கொண்டிருக்கும் போது, நீங்களாகவே இதைக் காண முடியும்.''

நீட்டி முழக்கிய இசையானது கேட்டது, மெல்லிய காற்றாக மாறுவது போல திரை மறைந்து போயிற்று. மேடையின் கடற்கரையில் ஒரு காப்பரண் தோன்றியது. பாறை மிகுந்த கடற்கரையில் நீண்ட அலைகள் அத்தனை எதார்த்தமாக அடித்துக் கொண்டிருந்ததில் ஷெல்லாவுக்கு உடம்பெல்லாம் புல்லரிப்பது போல இருந்தது: உப்பும் கடற்பாசி மணமும் கொண்ட புத்தம்புது மென்காற்றை உண்மை யாகவே நுகர்வது போல அவளுக்கு இருந்தது. காப்பரணிலிருந்து கடலை நோக்கிச் செல்கின்ற பாதை ஒன்று இருந்தது. அதனது தொலைதூர முடிவில் தளர் மேலுடுப்பு அணிந்த ஒரு மனிதன் தோன்றினான். இப்போது மேடையை எடுத்துக் கொண்ட பிரபல மான சோக நடிகரை கையொலிகள் வாழ்த்தின.

அரங்கத்தில் அணியும் தனது கண்ணாடி வழியாக ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டு, ''நான் ஹேம்லெட்டைப் போற்றுகிறேன்,'' என்று ஷெல்லா முணுமுணுத்தாள்.

மேடையை நோக்கித் தன்னை மறந்த வனாக ஆர்தர் பார்த்தான். மாலை நேரத் தொடக்கம் குறித்து அவன் மனநிறைவு பெற்றான். மாலையைப் பொருத்தவரை திட்டப் படி நடந்து கொண்டிருந்தது. டாக்டர் லென்ஸின் சக ஊழியர்கள் பற்றித்தான் அறிந்த

எல்லாவற்றையும் ஷெல்லா தன்னிடம் கூறு வாள் என்று எந்தவகையிலும் அவன் நம்பிக் கையோடு இருந்தான், பிறகு அடுத்து எங்கே போவது என்பது பற்றி அவனால் திட்டமிட முடியும்.

ஹேம்லெட்டின் தந்தையினுடைய பேயுரு தோன்றிய போது, ஷெல்லா விநோதமான முறையில் நடந்து கொண்டாள். ஒரு பெருமூச்சுடன் அரங்குக்கான கண்ணாடியைத் தனது பைக்குள் திணித்தாள், அந்த இருளில் கூட அவளது கண்கள் கண்ணீருடன் மினு மினுத்ததை பார்க்கால் காண முடிந்தது.

''என்ன விஷயம்?'' என்று இடைவேளை யின் போது ஆர்தர் கேட்டான்.

''இந்தப் பேயுரு மிகவும் துயரமான ஒரு நிகழ்ச்சியை எனக்கு நினைவுபடுத்தியது,'' என் றாள் ஷெல்லா.

''அது பற்றி என்னிடம் கூறு,'' எனக் கேட்டான் ஆர்தர்.

''மற்றொரு சமயம்,'' என்று ஷெல்லா பதிலளித்தாள்.

இடைவேளையின் போது ஷெல்லா வாயா டியாக இருக்கவில்லை. அவளது அழகிய சிறிய தலைக்குள்ளாக மகிழ்ச்சியின்றி நினைவு கள் ஓடிக்கொண்டிருப்பது போலக் காணப்பட் டது. உண்மையில் முக்கியமான கண்டுபிடிப்பு கள் பற்றிய ஆர்தரின் நம்பிக்கைகள் சின்னா பின்னமாயின.

''நாம் நண்பர்களாக இருப்போம் என்று நான் நம்புகிறேன், ஷெல்லா?'' தான்

புறப்படுவதற்குச் சற்று முன்னர் அவன் கேட்டான்.

''டான் பசீலியோ போல நீங்கள் மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவனாக இருக்கிறீர்கள்,'' என்று சொல்லி சிரித்தாள் ஷெல்லா.

மறுநாள் காலையில் அணுவாராய்ச்சி மையத்திற்கு ஆர்தர் வந்த போது சந்தித்த முதல் ஆள் அர்டோனிஸ். பார்க் அவனை வாழ்த்தினான். ஆனால் அவன் இமாண்டிடம் இருந்து திரும்பப் பெற்றதெல்லாம் தலையசைப்பு மட்டுந்தான், கைகுலுக்குவதற்காக கையைத் தரவில்லை. டாக்டர் லென்ஸினுடைய துணைவன் கவலையுற்றவனாகக் காணப்பட்டான்.

''நீ சற்று பொறு, அருமை நண்பனே, எனக்கு நேரம் தா. உன்னை யார் என்று ஒவ்வொருவருக்கும் காட்டுவேன்.'' அர்டோனிஸ் அப்பால் நடந்து போனதைப் பார்த்துக் கொண்டிருந்தபடி, பார்க் தனக்குத்தானே நினைத்தான். இமாண்ட் தானாகவே விறைப்பாக நின்றுகொண்டு, தனது கைகளை அலைக்காமல் இருந்தான் — கபடமானவன் போல. விஞ்ஞானத்தை புரட்சிகரமாக்குவது பற்றிய தனது கனவு குறித்து நேற்றைக்கு முன்தினம் ஷெல்லா கூறிய வார்த்தைகளை பார்க் நினைவு கூர்ந்தான். தனது முந்திய மேலாளரின் கல்லறை மீது காற்றிலே தனது காப்பரணை நிறுவலாம் என அவன் ஒருவேளை திட்டமிட்டுக் கொண்டிருக்கலாம். இது போன்ற ஆட்களைத் தவறாக எடுத்துக்

கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் எப்பொழுதுமே துப்புரவுக்கும் பகட்டுக்கும் இடையீட்டாளர்கள். மற்றவர்களைக் கடினமாக வேலை செய்யவைக்கவே அவர்கள் எப்பொழுதும் முயற்சி செய்வார்கள். அவர்கள் ஒருபோதும் தங்கள் சட்டைக் கைகளைச் சுருட்டி விட்டுக் கொண்டு முரட்டுத்தனமான வேலையைச் செய்வதில்லை. நேர்மையாகச் சொல்லப் போனால் பார்க் ஓரளவுக்கு அர்டோனிஸ் மீது பகைமையே கொண்டிருந்தான்.

உண்மையாகவே சந்தேகப் பேர்வழிகளை வலை வீசுவதைத் தவிர வேறு என்ன வெறுக்கத்தக்கதாக இருக்க முடியும். ஆனால் இப்பொழுதெல்லாம் போலீஸ் சக்திக்கு அப்பால் போய்விடுவதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. அவன் ஒரு நேர்மையான பௌதிகவியலாளனை உருவாக்கி இருக்க முடியும். இதை வெறுமனே வேறு யாருமோ சொன்னதில்லை, ஆனால் டாக்டர் லென்ஸ் தானே கூறினான். விஞ்ஞானியினுடைய வார்த்தைகள் வியப்படையும்படி போலீஸ் ஏஜண்டால் கொண்டு செல்லப்பட்டன. அவைகளிடம் திரும்பப் போவது பற்றி அவன் அடிக்கடி சிந்தித்தான்.

''இந்தப் பூமியில் எந்த நீதியும் கிடையாது,'' என்று முடிவு கட்டினான் ஆர்தர், ஒரு பெருமூச்சுடன் நியூட்ரினோ ஆய்வுக் கூடத்திற்குப் புறப்பட்டான்.

அன்றைய நாளில், பகல் வேளை முடிந்து மற்ற எல்லாருமே போய்விட்டிருந்துங் கூட அங்கே தங்குவதற்கு பார்க் முடிவு செய்

தான். நடு இரவுக்குப் பிறகுங்கூட, அல்லது காலை வரையிலும் கூட மையத்தில் தங்கிவிட லென்ஸ் முடிவு செய்தது, சில நேரங்களில் நடந்தது போல, குறிப்பாக இப்பொழுதெல்லாம் பார்க்கிற்கு சற்று கவலையாக இருந்தது. இந்த முறை அதிர்ஷ்டம் அவனோடு இருந்தது.

கடைசியாகச் சென்றவன் இமாண்ட் அர்டோனிஸ்.

ஆள் நடமாற்றமற்ற ஆய்வுக் கூடங்களில் ஆர்தர் சுற்றி அலைந்தான். ஜெனரேட்டர்கள் விர்ரென்று ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன. நீல வண்ண ஒளி அஸ்ஸிலோகிராப்பு திரைகளின் ஊடாக மினுமினுத்தது, தானியங்கி அமைப்புகள் தங்களது பல்வேறு பணிகளையும் அமைதி குலையாதபடி தொடர்ந்து செய்து கொண்டிருந்தன. மனிதனுடைய இருப்பு இங்கே எந்தளவுக்குத் தேவைப்படாது போய்விட்டது என்பதை ஆர்தர் உணர்ந்துகொண்டான். அவன் முட்டாளாக இல்லை, என்றாலும் நியூக்ளியர் பௌதிகம் பற்றி முதலாவது விஷயத்தை அறியாத யாரோ ஒருவரது பிரதிபலிப்புப் போல, தன்னுடைய பிரதிபலிப்பு அறியாமையானது என்பதை பார்க் மேலும் உணர்ந்தான்.

அக்சலரேட்டர் இருந்த அறைக்குள்ளாக அவன் சென்றபோது, அவனது வழியானது இரண்டு தானியங்கி குறுக்குத் தடைகளால் தடுக்கப்பட்டிருந்தது.

''ஊழியர்கள் கட்டாயம் நுழையக் கூடாது,'' என்று பதிவு செய்யப்பட்ட குரல் எச்சரித்தது.

''டாக்டர் லென்ஸினுடைய அநுமதி நான் வைத்திருக்கிறேன்,'' என்றான் ஆர்தர், பிறகு அவன் ஒரு விஷேட அநுமதிச் சீட்டை வெளியே எடுத்து, இது புகைப்படத் தணிக் கை செய்யப்பட்ட பொழுது, மைய அறைக் குள்ளாக ஆர்தர் நுழைவதற்கு வசதியாக இரண்டு தடைகளும் தங்களது இருப்பிடங் களுக்குச் சென்றன.

ஊழியர்களின் சாய்வு மேசைகளுக்கு மே லாக அவன் உற்று கவனித்தான், அண்மை யில் பதிவு செய்யப்பட்ட எல்லாவற்றை யும் சோதித்தான், கழிவுக் கூடைகளின் உள் ளாகச் சுருட்டிக் கிடந்த ஒவ்வொரு துண்டுக் காகிதத்தையும் விரித்துப் படித்துப் பார்த் தான்.

பிறகு அவன் இமாண்ட் அர்டோனிசினு டைய அலுவலகத்திற்குச் சென்றான். சுற்றிலும் சோதித்துப் பார்த்ததில் எதுவுமே கிடைக்க வில்லை, ஹ்யூகோ லென்ஸுக்கு முகவரி யிடப்பட்ட அநாமதேயக் கடிதத்தின் கிறுக்கல் பிரதி போன்ற ஏதேனும் ஒரு துண்டு அல் லது அது போன்ற ஏதேனும் கிடைக்குமா என்று ஆர்தர் வெறுமையாக நம்பினான். இன்னும் ஐயுறவு நிலைக்கு ஆட்பட்டதெனக் காணப்பட்ட ஒவ்வொன்றையும் அர்டோ னிஸ் அழித்து விட்டது போலக் காணப்பட் டது.

இமாண்டின் சாய்வு மேசையின் உள்ளடக்

கத்தை உற்றுப்பார்த்த போது, பயோ மெமரிக் கூடு ஒன்றை பார்க் பார்த்தான். இது போன்ற கூடுகளைச் சாதாரண குறிப் பேடுகள் மூலம் மாற்றக் கூடியதாக இருந்தது. கண நேரங் கூடச் சிந்திக்காது, பார்க் அந்தக் கூட்டைச் சட்டைப் பைக்குள்ளாகத் திணித்துக் கொண்டான்.

பிறகு பார்க் வீடு திரும்பி வருகின்ற போது ஷெல்லாவை நினைத்துப் பார்க்கா மல் இருக்க முடியவில்லை. மறுக்க முடியாத படி அவளிடத்தில் ஏதோ ஒரு கவர்ச்சி இருந்தது. ஒருவேளை அந்தப் புதிர் தா னோ? பார்க் பெருமூச்சு விட்டான்; லென் ஸைத் தவிர வேறு எந்த மனிதனும் இருந்த தில்லை என்பது போல ஷெல்லாவுக்குக் கா ணப்பட்டது. இன்னும், தனது செயலாளரை அவன் கண்டு கொள்ளாதது போலக் காணப் பட்டது.

ஒரு சமயம் வெஸ்டர்ன் கம்பெனியில் ஷெல்லா வேலை செய்திருந்திருக்கிறாள் என் பதை பார்க் அறிந்திருந்தான். பிறகு அவள், இன்னமும் அது தெளிவாகத் தெரியாத காரணங்களால், அணுவாராய்ச்சி மையத்தில் சேர்ந்துவிட்டாள். ஒருவேளை டாக்டர் லென்ஸுக்கு மிக அண்மையில் இருப்பதற்காக இருக்கலாம்?..

வீடு போய்ச் சேர்ந்ததும், இமாண்ட் அர்டோனிசினுடைய அலுவலகத்தில் எடுத்த கூட்டை நினைத்துப் பார்த்து, அதை பிளேபேக் செய்வதற்காக தனது பயோ

ரிகார்டரில் அந்தக் கூட்டை வைத்தான். ஏற்கெனவே நான்கு நாட்களாக அணு வாராய்ச்சி மையத்தில் காது நிறையக் கேட்ட முடிவற்ற தொடராகிய எல்லாவகையான எண்களையும், சூத்திரங்களையும், கிராஃபு களுக்கான கணக்கீடுகளையும், 'ஒய்' களையும், 'எக்ஸ்' களையும் கேட்போம் என்று அவன் எதிர்பார்த்தான். இன்னும் முதலாவது வார்த் தைகளே அவனது கவனத்தைப் பிடித்து இழுத்தன.

''என்னால் ஹ்யூகோவின் நடத்தையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பாதி வழியில் நிறுத்திவிட அவன் முடிவு செய்திருப்பது போல அது காணப்படுகிறது,'' என்று அர்டோனிசினுடைய மகிழ்ச்சியற்ற குரல் உரக்கவும் தெளிவாகவும் அறையின் குறுக்காக அறிவித்தது. ''ஹ்யூகநாட் தானே அதை அறிவிக்கவில்லை, ஆனால் அவனது பேசப் படாத சிந்தனைகளிலிருந்து குழூஉக்குறிகளை நான் விடுவிப்பது உண்டு.''

பார்க் குரலின் கணத்தைக் குறைத்தான்.

''பாதி வழியில் நிறுத்தமா? நமது இலக்கை நாம் நெருங்கிக் கொண்டிருக்கும் போது, சோதனைகளை விட்டு விடுவது எப்படி முடியும்? அது நேர்மைக் கேடானது,'' எரிச்சல் கொண்ட வேகத்தோடு இமாண்டின் குரல் எதிர்ப்புத் தெரிவித்தது. ''நாம் பெரும் பாலும் முடித்து விட்டிருந்த குவார்க்குகளின் குண்டு வீச்சை, பருப்பொருளைப் புரிந்து கொள்ளக் கூடிய நமது உண்மையான பாதை

யில் இயற்கையால் நிறுவப்பட்ட கடைசி அர ணுக்குக் கொண்டு வர வேண்டி இருந்தது.

''நான் அறிந்ததைக் காட்டிலும் மிகவும் குறைவாக லென்ஸை அறிந்தவன், இந்தக் கடைசிப் படிக்கு முன்னதாக, ஆரம்பிக்கக் கூடிய தொடர் விளைவுக்கு முன்னதாக ஹ்யூகநாட் பேரச்சம் கொண்டுவிட்டதாக ஒருவர் நினைக்கக் கூடும். ஆனால் இவை எல்லாம் தேவதைக் கதைகள்தாம். இல்லை, வேறு ஏதோ ஒன்று இருந்திருக்க வேண்டும். ஆனால் என்ன? லென்ஸ் நாசமாய்ப் போக. அந்தக் குவார்க்குகள் பிளக்கப்பட்டிருக்க வேண்டும். வேறு எதுவும் விஷயமில்லை. நானே தனியாக இந்த வேலையை முடிப் பேன்...''

குரல் அமைதியாகிப் போனது. பிறகு ஏதோ பாடல் வந்தது: முற்றிலும் மாறுபட்ட குரலில், அர்டோனிஸ் ''நான் உங்களுக்கு ஓர் ஊதாப்பூ அனுப்பிவைப்பேன்,'' என்ற பிரபலமான பாட்டை முணகினான்.

''ஆக, உன்னை யாரும் தடுக்க மாட்டார் கள், அவர்களால் முடியுமா,'' பயோ மெமரிக் கூட்டைப் பத்திரமாக அப்பால் மறைத்து வைத்த போது பார்க் துயரத்துடன் கூறி னான். ''ஓ, ஆமாம், நாம் தடுப்போம், நண் பனே!''

இப்போது தலைவரைப் பார்ப்பதற்கு அவன் கட்டாயம் விரைந்து செல்ல வேண் டும். அதிகாலை நேரமாக இருப்பது ஒரு பொருட்டல்ல. ஊதாப்பூ வழக்கு சம்பந்

தப்பட்ட செய்திகள் இரவோ, பகலோ எந்த நேரத்திலும் தன்னிடம் திரும்ப அறிவிக்கப்பட வேண்டும் என்று ஆர்னோ காம்ப் அறிவுரை வழங்கி இருந்தான்.

இக்கூட்டைக் கேட்டது காம்ப்பை நல்ல மனநிலையில் வைத்தது. ''ஒரு முக்கியமான சாட்சியம்,'' என்று கூட்டைத் தட்டிக்கொண்டு பல முறை அவன் திரும்பக் கூறினான். ''நுட்ப மானது, மிகவும் நுட்பமானது...''

''...அர்டோனிசை நாம் கண்காணிக்கத் தொடங்குவோமா?'' எனக் கேட்டான் பார்க்.

கண நேரம் சிந்தித்த காம்ப் கூறினான்: ''அவனைச் சுதந்திரமாக விடுவது மிகவும் ஆபத்தானது. ஆனால் நாம் மிகவும் கவன மாக நடைபோட்டுச் செல்ல வேண்டி இருக் கிறது.''

''ஒருவேளை அர்டோனிசுக்கு உடன்குற்ற வாளிகள் இருக்க முடியும்...''

''முடியும். ஆகவேதான், நமது அடுத்த நடவடிக்கை எந்தக் காரணங் கொண்டும் அவர்களைச் சந்தேகம் கொள்ளாமல் இருக்கச் செய்வது தான்.'' காம்ப் தொடர்ந்து பேசினான்: ''சேர்ந்து செய்வதற்கான ஒரு திட்டத்தை நான் செயல்படுத்தத் தொடங்கி விட்டேன். அர்டோனிசை நாம் கைப்பற்று போம். பிறகு தேனீயின் வருகைக்காகக் காத்திருக்கும் மலரைப் போல அவன் தயாராக இருக்கிறான். அப்போது ஊதாப்பூ விவகாரத்தை நாம் முடித்து விடலாம்.''

* * *

கொஞ்ச நேரத்திற்குத்தான் அவன் யாரோ ஒருவனுடைய கண்காணிப்புக்கு ஆட்பட்டிருந்தான் என்பதை இமாண்ட் அர்டோனிஸ் உணர்ந்திருந்தான். அவனைப் பற்றிய அக்கறையானது ஒருவகையில் மகிழ்ச்சிதராத, இதைவிட மோசமாக வேறு என்ன இருக்கிறது. இது நிச்சயப்படுத்தப்படாத சந்தேகத்தின் பேரில் இருக்கலாம் என்று தனக்குத்தானே அவன் ஏற்றுக்கொண்டான். அல்லது இந்த நெருக்கடியான நேரத்தில் ஒரு கற்பனையாகக் கூட இருக்கலாம்: ஏனெனில் அண்மைக் காலத்தில் வழக்கத்திற்கு மாறாக அவன் மிகுந்த வேலை செய்து கொண்டிருந்தான். நம்பிக்கையோடு லென்ஸ் சொன்ன ஒவ்வொன்றையும் அதற்கு மேல் அவன் எடுத்துக்கொள்ளவில்லை. தலைவருடைய பரிந்துரைகள் எல்லாவற்றையும் இரண்டு முறை சரிபார்க்கத் தொடங்கினான், லுசின்டா கம்பியூட்டரில் திரும்பக் கொடுத்துப் பார்த்தான், அல்லது பென்சிலும் தாளும் வைத்துக் கொண்டாவது செய்தான்.

எனினும் தன்னுடைய நிதானத்தை இழந்துவிடுவதற்கு அவனுக்கு நேரமில்லை. இமாண்ட் அர்டோனிஸ் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள முயன்றான். நேருக்கு நேரான எல்லாச் சிறு விஷயங்களிலும் அவன் கட்டுப்பாடோடும், அடக்கத்தோடும், தனிமையோடும் இருந்துவந்தான்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை, ஒரு சிறிய சதுக்கத்தில் அர்டோனிஸ் நடந்துபோய்க் கொண்டிருந்த போது, கருணையில்லாமல் வெயில் கொளுத்தியதால், காரநீருக்கான அழுத்தப் பொறி முன்னர் நின்ற ஒரு நீண்ட வரிசையில் சேர்ந்துகொண்டான். அவனுக்கு முன்னால் ஒரு பெண் திடீரென்று கத்தினாள். அங்கே சிறிது குழப்பம் நிலவியது. அவனைக் கடந்து விரைந்து சென்ற யாரோ ஒருவன், மற்றவர்கள் அறிய முடியா வண்ணம் ஒரு பெண்ணினுடைய கைப்பையை இவனது கை களில் திணித்துவிட்டுச் சென்ற போது, அங் கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என் பதைக் கூட அர்டோனிஸ் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தான். ஓர் அனிச் சைச் செயல் போல அர்டோனிஸ் அதைப் பற்றிப் பிடித்தான். அந்தக் கணமே, தொப்பி யணிந்த கணத்த பெண் ஒருத்தி அவனைப் பிடித்துக்கொண்டு கத்தினாள்: ''திருடன், திரு டன்! என்னுடைய பை!''

சுற்றிலும் ஒரு கூட்டம் வேகமாகக் கூடி யது. எந்த நகரத்திலும் நேரத்தை எப்படிப் போக்குவது என்பது தெரியாத மக்கள் எப் போதுமே, அதிலும் குறிப்பாக ஞாயிற்றுக் கிழமையில், எந்த ஒரு காட்சியைக் காணவும் உடன் தயாராக இருப்பார்கள். இவை எல் லாமே ஏதோ சரியாகப் புரிந்துகொள்ளாத தால் ஏற்பட்டவை என்று அர்டோனிஸ் கூறி யவை வீண் முயற்சியாகப் போனது.

போலீஸ் ரோபாட், இதனோடு விவாதம்

செய்து கொண்டிருப்பது பயனற்றது, இரு தரப்பு ஆட்களின் கதைகளையும், தாங் களாகவே சாட்சியமளிக்க வந்தவர்களின் வாக்கு மூலங்களையும், அங்கே நின்று மனக் கலக்கமுறாதபடி பதிவு செய்தது. பிறகு அது பையின் உள்ளடக்கத்தை விரைந்து சோதனை செய்தது, அந்தப் பெண்ணினுடைய பொருள் களே இருந்தன என்பதையும் உறுதி செய்தது. பிறகு தனது தொப்பியை நளினமாகத் தொட்டுவிட்டபடி, முதல் ரோபாட் தந்த வானொலி அடையாளத்தின் பேரில் கார் வந் தது. அதிலிருந்து துள்ளிக்குதித்து வெளிவந்த மற்ற இரு ரோபாட்டுகளிடம் அர்டோனிசை ஒப்படைத்தது.

வாய்ப்புக் கேடான அந்த விவகாரத்தில் மாட்டிக் கொண்டுவிட்ட தனது உதவியாளனை மீட்பதற்கு ஹ்யூகோ லென்ஸ் முயன்றான். அது எல்லாமே புரிந்துகொள்ளாததால் ஏற் பட்டிருக்க வேண்டும் என்பதை விளக்கிச் சொல்வதற்காக ஆர்னோ காம்புடன் பல முறை சந்தித்தான்.

இவனது வேண்டுகோள்களுக்குப் பதி லளிப்பது போல உலையாத குரலில் போலீஸ் தலைமை அதிகாரி, ''நல்லது, நாம் விஷயங் களைப் பிரித்துப் பார்க்கலாம், எனது அருமை டாக்டர் லென்ஸ்,'' என்று கூறு வான். பிறகு விளையாட்டுத்தனமான குரலில் கேட்க ஆரம்பிப்பான்: ''அந்தக் கணத்தில் நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்? இன்று நீங்கள் வழக்கத்திற்கு மாறாக வெளிறிக்

காணப்படுகிறீர்கள். உங்களுக்காக யாரேனும் கவலைப்பட இருக்கிறார்களா?''

''இன்னும் இல்லை,'' கிண்டல் தொனிக்கச் சிரித்தான் லென்ஸ்.

''இன்னும் எவ்வளவு நேரம் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது?'' தனது வருகைகளில் ஒன்றின் போது காம்ப் வினவினான்.

''மேலும் ஒரு மாதம்.''

''ஒரு முழுமையான பேரூழிக்காலம்.''

''ஓரளவுக்குக் குறைவு!'' லென்ஸ் அவனைத் திருத்தினான்.

''பொருட்படுத்த வேண்டாம்,'' என்றான் காம்ப், அவனது குரலில் இந்த முறை வினயம் தொனித்தது. ''கடைசியில் ஏதோ வகையான முனைப்புகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பது போலக் காணப் படுகிறது.''

''நீங்கள் சொல்லவில்லையே!'' கவன மடைந்தபடி வியந்து கேட்டான் லென்ஸ். ''என்ன மாதிரி?''

''அது இன்னமும் ரகசியமாகத்தான் இருக் கிறது.''

''என்னிடமிருந்து கூடவா?''

''தங்களிடமிருந்து கூடத்தான், எனது அருமை டாக்டர்,'' என்று உறுதிப்படுத்திய போலீஸ் தலைமை அதிகாரி, தனது தோள் களைக் குலுக்கிக் கொண்டான்.

''ஆனால் நிச்சயமாக நான் ஓர் அக்கறை கொண்ட நபர் என்று நீங்கள் அழைக்க லாம்!'' என்று லென்ஸ் கத்தினான்.

''அது மேலும் அதிகமான காரணம்,'' என்று விளக்கினான் காம்ப். ''மேலும் உங்கள் உதவியாளனைப் பொருத்தமட்டில், அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவன் அருமையான கைகளில் இருக்கிறான்.''

* * *

ஓரியா டோர்வியினுடைய அலுவலக வாசற் படியை அநேகமாக ஹ்யூகோ கடந்து முடிப்பதற்கு முன்பாகவே அவள் கேட்டாள், ''என்ன நடந்தது, டாக்டர் லென்ஸ்?''

''ஏன்?'' என்று நடுக்கத்தோடு வினவினான் லென்ஸ்.

''சற்று கண்ணாடியில் பாருங்கள்.''

தனது தாடியை ஒரு முறை இழுத்து விட்டுக்கொண்டு லென்ஸ் கூறினான்: ''போன முறை நீங்கள் என்னுடைய நோயை அறுதியிட்டீர்கள்: கடுஞ்சோர்வு.'' பிறகு அவன் மூலையில் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

ஓரியா டோர்வி தலையை ஆட்டிவிட்டுக் கேட்டாள்: ''ஊதாப்பூவுடனான இந்த விவகாரத்தை நீங்கள் எதார்த்தமாகவே வினயமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

ஓரியா டோர்வியினுடைய வினா ஒட்டு மொத்தமாக லென்ஸை பொறுமை இழக்கும்படி செய்தது, அவன் சொன்னான்: ''ஆமாம், முழு விவகாரத்தையுமே நான் வினயமாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால்,

வாழ்வதற்கு இன்னும் எனக்கு மூன்று வாரங்கள் மட்டுமே இருக்கின்றன.''

இதற்கான விடைக்குரிய வார்த்தைகள் கிடைக்காது ஓரியா திண்டாடினாள்.

தனது நெற்றிக்கு நேராக ஹ்யூகோ கையால் துடைத்துக்கொண்டு திடீரென்று கேட்டான்: ''எனது அருமை ஓரியா, அத் தகைய கடிதம் ஒன்றை நீங்கள் பெற்றிருந் தால், நீங்கள் என்ன நினைப்பீர்கள்?''

''அதை எழுதியவனுக்கு பத்திரிகையில் ஒரு நன்றிக் கடிதம் வெளியிட்டிருப்பேன்,'' என்று அவள் பதிலளித்தாள்.

''எதற்காக?''

''உண்மையில் பூவுக்காகத்தான்.''

''ஆனால் வினயமாகவேயா?''

''வினயமாகவேயா?'' சிந்தனை வயப்பட்ட மனநிலையில் ஓரியா கேட்டாள். ''ஆனால் கடிதத்தின் ஆசிரியன் என்னிடம் என்ன கோரியிருக்க முடியும்?''

ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தபடி, ''என் னிடத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் போன்றே கிட்டத்தட்ட இருந்திருக்கும் என்று நாம் கற்பனை செய்துகொள்ளலாம்,'' என்று லென்ஸ் ஆலோசனை கூறினான். ''உண் மையில் அது பணிபுரியக் கூடிய துறை யோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். உறுப்புகள் மாற்றுவதை எல்லாம் தவிர்க்கும் படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்க லாம்.''

''பெரும்பாலும் அதை நான் மறுத்தே

இருப்பேன்,'' என்று ஓரியா சிந்தனை வயப் பட்டபடி கூறினாள்.

''உன்னுடைய உயிருக்கு ஆபத்து ஏற் படுத்துவதாக இருந்தால் கூடவா?''

லென்ஸினுடைய கண்ணை உறுதியோடு பார்த்துக் கொண்டு, ''அப்போது கூடத் தான்,'' என்று ஓரியா பதிலளித்தாள்.

ஓரியா டேர்வியினுடைய சாய்வுமேசைக்கு எதிரே இருந்த திரையில் வெளிச்சம் தெரிந்தது, வெள்ளைத் தொப்பியுடன் கவலை யோடு காணப்பட்ட ஒரு அறுவை மருத்துவன் அவளுக்கு முன் தோன்றினான்.

''நான் வருந்துகிறேன், நான் சொல்ல விரும்பினேன்...''

''எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்...'' எழுந்து நின்ற ஓரியா அவனை இடைமறித் தாள். ''நான் இதோ வந்து கொண்டிருக் கிறேன்.''

திரை இருளடைந்து போனது. தனது பார்வையாளன் பக்கம் ஓரியா டேர்வி திரும்பிச் சொன்னாள்: ''என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? வார்டைச் சுற்றிப் பார்க்க என்னோடு நீங்கள் ஏன் வரக்கூடாது. சொல்லப் போனால் பிறகு நீங்கள் எங்களது வேலை பற்றி நேருக்கு நேராக வந்துவிடுவீர் கள். இதுவரை நீங்கள் அறிந்தன எல்லாம் செவிவழிச் செய்திதான். அதனால் தான் இந்தக் குறிப்பிடத்தக்க பணி குறித்து நீங்கள் ஒரு தவறான கணிப்புக் கொண்டிருக்கிறீர் கள்.''

வார்டைச் சுற்றிப் பார்ப்பது நீண்ட நேரம் எடுத்துக்கொண்டது. புனித பார்த்த லோமியூ கிளினிக்கில் ஹ்யூகோ லென்ஸ் பார்த்தது அவனைத் திடுக்கிடச் செய்தது. அவனுடைய உயிரோட்டமுள்ள கற்பனைக்கும் அப்பாற்பட்டு 'ஓரியா டேர்வியினுடைய அற்புதங்கள்' இருந்தன. நிறைய விஷயத்தை அவன் எதிர்பார்த்திருந்தான். ஆனால் சாதனை கள் அவ்வளவு மனத்தை வளைப்பதாக இருந் தன...

ஓரியாவுடன் லென்ஸ் நடந்து சென்றான், மூத்த அறுவை மருத்துவன் அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தான். ஓரியா டேர்வியினுடைய உதடுகளினின்றும் வந்து கொண்டிருக்கின்ற வியப்பை ஏற்படுத்தும் சொற்களைக் கவனித்தபடி மருத்துவர்கள் குழு ஒன்று அவளைப் பின் தொடர்ந்து சென் றது.

அவர்களுடன் முதலாவது வார்டுக்குச் சென்ற லென்ஸ் அங்கு படுக்கைகள் ஏதும் இல்லாததைக் கண்டு உடனடியாகத் திடுக் குற்றான். நோயாளிகள் எங்கே என்று கிட்டத்தட்ட கேட்கும் நிலையில் இருந்தான், ஆனால் பிறகு பொறுத்துக் கொள்வதென்று முடிவு செய்தான்.

அறையின் மையத்தில் இருந்த பெரிய ஓர் அமைப்பானது லென்ஸுக்கு ஒரு நியூட்ரினோ துப்பாக்கியை நினைவூட்டியது. அதுவரை ஓரியா டேர்வி நடந்து சென்று, கண்ட்ரோல் பேனலில் ஏதோ தந்திரங்களைச்

செய்தாள். திடீரென்று ஒரு சத்தத்தோடு, அமைதியான வார்டின் வழியாக ஓர் அவல மிக்க குழந்தையின் குரல் கத்துவது கேட்டது.

''நீ கொஞ்சம் அழு. அழுவது நுரையீரல்களை வளர்க்கும்,'' என்றாள் ஒரியா.

பல்வேறு சாதனங்களின் குறியளவுகளை அவள் கவனத்தோடு சோதித்தாள், பிறகு அறுவை மருத்துவனிடம் ஏதோ சொன்னாள், அவன் உடனடியாக தனது குறிப்புகளில் அதைக் குறித்துக்கொண்டான்.

சாதனத்தின் பக்கம் தலையாட்டிவிட்டு, தனக்கு அருகே நின்றுகொண்டிருந்த ஓர் இளம் மருத்துவனிடம் லென்ஸ் குசுகுசுவென்று கேட்டான்: ''அங்கே யார் இருப்பது?''

''நீங்களே கேட்க முடியும், அது ஒரு குழந்தை,'' என்று சாதனத்திலிருந்து தனது பார்வையை மாற்றாமலேயே அந்த மருத்துவன் பதிலளித்தான்.

இதற்கிடையில் அழுகின்ற சப்தமானது அடங்கிப் போயிருந்தது. ''அதனுடைய தாயார் எங்கே?'' என்று லென்ஸ் கேட்டான்.

''அதற்குத் தாயாரே இருந்ததில்லை,'' என்று மருத்துவன் சாதாரணமாகக் கூறினான். பிறகு லென்ஸைப் பார்த்துக் கொண்டு, சில விளக்கங்கள் தேவைப்பட்டன என்று அவன் முடிவு செய்தான்: ''பயோ சேம்பரில் ஒரு செல்லிலிருந்து இந்தக் குழந்தை வளர்க்கப்பட்டது.''

அந்தச் சாதனத்தின் பக்கமாக உள்ள அசையக் கூடிய சவ்வு அருகே ஓரியா டேர்வி காதை வைத்தாள்.

''அமைதி!'' என்று கிசுகிசுத்தான் தலைமை அறுவை மருத்துவன், இளம் மருத்துவன் மௌனமாகி நின்றான்.

அடுத்த வார்டில் மூன்று நோயாளிகள் இருந்தார்கள். அவர்களை மக்கள் என்று அழைக்கலாமா என்று லென்ஸ் நினைத்துக் கொண்டிருந்தான். முற்றாக மனிதனுடைய தலையும் நெருப்பு வண்ணத்தில் தலைமுடியும் கொண்டு, கையாளப்படும் ரோபாட் போல சன்னலுக்கருகில் ஒன்று இருந்தது.

''எப்படி உணர்கிறீர்கள்?'' என்று ஓரியா வினவினாள்.

''நன்றி உங்களுக்கு, இன்று பரவா யில்லை,'' என்று தலை பதிலளித்தது.

''சிறு இயக்கங்களை அவன் ஏற்கெனவே கற்றுக் கொண்டுவிட்டான்,'' என்று தலைமை அறுவை மருத்துவன் கூறினான்.

''ஆக, சீக்கிரமே உங்களால் தனியாக நடக்க முடியும்,'' என்று உற்சாகப்படுத்தும் குரலில் ஓரியா பேசினாள், தலை முறுவலித்தது.

''புதுக் காற்றில் வெளியேவா?''

''முதலில் நீங்கள் வார்டுக்குள்ளாகச் சுற்றி வருவதற்குக் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும்,'' இரண்டாவது நோயாளியை நோக்கி நடந்தபடி ஓரியா கூறினாள்.

காற்று வெளியேற்றப்பட்ட அறைக்குள்

ளாக ஒரு வெண்ணிற மேசையின் மீது ஏதோ ஒருவகை நுண் துளைகளை உடைய உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு குறுகிய நீண்ட சதுரம் ஒன்று கிடந்தது.

''இங்கே, நீங்கள் விரும்பினால், மனித மூளையின் ஒரு படியை நாம் பெறலாம்,'' என்று ஓரியா லென்ஸுக்கு விளக்கினாள். ''இந்த மனிதன் குணமாக்க முடியாதபடி நோய்வாய்ப்பட்டிருந்தான், நீண்ட காலமாக அந்த வியாதியை அவன் மறைத்துக் கொண்டு வந்தான். அவன் இந்தக் கிளினிக்கிற்கு வந்தபோதோ விஷயங்கள் எல்லாம் மிகவும் சுணங்கிப் போய்விட்டன.''

''யார் அவன்?'' லென்ஸ் வினவினான்.

அவனுடைய பெயரை லென்ஸிடம் ஓரியா கூறினாள்.

''பிரபலமான இசையமைப்பாளனையா நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?''

அவள் தலையசைத்து விட்டுத் தொடர்ந்து பேசினாள்: ''நோயாளி இங்கே கொண்டு வரப்பட்ட பொழுது, உணர்வற்ற நிலையில் இருந்தான். வாழ்வதற்கு ஓரிரு நாட்களையே அவன் கொண்டிருந்தான். மனிதனால் சாத்தியமான ஒவ்வொன்றையும் நாங்கள் செய்தோம், ஆனால் அறுவை குறுக்கீடு எந்தப் பயனையும் தரவில்லை. ஆகவே, பிறகு நாங்கள் அவனது மூளையில் அடங்கியுள்ள தகவல்களைப் பதிவு செய்தோம் — இந்த நினைவுப் பொறிக்குள்ளாக. என்னை நம்புங்கள், அது சுலபமானதல்ல — பதினைந்தாயிரம்

மில்லியன் செல்கள்! ஆனால் இப்போது மனித இனத்திற்குத் தலைசிறந்த இசையமைப்பாளனை ஓரளவுக்கு எங்களால் திரும்பக் கொணர முடியும்.''

''ஆக இறந்து போன மனிதன் போன்ற ஒரு பிரதியை உங்களால் உருவாக்க முடியும்?'' என்று அதிசயித்தவனாய் லென்ஸ் கேட்டான்.

''துரதிர்ஷ்டவசமாக சரியான நகலை நம்மால் எடுக்க முடியாது,'' என்றாள் ஓரியா. ''பெரும் வியாதி காரணமாக அவனது உடல் வீழ்த்தப்பட்டு விட்டது, அதைத் திரும்பக் கொணர வேண்டும் என்ற எங்களது முயற்சி வேதனைப்பட்ட மரணத்திற்கே வழி வகுக்கும். அதுபற்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, திரும்பக் கொண்டுவருமாறு நாங்கள் இன்னமும் கற்றிருக்கவில்லை.''

''என்ன மாதிரியான அமைப்பில் அவனுக்கு நீங்கள் உயிரைத் திரும்பக் கொடுப்பீர்கள்?'' என்று வினவினான் ஹ்யூகோ லென்ஸ்.

''நீங்கள் இங்கே பறந்து வந்து கொண்டிருந்த போது, பள்ளத்தாக்கில் இருந்த கோபுரத்தைக் கவனித்தீர்களா?'' என வினவினாள் ஓரியா டேர்வி.

லென்ஸ் தலையசைக்க, நீண்ட சதுரப் பொருளைச் சுட்டிக்காட்டியபடி அவள் தொடர்ந்து பேசினாள்: ''இந்தக் கோபுரமே அவனது வீடாக இருக்கும், அவனது மூளையின் பிரதியை ஆம்பிளிபயருக்குள்ளாக நாங்கள் இயக்குகின்ற போது, இறந்த

மனிதன் செய்தது போல அதனால் துல்லி யமாகச் செயல்பட முடியும். படிக்கவும், கடிதங்களைச் சொல்லி எழுதச் செய்யவும் முடியும். இவை எல்லாவற்றிலும் மிக முக் கியமானது, அதனால் இசையை எழுத முடி யும். ஆனால், எடுத்துக் காட்டாக, அத னால் ஓர் அழகிய பெண்ணோடு பூங்கா வழி யாக நடமாடவோ, கடலில் குளிக்கவோ, இறைச்சிக் கண்டத்தைச் சாப்பிடவோ முடி யாது.''

''ஆனால் சிந்திப்பது வசிப்பதற்குச் சமமா னது,'' என்றான் தலைமை அறுவை மருத்து வன்.

''மேலும் அவனால் எவ்வளவு காலம்... அந்தக் கோபுரத்தில்... உயிர்வாழ முடியும்?'' என வினவினான் லென்ஸ்.

''சித்தாந்த நிலையில் எப்பொழுதுமே தான்,'' என்று பதிலளித்தாள் ஓரியா டேர்வி. ''இந்தக் கோபுரமானது மனிதர்களுக்கு அத்தியாவசியமான இசையின் ஊற்றாக மாறி இருக்கும். மொத்தத்தில் இது போன்ற பணியால் மனித இனத்தின் நன்றியறிதலுக்கு நாங்கள் தகுதியுடையவர்கள் என்று நீங்கள் நினைக்கவில்லையா, டாக்டர் லென்ஸ்?''

''மனித இனத்தின் நன்றி ஒருவகையில்... ஆனால் இசையமைப்பாளனின் நன்றியறித லைப் பொருத்து... அது பற்றி என்னால் நிச்சயம் சொல்ல முடியாது,'' என்று அடங்கிய குரலில் முடித்தான் ஹ்யூகோ லென்ஸ்.

ஓரியா டேர்வியினுடைய பரிவாரத்தைச் சேர்ந்த பிற டாக்டர்கள் கணத்த பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

படுக்கையில் — அறையில் ஒன்றே ஒன்று தான் கிடந்தது — நல்ல உடற்கட்டு வாய்ந்த இளைஞன் ஒருவன் படுத்திருந்தான். மருத்துவர்கள் என்ன சொல்லிக் கொண்டு இருந்தார்கள் என்பதை மிகுந்த கவனத்தோடு அவன் கேட்டுக் கொண்டிருந்தான். ஓரியா டேர்வியை விட்டு அவனது கண் ஒரு நொடிப் பொழுதுகூட விலகவில்லை.

அந்த இளைஞனைப் பார்த்து முறுவலித்தபடி, ''எல்லா பிரச்சினைகளிலும் இதுவே மிகவும் சுலபமானதாக இருந்தது,'' என்றாள் ஓரியா, அவனும் ஒளிமிக்க பார்வையோடு ஏற்றுக் கொண்டான். தசைப் பற்றுடைய உடலின் பல்வேறு பகுதிகளோடு இணைக்கப்பட்டிருந்த பல்வேறு மின்வாய்களினின்றும் வந்த குறியீடுகளை ஓரியா உற்று கவனித்தாள். தான் பார்த்ததைக் கண்டு மகிழ்ச்சியுற்றாள்.

''இவன் ஒரு விண்வெளி விமானி,'' என்று விளக்கினாள் ஓரியா. ''பூமிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது புளூட்டோ மண்டலத்தில் எங்கோ ஓரிடத்தில் கதிரியக்கத்திற்கு ஆளாகி விட்டான். அதிர்ஷ்டவசமாக சரியான நேரத்தில் எங்களிடம் வந்து சேர்ந்தான். ஒன்றன்பின் ஒன்றாக அவனது முக்கிய உறுப்புகள் அனைத்தையும் இதயத்திலிருந்து சிறுநீர்ப்பைகள் வரை நாங்கள்

மாற்றிவிட்டோம். இதன் முடிவை நீங்களாக வே இப்பொழுது பார்க்க முடியும், டாக் டர்.''

''எனக்குச் சொல்லுங்கள்... மற்றுமொரு விண்வெளிப் பயணத்திற்கு என்னால் போக முடியுமா?'' என்று அந்த இளைஞன் கிசுகிசுக் குரலில் கேட்டான்.

''விண்வெளியில் மட்டுமே உங்களால் உயிர் வாழ முடியும்,'' என்று பதிலளித்தாள் ஒரியா டேர்வி. ''எந்த பளுவும் உன்னைக் கொல்லும். இப்பொழுதிலிருந்து உன்னுடைய வசிக்குமிடமானது எடையின்மையில் இருப்பது தான்.''

இதே ஒழுங்கில் ஊர்வலமானது வெளி வாசலை நோக்கி நகர்ந்தது.

''கணப்பொழுது கேளுங்கள்...'' என்றான் அந்த இளைஞன்.

புருவங்களைச் சுழித்தபடி, எனினும் பின் னுக்குத் திரும்பி, ''என்ன அது?'' எனக் கேட்டாள் ஒரியா. ஒவ்வொருவரும் நின்றுவிட் டார்கள்.

இளைஞனோ பேச ஆரம்பித்தான்: ''பாருங் கள், இங்கே பூமியில் மண உறுதி செய்யப் பட்ட பெண் ஒருத்தி இருக்கிறாள்...'' அவன் இப்போது நடுங்கிக் கொண்டே கலவரமுற்ற வகையில் பேசினான். ''அவள் எனக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறாள். காத்துக் கொண்டு... அவளது வானொலிக் கடிதங்கள் மூலமாக அதை நான் அறிவேன்...

இப்பொழுது என்ன நிகழும்?'' நடுக்கமான குரலில் அவன் பேசினான்.

''உங்களுடைய மண உறுதி செய்யப்பட்ட பெண்ணால் எடையின்மையில் வாழ முடியுமா?'' ஓரியா வினவினாள்.

''அதை அவள் வெறுக்கிறாள், அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. விண்வெளிப் பயணத்திற்கு நான் புறப்படுவதற்கு முன்பு, நாங்கள் சேர்ந்து சென்றோம்...''

''அவளை மறந்து விடுவதுதான் உங்களுக்குச் சிறந்ததாக இருக்க முடியும்,'' என்று மென்மையான குரலில் ஓரியா இடைமறித்தாள். ''நிரந்தரமாக.''

''ஆனால்...''

''எப்படி ஒரு மீனால் வறண்ட நிலத்தில் வாழ முடியாதோ, அதே போல சாதாரண புவியீர்ப்பு நிலையில் உங்களால் வாழ முடியாது என்பதை நீங்கள் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய இயற்கையான சுற்றச் சூழல் எடையின்மை, எடையின்மை மட்டுமே,'' என்று கூறி ஓரியா டேர்வி, புறப்படுவதற்குத் திரும்பினாள்.

மேலும் பல வார்டுகளை அவர்கள் பார்வையிட்டார்கள், ஆனால் இளைஞனுடைய துன்புற்ற கண்கள், லென்ஸையே தொடர்ந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன...

கிளினிக்கை அவர்கள் சுற்றிப் பார்த்த பிறகு, ஓரியா டேர்வி, லென்ஸை வழியனுப்புவதற்காகச் சென்றாள்.

''ஆக நான் உங்களை உறுப்பு மாற்றம் பற்றி முழுமையாகக் கூட்டிச் செல்லவில்லை?'' என அவள் கேட்டாள்.

''அதற்கு மாறாக, இப்போதைய உங்களுடைய பணியை நான் மிகவும் கண்டிப் போடு எதிர்க்கிறேன்,'' என்று லென்ஸ் பதிலளித்தான்.

''இங்கே நாங்கள் மக்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம்.''

''அவர்களைக் காப்பாற்றுகிறீர்கள் — ஆமாம், ஆனால் என்ன விலையில்?''

''உயிர்வாழும் வாய்ப்புக்கு எந்த விலையும் மிகக் கூடுதலாக இருக்க முடியாது,'' ஓரியா டேர்வி அவனுக்கு உறுதி கூறினாள்.

''அதுபற்றி என்னால் அவ்வளவு உறுதி யாகக் கூற முடியாது,'' என்று பௌதிகவிய லாளன் அவளை இடைமறித்தான். இதற் குள்ளாக அவர்கள் லென்ஸினுடைய ஆர் னிதாப்டரினின்றும் அதிக தூரத்தில் இருக்க வில்லை.

''கிளினிக்கில் சில நாட்களை உங்களைச் செலவிடுமாறு என்னால் இணங்கவைக்க முடியுமா?'' ஓரியா திரும்பவும் வினவினாள். ''வெறுமனே சோதனைக்காகத்தான். எவரது அறுவைக் கத்தியும் உங்களைத் தொடாது. நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.''

''நான் முற்றிலும் நலமாக இருக்கிறேன்,'' என்றான் ஹ்யூகோ லென்ஸ் உறுதியாக தலையை அசைத்தபடி, தனது ஊர்தியின் புழைவாயிலைப் பாதி திறந்துவிட்டான்.

* * *

ஜூலை 5 ஆம் தேதி நாட்டின் போலீஸ் படை முழுக்க விழிப்போடு இருந்தது. தெருக்களிலும் சதுக்கங்களிலும் மக்கள் கொதித்துக் குமுறிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்திலோ, மற்றொரு இடத்திலோ திரண்டு வருவது தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. இன்னும் பொதுமக்களிடம் வீரா வேசப் பேச்சை விரும்பும் மன ஒற்றுமை இல்லை. எந்த ஒரு தாக்குதலினின்றும் பௌதிக வியலாளன் லென்ஸைக் காப்பாற்றுவதற்குத் தேவையான ஒவ்வொன்றும் செய்யப்பட வேண்டும் என்று சிலர் கோரினார்கள். இதற்கு மாறாக மற்றவர்களோ, உலகத்தில் மிகச் சில விஞ்ஞானிகள் இருப்பது நல்லது. ஒரு பௌதிகவியலாளனுக்காக, அவன் புகழ் பெற்றவனாக இருந்தாலுங்கூட, இத்தகைய குழப்பம் தேவையில்லை என்று நம்பினார்கள்.

டாக்டர் ஹ்யூகோ லென்ஸ் சாக வேண்டிய நாள் இன்றை தினம் இல்லை என்பது போல அணுவாராய்ச்சி மையத்தில் ஒவ்வொரு காரியமும் வழக்கம் போல நடந்து கொண்டிருந்தன.

அன்றைய நாளில் லென்ஸ் தனது பழைய நிலையில் ஒரே சீராக இருந்தான். மிக நீண்ட நாட்களுக்கு முன்னரும் அவன் அப்படி இருந்ததாக அவனது சகாக்கள் காணவில்லை. அவனது வேலை விரைவாக முன்னேறியது. அவன் சிரித்துக் கொண்டும்

கேலி செய்து கொண்டும் இருந்தான். இதைக் காட்டிலும் ஊதாப்பூ பற்றிய முட்டாள்தனமான சிறு பாடல் கூடப் பாடினான்.

மதியச் சாப்பாட்டிற்குப் பிறகு தனது உதவியாளன் இமாண்ட் அர்டோனிசை தனது அறைக்கு ஹ்யூகோ அழைத்துக் கொண்டான். அவர்கள் எதைப்பற்றியெல்லாமோ நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கண்ணாடிக் கதவு வழியாக எந்த ஒலியையும் கேட்க முடியவில்லை. கதவைக் கடந்து மேலுங்கீழுமாக ஒட்டுக் கேட்பவர்கள் நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள், ஆனால் எதையுமே கேட்க முடியவில்லை: வெளிறிய கண்ணாடிக்கு நேராக இரண்டு திண்ணிழலுருவங்களை உற்றுப்பார்த்ததே அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம். மற்றவரை தன்வழிக்குக் கொண்டு வருவதற்காக ஒருவர் பலமாக அங்கச் சேட்டைகள் மூலமாக முயன்று கொண்டிருப்பது போலக் காணப்பட்டது. மற்றவனோ அதன் பிரதிபலிப்பாக அவ்வப்பொழுது தனது தலையை மட்டுமே அசைத்துக் கொண்டிருந்தான்.

ஓரிரு நாட்களுக்கு முன்னதாகவே பாதுகாப்பிலிருந்து இமாண்ட் அர்டோனிஸ் தனது கைதின் மூலம் அவன் எந்த மறைசெய்தியையும் வெளியிடவில்லை என்ற நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தான். அண்மைக் காலத்திய நுணுக்கமான பொய்

கண்டுபிடிக்கும் கருவி உள்ளடங்கிய சக்தி வாய்ந்த சாதனங்கள் தொடர்பான விசாரணை செய்தும், வேறு எந்தக் குறிப்பிட்ட தகவலையும் அவனிடமிருந்து அவர்களால் பெற முடியவில்லை.

அர்டோனிஸ் தொடர்ந்து ரகசிய கண்காணிப்பில் இருக்க வேண்டும் என ஆர்னோகாம்ப் ஒரு கட்டளையை விடுத்திருந்தான்.

அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த நாளில் சாத்தியமான குற்றவாளி சுதந்திரமாக விடப்பட வேண்டும் என்று போலீஸ் தலைமை அதிகாரி கணித்திருந்தான். எதற்காகவும் தான் சந்தேகிக்கப்படவில்லை என்று இமாண்ட் அர்டோனிஸ் நினைக்கலாம். நெருக்கடியான நேரத்தில் நீதியின் அமைப்புகள் அவனைத் திடுமெனப் பாய்ந்து பற்றும், குற்றம் தவிர்க்கப்படும். இல்லையென்றால்... நல்லது, பொருட்படுத்த வேண்டாம். ஹ்யூகோ லென்ஸ் சாவதாக இருந்தாலுங்கூட குறைந்தது ஊதாப் பூக்கள் அனுப்பப்பட்ட மற்ற பிறராவது அதற்குப் பின்னர் ஆபத்தில்லாமல் இருப்பார்கள்.

அணுவாராய்ச்சி மையத்தில், போலீசால் சோதிக்கப்பட எந்த ஓர் ஊழியரும் இல்லை. நாள் முழுக்க டாக்டர் லென்ஸை தனது பார்வையினின்றும் விடாமல் ஆர்தர் பார்க் பார்த்துக்கொண்டான்.

மாலையில் தனது வீட்டிற்கு லென்ஸ் பறந்து வந்த பொழுது, வழிக்காவற் குழு அவனைத் தொடர்ந்து வந்தது. பாதுகாப்பு

ஆர்னிதாப்டர்கள் திறமையாகவும், கவனமாக வும் சுற்றுப்பயணம், அல்லது ஓட்டப் பந்தயத் திற்கான பொதுமக்கள் வாகனங்கள் போல உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தன. அதற்கு மேலும் என்ன இருக்கிறது என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

பௌதிகவியலாளனது வீட்டிலும் கூட காம்பினுடைய ஆட்களுக்கு வேலை கடுமை யானதாக இருந்தது. அணுவாராய்ச்சி மையத் தைச் சுற்றிப் பாதுகாப்பு மண்டலம் இருப்பது போல லென்ஸினுடைய வீட்டைச் சுற்றிலும் பாதுகாப்பை ஏற்பாடு செய்வதில் அவர்களால் வெற்றிபெற முடிந்தது.

நாளும் கடந்தது, எதுவும் ஏற்பட்டு விட வில்லை. லென்ஸ் நலமாக உயிரோடு இருந் தான். ஊதாப்பூ விவகாரம் மிகப் பெரிய கேலியாகவோ, மொத்தத்தில் ஓர் ஏமாற்று வேலையாகவோ இருக்கக் கூடும் என்று வெட்கப்படுவது போல ஆர்னோ காம்ப் கூட கணநேரம் சிந்தித்தான்.

* * *

நடு இரவில் தனது வீடியோபோன் மணி ஒலிப்பினால் ஆர்னோ காம்ப் விழித் தெழுந்தான். அப்போது தான் தொடங்கி இருந்த இரவின் ஓய்விலிருந்து அவன் உசுப் பப்பட்டு, தூக்கத்தினால் இன்னமும் கரகரப்

பான குரலில் பேசினான்: ''காம்ப் இங்கிருக் கிறேன்...''

''ஏஜண்ட் 17 அறிவிக்கிறேன். ஹ்யூகோ லென்ஸ் இறந்துவிட்டான்,'' காற்று வழியாக செய்தி வந்தது.

லென்ஸ் மரணத்திற்குச் சாத்தியமான காரணங்களை எல்லாம் விவாதித்த பிறகு, மருத்துவ நிபுணர்களால் ஓர் உடன்பாட்டிற்கு வருவது சிரமமானதாக இருந்தது. விஷயங்கள் கீழ்வருமாறு இருந்தன: நடு இரவு கழிந்த உடனேயே டாக்டர் லென்ஸ் இறந்து போயிருக்கிறான். அவனது உடலில் வன் செயலால் ஏற்பட்ட ஊறுபாட்டின் அடை யாளங்கள் இல்லை. அவன் நஞ்சூட்டப்பட்டது போலவும் காணப்படவில்லை, எனினும் இது குறித்து வேறுபட்ட கருத்துகள் நிலவின. எந்த வகையிலும் சம காலத்திய மருத்துவத்திற்கு அறிமுகமான எந்த நஞ்சும் இருந்ததற்கான அடையாளங்கள் பலியானவனின் உடலில் காணப் படவில்லை.

அண்மைக் காலத்திய தாங்க முடியாத நெருக்கடியின் பளுவை அவனது இதயத்தால் தாங்கிக் கொள்ள முடியாது போயிருக்கும் என்று சிலர் முடித்து வைத்தார்கள். கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக வளர்ந்து வந்த நரம்புச் சிக்கலால் ஏற்பட்ட கோளா றுதான் அவனது சாவிற்குக் காரணம் என்று பிற மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். தங்களுடைய கருத்திற்கு ஆதரவாக, ஓர்

உண்மையான டமோக்ளசின் கத்தியினால்* தொண்ணூறு நாட்களுக்கு மரண பயத்தின் கீழ் வாழ்ந்ததால் ஏற்பட்ட அதீதமான மனித நெருக்கடியை அவர்கள் மேலும் தொடர்ந்தார்கள். அச்சுறுத்தக் கூடிய வகையில் காத்துக்கொண்டிருந்த காலமானது, வாழ வேண்டும் என்ற அவனது விருப்பத்தைப் பெரும்பாலும் குறைத்திருக்காது என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

டாக்டர் லென்ஸினுடைய சாவுக்குக் காரணமான சூழ்நிலைகளை ஆராயுமாறு ஒரு விசாரணைக் குழு அமைப்பதற்கான அறிவுரையை ஜனாதிபதி வெளியிட்டார். நாட்டின் மருத்துவ மையத்தின் இயக்குநரான ஒரியா டேர்வி அந்தக் குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள்.

அசல் அநாமதேயக் கடிதத்தில் குறிப்பிட்ட நேரத்தில் டாக்டர் லென்ஸினுடைய மரணம் ஏற்பட்டிருந்தது, ஈவ் சாயிச்சிக்கு உறுதிக் குலைவை ஏற்படுத்தி இருந்தது. வெளிப்படையாகவே, அவன் பெற்றிருந்த பூவானது ஒரு சோம்பேறித்தனமான அச்சுறுத்தல் இல்லை என்பதே இதன் பொருளாகும். கடிதத்தை எழுதியவன் கேட்டிருந்த கோரிக்

---

* டயானிஷஸ் என்ற கிரேக்க அரசனின் இன்பத் தோழன் டமோக்ளச். அரச வாழ்வின் நிலையாமையை அறிவுறுத்த டயானிஷசினால் டமோக்ளசுக்கு அளித்த அரச விருந்தின் போது அவன் தலைக்கு மேலே ஒற்றை மயிரில் தொங்கவிடப்பட்ட வாள் குறித்த நிகழ்ச்சி. — மொ-ர்.

கைகளுக்கேற்ப அவன் இப்போது போகப் போகிறானா, அது மிகவும் சுணங்கிவிட்டாலும், அக்குவாசிட்டியில் வேலைகளை நிறுத்தப் போகிறானா? துறப்பண வேலையை வெறும னே உறையச் செய்யப் போகிறானா?

எந்திரங்களை நிறுத்துவதில் சிக்கல் ஒன்றும் ஏற்படப் போவதில்லை, ஆனால் பிறகு? ஊதாப்பூ பற்றிய எல்லாப் பரபரப்பும் அடங்கிப்போகும், அவனுடைய எதிரிகள் இவன் தொடங்கி பிறகு கைவிட்டு விட்ட வேலையைக் கைப்பற்றுவார்கள். தலைமை புவியியலாளன் ஒரு மரமண்டையைத் தேடிக் கொண்டிருக்குமாறு விடப்படுவான்.

இல்லை, இப்போது பின்வாங்குவது என்பது மிகவும் சுணங்கிவிட்டது. துறப்பணப் பணியை மிகமிகக் குறைந்த பின்னத்தில் அவன் விட்டு விட்டால் கூட இன்னும் தோல்வி அடைந்த தாகும்.

பிறகு தனது சொந்தச் சிறிய செயற்கைக் கோள் விண் வெளியில் இருப்பதற்குப் பதிலாக, அவன் மற்றொரு நிலையான துணை வனை வைத்துக்கொள்ள வேண்டிவரும் — திரும்பவும் தானாகவே வராத ஒருவகையான வாய்ப்பினை, தனது உண்மையான வெற்றி யைக் கைப்பற்ற அவன் தவறியதால், தனது சொந்தத் துணிவின்மையில் எண்ணக் குலைவு ஏற்படும்.

பின்வாங்குதல் இல்லை, ஆனால் தாக்குதல் அவனது குறிக்கோள். முடிந்த அளவுக்கு துறப்பணப் பணியின் கால அட்டவணையை

விரைவுபடுத்துவது தலையாயதாக இருந்தது, கூடுதல் செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. கடிதத்தில் அவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கும் நாளுக்கு முன்னதாகத் துறப்பணப் பணியை முடிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். விரைவாக அவனது பரிசை அறுவடை செய்துகொண்டு, அவனது செயற்கைக் கோளை வாங்கிக்கொண்டு அதில் புறப்பட்டுப் போய்விடுவது நல்லது. பிறகு தீயசக்தியின் கைகளுக்கு எட்டாதபடி அவன் போய்விட முடியும்.

அங்கே விண்வெளியில் தனது முன்னைய அச்சங்களுக்காக சிரிப்பதற்கு அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கும். நிச்சயமாக அவனால் ஹாட் ஹவுசை அமைக்க முடியும். அதில் ஊதாப்பூக்களைக் கூட அவன் வளர்ப்பான். ஊதாப்பூக்கள், மேலும் ஊதாப்பூக்கள், சனியன் அதுவாகவே போகட்டும்! எடையின்மையில் பூக்கள் நன்கு வளர்வதாக கூறுகிறார்கள்...

எடையின்மையில் ஒரு மணி நேரத்திற்கு மேல் நிலைத்து நிற்க முடியாத ஆட்களைப் போலில்லாது அதிர்ஷ்டவசமாக அதனோடு சார்ந்து இருப்பது அவனுக்குச் சுலபமானதாக இருக்கும்.

போர்க்கால நிலைமைகளை நினைவு படுத்துவது போல, ஒரு கண்டிப்பான கால அட்டவணை, ஈவ் சாயிச்சின் அறிவுரையின் பேரில் அக்குவாசிட்டியில் புகுத்தப்பட்டது.

புவியியலாளர்கள், துறப்பணக்காரர்கள், என்ஜினியர்கள், கம்பியூட்டர் நிபுணர்கள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் எவரும் மேல்மட்டத் திற்கோ, அக்குவாசிட்டியின் எல்லைகளுக்கு அப்பாலோ செல்வதற்கு அநுமதிக்கப்பட வில்லை. புத்தம் புது மீன்களைப் பெறுவதற்காக மீன்பிடி கிராமங்களுக்கு அக்குவாசிட்டியை விட்டு வழக்கமாகச் செல்லும் பயணங்களைக் கூட ஈவ் சாயிச் தவிர்த்துவிட்டான். மொத்தத்தில் துறப்பணப் பணி முழுமை பெறுகின்றவரை, அக்குவாசிட்டியைச் சேர்ந்த ஆட்கள் வெளி உலகத்தோடு உள்ள எல்லாத் தொடர்புகளையும் நிறுத்த வேண்டுமென்று அவன் முடிவு செய்தான்.

ஒரே முடிவாக அக்குவாசிட்டியைத் தனிமைப்படுத்தி விட வேண்டும் என்ற ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெறுவதில் அவன் வெற்றி பெற்றான். நாட்டின் எதிர்கால வளமைக்கும் சக்திக்கும் அடிப்படையாக அமையப்போகின்ற ஆழ்துறப்பணத் திட்டப்பணிக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை, எளிதில் நம்பும் இயல்புள்ள ஜனாதிபதியை ஒப்புக்கொள்ளச் செய்வதில் மண்ணியல் மையத்தின் இயக்குநன் வெற்றி பெற்றான்.

அப்போதிலிருந்து உயிருள்ள எந்த ஆன்மாவும் அக்குவாசிட்டிக்குள்ளாக ஊடுருவுவதோ, வெளியேறிச் செல்லவோ முடியாது போயிற்று. ஈவ் சாயிச் அதன் பிறகு, சுதந்திரமாகச் சுவாசிக்க முடியும். கடற்கரைப்

1/847*

படுகைக்குக் கீழே ஆழமான பள்ளத்தில் செயற்கைக் கோளில் இருப்பதைப் போலப் பாதுகாப்பாக இருக்க முடியும் என்பதில் அவன் நிறைவு பெற்றான்.

அக்குவாசிட்டியில் இருபத்தி நான்கு மணி நேரமும் வேலை நடந்தது. மேலும் அநேக மைல் நீளமுள்ள நீருக்குக் கீழே, முழுமையான இரவின் ஆட்சி எல்லைக்குள், இரவு, பகல் என்பது இணையானதாகவே இருந்தது. ஒரு விஷேடமான 'நேரப் பணி' மூலமாக மணியானது ஒழுங்குபடுத்தப்பட்டது. 'காலை நேரத்தில்' குவிமாட வடிவமான குடியிருப்பு களின் வெளிப்பரப்பின் தனி முகப்புக் கூறுகள் ஆயிரக்கணக்கான ரிலேகள் வழியாக முடுக்கி வைக்கப்படும். ஒளி எறிவுக் கருவிகள் தெருக் களின் வழியாக குருடாக்கும் படியாக அனுப் பும் வெளிச்சமானது, இத்தகைய இரைச் சலுக்கும் இயக்கத்திற்கும் நீருக்குள்ளாகப் பழகிப்போன ஆழமான நீர்வாழ் உயிரினங் களை உடனடியாகக் கவர்ந்தது. புள்ளி விழும் ஒளிகள் துறப்பணம் நடக்கும் இடம் வரை விரிந்து சென்று 'பகல் நேரத்தை' அதிக வெளிச்ச முள்ளதாக்கும்.

சரியாகப் பன்னிரெண்டு மணி நேரத் திற்குப் பிறகு, சாலை நெடுகிலும் உள்ள விளக்குகளைத் தவிர மற்ற அனைத்தும் அணைக்கப்பட்டன. பகலும் இரவும் மாறக் கூடிய முறையானது மொத்தத்தில் வேலையின் தாள ஒழுங்கில் எந்த மாற்றத்தையும் ஏற் படுத்தவில்லை, ஏனெனில் இருபத்தி நான்கு

மணி நேரத்தில் மூன்று முறைமாற்றாக இந்த வேலை நடைபெற்றது. மக்கள் தங்களுக்குப் பழக்கமான கால சுழற்சியில் வாழ்ந்து கொண்டிருக்க முடியும் என்பதற்காகவும், நேரத்தால் தங்களது பொறுமையை அவர்கள் இழந்துவிடக் கூடாது என்பதற்காகவும், இந்த செயற்கை முறை பகலையும் இரவையும் ஈவ் சாயிச் அறிமுகப்படுத்தினான்.

குழியின் ஆழத்தில் இருபத்தி நான்கு மணி நேரமும் அனல் கொழுந்து விட்டு எரிந்தது. அவ்வப்பொழுது ஆரஞ்சு வண்ண ஒளி காளான் போன்று அதற்கு மேலே தோன்றும். அதைச் சுற்றிலுமுள்ள நீர்ப் படுகையானது அதிரத் தொடங்கும். ஒவ்வொரு அணு வெடிப்பும் பூமிக்குள்ளாக மேலும் ஓர் எட்டு முன்னேற்றம் என்பது பொருள்படும்.

அக்குவாசிட்டியிலுள்ள மக்கள் சாயிச்சை 'இரும்பு ஈவ்' எனக் குறிப்பிட்டார்கள். அவன் பொறுத்துக்கொள்ள வேண்டி இருந்த 'தலைவலிகளுக்கு' முடிவே இல்லாதிருந்தது. முன்னதாக முற்றிலும் நன்கு படித்தறியப் பட்டிருந்த பூமியின் அடுக்கில் சில மைல் தூரத்திற்குக் குடைந்து சென்றிருந்த நிலையில், தீர்க்க முடியாத புதிர்கள் நிறைந்த படுகைகளுக்கு எதிராக நின்றார்கள். கலிடோஸ் கோப்பின் வேக நிலையானது தொடர்ந்து மாறிக்கொண்டே இருந்தது, ஒவ்வொன்றையும் கையாள வேண்டிய சரியான முறை கண்டுபிடிக்கப்பட வேண்டி இருந்தது: துளையிடும் வேகங்களும், உத்திகளும் மாற்றியமைக்

கப்பட வேண்டியிருந்தன, அணு வெடிப்பின் திசை அல்லது சக்தி மாற்றப்பட வேண்டியிருந்தது, அல்லது பொங்கி வரும் லாவாவைத் தடுக்கத் தடைகளை நிறுவ வேண்டியிருந்தது. சில சமயங்களில் கண் இமைக்கும் நேரத்திற்குள்ளாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டி இருந்தது.

அனைத்துத் துறப்பணப் பணிகளையும் ஈவ் சாயிச் ஒருங்கிணைக்க வேண்டி இருந்தது: அக்குவாசிட்டியில் இருந்த குடியிருப்பாளர்களான ஏறத்தாழ மூவாயிரம் பேரையும் பார்த்தவுடனும், பெயராலும் அறிந்திருந்தான். மேற்கொண்ட ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல், கிணற்றுத் தலைக்கண்ணுக்கும் துறப்பணப் பணியின் அனைத்து சிரமமான பகுதிகளுக்கும் அடிக்கடி போய்வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இந்தத் தடித்த உருவம், அடிக்கடி மூச்சு விட முடியாமலும், தனது புருவத்தில் வடியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு டிரக் வண்டியிலிருந்து வெளியே தலையை நீட்டியபடி, எல்லா அமைப்புகளும் முறையாக வேலை செய்கின்றனவா என்பதைப் பார்த்துக் கொண்டும், கண்ட்ரோல் பேனலில் துறப்பணக்காரனின் இடத்தை அடிக்கடி எடுத்துக் கொண்டும், தானே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதற்காக, அடிக்கடி காணப்படுவான்.

ஈவ் சாயிச் எப்பொழுதேனும் தூங்குவானா என்பது அக்குவாசிட்டியின் ஆட்களுக்கு ஒரு

புதிராக இருந்தது, ஏனெனில் பகல் இரவு எந்நேரத்திலும் அவனைப் பார்க்கக் கூடிய தாக இருந்தது. எந்தவகையான பிரச்சினை குறித்தும், சிறிதாக இருப்பினும், தன்னைப் பார்க்க ஆட்கள் வந்த போது, ஒருபோதும் அவர்களை அவன் திருப்பி அனுப்பியதில்லை.

துளையிடப்பட்ட கிணற்றிலிருந்து தொ டர்ச்சியாகக் கிடைத்த மண் மாதிரிகளைப் பகுத்தாய்ந்தபடி, ஆய்வுக் கூடமும் எல்லா நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண் டிருந்தது. முழுமையான சோதனைக்கு எப் போதுமே ஆளாகிவந்த, சாதாரணத் தாதுக் கள் கூட கடுமையான அழுத்தத்தினால், இங்கே புதியதும், எதிர்பாரா குணாம்சங் களையும் பெற்றன.

சீக்கிரமாகவே பிரதானக் கிணற்றில் வெப்ப நிலையானது மிகவும் அதிகமாக உயர்ந்தது, துறப்பணத் தொழிலாளர்களின் வெப்பப் பாதுகாப்புச் சீருடைகளால் கூட போதுமான பாதுகாப்பைக் கொடுக்க முடிய வில்லை. கிரியாஜேனிக் அமைப்புகள் ஒன் றிணைக்கப் பட்டு, வேலை செய்யக் கூடியன வாக வைத்தல் வேண்டும் என்று ஈவ் சாயிச் கட்டளையைப் பிறப்பித்தான். பிறகு தொ ழிலாளர்கள் ஒரு நண்பனை, திரவ வடிவத்தில், ஏறத்தாழ முழுமையாக பூஜ்யத்திற்குக் குளிரச் செய்யப்பட்ட, ஹீலியத்தைப் பெற்றார்கள். கிணற்றின் சுவர்களுக்குக் கீழே சென்ற கம்பிவளைக் குழாய்களைச் சுற்றிச் சுற்றி வந்த ஹீலியம், பூமியின் புரட்டப்பட்ட உள்

பகுதியில் உயர்ந்து கொண்டிருந்த வெப்பத்தைத் தணித்தது. மைலுக்குப் பிறகு மைலாக மெதுவாக பூமியானது மனித முற்றுகையாளர்களுக்கு வழி விட்டது, ஆனால் பல முணுமுணுப்புகளும், உறுமல்களும் இல்லாமல் இல்லை.

* * *

ஹ்யூகோ லென்ஸின் மரணத்திற்கான காரணங்களை புலனாய்கின்ற அரசின் விசாரணைக் குழுவின் தலைவி என்ற முறையில், ஒரியா டேர்வி பிரபலமான பௌதிகவியலாளனோடு எந்த வகையிலும் தொடர்பு கொண்ட ஏராளமான சான்றுகளையும், பிற பொருள்களையும் பார்வையிட வேண்டியிருந்தது.

பெரும்பாலானவை அரசு ஆவணங்களாகவே இருந்தன. டாக்டர் கடிதத் தொடர்பு கொண்டிருந்த டஜன் கணக்கான அல்லது அத்தனை பல்கலைக் கழகங்கள், பெரிய பௌதிக ஆய்வுக் கூடங்கள், கருவிகளுக்காகவும், சாதனங்களுக்காகவும் பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட உத்தரவுகளின் நகல்கள், மாற்றுதலுக்கான கோரிக்கை நகல்கள் போன்றன. மற்ற பிற நாடுகளில் இருந்த திறமைவாய்ந்த பௌதிகவியலாளர்களுக்கும் கடிதத் தொடர்பு கொள்வது லென்ஸின் வழக்கமாக இருந்தது. அவர்களுடைய கடிதங்களிலிருந்து, இந்தத் துறையில் முன்னேறி வரும் நிபுணர் என்ற அளவில் லென்ஸ் கருதப்பட்டு

வந்ததை ஓரியா டேர்வியால் பாராட்ட முடிந்தது.

புனித பார்த்தலோமியூ கிளினிக்கில் ஓய்வு-வைத்தியத்திற்காக ஹ்யூகோ லென்ஸை தங்கும்படி செய்ய தான் வற்புறுத்தாது போனமைக்காக அவள் வருத்தத்துடன் தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்வது வழக்கமாகி விட்டது. அவன் இன்னும் உயிரோடு இருந்திருப்பான். அவனது சாவை அவளால் தவிர்த்திருக்க முடியும்.

இப்போது ஹ்யூகோ லென்ஸின் நினைவுச் சின்னமாக எஞ்சியிருப்பதெல்லாம் மெலிந்த இந்தக் கடித உறையும், சுவீடன் அரசர் அவனுக்கு நோபல் பரிசு வழங்கியது எங்ஙனம் என்பதற்கான பயோமெமரிக் கூட்டில் உள்ளதுமே.

ஹ்யூகோ லென்ஸ், அவன் கட்டாயம் ஒரு விநோதமான மனிதன் தான்... இப்போது பல்வேறு கடிதங்களையும் அவள் பார்த்தபொழுது, ஆவணங்கள் வாயிலாக உயிர் பெற்று வரக்கூடிய ஒருவனாகவும், அவனுடைய விஞ்ஞானக் கடிதத் தொடர்புகள் வாயிலாக மற்றொருவனாகவும், ஹ்யூகோ லென்ஸ் இரண்டு முற்றிலும் மாறுபட்ட மனிதர்களாக இருக்கிறான் என்பதை அவள் அறிந்துகொண்டாள்.

அவளுக்குத் தனிப்பட்ட முறையில் லென்ஸ் எழுதிய கடிதங்களை, ஓரியா டேர்வி யாரிடமும் காட்டவில்லை. யாருக்கு அவள் படித்துக் காட்டப் போகிறாள்? அவளது

நண்பர்களுக்கா? ஆனால் ஒரு பாதி ரோபாட்டால் எதையும் எங்ஙனம் வைத்துக்கொள்ள முடியும்? அங்கே காரியக்காரர்கள் ஏராளமாக இருந்தார்கள். எண்ணிக்கையற்ற அறிமுகமானவர்கள் இருக்கிறார்கள், ஆனால் எந்த ஒருவரையும் ஓர் உண்மையான நண்பன் என்று அழைக்க முடியாது...

போலீஸ் தலைமை அதிகாரி ஆர்னோ காம்ப் குறித்து, ஹ்யூகோ அநேக சந்தர்ப்பங்களில் இவளிடம் பேசியிருந்திருக்கிறான். துரதிரஷ்டவசமாக கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அவனை மிக நன்றாக அறிந்துகொள்ள வேண்டியவனாக இருந்தான். ''அவன் ஒரு புத்திசாலி மனிதன், பேசிக் கொள்வதற்கு இலாயக்கானவன். கற்பனை செய்து பாருங்கள், அவன் கவிதையைக் கூட விரும்புகிறான்!''

...பாதி மங்கிப்போன ஊதாப்பூவை நீர் உள்ள கண்ணாடிக் குவளையில் வைத்த பின்பு, காலைத் தபாலில் அவள் பெற்றிருந்த கடிதத்தை ஓரியா டேர்வி திரும்பவும் படித்தாள். அதனது நடையைப் பரிசீலித்த மாத்திரத்தில் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஹ்யூகோ லென்ஸுக்கு அனுப்பி வைக்கப் பட்டதினின்றும் இது வித்தியாசப்படவில்லை என்று அவள் நினைத்தாள்.

ஹ்யூகோவுக்கு அபாரமான நினைவாற்றல் இருந்ததால், தனது கடிதத்தின் பெரும் பகுதிகளை அநேக முறை அவளுக்கு மேற்கோள் காட்டி இருக்கிறான். ஏனெனில் ஓரியா

டோர்வியும் அவற்றை நன்கு நினைவில் வைத்துக் கொண்டாள்.

அநாமதேயக் கடிதம் எழுதியவன் ஓரியா டோர்வி தனது சொந்தத் துறையான பொதுப்பணியை — மருத்துவத்தை — ஒழுங்காக வைக்க வேண்டும் என்று கோரியிருந்தான். இதன் பொருள் அவள் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மாற்று உறுப்புகள் வைப்பதைத் தடை செய்ய வேண்டியிருந்தது. இதை அந்தச் சீற்றங்கொண்ட எழுத்தாளன் "மனித கௌரவத்திற்கு நேர்மைக் கேடானது, நெறி முறையற்ற கடைசிச் சம்பவம்" என்று குறிப்பிட்டிருந்தான். நினைத்த மாத்திரத்தில் அதனது பல்வேறு பாகங்களை மாற்றிக் கொள்வதற்கு மனிதன் எந்திரமல்ல என்பதை அந்த மனிதன் வற்புறுத்தியிருந்தான். புனித பார்த்தலோமியூ கிளினிக்கில் நோயாளிகளுக்கு எலெட்ரானிக் அமைப்புக் கொண்ட உறுப்புகளைப் பொருத்துவதற்கான சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று நினைத்த மாத்திரத்திலேயே அந்த எழுத்தாளனுக்குக் கடுஞ் சீற்றம் ஏற்படுகிறது. இயற்கையோடு ஒத்துப்போவதற்கு மாறாக அதை எதிர்ப்பதாக ஓரியா வெளிப்படையாகவே குற்றஞ் சாட்டப்பட்டாள்.

தட்டச்சு செய்யப்பட்ட நான்கு பக்கங்களையும், '1' என்ற எண் கையால் எழுதப் பட்டிருப்பதையும் உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பதில் சிறிது நேரத்தை அவள் செலவிட்டாள். கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த

விரிவான திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவள் வெறுமனே ஓராண்டு மட்டிலுமே கொடுக்கப்பட்டிருந்தாள்: உறுப்பு மாற்றத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா நிறுவனங்களையும் மூடிவிடுவது, மாற்றங்களுக்கான அறுவைக் கருவிகளைத் தயாரிக்கக் கூடிய தொழிற் சாலைகளை உடைத்தெறிவது, மருத்துவப் பள்ளிகளில் உள்ள சைபர்நேட்டிக் துறைகளை மூடிவிடுவது, மற்றும் இறுதியாக சைபர் ஜிசேஷன் பற்றிய எல்லா இலக்கியங்களையும் எரித்துவிடுவது ஆகியனவாகும்.

கணப் பொழுது ஓரியா டேர்வி கண்ணை மூடினாள். புனித பார்த்தலோமியூ கிளினிக்கில் மருத்துவர்களுக்கான அலுவலகத்தில் தனிமை யில் அவள் உட்கார்ந்து கொண்டிருந்தாள். தனது நாற்காலியில் அவள் இப்படியும் அப் படியும் அலைந்தபடி நீளச் சிந்தித்துப் பார்த் தாள்.

அதை எழுதியவன் யாராக இருந்தாலும் சரி, அவன் நம்புதற்கரிய வகையில் சூதறி யாதவனாக இருந்தான். உதாரணமாக அறுவை சிகிச்சைக் கருவிகளை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலைகளை மூடி விடுவது அவளது அதிகாரத்திற்கு உட்பட்டது என்ற அளவில், இதைத் தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஓரியா டேர்வி செய்ய வேண்டுமென்று அவன் விரும்பினான். அவள் அதை முயற்சி செய்திருந்தால், தனது பதவியினின்றும் அவள் இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்ளாக விடுவிக்கப்படுவாள்.

அவை திருப்திகரமாக இல்லை என்று அறிவித்து சிலவகையான அறுவை சாதனங்களின் உற்பத்தியை தற்காலிகமாகத் தடை செய்வதற்கு உண்மையில் அவளால் முடியும். ஆயினும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் என்ன சொல்வார்கள்? இதுகாறும் உள்ள நிலையில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளவர்களின் கடுமையான எதிர்ப்பினை ஒவ்வொரு கட்டத்திலும் அவள் சந்திக்க வேண்டிவரும்.

ஹ்யூகோ லென்ஸினுடைய காகிதங்களை அவள் பார்த்த போது, தான் புலனாய்ந்து கொண்டிருந்த நிகழ்ச்சிக்கான சம்பவங்களை ஒருவகையில் வெளிப்படுத்தக் கூடிய ஓரிரு பகுதிகள் இருந்தன என்ற முடிவுக்கு ஓரியா டேர்வி வந்தாள்.

ஒரு சிரமமான, தொல்லை தரும் பணி முன் நின்றது.

''...ஆக உயிர் வாழ்வதற்கு எனக்கு மூன்று மாதங்களே உள்ளன. வெறும் மூன்று தான். இது எவ்வளவு கேலிக்குரியது, எதிர்பாராதது. நேற்று வாழ்க்கை எல்லையற்றது போலக் காணப்பட்டது.

''உடல்நலமுள்ள ஒரு மனிதன் சாவைப் பற்றி நினைக்கவில்லை. தனது எதிர்காலத்தை அவனால் திட்டமிட முடியும், ஓராண்டுக்குப் பிறகு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு கூட தனக்கு என்ன நடந்து கொண்டிருக்கும் என்பது குறித்து அவன் வியப்புடன் நினைக்க முடியும். இருபது ஆண்டுகள் என்பது ஒரு மனிதனுக்கு

அனந்தம் என்று ஒரு கணிதவியலாளன் கூறக் கூடும். இயற்கையாகவே, குறுகிய காலம் வாழக் கூடிய விட்டில் பூச்சிக்கு இருபத்தி நான்கு மணி நேரம் என்பது அனந்தம் எனப் பொருள்படும். மேலும் மிசோன் குறித்தது என்ன? அதனுடைய ஆயுள் காலம் ஒரு நொடியின் மில்லியனின் ஒரு பாகமே.

''நான்'' மிசோன் அல்ல, விட்டிலுமல்ல. ஆனால் ஒரு மனிதன். இப்போது ஒரு மனிதனால் எந்த நேரத்திலும் சாக முடியும். அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது? எப்போதாவது நாம் எல்லாரும் சாக வேண் டியவர்கள் தானே. ஆனால் இல்லை, ஏன் பாசாங்கு. நான் இளமையாக இருக்கிறேன்: 44 என்பது ஒரு வயதே அல்ல.

''வாழ்க்கையில் நான் என்ன சாதித்து விட்டேன்? மரியாதைகளா? அவை எனக்கு எந்த மாயத்தோற்றங்களையும் தராது. பொ ருளின் அமைப்பைப் புரிந்துகொள்வதில் எனது சகாக்களைக் காட்டிலும் நான் ஓரளவுக்கு அதிகம் புரிந்துகொண்டேன் என்பதே, மேலும் இதற்காகத்தானே பணமும் வசதிகளும் ஓடி வருகின்றன?''

ஓரியா பிறகு மற்றொரு பக்கத்தைப் புரட்டினாள்.

''ஆனால் இந்த வாழ்க்கையில் அடை வதற்கு நான் என்னவெல்லாம் முயன்றேன் என்பது கதையினுடைய ஒரு பகுதி மட்டுமே. இப்போது, அதை நான் தொகுத்துச் சொல் வதற்காகத் தொடங்குகின்ற போது, பகுத்

தாய்வதற்கு மற்ற பகுதியானது எந்தவ கையிலும் குறைவான முக்கியத்துவமுடையது அல்ல. ஷ்யூகோ லென்ஸாகிய நான் மனித இனத்திற்கு என்ன தந்திருக்கிறேன்? அது அவ்வளவு அதிகமில்லை என்பதற்காக நான் வருந்துகிறேன். அவப்பேறான வெடிப்பிற்குப் பிறகு அது பற்றி நான் தொடர்ந்து சிந்தித் துக் கொண்டிருக்கிறேன்...

''விளையாட்டின் போது குழந்தையைப் போல, மனித இனமானது கட்டுப்பாடற்றது. அழிவினின்றும் ஓர் எட்டு தூரத்தில் மட்டுமே மனிதர்கள் இருக்கின்ற போது கூட, இன்னமும் அவர்கள் விட்டில்களைப் போல கட்டுப்பாடற்றவர்களாகவே இருக்கிறார்கள். அது அவர்கள் கட்டுப்பாடற்று இருக்கிறார்கள் என்பதா, அல்லது ஒருவேளை வெறுமனே தெளிவான அறியாமைதானா?

''என்னுடைய அநுபவம் கசப்பானது. மற்ற மக்களை எச்சரிப்பதற்கு அது போதுமானது தானா? ஆகவே அதை நான் கட்டாயம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்...

''பார்க் நம்பிக்கைக்குரிய ஆளாகவே காணப்படுகிறான், ஆனால் அவனது மூளை யானது போலீஸ் வேலையினால் ஓரளவுக்கு மந்தமாகிப் போய்விட்டது. அவனை ஒரு பௌதிகவியலாளனாக ஆக்கி இருக்க முடியும். ஆனால் ஏன், ஓ, பௌதிகவியலாளர்கள் மனித இனத்திற்கு எதற்காகத் தேவைப்படப் போகிறார்கள்?

''சாவோடு என்னை அச்சுறுத்திய மனி

தனைப் பிடித்து விடுவதாகவும், அவனைத் தீங்கற்றவனாக்கி விடுவதாகவும் ஆர்னோ காம்ப் என்னிடம் வாக்குறுதி தந்த போது, எனது வாழ்க்கையில் முதன் முறையாக போலீஸ் எல்லா வலிமையும் பெற்றிருக்கவில் லை என்று நான் வருத்தப்பட்டேன்...

''பூமியில் மற்ற எதனைக் காட்டிலும் அதி கமாக எனது பணியை நான் விரும்பினேன். அதனின்றும், இனிமையான எதிர்பார்ப்பு நடுக்கமானது, திடீரென்று, நீண்ட நாட்கள் ஆய்வுக் கூடத்தில் இருந்த பிறகு, திட நம்பிக்கையானது மிகவும் சமீபத்தில், நமது பிடிகளுக்குள்ளாக இருக்கிறது என்ற எண்ண மானது தோன்றியது.

''ஆனால் இப்போது உண்மையின் நுண் ணிய தோற்றங்கள் அனைத்துமே ஒன்றாக இணைந்து ஒரு மாபெரும் உண்மையாகி விட்டது, அதனுடைய ஒளியானது என்னால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதி கமாகி விட்டது. நான் உன்னுடைய போர் வீரன், ஒளிர்கின்ற உண்மை, ஒரு போர் வீரனாகவே மடிவேன். உதவியானது ராபி னிடமிருந்து வரலாம்!..''

''ராபின்?'' வியந்தாள் ஒரியா டேர்வி. ''ஹ்யூகோ லென்ஸ் யாரைத் தன்னுடைய மனத்திலே நினைத்திருக்க முடியும்?''

அவள் முற்றாகச் சோதனை செய்து பார்த்தாள், ஆனால் டாக்டர் லென்ஸுக்கு அறிமுகமானவர்களிலும், சகாக்களிலும் அந்தப் பெயரில் யாருமே இல்லை. ஒருவேளை

ராபின் புனைபெயராக இருக்குமோ? ஆனால் யாருக்கு? இந்த வேலையில் அவளுக்குப் பழக்கமாகிவிட்ட நிலையில், இந்த விஷயத்தை, உள்ளங்கை நெல்லிக்கனி போல அணுவாராய்ச்சி மையத்தையும், அதனது ஊழியர்களையும் அறிந்திருந்த ஆர்தர் பார்க்கிடம் விவாதித் தாள். ஆனால் பார்க்கால் கூட இந்தக் கேள்விக்கு விடையளிக்க முடியவில்லை. தன்னுடைய நாள்குறிப்பில் ஹ்யூகோ கிறுக்கிக் கொண்டிருந்த போது, சில வரலாற்றுத் தொடர்புகள் ஒருவேளை அவன் நினைவுக்கு வந்திருக்கக் கூடும் என்று ஓரியா டேர்வி முடிவு செய்தாள். மத்தியகால இங்கிலாந்தில் நாடுகடத்தப்பட்ட ராபின் ஹூட்டின் புரா ணத்தை தொடர்பு கொண்டதாகக் கூட ஒருவேளை இது இருக்கக்கூடும்?

அடுத்து இதற்குப் பிறகு சுறுசுறுப்பாகத் தொடர்ந்து வந்த பணிகளால், காலமான டாக்டரின் கடிதங்களில் சுருக்கமாகக் காணப் பட்ட இந்தப் பெயரை ஓரியா டேர்வி மறந்தே விட்டாள்.

இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு, ஆய்வுக் கூட சஞ்சிகைகளின் மத்தியில் மற் றொரு பக்கத்தை, வெளிப்படையாகவே ஏதோ முன்னைய குறிப்பின் தொடர்ச்சி யாக ஒன்றை ஓரியா கண்டாள். ‘‘...உனக்குங் கூட பிரியாவிடை தருகிறேன், லுசின்டா. நான் உன்னிடம் பெரிதும் விருப்பங்கொண்டு விட்டேன், உன்னை நம்பவும் தொடங்கிவிட் டேன்...’’ இந்தக் குறிப்பின் வாசகத்தைத்

திரும்பவும் ஒரியா உற்றுப்பார்த்த பொழுது, அவளது இதயம் ஒரு முறை அடிக்கத் தவறியது. ''உன்னால் மட்டுந்தான், லுசின்டா, எனது சொந்த சுதந்திரமான விருப்பத்தின் பேரில் மேற்கொண்ட இந்தக் கடைசிப் பணியை என்னால் முற்றுப்பெறச் செய்ய முடிந்தது. இந்த வாழ்க்கையினின்றும் பிரிந்து செல்வது இப்போது எனக்கு மிகவும் சுலபமானதாக இருக்கிறது. நன்றி உனக்கு, லுசின்டா.''

இந்நேரத்திற்குள்ளாக பழக்கமற்றதும், மகிழ்ச்சியற்றதுமான உணர்வு ஒரியாவுக்கு ஏற்பட்டது. தன்னை வந்து பார்க்கும்படி பார்க்கை அவள் அழைத்தாள். ஆர்தரும் உடனடியாக அங்கு வந்து சேர்ந்தான்: புதிய குழுவின் தலைவர் இயற்கையாகவே மென்மையான போக்கிற்கு அப்பாற்பட்ட பெண் என்பதை அவன் அறிவான், எனினும் சில வேளைகளில் ஆர்னோ காம்ப்பைப் போல அவளது வெளிப்பாட்டின் ஒவ்வொரு துணுக்கும் வன்மையானதாகவே இருந்தது. அது சுலபமான ஒன்றாகத் தனக்கு இருக்கப் போவதில்லை என்பது அவனுக்கு முற்றிலும் தெளிவாகவே தெரிந்தது, ஏனெனில் அவன் இப்போது குறைந்தது ஒரு ரோபாட்டிடமோ, பாதி ரோபாட்டிடமோ வேலை செய்து கொண்டிருந்தான் — தீயவனுக்கு எந்த அமைதியும் இல்லாது போனது.

''அணுவாராய்ச்சி மையத்தில் சூழ்நிலை

எது போல இருக்கிறது?'' என்று வினவினாள் ஓரியா டேர்வி.

''ஒவ்வொருவரும் இன்னமும் மிகவும் மனங்குழம்பிய நிலையிலேயே இருக்கிறார்கள்,'' என்று பார்க் பதிலளித்தான்.

''டாக்டர் லென்ஸினுடைய சாவைப் பற்றி அவர்கள் விவாதம் செய்து கொண்டிருக்கிறார்களா?''

''விருப்பமில்லாமல் தான்.''

''அந்த விஷயம் குறித்துப் பேசக் கூடிய உரையாடல்களைக் கேட்பதற்கு முயற்சி செய்யுங்கள்,'' என்று ஆலோசனை கூறினாள் ஓரியா டேர்வி. ''ஒருவகையான துப்பை அவற்றினின்றும் நீங்கள் பெறக் கூடும்.''

''அதை நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டுமா, ஆர்னோ காம்பிடமா?''

''அது பற்றி பரவாயில்லை. எங்களது முயற்சிகள் ஒருங்கிணைந்தவைதாம்.''

''அணுவாராய்ச்சி மையத்தில் இப்பொழுதெல்லாம் எந்தப் பணியும் சரியாக நடைபெறுவதாகத் தோன்றவில்லை,'' என்று ஆர்தர் பார்க் அவளிடம் கூறினான். ''சோதனைகள் எல்லாம் தவறாகவே போய்க் கொண்டிருக்கின்றன. தனக்குப் பின்னால் வரக்கூடியவர்களுக்கு விஷயங்களை டாக்டர் லென்ஸ் உண்மையான குழப்பத்தில்தான் விட்டுச்சென்றான். அந்தப் பழம் ஆசாமி அதிகமான வேலைகளைத் தானே எடுத்துக் கொண்டது போலவே காணப்படுகிறது.''

'பழம் ஆசாமி' என்ற சொற்றொடரில் ஒரியா முகஞ்சுளித்தாள்: எல்லாவித அறிமுக அடையாளங்களையும் அவள் வெறுத்தாள்.

''ஊழியர்களில் ஒருவன் சொன்னது போல அணுவாராய்ச்சி மையமானது தந்தையற்ற குழந்தை போல இருக்கிறது,'' என்று பார்க் தொடர்ந்து பேசினான், தனது நாற் காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடியே. ''மொத் தத்தில் டாக்டர் லென்ஸ் உண்மையாகவே நடுக்கமுற்றானா என்பதையும் 'சாவிகளை வீசி எறிய வேண்டியது,' என்று முடிவு செய்தான் என்பதையும் என்னால் நம்ப முடியவில்லை. அவன் அதைச் செய்திருந்தால், பிறகு எதற்காக டாக்டர் லென்ஸ்...''

''அணுவாராய்ச்சி மையத்தில் உள்ள எல்லா ஊழியர்களையும் உங்களுக்குத் தெரியுமா, எனக்குக் கூறுங்கள், பார்க்,'' என்று ஒரியா டேர்வி இடை மறித்தாள்.

''உண்மையில், காம்ப்பால் எனக்கு இடப் பட்ட பணிகளில் அதுவும் ஒன்று,'' என்று பார்க் பதிலளித்தான்.

''பிறகு, லுசின்டா என்பது யார் என் பதை தயவுசெய்து எனக்குக் கூறுங்கள்,'' என்று ஒரியா திடீரென்று கேட்டாள்.

''லுசின்டா?'' வியப்பினால் பார்க் திரும்பச் சொன்னான். தன்னைப் பற்றியே ஒரியா டேர்வி ஓரளவுக்கு நிச்சயமில்லாதிருப்பது போலக் காணப்பட்டதை அவன் கவனித் தான். ஆக, ரோபாட்டுகள்கூடத் தங்களது நிதானத்தை இழந்துவிடக் கூடும்!

“டாக்டர் லென்ஸினுடைய கடிதங்களில் லுசின்டா என்ற பெயர் வந்ததைக் கண்டேன்,” என்று விளக்கிச் சொல்கின்ற குரலில் ஒரியா டேர்வி விளக்கினாள்.

“லுசின்டா — ஓர் எந்திரம்,” என்றான் பார்க்.

“ஓர் எந்திரமா?”

“நிரலமைப்பாளர்கள் சொல்வது போல அது ஒரு சாதாரண கம்பியூட்டர்,” என்று ஒரு முறுவலிப்புடன் தொடர்ந்து பேசினான் பார்க். அணுவாராய்ச்சி மையத்தில் அவன் செலவிட்டிருந்த நேரத்தின் போது, வேலை முறையின் வழக்கமல்லாத உராய்வொலியைத் தெரிந்துகொள்வதில் அவன் வெற்றி பெற்றான்.

“ஓர் எந்திரமா? இது விநோதமானது... தான் ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டிருப்பது போல, லென்ஸ் அவளிடம் பேசுகிறான்,” என்று விமரிசித்தாள் ஒரியா டேர்வி.

“வேடிக்கை,” என ஒப்புக்கொண்டான் பார்க்.

“இப்போது நம்மால் செய்ய முடிந்தது எல்லாம், அந்த நேரத்தில் டாக்டர் லென்ஸின் மனநிலையை ஊகிப்பது தான்,” என்றாள் ஒரியா.

பார்க் எதுவும் சொல்லவில்லை, உடன்படுவது போன்ற தலையசைப்புடன் தனது பிரதிபலிப்பைச் சுருக்கிக் கொண்டான்.

* * *

இமாண்ட் அர்டோனிஸ் மண்ணியல் மீது விருப்புக் கொண்டிருந்தான். பூமி சம்பந்தப்பட்ட எல்லா விஞ்ஞானங்களிலும் அவன் மகிழ்ச்சி கண்டான். மண்ணியல் அல்லது தொல்பொருள் மாநாடுகளின் திண்ணிய அறிக்கைகளை அவன் வழக்கமாகப் படிப் பதுண்டு, ஒரு நாவலைப் போல அவை ஆர்வமூட்டுகின்றன என்பதைக் கண்டான். மறுபுறமோ அர்டோனிஸ் ஒருபோதும் நாவ லையே படித்ததில்லை. கணக்கற்ற சூத்திரங் களினால் உலைந்து போன மனத்திற்கு மண் ணியல் அறிக்கைகளைப் படிப்பது ஒருவித ஆறு தல் தருவதாக இருந்தது.

பௌதிகம் அவனது விருப்பத்தை எல்லாம் எடுத்துக்கொள்ளும் ஒன்றாக இருந்த வேளை யில், பூமி விஞ்ஞானங்கள் அவனுடைய ஓய்வு நேரப் பணியாக இருந்தன. குறிப்பாக மண்ணியல் என்று வருகின்ற போது, இந்த விஷயம் குறித்த இலக்கியங்களை அவன் முறையாகப் படித்திருந்ததனால் அவன் பெற்றிருந்த அறிவானது சிறிதளவு டையதாக இல்லை.

இப்போது அவன் அக்குவாசிட்டி திட்டத் தில் ஆர்வம் கொண்டிருந்தான். திட்டத் தினுடைய துணிச்சலும், அதனை நிறை வேற்றுவதன் பின்னணியில் உள்ள கற்பனை யான அணுகு முறையும் அவனது கவனத்தை கவர்ந்திழுத்திருந்தன. கோளத்தினுடைய கடி

னமான பாளத்தை உடைத்து விட்டு, பிறகு உள்ளே குமுறிக் கொண்டிருக்கின்ற லாவாவைத் துருவிக் கண்டறிவதற்காக நூற்றுக் கணக்கான மைல்கள் கீழாகச் செல்வது என்பது, உண்மையிலேயே ஏதோ ஒரு வகையானது தான்.

விண்வெளியில் மனிதன் எப்போதோ வீட்டிலிருப்பது போல இருக்கப் பழகி விட்டான், அதே வேளை மனிதனுடைய சொந்தக் கோளத்தின் ஆழமான இதயமானது இன்னமும் அடைய முடியாததாகவே இருக்கிறது.

ஆழமான துறப்பணப் பணியைத் தொடங்குவதற்கு முன்னர் ஓர் ஆழமான குழியைத் தோண்டுவது என்பது ஒரு புதிய சிந்தனையல்ல என்பதை அர்டோனிஸ் அறிவான். ஆனால் இத்தகைய திட்டங்களைச் செயல் படுத்துவதில் யாருமே வெற்றியடைந்ததில்லை. ஏனெனில் கிடைத்திருக்கக் கூடிய தொழில் நுணுக்கமானது போதுமான அளவுக்கு முன்னேற்றமடையவில்லை.

தனது ஆர்வத்தைத் தொடர்ந்து காட்டுவதில் அர்டோனிஸ் எப்பொழுதுமே முழுமையாக இருந்தான். அதிகமானவை என்று ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அக்குவாசிட்டியில் அவன் கண்டுபிடிக்கக் கூடிய எல்லாத் தகவல்களையும் தொகுத்து வைத்தான். ஒரு குறிப்பிட்ட கட்டுரையைப் படித்ததில், துறப்பண வேலை முன்னேறி வருகின்ற வேகத்தில் அர்டோனிஸ் பெரிதும் ஆழ்ந்து

போனான். தனது வேலையை ஈவ் சாயிச் உறுதியாக அறிவான் என்பது போலக் காணப் பட்டது.

அவர்கள் பூமியின் கடினமான படுகைக்குக் கீழாகக் குடைந்து கொண்டு போய் உருகிய மாக்மாவை எட்டிய போது, பூமிப் படுகைப் பாறைகளின் ஆழமான அடுக்குகள் குறித்தும், அட்லாண்டிக் கடற்கரையை ஒட்டிய கடற் படுகையின் அமைப்புப் பற்றியும் பல்வேறு நூல் களை அர்டோனிஸ் திரும்பவும் படிக்கத் தொடங் கினான். அப்போதுதான் சந்தேகத்தின் முதல் விதைகள் அவனது மனத்திலே நடப்பட் டன.

அந்த ஆழமான அளவில் லாவாவின் வெப்பநிலையும் அழுத்தமும், பௌதிகவிய லாளனுக்குரிய பயிற்சி பெற்ற அவனுக்குப் பெரும் போராட்டமாக இருந்தது. குவார்க்கு களைப் பிளப்பதற்கான அவனுடைய சோதனை களில் நட்சத்திர வெப்பநிலைகளையும், பிரம் மாண்டமான அழுத்த எல்லைகளையும் அவன் ஆராய்ந்திருந்தான். அத்தகைய ஆழத்தில் சோதனை எத்தகைய இடரில் முடியக் கூடும் என்பது பற்றிய தெளிவான கருத்தையும் கொண்டிருந்தான். கூடுதல் அழுத்தத்தின் போது திரவத்தை கல்லாகவும், எஃகை நீராகவும் மாற்ற முடியும்.

ஈவ் சாயிச் எதனைச் சார்ந்திருந்தான்? பூமிக் கிண்ணத்திலின்றும் வரக்கூடிய நெருப் புப் போன்ற பொருள்களைக் கட்டுப் பாட்டிற்குள் வைப்பதற்கு அவன் எங்ஙனம்

திட்டமிட்டுக் கொண்டிருந்தான்? சாயிச் தேவையான கணக்கீடுகளைச் செய்திருக்கக் கூடும் என்றே ஊகிக்க வேண்டும் என நினைத்தான். அவை மிகவும் துல்லியமாக இருக்க வேண்டும். இல்லையெனில் ... சற்று அதிக ஆழத்தில் உள்ள முக்கியக் கிணற்றில் மாக்மா வெடிக்கக் கூடுமேயானால் என்ன நிகழக்கூடும் என்று அவன் கற்பனை செய்ய தொடங்கியபோது, இதை நினைத்த மாத் திரத்தில் அர்டோனிசுக்கு மூச்சு வாங்கியது. அக்குவாசிட்டி வெறுமனே தண்ணீரால் மட்டுமல்லாமல் நெருப்பாலும் அமிழ்ந்து போகும், அங்கே மூவாயிரம் ஆட்களும் இருக்கிறார்கள். கடற்கரை அருகில் உள்ள மீன்பிடி கிராமத்தைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை.

எந்த ஒரு பெண்ணைப் போலவும் ஓர ளவுக்கு வழிமுறைகள் கொண்டிருந்தாலும், லுசின்டா ஒரு பயனுள்ள எந்திரந்தான். இதைக் காட்டுவதற்கு எந்த சிறப்பான சாட்சியமும் தேவைப்படவில்லை. ஹ்யூகோ லென்ஸும் மற்ற ஆராய்ச்சியாளர்களும் அணு வாராய்ச்சி மையத்தில் இதனுடைய உதவி யோடு நுணுக்கமான கணக்கீடுகளைச் செய் தார்கள், ' இந்தக் கணக்கீடுகள் பிற கம்பி யூட்டர்களை ஆர்வங்கெடச் செய்தன.

கம்பியூட்டர் புரட்சியின் உதயத்தின் போது ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த எல்லாக் கம்பியூட்டர்களும் ஒன்று போலவே இருக்கக்கூடும் என்று மக்கள் நம்பியிருந்

தார்கள். ஆனால் அந்த எண்ணமானது ஒருவகையில் பின்னர் அமைதியாக மறைந்து போய்விட்டது. கம்பியூட்டர்கள் படிப்படியாக மிகவும் பன்முகப்பட்டதாக மாறி மிகவும் வளர்ச்சியுற்ற 'நினைவுகளையும்' 'புள்ளிவிவர வங்கிகளையும்' பெறத் தொடங்கிய போது தனி மனித குணாம்சம் என்று நாம் உயிரினங்களை அழைப்பது போல அவைகளும் கருதப்படலாயின. ஓர் எந்திரமானது வேறு பாட்டளவை சமநிலைகளுக்கு விருப்பங்கொண் டதாக மாறியது, மற்றது நட்சத்திரங்களின் எந்திரவியல் சம்பந்தப்பட்டதாக மாறியது. சுலபமான தன்மையையும், அருந்திறமையும் கொண்டு ஒரு குறிப்பிட்ட எந்திரத்தினுடைய 'விருப்புகளையும் வெறுப்புகளையும்' அது தனது 'விருப்ப' வகை சார்ந்த பணியை நிறைவேற்றக் கூடியதிலிருந்தும் காண முடியும். மற்றொருசார் நீளவும் தேவையற்றும் பன் முகப்பட்ட வழியில் அதை நிறைவேற்றக் கூடியது 'பிரபலமில்லாத' ஒன்று: அதை உரு வாக்கிய கணிதவியலாளனுக்கு மனக் கசப் போடு தனது தலையை இறுகப் பிடித்துக் கொள்ளப் போதுமானதாகும்.

அக்குவாசிட்டியில் அடிநீர்ப்பரப்பை விட்டுக் கீழே பூமியினுடைய நடுப்பகுதிக்குள்ளாக அமிழ்ந்த கிணற்றினுடைய நுழைவாயிலின் நிலைப்புத் தன்மையைக் கணக்கிட வேண்டும் என்று அர்டோனிஸ் முடிவு செய்த போது, லுசின்டா ஒரு தரமான கம்பியூட்டர் மட்டு மல்ல, ஆனால் அதற்கு மேலும் தனக்கென்று

சபல புத்தி கொண்டது என்பதை நினைத்துப் பார்ப்பதற்கான காரணம் அவனுக்கு இருந்தது.

கம்பியூட்டருக்குள்ளாக கட்டளையை நிரப்பி விட்டு, மேசைக்கு எதிராகச் சாய்ந்தபடி அர்டோனிஸ் இருந்தான்.

அர்டோனிஸ் காத்திருந்ததில், ஒருவகையில் பளபளப்பான கண்களோடு அந்த மகிழ்ச்சியற்ற இளைஞன் ஆர்தர் பார்க் கம்பியூட்டர் ஆய்வுக் கூடத்திற்கு வெளியே மேலுங்கீழுமாக நடந்து சென்றான். ஊழியர்களில் இந்தப் புதிய உறுப்பினனுக்காக இமாண்ட் அவனை அதிகம் விரும்பவில்லை. கருத்த தலைமுடி கொண்ட ஆளைத் தனது அலுவலகத்திற்கு டாக்டர் லென்ஸ் கூட்டி வந்து, நியூட்ரினோ கற்றைகளில் நிபுணன் என்று தன்னிடம் அவனை அறிமுகப்படுத்திய அந்த முதல் நாளின் போதே, அவனிடத்திலே அவன் வெறுப்பைக் கொண்டுவிட்டான். ஆய்வுக் கூடத்தில் இரவில் அந்த வெடிப்பு ஏற்பட்ட பிறகு, அமைப்புகள் தானியங்கிக் கட்டுப் பாட்டிற்குள் வந்தபோது, அது மிக விரைவாக நடந்தது.

ஆர்தர் பார்க் முதன் முறையாக அணு வாராய்ச்சி மையத்தில் தோன்றியதிலிருந்து மூன்று மாதங்களுக்கு மேலாகக் கடந்து விட்டன. நியூட்ரினோ கற்றைகள் தொடர்பான சிக்கலான விஷயங்கள் விவாதத்திற்காக வந்த போது பார்க் எப்போதுமே குறிப்புப் பொருளுடைய மௌனத்தில் இருப்பதைக்

கவனிக்கக்கூடிய வாய்ப்பு அர்டோனிசுக்கு பல முறை ஏற்பட்டது. அர்டோனிஸ் ஒரு போதும் குறுக்கிட்டது கிடையாது; ஹ்யூகோ லென்ஸிடமிருந்து வரக்கூடிய எந்த சிபாரிசாக இருந்தாலும் அவனுக்கு நல்லதாகவே பட்டது.

பார்க்கினுடைய அறியாமையை உண்மை யாகவே காட்டும் ஆர்ப்பரிக்கிற எடுத்துக் காட்டு நடந்த போது, அவனது ஊழியர் களில் புதிய உறுப்பினனது குறைபாட்டுக்கு ஏறத்தாழ டாக்டர் லென்ஸினுடைய கண் களைத் திறக்க இமாண்ட் தீர்மானித்தான். ஆனால் அதன் பிறகு பணப்பையுடன் கூடிய கேலிக்குரிய நிகழ்ச்சியை அடுத்து அவன் கைது செய்யப்பட்டது, அவனை முழுமையாக மறக்கடிக்கும்படி செய்தது. பிறகு லென்ஸ் இறந்து போனான், பின்னர் பார்க்கை உதாசீனப்படுத்த அர்டோனிஸ் முடிவு செய்துவிட்டான். அவனைப் போலவே மொத்தம் இன்னும் எத்தனை திறமையற்றவர் கள் தங்களுக்குத் தகுதியில்லாத பதவிகளில் இருந்தார்களோ.

இமாண்ட் அர்டோனிஸ் உலகத்தை மாற் றுவதற்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்க வில்லை. அந்தத் திசையில் டாக்டர் லென்ஸ் தான் ஆர்வங்கொண்டிருந்தது போலக் காணப் பட்டது. தன்னுடைய வாழ்க்கையின் கடைசி மாதங்களின் போது அவன் ஓரளவுக்கு வெறுமையான, முரண்பாடான முறையில்

அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந் தான்.

அர்டோனிசினுடைய நோக்கம் மிகவும் அடக்கமானதாக இருந்தது: அது குவார்க் குகளைப் பிளக்க வேண்டும், இயற்கை இரகசியங் களின் கடைசி அகதியை உடைத்தெறிய வேண்டும், பொது மண்டலத் தத்துவத்தின் சமன்பாடுகளாகிய இரும்பு வளையத்திற்குள் ளாக பொருளைச் சுற்றிவளைக்க வேண்டும் என்பதாகும். சமுதாயத்தை மறுவடிவம் செய் வது பற்றி மற்ற மக்கள் தங்கள் மண் டைகளைப் போட்டுக் குழப்பிக் கொள்ளட் டும். அத்தகைய பணி எப்போதாவது செய்து முடிக்கப்படுமா என்பது குறித்து அவன் உறுதி யாக இல்லை.

அந்தக் கணத்தில் அர்டோனிஸ் இருந்த திசையில் ஒரு சந்தேகப் பார்வையை வீசியபடி திரும்பவும் ஆர்தர் பார்க் கடந்து போனான். தன்னுடைய முறைக்கு இமாண்ட் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான், ஏனெனில் தான் கேட்டிருந்த வினாவுக்கான விடையுடன் லுசின்டா வந்து கொண்டிருக்கக் கூடிய நேரம் அது. இன்னும் அது கல்போன்ற அமைதியை நிலை நாட்டிக் கொண்டிருந்தது.

மைக்ரோபோன் சவ்வுக்கு மேலாகத் தாழக் குனிந்தபடி அர்டோனிஸ், ''விடை எங் கே?'' என வினவினான். அக்கணத்தில் அச் சிடப்பட்ட ஒன்று வெளிப்பட்டது.

''ஒரே பிரச்சினையைத் தீர்ப்பதற்கு லுசின்டா

இரண்டு முறை செயல் படப் போவதில்லை,'' என்று அர்டோனிஸ் படித்தான்.

''ஏதோ தவறு நடந்திருக்க வேண்டும்,'' என்று விளக்குவதற்கு அர்டோனிஸ் முயன் றான். ''ஆழ் துறப்பணப் பணி குறித்த இந்தப் பிரச்சினையை என்னைத் தவிர இங் குள்ள யாரும் முயற்சி செய்ததில்லை.''

''லுசின்டா ஒருபோதும் தவறு செய்வதில் லை,'' என்று மணிச் சுருக்கமான வாசகம் கம்பியூட்டரிலிருந்து வெளிவந்தது.

''எனக்கு முன்னால் யார்தான் இந்தப் பிரச்சினை குறித்து வேலை செய்திருந்தார் கள்?'' என வினவினான் அர்டோனிஸ், தனது பொறுமையை இழக்கத் தொடங்கிய படி.

லுசின்டா அதற்குப் பதிலளிக்கவில்லை: விடை சொல்வதற்கு எந்தவழியிலும் அது கடமைப்பட்டிருக்கவில்லை என்பது போல அந்த வினா இருந்தது, தனது உரிமையை அது பயன்படுத்தியது.

அன்றைய பகற்பொழுதின் போது, தனக்கு முன்னர் இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த ஊழியர் களில் பிற உறுப்பினர்கள் யார் என்பதை இமாண்ட் அர்டோனிஸ் கண்டுபிடிக்க முயன் றான். ஆனால் அவர்களில் சிலர் அக்கு வாசிட்டி என்பது பற்றிக் கேள்விப்பட்டிருக்கக் கூட இல்லை, மற்றவர்களோ ஆழ் துறப் பணப் பணிக்கு முற்றிலும் மாறுபட்டவர் களாக இருந்தார்கள்.

அதன் பிறகு நிலைமை குறித்து இரண்டாவது மதிப்பீடு ஒன்றை தனக்கு அளிப்பதற்காக லுசின்டாவை இணங்க வைப்பதற்காக பெரும்பாலும் அர்டோனிஸ் தனது முழங்கால்களில் ஊர்ந்து செல்ல வேண்டி இருந்தது. லுசின்டாவின் விடையால் அவன் திகைப்புற்றுப் போனான்: நீருக்கடியிலான அந்த மிகப்பெரிய ராட்சச அமைப்பு முழுக்கவே ஒரு நூலில் தொங்கிக் கொண்டிருந்தது. தனது 'தனிப்பட்ட மனப்பாங்கின்' இயல்புக்கு மாறாக, கணக்கீடுகளில் பொய் சொல்லவோ, தவறான எண்களைத் தரவோ லுசின்டாவால் முடியாது.

அச்சிட்டு வந்த வாசகத்தை கையிலே பற்றிக் கொண்டு நகரத்திலிருக்கக் கூடிய பரந்த அளவு விற்பனையாகும் செய்தித் தாளின் ஆசிரியர் குழு அலுவலகத்திற்கு நேராகச் செல்வதென்று அர்டோனிஸ் முடிவு செய்தான். அக்குவாசிட்டியின் அச்சுறுத்தக் கூடிய ஆபத்தை இந்த உலக முழுமையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமிருந்தது. நிலைமையைக் காப்பாற்றுவதற்காக துரிதமான நடவடிக்கைகளை நீருக்கடியில் வேலை செய்கின்ற ஆட்கள் எடுக்க வேண்டியிருந்தது. ஒன்று பாதுகாப்பு எல்லையானது மிகவும் கூடுதலாக்கப்பட வேண்டும், அல்லது வேலையானது உடனடியாகக் கைவிடப்பட்டாக வேண்டும். முதலாவது தீர்வானது ஒருவகையில் கணிசமான பென்னி செலவில் முடியக் கூடியது, ஆனால் ஆயிரக் கணக்கான ஆட்களு

டைய உயிர் ஆபத்தில் இருக்கும் போது, செலவைப் பற்றி மதிப்பிடுவதற்கு நிச்சயமாக இது தருணமாக இருக்க முடியாது.

ஆய்வுக் கூடத்தை விட்டு வெளியேறுகின்ற தனது வழியில் இமாண்ட் அர்டோனிஸ் டான் பசீலியோ மீது முட்டி மோதிக் கொண்டான். ஹ்யூகோ லென்ஸ் மரணத்தி லிருந்து அந்தப் பூனை துயரமுற்று இருந்தது. தனது எசமானனைத் தேடிக்கொண்டு இப் போது அது அறைக்கு அறை அலையத் தொ டங்கியிருந்தது. அதனுடைய பால் கிண்ணமா னது தொடப்படாமலேயே இருந்தது. பூனை என்ன சாப்பிடும் என்று ஒருவருக்குமே தெரிய வில்லை. டான் பசீலியோ குவார்க்குகளைத் தின்று உயிர் வாழ்கிறது என்பதில் ஆர்தர் பார்க் திருப்தியடைந்தான்.

* * *

லென்ஸை மரணத்திற்கு முன்னதாகக் கடைசியாகப் பார்த்த ஆள் அவனுடைய மனைவிதான். அந்த இரவைப் பற்றி அநேக சந்தர்ப்பங்களில் ஆர்னோ காம்ப் ரீனாவிடம் கேட்டிருந்திருக்கிறான். ஆனால் நாட்டின் முன்னணி பௌதிகவியலாளனுடைய மறைவு குறித்து அவள் சொன்ன எதுவுமே எந்த தெளிவையும் ஏற்படுத்தவில்லை. கைரேகை நிபுணர்களால் தொகுக்கப்பட்ட புள்ளிவிவரத் தோடு ரீனாவினுடைய பதில்கள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன, ஆனால் அவள் பொய்

சொல்கிறாள் என்று குற்றஞ் சுமத்துவதற்கு போலீஸ் தலைமை அதிகாரிக்கு எந்த ஆதார மும் கிடைக்கவில்லை.

இன்று பதினோரு மணிக்கு அவள் அவனுடைய அலுவலகத்திற்கு வர வேண்டி யிருந்தது. நேரத்திற்குச் சற்று முன்னதாகவே அவள் வந்து சேர்ந்தாள். அவள் அங்கே இருக்கிறாள் என்று காம்பிற்கு ஜூல் அறியச் செய்தான்.

''அவள் உள்ளே வரட்டும்,'' என்றான் காம்ப்.

கைவைத்த நாற்காலியின் சரியாக நுனியில் அவள் அமர்ந்தாள். தனது சாவைத் தீர்மானிக் கின்ற கடிதத்தினை போலீசிடம் அவன் எடுத்துவந்திருந்த போது, இதே நாற்காலியில் அவளுடைய கணவன் உட்கார்ந்து கொண் டிருந்தது அதிக நாட்களுக்கு முன்பல்ல.

''மாலையில் டாக்டர் லென்ஸ் வீட்டிற்குப் பறந்து வந்த போது, அவனுடைய நடத்தை யில் ஏதேனும் விநோதமாக இருந்ததை நீங் கள் கவனித்தீர்களா?''

''இல்லை, அவன் எப்பொழுதும் போல மகிழ்ச்சியான மனநிலையில் தான் இருந் தான்,'' என்று ஒரு பெரு மூச்சுடன் ரீனா பதிலளித்தாள். 'ஒரு கண்ணாடிக் குவிமாடத் திற்குள்ளாக இருக்கும் ஈக்களைப் போன்று நாங்கள் இருப்பதாக அவன் கிண்டல் செய்தான்; எங்களுடைய ஒவ்வொரு செயல் பாடும் பாதுகாப்புப் போலீசாரால் கவனிக்கப் பட்டு வந்தன, அதே நேரம் குவிமாடத்தை

விட்டு பறந்து போவது இயலாதிருந்தது. தனது வாழ்க்கைப் பணியைத் தான் நிறை வேற்றி விட்டதாகவும், இப்போது அமைதி யாகச் சாக முடியும் என்றும் அவன் பல நேரங்களில் திரும்பச் சொன்னான்... பொது வாக அன்றைய மாலை நேரத்தில் கேலி செய்வதற்கான மனநிலையில் இருந்தான். அதை நான் முன்னமேயே உங்களிடம் கூறி யிருக்கிறேன்.''

''நாங்கள் விசாரணைகள் செய்து கொண் டிருக்கிறோம். சமீபத்தில் அணுவாராய்ச்சி மையத்தில் டாக்டர் லென்ஸினுடைய வேலை சரியாக நடைபெறவில்லை. குவார்க்குகளைப் பிளப்பதற்கான அவனுடைய சோதனைகள் எங்குமே நடைபெற்றுக் கொண்டிருக்கவில்லை. பிறகு தான் ஏப்ரல் இரண்டாம் தேதி வெடிப்பு ஏற்பட்டது... தன்னுடைய வாழ்க் கையின் வேலை நிறைவேறி விட்டதென்று எங்ஙனம் அவனால் கூறியிருக்க முடியும்?''

ரீனா தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டு, ''அந்தக் கடைசி நாட்களில் தனது வேலையின் ரகசியங்களை ஹ்யூகோ என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை என்று நான் உங்களுக்கு முன்னமேயே கூறி யிருக்கிறேன்,'' என்றாள்.

''தயவு செய்து எனக்குத் திரும்பவும் சொல்லுங்கள், உங்கள் கணவன் இறந்து விட்டான் என்பதை எப்போது, எப்படி உங்களால் கண்டுபிடிக்க முடிந்தது?''

உணர்ச்சிவயப்படாமல், நன்கு செய்து

பார்க்கப்பட்டதை அவள் ஒப்பித்துக் கொண் டிருப்பது போல அந்தக் காட்சியை ரீனா விவரித்தாள்: ''நடு இரவுக்குப் பிறகு நான் சீக்கிரமே விழிந்தெழுந்து விட்டேன். ஏன் என்று எனக்குத் தெரியாது. ஒரு மாதிரியாக நான் உணர்ந்தேன். ஹ்யூகோ எப்போதும் போல தனது சாய்வு இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தான், எப்போதும் சொல்கின்ற சொற்றொடருடன் அவன் அதில் அமர்ந் திருந்தான்: 'செய்து முடிக்க வேண்டிய ஒரு சிறிய பிரச்சினை இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கிறது.' எப்படி என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் திரும்பவும் தூங்கிப் போய் விட்டேன்—அந்தக் கடைசி நாட்களில் நான் மிகவும் சங்கடப்பட்டுப் போயிருந்தேன்... நான் திரும்பவும் விழித்த போது ஹ்யூகோ இன்னமும் தனது சாய்வு இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஆனால் அவன் தூங்கிப் போய் விட்டு, அரைப் பக்கம் எழுதப்பட்ட தாள் மீது அவனது தலை தொங்கிக் கிடந்தது. அவனை நான் கூப்பிட்டேன் ஆனால் அதற்கு அவன் பதிலளிக்கவில்லை. ஹ்யூகோ அறிதுயில் கொள் பவன், வேறு என்ன இருக்கிறது. நான் குதித்தெழுந்து அவனிடம் சென்றேன்...'' மூச்சு வாங்கிக் கொள்வதற்காக ரீனா நிறுத்தினாள். இந்தக் கதையைக் கூறுகையில் அவளது உணர்வுகளின் ஆழத்தை நடுங்கிக் கொண்டிருந்த விரல்கள் எடுத்துக் காட்டின. ''ஹ்யூகோவின் உதடுகள் உறைந்து போயிருந்

தன. அவன் இறந்து போய்விட்டான்.''

''எது அவ்வாறு உங்களை எண்ண வைத்தது?''

''அவனுடைய கண்கள்... ஹ்யூகோவினுடைய கண்கள் அகலத் திறந்திருந்தன. அவனுடைய வலது கை கால்குலேட்டரின் மீது விழுந்து கிடந்தது. இப்போது இதற்கு மேல் எதுவும் தேவைப்படாது, எதுவும் இருக்கிறதா?'' என்று தானே பேச்சைச் சுருக்கிக் கொண்டு ரீனா கேட்டாள். ''நான் உரக்கக் கத்திய போது, பாதுகாப்பு ஆட்கள் கதவினின்றும் விரைந்து ஓடி வந்து கொண்டிருந்தார்கள், தொடர்ந்து என்ன என்பது பற்றி உங்களிடம் விரிவான அறிக்கைகளும், புகைப்படங்களும் இருக்கின்றன...''

''அறிக்கைகளும் புகைப்படங்களும் இருக்கின்றன தாம்,'' என்று ஏற்றுக்கொண்டான் காம்ப், ''ஆனால் என்னுடைய கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. எனக்கு அக்கறை இருக்கிறது, எனக்குத் திரும்பவும் கூறுங்கள், அந்த அறிக்கைகளில் என்ன இடம் பெறவில்லையோ அவற்றை.''

ஏறத்தாழ மிகவும் நுட்பமாக அறியக் கூடியவாறு, ரீனா தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். மேலும் சொன்னாள்: ''ஆனால் இன்னும் சொல்ல என்னிடம் எதுவுமில்லை.''

முற்றிலும் சோர்வுற்ற உணர்வோடு ரீனா வீடு திரும்பினாள். அவளுடைய ஆர்னிதாப்ட

ரைத் தொடர்ந்து ஒரு சாம்பல் நிறக் கருவி வந்து கொண்டிருந்தது, ஆனால் அது பற்றி அவள் எந்த கவனமும் கொள்ளவில்லை. இப்பொழுதெல்லாம் வீட்டிலும், அவளைச் சுற்றிலும் எலெட்ரானிக் மற்றும் 'ஒட்டுக் கேட்பவர்கள்' இருப்பதற்கு முடிவு ஏற்பட வில்லை என்பதை அவள் அறிவாள். இவற்றி லெல்லாம் என்ன குறிக்கோள் இருந்தது? எவற்றாலும் ஹ்யூகோவைத் திரும்பக் கொண்டு வர முடியாது...

அறைகள் தனிமையின் ஆழ்கிடங்கில் இருந்தன. தொலைக்காட்சியை முடுக்கிவிட்டு, ராபின் எங்கோ மறைந்து போய்விட்டது. அந்த துயரார்ந்த நாளிலிருந்து தனியே விடப்பட்டிருந்த எழுதுகின்ற சாய்வு நாற் காலியில் ரீனா அமர்ந்தாள். போலீசாரின் திடீர்ப் பாய்ச்சலுக்குப் பிறகு இங்கே எதுவுமே விட்டு வைக்கப்படவில்லை — துப் பறிகின்றவர்களுடைய நன்கு பயிற்றுவிக்கப் பட்ட விரல்களால் கவனமாகப் புரட்டப்பட்ட பக்கங்களைக் கொண்ட வெறுமனே பரத்திக் கிடந்த சில புத்தகங்களே இருந்தன.

அந்த வெறுக்கத்தக்க ஒரியா டேர்வியின் தலைமையிலான விசாரணைக் குழுவிடம் சாட்சியம் தருவதற்காக ஏற்கெனவே நூற்றுக் கணக்கான ஆட்கள் அழைக்கப்பட்டு விட்டார் கள் என்பதை அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவள் அத்துடனேயே இருக்கட்டும்! எழுத்துப் பூர்வமாக அழைக்கப்பட்டாலன்றி, அங்கே

போவதைப் பற்றி அவள் கற்பனை செய்து பார்க்க முடியாது.

ரீனா அங்கே நீண்ட நேரம் அமர்ந்திருந் தாள். ஓர் இரக்கமற்ற மெட்டு அவள் காதுகளை நிறைத்தது, யாரோ பாடகி, ஒருவகையில் ஓரியா டேர்வியைப் போல, திரையில் நெளிந்து கொண்டிருந்தாள். பிறகு விளம்பரங்களின் தொடர்ச்சி வந்தது, அதைத் தனது ஓரக் கண்களாலேயே ரீனா பார்த்தாள். அநுமதி இல்லாமல் தொலைக் காட்சிப் பெட்டியை முடுக்கி வைத்தமைக் காக ராபினைக் கண்டிக்க வேண்டும் என் பதைக் கூட அவள் மறந்து போய்விட்டிருந் தாள்.

கதவை யாரோ தட்டினார்கள், கதவுப் படியில் இமாண்ட் அர்டோனிஸ் இருப்பதை அவள் கண்டுபிடித்தாள்.

''நீங்கள் நிறுத்தி வைக்கப்படவில்லையா?'' என்று ரீனா வினவினாள்.

''நான் கொலைக் குற்றவாளி அல்ல,'' என்று ஒரு குலுக்கலுடன் இமாண்ட்பதிலளித் தான்.

ஒருவித இடர்ப்பாடான நிலையை உணர்ந்த படி அதன் பிறகு அவர்களில் எவரும் எதை யும் பேசவில்லை.

''ரீனா, தியேட்டருக்கு உங்களை அழைக் கலாம் என்று நான் விரும்புகிறேன்,'' தனது குல்லாவைத் கைகளில் வைத்து முறுக்கியபடி இமாண்ட் கூறினான்.

''இல்லை, இமாண்ட்,'' என்று தனது

தலையை ஆட்டியபடி ரீனா கூறினாள்.

“ ‘ஒத்தெல்லோ?’ ”

“வேண்டாம்.”

“பழைய நாட்களில் என்னுடன் துணைவருவதற்கு நீங்கள் மறுத்ததே இல்லை.”

“பழைய நாட்களில் இருக்கலாம், ஆனால் இப்பொழுது இல்லை. மோசடியின் துளி அளவு நிழல் கூட ஒருபோதும் ஹ்யூகோவின் பெயர் மீது கட்டாயம் விழக் கூடாது.”

“நீங்கள் கூறுவது பெரும்பாலும் சரிதான். அது அப்படியே ஆகட்டும், போய் வருகிறேன்,” என்றான் அர்டோனிஸ், பிறகு கனத்த கால் எட்டுகளுடன் அவன் திரும்பவும் வாயிலை நோக்கி நடந்தான்.

“சற்று நேரம் பொறுங்கள், நாம் கொஞ்சம் தேநீர் அருந்தலாம். ராபின்!” உரத்த குரலில் ரீனா அழைத்தாள்.

“இல்லை, நன்றி உங்களுக்கு. நான் போகலாம்.”

“சமீபத்தில் ராபின் முற்றிலும் முரண்படவே நடந்து கொள்கிறது,” என்று கவலைப் பட்டாள் ரீனா.

“அண்மையில் இந்த தானியங்கிப் பொறிகளை நம்புவதை நான் நிறுத்திவிட்டேன்,” என்று விமர்சித்தான் இமாண்ட். “லுசின்டா வெறி கொண்டது போலக் காணப்படுகிறது. அதை யாராலும் முறையாகச் சரிப்படுத்தி வைக்க முடியவில்லை. இன்னும் என்ன, அதனுடைய பிரிண்டர் எங்கோ மறைந்து போய்விட்டது.”

ரீனா தனிமையில் விடப்பட்ட போது, சாத்தியமான எல்லா முடுக்குகளிலும், மறை விடங்களிலும், குளியலறையில் கூட மேலோட்ட மாகப் பார்த்தாள், ஆனால் ராபின் வீட்டில் எங்குமே காணப்படவில்லை.

...அவன் இறுதியாகக் கதவுப்பக்கம் திரும் பினான், ஒரு கனத்த உருவம், தனது மார் பில் சதுரமான பதிவுத் தகட்டுடன் தோன்றி யது.

''நீ எங்கே போயிருந்தாய்?'' என்று அச்சுறுத்துகின்ற தொனியில் ரீனா கேட் டாள்.

எதையும் சொல்ல முடியாதபடி ராபின் தவித்தது. பொய் சொல்வதற்கு மிகவும் ஆர் வங் கொண்டிருந்தது தெளிவாகவே தெரிந் தது, ஆனால் ஏமாற்றுதல் என்பது அதனது திறமைகளின் எல்லைகளுக்கு அப்பாற் பட்ட தாகவே இன்னமும் இருந்தது.

* * *

எவரும் அறியாதபடி 'ஊதாப்பூ பாதிப் பாளன்' என்ற சொல் உள்ளூர் பத்திரிகையில் வேரூன்றத் தொடங்கியது, அவர்களுடைய பட்டியலும் வளர்ந்தது. வெகு சீக்கிரத்தில் நூற்றுக் கணக்கினர் பூவுடன் கூடிய முழுமை யான கடிதத்தைப் பெற்றார்கள். இன்னும் என்ன இருக்கிறது, அவர்கள் பிரபலமான ஆட்கள்: உயர் நிலையிலுள்ள அதிகாரிகள், பொருள் முதலீட்டாளர்கள், புகழ்மிகு எழுத்

தாளர்கள், விஞ்ஞானிகள்... அந்தத் தொகுதியில் பின்னால் சொல்லப்பட்டவர்களே அதிகம் இருந்தார்கள்.

ஊதாப்பூவைப் பெற்றுக்கொள்வது என்பது, தலைகீழான அந்தஸ்தின் அடையாளத்தின் ஒருவகை முறையாக இருந்தது. அரசாங்கத்தினுடைய தெரியாத எதிரியிடமிருந்து வரக்கூடிய ஓர் அங்கீகாரத்தின் அடையாளமாக இருந்தது.

'ஊதாப்பூ பாதிப்பாளர்' களுக்காக ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக் கூட முன்வைக்கப்பட்டது, ஆனால் அந்தத் திட்டத்தை ஜனாதிபதி நிராகரித்து விட்டார். நிராகரிக்கப்பட்டது அறிவிக்கப்பட்டுவிட்ட பிறகு, ஜனாதிபதி தனக்கும் ஓர் ஊதாப்பூவை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதே காரணம் என்ற கிசுகிசுப்புகள் அதைத் தொடர்பு படுத்தி வெளிவரத் தொடங்கின.

கடிதங்களுடைய பொது அமிசங்களைத் தவிர்த்துப் பார்க்கின்ற போது, ஓர் ஆர்வமூட்டும் படம் உருவாகலாயிற்று. ஐயத்திற்கிடமில்லாத அச்சுறுத்தல்களால் புதுப்பிக்கப்பட்ட ஆசிரியனுடை கோரிக்கைகள், ஹ்யூகோ லென்ஸால் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட இலட்சியத்துடன் தொகுத்துக் கூற முடியும்: 'இயற்கைக்குத் திரும்புங்கள்!' 'விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்னேற்றமானது மனித இனத்திற்கு அதனது அழிவைக் கொண்டுவரும்.'

மற்றும் 'இயற்கையினுடைய ரகசியங்களுக்கான சாவிகள் மனிதனுக்கு எட்டாத தொலை விற்கு வீசி ஏறிய வேண்டியது' என்பதே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டன.

'ஊதாப்பூ' சம்மேளனங்களின் முதலாவது கூட்டத்தில், போலீஸ் அதிகாரிகளில் ஒரு வரான ஜான் காட்டுமிராண்டி, கடிதங்கள் எல்லாம் தட்டச்சு செய்யப்பட்டு அனுப்பப் படுவது அதை எழுதியவனால் மட்டுமே அல் லாது, போக்கிரிகளையும், மோசடிக்காரர் களையும் திறமையோடு ஒன்று சேர்க்கப் பட்ட ஒரு முழுமையான கூட்டத்தினரால் செய் யப்படுகிறது என்ற கருத்தினை முன்வைத் தான்.

அமைதியின்மையை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாக இருத்தல் வேண்டும் எனக் கண்டான், ஏனெனில் 'கலங் கிய குட்டையில் மீன் பிடிப்பது எப்பொழுது மே இலகுவானதாக இருக்கும்.' கடிதங்களைத் தட்டச்சு செய்யப் பயன்பட்ட அந்த எந் திரம் கைப்பற்றப்படவில்லை, மேலும் இந்தக் கூற்று ஜான் காட்டுமிராண்டி தனது கருதுகோளை உறுதிப் படுத்துவதாகக் கண் டான்: போலீஸ் சக்தியின் உணர்ச்சிக் கொ டுக்குகளுக்கு எட்டாத அளவுக்கு அப்பால் நன்கு மறைக்கப்பட்ட நிலவறையில் எங்கா வது அந்தத் தட்டச்சு எந்திரம் வைக்கப்பட் டிருக்க வேண்டும் என்பதில் அவன் உறுதியாக இருந்தான்.

காம்பினுடைய கட்டளையின் பேரில்

கடிதங்கள் வாசகப் பகுப்பிற்கு ஆளாயின.

இந்தப் பகுப்பிற்காக ஒரு பழைய கம்பியூட்டர் நிரல் பயன்படுத்தப்பட்டது. கடந்த காலத்தில் **மன்னன் லியர், ஒத்தெல்லோ, ஹேம்லெட்** ஆகியவற்றின் ஆசிரியர் யார் என்பதை நிறுவுவதற்குப் பயன்பட்டது. சில விமரிசகர்களும், இலக்கிய வரலாற்றாசிரியர்களும் நிலைநாட்டியது போல, மேற்கண்ட படைப்புகளும் பிற படைப்புகள், எழுத்தாளர்களது ஒரு குழுவின் கூட்டு முயற்சிகளின் விளைவாக ஏற்பட்டவை அல்ல, ஆனால் வில்லியம் ஷேக்ஸ்பியருடைய அறிமுகமில்லாத உருவமல்ல... இந்த முறைகூட கூட்டுக் கொள்கை என்பது திரும்பவும் ஆதாரமற்றது என்பதை வெளிப்படுத்தியது. இப்போது பயன்படுத்தப்பட்ட கம்பியூட்டரானது, கடிதங்களில் உள்ள மிகவும் நுண்ணிய நுட்ப வேறுபாடுகளையும், பயன்படுத்தப் பட்ட சராசரி வார்த்தைகளின் நீளத்தையும், 'ஊதாப்பூக் கடிதங்கள்' ஒரே ஓர் ஆளால் தான் எழுதப்பட்டன என்பதை உறுதிப்படுத்தியும் புலனாய்வு செய்தது.

கடிதங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட இடை ஓய்வானது பெரிதும் வித்தியாசப்பட்டது: சிலர் ஒரு மாதம் வழங்கப்பட்டிருந்தார்கள், மற்றவர்கள் ஓராண்டு, ஆனால் குறிப்பிடத்தக்க நபர்கள், ஆர்னோ காம்ப்பையும் சேர்த்து, எந்தக் குறிப்பிட்ட கால எல்லையும் வழங்கப்படவில்லை.

ஆசிரியனுடைய நோக்கங்கள் எந்தள வுக்குத் 'தீவிரமாக' இருந்தன என்பதை நிலைநாட்டும் பொருட்டு, ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. அதனைப் பரிசோதிப்பதற்காக பல்வேறு வித அச்சுறுத் தல்களை நிறைவேற்ற துல்லியத்தைச் சோதிக்க வேண்டி இருந்தது. எனினும், அந்நேரங்களில் விபத்துகளையும், படுகொலைகளையும் வித் தியாசப்படுத்துவது என்பது மிகவும் சிரமமான தோடு, சில நேரங்களில் முடிவும் முடியாது என்று மற்ற எவரையும் விட ஆர்னோ காம்ப் நன்றாகப் புரிந்துகொண்டான். அதி கமான ஆட்கள் விசாரிக்கப்பட வேண்டி இருந்தால், அதிக எண்ணிக்கையிலான சட் டமும் தானாகவே ஏற்படுகிறது. ஐயுறவுடன் புள்ளிவிவரங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதை போலீஸ் படையின் தலைவர் அறியும் புள்ளிவிவரங்களின் நோக்கில், திருமணங்கள் தவிர்க்க முடியாதவை போல விபத்துகளும் ஏற்படுகின்றன.

இது போன்ற துயரார்ந்த சிந்தனையில் ஆர்னோ காம்ப் மூழ்கி இருந்ததைத் தனது இரண்டாவது வருகையின் போது ஒரியா டேர்வி கண்டுபிடித்தாள்.

ஒரியாவைச் சந்திக்கப் போகும் தனது வழியில், "நல்லது, என்ன நல்ல செய்தியை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று காம்ப் கேட்டான்.

"புலனாய்வு முடிந்து விட்டது."

''ஆக அது கொலை என்று கருதுகிறீர்களா?''

ஒரியா தனது தலையை ஆட்டி கண நேர மௌனத்திற்குப் பிறகு கூறினாள்: ''முடிவிற்கு சற்று முன்னதாக அவனை நான் பார்த்தேன்.''

''ஆக, கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு உங்களைப் பார்க்க அவன் வந்தான்?''

''ஆமாம்.''

''என்னை மன்னிக்க வேண்டும். இத்தகைய கேள்விகளுக்காக உங்களை நான் கெஞ்சிக் கொள்கிறேன்,'' ஒரு முறுவலிப்புடன் காம்ப் மன்னிப்புக் கோரினான். ''உண்மையில் இது குறுக்கு விசாரணை அல்ல, வெறுமனே ஒரு தனிப்பட்ட விவாதந்தான்.''

''எனக்குப் புரிகிறது.''

''தான் பெற்றுக் கொண்ட அநாமதேயக் கடிதத்தைப் பற்றி லென்ஸ் அப்போது உங்களிடம் பேசினானா?''

''ஆமாம், அது பற்றி என்னிடம் அவன் பேசினான், மிக நீண்டு.''

''அவனது உயிருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை அவன் எங்ஙனம் எடுத்துக்கொண்டான்?''

''தான் தண்டனை விதிக்கப்பட்டதாக அவன் கருதினான், கடிதத்தில் அநுமானிக்கப்பட்டது போல, அவன் துல்லியமாக அவ்வளவு காலத்திற்கே வாழ வேண்டியவனானான். அது காரணமாகத்தான் கிளினிக்கில் எந்த நேரத்தையும் செலவிட அவன் மறுத்துவிட்டான். தனது காரியங்களை எல்லாம்

முடிப்பதற்கு அவனுக்குப் போதுமான நேரம் இருக்கவில்லை.''

காம்ப் தனது உதடுகளைச் சுருக்கிக் கொண்டு, பிறகு திடீரென்று கேட்டான்: ''தற்கொலைக்கு எந்த ஆதாரமிருப்பதாகவும் நீங்கள் கருதவில்லையா?''

நொடிப் பொழுது கூட யோசிக்காமல், ''அது பற்றி நான் சிந்தித்தேன்,'' என்று ஒரியா விடையளித்தாள். ''இன்னும், தற்கொலைக்கும் படுகொலைக்கும் இடையே தேர்ந்தெடுப்பது சிறிதளவே உண்மையில் துல்லியமானது. இதன் பின்னணியில் சில ஊகங்கள் இருக்கக் கூடும். என்னிலும் நன்றாக அதை நீங்கள் அறிவீர்கள். இன்னமும் அத்தகைய எந்த ஆதாரத்தையும் கண்டுபிடிக்கவில்லை.''

''புலனாய்வின் முடிவுகளை நான் அறிவேன். ஆனால் விஞ்ஞானக் கூற்றுக்கு அப்பாற்பட்டு உள்ளுணர்ச்சி எப்பொழுதுமே செயல்படுவதற்கு ஒரு பாத்திரம் கொண்டது. கண நேரம் கேளுங்கள், ஒரியா. முழு அமிசத்தையும் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

சற்று நேரம் சிந்தித்தாள் ஒரியா, பிறகு ஒரு சிகரெட்டை வெளியே எடுத்தாள். உதவும் மனப்பாங்கோடு காம்ப் அவளுக்காக அதைக் கொளுத்தினான்.

''இந்தக் கடிதங்களின் ஆசிரியன் நமது சமூகத்தை மாற்ற வேண்டும் என்பதில் ஆர்வங் கொண்டிருக்கிறான் என்பதை எவரும்

தெளிவாகவே காண முடியும். அவனது கோரிக்கைகளில் தெளிவற்றவை எதுவுமே இல்லை. ஜான் வில்நெர்டன் பயங்கர ஆயுதங்கள் தயாரிப்பதை அவசியம் நிறுத்த உத்தரவிடப் பட்டான், குவார்க்குகள் பற்றிய தனது ஆராய்ச்சியை நிறுத்தும்படியும், இயற்கையின் ரகசியங்களிடம் தன்னுடைய 'சாவிகளை வீசி எறியும்' படியும் லென்ஸ் உத்தரவிடப்பட்டான். அக்குவாசிட்டியில் தனது துறப்பணத்திட்டத்தை குளிர் இருப்பாக மாற்றும்படி வீணாக ஈவ் சாயிச் அழைக்கப்பட்டான். எனக்குப் பல கடிதங்களைப் பற்றித் தெரியாது, ஆனால் எஞ்சியவைகள் எல்லாமே பெரும்பாலும் ஒன்று போலவே இருக்க வேண்டும்.''

''கிட்டத்தட்ட.''

''எந்தவகையிலும், இது எல்லாமே ஏதோ ஒருவகையான குழந்தைகளுடைய விளையாட்டுப் போல, மிகவும் வெகுளித்தனமாய்க் காணப்படுகிறது.''

''குழந்தைகளுடைய விளையாட்டா! ஹ்யூகோ லென்ஸ் வெறுமனே விளையாட்டுக்காகக் கொல்லப்பட்டான் என்று என்னிடம் நீங்கள் சொல்வதாகக் கருதவில்லையா?''

''அவன் கொல்லப்பட்டான் என்பது நிரூபிக்கப்படவில்லை,'' என்று மறுத்தாள் ஓரியா டேர்வி. ''அதற்கு மாறாக, ஒரு டாக்டர் என்ற வகையில் நான், அவன் இயற்கையாகவே மரணமடைந்தான் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.''

''குறிப்பிடப்பட்ட நாளில் அப்படியே! இப்பொழுது நீங்கள் கற்பனைக் கதையைப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.''

''நான் அப்படி நினைக்கவில்லை.''

''உங்களுடைய மரணங்கூட முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது. அது உங்களைக் கவலைக்குள்ளாக்கவில்லையா?''

''நான் விதியை நம்பக் கூடியவள். இன்னும் என்ன, உங்களுடைய அதிகாரிகளிடத்தில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்,'' என்று புன்னகையுடன் பதிலளித்தாள் ஓரியா.

''குழுவின் மற்ற உறுப்பினர்களுடன் நாளை மீண்டும் நான் உங்களைப் பார்க்கிறேன். ஒரு பொதுவான அணுகுமுறை பற்றி நாம் அவசியம் பேசியாக வேண்டும்,'' என்று புறப்படும் வேளையில் ஆர்னோ காம்ப் கூறினான்.

ஓரியா டேர்வி புறப்பட்டுப் போன பிறகு மேலுங்கீழும் நடந்தபடி அவன் நீண்ட நேரம் செலவிட்டு அமைதிப் படுத்திக் கொள்வதற்கு முயன்றான். இறந்து போன டாக்டருடைய வீட்டில் இப்பொழுது கண் காணிப்புப் பொறுப்பில் இருக்கக் கூடிய ஜான் காட்டுமிராண்டியினுடைய தோற்றமானது அவனது கவலைகளில் குறுக்கிட்டது.

''அறிவிப்பதற்கு ஏதேனும் இருக்கிறதா?'' எனக் கேட்டான் காம்ப்.

''இதோ ஒரு கேசட், ஐயா.''

''ஒரு முழுக் கேசட்டா?'' என்று வியப்

போடு கேட்டான் காம்ப். ''ரீனா லென்ஸ் தனக்குத்தானே என்ன பேசிக் கொண்டாள்?''

அதை அவன் இயங்கச் செய்தான். ஆரம்பத்தில் கேட்ட சில இரைச்சலுக்குப் பிறகு தெளிவாகக் கேட்க முடிந்தது: அவை ரீனாவினுடையதும், தெரியாத மனிதனுடைய குரலும்.

''எங்கே போயிருந்தாய்?'' என்று கண்டிப்பான குரலில் ரீனா கேட்டாள்.

''நகரத்தில்,'' அந்த மனிதனுடைய குரல் உறுமியது.

''ஏன்?''

''அது இரகசியம்.''

''என்ன வகையான முட்டாள் அது?'' என்று அவசரப்பட்டுக் கேட்டான் காம்ப்.

''ராபின், ஒரு ரோபாட்,'' என்று விளக்கினான் காட்டுமிராண்டி.

ராபினுடைய ரகசியம் டாக்டர் லென்ஸைத் தவிர வேறு யாருக்கும் சொந்தமில்லை என்பதைக் கேள்விப்பட்டதும், காம்பினுடைய கண்கள் ஏறத்தாழ தலையை விட்டு பிதுங்கிக் கொண்டு வந்தது. இடிவிழுந்தவன் போல காட்டுமிராண்டி அங்கே நின்றான்.

''டாக்டர் லென்ஸினுடைய பெயரால் — வேண்டாம்!'' அதன் பிறகு ஒலிப்பதிவு நாடா தானாகவே நின்று போய் விட்டது. ரீனாவிடம் ராபின் கடைசியாகக் கூறியதைக் கேட்டதும் காம்ப் வினவினான்: ''இங்கே

பறந்து வருவதற்கு உனக்கு எவ்வளவு நேரம் பிடித்தது?''

''பத்து நிமிடங்கள்.''

''பறக்கும் படையை கூட்டிக் கொண்டு நேராக லென்ஸினுடைய வீட்டிற்குச் செல். இந்த ரோபாட்டை இங்கே கூட்டி வா. சீக்கிரம்! ஆனால் ராபினைச் சீர்குலைத்து விட வேண்டாம்!'' என்று அவனுக்குப் பின்னாலிருந்து காம்ப் கத்தினான்.

திரும்பவும் தனது அலுவலகத்தில் தான் தனிமையில் இருப்பதை அறிந்து கொண்டு, போலீஸ் தலைமை அதிகாரி தன்னுடைய கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்தான். கீழைய நாட்டு முனிவர்களுடைய போதனைப்படி சரியாக நடுப்பகலில் ஐந்து நிமிட ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு அது தான் நேரம், ஆனால் இன்றோ யோகப் பயிற்சிக்காக அவன் எந்த நேரத்தையும் ஒதுக்கிக் கொண்டிருக்க முடியாது.

அவனது சாய்வு நாற்காலியிலிருந்த வானொலி தொலைபேசியிலிருந்து ஒரு சப்தம் வந்தது.

''ஜா... ஜான் காட்டுமிராண்டி இங்கிருக்கிறேன்,'' குறுக்கீடுகளுக்கு இடையில் வானொலி வழியாக அவன் கேட்டான். காட்டுமிராண்டி முன்னர் ஒருபோதும் திக்கிப் பேசியவன் இல்லை என்பதை காம்ப் மிக நன்றாக அறிவான். நடந்தது என்ன?

''மு... மு... முயற்சி தோல்வியடைந்து விட்டது. ராபின் காணாமற் பே ப்விட்டது,''

என்று ஜான் காட்டுமிராண்டி அறிவித்தான்.

"அந்த இடத்தில் உச்சியிலிருந்து கீழ்வரை தேடு!"

"அதை நாங்கள் செய்துவிட்டோம், ஐயா."

"ரீனா லென்ஸை விசாரணை செய்."

"நாங்கள் செய்தோம். அவளுக்கு எதுவும் தெரியவில்லை. ராபின் தனக்குக் கீழ்ப்படிவதை நிறுத்திக் கொண்டுவிட்டதாக அவள் கூறுகிறாள். அது முறையாக வேலை செய்து கொண்டிருக்க வில்லை, ஆக சட்டப்படி அதற்கு இனிமேலும் அவள் பொறுப்பாக மாட்டாள்."

"எல்லாத் தெருக்களையும் மூடிவிடு! அந்த மாவட்டத்தின் எல்லைகளை மூடிவிடு!" என்று கத்தினான் ஆர்னோ காம்ப். நோக் கத்தை வெற்றி கொள்வதற்கு இது போன்ற எல்லா நடவடிக்கைகளும் ஓரளவுக்கே நம்பிக்கை தரக் கூடியவை என்பதை அவன் அறிந்திருந்தான். கட்டுப்பாடில்லாத ஒரு ரோபாட் ஓர் உண்மையான ஆபத்து, பிடிப்பது என்பதும் பெரும்பாலும் இயலாதது. எந்திர மனிதர்களில் ஒன்று தன்னுடைய பதிவுத் தகட் டைக் கிழித்து விட்டு, பிறகு கடலில் விழுந்த துளி போல நகரத்தின் பல மில்லியன் மக் களுக்கிடையே போக முடியும். அதனது நெஞ் சில் உள்ள பளபளக்கும் எண் காணாமற் போய்விட்டால், ஒரு மனிதனிலிருந்து ஒரு ரோபாட்டை வேறுபடுத்தி அறிவது என்பது யாருக்குமே சிரமமானது தான்!

*   *   *

பூமியினுடைய படுகையில் அவர்கள் ஆழமாகத் துளையிட்டுக் கொண்டு சென்ற போது, அழுத்தமும் வெப்பமும் கூடின. கிணற்றின் அடியினின்றும் வெளியேறிய உருகிய மாக் மாவை தடுத்து நிறுத்துவதென்பது மிகமிகச் சிரமமானதாக இருந்தது.

அவர்கள் ஆழமாகச் சென்றது, தகவல் தொடர்பின் தொலைவினையும் கூட்டி, அதையும் கவனித்துக் கொள்ள வேண்டி இருந்தது, இதுவும் கூட மேற்கொண்டு பிரச்சினைகளுக்கு வழி வகுத்தன.

கடற்கரையோடு எல்லாத் தொடர்புகளையும் சாயிச் நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று, மேலும் அக்குவாசிட்டியில் இருந்த ஆட்கள் கவலையடையத் தொடங்கினார்கள்: கடற்கரை கிராம மீனவர்களிடமிருந்து புத்தம் புதிய மீன்களை வாங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இப்போது கடலுக்குள்ளாக அக்குவாசிட்டிக்கு விஷேடமான அடைப்பான்களில் விநியோகிக்கப்படும் உணவையே அவர்கள் உண்ண வேண்டி இருந்தது.

அக்குவாசிட்டியில் இருக்கின்ற மூவாயிரம் ஆட்களும், 'இரும்பு ஈவின்' மன ஆற்றலால் தூண்டப்பட்டு, இருபத்தி நான்கு மணி நேரமும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நீர்க் கூரைக்கு மேலாக வெளி உலகத்தோடு வானொலித் தொடர்பு என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. உணவைப் போலவே கடிதங்கள் மேலுங் கீழுமாக

விஷேடமான அடைப்பான்களில் எடுத்துச் செல்லப்பட்டன.

முன்னர் போலவே, ஆழ் துறப்பணப் பணி யின் சாதனை, துறப்பணப் பணியின் ஒவ்வொரு புதிய கட்டத்திலும் தரப்பட்ட போனஸுடன் கூடிய சம்பள முறை இவற்றால் கவரப்பட்ட ஏராளமான ஆட்கள் சாயிச்சினுடைய ஏவ லுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டனர்.

ஈவ் சாயிச் கடைசியாகப் பெற்றிருந்த தபாலில், வழக்கம் போல, டஜன் கணக் கான கடிதங்கள் இருந்தன. தனது சாய்வு மேசையின் ஓர் ஓரத்திற்கு அவற்றைத் தள்ளிய அவன், ஆர்னோ காம்பிடமிருந்து வந்த ஒரு பொட்டலத்தைப் பிரித்தான். சாயிச் அக்குவாசிட்டியை விட்டு வெளியேறி, வறண்ட நிலப்பகுதிக்குத் திரும்ப வேண்டும் என போ லீஸ் தலைமை அதிகாரி வலியுறுத்தி இருந்தான்.

''ஒரு நெருக்கடியான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவேளை நீங்கள் மறந்து போயிருந்தால், கடிதத்தைப் பெற்றுக் கொண் டதிலிருந்து, சீக்கிரமாகவே பதினெட்டு மா தங்களாகப் போகிறது,'' என்று எழுதியிருந் தான் ஆர்னோ காம்ப்.

''மறந்து போயிருந்தால்!... அவன் கேலி தான் செய்திருக்க வேண்டும்,'' வெறுமை யோடு தலையை அசைத்தபடி சாயிச் முணு முணுத்தான்.

''இந்த நெருக்கடியான நாட்களை நீங் கள் கட்டாயம் நம்பிக்கையான மெய்க்காப் பாளர்களுடன் செலவிட வேண்டும்,'' அந்தக்

கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ''தந்தக்கோபுரத்தில் உங்களை நாங்கள் வைக்கப் போகிறோம், அல்லது இன்னும் துல்லியமாகச் சொன்னால் புல்லட் பாதுகாப்பு எஃகு கோபுரத்தில். உங்களுடைய பணியில் அந் தளவுக்கு நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள். இந்த நிலையில் அக்குவாசிட்டியை விட்டு வெளி யேறுவது என்பது உங்களுக்கு எவ்வளவு சிரமமானது என்பதை நான் அறிவேன். எனினும் துறப்பணப் பணியானது நிறைவேற இரண்டு ஆண்டுகள் பிடிக்கும், இங்கே இரண்டு வாரங்களைச் செலவிட்ட பின்னர் கூட, நீங்கள் திரும்பவும் கீழே போய் பணி நடை பெறுவதைக் காண முடியும்...''

கடிதத்தை உற்றுப் பார்த்தபடி, அந்த விஷயத்தில் ஆர்னோ காம்ப் தனது மேசையின் மீது இருந்த வெண்கலச் சிலையைத் தடவிவிட் டுக் கூறியது எங்ஙனம் என்பதை ஈவ் சாயிச் சினால் மிகவும் தெளிவாகக் கற்பனை செய்ய முடிந்தது: ''மிகவும் முக்கியமான விஷயம், கடிதத்தில் குறிப்பிட்ட இந்தத் தலையாய நேரத்தில் நீங்கள் அவசியம் உயிர் வாழ வேண்டும். அதன் பிறகு என்ன — அது என் னுடைய பிரச்சினை அல்ல, எனது அருமை நண்பனே!''

''மிகவும் முக்கியமான விஷயம், கடிதத் தில் குறிப்பிட்ட இந்தத் தலையாய நேரத்தில் நீங்கள் அவசியம் உயிர் வாழ வேண்டும்,'' ஈவ் சாயிச் உரக்கப் படித்தான். ''எங்க ளுடைய அல்லது உங்களுடைய கவனக்

குறைவினால் அச்சுறுத்தல் செயல்படுத்தப்பட்டு விடக் கூடாது என்பது தலையாயது. மக்கள் எப்படிக் கலவரம் அடைவார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.''

சாயிச் கடிதத்தை மேசையின் மீது வைத்து, என்ன செய்வதென்று மலைப்புற்றான். காம்பினுடைய உத்தரவுகள் சரியானவையாகவே தோன்றுகின்றன, எனினும் ஒத்துப்போக அவனால் முடியாது. துறப்பணப் பணித் திட்டத்திற்கான காலக்கெடு நெருக்கமானது என்ற ரகசியத்தை சாயிச் தனக்குள்ளாக வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை காம்ப் உணரவில்லை.

ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து வேண்டிய ஆழத்திற்குள்ளாக அவர்கள் செல்ல வேண்டியது இரண்டு ஆண்டுகளில் அல்ல, ஆனால் ஆறு மாதங்களுக்கு முன்னதாக, சொல்லப் போனால் இப்போது கூட எந்த நாளாகவும் இருக்கலாம். மண்ணியல் மையத்தினுடைய இயக்குநனும், அக்குவாசிட்டி திட்டத்திற்குப் பின்னாலுள்ள இயக்கு சக்தியின் அமைப்பாளனுமான இவனால், அத்தகை ஒரு நெருக்கடியான நேரத்தில் அதை விட்டுவிட்டு எங்ஙனம் செல்ல முடியும்? மேலும் சில நூறு மீட்டர்கள், அதன் பிறகு அக்குவாசிட்டியிலிருந்து ஆட்கள் எல்லாருமே மேலே நிலப்பகுதிக்கு வந்து கொண்டிருப்பார்கள் — நிலத்திற்குக் கீழாக உள்ள இயற்கை சக்திகளை வென்றவர்கள். கீழே நீருக்கடியில் ஏழையாகச் சென்ற குடிமக்கள், கடைசியில்

போதுமான பணத்தோடு கரையேறுவார்கள், அது அக்குவாசிட்டி வேலைக்காக ஆட்களைத் தேர்வு செய்கின்ற போது ஒரு காரணத்திற்கோ, மற்றதற்கோ, மிக உன்னிப்பான தேர்வுக் குழுவினால் தள்ளுபடி செய்யப்பட்ட ஆட்களுக்குப் பகைமை கொள்ளச் செய்யும். பிறகு ஈவ் சாயிச், எஞ்சிய மற்ற எல்லாருடனும், சூரியனையும் புத்தம் புதிய காற்றையும் அநுபவித்து மகிழ்வதற்காக வெளியே வருவான். இப்போது காத்துக் கொண்டிருக்க அதிக நேரமில்லை.

சாயிச் சாய்ந்து கொண்டிருந்த கண்ட்ரோல் பேனலானது, ஒவ்வொரு தனித்தனி நிமிடத்திற்கும் தன்னை இயக்கிக் கொண்டிருப்பவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தபடி, தனது தொடர்ச்சியான மினுமினுப்பு வாழ்க்கையைத் தொடர்ந்து செய்யும்.

இப்போது அது அறிவித்தது: ''கிணற்றின் அடிப்புறத்தில் வெப்பநிலையானது முறையாக ஏறிக்கொண்டே இருக்கிறது, நிற்பதற்கான எந்த அடையாளத்தையும் காட்டவில்லை''. திரவ ஹீலியம் கூடுதல் வெளியேற்றத்திற்குச் சாயிச் ஒரு கட்டளை பிறப்பித்தான், ஆனால் கிணறு தொடர்ந்து வெப்பமடைந்து கொண்டே வந்தது.

''இது தாங்கிக் கொள்ள முடியாதது!'' கரகரப்பான குரைப்பு கீழே அடியிலிருந்து வந்தது. அந்தக் குரல் தலைமை துறப்பணக்காரனுடையது என்பதை சாயிச் அடையாளம் கண்டுகொண்டான்.

''வெண்டிலேட்டர்களை இயக்கிவிடுங்கள்.''

''அவை வெப்பக் காற்றை உள்ளே அனுப்பிக் கொண்டிருக்கின்றன. துறப்பணப் பணியை நாங்கள் நிறுத்திக் கொண்டிருக்கிறோம்.''

''நீங்கள் துணிவு கொள்ளவில்லையா! ஒரே ஒரு வெடிப்புத் தான் நடக்க வேண்டியிருக்கிறது, வெறுமனே ஒன்றே ஒன்று.''

''எங்களில் ஏராளமான பேரை நீங்கள் கொல்லப் போகிறீர்கள்.''

''உங்களுடைய பணிமுறை ஆட்கள் போனஸை இழப்பார்கள்,'' அச்சுறுத்தினான் சாயிச்.

''உங்களுடைய போனஸை நீங்கள் வைத்துக் கொள்ளலாம்,'' என்று பதில் திரும்ப வந்தது. ''நாங்கள் மேலே வந்து கொண்டிருக்கிறோம்.''

''கோழைகள்! நான் கீழே உங்களிடம் வந்து கொண்டிருக்கிறேன்,'' என்று இரைந்தான் ஈவ் சாயிச், அந்த ஆட்களிடம் செல்வதற்காக டிரக் வண்டியை நோக்கி விரைந்து சென்றான். ஆனால் அவ்வாறு செய்வதற்கு முன்னால் பிரதானக் கிணற்றை விட்டு யாரும் வெளியேறுவதைத் தடுப்பதற்காக லிஃப்டை நிறுத்த கண்ட்ரோல் பேனலின் மையத்திலிருந்த பச்சைப் பொத்தானை அமுக்கினான்.

நரகம் போன்ற பாதாளத்து வேலை நிலைமைகளில், தங்களது பணி முறையில் மற்றுமொரு அளவு வெட்டி முடித்தவர்கள் தங்களுடைய தூக்கத்திலே இருந்ததனால், இப்போது ஆள் அரவமற்று இருந்த அக்குவாசிட்டியின் தெருக்களில் ஒன்றில் டிரக் வண்டி அவனைக் கீழே இழுத்துச் சென்றது.

தொலைவில் இப்போது கீழிருந்து எழுப்பப் பட்ட கட்டுமானங்கள் தெரிந்தன. வேகத் தைக் குறைக்காதபடி நேராக லாக் சேம் பருக்குள் சாயிச் அதைச் செலுத்தினான். லிஃப்டுக் கூண்டு கீழே நகர்ந்ததில் கிணற்றில் வெப்ப நிலையானது உயர்ந்தது, அவனுடைய கண்களெல்லாம் சீக்கிரமாகவே பசை போன்ற வியர்வையால் மங்கலாகத் தெரிந்தன.

ஆட்களெல்லாம் சாயிச்சுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். சுரங்க வாயிற் குழி முழுக்க ஆட்கள் இருந்தார்கள். கோபங் கொண்ட தேனீக்களை நினைவுபடுத்துவது போல எரிச்சலூட்டும் பேச்சு அங்கே நீடித்தது. மேடையின் விளிம்பில் இருந்த மங்கிய விளக் கொளியில் எதனையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. லிஃப்டுக் கூண்டை விட்டு அவன் வெளியே குதித்த போது, தான் பார்த்திருந்த தாந்தேயின் நரகத்தை சாயிச் நினைத்துக் கொண்டான். சாயிச் பார்வைக்கு வந்தபோது, துறப்பணப் பணிக் குழுக்கள் தங்களுடைய பேச்சை நிறுத்தி விட்டு பதட்டத்தோடு காத்தி ருந் தார்கள். பௌதிகவியலாளர்கள், மண்ணிய லா ளர்கள், எலெட்ரானிக் மற்றும் தெர்மோ நியூக்லியர் நிபுணர்கள் அனைவரும் 'இரும்பு ஈவ்' எதைக் கொண்டு வந்திருப்பான் என்று கேட்பதற்காக நின்றார்கள்.

சாயிச் சுரங்க வாயிற் குழியின் நடுப்பகுதி வரை நடந்துசென்றான். இம்மட்டத்தில் இருந்த கனமான உலோகப் படிவிற்குக் கீழே தனது துளையிடும் தண்டுகளை ஆழத்தில்

செலுத்திக் கொண்டிருந்த சாதனம் வரை நடந்துசென்றான். இந்த மேடையிலிருந்துதான் வெடிப்புப் பணி செய்யப்பட்டன, அதன் பிறகு தாணியங்கி அகழ்பொறி கிணற்றின் மற்ற பகுதி யைத் தோண்டுவதற்குத் தயாரானது.

''மேலே செல்லக் கூடிய லிஃப்ட் ஏன் வேலை செய்யவில்லை?'' என்று கூட்டத் தினின்றும் ஒரு குரல் கத்தியது.

''நான் அதை நிறுத்திவிட்டேன்,'' என்று அமைதியான குரலில் சாயிச் பதிலளித்தான். வெப்பக் காற்று நுரையீரல்களை எரிப்பது போலக் காணப்பட்டது; தன்னால் பெரும் பாலும் அதைப் பிடிக்க முடியும்படி கனமாக இருப்பது போல அவன் உணர்ந்தான். சாயிச் கையை உயர்த்தினான், பேச்சு நின்றது.

''மூன்று நாட்களில், அல்லது அதிகளவு நான்கு நாட்களில் குறியிட்ட ஆழத்தை நாம் அடையலாம்,'' என்று ஈவ் சாயிச் அறிவித் தான். ''அதன் பிறகு உங்களுடைய பணி நிறைவு பெறும். பணக்காரர்களே நீங்கள் மேல் தளம் வரை செல்வீர்கள்...''

சாயிச்சினுடைய பேச்சை இடையில் நிறுத்தியபடி, ''லிஃப்டை திரும்பவும் செயல் பட வையுங்கள்!'' என்று ஒரு குரல் கத்தியது.

''உங்களுடைய போனஸை நான் இரட்டிப் பாக்குவேன்,'' என்று இரைந்தான் சாயிச். எந்தச் சப்தத்தையும் பெரிதாக்கக் கூடிய நீராவி நிறைந்த காற்றில் அவனது குரல் எதிரொலித்தது.

''அதற்காக என்னுடைய கழுத்தைப் பண

யம் வைப்பது பயனில்லாதது!'' என்று துறப் பணக்காரன் எதிருரைத்தான்.

''வேலைக்குத் திரும்புங்கள்!'' என்று கத்தினான் சாயிச். ''அடுத்த வெடிப்புக்குத் தயாராகுங்கள்.''

மையத் துறப்பண அமைப்பை நோக்கி சாயிச் நடந்த போது, துறப்பணக்காரன் முன்னுக்கு வந்து அவனுடைய பாதையை மறித்தான். இப்போது அவனுக்கும் அவனுடைய இலக்கிற்கும் ஒரே ஒரு சிறிய எட்டு மட்டுமே இருந்தது, கடைசி வெடிப்பு மட்டுமே தேவைப் பட்டது... நிச்சயமாக அவனுடைய வாழ்க்கைப் பணி சின்னாபின்னமாகிப் போய்விடாது?

தனது நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அந்த மனிதனை ஒரு பக்கமாகத் தள்ளுவதற்கு முயற்சி செய்தான். ஆனால் துறப்பணக்காரன் அவனது கையைப் பற்றி வெடுக்கென்று இழுத்தான். சாயிச் லேசர் துப்பாக்கியைத் தனது பையிலிருந்து எடுத்து தனக்கு முன்னால் இருந்த வெளிறிய முகத்தைக் குறி பார்த்தான். பிறகு துறப் பணக்காரனது உடலுக்கு மேலாக நடந்து போய், மேற்பரப்பில் எண்ணெயும் மசகும் மினுமினுக்க இருந்த மையத் துறப்பண அமைப்புக்குச் சென்றான்.

இந்த நேரத்தில் வேலை செய்பவர்கள் எந்த ஒரு முணுமுணுப்புமின்றி கலைந்து சென்றார்கள். சாயிச்சிடமிருந்து பொருத்த மான ஓரிரு உத்தரவுகளைப் பெற்ற பிறகு,

எந்திரம் வேலை செய்யத் தொடங்கியது. கனமான இணைப்புத் தகடுகளுக்குக் கீழாக, கடைசி அணு வெடிப்புக்கு, இப்போது நன்கு பிரபலமாகி விட்ட தயாரிப்புகள் செயல்படுத் தப்பட்டுக் கொண்டிருந்தன.

பயங்கரமான அழுத்தத்தின் காரணமாக, தனது சக்தியை இழந்தது போல, சுவர்கள் இலேசாக அசைந்தன.

எதிர்பாராத விதமாக துளையிடப்படும் துவாரத்தின் அடிப்பரப்பானது அசையவும், அதிரவும் தொடங்கியது. அது மிகவும் முன்ன தாக இருந்தது, பத்து நிமிடங்களுக்குள் ளாக வெடிக்க வைப்பது ஒழுங்கு செய்யப்பட வில்லை. ஒளி வெள்ளத்தில் கிணறு நிறைந்தது.

காத்துக் கொண்டிருந்த ஆட்களுடைய முகங்களில் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு வெப்ப அலையானது தாக்கியது. திடீரென்று பகல் போல வெளிச்சமாக இருந்தது. அச்சத் தால் ஆட்களெல்லாம் அலறத் தொடங்கினார் கள்.

''இங்கே உங்களுடைய ஊதாப்பூ வந்து விட்டது!'' என்று குழப்பத்தில் யாரோ அலறியது தான் ஈவ் சாயிச்சுக்கு நினைவிருந்த போது கடைசியாகக் கேட்ட சொற்கள்.

* * *

அக்குவாசிட்டியையும், கடற்கரையை அடுத்த கிராமத்தையும் தாக்கிய அந்தப் பேரழிவு நாடு முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்தத் துயரமான நிகழ்ச்சிகளுக்கு நீண்ட காலத்திற்கு முன்னமேயே மிகவும் செல்வாக்குள்ள பத்திரிகையின் ஆசிரியர் குழு அலுவலகத்திற்கு, கடற்படுகையின் கீழாக அக்குவாசிட்டியில் ஆழ்துறப்பணப் பணி வேலைக்கு எதிராக நன்கு செய்யப்பட்ட விவாதங்களுடன் கூடிய கையெழுத்தில்லாத ஒரு கடிதமானது அனுப்பி வைக்கப்பட்டது என்று கண்காணிப்பு மிக்க எதிர்க் கட்சியினர் உண்மைகளை வெளிப் படுத்தினார்கள்.

வெளியிடாதபடி அந்தக் கடிதத்தை மறைத்து வைக்கும்படி அந்த ஆசிரியர்க்கு என்ன நேர்ந்திருக்க முடியும்? ஏன் அந்தக் கடிதம் பொது மக்களுக்காக வைக்கப்படவில்லை? அக்குவாசிட்டியில் வேலைத் திட்ட ஆய்வு ஒதுக்கி வைக்கப்பட்டது மட்டுமல்ல, ஆனால் மாறாக விரைவு படுத்தப்பட்டதும் ஏன்?

ஒரு விசாரணை வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் வற்புறுத்தினர், எனினும் அதனது முடிவுகள் வெளியிடப்படவில்லை. அது ஏராளமான வதந்திகளுக்கும் கதைகளுக்கும் இடமளித்துவிட்டது.

''அக்குவாசிட்டியினுடைய சீரழிவு, அவை எல்லாமே அழிந்து போவதற்கு ஓராண்டுக்கு முன்னமேயே ஊகம் செய்யப்பட்டு எழுதப்பட்ட அந்தக் கடிதம் பற்றி நீங்கள் கேள்விப்பட்டீர் களா?'' ரீனா ஒரு சந்தர்ப்பத்தில் இமாண்ட் அர்டோனிசைக் கேட்டாள். ''அல்லது அந்தக் கடிதம் வெறுமனே ஒரு வதந்திதானா?''

''அப்படிப்பட்ட ஒரு கடிதம் இருந்தது.''

''உறுதியாகச் சொல்கிறீர்களா?''

''முற்றிலும் உறுதியாக.''

''அது ஏன் அலட்சியப்படுத்தப்பட்டது?'' என்று எரிச்சலோடு கேட்டாள் ரீனா.

இமாண்ட் தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''அது போல விஷயங்களை நீங்கள் பழகுவதற்கு நேரமிது,'' என்றான் அவன்.

''என்ன மாதிரி விஷயங்கள்? ஆயிரக் கணக்கான ஆட்களைக் கொல்கின்ற ஒரு பேரழிவு, அதைத் தவிர்ப்பதற்கு எவரும் முயற்சிக்கவில்லை?''

''அங்குதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்று நான் உறுதி கூறுகிறேன். துறப்பணப் பணிக்கான கிணறு கூடிய மட்டிலும் விஷேடமாக வடிவமைக்கப் பட்டது. ஆனால் எந்தப் புதிய வெளியேற்றமும் இடரினை எதிர்நோக்குகிறது.''

''ஆனால் எதற்காக இடர் எதிர்ப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்?''

''முயற்சி ஏதுமில்லையானால், ஆதாயமும் ஏதுமில்லை.''

''ஒருவகையில் நீங்கள் கூறுவது சரிதான், இமாண்ட்,'' என்று ஏற்றுக்கொண்டாள் ரீனா. ''இன்னும் எதையோ என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை, மிகவும் முக்கியமான ஏதோ.''

''உங்களுடைய வழியிலேயே நானும் சிந்தித்துப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்ட

ஒரு நேரம் இருந்தது,'' என்று விளக்கினான் அர்டோனிஸ். ''ஒரு காலத்தில் நானுங்கூட சர்வதேச நீதியின் நம்பிக்கையில் துயருற்றேன்; ஆனால் தட்டம்மையைப் போல அதை நான் வென்று விட்டேன்.''

''இவை எல்லாவற்றிலும் மிகவும் கொடுமையானது என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''என்ன?''

''அந்த ஈவ் சாயிச்சும், அக்குவாசிட்டியிலிருந்த மற்றவர்களும் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அதே நேரத்தில் சரியாக இறந்து போனார்கள்.''

ஹ்யூகோ லென்ஸினுடைய விதவை எப்போதோ அந்த வீட்டை விட்டு விட்டாள் — அது அவளுக்கு மிகுந்த செலவு பிடிப்பதாக இருந்தது. இரண்டாம் தர ஹோட்டல் ஒன்றில் அவள் சிறிய அறை ஒன்றை எடுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முன்னைய தொழிலைத் திரும்பவும் எடுத்துக்கொள்வது பற்றி அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஒரு டாக்டராக வேலை கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. ஓரியா டேர்வியிடம் அவள் போயிருக்க முடியும்; ஓரியா தனக்கு உதவுவாள் என்பதில் ரீனா முற்றிலும் உறுதியாக இருந்தாள். எனினும் கடைசிப் போக்கிடமாக அவள் புனித பார்த்தலோமியூ கிளினிக்கிற்கு ஒரு முறை சென்று வரலாம்.

இப்பொழுதெல்லாம் அவள் படிப்பதற்குப்

பழகிவிட்ட ஒரே செய்தித்தாள் செஸ் நியூஸ் மட்டுமே. அவளது பழைய நண்பர்கள் வட்டத் தினின்றும் அவள் பார்க்கக் கூடிய ஒரே நபர் இமாண்ட் அர்டோனிஸ்தான், அது வுங்கூட அபூர்வமான சந்தர்ப்பங்களில் தான். பழைய நாட்களில் இருந்ததைக் காட்டிலும் மிக நெருக்கமான உறவினை இப்போது தான் விரும்பவில்லை என்பதை முற்றிலும் தெளிவாக அவள் ஏற்படுத்திக் கொண்டிருந் தாள். இப்பொழுதெல்லாம் ஹ்யூகோ பற்றிய அவர்களுடைய நினைவுகளைப் பங்கிட்டுக் கொள்வதில் மட்டுமே ஆர்வம் காட்டுவது போலக் காணப்பட்டது. லென்ஸ் உயிரோடு இருப்பது போலவே, அவனது பழக்கங்களை யும், அவனுக்குப் பிடித்தமான சொற்றொடர் களையும் கேலிகளையும் நினைவு கூர்ந்தபடி அவர்கள் பேசினார்கள். குவார்க்குகளைப் பிளக்கின்ற பணி எந்தளவில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்ற தகவலை ரீனாவுக்கு வழக்கமாக அர்டோனிஸ் தொடர்ந்து வழங்கி வந்தான்.

ஒரு நாள் மாலையில் இமாண்ட் வெளி யேறிச் சென்றுவிட்ட பிறகு சற்று நேரத்திற் கெல்லாம், ரீனாவினுடைய கதவில் எச்சரிக் கையுடனான கீறுதல் தொடர்ந்தது. அது ஒரு பூனையாகத்தான் இருக்க வேண்டும் என்று ரீனா நினைத்து கதவைப் பாதியளவுக்குத் திறந்தாள். அவளுக்கு முன்னால், கதவுப்படியில் அறிமுகமான தடித்த உருவம் ஒன்று நின்றது. ''ராபின்!'' என்று பெருமூச்சு விட்டாள் ரீனா.

ஆமாம், அது ராபின் தான், எல்லாம் சரிதான், ஆனால் நெஞ்சில் அதனுடைய பதிவு எண் காணப்படவில்லை, அதனது முன்னைய நிலையில் வாடி வதங்கிய, கூனிய உருவமாக இருந்தது.

"உள்ளே வா," என்ற ரீனா, கதவைத் தாழிட்டாள். அவளது இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது.

அறை வழியாக ராபின் முன்னேறிச் சென்ற போது அதனது இயக்கங்கள் மெது வாக இயங்கும் திரைப்படத்தில் வருவதைப் போன்று இருப்பதை ஊகிக்கக்கூடியதாக இருந்தது. அதனுடைய மின் விநியோகமானது குறைந்து கொண்டிருக்கிறது என்ற உண்மை யை உடனடியாக ரீனா கண்டுபிடித்து விட் டாள்.

"செயல்படுவதற்கு எனக்கு முப்பது நிமிடங் கள் மட்டுமே விடப்பட்டுள்ளது," என்று ராபின் அறிவித்தது, அவளுடைய வியப்புகளுக்கு விடை கூறுவது போல இருந்தது. அது பற்றி எதுவுமே செய்ய முடியாது என்பதை ரீனா அறிவாள்.

பால்பாயிண்ட் பேனாவில் மை தீர்ந்து போனவுடன் ஆட்கள் அதை வெறுமனே தூக்கி எறிவார்கள், உண்மையில் அவை விஷேடமாகத் தயாரிக்கப்பட்டவை, ஆகவே அவற்றை மீண்டும் மை நிரப்ப முடியாது. ராபினும் அது போன்ற அமைப்புக் கொண் டனவும் இதே கொள்கையின்படி தயாரிக் கப்பட்டன. தங்களது வளர்ச்சியின் ஒரு குறிப் பிட்ட அளவுக்கு மேலாக ரோபாட்டுகள்

தாண்ட முடியாது என்பதை அது உறுதி செய்தது. ஒருவகையில் ஒரு ரோபாட் தனது மின்சக்தியை பல்வேறு வழிகளில் செலவிட முடியும். சராசரி மின் விநியோகமானது எழுபது ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

அங்கே அவளுக்கு முன்னால் அது நின்ற தால், ராபின் கல்லாக மாறிவிட்டது போலக் காணப்பட்டது. அதைப் பற்றிய ஏதோ ஒன்று, முன்னர் ஒரு முறை ஓர் அருங்காட் சியகத்தில் ஹ்யூகோவுடன் தான் பார்வையிட்ட புத்தருடைய சிலையை ரீனாவுக்கு நினைவு படுத்தியது.

''ராபின், டாக்டர் லென்ஸைக் கொன்றது யார்?'' என்று தணிந்த குரலில் ரீனா கேட் டாள்.

''அதை நீங்கள் கேட்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். இங்கே வந்து சேர்வது எனக்கு மிகுந்த கஷ்டமானதாக இருந்தாலுங் கூட அது காரணமாகத்தான் நான் இங்கே இருக்கிறேன்,'' என்றது ராபின். தொடர்ந்து பேசிய போது ஓரளவுக்கு நிமிர்ந்து கொண் டது: ''எவரும் டாக்டர் லென்ஸைக் கொல்ல வில்லை.''

''யாருமில்லையா?'' ரீனா திரும்பக் கேட் டாள்.

''யாருமில்லை. அவன் தானாகவே கொன்று கொண்டான்.''

''எனக்குப் புரியவில்லை...''

''இதோ,'' ஒருவகையில் அழுக்கடைந்த

குறிப்பேட்டை ரீனாவிடம் ராபின் ஒப்படைத்த படி கூறிது. "இது டாக்டர் லென்ஸுக்குச் சொந்தமானது. ஒரு முறை பாருங்கள். பிறகு உங்களுடைய கேள்விகளுக்கு நான் பதில் கூறு கிறேன். வேகம் முக்கியம் — நான் செயல்படு வதற்கு இன்னும் இருபது நிமிடங்கள் மட்டு மே இருக்கின்றன."

காய்ச்சல் வயப்பட்டபடி ரீனா அதன் பக்கங்களைப் புரட்டினாள். ஹ்யூகோவினு டைய அறிமுகமான கையெழுத்தால் அது நிறைந்திருந்தது. சூத்திரங்கள்... ஆய்வுகளுக் கான திட்டங்கள்... பாதி வாக்கியங்கள்...

"...குவார்க்குகளைப் பிளப்பதற்கு ஒரு குறிப்பிடத்தக்க முறை. இன்று நான் அதனை எப்போதும் போல சோதித்துப் பார்ப்பேன். என்னுடைய ஊகம் சரியாக இருந்தால், பிறகு இன்றைய தேதி வரைக்கும் மக்கள் நினைத்திருந்ததை விட, எனது அருமை நண்பன் இமாண்ட் உள்பட, குவார்க்குகளைப் பிளக்க பத்து மடங்கு சக்தி குறைவாகவே தேவைப்படும். இன்றிரவு நான் முயற்சி செய் வேன். அதை நிறுத்திவிடுவதற்கு நான் விரும்ப வில்லை. என்னுடைய முடிவுகளை அறிகின்ற போது அர்டோனிசின் முகத்தைச் சற்று பார்ப் பதற்காக ஓர் இரவு தூக்கம் இல்லாமல் இருப் பது கூடப் பயனுள்ளதாகத்தான் இருக்கும்."

இதனைத் தொடர்ந்து ஓரிரு வரிகளில் சூத்திரங்கள் இருந்தன.

"சோதனை மிகவும் எளிமையானது. இப்போதைக்கு யாரையும் உள்ளே வர விட

நான் விரும்பவில்லை. குறிப்பாக இப்போ தைய கருவி போதுமானதாகும். ரீனா தூங் கிப்போய்விட்டாள்... நான் நிறுவனத்திற்குச் செல்வதென்று முடிவு செய்யப்பட்டது...''

இப்போது சற்று தொலைவில், ஏப்ரல் மாத இரவில், அவள் விழித்துக் கொண்டு விட்ட போது, ஹ்யூகோ காணப்படவில்லை என்பதைக் கண்டுபிடித்து, பிறகு காலை விடியல் வரை கவலையால் விழித்திருந்து, எல்லாவகையான அச்சத்தாலும் கலக்கமுற்ற தை ரீனா நினைவு கூர்ந்தாள். பிறகு அவ னுடைய ஆர்னிதாப்டர் வீட்டை நெருங்கிக் கொண்டிருப்பதை செவிமடுத்த போது, அவள் திரும்பவும் படுக்கையறைக்குச் சென்று விட் டாள், படுத்தபடி தூங்குவது போல பா சாங்கு செய்தாள்...

ஆக, அவன் பறந்து போய்க் கொண் டிருந்த இடம் அது தான்! சீர்படுத்த முடி யாத அதே பேராசை, அவனுடைய சொந்த பொறுமையின்மை, திடீர் எழுச்சிக்கு ஆளா கின்ற ஹ்யூகோ.

ஆக, அவனைப் போலவே அது இருந்தது: சோதனைகளும், விஞ்ஞான உண்மையும் எப்போதுமே எல்லாவற்றுக்கும் முன்னதாக வந்து விட்டன. கடைசி சில மாதங்களாக லென்ஸுடன் தான் இணைந்து வேலை செய்ததைப் பற்றி இமாண்ட் தன்னிடம் என்ன கூறிக் கொண்டிருந்தானோ, அவற் றோடு இந்தச் சுருக்கக் குறிப்புகள் மாறுபட் டன! இந்த விஷயம் குறித்து விரிவாகச்

சொல்வதற்கு இமாண்ட் ஒருவகையில் தயக்கம் காட்டினான். ஆனால் அவனுடைய கடைசிப் பார்வையிடலின் போது அவன் தந்த குறிப்பு: ''நம்மை விட்டுப் பிரிவதற்கு முன்னர், ஹ்யூகோ ஏதோ ஒன்றை அடைவதில் வெற்றி பெற்றான்.''

''ஆமாம், கடைசிச் சில நாட்களுக்கு அவன் அதிகமாக வேலை செய்து கொண்டிருந்தான்,'' என்று ரீனா உறுதி செய்தாள்.

''நான் இது பற்றிப் பேசவில்லை,'' இமாண்ட் முணுமுணுத்தான். கணநேர இடைவெளி விட்டு விட்டு அவன் தொடர்ந்தான்: ''தன்னுடைய கோரிக்கைகளுக்கு ஹ்யூகோ லென்ஸ் இணங்கவில்லை என்றால் அவனுக்குச் சாவு என்று அச்சுறுத்திய அந்தக் கடிதம் எழுதிய ஆள் மீது லென்ஸ் கோபம் கொள்ளும்படி செய்தது என்ன என்பது எனக்குத் தெரியாது.''

''அந்தக் கோரிக்கைகளை ஹ்யூகோ செயல்படுத்தினான் என்று நீங்கள் கருதுகிறீர்களா?'' என்று ரீனா கேட்டாள்.

''அந்த திசையில் அவன் மிக அதிகத் தொலைவு கூட சென்றுவிட்டான் என்றே நான் கூறுவேன்,'' இமாண்ட் பெருமூச்சு விட்டான். ''தனது கடைசிச் சோதனைகளில் அவன் பல்வேறு விஷயங்களைக் கலந்து விட்டான், அல்லது, கடித வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்கு, 'இயற்கையினுடைய இரகசியங்களுக்கான சாவிகளை' மிகத் திறமையாகத் தூக்கி எறிந்து விட்டான். இன்றைய

நாள் வரை அவற்றின் சிறு சுவட்டைக் கூட நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை.''

ரீனா குறிப்பேட்டை மெதுவாகக் கீழே வைத்தாள். ராபின் அலைவுறவில்லை.

''எல்லாக் கடிதங்களையும் நீ வெளியே அனுப்பி விட்டாயா?'' ரீனா அடுத்து வினவினாள்.

''இல்லை.''

''ஏன்?''

''சக்தியானது தீர்ந்துவிட்டது.''

''எஞ்சிய கடிதங்கள் எங்கே இருக்கின்றன?''

மறுமொழி சொல்வதற்கு பதிலாக ராபின் தன்னுடைய நெஞ்சத்திலிருந்த பெட்டியைத் திறந்தது, கடிதங்களின் கனத்த பொட்டலமானது தரையின் மேலாக விழுந்தது. மேலெழுந்த வாரியாக ரீனா ஒன்றை எடுத்தாள். நடுக்கத்துடன் கூடிய குரலுடன் முகவரியைத் திரும்பப் படித்தாள், ஏனெனில் அது அவளுக்கே முகவரியிடப்பட்டிருந்தது, அவளுடைய முகவரியானது உறையின் மீது தெளிவாக தட்டச்சு செய்யப்பட்டிருந்தது.

ஹ்யூகோவிடமிருந்து அவளுக்கு வந்திருந்த கடிதத்தைப் படித்து முடிக்கக் கூட அவளுக்கு நேரமில்லாத போது, ஒரு பெரிய ஓசையுடன் ராபின் தரையின் மீது விழுந்தது. அது தான் முடிவு.

ரீனா ஒரு நாற்காலி மீது அமர்ந்து, தனது கண்ணை மூடிக் கொண்டாள். ஹ்யூகோ அவளுக்கு என்ன எழுதிக் கொண்டிருக்க முடியும்? அவளிடத்தில் அவன் என்ன கோரியிருக்க

முடியும்? மற்ற பிற எல்லா 'ஊதாப்பூ பலி யாளர்'களையும் போல தனக்கும் அகால மரணமிருக்கிறது என்பதை அவளுக்கு அவன் அச் சுறுத்தி இருப்பானா? வருந்தத்தக்க இந்த உலக த்தை மாற்ற அவள் தயாராக இருப்பாள் என்று நிச்சயமாக அவன் நினைத்திருக்க மாட்டான்?

கடைசியாக கடிதத்தைப் பிரிப்பதற்காக துணிவை ரீனா சேகரித்துக் கொண்டாள். கடிதத்திலிருந்து ஏதோ காணப்படவில்லை என்பது போலக் காணப்பட்டது. உறையில் ஊதாப்பூ இல்லை. அவள் தன்னிச்சையின் றியே பொட்டலத்தை குலுக்கினாள், ஆனால் வெளியில் எதுவும் விழவில்லை. கடிதமானது கனமான ஒன்றாக இருந்தது. அதைப் படிப்பதற்கு ரீனா நீண்ட நேரம் செலவிட் டாள், அதைத் திரும்பப் படிப்பது இன்னும் நீளமானதாக இருந்தது. பெறுவதற்காக அவள் சிரமப்பட்ட ஒவ்வொன்றும் இப்போது காற்றிலே தூக்கி வீசியெறியப்பட்டது. அதை உள்ளே எடுப்பது என்பது மிகவும் சிரமமா னது, ஆனால் அவள் இப்போது செயல்பட் டாக வேண்டியிருந்தது, செயல்படு! ரீனாவுக்கு முகவரியிடப்பட்டிருந்த இக்கடிதம் வேறு நேரத் தில் பட்டுவாடா செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்பட முடியாதது: ராபினுடைய மின்சக்தி குறைந்து போனதும், தனது இறுதிச் சீர்குலைவுக்கு முன்னதாக அவன் அவளிடம் திரும்பி வந்ததும் ஓர் அற்புதமாகும்.

கடிதத்தைத் தனது பைக்குள்ளாக வைத் துக் கொண்ட பிறகு, தீர்மானமான மனநி

லையில் ரீனா எழுந்தாள், நீட்டிக் கிடந்த ரோ பாட்டுக்கு மேலாகத் தாண்டி நடந்தாள். இப்பொழுது என்ன செய்திருக்க வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும். முடிந்தளவுக்கு விரைவாக அவள் இமாண்ட் அர்டோனிசை எல்லாவற்றுக்கும் முதலாவதாகக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது, அவர்கள் சந்தித்துக் கொண்டது எவ்வளவு காலத்திற்கு முன்ன தாக இருக்கும்? ஆமாம், மூன்று நாட்களுக்கு முன்னால்... இமாண்ட் இன்னமும் இல்லை... இன்னமும் இல்லை...

தனது வழியில் ரீனா விரைந்து செல்கை யில் இந்தக் கடைசிச் சிந்தனைகள் அவளுக்கு ஏற்பட்டன. செயல்படுவது என்று அவள் முடிவெடுத்த அந்தக் கணத்திலிருந்து, நேரம் மிகவும் நெருக்கமானதாகவும், எல்லாமே கலக்கமானதாகவும் காணப்பட்டன. நகரும் படிக்கட்டு அபூர்வமாகத்தான் ஊர்கிறது எனவும், தூங்குகிற ஈக்களைப் போல பயணிகள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் அவள் உணர்ந்தாள், அதே வேளை சுரங்கப் பாதையினுடைய வண்டியானது பிளாட்பாரத்தோடு இறுக்கமாக இணைக் கப்பட்டு, இழுப்பதற்குச் சிரமப்படுவது போலக் காணப்பட்டது... இறுதியாக இரயில் ஒரு குலுங்கு குலுங்கியது, அலைந்தது, வேகம் அடைவதற்கு ஆரம்பித்தது. அது வேகம் அடைந்ததால், அடையாள விளக்குகள் சன் னல்களில் பின்னே சென்றன. ஆனால் அவைகளுங்கூட சீக்கிரமே ஒளிக் கோடுகளின்

தொடர்ச்சியில் ஒன்றாக இணைந்தன.

தன்னை யாரோ குறிப்பாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததை ரீனா திடீரென்று உணர்ந்தாள். அவள் தனது தலையை மெதுவாகத் திருப்பி, வெளிக்கதவுக்கு அருகில் ஓர் இளைஞன் உட்கார்ந்து கொண்டிருப்பதை பார்த்தாள். அவளது உறுத்த பார்வையைக் கண்டதும், அவன் அவசரமாகத் தன்னைத் தன்னுடைய செய்திப் பத்திரிகைக்குள்ளாகப் புதைத்துக் கொண்டான். ஆமாம், ரீனா எங்கே தங்கியிருந்தாளோ அதே ஹோட்டலுக்கு விரைவாகச் செல்லக் கூடிய நகருகின்ற பாதையில் குதித்தவன் அவன் தான். சுரங்க இரயிலின் வண்டியை நோக்கித் தனது பாதையில் ரீனா நெருக்கித் தள்ளிக் கொண்டு போன போது, அவளுக்குப் பின்னால் விரைந்து சென்றவனும் இவன் தான். அதே நேரத்தில் தனது முகத்தை வேண்டுமென்றே அப்பால் திருப்பிக் கொண்டான். ஆர்னோ காம்பினுடைய துறையைச் சேர்ந்த மனவுரம் வாய்ந்த யாரோ ஓர் இளைஞன் தான் அவன். அவர்கள் எல்லாரும் நாசமாய்ப் போக — இளம் போக்கிரிகள் அந்தத் துறை முழுவதும். இப்போது அவர்கள் எல்லாரும் என்ன வித்தியாசத்தை உண்டாக்கப் போகிறார்கள்?

தடத்தின் மூலைகளைச் சுற்றி இரயில் மெதுவாக அலைந்தது. தனது இருக்கையில் ரீனா பின்னுக்குச் சாய்ந்து கண்ணை மூடினாள். வெறுமனே பதினைந்து நிமிடங்களுக்கு அவள் ஒரு குட்டித் தூக்கம் போட்

டுக் கொள்ள முடியும். இப்போது அவள் எப்படித் தூங்கப் போகிறாள்? ஹ்யூகோவினுடைய கடைசிக் கடிதத்தின் வாக்கியங்கள் அவள் மூளையைச் சுற்றிப் பின்னிக் கொண்டே இருந்தன. இமாண்டிடம் என்ன சொல்லப் போய்க்கொண்டிருக்கிறாள் என்பது பற்றி அவள் சிந்திக்க வேண்டிய அவசியமிருந்தது.

அணுவாராய்ச்சி மையத்தை விட்டு வெளியேறிய பிறகு, தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ரீனாவைத் தான் காண முடியும் என்று இமாண்ட் அர்டோனிஸ் ஒருபோதும் கற்பனை செய்ததில்லை. ஆம், அது அவளே தான்... மைய ஊழியர்களின் கூட்டத்தினின்றும் விரைந்து வெளியேறி, ரீனா காத்துக்கொண்டிருந்த சாரக்கட்டை நோக்கி நடந்தான்.

''ஹலோ, இமாண்ட்,'' என்றாள் ரீனா, அவனது கைகளைப் பற்றி அவனைப் பிடித்தாள். சுருட்டிய பத்திரிகையைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த இளைஞன் அவர்களுக்குப் பின்னால் மெதுவாக நகர்ந்தான்.

''அந்த ஆளை விரட்டியடிப்பதற்கு கடவுளுக்காக ஏதாவது சிந்தியுங்கள், குறைந்தது ஓரிரு நிமிடங்களுக்காவது,'' இமாண்ட் பக்கமாக நெருங்கியபடி ரீனா கிசுகிசுத்தாள்.

''எந்த ஆள்?''

''ஆனால் உடனடியாகப் பின்னுக்குத் திரும்பி விடாதீர்கள். அவன் நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறான், பத்திரிகையுடன் உள்ள அந்த ஆள்.''

வெறுமனே சாதாரணமானவற்றைப் பேசிக்

கொண்டு அவர்கள் பக்கத்திலுள்ள பூங்கா ஒன்றுக்குள்ளாக நுழைந்தார்கள், பொருட் காட்சி நடந்த திசை நோக்கிச் சென்றார் கள். ராட்சச் சக்கரத்தின் முன் நீண்ட வரி சை நின்றது. தங்களுடைய மகிழ்ச்சியால் குழந் தைகள் ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டும், கத்திக்கொண்டும் இருந்தார்கள். அந்தத் தொழில் நுணுக்கக் கேளிக்கையமைப்பு முழுவ திலும் உயிருடன் இருந்த ஒரே ஓர் வயதான சீட்டு விற்பனையாளன், காலியாக இருந்த இரு இருக்கைப் பெட்டியில் நுழைவதற்கு அவர் களை உள்ளே அநுமதித்தான்.

பெட்டிக்குள்ளாகத் தன்னைத்தானே வாரி னால் கட்டிக்கொண்ட போதுதான் ரீனா உண்மையாகவே இமாண்டினுடைய யோசனை யைப் பாராட்டினாள்: குறைந்தது இப்போ தேனும் அவர்களால் அமைதியாகப் பேச முடி யும். பத்திரிகையுடன் கூடிய மனிதன் கீழே விடப்பட்டான், இன்னமும் அவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த இருவரையும் தனது கண் ணால் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

அவர்களுடைய பெட்டி மேல் நோக்கி மிதந்தது, ஒலி பெருக்கிகளினின்றும் கவலை யற்ற விளையாட்டுப் போக்கான இசை வெளி வந்தது. ரீனா கீழே உற்றுப்பார்த்தாள். அடுத்து அவன் என்ன செய்ய வேண்டும் என வியந்தபடி அவர்களைப் பின்தொடர்ந்தவன் நின் றான். இவ்வாறு நடந்த பிறகு, பக்கத்திலி ருந்த பெஞ்சின் மீது அமர்ந்து, தனது பத்திரி கையை விரித்தான். மொத்தத்தில் தனக்கு

இடப்பட்ட கட்டளையைச் செயல்படுத்துவதில் அவன் தவறிக் கொண்டிருக்கிறான் என்பது போல அல்ல அது: லென்ஸினுடைய விதவை யினின்றும் தனது கண்ணை விலக்கக் கூடாது என்றே அவன் கேட்டுக் கொள்ளப்பட்டிருந் தான், இதை அவன் முற்றிலும் மனப்பூர்வமாக நிறைவேற்றிக் கொண்டிருந்தான். உண்மை என்னவெனில் மற்றவர் மகிழ்ச்சியைக் கெடுக் கும் லென்ஸினுடைய முன்னாள் துணைவனான அந்த அழகனைச் சிறிதளவாவது அதிர்ச்சி யூட்ட வேண்டும் என்று அவள் முடிவு செய்தி ருந்தாள்... மிகவும் சரியாக எந்தப் பெண் ணும் இதைத்தான் செய்திருக்கலாம்.

இதற்குள்ளாக அவர்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயரத்திற்குப் போய்விட்டார்கள், பத்திரிகையுடன் இருந்த இளைஞன் வெது வெதுப்பாக்கிக் கொள்ள பக்கத்திலிருந்த பாருக்குப் போவதென்று முடிவு செய்தான். இமாண்ட் மற்றும் ரீனா இவர்களுக்கு முன் னே வானத்தை எட்டுமளவுக்குத் தன்னுடைய விரிவான கட்டிடங்களை முன்னுக்குத் தள்ளிய படி நின்ற மாபெரும் நகரத்தினுடைய மர அணிவரிசையானது நீண்டு கிடந்தது.

''ஹ்யூகோவிடமிருந்து நான் ஒரு கடிதம் பெற்றிருக்கிறேன்,'' என்று ரீனா அறிவித் தாள். பிறகு அவள் ராபினுக்கு என்ன நேர்ந்துவிட்டது என்பதை இமாண்டிடம் கூறி, அவனது கைகளில் கடிதத்தைத் திணித்தாள்.

கடிதத்தை இமாண்ட் படித்துக் கொண் டிருந்த வேளையில், அவனுடைய முக

உணர்ச்சியைக் கவனிப்பதில் கவனமாக இருந்தாள். இதற்கிடையில் மெதுவாகத் திரும்பக் கூடிய சக்கரமானது ஏறத்தாழ முழுச் சுற்றினை முடித்து விட்டிருந்தது. குழந்தைகளுடைய கர்ஜனைக் குரலானது இப்போது விண்ணிலே பரவியது. அவர்களுக்குச் சற்று மேலாக அடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட பெட்டியிலிருந்து யாரோ, கேலிக்காக கீழே ஒரு மலரை எறிந்தார்கள். நெருப்பு வண்ண இலையுதிர் கால வரவை அறிவிக்கின்ற மலர் ஒன்று ரீனாவின் தொடையில் விழுந்தது.

இமாண்ட் கடிதத்தைக் கீழே வைத்துவிட்டுக் கூறினான்: ''என்னிடத்தில் நம்பிக்கையைக் காட்டுவதற்காக உங்களுக்கு நன்றி. ராபின் உங்களைப் பார்ப்பதற்காக நேற்றே வந்திருக்குமேயானால் அது மிகவும் நன்றாக இருந்திருக்கும்.''

''நான் மிகவும் தாமதித்து விட்டேனா? இது மிகவும் தாமதமாக இருக்க முடியாது, இருக்குமா?''

''இன்று காலையில் எங்களுடைய முதலாவது ஊக்கமளிக்கின்ற முடிவுகளை நாங்கள் பெற்றோம். ஹ்யூகோ என்ன அடைவதற்கு முயன்றானோ, அதைக் கண்டுபிடிப்பதன் விளிம்பில் நாங்கள் இருக்கிறோம்.''

இமாண்ட் தொடர்ந்து பேசுவதற்கு முன்னதாக அவர்கள் இருவரும் கண நேரம் மௌனமாக இருந்தார்கள்: ''குவார்க்குகளை வெற்றிகரமாக ஹ்யூகோ பிளந்திருப்பான் என்று நான் முன்னமேயே சந்தேகித்தேன்,

ஆனால் என்னிடத்தில் எந்த ஆதாரமும் இருந்ததில்லை. பிறகு ஹ்யூகநாட்டினுடைய முழுமையான நடத்தையின் முறை... என்னை மன்னியுங்கள்!'' வெட்க மிகுதியான முறுவலிப்புடன் இமாண்ட் கூறினான்.

''ஹ்யூகோ அந்தப் புனைபெயரை விரும்பினான், நானுங்கூட,'' என்றாள் ரீனா, பேசுகின்ற போது தனது விரல்களில் அம் மலரைத் திருப்பிக் கொண்டாள்.

ஆக, வெடிப்பு ஏற்பட்ட போது நினைவில் நிற்கக் கூடிய அந்த இரவில், மொத்தத்தில், குவார்க்குகளைப் பிளப்பதில் ஹ்யூகோ லென்ஸ் வெற்றியடைந்திருந்தான். மனித இன வரலாற்றில் முதன் முறையாக மைக்ரோ உலகத்தின் இதயத்திற்குள்ளாக, இந்நேரம் வரை கண்டுபிடிக்கப்படாத பரப்பில், முதற்படி எடுத்து வைக்கப்பட்டிருந்தது. சோதனைக்காக அமைக்கப்பட்டிருந்த சாதனம் வெடியுண்டு போயிற்று, ஹ்யூகோ கதிரியக்கத்திற்கு ஆட்பட்டு விட்டான் என்பது அவனது கடிதத்திலிருந்து தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அது சாதாரண காமா குவாண்டும் கதிரியக்கமாக இருந்திருக்கவில்லை. அக்கதிரியக்கத்தால் ஏற்படக் கூடிய நோயானது இன்றைய நாளில் குணப்படுத்தக் கூடியதாகவே இருந்தது. அது நியூட்ரினோ கதிரியக்கந்தான் என்று ஹ்யூகோ ஊகித்தான். நியூட்ரினோக்களைத் தடம் கண்டுபிடிக்கக் கூடிய வகையில் எந்தவித பௌதிகச் சாதனங்களும் இன்னமும் வளர்ச்சியடைந்திருக்க

வில்லை. ஒளி ஊடுருவக் கூடிய ஃபிலிமை ஊடுருவிச் செல்கின்ற ஒளிக்கதிர் சுலபமாகச் செல்வது போல பூமிக் கோளத்தை ஊடுருவக் கூடிய பூஜ்ய ஓய்வுக் கட்டி கொண்ட இந்த மின்னூட்டமற்ற துகள்களுக்கு என்ரிகோ ஃபெர்மி பெயர் வைத்தார்.

டாக்டர் லென்ஸுடன் அநேக ஆண்டு களாகத் தொடர்பு கொண்டிருந்த கூருணர் வுடைய லுசின்டா, ஹ்யூகோவைப் பற்றிய மிக வும் முழுமையான அறிவை—அவனது மூளைத் திறமையிலிருந்து நரம்பு செல்களின் அமைப்பு வரை—அறிந்திருந்தது. ஆக, லென்ஸ் அதனிடம் கொடுத்திருந்த வழமையற்ற பிரச்சினையை லுசின்டா தீர்வு காணக்கூடியதாக இருந்தது. வித்தியாசப்படக் கூடிய வருவதுரைக்கும் வழி முறைகளைப் பயன்படுத்தி, அது லென்ஸினுடைய வாழ்க்கை வட்டத்தைத் தொகுத்திருந்தது, வெடிப்புக்குப் பிறகு அவன் புறப்பட்டுச் சென் றிருந்த காலத்தையும், நியூட்ரினோ கதிரியக் கத்திற்கு ஆட்பட்டதையும் அது தீர்மானித்தது. இது, உண்மையில், எந்த விதமான மருத்துவ சிகிச்சைக்கும் லென்ஸ் முயற்சி செய்யாவிட் டால், ஒவ்வொன்றையும் விதியிடம் விட்டால் மட்டுமே துல்லியமானதாக இருக்க முடிந்தது.

''மற்றவர்களைக் காப்பதற்காக என்னையே தியாகம் செய்ய நான் முடிவு செய்துவிட்டேன். என்னை நம்பு, ரீனா, இந்த முடிவினை நான் கணநேரத் தூண்டுதலில் எடுக்கவில்லை; ஆனால், குவார்க்குகளைப் பிளக்கின்ற போது வெளிப் படுகின்ற நியூட்ரினோ கதிரியக்கம் ஆபத்தானது

என்பதையும், அதை உலகத்திற்கு நிரூபிப்பது இயலாதது என்பதையும் நான் உணர்ந்து கொண்ட பிறகே எடுத்தேன். என்னை யார் நம்புவார்கள்? இன்று, நியூட்ரினோ கதிரியக்கத்தைக் கண்டுபிடிப்பது, உனது கைகளில் நிலவொளியைப் பிடிப்பது போல. நியூட்ரினோ கதிரியக்கத்திற்கு எதிரான பாதுகாப்பு வழிமுறைகள் ஏதேனும் உருவாகின்ற வரையிலுமாவது குவார்க்குகளைப் பிளக்க இன்னமும் முடியாது என்று நான் அறிவிப்பதாக நாம் கருதிக் கொள்வோம். படைக்கலங்கள் தொழிலதிபர்கள் என்ன சொல்வார்கள்? கதிரியக்கத்தின் புதிய மாதிரியை, தங்களுடைய லேசர் துப்பாக்கிகளை ஆயிரம் மடங்கு ஆபத்தானதாக்க அவர்கள் விரும்பக் கூடும். நான் வாயடைப்பு செய்யப்படுவேன், வெறிபிடித்தவன் என்று அறிவிக்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்படுவேன். இந்த விளையாட்டில் நான் என்ன துருப்புச் சீட்டுகளை விளையாட முடியும்? நியூட்ரினோக்களைக் கைப்பற்றக் கற்றுக்கொள்ள பௌதிகவியலாளர்களுக்கு ஆண்டுகள் பிடிக்கலாம்.

''ஆம், குவார்க்குகளைப் பிளக்கத் தொடங்குவதற்கு இன்னமும் முன் கூட்டியதாகத்தான் இருந்தது. நான் வாழும் சமூகமானது அதற்கு இன்னமும் தயாராக இல்லை. விஞ்ஞானமானது மிக அதிகமாக முன்னேறிவிட்டது. நமது சமூகமானது பைத்தியம் பிடித்துப் போய் விட்டது — அது தன்னையே அழித்துக் கொள்ள முடியும்; தங்களுடைய கைகளின்

மீது இருக்கக் கூடிய எதையும், அதனது விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் பற்றிப் பிடிப்பதற்கு ஆண்கள் விரைந்து கொண்டிருக்கிறார்கள். சமூகத்தை எங்ஙனம் மாற்றுவதென்று எனக்குத் தெரியவில்லை — நான் ஒரு விஞ்ஞானி, ஓர் அரசியல்வாதியல்ல. ஆனால், அப்படியும் கூட — இந்த நிலைமையில் எதுவும் செய்யாமலிருப்பது குற்றமாகக் கூடும்...''

''இந்தப் பூமியில் பௌதிகம் மட்டிலுமே லென்ஸுக்கு சம்பந்தப்பட்டதாக இருந்திருக்கும் என்று நான் நினைப்பதுண்டு,'' என்று சிந்தனை வயப்பட்டபடி கூறினான் அர்டோனிஸ்.

''அப்போது அவனைப் பற்றி உங்களுக்கு மிக நன்றாகத் தெரியாது, இமாண்ட். அவனது வாழ்க்கை முழுக்க கூர்மையான சமூக உணர்வு கொண்ட மனிதனாக அவன் இருந்தான்,'' என்று ரீனா விளக்கினாள். ''ஹிரோஷிமாவிலே பலியானவர்களைப் பற்றி அல்லது கதிரியக்கத் தூள் வெளியானதால் கொல்லப்பட்ட ஜப்பானிய மீனவர்களைப் பற்றி அவனால் ஒருபோதும் அமைதியாகப் பேச முடியாது... அரசியலில் தலையிடுவது ஒரு பௌதிகவியலாளனின் வேலையாக இருக்க முடியாது என்று ஹ்யூகோ எப்போதும் கருதி வந்தான்.''

கடித உறையை தனது கையால் தடவிக் கொடுத்த அர்டோனிஸ் வினவினான்:

''லென்ஸ் சரியான முடிவினை எடுத்தான் என்பதில் நீங்கள் திருப்தியடைந்தீர்களா, ரீனா?''

''என்னால் கூற முடியாது, ஆனால் அவன் எந்த வழியிலும் என்ன செய்தான் என்பதைக் கண்டிக்கக் கூடிய நிலையில் நான் இல்லை,'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் ரீனா. ''ஏன், ஓ ஏன், ஆனாலும் என்னிடத்தில் ஏன் அவன் நம்பிக்கை வைக்கவில்லை?''

''அவனுடைய திட்டம் பற்றி சந்தர்ப் பவசமாக வேறு யாரேனும் ஆட்கள் கண்டு பிடித்து விட்டால், பிறகு அதனுடைய தாக்க மானது ஒன்றுக்குமில்லாமல் போய் விடும். எந்த வழியிலும், அவனது வாழ்க்கையானது ஒரு மெழுகு வர்த்தியைப் போல கீழாக, ஒவ்வொரு நாளும் ஓரளவுக்குக் கீழாகவே எரிந்து கொண்டிருந்தது என்பதை அறிந்து கொண்டு, அங்கே உங்களுடைய கட்டை விரல் களை வெறுமனே திருகிச் சுழற்றிக் கொண் டிருக்க உங்களால் எப்படி முடிந்தது?''

''ஆமாம், அதை நான் செய்திருக்கக் கூடாது,'' என்று ரீனா கிசுகிசுத்தாள். ''இப் போது எனக்கு என்ன வாழ்க்கை மிஞ்சி இருக்கிறது, என்ன நோக்கத்திற்காக ஹ்யூ கோ இறந்தானோ. அந்தப் பணிக்கு என்னை ஈடுபடுத்திக் கொள்ள நான் விரும்புகிறேன். வெறுமனே எதுவும் செய்யாமல் உட்கார்ந்து கொண்டு, நாம் எல்லாருமே புகையில் போ குமளவுக்குக் காத்துக் கொண்டிருக்க எவருக் கும் உரிமையில்லை.''

அண்மைக் காலத்தில் தன்னை அலைக் கழித்துக் கொண்டிருந்த கேள்வியை வெளிச் சொல்ல இயலாமையை நீண்ட நேரமாகவே

ரீனா உணர்ந்தாள். இறுதியாக அவள் கேட்டாள்: ''இந்த வேலையில் நீங்கள் எனக்குப் பின் இருக்கிறீர்களா?''

''மிகவும் அதிகமாகவேதான்,'' அர்டோனிசினுடைய குரலில் உறுதி தொனித்தது.

''அதை நான் அறிவேன்,'' பதில் கூறுகின்ற முறையில் ரீனா எளிமையாகச் சொன்னாள். ''ஆனால் இப்போது நாம் என்ன செய்ய முடியும்?''

''ஹ்யூகோ லென்ஸால் தூக்கி எறியப்பட்ட சாவிகளை வேறு எந்த பௌதிகவியலாளரும் அடைய முடியாதபடி நாம் நிச்சயமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

அர்டோனிசை ரீனா கூர்ந்து நோக்கினாள், விரைந்து கேட்டாள்: ''எந்த வருத்தமும் இன்றியா?'' அந்த வாக்கியம் அர்டோனிசுக்கு, ஒரு விஞ்ஞானியாக வேண்டும் என்ற தனது பேராவல்களைத் தவிர வேறு எதையும் இன்றைய நாள் வரை முக்கியமானதாகக் கொள்ளாத ஒரு மனிதனுக்கு, என்ன விலை கொண்டது என்பதை அவள் மிக நன்றாக அறிவாள்.

''வருத்தத்துடன்,'' தனது விரல்கள் வெள்ளையாகப் போகுமளவுக்கு கம்பியை அவ்வளவு இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருந்த இமாண்ட் சொன்னான். நொடிப் பொழுது இடைவெளி விட்டு அவன் தொடர்ந்தான்: ''விஞ்ஞானத்தின் இலக்கு மனிதர்களுடைய மகிழ்ச்சிதான் என்ற ஹ்யூகோவினுடைய வார்த்தைகளை எனது மனத்திலிருந்து என்னால் வெளியேற்ற முடியாது. இல்லையெனில் விஞ்ஞானம் குறிக்கோ

ளற்றது. குவார்க்குகளைப் பிளப்பதென்பது பயங்கரமான ஒரு புதிய சக்தியை வெளியேற்றும். அது மனிதனுடைய கைகளில், அவன் அதற்கு முன்னர் ஒருபோதும் அறியாத ஓர் ஆயுதமாக இடம் பெறும். ஆனால் அத்தகைய ஆயுதத்தை அவன் எங்ஙனம் பயன்படுத்துவான்? அந்தப் பிரச்சினை ஒரு விஞ்ஞானிக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லையானால், பிறகு அவன் ஒரு விஞ்ஞானியாக இல்லாது போய்விடுவான். தனக்குப் பணம் கொடுக்கப்படுகின்ற வரை, யாரைச் சுடுகிறோம் என்பதைப் பற்றிக் கவலைப் படாது, கூலிப் படை வீரனை விட வேறு அதிகமாக அவன் இருக்க மாட்டான்.''

''சற்று கேளுங்கள், இமாண்ட். ஹ்யூகோ லென்ஸ் தங்களிடம் வந்திருந்து, அவன் குவார்க்குகளை பிளத்து விட்டதாகவும், ஆனால் அந்தச் சாதனை இரகசியமாக வைக்கப்பட வேண்டும்... அவன் அந்தக் கதிரியக்கத்திற்கு ஆட்பட்டு விட்டதாகவும், ஆனால் டாக்டர்களால் அதனுடைய எந்தத் தடயத்தையும் கண்டுபிடிக்க முடியாது போனதையும்... அவனது சோதனைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அதனுடைய தோல்வி வெளியிடப்பட வேண்டும்... என்று கூறியிருந்தால், நீங்கள் அவனோடு சேர்ந்து கொண்டிருப்பீர்களா?''

அர்டோனிஸ் தலையை ஆட்டினான்.

''நீங்கள் ஹ்யூகோவை நம்புவீர்களா?'' ரீனா கேட்டாள்.

''இல்லை, பெரும்பாலும் டாக்டர் லென்ஸ்

நலமில்லாது இருந்தான் என்று நினைத்திருக்கக் கூடும்.''

''சோதனைகளை நீங்கள் செய்து கொண்டிருந்திருப்பீர்களா?''

''இரட்டிப்பாக்கப்பட்ட சக்தியுடன்.''

''என்னால் இமாண்டிடம் சென்றிருக்க முடியும், குவார்க்குகளைப் பிளப்பதற்கான நகைக்கத்தக்க எளிய யோசனையை — குவார்க் கற்றைகளின் தலைமீது மோதுதல் — அதுதான் இந்தத் துயரார்ந்த முடிவுக்கு இட்டுச் சென்று விட்டது என்பதைக் கூறியிருக்க முடியும். ஆனால் நியூட்ரினோ கதிரியக்கத்தைப் பற்றி அவனிடம் நான் கூறிய போது, என்ன நடந்திருக்கக் கூடும்? நான் நல்ல நலத்தோடு இருப்பதாக மருத்துவர்கள் உறுதி செய்கிறார்கள். எந்திரங்கள், விஞ்ஞானக் கருவிகள் மற்றும் புறநிலை உண்மைகள் இவற்றை மட்டுமே நம்பக்கூடிய அந்த ஆட்களில் அர்டோனிசும் ஒருவன். விஞ்ஞானத்தின் மீது, பௌதிகத்தின் மீது மட்டுமீறி வெறி கொண்டவன் எதுவுமே இல்லை என்பதை இப்போது நான் புரிந்து கொண்டேன்.''

கைகளில் கடித உறையை இமாண்ட் திருப்பி. வைத்து விட்டுக் கூறினான்: ''லுசின்டாவின் பிரிண்டர் எங்கே மறைந்துபோய் விட்டது என்பதைப் புரிந்துகொள்வதற்கு எனக்கு நீண்ட காலம் பிடித்தது. ஹ்யூகோ தனது கடிதங்கள் அனைத்தையும் தட்டச்சு செய்யப் பயன்படுத்திவிட்டு பிறகு அதை அழித்துவிட்டான் என்பதை நான் இப்பொழுது

உணர்கிறேன். அதை அவன் டிஸ்இன்டகிரேட்டரில் வீசி எறிந்திருக்க வேண்டும்.''

ஹ்யூகோவின் கடிதத்தை ரீனா அவனிடமிருந்து எடுத்துக் கொண்டு, தனது சட்டைப் பைக்குள்ளாக வைத்துக் கொண்டாள்.

''நாம் போகலாம்,'' என்றாள் அவள்.

அவர்கள் பெட்டியிலிருந்து வெளியேறி, குளிரினால் பாறையாய் குறுகிப் போயிருந்த, ஈரப்பதமான கருங்காரைக்கு வந்தார்கள்.

வெளிவாசலுக்கு அழைத்துச் செல்கின்ற பாதை நெடுகிலும் ரீனாவும் இமாண்டும் நடந்து சென்றார்கள். சிறிய பூங்காவின் பச்சை நிறப் பசுந்திடலுக்கு அப்பால், அச்சம் தருகின்ற ராட்சசர்களைப் போல, உயரமான சாம்பல் நிறக் கட்டிடங்கள் காணப்பட்டன. மிதந்து கொண்டிருந்த மேகங்கள் நூற்றுக் கணக்கான சன்னல்களை முழுதாக மறைத்துக் கொண்டிருந்தன, ஆனால் தலைக்கு மேலாகத் தெளிவான வானத்தில் இன்னமும் கொஞ்சம் மினுமினுப்பு இருக்கவே செய்தது.

ஹ்யூகோ வீணாக மடிந்து போகவில்லை என்று இமாண்ட் தனக்குள்ளாகவே நினைத்தான். தனது சொந்த உயிரைக் கொடுத்து பனிப்பாறைச் சரிவின் ஆபத்தினை அவன் தடுத்து நிறுத்தியிருந்தான். இதனுடைய கதையானது ஒரு நாளைக்குப் பொது அறிவுக்கு வரத்தான் போகிறது. ஆனால் இப்பொழுது இந்தச் சவாலை ஏற்பதும், அறப் போராட்டம் தொடங்குவதும் அர்டோனிஸ் சம்பந்தப்பட்டதாகி விட்டது.

В. Михановский. ДВОЙНИКИ
На тамильском языке
Для старшего школьного возраста